

திருமணம்

செல்வக் கேசவராய முதலியார், எம். ஏ.

1864 - 1921

பேராசிரியர்

திருமணம் செல்வக் கேசவராய முதலியார்

பயன்படுத்திய இந்நூல்

அவர்கள்தம் பேரன் திருவாளர்

தி நம்பிராசன் அவர்களால்

மறைமலையடிகள் நூல்நிலையத்திற்கு

அன்பளிப்பாக

வழங்கப்பெற்றது.

பிசுமில்லாகிற்றகுமானிற்றகீம்.

மகாசிறப்புற்றோங்கிய றூமுநகரிருந்தெங்கரும்

அரசுசெய்த சக்கிரவர்த்தியாகிய

# ஆசாத்பகுத்பாத்துஷா

அவர்களுக்குச்சொல்லிய

## சார்தர்வேஸ்கதை என்னும்

## நான்குபக்கீர்களுடைய [illegible]

MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1

இஃது

ஷெபாரீஸ் இந்திமுதலியபாஷைதெரியாதவர்க்கும்

விளக்கமாய்த்தெரியும்பொருட்டு.

இராமநாதபுரம் இரவுண்ஷாப்புக்கடை

**ப-வெ-முகம்மது இபுறுகீம்சாயபு**

அவர்களால் தமிழ்நடையாகச்செய்தருளியதை.

கொன்னூர்

**மாணிக்கமுதலியாரவர்களது**

மநோன்மணிவிலாச வச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

கஅஅஎ வரு

மூன்றாம்பதிப்பு.

Registered Copy-Right

# அட்டவணை.

———o———

முதல்பாகத்தில்


பக்கம்.

க-வது றாமுநகரச் சிறப்பு

ரு-வது ஆசாத்பகுத்பாத்துஷா அரசுரிமை

மரு-வது முதலாவது பக்கீர்கிஸ்ஸா

ருந-வது ஆசாத்பகுத்பாத்துஷா சொல்லியது


இரண்டாம்பாகத்தில்


க-வது இரண்டாவது பக்கீருடையகிஸ்ஸா

ருகூ-வது மூன்றுவது பக்கீருடையகிஸ்ஸா

கூந-வது நான்காவது பக்கீருடையகிஸ்ஸா

ளமச-வது ஆசாத்பகுத்பாத்துஷா ஆஜத்துநிறைவேறியது (து

ளஉஅ-வது முகம்மதுகவுதுசவுதாகருடையஆஜத்துநிறைவேறிய

ளநஉ-வது அக்பர்பாத்துஷாவுடைய ஆஜத்துநிறைவேறியது

ளசஉ-வது சம்சதீன்பாத்துஷாவுடைய ஆஜத்துநிறைவேறியது

ளசரு-வது அசன்பகுதாதிபாத்துஷாவுடைய ஆஜத்துநிறைவேறி

ளசஅ-வது அவரவர்கள் நகரஞ்சேர்ந்தது (யது

19624

பிசுமில்லாகி.

## இந்நூலியற்றி யச்சிட்டவன்கருத்து,

இவ்வுலகிற் சிறப்புற்றோங்கியிருக்கும் என்னுடற்பிறப்பாகிய மூமீன் முசிலீமானவர்களே மற்றும்நேசர்களே தேசதேசங்களுக்கெல்லா மேன்மையாகிய ரூமுநகரமென்றும், குஸதந்தானியாவென்றும் வழங்காநின்ற இஸ்தம்பூருலிருந் தநேகதேசங்களைப் பரம்பரையாயரசாட்சிசெலுத்திவந்த ஆசாத்பகுத்பாத்துஷா அவர்களுக்கு (சார்தர்வேஸ் என்னும் நான்கு பக்கீறுகளாயிருந்த சவுதாகரும் பாத்துஷாவுக்கும் அவரவர்களுக்கு அனேகம் தௌலத்தாகிய சம்பத்தும், இராசரீகமு மிருந்தும் முதலாவது பெண்களினால் துன்பங்களடைந்து பக்கீறுகளாகி இரண்டாவது அப்பெண்களையே தங்கள் தங்கள் மனைவிமனைவிகளாக்கிக்கொண்டு அவரவர்கள் நகரங்களுக்குப்போய் அனேகம்பொருள்கள் முதலியவைகளுடனே வர்த்தகமும் ராஜரீகமுஞ்செய்து சுகபோகமாயிருந்த கிஸ்ஸாவென்னுங் கதையை முன்னோர்கள் ஹிந்தி பாரீஸ்முதலிய பாஷைகளா லெழுதிவைத்திருந்தனர் அதனை கனம்பொருந்திய ம-ள-ள-ஸ்ரீ, தஞ்சைமாநகரம் அக்கீம்காதர் சாயபவர்கள்குமாரர் கவுண்டாண்டு ஜனலாபீஸ் குலாமுகியித்தீன்சாயப் அவர்களாலும், மேற்படியார் சகோதரர் ஷேக் ஆதம்சாயப் அவர்களாலும், மேற்படி பாரீசிலிருந்ததைப் பார்த்து அதிலிருந்த கருத்துகளைத்துஞ்சொல்ல இங்ஙனம் சிற்றறிவுடைய சிறியேன்மேற்கூறிய கருத்தை பார்வையிட்டதில் சிலவிடங்களிற் சொற்களமையாமலும் ஒன்றோடொன்றொவ்வாமலும் கதைகள் பொருந்தாமலும் மேற்படி பாரீசு இந்துமுதலிய கிதாபுகளில் கருத்துகள் வெவ்வேறாயிருப்பதினாலும் மேற்கூறிய சரித்திரத்தை யாவரு மெளிதிலுணரும்பொருட்டுச் சொல்லலங்காரமாகவும், நடையலங்காரமாகவும், சகலருமானந்த மகிழ்ச்சியடையும்படி நூதனவிசேஷமான வாக்கியார்த்தங்களை குத்திரமின்றிச்சித்திர விஸ்தாரமாய்ச் செய்திருக்கிறேன் ஆகையால் மேற்கூறியசரித்திரத்தை வாசித்துப்பார்த்தவர்கள் இக்கருத்தை எளிதி லுணர்வார்களென்று முழுதும் நம்புகின்றேன் ஆனபடியால் டில்லிபாட்சாவானவர் ஒருகாலத்தில் துக்கமாகியவிசனத்தை மனத்திலெண்ணி அதேயொருவியாதியாய் தகத்தில்வந்திருந்து அரசுசெலுத்தாமல் அரண்மனையிலேயேயிருந்தார் அப்போது அவருக்கிருக்கிற நோய்தீரும்படியா யமீனக்கம்பூனிஹக்கிமென்னும் வைத்தியர்களால்வேண்டிய அவிழ்தங்கள்முதலிய பரிகாரமுதலியதுஞ்செய்து அவருக்குள்ள பிணிநீங்

காமலிருந்தால் பாதுஷாவுடைய ஒஸ்தாதாகிய குருவானவர் தனதுமுரீதுப்பிள்ளையாகிய சீடனிடத்திற்குவந்து அவர்கொண்டநோயைக் கருத்தாலறிந்து அதுநீங்குவதற்கானவிதம் இதுதானென்று இந்தச்சார்தர்வேஸ் என்னும் நான்குபக்கீர்களுடைய கிஸ்ஸாவை ஆதியோடந்தமாகச் சொல்லிக்கொண்டுவர அதைப்பாஷாவானவர்கேட்டுத் தனதெண்ணங்களையெல்லாம் பிரத்தியேகப்படுத்த வியாதிநீங்கிச் சொஸ்தப்பட்டு எப்போதும்போலத் தனதுராஜரீகத்தை நீதிநெறியுடன் செலுத்திப் புத்திரபவுத்திரசம்பத்துடனே யாதொருகுறைவுமில்லாமலிருந்தார் ஆகையால் பூலோகங்களிலுள்ளபேர்களில் எவர்களுக்காவது துன்பமுதலிய வியாதியுள்ளபேர்கள் இந்தச்சார்தர்வேஸ் கதையென்னும் நான்குபக்கீறுகளுடைய கிஸ்ஸாவை முதலிலிருந்து முடிவுவரையில் வாசித்துப் பார்ப்பார்களாகில் அல்லாகுசுபுகானகுத்த ஆலாவுடையகிருபை றகுமத்துண்டாகி அவரவர்களுடைய துன்பமுதலிய வியாதிகள்நீங்கிப் புத்திரசம்பத்து முதலியவைபெற்று காயத்துள்ளவரையில் யாதொருகுறைவுமில்லாமல் சுகங்களை யனுபவித்து வாழ்ந்துண்டிருப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை ஆகையால் சிற்றறிவுடைய சிறியேன் எவ்வளவோ கஷ்டப்பட்டு இந்தக்கதையையியற்றி அச்சிடத்துணிந்தேன் இதிற்பெரும்பாலும் எழுத்துக்குற்றம் சொற்குற்றம் பொருட்குற்றமிருப்பினும் பெரியோர்கள் மனம்பொறுத்து அங்கீகரிப்பார்களென்பதற் கையமில்லை.

ஆமீனுமீன் யாறப்பல் ஆலமீன்.

இந்நூலச்சிட்டவன் ராமநாதபுரம் - ப.வெ - முகம்மதிபுறுகீம்சாகிபு.

பிசுமில்லாகி.

# சிறப்புப்பாயிரம்.

நிலமண்டில ஆசிரியப்பா.

திருக்கிவளர்வனசத் தவிசினிலுறையு
முருக்கிவளர்செல்வத் தனிமகளாக்கமும்
உள்ளினர்தங்க ளுளங்கவர்திலங்குங்
கள்ளினர்ப்பூங்குழற் கலைமகட்செல்வமும்
கற்றோரிருக்கு மரங்குழூவாசை
யற்றோரிசைக்கு மருந்தவப்பொலிவும்
கற்பகத்தாரு கையிரந்தடிதொழப்
பொற்றிருவுடையோர் பொருந்துமாட்சியும்
வஞ்சமற்றடைந்தார் வன்பசிமழுங்க
வென்சனமருத்தி விர்ந்திசெய்நலனும்
திங்கள்மும்மழையுந் தீங்குறுவளமும்
அங்கதிர்செந்நெ லறுத்திடுசிறப்பும்
துன்னலவிராதுங்கத் துடிக்குளார்வெருவ
மன்னவர்திறைகொடு வந்தடிதொழுதெழ
வெண்ணெழுதேசத் திராஜதாரகையிட
விண்ணெழுசந்திரனோர் விளங்குமுச்சிதனெழிற்
றங்குறும்நகரத் தனியுலகதனைச்
சிங்கவேறனைய செங்கோற்செலுத்தி
பூதலமிசைச்சீர் பொருந்துமாசாத்பகுத்
பாத்துஷாமனத்துயர் பரிக்கவோர்மதலை
மன்னிடமுகம்மது கவுதுசவுதாகர்
தன்னொடுமூன்று பாத்துஷாக்களும்
அருளிய (சார்தர்வே) செனநலிலருங்கதை
தெருளினர்முன்னர்பா ரீசினிற்செப்பினர்
அதனையிப்பூதலத் தறுசமையத்துளோ
ரிதுசுவைத்தேனென வேந்திவாய்மடுப்ப
நுகர்ந்திபேரின்பக் கடற்படிந்தாட
இகம்புகழிராம நாதபுரத்தில்

## சிறப்புப்பாயிரம்.

காண்போர்வியக்கும் ரவுண்ஷாப்புக்கடை
மாண்புயர்வைத்தே வழங்குமாதவத்தோன்
செந்தமிழ்ப்புலவர் சிந்தைவிட்டகலாப்
பைந்தமிழ்வல்லோன் பழுதருமனத்தோன்
கவலைவாரிதியைக் கவர்ந்திடுமிக்கோன்
குவ்வியதிண்டோட் குலவுமாண்புயர்-ப-வே
முகம்மதிபுரு கீம்சாகிபெனும்
தகும்புகழாளன் தாம்செய்ததமிழால்
சொல்வேலியாக்கொடு தூம்நெறிப்புகுதிரு
நெல்வேலியாம்பதி நிலைத்தவுந்தமனருட்
கொடையினிலாத்தீம் தாதாகொடுஞ்சமர்ப்
படையினேர்பற்குனன் பருந்தமிழ்க்ககத்யன்
பொறுமையிற்றருமன் பொருளினிற்றனதன்
நறுமலர்த்தெரிய லணிந்திடுமார்பன்
சமயகத்துகள் சார்பினெப்பொழுதும்
அமைவுறுவூக்கம் அகலாப்பெருமையன்
கொமிஞ்சொற்பொருமை கோபமனைத்தும்
சுடர்முற்பனிபோற் றொலைத்தவுத்தமன்
வங்காளமுகம்மது வரத்தினாலுதித்த
தங்காதலன்மகு தணராவுத்தர்தாம்
தேடியசெழும்பொருட் செலவுசெல்துலகி
னீடியசீர்த்தி நிலைபெறவுவந்தரே.

சிறப்புப்பாயிரம் முற்றுப்பெற்றது.

இஃது.
சதுரங்கபட்டணம்
வீ-கோவிந்தநாயகராலியற்றியது.

இஃது

காயற்பட்டணம்

கண்ணகுமதுமகுதூமுகம்மதுப்புலவர்

அவர்களாலியற்றிய

# சாற்றுக்கவிகள்.

ஆசிரியவிருத்தம்.

சீர்மேவுறுமுநக ரத்திருந்துலகெலாஞ்
　　செழித்திடச்செங்கோனெறி
செய்துதீன்வழிபேணும் ராஜாதிராசரின்
　　சிந்தையினெணங்கள்தீரப்
பார்மேவுநற்குணப் பக்கீர்கள்நால்வரும்
　　பயிற்சியினுரைத்தகாதை
பாரிசிலுமிந்திலு மிருந்ததைவிளக்கமாய்ப்
　　பார்ப்பவர்களுக்குமகிழ்வாய்
ஏர்மேவுசெந்தமிழினுன் மொழிபெயர்த்தரிய
　　விசைவர்க்கமும்பொருத்தி
யேதகலிராம நாதப்புரமிருந்துவாழ்
　　விளங்கியசுயானுகூலன்
கார்மேவுகாதலப் படையலிமுகம்மதின்
　　கான்முளை யெவர்க்குநேசன்
காம்பீரமுகம்மதிபு ருகீம்சாகிபுநலங்
　　கண்டிடத்தந்தனனரோ.

ம-மமுனைநாயகமுதலியாரியற்றிய

வெண்பா.

முத்தமிழ்ப்பாவாணர் மொழிந்தகதையிப்புவியில்
எத்தனையோகோடி யிருப்பினும்-ஒத்தரகு
நாதபுரம் ப-வெ-முகம்மதிபுருகீம்செய்
காதையிதற்கொவ்வாது காண்.

இதுவுமது.

எத்தனைபேரோவச்சி லிட்டாரனந்தநூல்
அத்தனைக்குமீததிக மாகுமே-முத்தநகை
மாதேநெல்வேலி மருதணராவுத்தர்புவி
மீதேபுகழதனை விள்.

பிசுமில்லாகி.

## கடவுள் துதி.

எல்லாப்புகழும் புகழ்ச்சியும் வணக்கமும் பதினெண்ணாயிரவித ஆலங்களையும் படைத்து அதற்கு இரணமுதலியவை கொடுத்து வளர்க்கும்படியான அல்லாகுத்தஆலா ஒருவனுக்கே தகுமாயிருக்கின்றது அவனெப்பேர்க்கொற்ற றகுமத்துச் செய்யப்பட்ட ஆண்டவனானல் பாவமென்றுசொல்லுகிற விஷத்துக்குத் தவுபாவென்னும் அருமருந்தைக்கொடுத்தவன் இன்னமெப்பேர்க்கொற்ற றகிமானானல் அவரவர் மலைபோற்செய்த குற்றங்களை நினைத்து அல்லாகுத்ஆலாஅளவிற்பயந்து கெஞ்சி துவாக்கேட்பார்களாகில் அக்கெஞ்சுதலையினாற் பொறுத்துப் பெருமலைக்கொப்பான குற்றங்களையெல்லாந் துடைத்து நல்ல நிகுமத்தும் உடுமானங்களும் சவுக்கியங்களும் மிகுந்தவாழ்வும் சுவர்க்கலோகத்திற்கொடுத்து அவன் [illegible]காறும் .கொடுக்கப்பட்டவன் இன்னம் சீமான்களுக்கெல்லாம் [illegible]வும் பாத்துஷாக்களுக்கெல்லாம் பாத்துஷாவான [illegible]மாகிய அல்ல[illegible]கானகுத்ஆலாவை [illegible] கெஞ்சிப்புகழ்ந்து நபிசல்லல்ல[illegible]கு அலைகி ஒவாலிகிவசல்லம்அ[illegible]நக்கே நியபத்தம் த[illegible] [illegible]குமானதாயிருக்கும் முகம்மது[illegible]ஸ்தபா சல்லல்லாகுஅலைகிவசல்லம் [illegible]கள் எப்பேர்க்[illegible]ாற்றவர்களா[illegible] குற்றவாளிகளாகிய [illegible]களுடைய உம்மத்துகளின்பேரில் இவ்வி[illegible]மென்றுசொல்லி மு[illegible]பிரியமும் முகப்பத்துஞ்செய்து தங்களுடைய ச[illegible]கெ[illegible]வும் ஆதரவும் சகலோ[illegible]களையும் ரட்சித்துக் காப்பாற்றும்படி[illegible]னவ[illegible] [illegible]ன்னம் கியாமத்துநாளில் அல்லாவுடைய சமுகத்தில் [illegible]த்து நாலாயிரம் நபிமார்களும் முந்நூற்றுப் பதின்மூன்று முருசல[illegible]பர்களும் என்னைக்கார் எனக்காரென்றுசொல்லும்வேளையில் நமதுமுகம்மது முஸ்தபாசல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள் என்னும்மத்தே என்றுசொல்லி தங்களுடைய கிருபையினாலே சகலவருததங்களையுநீக்கி சபாயத்துச்செய்து மீளுதலைச்செய்வேனென்று சகலோருக்கும் ஆதரவானமொழிகொடுத்த அக்காகவந்த முகம்மதுமுஸ்தபா சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களைத்துதித்து நால்யார்களையும் அசுகாபிமார்களையுப் ஈமாம் அசனார் குசைனார் முகியத்தீனாண்டவர்கள் காதர்மீரும்சாகிபு அவுலியாக்கள் ஒலிமார்கள் மற்றும்பெரியோர்கள் யாவர்களையும்போற்றி இந்தச்சார்தர்வேஸ்கதை என்னும் நான்குபக்கீர்களுடைய கிஸ்ஸாவை சிற்றறிவுடைய சிறியேனாகிய இராமநாதபுரம் ரவுண்ஷாப்புக்கடை ப-வெ முகம்மது இபுறுகீம்சாகிபு என்பவன் கிசுறத்து ௧௨௯௩ ஹு றமலான்மீ ௰௨ வெள்ளிக்கிழமை கொத்துபாவுக்குப்பின்னர் தமிழ்வசனகாவியமாகச் செய்யத்துவக்கினேன்.

உ

பிசுமில்லாகிற்றகுமானிற் றகீம்

———o———

இஃது

# சார்தர்வேசென்னும் நான்கு பக்கீர்கள்

ஆசாத்பகுத்பாத்துஷா

# இவர்களுடைய கிஸ்ஸா.

---

காப்பு,

விருத்தம்.

சீர்நிறைந்த றூமுநகர் தன்னையாண்ட
ஜெயவீரன் ஆசாத்பகுத்பாத்துஷாவும்
சார்தார்வேசெனும்பக்கீர் நால்வர்கூடித்
தன்மையுடனுரைத்திட்ட கிஸ்ஸாத்தன்னைப்
பார்தனிலேமுன்னோர்கள் பரிசோதித்துப்
பாரிசுபாஷையினால் பகர்ந்தநூலைத்
தாரணியிலுளபலர்க்குந் தமிழாற்சொல்லத்
தனியவனேநீயிதற்குத் துணைசெய்வாயே.

## றூமுநகரச்சிறப்பு.

——(*)——

வசனம்.

சீர்பெற்றோங்கிய நெடியகடல்சூழ்ந்த இப்பூவுலகின்கண்ணுள்ள தேசதேசங்களுக்கெல்லாம் இராஜநாயகமாகவும், அல்லாகுத்தஆலாவுடையகிருபையும் றகுமத்தும்பொருந்திய மக்கமாநகரைச்சார்ந்தஅறபியாதேசத்துக்கடுத்த றூமுநகரத்தைச் சுற்றிலுஞ்சார்ந்த மலைகளுங்குன்றுகளும் நீர்வளம் நிலவளம்பொருந்திய சாலைகளும், சோலைகளும், பூங்காவனங்களும் தாமரைத்தடாகங்களும், கேணிகளும், மடுக்களும் ஏரிகளும், ஆறுகளும், கால்வாய்களும் வயல்களும் நெருங்கியுள்ளது

இவ்விதபெருமைபொருந்திப் பலவஸ்துக்களும் மிகுந்திராநின்ற றாமுநாட்டிலுள்ள குடிகள்யாவர்களும் நதியில் வருகின்ற தண்ணீர்களை மடுக்களிலும், ஏரிகளிலும் திருப்பிக்கட்டிக்கொண்டு கழனிகள்தோறும் உழுது விதைவிதைத்துப் பயிராக்கி நாத்துநட்டுவிளைந்து பலன் கிடைப்பதற்கு முன்னமே மஞ்சள்-இஞ்சிமுதலிய ரசகந்தாயப்பயிர்களை விளைவித்துக்கொண்டு தங்கள்வீட்டில் சேர்த்துக்கொள்வதல்லாமல் நதியில் நாட்டியபயிர்கள் விளைய அதை யறுத்துப்போர்க்கட்டிப் பிரித்து மாடுமுதலியவைகளால் மிதிப்பித்தூற்றி யெடுத்த தானியங்களை வண்டியிலேற்றிக்கொண்டு போய் களஞ்சியங்களில்சேர்த்துவைத்துக்கொண்டு தங்கள்தங்க ளிச்சைப்பிரகாரம் ஏழைகள் மிஸ்க்கீன்கள் - வித்துவான்கள் - யாசகர்கள் முதலிய பலருக்கும் கயிறு - கயிருத்தென்னும் தருமத்தை அதிகஉபசாரத்துடன் செய்துவருவதாலும், வருமையுற்ற தங்கள் இனஜனங்களுக்குத் தேவையான தானியங்களையும் பொருள்களையும் கொடுத்து வருவதாலும் பெண்கள்கற்பில்வழுவாமல் தங்கள் தங்கள் கணவருக்கு மாறுத்தரஞ்சொல்லாமலும், பெரியோர்கள் சொல்லைக்கடவாமலும், தொழுகை நோன்பு முதலியவைகள் தவறாமலும், வந்த விருந்தாளிகளுக்குப் பிரியத்துடன் ஓசீபனங்கொடுத்து இனிவரும் விருந்தாளிகளுக் கெதிர்பார்த்திருப்பதாலும். அந்நகரத்தில் வறுமை பகைவர் பொய்யுரை அதிகமழை அதிககாற்று அகாலமரணம் முதலியவைகளில்லாமல் ஜனங்கள் மங்களகரமாகவாழ்வார்கள் மேலும் ஆடவர்கள்யாவர்களும்அல்லாறசூல்சொன்னதுபோல் ஏவலைச்செய்துவிலகலைவிலக்கி கலிமாதொழுகை நோன்பு சக்காத்து ஹஜ்ஜ-ஐந்து, ஆமந்துபில்லாஹி ஆறு-ஆக பதினொருகாரியமும் சறதிலுள்ளபடி குறைவில்லாமல் முடித்துமூமின்முசிலீன்களாக விருப்பார்கள்.

இவர்களிவ்விதமாக ஷறகின்படி அமல்செய்வதால் றாமுநகரத்தைச்சார்ந்த நாடுகளெல்லாம் மாதமும்மாரிபெய்து வருஷமொன்றுக்கு முப்போகம்விளையும் இப்பேர்ப்பட்ட சிறப்புப்பொருந்திய நாட்டுக்கும், ஐம்பத்தாறுதேசத்திற்கும் மேலாகிய றாமுநகரத்தைச் சுற்றியிருக்கிற கோட்டை எவ்விதமிருக்குதென்றால் பூமிதேவிக்குத் திருமுகமபோலவும், அவள் நெற்றியிலணியுந் திலதம்போலவும், கண்போலவும், உயிரிருக்கிற இருதயஸ்தானம்போலவும், எப்போதும் சிதேவி வாசமாயிருக்கிற பொற்றாமரைக்கமலம்போலவும், ஸ்திரீகளணியாநின்ற ஆடையாபரண பூஷணாதிகள் வைத்திருக்கும் பொற்பெட்டிபோலவும் உலகத்துக்கெல்லாம் மேலாகிய உலகம்போலவும் ஊ

ழிகாலப்பிரளயத்தில் சகல ஜீவகோடிகளும்வந்து சேர்ந்திருப்பதற்
கமைந்த ஒரு வீடுபோலவும் பிரகாசித்துக்கொண்டு மிகுந்த உயர்ச்
சியும் விஸ்தீரணமும் பொருந்திய கோட்டையும், பாதாளமட்டும்ஆ
ழ்ந்து பூமிமட்டும்உயர்ந்து தண்ணீர்நிரம்பியதில்அநேகவிதமானமச்ச
ம்முதலை வலம்புரிச்சங்கங்களும் எந்நேரமும் சப்தித்துக்கொண்டி
ருக்கின்ற அகழியும் அதன்கரையோரங்களில் வாழை பலா மா கரும்
பு தேக்கு கமுகு தென்னை புன்னைமுதலிய விருட்சங்களும், ரோசா
மல்லி முல்லை இருவாட்சி சண்பகம் பாரிசாதமுதலிய புட்பச்செடி
களும் பொருந்திய அகழிக்கரையுமுள்ள கோட்டைக்கு நான்கு வாச
லும், அதனுள்ளே அநேகம் மாடமாளிகைகளிலும் மேன்மாட கூட
ங்களும், ஆறடுக்கு ஏழடுக்குள்ள உப்பரிகைகளிலும், பலவஸ்துக்க
ளும் நிறைந்து எவரெவர்கள் எதைக்கேட்பினும் அதைஇல்லையென்
று சொல்லாமல்விற்கும்படியான கடைவீதிகளும், குருன்வேதத்தை
யோதி அதற்குப்பொருள் சொல்லும்படியான ஆலீம்கள் உலமாக்கள்
மவுலிகள் இருக்கப்பட்டவீதிகளும், வீராதிவீரரான இராஜாக்கள்
யானையின்பேரிலும், குதிரையின்பேரிலும், தேர்கள்பேரிலும் ஏறிற
வுண்சவாரி செய்கிறவீதிகளும், யானைகள் கட்டியிருக்கும் கூடங்க
ளும், குதிரைகள் பந்திபந்தியாகக் கட்டியிருக்கிறலாயங்களும், போர்
வீரர்கள் வசிக்கும்வீதிகளும், தங்கம் பொன் வெள்ளி செம்பு பித்த
ளையென்னும் பஞ்சலோகங்களும், முத்து பவளம் வைரம் வைடூரி
யம் - கோமேதகம் - பச்சை - மரகதம் நீலம் புஷ்பராகமென்னும்ஒன்
பதுவகை ரத்தினங்களும், பட்டு பட்டாவளிகள் சால்வை - பீதாம்பர
ம் மக்மல் - சரிகைவேலைசெய்த ஆடையாபரணமுதலிய பூஷணாதிக
ள்விற்கும் வர்த்தகர்களாகிய சவுதாகர்கள் வாழ்கின்ற வீதிகளும் மந்
திரியென்னும் ஒஜீர்கள்வாழ்கின்ற வீதிகளும் வீதிக்குவீதி இத்தனை
யென்று கணக்கிடக்கூடாத பள்ளிவாசல்களும் பிள்ளைகள் குருனோது
கின்ற பள்ளிக்கூடமென்னும் மகுதபுக்கானும் கணக்கிலடங்காதகோ
ரிகளும், அவ்வூர்க்குவந்த முஜாபர்கள் தங்கியிருக்குஞ் சாவடிகளும்
இதல்லாமல் கோட்டையின் கொம்மைகளின் மீதும், நான்குவாச
ல்களின்மீதும், பள்ளிவாசலைச் சேர்ந்தமனாருக்கள்மீதும், கோரிகளி
ன்சிகரத்தின்மீதும், மாடகூடஉப்பரிகைகளின்மீதும் தங்கக்கலசங்க
ள் வைத்துகொடிகள் நாட்டியிருக்கும், மேற்படி தங்கக்கலசங்களைப்
பார்க்கில் கோடிசூரியப்பிரகாசம்போல் விளங்கியிருக்கும், கொடிக
ளாடுவதைப்பார்த்தால் அந்நகரத்தைப் பார்க்கப் புதிதாய் வருகிறவர்
களை எங்கள் வீட்டில் விருந்துண்ணவாருங்களென்று உப்பரிகைகளி

ண்மேலிருக்கும் பெண்கள் அழைப்பதுபோல் கொடிகளின்றுணிகள்ஆடிக்கொண்டிருக்கும்; இதுவுமல்லாமல் அந்நகரத்திலுள்ள பேதை பெதும்பை அரிவை தெரிவை மங்கை மடந்தை பேரிளம்பெண்ணென்று வழங்குகின்ற எழுவகைப் பருவப்பெண்களும் குளித்துமுழுகி உப்பரிகைகளிலும் மேன்மாடங்களிலு மிருந்து அவரவர்கள் அளகபாரத்துக்கு அகிற்புகைகொடுக்கிற வாசமும், அவர்களணிகின்ற களபகஸ்தூரி புட்பங்களின்வாசமும், அந்நகரமுழுதும் மாறாமல் வீசிக்கொண்டிருக்கும், இவ்வளவு சிறப்புற்றோங்கிய நகரத்தின் மத்தியில் ஏழுசுற்றுத்திருமதிலும், ஏழுவாசலும், வாசலுக்குவாசல் பதினெட்டாயுதங்களை யணிந்த துரிக்கிகள்காவலும், அபாஜிகள்காவலும், காப்பிரிகள்காவலும், அறபிகள்காவலும், இன்னுமிருந்த சூரர்கள் காவலிருக்கும்படியான திருமதிலினடுவில் ஒருமயில்தூலே விஸ்த்தீரணத்தில் தங்கத்தினால் சுவர்களெழுப்பி அதில் ஒன்பதுவகை ரத்தினங்களிழைத்த ஏழடுக்குமெத்தைவீடுகளும், கலசமால்களும், பாத்துஷா ராஜாங்கஞ்செலுத்துகின்ற சிம்மாசனமென்னும் தகத்தும், பல விசித்திரம்பொருந்திய அந்தப்புரமுதலான அரண்மனைகளும், பார்க்கப்பார்க்க மனஞ்சலியாத அழகுபொருந்தி கண்டோர்பிரமிக்கும்படியாயிருக்கின்றது. இவ்வளவு அலங்காரமும் வைபோகமுமுள்ள றூமுநகரத்துக்கு மற்றொருநகரத்தையிணைசொல்ல எவர்களாலுமுடியாது.

அப்பேர்ப்பட்ட றூமுநகரத்தில் எந்நேரமும் மங்களகீதங்களும் பேரிகை முரசு நகரா நகபத்து டங்கா எக்காளம் பூரி சின்னம் நாகசுரம் தவில் துந்துமி வீணை துத்தி கைத்தாளம் முதலிய பதினெட்டுவகைமேளவாத்தியங்களும் தாம்தாமென்று இடைவிடாமல் முழங்கியிருக்கும்படியான றூமுநகரம்.

பிசுமில்லாகி.

# ஆசாத்பகுத்பாத்துஷா அரசுரிமை.

——*)—(*)——

அந்த ரூமுநகரத்தை கிஜரத்து-சா-வருஷத்துக்குப் பின்னால் பாரம்பரியமாய் பட்டங்கட்டிப் பரிபாலனஞ் செய்துவந்த பாத்துஷாவானவர் யாரென்றால் இப்பூலோகத்திலுள்ள ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களுக்கெல்லாம் சக்கிரவர்த்தியாகிய ஆசாத்பகுத் பாத்துஷா அவர்கள் அரசுசெலுத்தி வருங்காலத்திலிருந்த பாத்துஷாக்கள் சுலுத்தான்கள் - நபாபுகள் - அரசர்களுக்குள்- தக்கோனென்னுந்தாளாண்மையுடையவராய் திடகாத்திர தேகதீர வீரசிலாக்கியமுள்ளவராய் கல்விப் பொருளை கசடறக்கற்று செல்வப்பொருளைத் திரளாய்ப் பெற்று, நற்குணம் நற்செய்கை நன்மைகள் கெம்பீரம்வீரயபராக்கிரமம் உத்தண்டம் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம் தயைய தாட்சிண்யம் ஈவு இரக்கம் அமைச்சர் குடி படை அனைவர்களையும் ஆதரித்து, தன்னைச் சரணடைந்தவர்களைத் தற்காத்து அல்லாகுத்த ஆலா வேதத்திற் சொல்லியதுபோல் தொழுகைமுதலியவைகளை ஐந்து நேரமும் இடைவிடாமற்றொழுது சரீகத்து தரீகத்து அகீகத்து மகரிபத்து முணர்ந்து ஷறகிலுள்ள உக்கும்கள் யாவுந்தெரிந்து தீனெறிசெலுத்தி தன்னுயிர்போல் மன்னுயிரைக்காத்து பசுவும் புலியும் ஓர்டாறையிற்படுக்கவும், பாம்புங் கீரியும் பட்சமாயடுக்கவும், கிளியும் பூனையுங் கிட்டிவிளையாடவும், சிங்கமும் யானையும் சேர்ந்துறவாடவும், ஒந்தியுமயிலும் உலாவித்திரியவும், பருந்துங்கோழியும் ஒருகூட்டில் முட்டையிட்டுக்குஞ்சு பொரிக்கவும், மானும்புலியும் ஓர்துறையில் தண்ணீர்குடிக்கவும், சீனதேசத்தார் திறைகொணர்ந்துநிற்கக் காபூர் பாட்சா கப்பங்கட்ட எமனிலுள்ளோர் ஏகோபித்துத்திறையிடயகரிபுதேசத்தார்வந்து கப்பங்கட்ட இவ்விதமாகடில்லி பங்காளம் பஜரா சிங்களம் சோழம் பாண்டி கேரளம் கொங்கணமுதலிய ஐம்பத்தாறுதேசத்தரசர்களும் திறையளந்துநிற்க வானிலுள்ளோரும்மண்ணிலுள்ளோரும் வாழ்த்திப் போற்றிட, நன்னயகுணமுள்ள நாவலர்சூழ காட்டிய மாதர்கள் நாம்புரத்தாட, சில மாதர்கள் வெண்சாமரை போட, சிலர்கட்டியங்கூற, சிலர் காளாஞ்சியேந்த, ஆறுபத்துநாங்

குமந்திரிகளாகிய ஒசீறுகள் சூழத் தகத்திலிருந்து சத்தியநெறிதவறாமல் நீதிசெலுத்திவருகிற ஆசாத்பகுத்பாத்துஷாவுக்கு வயதுநாற்பதாகியும் தனக்குப்பின்னால் அரசுசெலுத்தப்பிள்ளையில்லாமையால் தனது கலாலாகிய் மனைவியைச்சமீபத்திலழைத்து எனதன்பிற்குரிய பெண்கள்நாயகமே நமக்குச்சகலசம்பத்தும் சாம்பிராச்சியமும் பொருந்தியிருந்தும் நமக்குப்பின்னால் இவ்வுலகையாண்டு இதிலுள்ள குடிகளை ஆதரிக்கும்படியான ஒருபிள்ளையில்லாமற்போய்விட்டதே யென்று மிகுந்த விசனத்துடனே பாத்துஷாசொல்ல அவருடையமனைவிஅதிக வியாகூலப்பட்டு நமக்கு அல்லாகுத்தஆலாவுடைய கிருபையிப்படி யிருந்தால் நாமென்னசெய்யலாமென்று வருத்தத்துடனே சொல்லஅதன்பின் பாத்துஷா அநேகம் பள்ளிகள்கோரிகள் சாவடிகள் கட்டிவேண்டிய ஏழைமிஸ்கீன்கள் யாசகர்முதலியவர்களுக்குத் தேவையானபொருள்களை சக்காத்தாக்கொடுத்துவரும்நாளையில் ஒருநாள் சுகபுநேரத்திற் குளித்து முழுகி ஜாமாமுதலாகிய சட்டைசறுவந்து உடுத்திபஜிறு தொழுது தம்முடைய கலாலாகிய மனைவியிருக்கும் அந்தப்புரத்திற்குப்போய் அறுசுவைபதார்த்தத்துடனே ஒஜீவனந்தின்று இராஜபூஷணமுதலியவைகளையணிந்து பாக்கு வெற்றிலை தின்றுசந்தனங் களபகஸ்தூரிபூசி இராஜநீதிசெலுத்தும்படி யெழுந்திருந்து தனக்கெதிரிலிருந்தநிலைக்கண்ணாடியில் முகத்தைப்பார்த்தபோது தன்தாடியில் ஒருநரைமயிர் வெள்ளிக்கம்பிபோல் விருக்கக்கண்டார். அப்படிக்கண்டவுடனே மிகுந்த வியாகூலப்பட்டு தொப்பென்று கீழேவிழுந்து மூர்ச்சையானார்.

அதுகண்ட அவர் மனைவி அதிக மனவருத்தமடைந்து விரைவில்வந்து தனது நாயகரைத்தூக்கி சப்ராகூடமஞ்சத்தி லிருத்தி வெட்டிவேர் விசிறியில் பனிநீர்தெளித்து விசிறினார்கள். அப்போது பாத்துஷா மூர்ச்சைதெளிந்து கண்விழித்துப்பார்க்க அவர்நாயகி தங்களுக்கு இப்பேர்ப்பட்ட மூர்ச்சைவந்தகாரணமென்ன வென்றுகேட்க எனது அன்புக்கிசைந்த பீவியேகேள் எனக்குமவுத்தென்னுங் கொடிகட்டியாச்சுது அதென்னெனில் எனது தாடியில் நரை மயிர் தோன்றியதுதான் ஆதலால் அல்லாகு சுபுகானகுத்த ஆலா இதுவரைக்கும் நமக்குப்பின் அரசாள ஒருபுத்திரனைக் கொடுக்க வில்லையே என்று சொல்லி மெத்த வருந்தி விசனமடைந்து, சித்தம்பிரமித்து செந்தழல் மெழுகுபோல் உருகி நெட்டுயிர்ப்பெய்து என்னினைவு தெரியாமல் கீழே விழுந்தேனென்று பின்னுஞ்சொல்வார் கேட்பாய் பெண்கள்நாயகமே நமக்குப் பிள்ளையில்லாத படியால் நம்முடைய கயாத்துள்ளவரையில்த்தான் இந்த அரசை ஆள்வோம் நாம் மவுத்தடைந்தபின் அன்னியர்கள்தானே இவ்வுலகத்தை யாளப்போகிறார்கள் ஆகையால் நாம

உயிரோடிருக்கும்போதே ஒருவருக்கு இந்தஅரசனைப் பட்டங்கட்டிவிட்டு நாம் அல்லாகுத்த ஆலாவுடைய நேர்வழியைப் பெற்றுக்கொள்ளலாமென்று எண்ணியிருக்கிறேனென்று தன்னுடைய கலாலாகிய மனைவிக்குச்சொல்லி சமாதானம்படுத்திவிட்டு அப்போதே யெழுந்து தன்து தகத்திற்போய் அறுபத்துநான்கு ஒசீறுகளையும் அழைத்துச் சூழ்ந்திருக்கும்படி கொலுவிருந்து மந்திரிகளைப்பார்த்து ஒசீறுகளே இவ்வுலகத்திற்குத் தீபம்போலே விளங்காநின்ற தகத்தென்னுஞ் சிங்காதனத்திலிருந்து அரசுசெலுத்தும் படியான பிள்ளையில்லாத விசனத்தையென்னாற் சகிக்கக் கூடாமையாயிருப்பது மன்றி எனக்குப்பிற்காலம் வாழையடிவாழையாய் இன்னான்மகன்இன்னானென்று இயம்புதற்கிட மில்லாமற்போய்விட்டது. வேதத்தில் பிள்ளையில்லாதவர்களுக்கு மேன்மையில்லையென்று சொல்வதாலும், குலம் விளங்கும்படி குழந்தையைப் பெறமாட்டாது வயது அதிகப்பட்டதாலும், பிள்ளையில்லாத பெருமலடனென்று தேசத்தி லுள்ளவர்கள் சொல்லும் நிந்தனையினாலும், இவ்வரசாட்சியை ஒருவருக்குக்கொடுத்து விட்டு நான் அல்லாகுத்த ஆலாவைநாடி இபாதத்துச் செய்ய எண்ணங்கொண்டிருப்பதால் எனது சிங்காரத்தோட்டத்தி னடுவில் ஒரு இபாதத்துக் கானாகட்டுங்களென்றுதன் தகப்பனார் நாளையிலிருந்த கிருது மந்தென்னும் முதல் மந்திரிக்கும் மற்ற மந்திரி களுக்குஞ் சொன்னார்.

அதுகேட்ட முதல் மந்திரியானவர் பாதுஷாவின் உத்தரவைத் தலைமேற்கொண்டு தச்சர் கொல்லத்துக்காரர்கள் முதலிய வேலையாளர்களையழைத்து அளவற்ற திரவியங்களையும், சாமான்களையுங்கொடுத்து நவரத்தினகசிதமாய் பார்ப்பவர்கள் பிரமிக்கும்படியான இபாதத்துக்கானா கட்டிமுடித்து பாத்துஷாவுக்கு அறிவித்தார்கள். அப்போது பாத்துஷா அதைப்போய்ப்பார்த்து மிகுந்த சந்தோஷமடைந்து அன்றையதினம்போய் மறுநாள் வெள்ளிக்கிழமை கொத்துபா தொழுதபின்னர் தமதுமந்திரிமார் அறுபத்து நான்குபேரில் முதன்மையாகிய கிருதுமந்தென்பவர் வசம் தன்முத்திரை மோதிரமுஞ்செங்கோலுங் கொடுத்துமற்றமந்திரிகளையுங்குடிபடைமுதலியயாவர்களையும்முதன்மந்திரிசொல்லைக்கேட்டு அடங்கியிருங்களென்று உத்தரவுசெய்தார் அப்படியே அவர்களும்நடந்துவந்தார்கள். பின்புஆசாத் பகுத்பாத்துஷாஎழுந்திருந்து இராஜ பூஷணங்களையும் வஸ்திரங் களையும் நீக்கி பக்கீர் கோலங்கொண்டு தமக்கு இபாதத்துச்செய்வதற்குக் கட்டியிருக்கும்இபாதத்துக்கானாவிற்போய் உள்ளேநுழைந்து சகலசிவகோடிகளையும் படைத்து அதற்குத்தக்க அன்னபானாதிகளைக் கொடுத்துக் காப்பாற்றும்படி ஒருபொருளாகிய ஆதிநாயகனை நோக்கித்தவமென்று விளங்காநின்ற இபாதத்தைச்செய்து கொண்டிருந்தார்.

இவ்விதமாக ஆசாத்பகுத்பாத்துஷா வெளியில்வராமல் இபாதத்துக்காணுவுக்குள் தவத்திலிருக்கையில் வேளைவேளைக்கி றொட்டிபால் முதலியதை கோசாக்கள் கொண்டுவந்துகொடுப்பார்கள் அதைபாத்துஷாபுசிக்கும் வேளைதவிர மற்றவேளைகளிலெல்லாம் அல்லாகுத்த ஆலாவுடைய இபாதத்துச் செய்துகொண்டிருந்தார்

இப்படிஆசாத்பகுத்பாத்துஷா அரசுசெய்வதைவிட்டுத்தனித்து இபாதத்துச்செய்துகொண்டிருக்கில் சங்கதியை இவர்களுக்குத்திறை கட்டுகிற ஐம்பத்தாறுதேசத்திலுள்ள பாத்துஷாக்களும் சுல்த்தான்களும், நபாபுகளும், இராசாக்களும், கேள்விப்பட்டு யாவர்களும் ஓரிடத்தில் கூட்டங்கூடி ஆலோசித்ததாவது, நாமும் பலரும் திறைகட்டும்படியான ஆசாத்பகுத்பாத்துஷா தம்முடைய அரசை மந்திரிவசம் ஒப்புவித்து தவமென்னும் இபாதத்திலிருப்பதால் இனிநாம் அந்த மந்திரிக்குத்திறைகட்டக்கூடாது அப்படி திறைகட்டவில்லையென்று நமதுபேரில் அவர்கள்படையெடுத்து வருவார்களானால் வரட்டும் அரசரில்லாதபடையானதால் நம்மைச்செயிக்கஅவர்களால் முடியாது அவர்களேதோற்றுப்போவார்கள் ஆகையால் யாவருந்திறைகட்டக்கூடாதென்றுபேசி தீர்மானஞ்செய்துகொண்டு அவரவர்கள்நகரம்போய்ச்சேர்ந்து இராசரீகஞ்செய்துகொண்டிருந்தார்கள்.

இவர்களிப்படியிருக்க றாமுநகரைத்தைப்பாதுகாக்கும் முதன்மந்திரியாகிய கிருதுமந்தென்பவர் யோசித்து இதென்ன அதிசயம் ஆறுவருடகாலமாய் ஐம்பத்தாறு தேசத்தரசர்களி லொருவராகிலும் திறைகட்டவில்லையே இதையோசித்தால் நம்முடைய பாத்துஷா இவ்வூரையும் தவுலத்தையும் பாத்துஷாத்தனத்தையும் வெறுத்து பக்கீர் கோலங்கொண்டு இபாதத்துக்காணுவில் போய் இபாதத்துச்செய்து கொண்டிருப்பதினாலல்லவா இவர்கள் திறைகட்டாதிருக்கிறார்களென்றெண்ணி மற்றமந்திரிகள்யாவரையும் பார்த்துக்கிருதுமந்தென்னும் ஒசீர் சொல்லுகிறார் கேளுங்கள் மந்திரிமார்களே நமது பாத்துஷா இபாதத்துச் செயது கொண்டிருப்பதால் ஐம்பத்தாறு தேசத்தரசர்களும ஆறுவருடமாய் திறைகட்டவில்லை நாமும் அதைக்குறித்துக்கேட்கவுமில்லை, இப்போதாவது ஆளனுப்பிக் கேட்போமென்றாலும் அவர்கள் திறைகொடுத்து நமக்குப்பணிந்து நடப்பதாகத் தோற்றவில்லை ஏனென்றால் நமதுபடை அரசனில்லாத படையாயிருப்பதால் அவர்கள் அலட்சியஞ்செய்து விட்டார்கள் மேலும் பாத்துஷாவில்லாத இந்த இராசாங்கமும், தவுலத்தும், சிறப்பும்எனக்கு எள்ளளவேனும் பிரியமில்லாமலிருக்கின்றது, ஆகிலும்நம்முடைய பாத்துஷாசொல்லைக்கடவாமல் என்ஹயாத்துள்ளவரையிலும் இந்நகரை பாதுகாத்து

வருவதே தகுதியாயிருக்கின்றதென்று மற்றமந்திரிகளுக்குச் சொல்ல அவர்களும்சம்மதித்து பாத்துஷா அரசைஇவர்கள்வசம்ஒப்பித்தநாள் முதல் இதுவரையிலும் இபாதத்திலிருப்பதையோசித்துஇரவும்பகலும் துக்கத்தை யனுபவித்தவனாய் றாமுநகரத்தைப் பாதுகாத்து வந்தார்கள்

இவர்ளிப்படியிருக்க முன்சொல்லிய ஐம்பத்தாறு தேசத்தரசர்களில் சிலஅரசர்கூடி யோசித்ததாவது நாம் இந்த ஆறுவருஷமாகத் திறைகொடாமலிருந்தும் அவர்கள் ஒருவரை யாவது ஆளனுப்பிக் கேட்கவில்லை பார்த்தீர்களா, அதேதெனென்றால் பாத்துஷா இல்லாமையால் அவர்கள்பிலனற்றவர்களா யிருக்கிறார்கள் ஆதலால் நாம்படையெடுத்து றாமுநகரத்திற்குபோய் சண்டைசெய்வோமானால் அவர்களைலேசில் ஜெயித்து வெற்றிபெற்று றாமுநகரத்தைப் பிடித்து கிருதுமந்தென்னும் ஒசீரையும்மற்ற மந்திரிமார்களையும் துரத்திவிட்டு நாம் ஆண்டுகொள்ளலாமென்றுமுடிவுகட்டி அவரவர்கள் இரதகஜ துரகபதாதிமுதலிய நால்வகைச்சேனையுடனும், பதினெட்டாயுதங்களுடனும், நகபத்து, டங்கா, எக்காளம், ரணபேரிமுதலிய வாத்தியங்கள் கடல்போலொலிக்கும்படியாகப் பலரும் ஒருமுகமாய்க்கூடிப் பிரயாணப்பட்டு காடு, செடி, காணாறு, மலை, வனம், வனாந்திரம்பாலைநில முதலியவைகளைக்கடந்து றாமுநகரத்திற்கு மூன்றுகாதவழிக்கு அப்புறத்திலுள்ள ஒருமைதானத்தி லிறங்கிக் கூடாரமடித்திருந்தார்கள் அவர்கள் படையெடுத்து வந்திருப்பதை றாமிலுள்ள தூதுவன் அந்தமார்க்கமாய் வரும்போதுகண்டு மனம்பதைத்துவிரைவில் றாமுநகரத்திற்குவந்து கிருது மந்தென்னும் ஒசீருக்குத்தெரியப்படுத்த அது கேட்டுகிருதுமந்தென்பவர் திடுக்கிட்டு மற்றமந்திரிமார்களையு மழைத்து இதென்ன அநியாயமாயிருக்கின்றதென்று ஒருவர்க்கொருவர் ஆலோசித்து ஒன்றுந்தோற்றாமல் அறுபத்துநான்குமந்திரிகளும் எழுந்துபாத்துஷா தவஞ்செய்கிற இபாதத்துக்காணாவுக்குச் சமீபமாய்ப்போய்நின்று ஒருகோசாயிடத்தில் இவர்கள்வந்திருக்கிறசெய்தியைப் பாத்துஷாவுக்குச் சொல்லியனுப்பினார்கள்.

அதைக்கேட்டபாத்துஷா கிருதுமந்தென்னும்முதல்மந்திரியைமூன்றுமந்திரிகளோடு உள்ளேவரும்படிஉத்திரவுபண்ணினா. அதுபோல் நான்குமந்திரிமார்கள் இபாதத்துக்காணாவுக்குட்போய் பாத்துஷாவைக் கண்டுதசலீஞ்செய்து அதிகதுக்கத்தோடுநின்றார்கள். அப்போது ஆசாத்பகுத்பாத்துஷா இவர்கள்முகத்தைப்பார்த்து உட்காரச்செய்து நீங்கள்வந்தகாரியமென்னவென்று கேட்க நான்குமந்திரிகளும் பாத்துஷாவைப்பார்த்துச் சொல்லத் தொடங்கினார்கள். கேளுங்கள் எங்க

ளையாண்டு இரட்சிக்கும்படியான பாத்துஷாசிரோமணியே தாங்கள் அரசைவெறுத்து இபாதத்துச் செய்துகொண்டிருக்கிற சங்கதியை நமக்குத்திறைகட்டும் இராஜாக்கள் கேள்விப்பட்டு ஆறுவருடகாலமாய் திறைகட்டாமலிருக்கிறார்கள் அதில் சிலஅரசர்கள் இப்போது நால்வகைச்சேனையுடனே படையெடுத்து நம்மோடு சண்டைசெய்து றாமைப்பிடித்துக்கொள்ள மூன்றுகாதத்துக்கப்புறத்தில் வந்திறங்கியிருக்கிறார்கள், நாளையதினத்தில் அவர்கள் இந்நகரைச்சுற்றி வளைத்துக்கொள்வார்கள் போலிருக்கின்றது. நாங்கள் படையெடுத்து அவர்களோடெதிர்த்துச் சண்டைசெய்தாலும் எங்கள்படைராஜாவில்லாதபடையாதலால் தோல்வியடையும். அவர்களேஎங்களைச்செயித்து இந்நகரத்தைப்பிடித்துக்கொள்வதுந் தவிரஎங்கள் பெண்டுபிள்ளைகளையும்சிறைபிடித்து என்னென்ன அநீதஞ்செய்வார்களோ தெரியவில்லை இந்நாள்வரையிலும் தங்களுடைய பறக்கத்தினாலே நாங்கள் அதிசுகத்தையனுபவித்துக்கொண்டிருந்தோம் இப்போது அல்லாகுத்தஆலா நம்முடைய அரசைப்பகைவர்களுக்குக் கொடுத்துஎங்களைத் துன்பம்படுத்துவான்போல் காணப்படுகின்றது இதற்கு நாங்களென்னசெய்வோமென்று இரண்டுகண்களிலும் தாரைதாரையாய்த் நீரொழுகும்படியாகப் புலம்பினார்கள்.

அதை பாத்துஷாகண்டு அவர்களுக்குத் தேறுதலைசொல்லி குளிர்ந்த முகத்தோடு சொல்லத்தொடங்கினார். கேளுங்கள் என்னுடையஉடப்பிறப்பான ஒசீறுகளே நான் என்ன செய்கிறதென்றெண்ணி என்னிடத்தில்வந்தீர்கள் அந்தயெண்ணத்தை எனக்கு நன்றாய்த் தெரியும்படி சொல்லுங்களென்று மிகுந்தகிருபையோடு கேட்க அப்போது நான்குமந்திரிகளும் மிகுந்த அன்புடனே தசலீஞ்செய்து வணக்கத்தோடு சொல்லத்தொடங்கினார்கள். கேளும் பாத்துஷாக்கள் சிரோமணியே இந்தப்பூலோகத்தினிடத்தில் அல்லாகுசுபுகானகுத்தஆலா பாத்துஷாக்கள் நபாபுகள், இராசாக்கள் இவர்களை ஒவ்வொரு நகரங்கள் தோறும் உற்பத்திசெய்து சகல யுத்தி புத்தி வீரத்துவ முதலியதுங் கொடுத்து அந்தந்த நகரங்களுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வித்து அந்நகரை ஆளச்செய்வது எதினாலே யென்றால் அவ்வவ்வூர்களிலுண்டான துஷ்டர்களையடக்கவும், ஒருவருடைய பொருளை யொருவ ரபகரித்துக்கொள்ளாமலும், அநீதநடத்தைநடவாமலும் கள்-காமம்-பொய்-கொலை-களவு என்றுசொல்லப்பட்ட பஞ்சபாதகங்கள் நடக்கவொட்டாமலும், அந்நகரிலுள்ள அனைவர்களும் துன்பத்தையொழித்து இன்பத்தையனுபவித்து அராஜபக்தி யுள்ளவர்களாயிருக்கும்படி அடக்கி நீதிநெறியுடனே செங்கோல்செலுத்தும்படி

யாகத்தான் அரசர்களைப் படைத்தான். அதுபோலவே அல்லாகுசுபுகானகுத்த ஆலாயுதங்களை இந்த றாமுனகரத்திற்கு நீதிநெறியோடு அரசாட்சி செய்து எங்களையெல்லாம் பாதுகாக்கும் படியாகப் படைத்திருக்க தாங்கள் அல்லாகுத்த ஆலாவுடைய ஏவலான காரியங்களைத்தள்ளி விட்டு பக்கீர்கள்செய்கின்றஇபாதத்துச்செய்யவந்து விட்டீர்களே தாங்கள் இப்படி தவநிலையையனுசரித்தபடியா லல்லவாநமக்குத்திறைகட்டுகிற இராஜாக்கள் நலமுடனெதிர்க்கப் படையெடுத்து வந்தார்கள்.

இப்போது நாம் அவர்களுடனெதிர்த்துச் சண்டை செய்வோமானால் எத்தனை வீரர்கள் உயிரிழப்பார்களோ. மேலும் இந்நாட்டிலுள்ள குடிகள், ஏழைகள் - மிஸ்க்கீன்கள் முதலானவர்களும் என்னபாடுபடுவார்களோ, இதுவுமல்லாமல் எத்தனை சீவனுக்கு அழிவு வருமோ தெரியவில்லை, அப்படி ஜெனங்கள் துன்பப்படும் பாவங்கள் யாரைச் சூழுமென்றால் இந்நகரத்துக்குப் பாத்துஷாவாகிய தங்களை சேசாருமல்லது மற்றெவர்களுக்குஞ் சாராது ஆகையால் பாத்துஷாக்களுக்கு ஒரு ஆஜத்துநிறைவேற வேண்டுமானால் அவர்கள் ஒரேயுறுதியாய் நடக்கவேண்டியது அதெப்படியென்றால் பகல்நான்குஜாமமும் தகத்திலிருந்து நீதிநெறியோடு அரசுசெலுத்தவேண்டும் இரவில் நான்குசாமத்தில் முதல்சாமத்தை போஜனமுதலிய ஒசீவனந்தின்றுபோக்கவேண்டும், இரண்டாஞ்சாமத்தை நித்திரைசெய்துழிக்கவேண்டும், மூன்றாஞ்சாமத்தில் சமாதியென்றுவழங்கும் கபுறுஸ்தான்களிருக்கிற கோரிகளுள்ள தலங்களில் சாரத்துமுதலியபாத்திகா வோதிக்கழிக்கவேண்டியது, நான்காஞ்சாமத்தில் அல்லாகு சுபுகானகுத்த ஆலாவைநாடி வணங்கவேண்டும் ஆகையால்இது தான் பாத்துஷாக்கள் நடக்கவேண்டியமுறைமை இன்னும் அவர்களுக்குள்ள ஹாஜத்துகளைக்குறித்து துவாக்கேட்பார்களானால் அல்லாகு சுபுகானகுத்த ஆலா அந்நாட்டத்தை நிறைவேற்றுவான். இப்படியிருக்கவன்றியில்லாத பக்கீர்கள் வணங்கும்படியான வணக்கத்தைத் தாங்களெடுத்துக்கொண்டால் ஆண்டவன் ஒருபோதும் பொறுக்கமாட்டான் உம்முடைய ஆஜத்தும் நிறைவேறமாட்டாது முன்சொன்னமுறைபோல்வணங்கிநடந்தால் அந்தவணக்கமவன்றுக்கு - நூறு-ஆயிரம்-லட்சம்-கோடி பலனைக்கொடுக்கும், தாங்கள் நினைத்தகாரியத்தையும் அல்லாகுசுபுகானகுத்த ஆலா நிறைவேற்றுவானென்று ஒசிராக்கிய நான்குமந்திரிகளும் சொன்னார்கள்.

அதை ஆசாத்பகுத்பாத்துஷாகேட்டு யோசனைசெய்து இவர்கள் சொன்னதுவேதக்கட்டளைபடி சரியாயிருப்பதினாலே மந்திரிகளைப்பார்த்து சொல்லுகிறார். கேளுங்கள், ஒசிறுகளே, நீங்கள் சொன்னது

சரிதான் நான் நாளை வெள்ளிக்கிழமை குத்பாவுக்கு வருகிறேன் நீங்க
ள்யாதொன்றுக்கும் ஆலோசியாமல் அவரவரிடங்களுக்குப் போயிரு
ங்களென்று உத்தரவுசெய்தார் உடனே நான்குமந்திரிமார்களும் எழு
ந்து அதபு-பந்தகி-தசுலீஞ்செய்து அவரவர்க ளிடத்திற்குப் போய்
விட்டார்கள் மறுநாள் வெள்ளிக்கிழமை கொத்துபா வானபடியால்
ஆறுவருஷத்துக்குப்பின்பு இபாதத்துக் கானாவைவிட்டுப் பாத்துஷா
வெளியில் வருகிறபடியால் அதற்குண்டாகிய இரதகஜ துரகபதாதி
முதலிய நால்வகைச்சேனைகளுடனும், பதினெட்டுவித, மேளவாத்தி
யக்களுடனும், அம்பாரிகட்டிய பட்டத்துயானையுடனும், நாட்டியப்
பெண்கள் கட்டியக்காரர்களுடனும், பாத்துஷா அணியும்படியான ஜா
மா லீமா-சட்டை-சருபந்து-கல்க்கத்துரா-பாஜிபந்து முதலிய பூஷ
ணங்களையும் எடுத்துக்கொண்டு அறுபத்துநான்குமந்திரிகளையும்பாத்
துஷாயிருக்கும் இபாதத்துக் கானாவுக்கருகில் வந்தார்கள் அப்போது
(ஆசாத்பகுத்பாத்துஷா) இபாதத்துக் கானாவைவிட்டு வெளியில் வ
ந்து குளித்து முழுகி தாமணிகின்ற பூஷணாதிகளையும் ஜாமா-லீமா
முதலிய ஆடைகளையுமணிந்து சிலபொருள்களைத் தருவித்துஏழை
கள் மிஸ்க்கீன்கள் யாசகர்முதலியவர்களுக்குத் தருமமென்னும் சக்கா
த்துக்கொடுத்து யானையின்மேலேறி சகலஆடம்பரத்துடனே ஊர்வல
ம்வந்து கொத்துபாப்பள்ளி வாசலுக்குப்போ யிறங்கி கொத்துபாதொ
ழுதுமுடிந்தவுடன் அல்லாகுத்த ஆலாவினிடத்தில் துவாக்கேட்டுக்
கொண்டு யானையின்மீதேறி சகலபவுசுடனே புறப்பட்டுப் போய்தாம்
அரசு செலுத்தும் சிம்மாதனமென்னுந் தகத்தில் சந்தோஷமாக வீற்
றிருந்தார்.

அந்தச்சமயத்தில் றூமுநகரத்துக்கு மூன்றுகாதவழிக்கப்புறத்தி
லிருந்த இராசாக்களெல்லாம்படையைநடத்தி றூமுக்குக்காதவழி தூ
ரத்தில் வருவதைசிலவழிப்போக்கர்கள் கண்டுஅந்தவரசர்களைப் பார்த்
துதெண்டனிட்டுஆசாத்பகுத்பாத்துஷா தகத்திலிருந்துஇராசநீதிசெ
லுத்துகிறசங்கதியைச் சாங்கோபாங்கமாய்ச்சொல்ல அதுகேட்ட ரா
சாக்கள் இருகாதிலும் ஈயத்தைக்காச்சிவிட்டதுபோல் உள்ளங்கலங்
கிஇனிநாமென்னசெய்வோம் நம்முடைய புத்தியீனமீதாய் நாம்புறப்
பட்டு இவ்விடம்வந்ததை பாத்துஷாகேள்விப்பட்டு ஆத்திரத்துடனே
இபாதத்துக் கானாவைவிட்டு தகத்தில்வந்திருக்கிறார் இனி அவர் நம்
மை என்ன செய்வாரோவென்று பயந்து நடுநடுங்கி அவரவர்கள் ப
டைத்தளங்களை அவ்விடத்திலேயே நிறுத்திவிட்டு தாங்கள் ஆறுவ
ருடத்திற்குக் கட்டவேண்டிய கிஸ்திக்கு இரட்டிப் பொருளெடுத்து
க்கொண்டு பாத்துஷாவுடைய சமுகத்திற்போய் கைகட்டி வாய்புதைத்

து அதிக ஆசாரத்துடனேவணங்கி தாழ்ச்சிசெய்து பாத்துஷாக்களுக்கெல்லாம் சக்கிரவர்த்தியாகியபாத்துஷாசிரோமணியே நாங்கள் நினைத்துவந்த எண்ணத்தை தாங்கள் மனதில்வைக்காமல் அல்லாவுக்காக மனம்பொறுத்து எங்கள்பேரில் பூரணகடாக்ஷம்வைத்து இரட்சித்துக் காப்பாற்றவேண்டியதென்று சகலராஜாக்களும் வணங்கிநின்றார்கள். அப்போது பாத்துஷாசிரோமணியாகிய ஆசாத்பகுத்பாத்துஷா அவர்கள் இவர்கள்வணக்கத்துடனேசொல்லிய சொற்களுக்காக மனமிரங்கி அவர்கள்பேரில்கிருபைகூர்ந்து அவரவர்களுக்குத்தக்கபடி மரியாதை செய்து நீங்கள் உங்கள்தேசத்திற்குப்போங்களென்று விடைகொடுத்தனுப்பினார். அதுகேட்டஇராசாக்கள் இன்றுபிழைத்தோமென்றுமனமகிழ்வுடனே புறப்பட்டுப்போய் அவரவர்கள்படைகளை நடத்தி தங்கள்தங்கள் தேசத்திற்குப்போய்ச் சேர்ந்தார்கள்.

மற்றுந்தேசத்திலுள்ள ராசாக்கள் இந்தராசாக்கள் படையெடுத்துப்போய்பகுதிகட்டவந்ததையும் ஆசாத்பகுத்பாத்துஷா தகத்திலிருந்து இராஜரீகஞ்செலுத்துவதையும் கேள்விப்பட்டு அவரவர்கள்செலுத்த வேண்டிய தொகைக்கு இரட்டிப்புப் பொருள் ஒட்டகங்களின்மீதேற்றிக்கொண்டுபோய் செலுத்தி பாத்துஷாவைக்கண்டுவணங்கி மரியாதைபெற்று அவரவர்கள் தங்கள் தங்கள் நகரத்திற்குப்போனார்கள். இவ்விதமாக ஐம்பத்தாறுதேசத்துப்பாத்துஷாக்களும், சுல்தான்களும், நபாபுகளும், இராக்களும்றூமுநகரத்தையாளுகின்றஆசாத்பகுத்பாத்துஷாவுடைய ஆணைசக்கரநெறியின் கீழ்ப்படிந்து யாதொருகுறைவுமில்லாமல் இராஜநீதி செலுத்திவந்தார்கள்.

இதுநிற்க றூமுநகரத்தில் நீதிநெறிசெலுத்துகின்ற ஆசாத்பகுத்பாத்துஷா அவர்கள் முன்னம்மந்திரிகள் சொன்னதுபோல் பகல்நேரத்தில் இராசநீதி செலுத்தி இரவில் நடக்கவேண்டிய கிரமங்களை நடத்தி காலங்கழித்து வரும்போது ஒருநாள் தகத்திலிருந்து இராசநீதி செலுத்தி மகரிபு இசாத்தொழுது இரவில் முதற்சாமத்தில் அந்தபுரத்திற்குப்போய் தன்காலாலாகிய பத்தினி அறுசுவைபதார்த்தத்துடனே படைத்த ஒசீபனத்தைத்தின்று தாம்பூலந்தரித்து இரண்டாஞ் சாமத்தில் நித்திரை செய்து மூன்றாஞ்சாமத்திலெழுந்து வெளியில்புறப்பட்டு கபுறுஸ்தான் கோரிகளிருக்கிறவிடத்திற்குப் போய் பாத்திக்கா ஒதிவரும்போது கபுறுஸ்தானுக்குக் கொஞ்சந் துலைவிலிருக்கும் மைதானத்தில் ஒருவெளிச்சம் தோன்றியது அந்தவெளிச்சத்தைக்கண்ட பாத்துஷா ஆச்சரியப்பட்டு ஆ ஆ இதென்னஅதிச

யம் நமக்கெதிரில் தோற்றுவது விளக்காயிருந்தால் காற்றினாலவிந்து போமே, மேலும் அந்தரமாகநிற்குதே, அல்லது வெள்ளியென்றெண்ணுவோமென்றாலும் வெள்ளிக்கு இவ்வளவு பிரகாசமேது இதை யோசித்தால் அல்லாகு சுபுகானகுத்த ஆலா நம்முடைய எண்ணத்தை நிறைவேற்றும்படியாக இந்தவெளிச்சத்தை உண்டாக்கினானோ என்னமோ எல்லாம் சமீபத்திற்போய் பார்த்தால் தெரியவருமென்று நினைத்து பாத்துஷா அந்தவெளிச்சத்தை நோக்கி நடந்து சமீபத்திற்போகும்போது ஒருகுண்டுக்கல்லின்மீது பகல்வத்திபோல்தீபமெரிந்துகொண்டிருந்தது அந்தத்தீபத்தைச்சுற்றி நான்குபக்கீர்கள்முழங்காலைக்கட்டிக்கொண்டு மவுனமாக உட்கார்ந்திருந்தார்கள், அவர்களுக்குச்சமீபமாய்நான்குவிருக்ஷங்களும் ஒருகோரியுமிருந்ததும்அதற்கருகில் சமாதிகளென்னும் சிலகபுருகளிருந்தது இவைகளையெல்லாம்பாத்துஷாகண்டு அதிசயித்து மெதுவாகப்போய் ஒருவிருட்சத்தின்பின்னால்மறைவாக உட்கார்ந்து அந்தப்பக்கீர்களைப்பார்த்துக்கொண்டிருந்தார் அந்தச்சமயத்தில் ஒருபக்கீருக்குத் தும்மல்வந்து அல்கம்து லில்லாகி என்றுசொன்னார். உடனே மற்றமூன்றுபக்கிர்களும்பிரத்திசொன்னார்கள். அப்போது ஒருபக்கீர்மற்ற மூன்றுபக்கீர்களைப்பார்த்து சொல்லத்தொடங்கினார். கேளுங்கள் என்னுடப்பிறப்பானவர்களே, நான்தான் இந்தப்பூலோகத்தில் பக்கீராய்இருக்கிறேன், நீங்கள் பக்கீரியானது என்னத்தினாலே யென்றுகேட்டார் அதுபோலவே மற்றமூன்றுபக்கிரிகளும் தனக்குத்தான் பக்கீர்மற்ற பேர்களுக்குப் பக்கீரென்கிற தன்மை எப்படிவந்ததென்று கால்நாழிகைபரியந்தம் தர்க்கமிட்டு பின்பு நாலுபேரும் ஒரேமனதாய் அவரவர்கள் பக்கீரான அதியாக்களைச்சொல்லுங்களென்று முடிவுபண்ணினார்கள்,

ஆசாத்பகுத் பாத்துஷா அரசுரிமை.

முற்றுப்பெற்றது.

---

பிசுமில்லாகி.

# முதலாவது பக்கீர்கிஸ்ஸா.

## இராக்குதேசத்து சேகுஜமால் சபுதாகருடையமகன்

## முகம்மதுகபுதுவின்கதை.

இவ்விதமாக முடிவுசெய்திருந்த நாலுபக்கீர்களில் முதன்மையாய்வந்த (முகமதுகபுதென்னும்) பக்கீர் எழுந்து மற்றமூன்று பக்கீர்களும் தசுலீஞ்செய்து வணக்கத்துடனே உட்காந்து சொல்லுகிறார் கேளுங்கள் என்தோஸ்தியான பேர்களே நான் பாடுபட்டு பக்கீரான அக்கியாவைச்சொல்லுகிறேன் காதுகொடுத்து கவனமாகக்கேளுங்கள் நானனவன் - இருக்கு தேசத்திலுள்ள (சேகுஜமால் ஜவுதாகருடையமகன்) என்பெயர் (முகம்மதுகபுது) எனக்கு மூத்த தமக்கையாரொருவருண்டு அவர்கள்பேர் (மதியம்பீவி) நாங்களிருவரும் பிறந்திருக்கையில் எங்கள் தாயார் இறந்துபோய்விட்டார்கள் அதன்பின்பு எங்கள்தகப்பனார் என் தமக்கையாரைச் சமுசேர் தேசத்திலிருக்கும் (அசன்பஜரிஜவுதாகருக்கு) கலியாணஞ்செய்து கொடுத்துவிட்டார் அவர்தம்முடைய வூராகிய சமுசேர்பட்டணத்திற்கு என்தமக்கையை அழைத்துக்கொண்டுபோய்விட்டார். என்தகப்பனோ என் தாயிக்குப்பின்பு வேறுகலியாணஞ்செய்துக்கொள்ளாமல் என்னைமிகுந்த கிருபையோடும் பட்சத்தோடும் நான்கேட்கப்பட்டதையெல்லாம் தடங்கலில்லாமற்கொடுத்து எனக்குயாதொருவருத்தமும் நேரிடவொட்டாமல்மேன்மையாக வளர்த்துவந்தார்.

ஆனால் என்தகப்பனுடைய ஆஸ்தியை இவ்வளவென்று மதிப்பிட்டுச்சொல்லமுடியாது அவ்வூரிலுள்ள வர்த்தகர் முதலானவர்களும் என் தகப்பனிடத்தில் வந்து தேவையான பொருள்களை வாங்கி கச்சைவடமுதலிய வர்த்தகம்பண்ணுவார்கள், அப்படி கொடுக்கல்வாங்கல் செய்யும்நாளையில் எங்கள் பாவா அல்லாவுடையகலாவின்படிமவுத்தானார்கள். அவர்களிறந்தவுடன் நான் அவர்மேல் மிகுந்த கவனத்துடன் அழுதுக்கொண்டிருந்தேன் அதுகண்டு அவ்வூரிலிருக்கிற பெரியமனிதர்கள் பந்துக்கள் வர்த்தகர்கள் முதலானபலரும்வந்து எனக்கு ஆறுதல் தேறுதல் சொல்லி நீ ஒன்றும் ஆலோசியாதே நாங்கள்உங்கள்தகப்பனாரிடத்தில் எவ்வளவு பிரியமாயிருந்தோமே அதிலும் பத்துப்பங் கதிகமாக உன்னிடத்தில் பிரிசமாயிருப்போமென்று மிகவும் தேறுதலை சொல்லி பின்பு என்பாவாவுக்கு செய்யவேண்டிய சடங்கெல்லாஞ் செய்து நல்லடக்கஞ் செய்தார்கள், அதன்பி

ன்பு நான் நாற்பதுநாள்வரையிலும் செய்யவேண்டிய கத்தம் பாத்திகா முதலியவைகளுஞ் செய்து பின்பு என் சுதாவில் தகப்பன் தேடிய பொருள்களையெல்லாம் வைத்துக்கொண்டு வர்த்தகர்களுக்குக் கொடுக்கல் வாங்கல் செய்துக்கொண்டு வருங்காலத்தில் சிலதகல்பாஜிகளாகிய துஷ்டர்கள் என்னிடததில் வந்து பிரியவசனம்பேசி சிநேகிதர்களாய் என்வீட்டுக்குப்போக்குவருத்தாயிருந்தார்கள்,

அப்படி யவர்களிருக்கையில் எனக்குமவர்களுக்கும் இணைபிரியாதசிநேகமுண்டாய்விட்டது இப்படி யிருக்குங்காலத்தில் அவர்களென்னைப்பார்த்துஓரிடத்தில் ஒருபங்களா கட்டவேண்டுமென்றுசொன்னார் அந்தச்சொல்லை நான்சிரமேற்கொண்டு மிகுந்ததிரவியங்களைசிலவுசெய்து அவர்கள் சொன்னதுபோல் பங்களாகட்டிமுடித்தேன், பின்பு அந்ததுன்மார்க்கர்கள் முன்சொல்லிய பங்காளாவில் சதுர்கச்சேரி சோகி சொக்கட்டான் சூதுமுதலியவைகளை நடத்திபின்பு எனக்கு ஸ்திரீ போகம் லாகிரியான கள்ளு சாராயமுதலியவைகளை குடித்தல் முதலியபலவித துர்நடத்தைகளையும் கற்பித்துக் கொடுத்து விட்டார்கள் இவைகளை யெல்லாம் ஒன்றேனும் குறைவில்லாமற் கற்பித்துக்கொண்டுநாளுக்கு நாள் அதிகமாய் எனதந்தைசம்பாதித்த அளவில்லாதப்பொருளையும் துன்மார்க்கத்தில் செலவுசெய்து விட்டேன் இதற்குள்ளாக மிகுந்த ஏழைகளாய் என்னையடுத்த துன்மார்க்க சிநேகிதர்கள் என்பொருள்களை எனக்குத்தெரியாமலே கைகொண்ட மட்டுக்கும் அபகரித்துக்கொண்டு பெருத்த சீமானாய்ப்போய்விட்டார்கள் நானோ என்கையிலிருந்த ரொக்கப் பணங்களையெல்லாம் செலவழித்து பின்பு நகைநட்டுகள் விலையுயர்ந்த உடுப்புகள் தட்டுமுட்டுமுதலிய பித்தளை சாமான்கள் தோம்தராகட்டில்கள் நாற்காலிகள் மேசைகள் முதலிய வீட்டிலுள்ள சாமான்களையெல்லாம்விற்றுச்சுட்டு செலவுபண்ணினேன் பின்பு என்னுடைய வீடுவாசல்தோட்டம் துறவு பங்களா முதலியவைகளும் விற்றுச்செலவு செய்துவிட்டேன் அதன்பின் நானுடுத்தியிருந்த பழந்துணிதவிர கையிலொரு காசுமில்லாமல் தனியாய் ஓரிடத்தில் அகோரமானபசியுடனிருந்து எண்ணுதெல்லாமெண்ணிஒரு நினைவு வந்து என்னுடைய சிநேகிதர்கள் வீட்டுக்குப் போகலானேன் அவர்கள் என்னைக்கண்டவுடனே ஒளித்துக் கொண்டார்கள் அப்போது இரவுநேரமானதால் எனக்குப்பசியும் குளிரும் அதிகரித்தது அந்தச் சமயத்தில் நான்போற்றிக்கொள்ளவும் துணியில்லாமல் அதிதுக்கத்தோடே எங்கேயாவது வீடுகளிற்போய் ஓசிவனம் வாங்கிப் பசியாரலாமென்று ஒரு நினைவு வந்து அதென்ன வெனில் இதற்கு முன் நான்செய்த செய்கைகளுக்கு ஊரிலுள்ளோர்

யாவர்களும் வேண்டிய புத்திமதிகளைச் சொல்லிவந்தார்கள் அதில் அணுவளவேனும் நான் கேளாமையினாலே அவர்கள் என்பேரில் கோபமாயிருப்பதால் அவர்களிடம்போய் பிச்சைகேட்டால் அவர்கள் கொடுக்கமாட்டார்களென்று நான் வெட்கத்தோடு நானாவிதமா யெண்ணி ஓரிடத்திலிருந்தேன் அப்படி யிருக்கையில் எனக்குப் பசி பொறுக்கக்கூடாமையால் எழுந்து தெருவழியாகப்போனால் யாராவது உணவுகொடுப்பார்களென் றெண்ணி தெருக்கள் தோறும் திரிந்தலைந்தேன் எவர்களும் என்னைப் பார்த்து என்ன ஏதென்று கேட்கவேயில்லை அந்நேரத்தில் என்சினேகர்களில ஒருவன்வந்தான் அவனைக்கண்டுநான்எதிரே சென்றேன் அவன என்னைக்கண்டவுடனே காணாததுபோல்தலைகுனிந்துக்கொண்டு மறுதெருவின்வழியாகப்போய்விட்டான் அதல்லாமல்மற்றசிநேகிதர்களில் சிலர் என்னைக்கண்டவுடன் ஒளித்துக்கொண்டார்கள் இதையெல்லாம்நான்பார்த்து மனம்புழுங்கி அதிகவருத்தத்துட னின்று யோசித்து ஓஓ இவ்வூரில்நாம்இறந்துபோனாலும் நம்மையெடுத்து இவர்கள் நல்லடக்கஞ் செய்யமாட்டார்களென்றெண்ணி ஒருவீட்டுத் திண்ணையின்மேல் களைத்துப்படுத்துக்கொண்டிருக்கையில் எனக்கு நித்திரையும்வரவில்லை ஏனென்றால் பசிதாகத்தாலும், என் ஆஸ்திமுதலியபூஸ்திதியெல்லாமழிந்துபோனபடியினாலும் சினேகிதர்கள் என்னைக்கண்டும் காணாதவர்கள்போல் போய்விட்டகாலும நான் பலபல எண்ணங்களையுமெண்ணி இனிமேல் நாமென்ன செய்கிறதென்று யோசித்துப் பசிபொருக்கமாட்டாமல் இனி இவ்விடத்தி லிருப்பதிற் பிரயோசன மில்லை நமது தமக்கையாயிருக்கிற சமுசேர் நகரத்திற்குப் போவதே நலமென்றெண்ணினேன்.

அப்போதொரு நினைவு வந்தது நாம் அங்கே, போவோமாகில் தமக்கையாரும் மைத்துனனும் நம்மைக்கண்டு சகலமான ஆஸ்தியும்என்னமாய்ப் போச்சுதென்று கேட்டால் அதற்குப் பதிலுத்தர வென்ன சொல்லுகிறதென்று மனங்கலங்கி மறுபடியும் யோசித்ததாவது அவர்கள் ஊருக்குப்போவோம் அவர்கள் பிரியவசனம் பேசி ஆதரிப்பார்களானால் அவ்விடத்தி லிருப்போம் அப்படிக்கில்லாமல் ஏதாவது கேள்விகேட்பார்களானால் அப்போதே பிரயாணப்பட்டுகாட்டிற்குப் போய் இறந்துவிடுவோமென்று அவ்விரவில் விடிய ஒருசாம நேரத்தில் பசிதாகத்துடனே பிரயாணப்பட்டு காடு மலை- வனம் - வனாந்திரங்களைக்கடந்து சமுசேர்நகரம் போய்ச்சேர்ந்து என் தமக்கையிருக்கிற வீட்டைவிசாரித்து வீடுகண்டுபிடித்து வாசலைக்கடந்துபோய் உள்ளே எட்டிப்

பார்த்தேன் அப்போதுஎன்தமக்கையார் இரத்தினக்கம்பளிவிரித்து மகமல்முதலியவைகளாற் றைத்த தலையணை திண்டு திமாசு போட்டுச் சாய்ந்து கொண்டிருந்தாள் அதை நான் பார்த்தவுடன் வெட்கமடைந்து முன்வைத்த காலைப்பின்வாங்கி தலையையிழுத்துக் கொண்டேன் அதை என் தமக்கையார்கண்டு யாரென்றுகேட்டார்கள் நான் ஏனென்று உள்ளேபோனேன் போனவுடனே என்தமக்கை தம்பியென்றழைத்து விரைவிலெழுந்திருந்து ஆவலாக என்னைக் கட்டித்தழுவி யழுதுபரதவித்து நீயொன்றுக்கும் பயப்படாதேயென்று ஆதாரணை சொல்லி வெள்ளாட்டிகளையழைத்து எனக்கு வெந்நீரால் முழுக்காட்டச்செய்து நல்ல உடுமானங்களை கொடுத்து உடுத்திக்கொள்ளச்சொல்லி தாங்களிருக்கும் இரத்தினக் கம்பளியின்மீது உளுக்காரவைத்து அடிமைகளை யழைத்து ஓசீவனங் கொண்டுவரும்படிசொன்னார்கள்.

அப்படியே அவர்கள் அறுசுவை பதார்த்தத்துடனே போசனங்கொண்டுவந்து வைக்கப்பசியாரி களைதீர்ந்து யோசித்தேன் நான் புசித்த ஓசீவனம் எப்படியிருந்ததென்றால் எங்கள் பாளையிருக்கும்போது புசித்த ஓசீவனத்தைப் பார்க்கிலும் மிகுந்த மேன்மையா யிருந்தது பின்பு நான் தாம்பூல முதலியது மருந்தி பசியடங்கி சந்தோஷமும் விசனமுமுள்ளவனா யிருந்தேன் ஏன் விசனமாயிருந்ததென்றால் என் தமக்கை நம்முடைய திரவியமெல்லா மெங்கேயென்று கேட்டால் நானென்னசொல்லுவதென்று கலக்கமாயிருக்கும்போது தெருவாசலருகில் ஒருகோச்சுவண்டி வந்து நின்றது அதை என் தமக்கை கண்டு உன் மச்சான் வந்துவிட்டார்களென்று சொன்னார்கள் சொன்னவுடனே என் மச்சான்வண்டியைவிட்டிறங்கி வீட்டுக்குள்ளேவந்தார் நான்விரைவிலெழுந்து நின்றேன் அவர் சீக்கிரமாக வந்து மிகுந்தஆவலோடு என்னைக் கட்டித்தழுவி அதிகவருத்தத்துடனே சொன்னதாவது பாவா நீசெய்த வேலையைக்குறித்துச் சிலர் இவிடம்வந்து சொல்லக் கேள்விப்பட்டு நான்உண்ணுகிறசோறுகறிகள் உடலில் தரியாமலும் உறக்கம் வராமலும் இதுவரையில் மிகுந்த வருத்தத்துடனே யிருந்தேன் இதல்லாமலும் நான் அவ்விடத்திற்குவந்து உன்னையழைத்துக்கொண்டுவரவேண்டுமென்று எத்தனையோவிசை பிரயாணப்பட்டும் சாவகாசப்படாமற் போய்விட்டது இப்போது என்னெண்ணத்தைப் போலே அல்லாகு சுபுகானகுத்தஆலா உன்னை இவ்விடத்திற்கொண்டு வந்துசேர்த்து விட்டான் அதுவேயெனக்குப் போதுமானதென்று மிகுந்த சந்தோஷமாய்ப்பின்னுஞ்சொல்லுகிறார்

என்னுடைய கண்மணியாகிய மைத்துனனே கேள் என்னிடத்தி லுள்ள ஆஸ்திபடங்களும் உன்னுடைய பொருள்தான் அவைகளை உன் மனம் போல் செலவு செய்துக்கொண்டு உன் தகப்பனுடைய ஆஸ்திகள் அழிந்து போனதைக் குறித்து விசனப்படாமல் எப்போதும் சந்தோஷமாகவேயிருக்கவேண்டுமென்று மிகவும் தயிரியஞ்சொல்லி என்னை உட்காரச்சொல்லி அவரும் மனமகிழ்வோடு உட்கார்ந்தார். அந்தச் சமயத்தில் அடிமைகளாகிய வெள்ளாட்டிகள் அறுசுவை பதார்த்தத்துடனே ஓசீவனம் கொண்டுவந்து வைத்தார்கள் அதனை நானும் என் மச்சானுமாகப் பசியாறி தாம்பூலந் தரித்துக்கொண்டவுடன் என மச்சான் தன்னுடைய வேலைக்காரனெவனையு மழைப்பித்து என் சொல்லை யவர்கள் தட்டாமல் நான் சொல்லிய ஏவல்களைச் செய்யும்படியாகத் தாக்கீது செய்து அவர்கள்வீட்டில் ஒரு அறையை மிகுந்த அலங்காரமாய்ச் சிங்காரித்து அதில்எனக்குவேண்டிய சாமான்களையும்: உடுப்புகளையும்; பணங்களையும்வைத்து நான் படுக்கவும் உட்காரவும் கட்டில் நாற்காலி முதலியவைகளையும் அதனுள் போட்டு அவ்வீட்டை என்னிடத்தில ஒப்பிவித்தார், அதில்நானிருந்து காலைநேரங்களில் குதிரை சவாரியும், மாலைநேரங்களில் கோச்சுவண்டிசவாரியும் செய்துக்கொண்டு என் மனம்போலே யாதொருகுறைவுமில்லாமல் செலவுபண்ணி என் தகப்பனிருக்கையில் அனுபவித்த சுகத்தைப் பார்க்கிலும் பத்துப்பங்கதிகமான சுகத்தை யனுபவித்துக்கொண்டு வருங்காலத்தில் ஒரு நாள் என்மச்சான் வெளியே சவாரிபோயிருக்கையில் என் தமக்கையார் என்னருகில்வந்து உட்கார்ந்து என்னைப்பார்த்து மிகவும் சந்தோஷமாகச்சொல்லியதாவது என்கண்மணியான சகோதரனே நீ இதைப்பார்க்கிலும் பத்துப்பங்கதிகமாய் சுகத்தையனுபவிக்க எனக்கும் உனது மச்சானுக்கும் மிகுந்த சந்தோஷந்தான அதில் யாதொரு குறைவுமில்லை இந்த ஆஸ்திமுழுதும் உன்னுடையதல்லாமல் மற்றொருவருடையதல்ல ஆனால் இவ்வூரி லுள்ளவர்கள் பலபலவிதமாகப் பேசிக் கொள்ளுவார்கள். அதென்னவென்றால் இன்னவூர் சவுகாதருடைய மகளை நம்மிடவூர் சவுகாதருடையமகன் கலியாணமென்னும் நிக்காகுசெய்துக்கொண்டார அந்தப்பெண்ணினுடையதம்பி தகப்பன்தேடிய சொத்துக்களையெல்லாஞ் செலவுசெய்துவிட்டுத் தமக்கையார் வீடுவந்து சேர்ந்து மச்சான்தேடிய ஆஸ்திகளையெல்லாம் அழித்துவிடுகிறான் அப்பெண்ணனவள் தன் மாப்பிளைக்கு என்னமோ மருந்துமுதலிய மாயதந்திரங்களால் என்ன இக்குமத்துச் செய்திருக்கிறளோ தெரியாது அதனால்தான் அவள் தம்பிசெய்கிற செலவைக் குறித்து அவள் மாப்பி

ளை என்னஏதென்று கேளாமல் மைத்துனனிடத்தில் பிரியமா யிருக்கி றுரென்று பலபலவிதமாகப் பேசுவார்கள் அந்தக்குறைவு எனக்கும் உனக்குமல்லவா ஆகையால் நான் உனக்கொரு புத்திசொல்லுகிறேன் அதுபோல் நடப்பாயானுல் எனக்கும் மிகுந்த மேன்மைத்தனம் உன க்கும் அதிககீர்த்தியுண்டாம் உன்மச்சானவர்களுக்குஞ்சந்தோஷமாயி ருக்கும் அதை நான்சொல்லுகிறேன் நீசெவிகொடுத்துக்கேட்டு அ துபோல் நடந்தாலுஞ்சரி அப்படிமனமில்லாம லிருந்தால் அதையுஞ் சொல்லென்று என்தமக்கைசொல்ல அப்போது நான் மிகுந்த அதபு டனே யிருந்துகேட்டேன் அவர்கள் சொன்னுர்கள் பாவா நாளுெரு யோசனை செய்திருக்கிறேன் அதென்னவென்றுல் திமிஸ் நகரத்துக் குப்போம்படியாய் ஒருகப்பல்வைத்து அவ்விடத்திற்கு இவ்விடத்தி லுள்ள சரக்குகளையேற்றி அதில் நீருமேறி கப்பலை பாய்விரித்தோ ட்டி அங்கரைஞ்சேர்த்து கப்பலிலுள்ளசரக்குகளை யிறக்கி அவ்விடத் தில்விற்று இவ்விடத்துக்கான சரக்குகளை அவ்விடத்தில்வாங்கிகப்ப லிலேற்றி இந்ததேசத்திற்குக்கொண்டுவந்தால் அச்சரக்குகள் ஒட்டி க்கிரட்டியாம்விற்கும், அல்லது ஒன்றுக்குப்பாதியாய் விற்றலுஞ் சரி நான்சொல்லியதுபோல் நீ அவ்விடம்போய் இவ்விடம் வந்தால் உன் மச்சானும் சந்தோஷமடைவார் இவ்வூரிலுள்ளவர்களும் நம்மிருவரை யும்மேன்மைப் படுத்துவார்கள் அது எப்படியென்றுல் இந்தஜவுதா காரனவர் ஒருபெண்ணைக் கலியாணஞ்செய்துக்கொண்டார் அந்தப்பெ ண்ணுடையதம்பியும் மச்சானுக்குதவியாகவந்து தொழில் முறைமை முதலிய வர்த்தகஞ்செய்து மேன்மைப்படுத்துகிறுனென்று ஊரார்பு கழ்ந்துபேசுவார்கள் அதனுல் நாமிருவரும் மகிழ்ச்சியடைவோமென் றுஎன் தமக்கையர் சொன்னதை நான்கேட்டவுடன் மிகுந்த சந்தோ ஷப்பட்டு அவர்கள் முகத்தைப்பார்த்துச் சொன்னேன் எனக்குத்தா ங்கள்சொன்னபுத்தி மிகுந்தவிசேஷமாகவும் மேன்மையாகவு மிருக்கி றபடியால் நான்அவ்விதமாகநடக்க யாதொருதடையு மில்லையென்று வருந்திச்சொல்ல என்தமக்கையவர்கள் என்மச்சான் வந்தவுடனே எ ன்தம்பி திமிஸ்நகரத்திற்குப்போய் வருகிறேனென்று உங்களிடத்தி ற்சொல்லச்சொன்னுனென்று சொன்னவுடன் என்தமக்கையை என்ம ச்சான் கோபித்துச்சொல்லுகிறுர்.

கேளும் பெண்கள் நாயகமே, நமக்கிருக்கிற ஆஸ்தி போதாதா அவர் கடல்மீதுபோய்ச் சம்பாத்தியஞ் செய்யவேண்டுமா வென்று பலபல விதமான வார்த்தைகளைப்பேசி என்னை யழைத்து அருகி லிருத்தி பாவா நீர்எதுக்காக சபர்போய் வருகிறேனென்றுசொன்

னீர்மே இங்கேஉமக்கென்ன குறைவு அல்லதுஎனக்குத் தான் என்ன குறைவு இந்த ஆஸ்திமுழுதும் உன்னுடையதே யல்லது இன்னம்யாருக்காவதுகொடுக்க உரியதாநான் சம்பாத்தியஞ் செய்து தேடும் பொருள்களெல்லாம் உனக்கேயன்றி வேறில்லை ஆகையால் நீசபுர்போகவேண்டாமென்று மிகவும் மன்றாடினார். அப்போதும்நானும் என்தமைக்கையாரும் அவருக்குப்பொருந்தும்படியான வார்த்தைகளைச் சொல்லி யவர்மனதைத் திருத்தினோம் அதன்பின்பு அவர் சம்மதப்பட்டு ஒரு பெரியகப்பல் செய்யும்படி உத்தரவுசெய்தார் அக்கப்பல்முடிந்தவுடன் அதற்குப்போதுமான சரக்குசாமான் முதலிய சகல வஸ்த்துக்களையும்வாங்கி அதிலேற்றி தண்டல் - கிளாசுக்காரர்கள் - மாலுமிகள் - கணக்கர்கள் முதலிய ஆள்களைத் திட்டப்படுத்தி சரக்கு முதலியவைகளுக்குக்கைசாத்து கிளீனுசுமுடித்து என்னிடத்திற் கொடுத்து சகலரையும்என்சொற்போல் நடக்கும்படிதிட்டஞ்செய்து கப்பலில் என்னையுமேற்றிப் பயணப்படுத்தி யனுப்பினார்கள் அதன்பின் கப்பலிற் பாய்விரிக்கச்சொல்லி துறைமுகத்தைவிட்டு இராப்பகலாகக் கப்பல் சிலநாளோடும்போது திமிஸ்நகரம் இன்னும் நாலுகாதவழி யோட்டமிருக்கிறது அந்தநகரமுந் தெரியலாயினது அப்படி யிருக்கக் காற்றில்லாமற் கப்பலோடாதிருக்கையில் காற்றுவந்தாலல்லவோ கப்பல் துறைமுகம்போய்ச்சேரும் அதற்குமுன்னமே நாம் போட்டி லிறங்கிப் போய்கரைசேர்ந்து அந்நகரத்திற்குட்போய் சரக்குக ளிறக்குவதற்குக்கிடங்குகள்பார்த்து கப்பல் தரகர்களையும் விசாரித்துத் திட்டப்படுத்துவோமென் றெண்ணி கையோடே கணக்குமுதலியதும் எடுத்துக்கொண்டு மாலுமிமுதலானவர்க ளிடத்தில் காற்று வந்தவுடனே துறைமுகம்வந்து சேருங்களென்று சொல்லிவிட்டு கப்பலிலிருந்து போட்டிலிறங்கி கரைபோய்ச்சேர்ந்து அந்நகரத்தை நோக்கிக் கால்நடையாய் நடக்கையில் பொழுதடைந்து இரண்டு சாமவேளைக்குப்பின் அந்நகரத்துக் கோட்டைவாசலுக்குச் சமிபத்திற்போனேன் அப்போது ஆளரவமடக்கி கோட்டை வாசலின்கதவு அடைக்கப்பட் டிருந்தது அதன வெளிவாசனிடத்திற்போய்க் கதவைத்தட்டி உள்ளிருக்குங் காவலாளிகளைத்திறக்கச்சொன்னேன் அவர்கள்சொன்னார்கள் ஓ அன்னியதேசத்துமனிதனே இக்கோட்டையின்கதவு சாத்தப்பட்ட பின்பு இவ்வூரையாள்கின்ற பாத்துஷாவந்து திறக்கச்சொன்னாலும் நாங்கள் திறக்கஉத்திரவில்லையென்று அவர்கள்சொல்ல நான் யோசித்து வெளியில்ஏதாவது வீடுவாசல் மனிதசஞ்சார மிருக்குதாவென்று பார்க்கையில்யாதொரு அரவமுமில்லாமல் கடலுக்குங் கோட்டைக்கும் மணலா

யிருப்பதால் நாம என்னசெய்வோமென்று கவலையடைந்து கோட்டை
மதிலினருகில் மணலைக்குவித்து மேலே போர்த்திருந்த சால்வையை
விரித்து அதன்மேலே சாய்ந்திருந்தேன் எனக்குவழிநடந்துவந்த அ
லுப்பினாலும் மனதரில்லையாலும் நித்திரையில்லாமல் விழித்துக்கொ
ண்டிருந்தேன் அப்போது மூன்றுசாம நேரமிருக்கும் அந்த வேளையி
ல் கோட்டையின்மதிலின்மீது இரண்டுபேருடைய சத்தம் மெதுவாக
க்கேட்டது அதென்னவென்று ஏறிட்டுப் பார்க்கையில் அவ்விடத்தி
லொருபெரியப்பெட்டி இரண்டுகயிறுமாட்டி எனக்குச் சமீபமாய் வந்
திறங்கியது அப்பெட்டியைக் கண்டு நான் நினைத்தாதவது கள்ளர்கள்
கோட்டைக்குள்ளேபோய் பெட்டியோடு திருடிக்கொண்டு வந்திறங்கி
னார்கள் அவர்களும் பின்னாலிறங்குவார்களென்று பார்த்துக்கொண்டி
ருந்தேன் அப்போது அப்பெட்டி கீழே யிறங்கினவுடனே கயிற்றை
யும்நழுகவிட்டுவிட்டார்கள் பின்புநான் இப்பெட்டியை யிறக்கினகள்
ளர்கள்வந்து எடுத்துக்கொண்டு போகிறார்களா பார்ப்போமென்று ஒ
ருமணிநேரம் வரையில் பார்த்துக்கொண்டிருந்தேன் அங்கே ஒருவரு
ம்வரவேயில்லை அப்போது நான் இதென்ன அதிசயமாயிருக்குது கள்
ளர்கள்திருடியிறக்கினால் இதுவரையில்வந்தெடுத்துக்கொண்டு போகா
மலிருப்பார்களோவென்று பலபலநினைவாக யோசனைசெய்து அப்பெ
ட்டியினருகில் நான்போய் உற்றுப்பார்த்தேன் பார்க்கும்போது அப்
பெட்டிக்குள் மனிதர் அதிகவருத்தமாய் முக்கல் முழக்கமான சப்தங்
கேட்டது அப்போது நான்யோசித்தேன் இதென்னகாரணம் நமக்கு
யாதொன்றுந்தெரியவில்லை ஆயினும் இதைத்திறந்து பார்ப்போமென்
றெண்ணி அப்பெட்டியிற்கட்டிய கயிற்றையவிழ்த்து திறந்துபார்த்
தேன் அப்பெட்டிக்குள் ஒருமின்னலானது பளிச்சென்ற பிரகாசமாய்
த்தோற்றியது அப்போது என்னுடைய புத்திசிதறி நான்கீழேவிழுந்
து சற்றுநேரஞ்சென்று மூர்ச்சைதெளிந்து நிதானித்தெழுந்து மறுப
டியும் அப்பெட்டியைத் தயிரியத்தோடு திறந்துபார்த்தேன் அப்பெ
ட்டிக்குள் ஒருபெண்ணை படுக்கவைத்திருந்தது அவளழகும் வடிவும்
சூரத்தும் வசீகரமும் பூரணச்சந்திரனுக்கொப்பான முகமும் துலங்கி
க்கொண்டிருந்தது இன்ன மவளுடைய ரூபலாவண்ணியத்தை இன்ன
விதமென்று பிரித்துச்சொல்ல எவர்களாலுமுடியாது அவ்வளவு சௌ
ந்தரியமுள்ளபெண்ணை நான்கண்டவுடன் அதிக ஆவலாக அவளை யெ
டுக்கப்போனேன் அப்போதவள்சொன்னதாவது ஓ மனிதனே என்னை
த்தொடக்கூடாதென்றாள் உடனே நான் கையைவெளியி லிழுத்துக்கொ
ண்டு ஏன்தொடக்கூடாதென்று கேட்டேன்அவளென்னைப் பார்த்துநீர்

இசுலாமோ அலலது காபிரோவென்று கேட்டாள் அப்போது நான் அல்ஹம்துலில்லாகி யென்றுசொனனேன் அப்படி சொன்னவுடனே அவள் என்னைப்பார்த்துச் சொல்லினாள் இன்னுஞ் சற்றுநேரத்தில் நானிறந்து போவேன்போல் தோற்றுது அப்படி இறந்து விடுவேனாகில் உன்கையாலென்னை நல்லடக்கஞ் செய்துவிடுமென்றுசொன்னாள். அவள்சொன்னவசனத்தைக் கேட்டவுடனே எனமனந்திடுக்கிட்டு இவ்வளவு சௌந்தரியமுள்ள பெண் இறந்துபோவேனென்று சொல்லுகிறாளே அப்படியே யவள்மவுத்தானால் இப்பேர்க்கொற்ற பெண்ணைநாமெப்போது காணப்போகிறோமென்று மிகவும் துக்கத்தோடழுதுபரதவித்து அவளை உற்றுப்பார்க்கையில் அவள்சரீரமுழுதிலும் வெட்டுங்குத்துமான காயங்களாயிருந்தது அதை நான் பார்த்தவுடனே என்னினைவெல்லாந் தடுமாறி மிகுந்தவருத்தமடைந்து இப்பேர்க் கொற்றபெண்ணை எந்தப்பாவி இவ்விதமாகச் செய்தானோ அவனுக்குமனமுந் துணிந்த தல்லவா வென்று மிகவும் ஆச்சரியப்பட்டு அடிக்கடி பெருமூச்செறிந்து அழுதுகொண்டிருக்கையில் பொழுதுவிடிகிறநேரமாச்சுது அந்நேரத்தில் நான் அழுகையை நிறுத்திப் பெட்டியைமுன்போலக்கட்டி கோட்டை வாசலுக்கருகில் வைத்துக்கொண்டு நின்றேன சூரியனுதிக்கிற வேளையானபடியால் கோட்டைவாசலுந் திறக்கப்பட்டது அதற்குள்ளிருந்த கூலியாளர்களும் வெளியில் வந்தார்கள் அதில் இரண்டுபேர்களுக்குத்தக்க கூலிகொடுத்து நான் அவர்கள்தலையிற் பெட்டியைத் தூக்கி யெடுத்துக்கொண்டு கோட்டை வாசலைக்கடந்து அப்பட்டணத்தின் வீதியிற்சென்று அங்குவருகிறவர்களைக் கண்டு கப்பலுக்கு அடத்திதாகு செய்கிறவர்கள் வீடெங்கேயென்று கேட்டேன் அவர்களவ்வீட்டை காண்பித்துப் போனார்கள் நான்அந்தத்தரகர்களை கூப்பிட்டேன் அது கேட்டவர்கள் வெளியில் வந்தார்கள் நானவர்களைக்கண்டு பேசவேண்டிய பேச்சுகளை யெல்லாம்பேசி என்கையிலிருந்த கணக்கை அவர்களிடத்திற்கொடுத்து என்கப்பல் இவ்வளவுதூரத்தில் காற்றில்லாமல நின்றுவருகிறது அதுவந்தவுடன் நீர்தான் அடத்திசெய்யவேண்டியது ஆகையால் நானிருப்பதற்குத் தகுந்தவீடாய் வாடகைக்கமர்த்திவிட வேணுமென்று சொல்லினேன். அப்படியே யவர் தன்வீட்டுக் கடுத்தவீட்டை வாடகைக்குப்பேசி அதில் புழங்கும்படியான சாமான்களையும் திட்டப்படுத்திக் கொடுத்தார் நான்அவ்வீட்டிலோ ரறையில் அப்பெட்டியை யிறக்கிவைத்து கூலிக்காரர்களுக்குக் கூலிகொடுத்தனுப்பிவிட்டு அந்த தரகனை யழைத்து நான்சொன்னதாவது ஐயா நான் வரும்போது என்பெண்சாதியும் என்

னுடன்கப்பலேறிவந்து கரையிலிறங்கி இவ்விடம் வரும்போது மலபாதைக்காக காட்டினிடத்தில் ஒதுக்கிப்போனாள் அவ்விடத்தில் சிலகள்ளர்கள் வந்து என் பெண்சாதியின் நகைமுதலானவைகளைப் பறித்துக்கொண்டதுமல்லாமல் அவளையடித்து உடம்பெல்லாங் காயமாக்கிவிட்டுவிட்டுப்போய்விட்டார்கள் அப்போதுநான் வெகுநேரம் பார்த்து இன்னமென்ன மலபாதைக்குப் போனவளைக் காணோமேயென்று சந்தேகப்பட்டுச் சீக்கிரமாகப்போய்ப் பார்க்கும்போது என் மனையாள் மிகுந்த துபரத்துடனே திரேகமெல்லாம் இரத்தந்தோயப் பூமியில்விழுந்துகிடந்தாள் அதைநான்கண்டு மனம்பதைத்து அவளைச் சில கூலியாளர்களா லெடுப்பித்து இவ்விடத்திற்கொண்டு வந்திருக்கிறேன் ஆதலால் அவள் காயங்களைப்பற்றிச் சௌக்கியப் படுத்துப்படியான கெட்டிக்காரனாவும் கைதேர்ந்தவனாகவுமுள்ள ஒரு வயித்தியனை அழைத்துவாருமென்றுசொன்னேன்.

அவர் அப்படியே ஒருபரிகாரியை யழைத்துவந்துவிட்டார் நான் அந்த வயித்தியருக்குச் சிலபொருள்கள் கொடுப்பதாய்த் தீர்மானித்து அப்பெண்ணினுடைய காயமுழுதுங்காண்பித்தேன் அந்த வயித்தியர் அக்காயங்களுக்குத் தகுந்த திராவகங்கள் தயிலங்கள் துவரெண்ணெய்கள் முதலானவைகளைச்செய்து தடவி நாற்பது நாளுக்குள்ளாக அவளைமுன்னிருந்த காந்தியிலும் அதிக சௌந்தரமாக்கி அவளுக்கு தலைக்குத்தண்ணீர்விட்டு இருக்கநடக்கும்படியாயானபின் உடனே பரிகாரஞ்செய்து சொஸ்தப்படுத்திய வயித்தியனுக்கு முன்கொடுக்கும்படிசொல்லிய திரவியமும் சால்வைவேட்டிமுதலிய வெகுமானமும்கொடுத்தனுப்பிவிட்டு அந்தப்பெண்ணை எந்நேரமும் என்கண்ணாலேபார்த்து அநேகமகிழ்ச்சியடைந்திருந்தேன் இப்பால் நான் கப்பலைவிட்டு வந்தமூன்றாநாள் என்கப்பல் இந்ததிமிஸ்க்தேசத்து துறைமுகம்வந்துசேர்ந்து லங்கர்பாச்சிநிற்க நான் கணக்கொப்புவித்த தாகன்சாக்கிரக்கவும் அதைவிற்கவும் சகலகாரியமும் பார்த்துக்கொண்டுவருகிறான் அந்தக்காரியங்களைக்குறித்து நான்கேட்டதுமில்லை அதுவென்னென்றால் அந்தப்பெண்ணை ஒருநிமிஷமாவதுஎன்னிரண்டுகண்களால் பார்க்காதிருந்தால் என்னுடலைவிட்டு என்னுயிர் போய்விடும் இன்னம் அவள் என்னென்னகேட்கிறாளோ அதுகளெல்லாங் கொடுத்து அவள் ஏவற்படியாளாய் கிசுமத்துச்செய்திருந்தேன் இந்தப்பிரகாரம் வேணவருத்தப்பட்டு பொருள்கள்கொடுத்து அவளுடைய வருத்தமுதலியதைநீக்கியும் ஒருநிமிஷநேரமாவது அவளோடுநான்சரிசமானமாக இருந்தவனல்ல இன்னம் அதிகசெகம்பீரமாய்உல்லாசமாகவும்வெகுஇறுமாகவு

ப்பாகவுமிருப்பாள் அப்போது நான் அவளிருக்கும் அறையிலொரு மூலையில் அஞ்சிப்பயந்து அவளடிமையைப்போல் உளுக்கார்ந்துகொண்டு எந்நேரமும் அப்பெண்ணை ஏறிட்டுப் பார்த்துக்கொண்டிருப்பேன் ஒருவேளை அவள் என்னை நோக்கிப்பார்த்தால் நான் வெட்கத்துடன் தலைகுனிந்திருப்பேன் அதனாலெயென்றால் அவளுடையழகுக்கும் அந்தஸ்துக்கும் நாம்சரிபாவோமோவென்று தலை குனிவேன் அதைஅவள்பார்த்து புன்சிரிப்பாகசிரிப்பாள் ஆனபடியால் என்தோஸ்திமார்களே நீங்கள் கேளுங்கள் அவ்விதமான பெண்ணைப் பார்த்து உன்னைக் கலியாணம்பண்ணிக்கொள்வேனென்று சொல்லஎன்நாவெழாது இன்னம் அவள்பேரில் அளவற்ற ஆசையும் அன்பும்வணக்கமும் இவ்வளவென்று மட்டிட்டுச்சொல்லக்கூடாது அப்போது நினைத்தேன் அவளேவலாகிய கிதுமத்தை கட்டாமற் செய்துவந்தோமாகில் அவள் நமதுபேரில் இரக்கமுண்டாகி கலியாணஞ்செய்துக்கொள்வாளென்ற எண்ணங்கொண்டு அவள் எந்நேரத்துக்குஎன்னையழைத்து என்னவேலைசொல்லுவாளோ அதைச்செய்யவேண்டுமென்ற எண்ணத்தோடிருப்பேன் அப்படியே அவள் என்னை யழைப்பாள் நான அஞ்சிப்பயந்து எழுந்துபோய் அவள் சொன்னவேலையைச் சீக்கிரமாய்ச்செய்து அவள் சந்தோஷமடையும்படியாய பகற்காலமெல்லாமவள் கிதுமத்திலேயே யிருக்கிறது இரவில் அவள் படுத்துக்கொள்ளும்வரையில் அவள்சொல்லப்பட்ட வேலையெல்லாம் அணுவளவேனுங்குறைவில்லாமற் செய்கிறது அவள்படுக்கும்போது என்னைப்படுத்துக்கொள்ளும்படியாய் உத்தரவுகொடுப்பாள் அதன்பின் என் ஜாகாவிற்போய் படுத்துக்கொள்வேன் எனக்கு நித்திரை வருகிறதில்லை எழுந்து உட்கார்ந்திருந்து விடியும்வரையில வெகு துக்கத்தோடு அழுதுகொண்டேயிருப்பேன் ஏனென்றால் அவள்பேரில் கொண்டிருக்கிற மோகத்தினாலே பொழுதுவிடிந்தவுடன் அவள் எந்தவேலை யிடுவாளோவென்றெண்ணி வேலையாட்களை கூப்பிட்டு அவள் குளிக்கத்தண்ணீரும் அவள்பசியாற ஒசீவனமும் பலகாரங்களும் பழவர்க்கங்களும் சித்தப்படுத்தச்சொல்லுகிறது அது அப்படியிருக்க அவள் எழுந்திருந்து குளித்துமுழுகி ஆடையாபரண பூஷணாதி யணிந்து அறுசுவை பதார்த்தத்துடனே அன்னமருந்தி தாம்பூலந் தரித்துக்கொண்டிருந்தபின்பு நானெழுந்து மலபாதை முதலியதுக்கிருந்து குளித்துமுழுகி ஒசீவனந்தினுவேன் செலவுக்கு வேண்டியதாயிருந்தால் ஒரு ஆள்வசத்தில இவ்வளவு பொருள் வேண்டுமென்று இரசீதெழுதிக்கொடுத்து என தாரகனிடத்திற்போய் வாங்கிவரச் சொல்லுவேன் அந்தத்தாரகன் என்ரசீதைப் பெற்றுக்கொண்டு நான் எவ்வளவு தொ

கைபெழுதுகிறேனே அதுபோல் தடங்கலில்லாமற் கொடுத்துவருவான் நான்-அந்தப்பொருளைவாங்கி ஒரு குறைவில்லாமலும் அவள்மனம் இரம்மியப்படும்படியாகவும் செலவுசெய்துவந்தேன்.

கேளுங்கள் என் தோஸ்தியானவர்களே, இப்படியிருந்தும் நான் ஒருநாளாவது அந்தப்பெண்ணை என் கைகளால் தொட்டேயறியமாட்டேன், அவள்வாடையும் என்மீதுவீசினதில்லை அவள் சமீபத்தில்நெருங்கிப்பேசினதுமில்லை இப்படி இருப்பதால் எனக் கெவ்வளவு விசனமும் ஆசையுமிருக்கும் அதைநீங்கள்தானே யோசித்துப்பாருங்கள். இவ்விதமாக நான் அவள்வேலையில் ஜாக்கிரதையாக நடந்துவருங்காலத்தில் ஒருநாள் அவள்சமுகத்திற்போய் தசலிமாத்துச் செய்து ஓ பெண்கள்நாயகமே முன்னேஉன் திரேகத்தையெல்லாம் வெட்டிக்குத்தி அநியாயஞ்செய்து பெட்டியில் வைத்துக் கட்டி கோட்டைக்கப்புறத்தி லெறிந்துவிட்டுப் போனவர்கள் யாரென்று கேட்டேன்நான் கேட்டவுடன் அவளிருகண்ணிலும்நெருப்புப்பொறிகிளம்புவதுபோல் சிவந்து என்பேரில் மிகுந்தகோபமாய் என்னைப் பார்த்து ஓ மனிதனே நீஇப்போது கேட்டாப்போல் இன்னமொருவிசைகேட்காதே யென்றுசொன்னாள் உடனே நான்மிகவும் பயந்து திடுக்கிட்டு ஓஹோ நாம்இந்தக்கேள்வி கேட்டதற்கு இவ்வளவு கோபமும் ஆத்திரமுமாய்ச்சொன்னாளே நம்முடைய ஆஜத்தின்படி உன்னைக் கலியாணஞ்செய்துகொள்ளுகிறேனென்று சொல்லுவோமானால் இவள் தன் முகத்திலும் முழிக்கவொட்டாமல் நம்மைத் துரத்தி விடுவாள்போல் காணப்படுகின்றது அப்படி துரத்திவிட்டால் நாம்இனியொரு காலத்தில் இப்போக்கொற்ற பெண்ணைக்காண்பது அரிதாயிருக்குமேயென்று நினைத்து அவள்சொல்லுக்குப் பதில்சொல்லாமலிருந்தது அவள் மனதுக்குவருத்தம் வராமல் நடப்போமென்று எண்ணங்கொண்டு அவளைக்கண்ணால்பார்த்து கிசுமத்துச் செய்திருந்தாற் போதுமென்றெண்ணி யாதொருபேச்சும் பேசாமலிருந்துவிட்டேன் ஆனால் கேளுங்கள்எனது கூட்டாளிமார்களே நீங்களே யோசித்துப் பாருங்கள் இப்படி செலவுசெய்யும்படியாய் உதவிசெய்தனுப்பிய என் தமக்கையாரையும் என்மசசானையும் எவ்வளவாவது எண்ணமில்லாமல் இந்தப்பெண்ணுடைய எண்ணமும் கவனமும் கிசுமத்துச் செய்கிறதிலுமிருப்பதேயொழிய மற்ற யாதொரு நினைவுங் கிடையாது இப்படியிருக்க கொண்டுவந்தசரக்குகளை விற்றபணமெல்லாம் தரகனிடத்தில் நாளுக்குநாள் வாங்கி செலவுசெய்து கணக்கு சரியானதின் பின்பு

அந்ததரகலையே என் கப்பலைவிற்கும்படி உத்தரவுசெய்தேன அப்
படியே அவன்விற்று பொருளை என்னிடங்கொடுக்க அப்பணத்தையு
ம்செலவுசெய்துவிட்டு சரியானதின்பின்பு நாளையதினம் செலவுக்கு
வேணுமே இதற்குநாம் என்ன செய்கிறதென்று மிகவும் மனவருத்த
மடைந்து பலவிலயோசனை செய்துகொண்டிருந்தேன் அப்போதுஅ
ப்பெண்ணானவள் என்முகத்தைப் பார்த்து கூப்பிட்டு அருகில் வரவ
ழைத்து ஓமனிதனேநீர்ஒருநாளும் இப்பேர்ப்பட்ட கவனம்வைத்த
வரல்லவே அதைபோசிக்கில் எனக்காக அநேகபணம் செலவுசெய்து
விட்டதைக்குறித்து விசனப்படுகிறீர்போ விருக்கிறதென்று கேட்டா
ள் அப்போது நான்சொன்னேன் கேளும்பெண்ணே இந்தப் பணத்
தைப்போல லட்சம்பங்குசெலவுபண்ணினாலும் நான்கவலைப்படுகிற
தில்லை இப்போது நான் கவலைப்பட்டது யாதுக்கென்றால் இன்றை
யதினமாத்திரம் செலவுக்கிருக்கிறது நாளையதினம செலவுக்கில்லையே
யெனகிற கவனமாயிருந்தேனென்று சொன்னேன் அப்போது அவள்
குஞ்சிரிப்புகொண்டு என்னைப்பார்த்து கலுடந்தான் பெட்டியையெடு
த்து வாருமென்றுசொன்னாள் அவளுத்தாரப்படிககு அவள்முன்பாக
ப் பெட்டியைக்கொண்டுவந்து வைத்தேன். அவள்அப் பெட்டியைத்
திறந்து ஒருகடுதாசியெடுத்தெழுந முத்திரையிட்டு என்கையிற் கொ
டுத்துச் சொல்லுகிறாள் இக்கடிதத்தை இவ்வூரையாளுகின்ற சேகுபா
ஷாவுடைய அரண்மனைக்குச் சப்ளேர்செய்கிற சைதுபக்காரி யிருக்கி
றமாலுக்குப்போய் அவனைக்கண்டு அவரிடத்தில் இக்கடிதத்தைக்
கொடுமென்றுசொன்னாள் அப்போது நான்அவள்சொல்லைத் தட்டா
மல் காகிதத்தைக் கையிலெடுத்துக்கொண்டு அந்த மாலிருக்கிறவிட
த்தைதக் கேட்டுக்கொண்டுபோனேன் போகிறபேர்கள் அதைக் காண
்பித்தார்கள் நான் அந்தமாலுக்குட்போய் சைதுபக்காரி என்பவனை
க்கண்டு அதிகமரியாதை செய்து இந்தக்காகிதத்தை அவர்கையிற்
கொடுத்தேன் அவரதைவாங்கி முதத்திரையை யுடைத்துப் பார்த்துஉ
டனேயெழுந்து எனக்குத் தகுந்த மரியாதைசெய்து ஒரு நாற்காலி
லிருக்கும்படியாய்த் திட்டம்பண்ணி அதிக வணக்கத்தோடு பெட்டி
யைதிறந்து தங்கஅசாபிக்காசு நிறைந்த இரண்டு பைகளையெடுத்து
இரண்டு ஆள்களையழைத்து அவர்கள் தலையிலெடுப்பித்து என்னோ
டுவரும்படி உத்தரவுசெய்து என்னைப்பார்த்து ஓ வர்த்தகரே உமக
கு எந்தவேளையில் பணம்வேண்டியதா யிருந்தாலும் அந்தவேளையி
லெல்லாம் தடையில்லாமல் வந்து வாங்கிப்போகலாமென்று சொ
ன்னார்.

நானப்படியே நல்லதென்று அவரிடத்தில்விடைபெற்றுக்
கொண்டு அந்தப்பைகொண்டுவருகிற இருவரையும்அழைத்துக்கொ
ண்டுஎன்னிருப்பிடம்வர வெளியில்வரும்போது சந்தோஷமும்விச
னமுமாகவந்தேன் அதெதினலேயென்றால் இத்துரைசதுபக்காரியிட
த்தில் இவளுடையகாகிதம்செலவேண்டிய காரணமென்னவென்கிற
சந்தேஷமும் அவள்என்பேரில் அனுவளவாவது மனமில்லாதிருக்
கிறவிசாரமும்இவைகளைபெண்ணி நாளிருக்கிறவீடுவந்து சேர்ந்து அ
வசரமாய் பணப்பையையிறக்கி ஆள்களையனுப்பிவிட்டு அவளருகில்
நின்றேன்அவள் என்னைப்பார்த்து ஓ மனிதனே எப்போதும்போ
லேநீரேவைத்துச்செலவுபண்ணும் அதில்ஒருபையெடுத்து ஒருபக்
கிவண்டியிலேற்றிநீருமேறிக்கொண்டு கடைவீதிகடந்துஷாப்புக்களி
ருக்கிறவிடத்திற்போய் பூசுபுஎன்கிற சவுதாகர்ஷாப்பு எதுவென்று
கேட்டாற்சொல்லுவார்கள் அந்தஷாப்புக்குள்ளே போய்பார்த்தால்
அநேகவிதமானவியாபாரங்கள் விற்பனைசெய்திருப்பார்கள் அவர்களி
டத்திற்போய், உங்களெசமான்யூசுபுசவுதாகர் எங்கேயிருக்கிறரென
றுகேளும்அவரிருக்குமிடங் காண்பிப்பார்கள் அவரைக் கண்டவுடன்
பணப்பைகொடுத்து இந்ததங்கக்காசு முழுமைக்கும் எனக்கொரு
உடுப்புச்சோடினையும் யென்பெண்சாதிக்கொரு உடுப்புசோடினையும்
கொடுமென்றுகேளும் அப்படியேஅவர்கொடுப்பார் அந்தஉடுப்புக
ளைவாங்கிக்கொண்டுவாருமென்று உத்தரவுசெய்தாள் அதுபோலே
ஒருபைஅசாபிக்காசைசெலவுக்காக யென்அரையிற்பூட்டிவிட்டுமற்ற
ஒருபைகாசை யெடுத்துக்கொண்டு ஒருபக்கிவண்டியிலேறி,கடைவீ
தியெல்லாங்கடந்து ஷாப்புக்கடைவீதியிற்போய் அவள்சொன்னஷா
ப்பைக்கண்டு வண்டிவிட்டிறங்கி அக்கடையினுள்ளேபோய் நுழைந்
துபார்த்தேன் அவ்விடத்தியகார்காணுவை இன்னவிதமிருக்குதென்
றுகண்கொண்டு பார்க்கமுடியாது அது அவ்விடத்திருக்கும் ஷாப்பு
களைப்பார்க்கிலும் விஸ்தாரமாகவும் அதிகஉன்னதமாகவும் வெகுஅ
லங்காரமாகவும் பார்க்கப்பார்க்கப் பிரமிக்கும்படியான வெரியஷாப்
பாகவிருந்தது அதற்குள்முப்பதுநாற்பது கணக்கப்பிள்ளைகளிருந்
துகணக்கெழுதிக்கொண்டிருக்கிறார்கள்,

இன்னம்ஐம்பது அறுபதுபேர்களிருந்து அனேகம் பெண்பிடி
யாட்களால் சாமானெடுப்பித்துக்கொடுக்க அவர்கள் விற்பனைசெ
ய்கிறார்கள் சாமான் வாங்கவருபவர்களும் வாங்கிப் போகிறவர்களு
ம்ஒழிவில்லாமல் கூட்டக்கூட்டமாய்க் கூடியிருக்கிறார்கள் அந்த
ஷாப்பில் பூலோகத்திலில்லாத அபுரூபமான பல வஸ்துக்களும்

ஒன்பது வகை ரத்தினங்களும் - தங்கம் - பொன் - வெள்ளி - செம்பு முதலி
யபஞ்சலோகங்களும், ஆடவர்களுக்கும்பெண்களுக்கும்ஆகும்படியா
னபட்டுபட்டாவளி ஆடையாபரணபூஷணாதிகளடங்களுமிருக்கின்றது
அவைகளையொருவரும் விலைகேட்கிறதுமில்லை இன்னவிலையென்று
சொல்லுகிறதுமில்லை அத்தன்கிரயங்களையெழுதி அந்த யினங்களில்
ஒட்டியிருக்கிறது வாங்கவருபவர்கள் விலையைப்பார்வையிட்டு அது
போலவே பணத்தைக்கொடுத்துவிட்டு சாமான்களைப்பெற்றுக்கொ
ண்டுபோவார்கள் இவ்விதமாகநாற்பது ஐம்பதுபேரும் ஓயாமல் விற்
றுக்கொண்டிருப்பதை முன்சொல்லிய முப்பதுநாற்பதுகணக்கர்களு
ம்இடைவிடாமல் எழுதிக்கொண்டிருப்பதை நான் என கண்களாற்க
ண்டு பிரமித்துப்பார்க்கும்போது அந்தஷாப்புக்கு எஜமானனாகிய பூ
சுபுசவுதாகர் நடுமத்தியில்பீதாம்பரமுதலிய இரத்தினக் கம்பளமவிரி
த்துதிண்டுதிமாசு தலையணைமுதலியதும் போட்டு சாய்ந்துக்கொண்
டிருந்தார்நானவரைக்கண்டு சலாம்சொன்னேன் அவரெனக்குபிரத்
திசொல்லி அதிகஉபசாரத்தோடு உட்காரச்சொன்னார் உடனேநானவ
ரிடத்திறபோய் உட்கார்ந்து நாங்களிருவரும் பலபலவார்த்தைக
ள்பேசி பின்புநான்கொண்டுபோன அசர்பிதங்கக்காசை பையோடே
அவர்முன்னேவைத்துஎனக்கோருடுப்பும் ஒருதுகாபதிகோருடுப்பு
ம்கொடுமென்றுசொன்னேன்.

அவர் அப்பணத்தை யெண்ணிக்கொண்டு அதற்குத்தகுந்தஇர
ண்டுஉடுப்பைக்கொடுப்பைக்கொடுத்தார் அதையென்கண்களாற்பார்த்
தேன் அவ்வுடுப்பின்கிரையம் நான்கொடுத்த பணத்தொகைக்கும்அ
திகமாகவேயிருக்கும் அதைநான்வாங்கிக்கொண்டு யென்னிடத்திற்கு
ப்போய் வருகிறேனென்றுசொன்னேன் அவரென்னைப்பார்த்து யெங்
கள்வீட்டிலின்றிரவைக்குப் பசியாறிப்போகவேண்டுமென்று சொன்னா
ர் அதுகேட்டு நானவரைப்பார்த்து தாங்கள்சொல்லுவது சரிதான்யெ
ன்பெண்சாதியினுத்திரவில்லாமல் நானொருவேலையுஞ்செய்கிறதில்லை
ஆகையால் நான்போயவளுத்தரவுபெற்றுக்கொண்டு வருகிறேனென்
றுசொன்னேன் அப்போதந்தசவுதாகர்சொன்னார் நீர் வருகிறவரையி
ல்வழிபார்த்துக்கொண்டிருப்பேன் விரைவில்வாருமென்று அனுப்பி
வைத்தார் நானஅப்படியேஇரண்டுடுப்புகளையு மெடுத்துக்கொண்டு
வெளியில்வந்து கோச்சுவண்டியிலேறி யென்னிருப்பிடம் வந்துசேர்ந்
துஉடுப்புகளையெடுத்து அப்பெண்ணிடத்திற்கொடுத்தேன் அவளதை
வாங்கிப்பார்த்து தன்சமுகத்தில்வைத்துக்கொண்டாள் நானவளருகி

ல்தானேமிகுந்த அச்சபுடனே கைகட்டிக்கொண்டுநின்றேன் அவளென்
னைப்பார்த்து ஏன்நிற்குறீரென்றுகேட்டாள் நான்நிற்கிறதென்னத்து
க்கென்றால் அந்தசவுதாகர் என்னைஇன்றிரவில் தங்கள்வீட்டிற்பசியா
றிப்போகவேண்டுமென்று சொன்னார் நானுன்னுடைய உத்திரவுபெற்
றுவருகிறேனென்று சொல்லிவந்தேன் அதைக்கேட்கத்தான் நிற்கி
றேனென்றேன் அப்போதவள் என்னைப்பார்த்து கோபத்துடனே
சொல்லியதாவது ஒபயித்தியக்காரமனிதனே, ஒருமனிதர் விருந்துக்
கழைத்தால் அவர்களோடிருந்துண்டு வரவேண்டியதேயல்லாமல்
சொல்லிவிட்டுவருகிறேனென்று காலதாமதஞ்செய்வது தகுதியல்ல
ஆகையால் நீசீக்கிரமாகப்போய் அவ்விடத்தில்உமக்கு விருந்து நடக்
கிறமரியாதிகளையெல்லாம்பார்த்து என்னிடத்தில்வந்து சொல்லுமென்
றுஉத்திரவுகொடுத்தாள் உடனேநான் புறப்பட்டு அவர் ஷாப்புக்கு
ச்சமீபத்திற்போனேன அவர்ஷாப்பைமூடிவிட்டு வெளியேவந்து நா
ன்வருகிறவழியை எதிர்பார்த்துக்கொண் டிருந்தவர் உன்னைக் கண்ட
வுடனே மிகுந்தசந்தோஷமாய் ஒருபக்கிவண்டியிலென்னை யேற்றித்
தானும்உட்கார்ந்து வண்டியைநடத்தி கடைவீதிகள் தெருக்கள்முத
லியவைகளைக்கடந்து ஊருக்குவெளியில் ஒருதோட்டமிருக்கிறது அ
த்தோட்டத்துக்குள்ளே போய்ப்புகுந்து பார்த்தேம்.

என்தோஸ்திமார்களேகேளுங்கள் அத்தோட்டத்திலுமும்அ
திலிருக்கிற வஸ்துகளையும்பார்த்தால் அதிகபசியோ டிருப்பவர்களுக்
குப் பசியெடுக்கமாட்டாது அத்தோட்டத்தின்வர்ணிப்பு இன்னவித
மென்று சொல்லிமுடியாது என்னுற்கூடியமட்டாயில்ஒருவாறுய்சசொ
ல்லுகிறேன்கேளுங்கள் பூலோகத்திலுள்ள வஸ்துகளடங்கலிலும்
ஒருவஸ்துவிருக்குது அல்லது ஒருவஸ்து விலையென்று சொலலிமு
டியாது அப்படிப்பட்ட தோட்டத்தை அந்தசவுதாகர் சுற்றிலுங்
காண்பித்தார்அதுகளைநான்பார்க்கப்பார்க்க அதிகசந்தோஷ மிருந்
ததேயொழிய வேறொருகுறைவுமில்லை அதனுடையஅலங்காரமும்
ரத்தினங்கள்பதித்திருக்கிற பிரகாசமும்சொல்லிமுடியாது அப்போக்
கொற்ற பங்காளாவின்படி கட்டருகிற்போய்பக்கிவிட்டிரங்கிஅவருநா
னுமாய்உள்ளேபோய்பார்க்கும்போது உயாந்தவிரிப்புகள் விரித்து
அனேகசோடிப்புகள்செய்துகுலேப்புவாய்சேட்டுலஸ்தர்லாந்தாமுத
லியதும் தூக்கிபகல்வத்திதீபங்களெரிந்துகொண்டிருப்பதைபார்த்தோ

இரவுமை து பகலைப்போலிருந்தது அதில்வொருமேஜைபோட்டு அதன்மேல்ரவைசல்லாவிரித்து மேசையைச்சுற்றிலும சில நாற்காலிகள் போட்டிருந்தது சவுதாகரோருநாற்காலியிலும் நானொரு நாற்காலியிலும்உட்கார்ந்தோம் அந்நேரத்தில் சிலவேலைக்காரர்களாகிய பண்டாரிகள்மகா மேன்மையாய்ச்சமைத்த போசனமுதலிய ஒசீவனமும் இன்பத்தைக் கொடுக்கின்ற பலகாரங்களும், ரசக்கியானந் தருகின்றபழவர்க்கங்களும், குடிக்குபபடியான ஷாபத்துகளும் யாதொரு குறையிலலாமற் கொணடுவந்து வைத்தார்கள் உடனே சவுதாகரும் நானும் பொசிப்பதையெல்லாம்பொசித்து குடிக்கப்படுவதைக் குடித்து கைவாய்முதலிய வசுச்சுத்திசெய்து தாம்பூலஞ்சரித்து பரிமளவர்க்கங்களையணிந்து மிகுந்த சந்தோஷத்தோடிருக்கையில் அந்த சவுதாகர் மாகுக்கென்று கூப்பிட்டார் உடனே ஒரு காப்பிரிப்பெண்ணானவள் வந்தாள் அவளுடைய உயரம்நீளம்ஆறுமுழமுண்டு அவளுடையபருமன் இரண்டுபெண்கள் பருமனுண்டு அவள்மார்பிரண்டும்பெரிய சுரைக்காய்ப்பிரமாணமுள்ளது அவள்வாயுதடுகள் நாலுவிரற்கடைப்பருமனுண்டு அவள்பற்கள் நீண்டகோரைப்புல்லுக்கொப்பாயிருக்கும் அவள்தலைமயிர்கள் சுருட்டையாயிருக்கும் இவ்வளவு அங்கவிகாரமுள்ள பெண்ணானவள்யெங்கள் முன்பாகவந்தாள் அவள்வந்தவுடனே நான்பயந்துஇவள் நம்மைக்கடித்துத் தின்றுவிடுவாளோ யென்னமோவென்று அதிககாபராபட்டிருந்தேன் அப்போதவள் அந்தச்சவுதாகராருகிலிருக்கின நாற்காலியில் உட்கார்ந்தாள் உடனே சவுதாகர் ஒரு டோலையெடுத்து தன்கழுத்திலிட்டு அடித்துப் படித்து இராகங்கள் பாடினார் அப்பெண்ணானவள் யெழுந்து சிலஆட்டங்களாடினாள் இவ்விதமாகச் சிலநேரஞ்சென்றபின் வேலையாட்கள் ஒசீவன முதலியவைகளைக்கொண்டு வந்துவைத்தார்கள் அதைநாங்கள் மூவரும் புசியாநின்றோம் இந்தவிதமாக மூன்றுசாமம்வரையில் பலபலவிதமானபோஜனங்களும் வகைவகையான பலகாரங்களும்மாதிரிமாதிரியான பழவர்க்கங்களும இன்பரசக்கியமான ஷர்பத்துமுதலிய குடிக்குல் வஸ்துக்களும் வந்துகொணடேயிருந்தது அவைகளைத்தின்னவும் குடிக்கவும் அவளாட்லும் இவர்பாடலுமாக மூன்றுசாமம்வரையிலுமிருந்தேன்.

கேளுங்கள் யென் தோஸ்தியான சிநேகிதர்களே இவ்வள இன்பமாகிய வஸ்துக்களிலும் ஆடல்பாடல்களிலும் யென்மனம் அணுவளவேனும் பொருந்தாமலே நினைவு வேறுபட்டிருந்தேன அதேனென்றால் இந்தசவுதாகர் நம்மையெப்போதுபோகச்சொல்லுவாரோ யெப

போதுநம்மிருப்பிடம்போய் அந்தப்பெண்ணைக்காணபோமேயென்று
எண்ணமேயொழிய வேறெண்ணங்கிடையாது இப்படியிருக்குஞ்சம
யத்தில் நானிருக்கு மிடத்துக்குப் போகும்படியாம் சவுதாகர் உத்தர
வுகொடுத்தார் அதெனக்கெப்படியிருந்ததென்றால் ஒரு குற்றவாளியை
குவிலக்குபூட்டிச் சிறைச்சாலையிலடைக்க அதிகவருத்த மடைந்திரு
ந்தவனை விலங்கைக்கழித்து விடுதலைசெய்துவெளியில்விட்டால் அவ
னுக்கு எவ்வளவுமனமகிழ்ச்சியிருக்குமோ அதிலுமிரட்டிப் பங்கமா
னமகிழ்ச்சியோடெழுந்து அந்தப் பங்களாவையும் தோட்டத்தையும்
விட்டுவெளியில்வந்து என்னிருப்பிடஞ்சேர்ந்தேன் அதுவரையிலும்
என்னின்பத்துக்கும் எனதெண்ணத்துக்கும் என்னாசைவுக்குங் கார
ணமான பெண்ணானவள் உறக்கமில்லாமல் விழித்துக்கொண்டேயிரு
ந்தவள் என்னைக்கண்டவுடன் அருகிலழைத்து நீர்போய் வந்தகாரிய
மென்னவென்றுகேட்டாள் அப்போது நான்சொன்னேன் இந்த விட
த்தைவிட்டு ஷாப்பிற்குப்போய் சவுதாகருடனே சேர்ந்து தோட்ட
த்திலும் பங்களாவிலும் போயிருந்து மாதுக்களுவந்ததும் அவர்களாட
டலபாடல்செய்ததும் இன்னல் குடித்தல் முதலான சகலவைபோகங்
களையும் அனுபவவேணும் ஒளிக்காமற்சொன்னேன் அவைகளையவள்
முற்றிலுங்கேட்டும் மகிழ்ந்தவளுமல்ல புகழ்ந்தவளுமல்ல இகழ்ந்தவ
ளுமல்ல என்னைப்பார்த்து நீபோய் உன்சாகாவிற் படுத்துக்கொள்ளெ
ன்றுசொல்லிவிட்டு அவள்படுத்துநித்திரைசெய்துவிட்டாள் புன்புன
னறையிற்போய் நான்படுத்துக்கொண்டேன் பொழுதுவிடிந்தவுட
னெப்போதும்போல நானெழுந்து அவள்கிசுமத்தென்னும் வேலையில்
ஜாக்கிரதையாக விருந்தேன் இப்படி சிலநாளிருக்கும்போது கேளுங்க
ளென் சினேகராகிய தோஸ்திமார்களே இவ்விதமாகிய கிசுமத்திலிரு
ந்து அந்தப்பெண்ணை எத்தனை நாளைக்குவைத்துக் காத்துக்கொண்
டிருப்பேன் அதைநீங்களேயோசித்துப்பாருங்கள் அப்படியிருக்கநா
னெண்ணியதாவது நாம்இவள்பேரில் நாள்தோறும் கவனமாயிருப்ப
தாலும் இவளுக்குக்கிசுமத்துசெய்வதாலும் நம்முடைய வியாத்து
நளுக்குநள் குறைமாகுது இவளும்நமக் கிணங்குவதாகக் காணப்ப
டவில்லை ஆகையால்நமது இளமைடித்துக்கொள்வதே தகுதியாயிரு
க்கின்றதென் றெண்ணியிருக்கையில் அவளென்னைப்பார்த்துக்கோ
பமாய்க்கூப்பிட்டாள் நான்மிகவும்பயந்து எழுந்து அருகிற்போனேன்
அவளென்னைப்பார்த்துச்சொல்லுகிறாள் ஒபுத்தியில்லாத மட்டிமனி
தனே நீகொஞ்சமேனும் எண்ணமில்லாவமனா யிருக்கிறாய் அந்தச்
சவுதாகர் வீட்டில் விருந்துண்டு வந்தீரோ அதற்குப் பதில்

அந்த மனிதனுக்கு விருந்து செய்தீராவென்று கேட்டாள் அதற்குப் பதிலுத்தரம்நான்சொன்னேன் விருந்து செய்யத்தான் வேணும் ஆனால்நமக்கு ஆள்பேரில்லாமையாலும் போதுமானபடிக்குப் பதார்த்தங்கள் செய்துகொடுக்கும்படியான பண்டாரிகளில்லாமையாலும் விநோதமபொருந்திய வீடில்லாமையாலும் என்னமும் எண்ணி யெண்ணி ஏக்கமடைந்து சும்மாயிருந்துவிட்டேனென்றுசொன்னேன் அப்போதவளென்னைப் பார்த்து அவருக்குள்ளதை யவர் கொடுத்தார் நமக்குள்ளதைநாம் கொடுக்கவேணுமல்லவா ஆகையால்நீராதொரு கவலைப்படாமல்நாளையதினங் காலையில்விழித்தெழுந்தவுடனே அவரிடம் போய் சொல்லிநீரிவ்விடம்வாராம லவ்விடத்திலவரோடு சாயந்திரம்வரைக்கும் பேசிக்கொண்டிருந்து அதற்குமேலவரை இவ்விடமழைத்துக்கொண்டு வாவென்று உத்திரவுசெய்தாள் நான் அப்படியேசெய்யக்காத்துக்கொண்டிருக்கிறேனென்றுசொல்லி இராமுழுது மதேகவனமாயுறக்கமில்லாமலிருந்தெண்ணினேன அதென்னவென்றால் நடக்கந்தச்சவுகாதர் போதுமானஒசீவனங்கொடுத்தாரே நாமும் அப்படியல்லவோ கொடுக்கவேணும் அதல்லாமலும் நமதுவீட்டிலிருக்கும் வஸ்துக்கள் அவர் வீட்டி லிருக்கிற வஸ்துக்களில் லட்சத்திலொருபங்காவது இருக்கிறதா இல்லையே அவரையழைத்துவந்து எந்தவீட்டிலிருக்கும்படிசெய்கிறது அதுவுமல்லாமல் அவருக்குத்தகுந்த ஒசீவன முதலியவைகள் செய்யவேண்டு மானால் ஒருபெண்ணானவள் எந்தவிதமான பதார்த்தங்கள் செய்து கொடுக்கப்போகிறாளென்று பலபலவிதமாக கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன்.

அப்படியிருந்தாலும் அவள்சொல்லுக்கு நான் தடுத்துச் சொல்ல மனமில்லாதவனா யிருப்பதால் நான் யாதொன்றும் பேசாமலிருந்தது அவள்சொல்லியதுபோலவே காலையில் விழித்தெழுந்து அந்த யூசுபு சவுதாகருடைய ஷாப்பிற்குப்போய் அவரைக்கண்டு வந்தன முதலிய தசுலீம்செய்து சிலநேரம் பேசிக்கொண்டிருந்தேன். அப்போதவ ரென்னைப்பார்த்து நீரெங்குவந்தீரென்று கேட்டார் நான் சொன்னேன் தாங்கள் இன்றையதினம் என்வீட்டிற்குவந்துஒசீவனந்தின்றுவரவேண்டுமென்று சொன்னேன் அதற்கந்த சவுதாகர் புன்சிரிப்பாகச்சிரித்து அப்படியேவருகிறேனென்றார் நானும் அவரோடிருந்து பகல்நேரங் கழிகிறவரையிலும் பலபல வார்த்தைகள் பேசிக் கொண்டிருந்தேன் அப்போது என்னினைவெல்லாம் எப்படியிருந்ததென்றால் இன்றைக்குஅப்பெண்ணானவள் நம்மை என்னமூடனம் பண்ணுவாளோ தெரியாது

நாமிதற்கென்னசெய்கிறதென்று விசாரமாக என்கவனத்தைக் காண்பி
க்காமல் அவரோடு பேசிக்கொண் டிருந்தேன் அவருக்குப் பகலைக்கு
சாப்பாடுவந்தது அதையவரு நானுமாகப் புசித்தோம் பின்பு நான்
பொழுது போகும்வரையில் அவ்விடத்திற்றானே யிருந்து பொழுத
டைந்து இரவுஎட்டுமணிபானவுடனே சவுதாகர் ஷாப்பைச் சாற்றி தா
ளிட்டு வேலையாட்களையெல்லாம் அவரவர் வீட்டுக்குப்போகும்படி தி
ட்டஞ்செய்து பக்கிவண்டியில் சவுதாகரும் நானுமேறி வண்டியை நட
த்தி நானிருக்கும்விட்டுத்தெருவில் வருமபோது அவ்வீட்டுக்கு முன்
னதாகவே வெகு அலங்காரத்தோடு பகயோர்பந்தல் மகரதோரண மு
தலியவைகள் கட்டிசிலபெண்கள் தெருக்கள்பெருக்கி தண்ணீரில்பனி
நீர்கலந்து தெளிததுக்கொண்டிருந்தார் அதை நான்கண்டு மிகுந்தம
கிழடைந்து இதென்ன புதுமையா யிருக்கிறதென் றெண்ணி நாம் கால
மே வெளியில் போகும்போது யாதொன்று மில்லையே இப்போதுஇவ்
வளவு அலங்காரமும சோடிப்பும் என்னவிதமாகச் சமைந்திருக்குதெ
ன்றெண்ணங்கொண்டு வீட்டினருகில்வந்து வண்டிவிட்டுக்கீழிரங்கிவீ
ட்டின் வாசலைக்கடந்து உள்ளே போனேன் அங்கே சோடிப்புகள் செ
ய்திருக்கிற அலங்காரமும் அதிலிருக்கும் பூச்சோடிப்பும் வாசனைகளு
ம்இன்னவிதமென்று என்னாலே சொல்லமுடியாது ஆனால் பூலோகத்
திலகப்படாத வஸ்துகளடங்களும் அவ்விடத்தி லிருக்கிறது இன்னம
நேகவிதமான நிலைக்கண்ணாடிகள் வைத்திருக்குது கதில் விளக்குக
ள் தூக்கியிருக்கிறது அநேகவிதமான குளோப்பு லஸ்தர்கள் ஜந்துநி
றமான வால்சேட்டுகள் முதலியவிளக்குகளெரிந்து கொண்டிருக்கிற
து அதுகளைப்பார்த்தால் ஒன்பதுவிரத்தினங்களுஞ் சேர்ந்து பிரகா
சித்தது போலிருக்கிறது,

இவ்வித அலங்காரமுள்ளவீட்டுக்குள் அநேகவேலைக்காரர்களிரு
ந்து வேலைசெய்கிறார்கள் சிலதலையாரிகள் காவற்காரர்கள் சேவகர்க
ள் துருக்கிகள் முதலானவர்களும் உருவினகத்தியுடனேதக்கபடிநிற்
கிறார்கள் நாட்டியப்பெண்கள் நடனஞ்செய்கிறார்கள் இதுமுதலியஇன்
னம் அநேகவேடிக்கைகள் நடந்துகொண்டிருந்தது இவைகளை யெல்
லாம்பார்த்துக்கொண்டே சவுதாகரும் நானும் நடுமெத்தியிற் போ
னேம் அங்கே என் நாவாற் சொல்லக்கூடாத இரத்தினக் கம்ப
ளிகள் விரித்து அதற்குமேல்சொர்ண மயமான ரவுண் மேசை
யொன்று போடுவித்து அதைச் சுற்றிலு மூன்றுநாற் காலிபோ
ட்டிருக்கிறது அதுகளின் விநோதத்தை இன்ன வித மென்று
என்னாலின்றுச்சொல்லமுடியாது நான் இவ் விநோதங்களைப்

பார்த்துசந்தோஷமும் விசனமுமாக நின்றேன் அதேனென்றால் இவ்வளவு அலங்காரங்களையெல்லா முடித்திருக்கிறது நாம்கொண்டு வந்து வைத்திருக்கிற பெண்ணல்லவோ அவள் இந்தப் பூலோகத்திலுள்ளபெண்தானோ அல்லது சொர்க்கமாதர்களி லொருத்தியோ அல்லது பரிகள் ஜின்னுகள் குலத்திலுள்ள பெண்ணோவென்ற விசாரத்துடனும் மிகுந்த அலங்காரங்களைக் கண்டு சந்தோஷத்துடனும் நானும் அந்தசவுதாகரும் நிற்கும்போது சிலகிசுமத்துக்காரர்கள் வந்து அதிகவணக்கத்துடனே தஸ்லீமசெய்து நாற்காலியிலிருக்கச் சொன்னார்கள் நாங்களிருவரும் உட்கார்ந்தோம் அந்தச் சமயத்தில் சில கோசாக்கள் தங்கப்பாத்திரங்களில் ஒசிவனம பலாகாரங் பழவர்க்க முதலியவைகளும் குடிக்கும்வஸ்துக்களாகிய ஷர்பத்து முதலியவைகளும் கொண்டுவந்துமேஜையின்மேல் வைத்தார்கள் அவர்களைப்பார்த்தால் இன்ன விதவஸ்துக்களென்றுசொல்ல எவர்களாலுமுடியாது அவைகளைச் சாப்பிட்டு நாங்களிருவரும் பசியாறினோம் அப்படியிருக்கையில் நானழைத்துவந்த சவுதாகர் என்னைப்பார்த்து இப்பேர்ப்பட்ட அலங்காரமும் வினோதமுள்ள இடத்துக்கு என்னுடைய மாசூக்கை அழைத்து வராமற்போனேன் அவள் இங்கேவந்தால் இவைகளையெல்லாம் புசித்துமகாநேத்தியான சதுர்பண்ணுவாளென்றுசொன்னார்.

உடனே நானெழுந்து என்பெண்சாதியிடத்திற்போய் உத்திரவுபெற்று வருகிறேனென்று அவளிருக்குமிடத்தைப் போய்ப் பார்த்தேன் அவ்விடத்தில் நான்வைத்திருந்த பெண் நாற்காலியின்மீது உட்கார்ந்துக்கொண்டிருந்தாள் சிலஅடுப்புகளமைத்து மின்னொளிவைசிகர்த்த சிலபெண்கள் பலபல விதமான பலகாரங்களைச்செய்துக்கொண்டிருந்தார்கள் அவர்களுக்கிவள் அதற்குத்தகுந்த பாகமாகிய முறைகளைச்சொல்லிக் கொண்டிருந்தாள் இவைகளை யெல்லாம் நான்பார்த்து அதிசயித்து இவள்பெண்ணாயிருந்தால் இவ்விதமாகிய உர்ப்பாதங்களைச்செய்யமுடியுமா இதென்னகாரணமோவென்று கவலையுடனே நிற்கையில் அவளென்முகத்தைப்பார்த்து நீயென்னமனிதன் உன்னோடு வந்தசவுதாகரைதனியேவிட்டு இங்கேவரவேண்டிய வேலையென்னவென்றுகேட்டாள் அப்போது நானவளைப்பார்த்து அந்தசவுதாகர்என்னுடையமாசூக்கை இவ்விடத்தி லழைத்துவந்தால் மிகுந்தமேன்மையாயிருக்குமென்று சொன்னார் ஆனபடியால் உன்னுத்தரவு பெற்றுக்கொண்டுபோய்அந்தப்பெண்ணை யழைத்துவரச்சொல்லலாமென்றுஉன்னிடம்வந்தேன் அதற்கென்னசொல்லுகிறாயென்றுகேட்டேன் அ

ப்போதவள் அவர்மனம்போலவே யவளைக்கூட்டிவர சொல்லென்றனு
ப்பினள் நான்போய்சவுதாகரிடத்தில் உமதிஷ்டம்போலவே யாருக்காக
யழைத்து வாருமென்றுசொன்னேன் அவர்உடனேவண்டியிலேறிசீக்கி
ரமாகப்போய் மாருக்கெனனும் காப்பிரிப்பெண்ணை யழைத்துக்கொண்டு
வந்துஅவரொரு நாற்காலியின்மீதுட்கார்ந்தார் அவளொருநாற்காலிமீ
துட்கார்ந்தாள் இப்படியிருக்குஞ்சமயத்தில் விதவிதமானவாசம் போருந்
தியமுப்பத்திரண்டுவிதனளபாகத்ரோடுங்கூடிய ஒசீவனங்களும் வகைவ
கையானசிரணிமிட்டாய் பலகாரங்களும் பலபலவிதமானபழங்களுஞ்சி
லபேர்கொண்டுவந்துவைத்தார்கள் இவைகளைநாங்கள்மூவரும் புசித்
துதாம்பூலந் தரித்துக்கொண்டு அதிசுமகிழ்வோடிருக்குந் தருணத்தி
ல்அந்த யூசுபென்னுஞ்சவுதாகர் டோலேயெடுத்துக்கழுத்திலபாட்டி
க்கொண்டு அடித்துப்பாட்டுகள்பாடினர் அப்போது மாருக்கெனனு
ம்காப்பிரிப்பெண்ணெழுந்துபலபலவிதமான ஆட்டங்களாடினாஇப்படி
யிருக்குந்தருணத்தில் முன்வந்த ஒசீவனத்தைப்பார்க்கிலும் இரட்டி
ப்பாக ரசக்கியானமுள்ள ஒசீவனமவந்தது நாங்கள் அவைகளைப்புசி
த்து ஆடல்பாடல் எக்களிப்புடனேயிருக்கும்போது சிலவகியானகுடி
க்கும்வஸ்துக்கள் வந்தது அதில்பேருக்கொருகிளாசு குடித்தோம்
குடித்தவுடனே நான்அந்தக்கிளாசைக் கீழேவைக்கவும் நினைவுமாறிமய
ங்கிவிழுந்துவிட்டேன். அப்போது என்னுடனிருந்த சவுதாகரும் காப்பி
ரிச்சியுமெவ்விதமானர்களோ எனக்கொன்றுந்தெரியாது

பின்பு நான்பொழுது விடிந்த பத்துநாழிகைக்குமேல். மயக்கந்
தெளிந்து விழித்துப்பார்த்தேன் அப்போது இரவிலிருந்தசகலவினோ
தங்களும் இல்லாமல் வேலைசெய்தமனிதர்களும்: சவுதாகரும், காப்பிரி
ச்சியும், நான்வைத்திருந்தபெண்ணும் மற்றவர்களுங்காணாமல் வெறும்
வீடாயிருந்தது அப்போ நான்மாத்திரம் ஒருவிரிப்பின்மேலே படுத்
திருக்கிறேன் அப்போதுநான்மிகவுங்கலங்கி இதென்ன ஆச்சரியமாயி
ருக்குது இதைஇன்னவிதமென்று சொல்லக்கூடவில்லையோ அப்பெ
ண்ணானவள் எந்தஅறையிலாவது ஒளித்திருக்கிறளோ பார்ப்போ
மென்றுவெகுதுக்கத்துடனேயெழுந்தேன்சேனுங்கள் என்னுடற்பிற
ப்பாகிய தோஸ்தியார்களே இதைநீங்களேநன்றாயோசித்துப்பாருங்க
ளபின்புநான்வொவ்வொரு அறைகளாய்ப்புகுந்து பார்த்துவருகையில்ஒ
ாறையிலஇராத்திரி கிசுமத்துசெய்த கோசாக்களில்ஒருகோசா விருந்
தான்நானவனைக்கண்டவுடனே அதிவேகமாய்ப்போய்அந்தக்கோசாவி
ன்காலில்விழுந்தவனைக்கட்டிக்கொண்டு ஏக்கம்பொருமலுடனேவிம்மி

விபட்யழுது நான்வைத்திருந்த பெண்ணெங்கேயென்று கேட்டேன் அந்தக்கோசா இந்த அறைக்குள்ளிருக்கிறாளென்று சொல்லிவிட்டு வெளியே போய்விட்டார். நான்சுறுக்காகப்போய் அவ்வறைக்குட்புகுந்து தேடிப்பார்த்தேன் அங்கொருவரையுங்காணோம் ஒருபாய் மாத்திரம் சுருட்டி மூலையில்வைத்திருந்தது நான் அப்பாயை வெளியிற் கொண்டுவந்து விரித்துப்பார்க்கையில் அதில் இரண்டு தலையிருந்தது. அதையுற்றுப்பார்க்கையில் யூசுபுசவுதாகருடைய தலையும், மாசூக்கென்னும் சாப்பிரிச்சியினுடைய தலையுமாயிருந்தது அதைக் கண்டவுடனே என்தேகமெல்லாம் படபடவென்று விலவிலத்து காபராப்பட்டு தொப்பென்று கீழேவிழுந்து கடகடவென்று உருண்டுபுரண்டு எழுந்து வீட்டைவிட்டுவெளியில்வந்து பெண்ணே பெண்ணேயென்று மூன்றுநாள்பரியந்தம் அன்னந் தண்ணீரில்லாமல் புலம்பிக்கொண்டிருந்து நாலாநாளொருவீதியிற்போனேன் அவ்விடத்தில் அறைக்குள்பெண்ணிருக்கிறாளென்றுசொன்ன கோசாவைக்கண்டு அதிக வினாவிற்போய் அவன்காலில்விழுந்து கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு அதிக பரிதாபத்தோடழுது நான் வைத்திருந்த பெண்ணெங்கேயென்று கேட்டேன், அப்போ அந்தக்கோசாவுக்கு என்பேரிலிரக்கம் வந்து என்னைத்தன்னுடனே அழைத்துக்கொண்டுபோய் அவ்வூர் பாத்துஷாவுடைய அரண்மனை முகப்பிலவிட்டுநீ இங்கேதானேநில்லு நான் உள்ளே போய்வருகிறேனென்று சொல்லிவிட்டு அரண்மனைக்குள்ளே போய் சற்றுநேரஞ்சென்று நானிருக்குமிடத்திற்குவந்து என்னையுமழைத்தான் நாங்களிருவருமாய்ப் போகும்போது ஏழுசுற்று அரண்மனையிருந்தது அதற்கு ஏழுவாசலுண்டு அந்தவாசலுக்கு வாசல் அநேகம்வீரர்கள் காவல்காத்துக்கொண்டிருந்தார்கள் நாங்கள் அந்தக் காவலெல்லாங்கடந்து உள்ளே போனோம் அவ்விடத்தில் அநேக விதமான பணிதிகள்செய்த விசித்திரமான மாளிகை யொன்றிருந்தது அந்த மாளிகைக்குள் கணக்கிலடங்காத வெள்ளாட்டிகள் தாதிகள் தோழிகள் சூழ நடுவில்நான்வைத்திருந்த பெண்ணானவள் வெகுஉல்லாசமாகவும் வெகுகெம்பீரமாகவும் அதிக இறுமாப்புடனேவீற்றிருக்கக்கண்டேன். அப்போது நான்நினைத்ததாவது இவள் இவ்வூர் பாத்துஷாவுடைய மகளாயிருக்கவேணும் இவளுக்கு முன்னுண்டாகிய பொல்லாங்கு எவ்விதமாகவந்ததோ தெரியவில்லை மேலும் இவள் நம்மிடத்திலிருக்கும்போது இவ்விடத்திலுள்ள மனிதர்களிலொருவராவது வந்துபார்க்கவில்லையேயென்று பலபலவிதமாயெண்ணி அதிகதுயரத்துடனே அவள்சமுகத்திற்போய்நின்றேன் நான்நிற்குங் கோ

லத்தை அவள்பார்த்து எனமீது இரக்கமுடையவளாய ஒரு நாற்கா
லியில் உட்காரச்சொன்னாள் அப்படியே நானுட்கார்ந்திருந்தேன். பி
ன்பு சிலகோசாக்களுக்கு அவள் உத்தரவுசெய்தாள் அவர்கள் வந்து
என்னை அழைத்துக்கொண்டுபோய் வெந்நீர்முதலிய பந்நீரால் தலை
முழுக்காட்டி நல்லஉடுபாணங்களும் சொல்லுதற்கரிய ஒசிவனமுத
லிய போசனங்களுங்கொடுத்தார்கள் நான் அவைகளைத் தின்றுபசியா
றி களைதீர்ந்திருந்தேன் அப்போ தவளென்னை யருகிலழைத்தாள் நா
ன் அவளருகில் சீக்கிரமாகபபோனேன் அவளென்னைப்பார்த்து ஓ ம
னிதனே எனக்காக நீமிகுந்தவருத்தப்பட்டு வெகுபொருள்களைச்செ
லவு செய்துவிட்டாயே அந்தப் பணங்கள் இவ்வளவென்று தொகை
சொல்லுவீராகில் அதற்கிரட்டிப்பங்கு பொருள்தருகிறேன் அப்பொ
ருளை நீகொடுத்துக்கொண்டுபோய் ஒருகப்பல்வாங்கி அதிலேறிக்கொ
ண்டு உன்னூர்போய்ச்சேர்ந்து உன்தாய்பிள்ளையுடன் சுகித்திருமெ
ன்றுசொன்னாள் கேளுங்கள் தோஸ்திமார்களே நன்றுயோசித்துப்
பாருங்கள் அவள் இவ்விதமாகச்சொன்னவுடனே என்னுடைய மனம்
எப்படியிருந்ததென்றால் இந்த ஆலத்து நெருப்பையெல்லாம் என்னு
ள்ளத்தில்கொட்டினு லெப்படியிருக்குமோ அவ்விதமாய் நெருப்பி
லிட்டமெழுகுபோலுருகி அஞ்சிப்பயந்து அவளைப் புகழ்ந்து ஓ பெண்
ணே உனக்குநான் பாடுபட்டதும் பணஞ்செலவழித்ததும் ஒட்டிக்கி
ரட்டியாய் வாங்கும்படியாய்ச் செலவு செய்யவில்லை நான் வருத்தப்பட்
டுப்பொருளையெல்லாஞ்செலவுபண்ணி இவ்வளவு பிரயாசைப்பட்டது
என்னத்துக்கென்றால் உன்னுடைய நட்பைப்பற்றி நிக்காவென்னுங்க
லியாண முடித்து உடலுமுயிரும்போல இருவரும் வாழ்ந்திருக்கலா
மென்று இவ்வளவுபாடுபட்டேனேயொழிய வேறொன்றுக்கு மல்லவெ
ன்றுசொன்னேன் அப்போதவள் இருகண்ணுஞ்சிவந்து என்பேரில்
கோபங்கொண்டு வந்தகோபத்தையடக்கி அனேகம் புத்திமதிகளைச்
சொல்லி இன்னொருபோது இப்பேர்ப்பட்ட சொல்லைச் சொல்லாதே
நான்சொன்னபொருள் தொகைபோதாவிட்டால் உனக்குத் தேவை
யானமட்டும் பணந்தருகிறேன் நீ பெற்றுக்கொண்டு உன் தாய்தகப்ப
னிடம போய்ச்சேரென்று சொன்னாள் அப்போது நானவளைப்பார்த்
து ஓ பெண்கள்நாயகமே நீஇப்பூலோகத்திலுள்ள பணங்களை யெல்
லாம்தருவித்துக்கொடுத்தாலும எனக்குவேண்டியதில்லை உன்னைநிக்கா
செய்துக்கொள்வதே ஹராஜத்தாயிருக்குதென்றுசொன்னேன்.

அப்போதவள் கொல்லும்படியான சிங்கத்தைப்போல் கெர்
ச்சித்தேறிட்டுப் பார்த்து வாயில்வந்தபடிபேசி என்முகத்திற் காறி
யுமிழ்ந்து கடுஞ்சினமடைந்து அடேநசீபுகெட்டவனேயென்று சீறிப்

பேசி என்பேரில் வெறுப்புற்றுச் சிலரைவிட்டு அடித்துவெளியில் தள்ளிவிடச்சொன்னாள் அப்படியே யவர்களென்னையடித்து அந்தமாளிகைக்குவெளியில் தள்ளிவிட்டார்கள் நான் அவ்விடத்திற்றானே அச்சப்பெண்ணினுடைய ஏக்கமாகவே இராப்பகலறுபது நாழிகை வரையில் நினைத்து நினைத்து அதேகவனமாக அன்னாகாரமில்லாம லிருந்தேன் அப்போதப் பெண்ணானவள் நான்செய்த உபசாரங்களை யெண்ணி என்பேரிற்கிருபைகூர்ந்து கோசாக்களையனுப்பி என்னையழைத்துவரச்சொன்னாள் அவர்களென்னிடம்வந்து என்னை கூட்டிக்கொண்டுபோய் அவளெதிரில்விட்டார்கள் அவளென்னைப்பார்த்து மனமிரங்கி குளிக்கும்படிசெய்து ஒசிவணமுங் கொடுத்துச் சொல்லுகிறாள், மனிதரின இத்தேசங்களுள்ள பாத்துஷாக்கள் சுல்த்தான்கள் நவாப்புகள் முதலானவர்களும் என்னைக் கலியாணஞ் செய்துக்கொள்வதற்கு எனதகப்பனாகிய அமீர்பாத்துஷாவிடத்தில் வந்து மன்றாடிக்கேட்பார்கள் அப்போது எனதகப்பன் நீஎன்ன சொல்லுகிறாயென்று என்னைக் கேட்பார் அதற்கு நான்கூடாதென்று சொல்வேன் அதைக்கேட்டு என்தகப்பன் வந்தவர்களுக்குச்சொல்ல அவரவர்கள்தங்கள்தங்களிருப்பிடம்போய்ச்சேருவார்கள் ஆகையால் என்னைவந்துகேட்கும் பாத்துஷாக்களுடைய சூரத்தும அழகும்பார்த்தால் இனனவிதமென்றுசொல்லிமுடியாது என்னினும் அதிகவசீகரமாயிருப்பார்கள் அப்பேர்ப்பட்டவர்களையே வேண்டாமென்று வெறுப்புற்றிருக்குமென்னை நீர் என்னமனங்கொண்டுநெஞ்சஞ்சாமல்உன்னைக்கலியாணஞ்செய்துக்கொள்ளுகிறேனென்று சொல்லுகிறீர் நீர்வைத்திருக்கிற ஆசை வீணானது ஆகையால் இன்றோடே அவ்வாசையைவிட்டு நான் சொல்லுவதுபோல் அளவற்றசம்பத்துகளைப்பெற்று உன் தாய் பிள்ளைகளிருக்கும் ஊருக்குப் போய்ச்சேர்ந்து சுகமேயிருமென்று அநேகவித புத்திகளைச் சொன்னாள் அப்போதுநான் அப்பெண்ணைப்பார்த்து நீசொல்லப்பட்ட சொல்லெல்லாம் என்மனதுக்குச் சரிப்படாது உன்னை நிக்காசெய்துக் கொள்ள மனமிருக்குதேதவிர வேறேயோசனை யொன்றுமில்லையென்றுசொன்னேன்.

அச்சொல்லையவள்கேட்டவுடனே முன்போலவே என்னையடித்துவெளியில் தள்ளிவிடச்சொன்னாள் அப்படியே தள்ளிவிட்டார்கள் அப்போதும் நான் அவள்மேல் நினைவாகவே மூன்றுநாள் வரையில்அன்னம் ஆகாரம்நித்திரையில்லாமலே வெளியிலிருந்தேன் அப்போதும் ஒருகோசாவந்து என்னையழைத்துக் கொண்டுபோய் முன்

போலவே குளிக்க முழுகச்செய்து நல்லஜீவனங்கொடுத்து அவள
ருகில்லழைத்துக்கொண்டுபோனான் அவள்எனக்கு அநேகவிதமானபு
த்திகள்சொல்லி கணக்கிலடங்காத பொருள்களையும் விலையுயர்ந்த நவ
ரத்தினங்களையும் எனமுன்பாகக் குவித்து இவைகளையெல்லாம எடுத்
துக்கொண்டு என்னூருக்குப்போய் மக்கள்மனிதருடனே சேர்ந்து சு
கமாகவாழ்ந்திருமென்று சொன்னாள். அப்போதுநானவளைப்பார்த்து
சேளாப்பெண்கள் சிரோமணியான பெண்ணே நீ சொல்லப்பட்டசொ
ற்கள் அல்லாகுத்த ஆலாவுக்கு ஏற்கமாட்டாது இப்பொருளைப்போ
ல் பத்துபங்கு பொருள்கொடுத்தாலும் நான்விரும்பப்போகிற தில்லை
என்னை நீ கலியாணஞ்செய்துக்கொள்ளவேண்டியது அப்படிசெய்து
க்கொள்ள மனமில்லாவிட்டால் உன்கையினாலேயே என்னை வெட்டிக்
கொன்றுபோடவேண்டியது இவ்விரண்டிலொன்றுசெய்யாமல் நீ என்
னென்ன வருத்தங்கள்செயதாலும் செய் நீ சொல்லுஞ்சொற்கள் என்
செவியிலேறமாட்டாது ஆனபடியால்என்பிராணனை உன்கையாலேயே
வாங்கிவிடுவது அதிகமேன்மையாயிருக்கிறதென்று ஒரேபிடியாகச்சொ
ன்னேன் இவ்வசனங்களைக்கேட்ட பெண்ணானவள் துக்கசாகரததில்மு
ழுகி பெருமூச்செறிந்து பலபலவிதமான எண்ணங்களை யெண்ணித்
தேறிஎன்னைப்பார்த்து சிலயோசனைகள் யுக்திகள்சொல்லி அநேகம்
பொருளை என்வசப்படுத்தி இவைகளையெல்லா மெடுத்துக்கொண்டு இ
ந்நகரத்துக்கடுத்த ஊர்களிற்போய் பொருட்செலவுசெய்து சிலகாலா
ட்கள்முதலிய நால்வகை சேனைகளைச்சேர்த்து ஒருதேசத்தையா
ளும் பாத்துஷாவைப்போலே இந்நகரத் தருகில்வந்து டேரா முதலி
ய கூடாரமடித்து அதிலிருந்து கொண்டு சில தூதர்களை என்தகப்
பனிடமனுப்பினால் அவர்கள்வந்து எங்களுடைய பாத்துஷாவுக்கு உ
ம்முடைய பெண்ணைக்கொடுமென்று கேட்டால் என்தகப்பன் எனசம்ம
தத்தைக்கேட்பார் நான் ஒத்துக்கொள்ளுகிறேன் அப்போது நாமிரு
வரும்நிகாமுடித்துக்கொண்டு சந்தோஷமாயிருக்கலாமென்று அநே
கதந்திரங்களைச்சொல்லி என்னை யனுப்பிவைத்தாள நான் அப்படியே
நல்லதென்று விடைபெற்றுக்கொண்டு ஒருநகரம்போய்ச்சேர்ந்து யா
னை குதிரை முதலிய நால்வகைச்சேனைகளையும சேகரப்படுத்தி அந்த சே
னைகளுடனே இந்தமிஸ்நகரத்திற்குவந்து ஒரு மைதானத்தில் டே
ரா அடித்து அதிலிறங்கியிருந்துசிலதூதுவர்களை அந்நகரையாளும் அ
மீருபாட்சாவிடமனுப்பினேன் அந்ததூதுவர்களபோய் பாத்துஷாவை
க்கண்டு எங்களபாத்துஷாவுக்குஉம்முடையபெண்ணைத் தருகிறீராவெ

ன்றுகேட்க பாத்துஷா தன்மகளிடத்தில் ஆளனுப்பி அவள் மனச்சம்
மதத்தைக்கேழ்க அவளும் ஒத்துக்கொண்டாள் அதைக்கேட்ட ஆட்
கள் பாத்துஷாவிடம்வந்து உன்மகள் சம்மதித்தாளென்றுசொல்ல பா
த்துஷாமிகுந்த மகிழவடைந்து நானனுப்பிய தூதுவர்களிடத்தில் நி
காமுடித்துக் கொள்ளலாமென்று சொல்லியனுப்பினர் அவர்கள்வந்து
எனக்கு சாங்கோபாங்கமாய்ச்சொல்ல நானமிகுந்தமகிழ்வோ டிருந்தே
ன் அப்போது பாத்துஷா அங்கர் முழுமையும் அலங்காரஞ் செய
வித்து மங்களபேரிகை யடித்து வீதிக்குவீதி மகாதோரணம் மகம்
மேர்பந்தல்போடுவித்து வாழை-கமுகு-கரும்பு முதலியவைகளைநா
ட்டி வீடுகள்தோறும் அலங்காரஞ் செய்து அரண்மனையைச்சார்ந்த
மேன் மாட கூட உப்பரிகை முதலியவைகளையும் புட்பங்களாலே ய
லங்கரித்து அநேகவிதமான சோடிப்புசெய்து மணவறை முதலியவை
களையும் அமைத்து உடனே இரதகஜதுரகபதாதியாகிய நால்வகைச்
சேனைசூழ யானையின்பேரி லம்பாரிவைத்து நானிருக்கு மிடத்திற்க
னுப்ப அப்போது நான் அதிக சிங்காரத்துடனே மாப்பிள்ளை கோலங்
கொண்டு யானையின்பேரிலேறி என்னுடைய சேனைகளையுங் கூட்டிக்
கொண்டு நகார-நகபத்து-டங்கா-எக்காளம்-முரசு - தாரை - சின்னமு
தலிய பதினெட்டு வாத்தியங்களும் தாம்தாமென்று முழங்கிவர தீவெ
ட்டி பகல்வத்தி மத்தாப்பு அதிர்வேட்டு தேர்பாணம் பொரிபாண மு
தலிய ஆகாசபாணமும் பிரகாசிக்க பெண்கள் ஆடல்பாடல் முதலிய
நாட்டியங்கள் செய்ய சிலர் கட்டியங் கூற இத்தியாதி வைபவத்துட
னே ஊர்வலம்வந்து அரண்மனைவாசலருகிற்போய் யானைவிட்டுக் கீழி
றங்கி காளாஞ்சிமுதலிய ஆலாத்திகள் சில பெண்கனேந்திவா மாப்பி
ள்ளைத் தோழர்கள்சூழ எழுசுற்று வாசலுங்கடந்து உள்ளேபோனே
ன் அவ்விடத்தில் மிகுந்த அலங்காரஞ்செய்த மணவறைப் பந்தலினகீ
ழ்வெகு விநோதமாகிய விரிப்புகள் விரித்து அவைகளின் மேல் பலதே
சங்களிலுமுள்ள பாத்துஷாக்களும சுல்த்தான்களும நவாப்புகளும் இ
ராஜாக்களும் காஜி கத்தீப்பு லெப்பை ஆலீம்கள் உலமாக்கள் ஒஸ்தா
துகள் முதலானவர்களும நிறைந்திருக்கிற சபையினடுவில் நானிருக்
கும்படியாய் ஒன்பது வகை ரத்தினங்களுமழுத்திய தகத்தொன்றுஅ
மைத்திருந்தது நான்போய அதிலுட்கார்ந்த வுடனே தோழமார்க
ள் என்னருகிலிருக்க எனதுமாமனாகிய அமீருபாத்துஷா என்னெதி
ரி லுட்கார்ந்திருக்க ஹாஜி கத்தீபு முதலானவர்கள் எங்களருகில் வந்
திருந்து சாகிதுடனே மகர்முதலானதும் பேசி இருவரும் கபுல் கொ
ண்டதின்பின்பு நான்வருத்தப்பட்டு வைத்திருந்த மலிக்காசகஜாதியெ
ன்னும் பெண்ணுக்கும் எனக்கும் நிக்காகுசெய்து பாத்திகா வோதிது
வாக்கேட்டு அப்போது நடக்கவேண்டிய யொய்முறை முதலான மரி

யானைகளுஞ் செய்தார்கள் உடனே நானெழுந்து அவளிடத்தி லுள்
ள புலருக்கும் தசுலீம்முதலிய வந்தனஞ் செய்து பெண்ணிருக்கிற ம
ணவறையினுட்போய் அவளிருக்கும் சப்ரகூடமஞ்சத்தின் மெத்தை
யின்மேல் உட்கார்ந்து அப்பெண்ணின் கையைப் பிடித்து அழைத்து
நாங்களிருவரும் அதிகசெலவகதோடு சிரயிருந்தோம் அப்போது
எனமனமானது மகிழ்ச்சியடைந்து இந்தப் பூலோகத்தி லுள்ளவர்கள்
இவ்விகமகிழ்ச்சியை ஒருபோது மடையமாட்டார்கள்ளென்கிற எண்ண
ங்கொண்டு என்றிமோகமெல்லாம் இல்லென்றுகுளித்து இருதோளும் வி
ம்மிப் பூரித்து அதிகமகிழ்ச்சியுடனே யிருந்தேன்.

கேளுங்கள் தோஸ்திமார்களே நீங்கள் யோசித்துப் பாருங்கள்
நான் மகிழ்ச்சியோ டிருந்தது என்னத்தினாலென்றால் கோட்டைய
ருகில் சாய்ந்திருக்கையில் இப்பெண்ணை வைத்திருந்த பெட்டியைக்க
ண்டெடுத்து அவளுக்கிருந்த காயங்களை யெல்லாஞ் சொஸ்தப் படுத்
தி என் கையிலிருந்த பொருளையெல்லாம அப் பெண்ணுக்காகவே யழி
த்து அவள் அடிமைகள் செய்யும்படியான இசுமத்துகளிலிருந்தும் அ
திகவருத்தமான இசுமத்துசெய்து பின்பு அவளாலேயே அனேகம் அ
டிகள் முதலிய இம்சைபட்டு இவ்வளவு வருத்தமெல்லாம் அனுபவித்
து நானெண்ணிய எண்ணம்போலே அல்லாகுத்த ஆலா எங்களிருவ
ரையும் கூட்டுறவு செய்தான் கேளுங்கள் என்தோஸ்திமார்களே நா
ங்களிருவரும் கைபிடித்து அடங்காமகிழ்ச்சியோடு ஒருவருக் கொருவ
ர்பேசிக்கொண்டிருக்கையில் சிலகோசாக்கள் ஊண்முதலிய தீன் வகை
யறுக்களை விதம்விதமான ரசக்கியானத்தோடு எங்களிருவர் மத்தியி
லவைத்தார்கள் அதைநாங்களிருவரும் குறைவில்லாமற் புசித்து பல
காரமுதலியதுந் தின்று கனிவர்க்கமுதலிய தருந்தி பாக்குவெற்றிலைதி
ன்று களபகஸ்துரிமுதலிய வாசந்திமிர்ந்து புட்பங்கள முடித்துக்
கொண்டு இருவர்மனமும் ஒரேமனதாய் ஒருவர்சொன்ன வார்த்தை
யை யொருவர்தட்டாமல் ஏகபோகமாய் எக்களிப்புடனே யிருந்தோ
ம் அப்படி யிருக்கிற நாளையில் ஒருநாள் எனது நாயகியை வெகுமரியா
தையாய் அருகிலழைக்க அவள் வெகு வணக்கவொழுக்கமாக என்னரு
கில்வந்திருந்தாள் நான் அவளைப்பார்த்து ஓ சிரோமணியாகிய எ
ன தின்பமபொருந்திய ரஞ்சிதமயிலென்னும் பெண்கள் நாயகியே
நானொரு விசளம் உன்னைக் கேட்கிறேன் அதற்கு நீ ஒளியாமல் ச
ரியாகச்சொல்ல வேண்டுமென்று சொன்னேன் அப்போதவ ளென்னை
ப்பார்த்துச் சொல்லுகிறாள் என்னின்பம்பொருந்திய இருதய கமலமா
ன அரசநாயகமே தாங்க ளெதைக்குறித்துக் கேட்கிறீர்களோ

அவைகளை யனுவளவேனும் ஒளிக்காமற் சொல்லக் காத்திருக்கிறேன்தாங்கள் கேட்கவேண்டிய சவால்களைக் கேட்கலாமென்றாள் அப்போது நான்கேட்டேன் முன்பு உன்னைச்சரீரமடங்கலும் வெட்டிக்குத்தி பெட்டியில்வைத்துக் கோட்டைக்கு வெளியில் விட்டெறிந்த பாதர்கள் யார் அதன் விபரத்தை எனக்குத் தெரியும்படி சொல்லவேணுமென்றுகேட்டேனை அப்போதவள் அதிக வணக்கத்தோடு சொல்லுகிறாள் கேளும அரசநாயகரே முன்னொருபோது என்னைக்கேட்கஅதைமாத்திரம் நீர் கேட்கவேண்டாமென்று சொன்னேனல்லவா அப்படியிருக்க இப்போதுதைக் குறித்துக்கேட்பது சரியல்லவென்று சொன்னாள் உடனே நானவளைப் பார்த்து பெண்ணே நான்முன் உன்னைக் கேட்பதற்கு நீ அந்தவிசளத்தை கேட்காதேயென்று சொன்னது மெய்யே ஆனால்இப்போது நான்கேட்டகேள்வியை உன் சிரமேற்கொண்டு அந்தவிசளத்தை அவசியஞ் சொல்லவேண்டியது அதேனென்றால் முன்னே நான் அன்னியஸ்தனாகவும் உன்னுடைய ஏவற்பணிவிடை பூறியக்காரனாகவும் உன்னுடைய இன்பத்தையே யெண்ணிய அந்தஸ்துள்ளவனாகவு மிருந்தேன் இப்போது உனக்கு நான் சொந்தமாகிய கணவனாகவும் எனக்கு நீ மனைவியாகவும் நம்மிருவருடைய உடலிரண்டும் உயிரொன்றாகவும் உனக்கு வந்தது எனக்குவந்தது எனக்கு வந்தது உனக்குவந்ததாகவும் உன் அகவால் முழுதுமெனக்குச் சொல்லவும் என் அகவாலே உனக்குச்சொல்லும்படியாகவும் தொந்தமிருப்பதால் அகத்தியஞ்சொல்லவேணுமென்றேன்:

அவள் மிகுந்தபுத்திசாலி யானபடியால் யோசனைசெய்தது மெய்தான் நீர் கேட்பதை நான் சொல்லத்தான்வேணுமென்றுஎன்னைப்பார்த்துச்சொல்லுகிறாள் கேளும் நாயகரே நான் மிகுந்த செல்வத்தோடு பிறந்து வளர்ந்து ஐந்துவயதான காலத்தில் என்தாய்தகப்பனிருவரும் மனமகிழ்ந்து என்னைப் பள்ளிக்கூடமென்னும் மகுதாபுக்கானில் ஓதவைத்தார்கள் நான் ஓதிக்கொண்டு வருகையில் யூசுபு என்னும்ஒருபிள்ளையும் என்னோடேபடித்துச் சிநேகமானார் அது எப்போர்க்கொத்தமகபத்தென்றால் நான்விடுகிறமூச்சு அவர்பேரிலும் அவர் விடுகிறமூச்சுஎன்பேரிலும் படும்படியாகவும் உயிருமுடலும் நகமுஞ் சதையும்போலிருந்தோம் இவ்விதமான முகபத்தோடிருக்கிற நாளையில் எனக்குப்பருவகாலம் வந்ததால் என்னை அந்தப்புரத்தி லிருக்கும்படியாய் உபாத்தியாயரென்னும் லெப்பைக்குச்சொல்லி யழைத்துக் கொண்டுவரும்படியாய் என்பாவா சொல்லி யனுப்பினார் அப்படியே லெப்பையையுங்கூட்டிட மகுதாபுக்கானுக்குவரும்போது நான் நம்முடைய சி

நேசனைவிட்டுப் பிரிந்திருக்க எப்படி மனம்பொருந்துமென்று வெகு
துக்கத்துடனே மகுதூபுக்காணுக்குப்போய் என்சினேகிதனைக் கண்டு
மிகுந்த விசாரத்தோடு விம்மி விம்மியழுதேன் என்சினேசனாகிய யூசு
பு ஏனழுகிறுயென்றுகேட்டார் நான்என் தகப்பன்சொல்லிய சங்கதி
யைச்சொன்னேன் அவர்கேட்டு என்னிலும் அதிகதுக்கமாகி அழுதா
ர்நான் அவருடைய அழுகையை யாற்றி நீயாதொன்றுக்கும் விசனப்ப
டவேண்டியதில்லை நான யென்னை வளர்க்கும கோசாவிடத்திற் சொ
ல்லி உம்மிடத்தி லனுப்புகிறேன் அவர் உம்மிடம்வந்து உன்னை
யழைத்துவருவார் நாமிருவரும் மலாக்கத்தென்னும் சந்திப்புச்செய்து
க்கொள்ளலாமென்று சொல்லிவிட்டு வாத்தியாரென்னும் லெப்பையி
டத்திற்போய் என்பாவா சொல்லியதைச் சொல்லி அவரை யழைத்துக்
கொண்டு என்தகப்பனிடத்திற் போனேன்என் தகப்பனர் லெப்பைக்கு
வேண்டிய வெகுமதியென்னும் கதியாகொடுத்து அனுப்பினர்கள் நா
னும் அந்தப் புரத்திற்குப் போயிருந்தேன் மறுநாட்காலையில் நான்எ
ன்னைவளர்க்கிற கோசாவைப்பார்த்து நமது அரண்மனைக்கருகி லிரு
க்கிற நிலத்தைக்கிரயத்திற்குவாங்கி அதில்மிகுந்த விசித்திரமான
வீடுகட்டிஅந்தவீட்டுக்கும் எனதுபள்ளியறைக்கும் எவர்களுக்கும்தெ
ரியாமல் ஒருநிலவறைதோண்டிமுடிக்கும்படிசொன்னேன் அப்படி
யே அந்தகோசாநிலத்தைவாங்கி வீடுகட்டிச் சுரங்கஞ்செய்து என்னி
டம்வந்துசொன்னர் நானும் கோசாவும் பள்ளியறையில் நுழைந்துநி
லவறைவழியாய்ப்போய் அவ்வீட்டிற்புகுந்து அதிலுள்ளவிசித்திர
வேலைகளைப்பார்த்து மகிழ்ந்து கோசாவைப்பார்த்து என் சினேகனை
யழைத்து வாருமென்றுசொல்ல அவர்போய் யூசுபை யழைத்துக்கொ
ண்டுவந்தார் நாங்களிருவரும் அதிகமகிழ்ச்சியோடு ஒருவருக்கொரு
வர் மலாக்கத்துச்செய்து எபபோதும் என் சிநேகாகிய யூசுபை இந்
தவீட்டிலிருக்கும்படி திட்டஞ்செய்து பழையபடி பள்ளியறை சேர்ந்
து விடிந்தபொழுதஸ்தமிக்கும்வரையிலிருந்து இராவுவந்தபின்பு
ஒசீவன முதலியதுந்தின்று அவர்கள்படுத்து நித்திரை செய்து ஆ
ளரவமடங்கியிருக்கையில் நான்என் பள்ளியறையிற்புகுந்து நிலவறை
வழியாய்ப்போய் என்சினேகனைக்கண்டு சிலவார்த்தைகள்பேசியிருந்
து அவனைப்படுக்கும்படி சொல்லிவிட்டு நான்படுக்கிற பள்ளியறையி
ல்வந்து படுத்துக்கொள்வேன் இந்த விதமாகச் சிலநாள் நடந்துவ
ருகையில் என் சிநேகனைப் பார்த்து நான்சொன்னேன் நீ யாதொரு
வாத்தகமுமில்லாமல் சும்மாயிருக்கிறது சரியல்ல நான் சில பொருள்த
ருகிறேன் அதைப்பெற்றுக் கொண்டுபோய் ஒருஷாப்புக்கடை வை
யென்றுசொன்னேன் அப்படியே யவர் ஒப்புக்கொண்டு என்வசம்சி

பொருள்களைப்பெற்று அநேக சரக்குகளைவாங்கி அவரிருக்கும் வீட்டில்ஷாப்புவைத்து விற்பனைசெய்ததில் மிகுந்த லாபங்கிடைத்து பெரியசீமான் தனத்தைப் பெற்றுக்கொண்டார் அப்படியிருக்குநாளில் ஒருநாள் அந்தயூசுபென்பவர் நான் கட்டிக்கொடுத்த வீட்டில்வந்துவிசாரமாக உட்கார்ந்திருந்தார் அந்தச்சமயத்தில் நானவரைக் காணும்படியாக நிலவறைவழியாகப்போய் அவரைக்கண்டு விசனமா யிருப்பதையறிந்து ஓ சிநேகரே நீரொருநாளுமில்லாத விசனத்துடனே யிருக்கவேண்டிய காரணமென்னவென்றுகேட்டேன் அதற்கவ ரென்னைப்பார்த்து சேலும் கண்மணியாகிய பெண்கள் சிகாமணியே இந்நகரத்தில் அந்நியதேசத்திலுள்ள ஒரு வர்த்தகன்வந்து ஷாப்புக்கடைவைத்து அளவற்ற திரவியஞ் சம்பாதித்து ஒருதோட்டம்வாங்கி அதில் மிகுந்தவிசித்திரமாக ஒருபங்களா கட்டினான் அவன்ஷாப்பைப்போலும்பங்களாவைப்போலும் தோட்டத்தைப்போலும் அலங்காரமுள்ளது எந்ததேசத்திலுங்கிடையாது அவர்யிவ்வூருக்குவந்து வெகு நாளாய் விட்டபடியால் அவைகளைக் கிரையப்படுத்தி விட்டுத் தன்னூருக்குப் போக வேண்டுமென்றுநினைத்து விலைகூறுகிறார் அவைகளின்பேரில் ஆசைவைத்து சிலவர்த்தகர்கள் வாங்கிக்கொள்ள பணஞ்சேகரஞ்செய்கிறார்கள் நாளையதினம் வாங்கிக்கொள்ளுவார்கள்போல் காணப்படுகின்றது ஆகையால் அவைகளின்மீது எனக்குமிகுந்த விருப்பமிருப்பதால் நானும் அதன்விலையென்னவென்று கேட்டேன் அவர் ஷாப்பும் ஷாப்பிலுள்ள சாமானும் தோட்டமும் தோட்டத்திலுள்ள பங்களா அடிமை வெள்ளாட்டி காலாட்கள்முதலிய தரோபஸ்தும் கோடிவிராகனுக்குக்கொடுப்பதாய்ச்சொல்லுகிறார்கள் அதைமதிப்புப்பார்த்தால் இரண்டுகோடிவிராகன்பெறும் ஆகையால் என்கைவசமா யிருக்கிற பொருள் சுமார் ஏறக்குறைய ஐம்பதுலட்சம் விராகனுக்கிருக்கிறது மீதிஐம்பது லட்சம் விராகன்வேணுமே இதற்கென்னசெய்கிறதென்னும் விசனமேயொழிய வேறொன்றுமில்லையென்றார் நானவரைப்பார்த்து நீர்கவலைப்பட வேண்டாம் இன்றையதினம் பொழுதடைவதற் குள்ளாக அந்த ஷாப்புக்கடை தோட்டம்பங்களா காலாள்முதலிய யாவற்றையும் வாங்கித்தருகிறேனென்று மிகவுந் தேறுதலை சொல்லி அவருடைய மனதைச் சந்தோஷப்படுத்தி யனுப்பிவிட்டு உடனே என்னைவளர்க்கிற கோசாவின்வசம் அவர்சொன்ன தொகையைக் கொடுத்து அந்த வர்த்தகனிடத்திற்போய் பணத்தைக் கட்டி ஷாப்பு தோட்டம் பங்களாமுதலியவைகளையும் வாங்கி யூசுபுக்குக்கொடுக்கச் சொன்னேன் அப்படியே கோசா பொருளைக் கொண்டுபோய் அவைகளையெல்லாம் வாங்கி[illegible]னது சிநேகராகிய வர்த்தகருக்குக் கொடுத்துவிட்டுவந்து விட்

டார் அதன்பின்பு அவருக்குச்சொந்தமாயிருந்த ஷாப்புசாமான்களும் இப்போது வாங்கிய ஷாப்புசாமான்களும் ஒன்றுபச்சேர்த்து வர்த்தகஞ்செய்து அநேககோடி திரவியங்களைச் சம்பாதித்து அவனைப்போலேசீமான் இந்நகரத்திலு மற்றதேசங்களிலு மில்லையென்கிற பேரெடுத்து அதிக பெருமையடைந்திருக்கு நாளையிலே தினந்தோறும் நாங்களிருவரும் நிலவறையிருக்கும் வீட்டில் சந்தித்து மலாக்சத்துச்செய்து பேசியிருக்கும்போதெல்லாம் அவரென்னைப்பார்த்துச் சொல்லுவார் நீங்கள் எனக்குவாங்கிக்கொடுத்த தோட்டம் பங்களாவிருக்கிற அலங்காரச்சிறப்பை ஒரு இராவைக்குப்பார்த்து வரலாமென்று சொல்லுவார் அப்படியே பார்த்துவருவோமென்று நான் வாக்குக்கொடுத்திருந்தேன் கேளும் எனதன்புக்கும் பிராணனுக்கும் இன்பத்துக்கும் பொருந்திய கணவனே நான்பிறந்துமுதல் இதுவரையிற் சொல்லிவந்த விசயங்களைக்குறித்து என்பேரில் சக்குகளாகிய சந்தேகம் நீர்கொள்ளவேண்டாம் அவனெனக்குச்சிநேகனேயொழிய வேறே எங்களுக்கொரு கசடென்னும் துர்நடத்தைகிடையாது.

அப்படியிருக்கு நாளையில் ஒருநாளிரவில் ஒன்பது மணி நேரத்தில் நாங்களிருவரும் பக்கிவண்டி பேரி தோட்டத்திற்குப் போய் அத்தோட்டத்தினுடைய அழகையும் அலங்காரத்தையும் குளிர்ந்த சோலையும் பார்த்து சந்தோஷ மடைந்து பின்பு பங்களாவிற்குள்ளே போனோம் அந்தப் பங்களாவுடைய அகல நீளமும உயரமும் அதிலிருக்கிற சோடிப்புமுதலிய சித்திர விநோதமும் கண்டு சந்தோஷமாகி நாங்களிருவரும் ஆளுக்கோர் நாற்காலியி லிருக்கும்போது சில கிசுமத்துக்காரர்கள்வந்து ஏவற்பணிவிடை முதலிய கிசுமத்துச் செய்துநின்றார்கள். இவைகளெல்லாம் என்னிருகண்ணாலும் பார்த்து நமது சிநேகர் இவ்வளவு பெருமைபெற்றிருக்கிறானென்று மிகவும் சந்தோஷமானேன் அப்போதவர் மாசூக்கென்று கூப்பிட்டார் முன்புநீர்சொன்ன காப்பிரிச்சிவந்தாள் அவளுடைய உயரத்தையும் பருமனையும் நான் கண்டுபயந்தேன் அவள் என் சமீபத்தில்வந்து மிகுந்தமரியாதையுடனே தசுலீம்செய்து உட்கார்ந்தாள் பின்பு சில ஒசிலனங்கள் வந்தது அதை நாங்கள்மூவரும் பசியாறினோம் அதன்பின்பு என் சிநேகனாகிய யூசுபு ஒருடோலையெடுத்துத் தன்கழுத்தில் மாட்டிக்கொண்டு சிலபதங்களைப்பாடினார் அந்த காப்பிரப்பெண் எழுந்து பலவித ஆட்டங்களாடினாள் இப்படி சிலநேரஞ் சென்றபின் பலகாரங்களும் பழவர்க்கங்களும்வந்தது அதையும் தின்றோம் பின்புமயக்கத்தைக்கொடுக்கின்றசிலகுடிப்புவஸ்துகள் வந்தது அதில் என்னையுங் கொஞ்சங் குடிக்கச்

சொன்னார்கள் நானகுடிக்கிறதில்லையென்று சொன்னேன் அவர்களிரு வரும் பாரிபாரிக்குடித்து மிகுந்த பயக்கங்கொண்டு நானிருப்பதுந் தெரியாமல் ஒருவருக்கொருவர் சரசமுதலியவைகளைச் செய்துக்கொண்டார்கள் அவைகளை நான்பார்த்து முகத்தைத்திருப்பிக்கொண்டேன் மேலும் அவர்கள்செய்யத்தகாத துர்நடத்தைகளைச் செய்துக்கொண்டிருந்து சலநேரம் சென்றபின்பு வெரிதெளிந்து நானிருப்பதைப் பார்த்து அவர்களிருவரும் இரகசியமாகப் பேசிக்கொண்டார்கள்: அதென்னவென்றால் பாத்துஷாவுடைய மகளை இவ்விடத்தில் வைத்துக்கொண்டு நாமிருவரும் பலவித துர்நடத்தையான வேலைகளைச் செய்துவிட்டோமே இவள் இதனைமனதில் வைத்துக்கொண்டிருந்துபொழுதுவிடிந்தவுடனே நம்மிருவரையும் சிரசாக்கினை செய்து விடுவாள் போல் காணப்படுகின்றது ஆதலால் நாம் பொழுது விடிவதற்குமுன்னமே இவளைக்கொன்றுவிட வேண்டுமென்று ஆலோசித்து இருவரும் என்னருகில்வந்து வேலைக்காரர்களையெல்லாம் பிரத்தியேகப்படுத்தி என்னைப்பிடித்து ஒருதூணிர்கட்டி வெட்டுங் குத்துமாகச்சித்திரவதைசெய்து நான் இறந்துபோனேனென்று ஒருபெட்டியில்வைத்துக் கயிறுபோட்டுக்கட்டி ஒருவருக்குந் தெரியாமலிருவருமாய் தூக்கியெடுத்துக்கொண்டுபோய் கோட்டையின கொத்தளத்தின் மேலேறி சுவருக்குவெளிப்புறத்தில் இறக்கிவிட்டுப்போய்விட்டார்கள் அப்போதுநீர் என்னைக்கண்டெடுத்து அல்லாவுடையவுதவியால் வெகுபணத்தைச்செலவுசெய்து சொஸ்தப்படுத்தினீர் எனக்குதிரேகம் சவுக்கியப்பட்டபின்பு நான் நம்மைகொலைசெய்ய எத்தனித்தவர்களை நாமும் பதில்கொலை செய்யவேணுமென்று எண்ணங்கொண்டு உமதிடத்திற் பொருள்களைக்கொடுத்து அவருடைய ஷாப்புக்குப்போய் உடுப்புவாங்கிவரச்சொல்லி பின்பு விருந்துண்ணப் போகச்சொல்லி நீர்விருந்துண்டு வந்தபின்பு சிலநாள்கழித்து பதில்விருந்துக்கு அவரை யழைத்து வரும்படியாக உன்னை யனுப்பிவிட்டு நீர்போனவுடனே என்னரண்மனையி லுள்ள சகல வேலைக்காரர்களையும் வரவழைத்து வெகு அலங்கிர்தங்கள் செய்துவைத்தேன் ஏன் அவ்வளவு அலங்காரஞ்செய்தேனென்றால் அவர் வந்து பார்த்தவுடனே அந்தக் காப்பிரிச்சியை யழைத்து வருவாரென்றுசெய்தேன் என்னெண்ணத்தைப்போலவே நீர் அவனையழைத்து வந்தீர் அவர் அவ்விடத்திலுள்ள அலங்காரங்களையெல்லாம பார்த்து ஆச்சரியப்பட்டு மாரூக்கை யழைத்து வாராமல் போனேனே யென்று உம்மிடத்திற்சொல்ல நீரெனக்கறிவிக்க நான் உத்திரவு கொடுத்தபடியால் இரண்டாகதரம் அவர்போய் அந்த மாரூக்கென்பவளை யழைத்து வந்தார் அவள்வந்தவுடனே நான்வேண்டிய பலகாரங்களையும்

பழவர்க்கங்களையும் அனுப்பி கடையில் குடிக்கும்படியாகிய ஷர்ப்ப
த்தில் மஸ்தாகிய லாகிரிவஸ்துக்களை கலந்து அனுப்பினேன் அதை
நீங்கள் மூன்றுபேருங்குடித்து மதிமயங்கி மயக்கந்தலைக்கேறி கீழேவி
ழுந்தீர்கள் அப்போது நான் அவர்களிருவருடைய தலையையு மறுத்
துநீர்பார்க்கும்படியாகப் பாயிற்சுற்றிவைத்து அவர்கள் சரீரத்தைக்
கொல்லையிற் புதைத்துவிட்டு ஒருசமுக்காளத்தைவிரித்து அதன்மே
லும்மைப்படுக்கவைத்து சாமான்கள்முதலிய சகலவினோத வஸ்துக்க
ளையும் அவ்விரவில்தானே ஆள்களால் எடுப்பித்துக்கொண்டு அவ்வி
டத்தைத் தூற்றிப் பெருக்கிவிட்டு ஒருகோசாவைமாத்திரம் நீர்விழி
த்துக்கொள்ளும்வரையில் உமக்குத் துணையாகவைத்து வேலைக்காராக
ளும் நானுமாக இவ்விடத்திற்கு வந்துவிட்டோம் பின்பு தாங்களெ
ன்னைத்தேடிவருகையில் கோசாவைக்கண்டு இருவருமாக அரண்மனை
க்குவந்தீர்கள் கோசாபெண்ணிடத்தில் வந்து தாங்கள் வந்திருக்கிறச
ங்கதியைச்சொல்ல நான்உத்தரவுகொடுக்க நீங்களிருவரும் வந்துசே
ர்ந்தவுடன் நயமும் பயமுங்காட்டி அதில்உமது மனதை திருமபாததை
யறிந்துநான் ஒப்புக்கொண்டு தங்களெண்ணப்பிரகாரம் நம்மிருவருக்
கும் நிக்காகுமுடிந்தது இதுதான் நடந்தசங்கதியென்று ஆதியோடந்த
மாகச்சொன்னாள்உடனே என்மனதிலிருந்த கசடுமுதலிய சந்தேகங்கள்
தீர்ந்துயாதொருகுறைவுமில்லாமல் சுகசோபனமாகச்சிலகாலம் வாழ்ந்
திருக்குநாளையில் நான் என்னுடைய மனைவியைப்பார்த்து பெண்ணே
எனதமக்கையாளையும் மச்சானையும்விட்டுவந்து வெகுநாளாச்சுது அவர்
களைப்பார்க்க எனக்குமிகுந்த அபேக்ஷையாயிருப்பதால் நான்கப்ப
லேறி என்னூருக்குப்போய் அவர்களைக்கண்டு ஆறுமாதத்திற்குள்ளா
கஇவ்விடமவந்து சேருகிறேனென்று மிகுந்தஇரக்கத்தோடு கேட்
டேன் அதற்கு என்நாயகி என்னைப்பார்த்து உங்களை யனுப்பிவிட்டு
நான் அரைநாழிகையாவது தனித்திருக்கமாட்டேன் நானுங்கூடவ
ருகிறேனென்றுசொன்னாள் பின்னும் என்னாலே கூடியமட்டும் சொல்
லி அவள்சம்மதப்படாதபடியால் அவள் தாய் தகப்பனாகிய என் மாம
ன் மாமியாரிருவரையும் நாங்களிருவரும் அதிக வணக்கத்துடனேச
மாதானப்படுத்தி அவர்கள் விடைகொடுக்க வழிச்செலவுக்குவேண்டி
யபொருள்களையெடுத்துக்கொண்டு நால்வகைச்சேனையுடனே மிகு
ந்த ஆடம்பரமாகப் பிரயாணப்பட்டு கொஞ்சதூரம் போனவுடனே எ
ங்களுடன் வந்தசேனைகளை யனுப்பிவிட்டு மாவேகமனோவேக முள்ள
இரண்டு குதிரைகளின்மீது நானும் என்மனைவியு மேறி ஒன்றுக்கொன்
று முந்தாமல் பிந்தாமல் பலதேசங்களையுங்கடந்து எனதமக்கையாயி
ருக்கிறவூர் இன்னம் ஒருநாட்பயணமிருக்கின்றது அவ்விடம் வரும்

போதுனைக்குசலபாதைக்குவந்தது அப்போது நான் எனதுநாயகியை
ஒருமரத்தினிலிழலில்நிறுத்தி என்குதிரையையும் அவ்விடத்தில்வி
டு திரும்பிவந்துபார்க்கும்போது நான்ஏறிவந்தகுதிரையையும் என்பெ
ண்சாதியையும் அவள் குதிரையையுங்காணும்.

கேளுங்கள் என்னுடம்பிறப்பைநிகர்க்க தோஸ்திமார்களே அந்
நேரத்தில் என்மனம் எப்படியிருக்கலாம் அதைநீங்களே நன்றாகயோ
சித்துப்பாருங்கள் அப்போது நான்மிகுந்த வியாகூலப்பட்டுநாலுபக்க
மும் ஓடித்தேடியலைந்து பார்த்ததில் அந்தக்குதிரைகளினடியுந்தெரிய
வில்லை அதனால் நானமிகுந்த ஆச்சரியமும் விசனமுமுடையவனாய்இ
தென்னகாரணமாகவிருக்குமென்று என்னால்கூடியவரையில் காடுகள்
மலைகள் குகைகள் வனங்கள் வனாந்திரங்கள் நகரங்கள் பள்ளம் படுகு
ழிகள் இதுகளெல்லாம் சுற்றிச்சுற்றித் தேடிப்பார்த்தேன் என்நாயகி ஓ
ரிடத்திலும் அகப்படாமல் மனிதர்களில்லாதவிடங்களெல்லாம்போய
பெண்ணே பெண்ணேயென்றுபுலம்பி வனங்களெல்லாம் சுற்றிப்பாக்
கையில் எனக்கெதிரில் ஒருமலைகாணப்பட்டது அந்தமலைபருகிற்போ
ய் அண்ணார்ந்துபார்த்தேன் அதினுயரம்இது அவ்வளவென்றுசொல்ல
க்கூடாது அப்போதுநான்நினைத்தேன் என்அப்பெண்ணைத்தேடிச்சி
ணைபபோக்கவேண்டும் இனிமேலவள் அகப்படப்போகிறதில்லை நாம்இ
ந்தமலையுச்சியிற்போய் கண்ணைமூடிக்கீழேவிழுந்தால நம்முடையதலை
சிதறி சீவனபோய்விடும் நம்முடையஎண்ணமும் கவலையும் போய்விடு
மென்று ஓரேமனதாயுறுதிப்பட்டு அந்தமலையுச்சியிலேறிப்போய் கண்
ணைமூடிக்கீழே விழப்போம்போது ஒருமனிதர் என்கையைப்பிடித்து
விழாமற்றாக்கிநிறுத்திச்சொல்லுகிறார் ஓ மனிதனே நீ வீணாகசீவனை
மடித்துக்கொள்ளபபோறாயே அப்படி மடிந்துபோவாயானால் இருபதி
யிலும் உனக்குதஜாத்துக் கிடைக்கமாட்டாதே ஆனபடியால் இந்தவ
ழியேபோவாயானால் றூமதேசந்தெரியும் அந்தநகரத்திற்குச் சமீபமா
ய் ஒருமைதானமிருக்கிறது அந்தமைதானத்தில் ஒருகோரியும் அதனரு
ருகில் நாலு விருட்சங்களும் அதைச் சுற்றி கபுறுகளு மிருக்கிறது
அங்கேபோயிருப்பீரானல் உம்மைப்போல்மூன்றுபேர் ஹாஜத்துக்கா
ரர்கள் வந்துசேருவார்கள் அந்நகரத்துப்பாத்துஷாவும் ஒரு ஹாஜத்
தாக அவ்விடம்வந்துசேர்வார் ஆக ஐந்துபேர்களுடைய ஹாஜாத்தும்நி
றைவேறும் ஆகையால நீர் அங்கேபோய்ச் சேரலாமென்றுசொன்னார்
அப்போதவரைப்பார்த்து நீங்க ளாரென்றுகேட்டேன் அதற்கவர்கள்
சொன்னார்கள நானுதா (அவிபிணி அமீத்காலிபுறலீ அல்ல குதுன்

கு) என்றுசொன்னார் அப்போது நானவர்களை மிகவும்புகழ்ந்துநமக்கு இந்தவேளைவந்து உதவிசெய்தாரென்றெண்ணியில் கண்ணைமூட்டிப் உடனேநான் முழித்துப்பார்த்தேன் அப்போது அவர்கள்மறைந்து விட்டார்கள் அந்நேரத்தில நான் அல்லாகுசுபுகானகுத்தஆலாவைப்பு கழ்ந்து அசரத்தலியுல்லா அவர்கள் சொன்னபாதையாய் நடந்துநாமு நகரத்திற்கடுத்த இந்தக்கோரியிடத்தில்வந்து இருக்கும்போது சிலநா ளைக்குப்பிற்பாடு நீங்களுமவரும் ஒவ்வொருவராகவந்து சேர்ந்தீர்கள்.

சேளுங்கள் சிநேகமாகிய தோஸ்திமார்களே என்னுடைய அகவா லும் பக்கீர்கோலங்கொண்டிருக்கிறதும் எனக்கேசரியாயிருக்கிறது நீ ங்கள் பக்கீர்களென்று சொல்லுவது எனக்குச்சந்தேகமாயிருப்பதால் நீங்கள் பக்கீரானதெவ்விதம் அதைச்சொல்லுங்கள் சிநேகிதர்களே யென்றுமுதலாவது பக்கீராகிய முகம்மது கபுது என்னும் பக்கீர்சொல் லிமுடித்தார் முடிந்தவுடன் பொழுதுவிடிகிறநேரமாச்சுது அந்தநேரத் தில் கோரிக்கரிகிலிருக்கும் விருக்ஷத்தின்பின்னால் மறைந்திருந்த ஆசா த்வகுத்பாத்துஷாவானவர் இந்தநான்குபக்கீர்களில்முதலாவது பக்கீர் சொல்லிய கிஸ்ஸா முழுமையுங்கேட்டு அவர்கள்பசர்தொழுதுவியந்த மூந்திருக்கும்போது அவர்களுக்குத்தெரியாமல்மெள்ளநடந்து ராமுநக ரத்தின் பள்ளிவாசல்போய் பஜறுதொழுதுவிட்டு அல்லாகுத்தஆலா வைப்புகழ்ந்து அவாக்கேட்டுஎழுந்துசிங்காதனமென்னுமகத்தில் ம ந்திரிகள்சூழக்கொலுவிருந்துநாலுசேவகர்களையழைத்து அவர்களுக்கு உத்தாவுசெய்ததாவது இன்னமைதானத்தில்ஒருகோரியிருக்கிறது அதி ல்நான்குபக்கீர்களிருக்கிறார்கள் அவர்களிடத்திற்போய்அழைத்துவாச் சொன்னேனென்று அதிகமரியாதைசெய்துவருத்தப்படுத்தாமல்வாருங்க ளென்றனுப்பிவிட்டார்இந்தநாலுசேவகர்களுமஅந்தக்கோரியைத்தேடி ப்போம்போதுநான்குபக்கீர்களும்சுபுதொழுதுவிட்டுதெறாதுஓதிக்கொ ண்டுஇருக்கிறார்கள் அப்போதவர்களைநான்குசேவகர்களுங்கண்டுஉங்க ள்நால்வரையும்எங்கள்பாத்துஷா அழைத்துவாச்சொன்னாரென்று அதிக மரியாதையோடு சொல்லஅந்தப்பக்கீர்கள்சேவகர்களைப்பார்த்துச்சொ ன்னார்கள் நாங்கள் நாலவரும் பகற்காலங்களிலிரத்திலும் இராக்கா லத்தில் இந்தக்கபுறடிமைதானத்தில் வந்திருக்கிறவர்களுக்கு உங்கள் பாத்துஷாவிடத்தில் என்னவேலையிருக்கிறது ஆனபடியால நாங்கள்வ ரமாட்டோம் நீங்கள் போய்விடலாமென்று சொன்னார்கள் அப்போது இந்தநான்குசேவகர்களும் பயமும்பயமும் சொல்லி கண்டிப்பாக அவ ர்களைவிடாமல கூட்டிக்கொண்டு பாதத்துஷாயிருக்குமகத்து முன்பா க நான்கு பக்கீர்களையுங் கொண்டுவந்து விட்டார்கள் இவர்களைக் கண்டு

பாத்துஷா யெழுந்து தசலீம்செய்து தமக்குசாரியாக சகத்திலிருக்கும்படியாய் பக்கீர்களுக்குச்சொல்ல அவர்கள் பாத்துஷாவைப் பார்த்து இதென்ன அபிப்பிராயம் நாங்கள் பிச்சையென்னும்கயிறு கயிறுத்துவாங்கித்தின்னுகிற பக்கீர்களை தகத்திலிருக்கும்படியாய் தாங்கள் சொல்லுகிறது சரியல்லவே ஆகையால்தாங்கள் எங்களை சேவர்களைவிட்டு அழைத்துவந்தது என்னத்துக்காக அதைச்சொல்லுங்கள் நாங்களிருக்குமிடம்போவதற்கு நேரமாகுது என்றுசொன்னார்கள் அப்போதுபாத்துஷா நான்குபக்கீர்களைப்பார்த்து புன்சிரிப்புடன்சிரித்து நீங்கள்தர்வேசுகளென்னும் பக்கீர்களுஉங்களுக்குமெனக்கும்சரிதான்வித்தியாசமில்லையென்றேனுநீங்கள்சரியாயிருக்கலாம் அதுவதானென்றால்சீமையாளும்பாத்துஷாக்களுக்கும் பக்கீர்களுக்கும் உயர்த்திதாழ்த்தியொன்றுமில்லையென்று இன்னம் அநேகம் ஹதீதுகளில்களைச்சொல்லி அவர்கள்மனதைத்தேற்றி உட்காரச்சொன்னார்கள் அதன்பின்புநான்கு பக்கீர்களும் பாத்துஷா சொல்லைத் தடுக்காமல உட்கார்ந்தார்கள்.

அதன்பின்பு பாத்துஷாவானவர் நால்வர்களையும்பார்த்து இராத்திரிக்கு நீங்கள் நாலுபேருமநானுமாக ஆகஐந்துபேரும் ஒருதனிமையானவிடத்தில் சில அகியாக்கள்முதலிய சிலவார்த்தைகள் பேசவேண்டியிருக்கிறது ஆகையால் பகல்முழுதும் என்னோடிருந்து இரவில்பேசிப்பேசலாமென்று அவர்களைநிறுத்தி தேசவிசாரணை முதலானதும் செய்து சிலநேரத்துக்குப்பின்பு நான்குதர்வேசுகளும் பாத்துஷாவும எழுந்து தேவடிக்குட்போய் ஓசீவனமுதலியதும் அருந்திரவுஞ்சவார்செய்து சுகத்திலிருக்கும்போது இராவானவுடனே மந்திரிகள்முதலிய சகலரையும் அவரவரிடம் போகும்படிசெய்து இவர்களைந்துபேருமெழுந்து ஓசீவனந்தின்று பாத்துஷாமுன் தவஞ்செய்திருந்தஇபாதத்துக்கானவுக்குட்போய் ஐந்துபேருமாய்னுழைந்து சில விரிப்புகள்விரித்துவிளக்குமுதலிய குளோப்புகளில்தீபமேற்றி மகரிபு எஸா இந்தஒகுத்துத்தொழுகைகளைத்தொழுது அல்லாகுக்கு ஆலாவைப்புகழ்ந்து துவாகேட்டு இந்தஐந்துபேர்களும் அந்தஇபாதத்துக்கானநடுவில் விளக்கேற்றிவைத்து அதைச்சுற்றியிருந்தார்கள் அப்படியிருக்கும்போது சாத்பதுத்பாத்துஷா நாலுபக்கீர்களையும்பார்த்து நேற்றிரவில்நாலுரில் முகம்மதுசுபுது என்கிற பக்கீர் அவர்களுடைய அகவாலைச் சொன்னார் அதுபோல் நீங்கள்மூவரும் பக்கீரான அகவால்களைச்சொல்ள் அதைக்கேட்கும்படியாக மிகவும் எனக்கு ஆசையாயிருக்கிதைச்சொல்லுங்களென்று மிகவும்வருந்தி தசலீமசெய்துகேட் அப்போது அந்தமூன்றுபக்கீர்களும் பாத்துஷாவைப்பார்த்

லுகிறார்கள் தவுளத்தே பாத்துஷா நாயகமே எங்கள் இரந்து தின்னுகிற பக்கீர்களாயிருக்க எங்களுக்கு என்ன அகவால்கள் கிஸ்ஸாக்களிருக்கிறது ஆனால் ஒரு அகவால் எங்களுக்குத்தெரியும் அது என்னவென்றால் வயிறுபசித்தால் கயிறுகயிறாத்து பிச்சைகள்வாங்கி ஒருஇடத்திலிருந்து தின்றுவிட்டுமற்றோரிடத்திற்போய் படுத்துக்கொள்வோம் அதுதான் எங்களுடைய அகவால் வேறேயொன்றுங்கிடையாதென்று மூன்றுபக்கீர்களுஞ்சொன்னார்கள் அப்போது ஆசாத்பகுத்பாத்துஷா சொல்லுகிறார்.

கேளுங்கள்தோஸ்தியாகிய தர்வேசுகளே ஏதோநீங்கள்வருத்தப்பட்டு துன்பமடைந்திருப்பவர்களைப்போல தோற்றப்படுகின்றது ஆகலால் இந்தத்துனியாவில் மனிதராகப்பிறந்தவர்களுக்குமின்பமும் துன்பமும் சமமாகவேயிருக்கின்றது நபிமார்களெல்லாம எவ்வளவோ துன்பப்பட்டிருக்கிறார்கள் அதைப் பார்க்கிலும் நீங்கள் அதிகதுன்பப்பட்டவர்களோ உங்கள்மனதில் யாதொருகவலையும்வையாமல் நீங்கள்பட்ட அகவாலைச் சொல்லுங்களென்று மிகவும் தயவுதாட்சணியத் துடனே விரும்பிக்கேட்டார் அப்போதந்தப்பக்கீர்கள்பாத்துஷாவைப்பார்த்து எங்களுக்கொரு அகவால்களுமில்லை நாங்கள் எப்போதும் ஊருருக்குப்போய் பிச்சைவாங்கித்தின்று வயிறுவளர்த்து வருவதுபோல் இவ்வூருக்கும் கயிறுகயிறுத்துவாங்கித்தின்று வயிறுவளர்க்கலாமென்று வந்திருக்கிறோம் அதுகவிரவேறேயாதொரு அகவாலுமில்லையென்று பிடிவாதமாய்ச்சொன்னார்கள் அப்போது பாத்துஷா பக்கீர்களைப்பார்த்துச் சொல்லுகிறார் நீங்களெண்ணியிருப்பதைப் பார்த்தால்நம்மைப்போல் துன்பப்பட்டவர்கள் இந்தப்பூலோகத்திலொருவராவது இருக்கமாட்டார்களென்று நினைக்கிறீர்கள் ஆகையால் உங்களிலும் மிகுந்த துன்பப்பட்டவர்கள் வெகுபேரிருக்கிறார்கள் அதிலொருமனிதன் பட்ட துன்பத்தை என்காதாரக்கேட்டு அந்தமனிதனையும் என்கண்ணாற்கண்டிருக்கிறேன் அவன்சரித்திரத்தைமுன்னம் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் அதைக்கேட்டு நீங்கள்பட்டவருத்தமதிகமா நான்சொல்லப்போகிற கிஸ்ஸாவிலுள்ளவன் பட்டவருத்தமதிகமாயுமென்று யோசித்துப் பின்பு நீங்கள்பட்ட துன்பத்தைச்சொல்லி என்னுடையசந்தேகத்தை நீக்குங்கள் நாமிருவருமசந்தோஷமாயிருக்கலாமென்று பாத்துஷாசொல்லப் பக்கீர்கள் சம்மதித்து அப்படியேசொல்லுமென்றார்கள்

முதலாவது பக்கீராகிய முகம்மதுகபுதுவின் கதை
முற்றுப்பெற்றது.

—— * ——

பிகமில்லாகி.

# ஆசாத்பகுத்பத்துஷா.

நான்குபக்கிரிகளுக்குஞ்சொல்லிய கிஸ்ஸா.

கேளுங்கள் என் தோஸ்தியாகிய சர்வேசுகளே முன் எனக்குப் பதினாறு வயதுள்ள காலத்தில் எனக்குப் பட்டங்கட்டினார்கள் நான் தகத்திலிருந்து இராசரீகஞ்செலுத்துகிற நாளில் ஒருநாள் இந்நகரத்துக்கு வெகுதூலையில ஒரு பெருங்கூட்டம்வந்தது அவர்கள் வருகிற அதிர்ச்சியினால் தூசுகள்கிளம்பி சூரியனை மறைத்துக்கொண்டது அப்போது நான் நமக்கெதிரிகள் யாரோ படையெடுத்து வருகிறார்கள போலிருக்கிறதென்று நினைத்து அதைவிசாரித்து வரும்படியாக சில தூதுவர்களையனுப்பினேன் அதற்குள் அவர்கள் இந்நகரத்திற்குச்சமீபத்திலுள்ள மைதானத்தில் கூடாரமுதலிய டேராவடித்து அதிலிறங்கினார்கள் அவர்களை தூதுவர்கள் கண்டு விசாரித்துவந்து வர்த்தகஞ் செய்கிற வியாபாரிகளென்று சொன்னார்கள் அதைக்கேட்டுநான் சந்தோஷித்திருக்கையில் அந்தக்கூட்டங்களுக்கெல்லாம் எசமானாகிய சவுதாகர் தாம் வந்திருக்கிற சங்கதியைச்சொல்லியனுப்பினார் அதைக்கேட்டு நானவரை வரும்படியாய்ச்சொல்லியனுப்ப அவர் தாம் கொண்டுவந்திருக்கிற சாமான் சரக்குகளி யாவற்றையும் அநேகம் வேலைக்காரர்கள் தலையின்மீதெடுப்பித்து நானிருக்கும் சபாமண்டபத்தில் வந்து என்னைக்கண்டு அவர்கள் கொண்டுவந்த சாமான்களையும் இறக்கி என்னெதிரில் நின்றார் அவரைப்பார்த்தால் பாத்துஷாக்களிலும் சுல்த்தான்களிலும் மேன்மையான அழகும் ரூபத்துக்கும் பொருந்திய அக்லஸ்துள்ளவராயிருந்தார் அவரை என்சமீபத்திலிருக்கும் நாற்காலியிலுட்காரச்சொன்னேன் அவரப்படியேயுட்கார்ந்தவுடன் நானவரைப்பார்த்து நீரிருக்கிறவூரும் உமதுபேரும் இப்போதுகொண்டுவந்திருக்கிற சாமான்களின் விபரமும் சொல்லுமென்றுகேட்டேன் அதற்கவர் நானிருக்கிறது புல்த்தானகரம் என்பேர்காசாஜையது சவுதாகர் நான் தேசதேசங்களெல்லாந்திரிந்து அநேகம்பாத்துஷாக்களிடத்திற்பெரிய அபுரூபமாகிய சரக்குகளும் நவரத்தினங்களும் அவர்கள் மனமகிழும்படியாகக்கொடுத்து அதன் கிரயங்களையும் இனாம்களையும் பெற்றுக்கொண்டுவருகிறதாகையால்தாங்கள் ஐம்பத்தாறு தேசத்தரசர்களுக்கெல்லாம் கொடுத்த சாமான்கள இரத்தினங்கள் முதலியதிலும் மிகுந்தமேன்மையான சாமான்களையும் இரத்தினங்களை

யும்கொண்டுவந்திருக்கிறனென்று அங்குள்ளமேசைகளின்மீதிலவேலையாளர்களைவிட்டுத்தாங்கள்கொண்டுவந்த இரத்தினமுதலிய சாமான்களையும் பரப்பச்சொன்னார் அவர்களப்படியேபரப்பினார்கள் அதன்பின்பு அந்தவர்த்தகரும் நானுமெழுந்து அவைகளைப்பார்த்துக்கொண்டுவருகையில் அனேகவிசித்திரவிநோதமுடபொருந்தியபட்டுப்பட்டாவளிகள் மகம்மல் பீதாம்பரமுதலியவைகளைச்சுற்றிலும்வைத்து அதற்குப்பக்கத்தில் சிலகிளாசுகளில்ஷர்பத்துகளிருந்தது அதைநான்கையிலெடுத்துப்பார்த்தேன் அந்தசவுதாகர்என்னைச்சாப்பிடச்சொன்னார் அப்படியே அதைக்குடித்தேன் அதனுடைய இனிப்புநான்பிறந்தது முதல்இதுவரையில் சாப்பிட்டவஸ்துகளில்இப்பேர்ப்பட்டவஸ்து இல்லையேயில்லை வேறொருவர்குடித்ததாகவென்றும் நான்கேள்விப்பட்டதுமில்லை பின்பு அந்தக்கிளாசைப்பார்த்தேன் அதில்முன்னிருந்தபடியே ஷர்பத்து நிறைந்திருந்தது அதையுமவர் குடிக்கச்சொன்னார் அப்படியேகுடித்தேன் அதுவேறுவிதமானஷர்பத்தாகவும் மிகுந்த இனிப்பாகவுமிருந்தது மறுபடியும் அதைப்பார்க்க முன்னிருந்ததுபோலவே மற்றொருவித ஷர்பத்திருந்தது இவ்விதமாய் குடிக்கக்குடிக்கவேறுவிதஷர்பத்தும் வேறுவேறு இனிப்பாகவுமிருந்தது.

அப்பேர்ப்பட்ட கிளாசுகள் அனேகமிருந்தது அதனருகில் பலவித செடிகளிருந்தது அந்தச்செடிகளின் கிளைகள் வெள்ளியினாலும் அதனிலைகள் பச்சைமரகதத்தினாலும் அதன்புஷ்பங்கள் தங்கத்தினாலும் அதன்காம்புகள் ஐம்பொன்னாலுமமைந்து அதனுச்சியில் ஒருமயில்சிவப்பு நீலம் பச்சை கோமேதகம் முதலியவைகளாற்செய்யப்பட்டிருந்தது அதைநான்மிக்கஆவலுடனே விழித்தகண்சிமிட்டாமற்பார்க்கும்போது அந்தச்செடியினருகில் ஒரு பிரம்பிருந்தது அதைவர்த்தகரெடுத்து என்கையிற்கொடுத்து அந்தச்செடியினுனியிலிருக்கும்மயிலின்தலையிற்றட்டச்சொன்னார் அதுபோல் தட்டினேன் உடனே அந்தமயில்இரண்டு சிறகைகளும் வாலையும் விரித்து ஆடிக்கொண்டிருந்தது அதைப்பார்த்து நான் திப்பிரமைகொண்டு மயங்கி அடடா இதென்னஆச்சரியமாயிருக்கிறது இப்பேர்ப்பட்ட விநோதமாகிய வேலைக்கு நமதிராச்சியத்தைவிலையாகக் கொடுத்தபோதிலும் இதற்கீடல்லவென்று நினைத்திருக்கையில் அந்தசவுதாகர் பிரம்பை முன்னிருக்குமிடத்தில் வைக்கச்சொன்னார் அப்படியே அதைவைத்தேன் உடனே மயிலின் ஆட்டம்நின்றுவிட்டது பின்பு நான் மற்றசாமான்களைப் பார்க்கும்போது இந்தமேலானசெடிகளும் நாராய் பாஜிபந்து புஜகீர்த்தி முதலியஆபரணங்களுமிருந்தது இவைகளுக்கெல்லாம்மத்தியில்பம்பளிமாசுப்பழத்தினவ்வளவுபருமன் தங்கத்தினாற்செய்த டப்பியொன்றிருந்தது அதைப்பார்த்து

நான் இதிலிருப்பதென்னவென்று சவுதாகரைக்கேட்டேன் அதற்கவர் இந்தடப்பியிலொரு ரத்னமிருக்குதென்று சொன்னார் அந்தரத்தினத்தை நான்பார்க்கவேண்டுமென்கிற அபேக்ஷையாய் அந்தடப்பியையெடுத்துத் திறந்துபார்த்தேன் அதனுள் மிருதுவாகியபஞ்சுகளை நிறைத்திருந்தது அந்தப்பஞ்சை என்கையினுற்றொட்டெடுக்கையில் அந்தரத்தினம அநுவளவுதெரிந்தது அதனுடைய பிரகாசத்தினுல் அந்தமண்டபமும் அவ்விடத்திலுள்ளசாமான்களும் அதினுடையநிறம்மாறி எல்லாம் சிவப்பாகவேயிருந்தது அந்தப்பஞ்சுமுழுமையு மெடுத்துப்பார்க்கையில் அந்தரத்தினத்தினொளியை என்னிரண்டுகண்களாற் கண்டவுடனே இதற்குநிகராகநாமெதைச் சொல்லலாமென்றெண்ணி சித்திரப்பதுமைபோல் நின்று அந்தடப்பியை மூடியென்கையிலெடுத்துக்கொண்டு அடங்காமகிழ்ச்சியடைந்து அந்த சவுதாகரைக்கட்டித்தழுவிஎனக்குத்தோஸ்தியாகியசவுதாகரே இந்தப்பூலோகத்திலுள்ளவர்கள் இப்பேர்ப்பட்ட அற்புதவினேதமாகிய சாமான்களையும் இரத்தினத்தையுங்காண்பிப்பார்களாவென்று அவரைப்புகழ்ந்து நாங்கள் முன்னிருந்த நாற்காலியிலுட்கார்ந்து அவருக்கு விருந்துசெய்து அவர்கொண்டுவந்துவைத்த சாமான்களுக்கும் அந்த இரத்தினத்திற்கு அதன்விலையைத்திற்குஇரண்டுபங்கு ஜாஸ்தியாகப்பொருள்கொடுத்ததும் முதலியமரியாதைகளுஞ்செய்து விடைகொடுத்தனுப்ப அவர் என்னுத்திரவுபெற்றுதன்தேசமாகிய முல்தானிநகரம் போய்ச்சேர்ந்தார்,

பின்பு நான் அந்தரத்தினத்தை எப்போதும் என்சமீபத்திலிருக்கும் கலுமந்தான்பெட்டியில்வைத்துப் பூட்டிக்கொண்டுமிகுந்தமேன்மையாகவைத்துப் பெருமைப்படுதல் நமக்கு நிகரானவர் ஒருவருமில்லையென்று அதிககர்வத்தோடிருந்தேன் அதெப்படியென்றால் அந்தஇரத்தினத்தைப்பெருக்க மஜலீசாகக்கூட்டங்கூடியிருக்கும்போதெடுத்து சகலருக்குங்காண்பித்து இந்தரத்தினத்துக்குச் சரியானஇரத்தினத்தை நீங்களெவ்விடத்திலாவது கண்டதுண்டா அல்லதுகேட்டதுண்டாவென்றுகேட்பேன் அப்போதுபலபேர் நம ஒரேவார்த்தையாகஇதற்குச்சரியானஇரத்தினத்தைநாங்களொருதேசத்திலுங்கண்டதுமில்லைகேட்டதுமில்லையென்றுசொல்லிஎங்கிடத்திலிருந்தரத்தினத்தைமேன்மைபடுத்தி உன்னையும்பெருமைப்படுத்திப்புகழ்வார்கள் அதனுலே நான் அடங்காமகிழ்ச்சியடைந்திருப்பேன் இப்படிபேசகூட்டங்கூடும்வேளைகளிலெல்லாம் அந்தரத்தினத்தைக்காண்பித்துப் பெருமையடைந்திருக்கும்நாளையில் ஒருநாளைமசிலீலாகிய கூட்டம் அதிகமாயிருந்தது அந்தக்தருணத்தில நான் எப்போதும்போல இரத்தினத்தைக் கொண்டுவந்

சகலருக்குநான்காண்பித்தேன் எல்லோருமபாரமாகத் இப்படிப்பாராட்டத்
தினமெவ்வூரிலுமில்லையென்று என்னைப்பெருமைப் படுத்தியிருக்கும்
வேளையில் என்னுடைய ஒசீறுகளாகியமந்திரிகள அறுபத்துநான்குபே
ர்களில் மூப்பத்திரண்டாவதுமந்திரியாகிய அப்துல்கரீமென்பவரெழு
ந்து என்னெதிரில்வந்து என்னைப்பார்த்துச் சொல்லியதாவது கேளும்
பாத்துஷாவேதாங்கள் ஒருஇரத்தினத்தைவைத்துக்கொண்டுஇச்சபை
யிலுள்ளவர்களுக்கெல்லாம் காண்பிக்கிறீர்கள் அவர்களதைப்பார்த்துத
ங்களுடையமுகதாட்சண்ணியத்துக்காக இதைப்போன்றரத்தினமெங்
கள்தேசத்திலுங்கிடையாதென்று மிகுந்த மேன்மையாகச்சொல்லுகிறார்
கள்தங்களெதிரிலிப்படியாகச்சொல்லி இவர்களெழுந்துபோயிதங்களை
க்காணாதவிடத்தில் ஒருவருக்கொருவர் இவரொரு பாத்துஷாவாயி
ருந்தும் ஒருஇரத்தினத்தை மிகவும் மேன்மைப்படுத்திக்கொண்டிரு
க்கிறாரென்றுமிகுந்த இகழ்ச்சியாகப்பேசிக்கொள்ளுகிறார்கள் ஆகையா
ல்தாங்களிவ்விரத்தினத்தை மேன்மைப்படுத்துவதுசரியல்ல ஏனென்
றால் நிஷாபூரென்னும்பட்டணத்தில் ஒருசவுதாகர் ஒருநாய்வளர்க்கிறா
ர் அதன்கழுத்திலணிந்திருக்குந் தங்கவளையத்தில் ஒன்பது இரத்தின
த்தைப்பதிக்கவொருபதக்கங்கட்டியிருக்கிறதுஅந்தரத்தினங்களையுந்தா
ங்கள்வைத்திருக்கிற இரத்தினத்தையும் என்கண்களாற் பார்த்திருக்கி
றேன் தங்களிரத்தினத்திற்கும் அந்நாயின்கழுத்திலிருக்கும் ரத்தின
ம் மிகுந்தமேலாகவேயிருக்கும் அப்படியிருக்க தாங்கள் இவ்விதமாக
ப் புதுமைகாட்டுவது தகுதியாயில்லையென்று அப்துல்கரீமென்னும
மந்திரிசொல்லினார்.

கேளுங்கள் தோஸ்தியாகிய தர்வேசுகளே அப்போது நான்மனம்
பதைத்து இந்தமந்திரி மிகுந்த கர்வங்கொண்டுசொன்னானென்றுநினை
த்தேன் ஏனென்றால் இந்த நாமுநகரத்திலும் இன்னும்பலதேசங்களி
லும் இதற்கு மேலாகியஇரத்தினங்கிடையாதென்றுயாவரும்உண்மை
யாகத் தீர்மானித்திருக்க இவன் ஒருவர்த்தகனுடைய நாயின்கழுத்தில்
ஒன்பது இரத்தினமிருப்பதாகவும் அதுஉயர்த்தியென்றும் என் இரத்
தினந்தாழ்த்தியென்றும் இந்த மஜிலீசின் கூட்டத்திலுள்ள யாவரும்
என்னை யிகழ்ந்துபேசும்படியாக ஒரு பொய்யானவார்த்தை சொன்னா
னல்லவாவென்று நான் மிகுந்தகோபங்கொண்டு அந்த முப்பத்திரண்
டாவதுமந்திரியாகிய அப்துல்கரீமென்பவரைச் சிரச்சேதனை செய்யு
ம்படியாகக் கொலையாளிகளுக்குத் தாக்காவுகொடுத்தேன் அந்தக்கொலையாளி
கள் மந்திரியைக் கூட்டிக்கொண்டு கொலைக்களத்துக்குப் போனார்கள்

அப்போது முதலாவது மந்திரியாகிய கிருதுமக்தென்பவர் மிகுந்தபுத்
திசாலியும்கல்விகேள்விகளில் தேர்ந்தவருமாகையால் அவரெழுந்து தசு
லீமாத்துமுதலிய வந்தனஞ்செய்து என்னைப்பார்த்து இந்தச்சபையிலி
வர்தங்களையவமதித்து இப்பேர்க்கொற்ற வசனஞ்சொன்னதற்காகதா
ங்கள்கொடுத்த தண்டனை சரியானதுதான் ஆனையால் அந்தமந்திரிசம்
மைவிட்டு எங்கேதப்பிப்போகப்போகிறார் ஆதலால்அவரைக்கொல்லா
மல் சிலநாளைக்கு சிறைச்சாலையில்வைத்து அந்தமந்திரிசொன்ன வச
னத்தை நன்றாய்விசாரித்து அவர்சொன்னசொல் சரியாயிருந்தால் வி
டுதலைசெய்து விடலாம் அப்படிக்கு நிசமாயில்லாமல்பொய்யாயிருக்கு
மானால் தாங்கள் கொடுத்த தீர்ப்பின்படியே சிரசாக்கினைசெய்துவிடலா
மென்று வெகு அதபுடனே முதன்மந்திரிசொன்னார் அப்போது நான்
இதுவுந் தகுந்தயோசனை தானென்று கொலைக்களத்துக் காளனுப்பி
கொலைசெய்யப்போனவர்களை யழைத்துவரசொல்ல அப்படியே கொலை
யாளிகளும் மந்திரியுமாகவந்தார்கள் உடனே அந்தமந்திரியைச் சிறை
ச்சாலையில் வைக்கும்படியாகக் காவற்காரர்களுக்கு உத்தரவு கொடுத்
தேன் அப்படியே அவர்கள்போய் அப்துல் கரீமென்னு மந்திரியைச
சிறைச்சாலையில்வைத்துக் காவலுடனிருந்தார்கள்,

கேளுங்கள் தோஸ்தியான தர்வேசுகளே அந்தச்சிறைச்சாலைச்சா
லையிலிருக்கும் அப்துல்கரீமென்னும்மந்திரிக்கு ஆண்குழந்தையில்லா
மல் ஏழுவயசுடைய ஒருபெண்குழந்தையிருந்தது அந்தக்குழந்தையி
ன்அழகையும் சூரத்தையும் இன்னவிதமென்று சொல்லிமுடியாது அ
ப்படிப்பட்ட பெண்குழந்தை தெருவாசலில் விளையாடிக்கொண்டிருந்
தது அந்தமார்க்கத்தில் சில தின்பண்டங்களை விலைகூறிப்போனார்கள்
அதைவாங்கிக் கொடுக்கும்படியாய் அந்தக்குழந்தைபோய் தாயின்மடி
யைப்பிடித்து இழுத்து தெருவில் பலகாரம்விற்கிறார்கள் வாங்கிக்கொ
டுவாவென்று அழுதது அப்போது தாய் மகளையடித்து நீ நல்ல நசீப்
புள்ளவளாயிருந்தால் உன் தகப்பனுக்கேன் இப்பேர்ப்பட்ட தண்டனை
கிடைத்தது மேலும் நீ ஆண்பிள்ளையாய்ப்பிறந்தாலும் எப்படியாவது
தகப்பனை மீட்டுக்கொண்டுவருவாய் நீ கெட்டநசீப்புள்ளபெண்பிள்ளை
யாய்ப் பிறந்தபடியால் உன்தகப்பனைமீட்க வகையில்லாமற்போய்விட்
டதென்று மிகுந்த சலிப்பாகப்பேசி வாயில்வந்தபடி திட்டிக்கொண்டி
ருந்தாள்.

அப்போது அந்தப்பெண் கொஞ்சநேரம்அழுதுக்கொண்டிருந்துயோ
சனைசெய்து தாயிடம்வந்துகேட்கிறாள் என் தகப்பன் என்னதப்பிதஞ்
செய்தார் அதற்காகபாத்துஷா என்னதண்டனை செய்திருக்கிறார் அ
தை எனக்குச்சொல்லென்று உருக்கிக்கேட்டாள் உடனேதாயானவள்

தண்டனை நடந்தகாரியங்களை தன்மகளுக்குச்சொன்னாள் உடனே அந்
தப்பெண் தாயைப்பார்த்துச் சொல்லுகிறாள் இதக்காருமாதம் என்த
கப்பனை விடுதலைசெய்யும்படி திட்டஞ்செய்கிறேன்நான்பெண்ணாப்
பிறந்தேனென்று நீசலிக்கவேண்டாம் ஆனபடியால் அந்த நிஷாப்பூர்
தேசத்துக்குப்போய் என்தகப்பன்சொன்ன அடையாளத்தை இந்தபா
த்ஷாவுக்குக் காண்பித்து என்தகப்பனை ஆறுமாசத்திற்குள்ளாக மீ
ட்டுக்கொள்ளுகிறேன் ஆனபடியால் எனக்குவிடைகொடுத்தனுப்பெ
ன்று தன்தாயைக்கேட்டாள் அப்போது அந்தப் பெண்குழந்தையின்
தாயார்சொல்லுவாள் மகளே நீ பெண்குழந்தை அதிலும்சிறுவயதாயி
ருக்கிறாய் உன்னை என்னவிதமாக அனுப்பிவிட்டு நான் தனியேயிருப்
பேன் ஆகிலும் நமது நசீபுபோலேயாகுது நீ போகவேண்டாமென்று
மிகவுஞ்சொல்லித்தடுத்தாள் அதற்கு அப்பெண்குழந்தை கேளாமல்
ஒரேபிடிவாதமாய் நான்போய்வருகிறேனென்றுசொன்னாள் அப்போ
து தாயானவள்யோசித்து புருஷனையுமிழந்து இப்பெண்ணையு மிழக்கு
ம்படிபாச்சுது ஆகிலும் தகப்பனில்லாத பிள்ளையிருந்தால் என்னசுக
மிருக்குதென்று பலவிதமாயெண்ணி அல்லாகுக்த ஆலாவுடையகற்ப
னைப்படிமுடியுமென்று சிலபொருள்களும் கல்லிழைத்தநகைகளும்ம
கைகையிற்கொடுத்துபோய்வரும்படிஉத்தரவுசெய்தாள் அப்போது அப்
பெண்குழந்தை ஆண்பிள்ளை யுடுப்புபோட்டுதன்வீட்டைவிட்டுவெளி
யில்வந்து இந்நகரத்தைக்கடந்து போகும்போது சிலசவுதாகர்கள் நிஷா
பூருக்குப்போனார்கள் அவர்களோடுசேர்ந்து நாலுநாள்பத்துநாள்சென்
று நிஷாபூருக்குப்போய்ச்சேர்ந்தார்கள் அந்தநேரத்தில் சவுதாகர்களை
விட்டுப்பிரிந்து தெருக்களிற்போய்வருகிற மனிதர்களைப்பார்த்து இந்த
ஊரில் நாயின்கழுத்தில் இரத்தினம்போட்டு அனதவளர்க்கிற சவுதாக
ர்வீடு எங்கேயிருக்குதுதென்று ஆண்வேஷங்கொண்டபெண்குழந்தை
கேட்க அவ்வூரிலுள்ளவர் அந்தவீட்டைக்காண்பித்தார்கள்.

அப்போது அந்தவீட்டுக்குள் அந்தக்குழந்தைபோய் ஏழுகட்டு
வாசலுங்கடந்து பார்க்கையில் அங்கே இரத்தினக்கம்பளி முதலியது
ம்விரித்து அதில் தலையணை முதலியதும்போட்டு முன்மந்திரிசொன்ன
சவுதாகர் சாய்ந்துக்கொண்டிருக்கிறார் அவர்முன்னால்ஒரு தங்கநாற்கா
லியின்மேல் மெத்தைமுதலியதும் விரித்து அதன்மேல்ஒருநாயிருக்கி
றது அதின்கழுத்தில் ஒன்பது இரத்தினம்பதித்ததங்கவார் பதக்கமுந்
தூக்கி கட்டியிருக்கிறது இசன்றித் தங்கங்கொலுசொன்றுகழுத்துவா
ரில்மாட்டி நாற்காலியின்காலில சங்கிலிபூட்டி படுத்துக் கொண்டிருக்கி
றது அந்தசவுதாகருக்கு பின்புறத்தில் ஒரு இருப்புக்கூண்டில் கம்பி
கள்நாட்டி அதற்குள் இரண்டுமனிதனை அடைத்திருக்கிறதுஇதுவே

யெல்லாம் அந்தக்குழந்தைபார்த்து சவுதாகரினருகிற்போய்அவருக்குச் சலாஞ்சொல்ல அதற்கு அவர் பிரத்திசொல்லி அந்தப்பிள்ளையைஅதிகவிருப்பமாய்ப்பார்த்தார் அது ஏனென்றால் பெண்பிள்ளை ஆண்பிள்ளையாயிருக்கிறதும் அதிக அழகும்வசீகரமாயிருப்பதாலும் சலாஞ்சொன்ன சங்கையையும் பார்த்து அந்தப்பிள்ளைபேரில் அந்தச்சவுதாகர் சந்தோஷமாகி அருகிலிருக்கும்படிஉத்தரவுசெய்தார் அப்படியே அக்குழந்தையிருக்கஅதின்முகத்தைப்பார்த்து சவுதாகர்சொல்லுகிறார் பாவா நீயார் எங்கேயிருந்துவந்தவர் என்றுகேட்டார் அப்போதந்தப்பிள்ளைசொல்லும் பாவா நானிருந்தது றாமுநகரத்தில்இன்ன சவதாகருடைய மகன் நான்புதிதாவர்த்தகஞ்செய்ப காடி இந்தவூருக்குவந்தேன் இங்குள்ளபேர்கள்சொன்னார்கள் தங்கள்கையாலே போணிபண்ணினால் அதிபறக்கத்துண்டாகுமென்று சொன்னார்கள் அதனால் தங்களிடம்வந்தேனென்று அப்பிள்ளைசொன்னவுடன்நம்மிடத்திலிருக்கிற வியாபாரம் எடும்பார்க்கலாமென்றார் அப்போது தன்னிடத்தில் அடக்கமாயிருந்தகல்வழுத்திய நகையை எடுத்துக்காண்பிக்க அதினுடைய விலையையுங்கேட்டு கணக்கெழுதி இவ்வளவுதொகையாச்சுதென்று அந்தபிள்ளைக்குச்சொல்லி கணக்கில்வரவு வைத்துதனதுகலமந்தான்பெட்டியில் வைத்துப் பூட்டியிருக்கும்போது சவுதாகருக்கு தீனிமுதலிய ஓசீபனம்வந்தது இந்தக்குழந்தையைக்கூடக்கூட்டிப்பசியாறி இருவருமிந்த ஓசீபனமுதலிய பலகாரமும் ஒன்றுப்பிரட்டி அந்தநாய்முன்வைக்க அதுநின்றுகழித்ததை இரண்டுபங்காய்ப்பிரித்து அந்தவிரும்புக்கூண்டிலிருக்கிற இரண்டுமனிதருக்கும்சவுதாகர்கொடுத்தார்அதுகளையும் இந்தப்பிள்ளை பார்த்துக்கொண்டிருந்தது அப்போதந்தசவுதாகரெண்ணினார் தனக்குப் பிள்ளையில்லாதபடியால் இந்தபிள்ளையை எந்தவிதத்திலாவது வைத்துக்கொள்ளவேண்டுமென்றுஎண்ணங்கொண்டு அதிக முகப்பிரியமாய் வைக்காதவிடங்களில் வைத்துஅதிககிருபையோடுபேசி பாவாஎன்னிடத்திலிருமென்றுசொல்லி நாளுக்குநாள் அதிகபிரியமாய் வைத்திருக்கும்போது அந்தப்பிள்ளை அந்தசவுதாகருக்கு வாஜிப்பாகவும் ஒழுக்கமாகவும் நாணயத்துடனே நாளுக்குநாள் பிரியப்படும்படியாயிருந்து வியாபாரமுதலியசெய் காரியங்களும் செய்துக்கொண்டிருக்கிறதை அந்தச்சவுதாகர்பார்த்து இரம்பவும் சந்தோஷமாகி நமக்குப்பிள்ளையில்லாம லிருந்ததற்கு அல்லாஹுத்தஆலா இந்தப்பிள்ளையைநமக்களித்தானென்று அதிகமகிழ்ச்சி கொண்டு தம்முடைய ஆஸ்திபாஸ்தி கொடுக்கல் வாங்கலமுதலிய சகலமும்அந்தப்பிள்ளைவசமாக ஒப்பித்துவிட்டு அந்தப்பிள்ளைசொற்படியேகேட்டுக்கொண்டிருந்தார்.

அப்படியிருக்கிறநாளையில் இந்தப்பிள்ளை யோசித்து நாமிவடத்
திலே இவ்வளவுசுகமாயிருக்கிறோமே அவடத்திலேநம்மைப்பெற்றதாய்
தந்தை என்ன அவஸ்தைப்படுகிறார்களோ அஃதொன்றுந்தெரியவில்லை
ஆகையாலெங்கவிசமும் இந்தசவுதாகரைக்கூட்டிக்கொண்டு ஊருக்கு
ப்போகவேண்டுமென்கிறஎண்ணங்கொண்டிருந்தான் அதிகவிசனமாயி
ருப்பதை அந்தச்சவுதாகர்கண்டு அந்தப்பிள்ளையைப்பார்த்துச்சொல்
லுவார் பாவா உனக்கு என்னகுறைவிருக்கிறது எப்போதும்போலேச
ந்தோஷமாயிராமல் இப்போது அதிகவ்யாகூலமாயிருக்கிறாய் அதையெ
னக்குச்சொல்லவேண்டுமென்றுகேட்டார் அப்போதந்தப்பிள்ளைசொல்
லும் பாவா நானுங்களிடம்வந்துசேர்ந்துமிகவுஞ்சுகம்பெற்றேன்தங்க
ளுடைய கிருபா பறக்கத்தினால் எனக்குயாதேனுங்குறையொன்றில்லை
ஆனால் குறையொன்றிருக்கிறது அதைச்சொல்லுகிறேன்கேளுங்கள்நா
ம்புதிதாக இந்தவூருக்கு வர்த்தகஞ்செய்கிறதற்காக தாய்தந்தையிடத்
தில் ஆறுமாதத்திறகுள்வந்து சேருகிறேனென்றுசொல்லி அவர்களிட
த்தில் விடைபெற்றுஇவிடம் வந்துசேர்ந்தேன் இப்போதுநான் வந்து
ஆறுமாதமாகப்போகிறது அவர்கள் நான் வருகிறவழியைப்பார்த்து எ
ன்னைக்காணமல்பலபலயெண்ணங்களை யெண்ணி அவர்களென்னதுய
ரப்படுகிறார்களோ எனக்குத்தெரியவில்லை அதுவுமன்றியிலெனக்கு
அவர்கள்பேரில் மிகவுந்தேட்டமாக இருக்கின்றது அப்படியிருந்தா
லும் தங்களை விட்டு அரைநிமிஷ நேரமாவது பிரிந்திருக்கவெனக்குமன
மில்லாததால் இந்த இரண்டுவகைகளையும் நினைத்துவியாகூலப்பட்டி
ருக்கிறேனேயொழிய வேறேயெனக்கு யாதொருகுறைவுமில்லையென்று
அந்தப்பிள்ளைசொல்ல அப்போது காசாசக்பரசென்னும்சவுதாகர்சொ
ல்லுவார்.

கேளும் பாவா இதற்காகவா நீகவலைப்படுகிறாய் அதற்குநீவிசன
ப்படவேண்டாம் நாமெல்லோரும் உன் தாய்தகப்பனிருக்கிற ஊரு
க்குப்போய் அவர்களைக்கண்டு வருவோமென்றார் அதற்கந்தப்பிள்ளை
மிகவும் மகிழ்ச்சியினாற் சந்தோஷமென்னும் ஆனந்தக்கடலில்மூழ்கின
வர்போலிருக்க அந்தக்ஷணமே அந்தக்காசாசக்பரஸ்என்னும்வர்த்தர்
இந்தப்பிள்ளையினூருக்குப்பிரயாணமாகிறதற்காக யெண்ணங்கொண்
டு வீடுவாசல் தோட்டம் துறவுகள் ரொக்கரோசனை முதலிய சகலத்
துக்கும் ஒரு ஏஜெண்டை யேற்படுத்தி இருக்கும்படியாய்த்திட்டஞ்செ
ய்து தம்முடைய இரதகஜதுரகபதாதி என்னு நால்வகைச்சேனையோ
டு தனக்கொரு பல்லக்கும் அந்தப்பிள்ளைக்கு ஒரு இரதமும் இன்னந்
தம்மைச்சேர்ந்தஇன்பந்துஜனங்களில் அவரவர்க்குத் தகுந்தவாகனங்
களோடும் இருப்புக்கூண்டிலிருக்கிற இரண்டுசகோதரர்களையும்ஒருவண்

டியின்பேரிலும் சக்கென்கிற ஈசயையும் ஒருபல்லக்கிலேற்றிக்கொண்டு
பேரிகைமுதலிய ஆடம்பரத்துடனே அங்ககரைவிட்டுப்புறப்பட்டுகா
டுவனம் வனாந்திரம்மலே குகைஆறு குளங்கள் மைதானங்கள் இதுக
ளெல்லாங்கடந்து தங்கவேண்டிய இடங்களிற்றங்கி பிரயாணப்பட்டு
குஸதுான்தீனென்றும் இஸ்தம்பூலென்றும் பெயர்விளங்கிய றாமுககக
ரத்தின் சமீபத்தில் ஒருமைதானத்தில்கடற்கரையோரமாக கூடாரமு
தலிய டேரா அடித்துசகல தளத்துடனே அவரவர்களிறக்கும்படியான
மரியாதையெவ்விதமோ அவ்விதமாயிறங்கியிருந்தார்கள் அந்தஊர்காக்
கிர தலேயாரி முதலிய காவற்காரர்கள் இந்தமைதானத்தில்கூடாரமுத
லிய படைகளிறங்கி யிருக்கிற பெருங்கூட்டத்தைக்கண்டு அவர்களோ
டோடியும்வந்து என்னிடத்திற்சொன்னார்கள் கேளுங்கள் தோஸ்தியா
கிய தர்வேசுகளே என்று இந்த நான்குபக்கீர்களேயும்பார்த்துஆசாத்ப
குத்பாத்துஷா பின்னுஞ்சொல்லுகிறார்,

கேளுங்கள்தோஸ்திகளேஎனது ஒசீர்களறுபத்துநாலுபேரில்ஒரு
மந்திரியையழைத்து அந்தவெளியில்கூடாரமடித்துசகல தளத்துடனே
இறங்கியிருக்கிறார்களாம அவரிடத்திற்நீர்போய்சண்டைக்குவந்தவ
ர்களா அல்லது வர்த்தகத்துக்காக வந்தவர்களா மற்றேதுகாரியத்திக்கு
வந்தார்களென்று விசாரித்துவாவென்றனுப்ப அந்தமந்திரியெழுந்துஅ
வர்களிறங்கிருக்கும் கூடாரத்திற்குப்போய்அதற்குளசமாளுகியசவுகா
கரைக்கண்டுவந்தசங்கதிகளையெல்லாம்விசாரித்து என்னிடத்தில் வந்
துசொன்னார் அதென்னவென்றால் அவர்கள்சண்டை முதலியத
ற்கும் வந்தவர்களல்ல வர்த்தகர்களாயும் வழிப்போக்கர்களாயும்
இருக்கிறார்கள் ஆனால் அங்கேயொரு அனியாயம் நடந்துக்கொ
ண்டிருக்கின்றது அவர்களுடைய படைகள்முதலானபெருமைகளை எ
ன்னுற்செல்லமுடியாது என்று மந்திரிசொல்ல அப்போதுமந்திரியை
ப்பார்த்துக்கேட்டேன் வந்து இறங்கியிருக்கிறபேர்கள்அதிகபெருமை
யாகவும் ஒருஅனியாயமாகவும் நடக்கிறார்களென்றுமந்திரியைக்கேட்க
அவர்சொன்னார் கேளும்பாத்துஷா சிரோமணியாகிய தவுலத்தேதங்க
ளுடைய உத்திரவின்படி அவர்களிறங்கி யிருக்குமிடம் போனேன்அ
ங்கேயிருக்கிறவிதம் எப்படியென்றால் ஒரு மயில தலேவிஸ்தீரணத்து
க்கு ஆனை குதிரை ஒட்டை முதலியகோவேறுகழுதைசூழ காலாள்கள்
முதலிய நால்வகைச்சேனையும் அணியாய்ரவுணுப் சாகைசெய் திருக்கி
றார்கள் மத்தியில் அனேகம் பச்சை நீலம்செகப்பு மஞ்சள் வெள்ளைமு

தலாகிய பஞ்ச வர்ணங்களால்கூடாரமுதலிய டோரக்க ளடித்திருக்கிறது அந்தக்கூடாரங்களுக்குத் தங்கத்தினாலே கலசங்கள்வைத்து அதின்முகப்பில் பலவர்ணமாகிய கொடிகள்கட்டியிருக்கிறது இதுகளுக்கெல்லாமத்தியில் ஒருகூடாரமடித்திருக்கிறது அந்தக் கூடாரத்தினுடைய வர்ணிப்புகளைச் சொல்லவேணுமானால் ஆயிரநாவைப்படைத்த ஆதிசேடனாலுஞ்சொல்லிமுடியாது ஆயினும்என் கண்ணிற்கண்டதைச்சொல்லுகிறேன் அதைக்கேளுமென்று மந்திரிசொன்னார் அந்தக்கூடாரமாகிறது தங்கத்தினாலே ஒருகால்நடுவில் நிறுத்திபீதாம்பரம்மஹம்மல் உயர்ந்த காஷ்மீர்களால் தைத்து பட்டுநூற்களால் கயிறுகள்கோர்த்துஅனேக ஐம்பொன்பொன்களாற்சுற்றுக்கால்கள்நிறுத்தி கூடாரமடித்து அதுசுற்றிலும் ஒன்பதவித நவரத்தினங்களைக்கோர்வையிட்டுசாலர்தூக்கி நான்குபக்கங்களிலும் பலகணிவாசல் விட்டுசென்னல்முதலியதும் செய்த சகலாத்து பாதவில் வைத்துக்கட்டிக் நடுக்கால்நுனியில்தங்கத்தகட்டில் விதவிதமாகிய இரத்தினங்களைப்பதித்து சிகரம்வைத்து நாலுவாசலுக்கும் நாலுகொடிகள் நாட்டியிருக்கிறது அந்தக்கொடிகளின் பிரகாசமின்னதென்று சொல்லிமுடியாது.

இவ்விதமாகிய கூடாரத்திற்குள்ளே இரத்தினக்கம்பளிகள் விரித்து திண்டுதிமாசு ஒலுவுத்தலைகளை முதலியதுகளெல்லாம் போட்டு மேசை நாற்காலிமுதலியதும் வைத்திருக்கிறது அதற்குள் குளோப்புலஸ்தர் வால்ஷேட்டு முதலிய லாந்தர்கள் அனேகந்தூக்கி யிருக்கிறது அதுகள் யாவற்றிற்கும் எசமானாகிய சவுதாகர் நாற்காலிமீதுட்கார்ந்திருக்கிறார் அவர்பேர் ககாசக்பாசென்றுசொல்லுகிறார்கள் அவருடைய பிள்ளையொன்றுசமீபத்திலிருக்கின்றது அந்தப்பிள்ளையினுடைய அழகு புத்தி இதுகளை இன்னவிதமென்றுசொல்லிமுடியாது இவர்களெதிரில் தங்கத்தினாற்செய்து கெம்புமாணிக்கங்களழுத்தியகட்டிலொன்றுபோட்டு அதின்மேல் விநோதமாகிய மெத்தைவிரித்து அம்மெத்தைமீதில் நாயொன்றுபடுத்திருக்கிறது அதனுடையகழுத்தில் தங்கத்தகட்டினாற்செய்தவாரில் ஒன்பதுஇரத்தினங்களு மழுத்தியிருக்கிறது அந்தஇரத்தினங்களுடைய பிரகாசம்மேற்சொல்லிய பிரகாசங்களையெல்லாமழுத்தி ஐந்துவிதமாய்ச் சொலித்துக்கொண்டிருக்கிறவாரில் ஒருபதக்கமொன்று தூக்கியிருக்கிறது அதிற் பதினொருமுத்துபெரியசுண்டைக்காய்பிரமாணம் சுற்றிலும் தொங்குகிறது இவ்விதமாகிய தங்கவாரில்தங்கத்தினாலேகொலுசென்னும் சங்கிலிசெய்துமாட்டி கட்டிலின்காலில் அந்தநாயைக்கட்டியிருக்கிறது இதுவல்லாமலிவர்களுக்குப்பின்னாலொருஇந

ப்பினாலே கூண்டுசெய்து அந்தக்கூண்டிற்குள்ளே இரண்டுமனிதர்களை யடைத்திருக்கிறது இதுகளையெல்லாம் என்கண்ணினாற்பார்த்து அந்த சவுதாகனுக்குச்சலாம்சொன்னேன் அதற்குப் பிரதிசொல்லி ஒருநாற் காலியிலுட்காரச்சொன்னார் அதிலுட்கார்ந்து அவருடனேசிலவசனங்க ள்பேசிக்கொண்டிருக்கிறபோது அறுசுவையதார்த்தத்தோடு ஒசிவன மும் மிதுர்வாகியபலகாரங்களும்இரசக்கியான முள்ளகனிவர்க்கங்களு ம் இன்னவிதமென்று சொல்லிமுடியாததுகளைச் சிலபண்டாரிகளென் னும் சமையற்காரர் கொண்டுவந்துவைத்தார்கள் அப்போது அந்தசவு தாகரும் அவர்பிள்ளையும் நானும்பசியாரி மிஞ்சினசோறுகறிபலகாரம் இவைகளை மேற்சொல்லிய நாய்க்குவைத்தார்கள் அந்தநாய்தின்றமட்டு ந் தின்றுமிஞ்சின எச்சிற்பதார்த்தக்கை இரண்டுபங்கு போட்டு இரு ம்புக்கூண்டிலிருக்கிற மனிதர்களுக்கொடுத்தார்.

அவர்களதைவாங்கி மிகுந்த பிரியத்தோடு புசித்தார்கள் அந்தம னிதர்களைப்பார்த்தால் இசுலாமானவர்களாகவே யிருந்தது இவைகளை யெல்லாம் நான்பார்த்துமிகவும் மகிழ்ச்சியடைந் திருந்தேன் அந்தநாய் தின்ற எச்சிலே மனிதர்களுக்குக்கொடுக்கவே அவர்கள்மேலே மிகவும் எனக்கு வெறுப்புண்டாகி இவரிப்படிச்செய்வாரென்று முன்னமே தெ ரிந்திருந்தால் நாம்அவர்களுடனேபசியாரப்போகமாட்டோமேயென்று நினைத்து அந்தசவுதாகரிடத்தில் விடைபெற்று உடனே வந்துவிட்டே னென்று மந்திரிசொன்னார்.

கேளுங்கள் தோஸ்தியாகிய தர்வேசுகளென்னும் பக்கிரிகளே அ ந்தமந்திரிசொன்ன சொல்லக்கேட்டவுடனே எனக்கு அடக்கமுடியா தகோபம்வந்ததுஏனென்றால் அந்தசவுதாகர் இவர்கள்தின்கிறஎச்சிலே நாய்க்குவைத்து நாய்தின்கிற எச்சிலே மனிதர்களுக்குவைத்தானென்கி ற சொல்லைக்கேட்டவுடனே என்னிரண்டு கண்ணிலும்பொரிபறக்கும் படியாய்க் கோபமவந்து சில அர்க்கார்களை அனுப்பி அந்தத்தலத்துக் கெல்லாம் எசமானாகிய காசாசக்பரசையும் அவர்பிள்ளையையும்அந்த நாயையும் அந்த இரும்புக்கூண்டிலிருக்கிற மனிதனையும் என்சமு கத்திற் கொண்டுவரும்படியாக ஆளனுப்ப அதுபோலவர்கள் என்சமு கத்துக்கொண்டுவந்து சேர்த்தார்கள் அப்போதுநான்அந்தசவுதாகரை ப்பார்த்து ஓ மனிதனே நாய்தின்ற எச்சிற்சோறுகறி முதலியவற்றை மனிதனுக்குக்கொடுத்துண்டோவென்று கேட்டேன்அவர்கொடுத்தது மெய்தானென்றார் அதைக்கேட்டவுடனே என்காதில்மழுவைக்காச்சி விட்டதுபோ லெனக்குக்கோபம்வந்து ஒருவருஞ்செய்யாதஇப்போர்க் கொற்ற வேலைசெய்த பாவியை ஓரேவெட்டாய்வெட்டிச் சிரச்சேதஞ்

செய்கிறதே சரியென்று தீர்மானித்து கொலைபாவிகளுக்குத்திரவு செய்தேன் அந்தச்சமயத்தில் முன்சொன்மந்திரியைக் கொலைசெய்யச்சொல்ல அக்கத்தடுத்துச் சிறைச்சாலையில் வைக்கும்படியாகச் சொன்ன புத்திமானாகிய கிரதுமந்தென்னும் முதன்மந்திரி எழுந்துதசலீம்வந்தனஞ்செய்து உட்கார்ந்து என்னைப்பார்த்து கேளுங்கல் சக்கிரவர்த்திகளுக்கெல்லாம் சக்கிரவர்த்திபாகிபாத்துஷா சிரோமணியே என்றுபுகழ்ந்து அந்தசவுதாகரை வெட்டவேண்டாம் அவன்செய்ததப்பிதத்திற்குந்தாங்கள் கொடுத்த தீர்ப்புசரிதான் ஆனால் அவனை நாம் வெட்டிப்போடுவதிற்பிசகில்லை இன்னமொருகாரியமிருக்கிறது அதென்னவென்றாலவன் அந்தஇரண்டுமனிதரையும் என்னகாரியத்திற்காகவோஇரும்புக் கூண்டிலடைத்துநாய்தின்று மீந்த ஒசீவனத்தைக்கொடுத்துக்கொண்டுவந்தான் அதனுடைய தப்புஇன்னவிதமென்றுநமக்குத்தெரியவில்லையே ஆனபடியால் அவன் வாய்மொழியினால் அந்த விர்த்தாந்தைக்கேட்டுபின்னாலவனை வெட்டிப்போடலாமென்றுசொன்னார்.

அதுகேட்டநான் இதுவும் ஒருகாரியற்கு நல்லதொன்றுயோசனை செய்து சவுதாகரென்னும் சக்பாசைப்பார்த்து ஓ சவுதாகரே நீயென்ன காரியத்திற்காக இசுலாமான இரண்டுமனிதரை இரும்புக்கூட்டிலடைத்து நாய்தின்று மீந்தசாதத்தை அவர்களுக்குக் கொடுத்துவந்தாய் அந்தவிபரத்தைச்சொல்லுமென்றுகேட்டேன் அப்போவதவரென்னைப்பார்த்து நான்செய்த தப்பிதத்திற்காகதாங்களென்னைவெட்டிவிடும்படியாக உத்திரவுகொடுத்தீர்களே அதுபோலவேவெட்டிப்போடுவீரோயொழிய அனுவளவாவதுதாங்களென்மீது இரக்கம்வைக்கவேண்டியதில்லை வேறேயொருகாரியமும் நான்இன்னவிதமென்றுசொல்ல மாட்டேனென்று ஓரேபிடிவாதமாய்ச்சொன்னார் அப்போதுநான்அந்தவர்த்தகரைப்பார்த்து இவ்விசனத்தை நீர்சொல்லத்தான் வேண்டுமென்று மிகுந்தபிரியத்துடனே கேட்டேன் அதற்கவர் என்முகத்தைப்பார்த்து மழைமாரிசொரிந்ததுபோல் தாரைதாரையாய்கண்ணீர்விட்டது புலம்பிமிகவும்வருத்தப்பட்டுசொல்லுகிறார்,

கேளுங்கள் தவுலத்தே இராசஇராசாக்களுக்கெல்லாம் நாயகமாகிய பாத்துஷாசிரோமணியே தாங்கள் என்னைப்பார்த்து அந்த காரியத்தைக் கேழ்க்கிறதைப்பார்க்கிலும் என்னைவெட்டிப் போடுவதே நலமாயிருக்கின்றதென்று ஓரே பிடிவாதமாய்ச் சாதித்தார் கேளுங்கள் தர்வேசுகளே அப்போது நான் இந்த இரும்புக்கூண்

டிலிருக்கும்மனிதர்களாலே இவர்மிகவும் வருத்தப்பட்டவர் போல்கா
ணப்படுது அதனாலேதானிவர் இவ்விதமாகச்சொல்லுகிறாரென்றெண்
ணி அந்தச்சவுதாகருக்கு ஆறுதல்தேறுதல் முதலிய சமாதானஞ்சொ
ல்லி சவுதாகரே நீர்மனதிலயாதொரு வருத்தங்களையும் குறைவையும்
எண்ணாமல் நடந்தசங்கதிகளை விபரமாகச் சொல்லவேண்டும்உம்மா
ய்ப்பிறப்பைக்கேட்கஎனக்குமிகுந்தஆவலாயிருக்குதென்றுசொன்னே
ன் அதைக்கேட்ட அந்தச்சவுதாகர் மனம்புழுங்கிமிகுந்த வருத்தத்து
டனே சொல்லத்தொடங்கினார்,

கேளுங்கள் பாத்துஷாசிரோன்மணியே தங்கள் என்னை இவ்வ
ளவுபிரியத்துடனேவருந்திக்கேட்கிறபடியினாலேஎன்னுடையஅகவாலே
ஒருபோக்காகச் சொல்லுகிறேன்தாங்கள் கேட்கவேணுமென்றுசொன்
னார்நானிருந்தவூர்நிஷாபூர்என்னுடைதகப்பனார்பேர் அப்துல்சையதுச
வுதாகர் என்னுடையபேர் ஹஜா அகுமது இப்போதுநானிருக்கும் நக
ரத்தையாளுகின்ற பாதுஷாகொடுத்தபேர் காஜாசக்பாஸ் இந்த இரும்பு
கூண்டிலிருக்கிற இரண்டுபேர்களும் என்னுடையதமயன்மார்கள்தான்
ஆனால் என்னுடைய பாவாவ கியதகப்பன்இவர்களிரண்டுபேர்களுடை
ய தாயாரை முதலில் நிக்காகுவென்னுங் கலியாணஞ் செய்திருந்தார்
அப்போது இவர்களிரண்டுபேர்களும் பிறந்திருக்கும்போதுஇவர்கள்
தாயாகிய என்னுடைய பெரியதாயார் அல்லாவுடைய கலாவின்கற்பனை
யால்இறந்துபோனார்கள பின்புகொஞ்சநாளைக்குப்பிறகு என்னுடைய
பாவா என்தாயாரைக் கலியாணஞ்செய்தார்கள அப்போது இவர்க ளிர
ண்டுபேரையும்என்தாயாரவர்கள்இரண்டுகண்போலப் பிரியத்துடனே
வளர்த்தார்கள் அதன்பின்பு நான்பிறந்தேன் பிறந்த மறுவருஷம்என்
தாயாரும்மவுத்தாகிப்போனார்கள் அதற்குப்பின் எங்கள்மூவருடையத
கப்பன்வேறேகலியாணம்பண்ணாமல் எங்கள்மூவரையும்வைத்துவளா
த்துக்கொண்டிருந்தார் அப்போது இவர்களிரண்டுபேரும் பத்துபனி
ரண்டு வயதாயிருப்பார்கள் நான் ஐந்துவயது சிறுபிள்ளையாயிருந்தே
ன் அந்தநாளையில எங்களுடைய பாவா பூலோகத்தைவிட்டு சுவர்க்க
லோகத்தைச்சேரும்படியான சக்கராத்துவேளையானது அந்தவேளையி
ல் இந்தகூண்டிலிருக்கிற இரண்டுபேரையும் அருகிலழைத்து வேண
டிய புத்திமதிகளைச்சொல்லி என்னைப்பிடித்து இவர்கள்கையில்கொடு
த்துச் சொன்னார் பாவா என்னுடைய ஆஸ்திகள் கணக்கிலடங்காததிர
வியங்களும் வீடுவாசல் தோட்டம் துறவுகளும் அனேகமிருக்கிறது
அவைகளை நீங்கள் பாதுகாத்து தம்பியை உங்களுயிர்போல் வளர்த்து
தன்புத்திக்குவந்ததின்பிறகு ஆஸ்திமுதலிய பூஸ்திதியெல்லாம் மூ

ன்றுபங்குசெய்து ஆளுக்கொருபங்கு எடுத்துக்கொண்டு ஒருவர்சொன்னவார்த்தையை யொருவர் தட்டாமலிருங்களென்று இன்னும் அனேகபுத்திமதிகளைச் சொல்லிஜீவியத்தென்னும் உபதேசங்களுஞ் சொன்னார்கள் அப்போது இவர்கள் மிகவும் வணக்கத்துடனே தாங்கள் சொன்னதுபோல் நடந்துகொள்ளுகிறோமென்றுமுகப்பிரீதியானவார்த்தைசொன்னார்கள்

பின்பு எங்களுடையபாவா இறந்து விட்டார்கள் அவரை நாங்களும் எங்களினத்தாரும் லெப்பைசமாத்துகளுங்கூடி நல்லடக்கஞ்செய்து நாற்பதுநாள்வரையிலும் செய்யவேண்டியசக்கம் பாததிகாசடங்குகள் செய்யுமுறைமைபோற்செய்து முடிந்தபின்பிறகு சிலநாளைக்குப்பின்பு இரண்டுபேர்களும் என்னைமிகவும் கனக்குறைச்சலாகப்பாதகஞ்செயத்துணிந்தார் அஃதென்னவென்றால இவர்களுக்கு என்னை கிசுமததென்னும பணியிடைச்செய்யசொன்னார்கள் அதுபோலசெய்துக்கொண்டுவந்தேன் எனக்கு வேளை வேளைக்கு நல்லஜீவனமென்னுஞ்சோருகறியும் உமொனமுதலியதுங் கொடுப்பார்கள் இல்லாமற் போனால் நான்பட்டினியாகவே இருக்கிறது இதுவல்லாமல் என்னையடிக்கிறது பேசுகிறது ஏசுகிறது இவ்வித வருத்தங்களெல்லாம் இவர்கள்செய்து அனியாயபடுத்தினார்கள்காளிவைகளையெல்லாம் பார்க்கமுடியாமலிருந்து அதையோசித்துப்பார்த்தேன் நம்மைத்தமையன்மார்கள் தானே இவ்விதமானசங்கடப்படுத்துகிறார்கள் வேறேபிரத்தியாரொருவரும் செய்யவில்லையேயென்று எண்ணி அவர்கள் செய்வதற்கெல்லாம மனதொப்பியிருந்தேன் அப்படிக்கிருக்கிறநாளில் இவர்களிரண்டுபேரும் என்னத்தைமனதில் கபடம்வைத்து பெண்ணினார்களோ எனக்குத்தெரியவராது ஒருநாள் இவர்களிரண்டுபேரும்வெளியேபோய்வீட்டில்வந்து என்னையழைத்துஅடியடி யென்றுஅடித்துவெளியேதள்ளிஇனிமேலிங்கேவராதேஎங்கேயாவது போய்விடென்றுதுரத்திவிட்டார்கள்கேளுங்கள பாத்துஷாசிரோன்மணியேஇந்தக்கட்டிலின் மீதிருக்கிற நாய்க்குட்டியானதுஎங்கள் தகப்பனாரிருக்கிறகாலத்தில்சிலவர்த்தகாள் பகருதேசத் திற்குப்போய்வருகிறபோது இதைக்கொண்டுவந்துஎந்தகப்பனாருக்கு துகஸ்துதியாக இதைக்கொடுத்தார்கள் அவையவர்வாங்கி மிக்க அறிவுள்ள நாயாயிருக்கிறதென்றுநான் குழந்தையாயிருப்பதினாலே என்னைவளர்க்கும்படியாக என்கையிற்கொடுத்தார் அதற்குநானெப்போதும் ஜீவனமுதலிய பதார்த்தங்கள் பசியாறும்போதெல்லாம் சாப்பிட்டு மீந்தத்தை இந்தநாயிக்குகொடுத்துக்கொண்டு வருகிறது ஒ

ருநிமிஷநேரமாவது அதைவிட்டு நான்பிரிகிறதுமில்லை என்னைவிட்டு அதுபிரிகிறதுமில்லை இப்படியிருக்க இவர்கள் வீட்டைவிட்டு என்னைவெளியேதள்ளும்போது எனக்குமுன்னே இது ஒருதாண்டிற்குதித்து என்னிடத்தில்வந்தது ஆனபடியால் இதன்மேல்மிகுந்த கிருபையெனக்குண்டாகி இந்த நாயைவளர்த்துக்கொண்டுவந்தேன.

சேனுக்கள் பாத்துஷாசிரோமணியே ஞானித்தனைதாஞ்சொல்லியது மெய்யோ அல்லது பொய்யோவென்று இவர்களைக் கேளுங்களென்று சொல்ல நான் அந்த இரும்புக்கூண்டிலிருக்கிறவர்களைப் பார்த்து உங்கள் தம்பிசொல்லுகிறது நிசமோ அல்லது அபத்தமோ வென்று கேட்டேன் அதற்கவர்கள் மெய்தான் அணுவளவேனும் பிசகில்லையென்று சொன்னார்கள் பின்பு நான் நடந்த விசயமென்னவென்றுசவுதாகரைக்கேட்க அவர்சொன்னார் என்னுடையஅண்ணனார்கள் ஏதோ ஒருகோபத்தால் நம்மை இவ்விதமாக அடித்துத் தூரத்தினார்கள்பின்னால் நம்மைக்கூட்டிக்கொள்வார்களென்று அஸ்தமிக்கும்பரியந்தம் வாசலிற்றானே நின்றேன் அவர்களென்னை என்ன ஏதென்றுங்கேட்கவேயில்லை அப்போது நான் இனி என்ன செய்யப்போகிறோம் நம்மை யாதரிக்க எவருமில்லையேயென்றுமிகவும் விசனப்பட்டு ஒருதெருவிற்போய் மூன்றுநாள்வரையில் அன்னந்தண்ணீரில்லாமற் படுத்துக்கொண்டிருந்தேன்அப்படியிருக்கஎன்னாற்பசிபொறுக்கமுடியாமல் மிக்கவருத்தத்துடனெழுந்து கடைவீதியிற்போனேன் அந்தக்கடைகளிலிருக்கும் வர்த்தகர்களில் ஒருகடைக்காரர் என்னையழைத்து நான்பசியாயிருப்பதைமுகக்குறிப்பினாலறிந்து ஒருதட்டுக்குத்தோசைவாங்கிக்கொடுத்து குடிக்கதண்ணீருங்கொடுத்தார்நான் அதைவாங்கிப்பசியாறின பின்பு என்னையவர்பார்த்துநீயார் எந்தவூரென்றுகேட்டார் அதற்குநான் சொன்னேன் கேளும்பாவா எனக்குத்தாய்தகப்பன் அக்கம்மக்கம் யாதொன்றுமில்லை அதனால் நான் திக்கில்லாதவனாய்முசாபருதித் திரிகிறேனென்று சொன்னேன் இதைக்கேட்டவுடனே அவருக்கென்மீதிலிரக்கம்வந்து என்னைப்பார்த்து நீ என் வீட்டிலிருப்பாயானால் உனக்குச்சாப்பாடு முதலியதுங்குறைவின்றிக்கொடுக்கிறேனென்று சொன்னார் அதற்குநான்சம்மதித்து அவர் கடையிற்றானே பொழுதுபோம்வரைக்குமிருந்தேன் பின்பவர் கடையைச்சாத்திவிட்டு என்னைக்கூட்டிக்கொண்டு வீட்டுக்குப்போனார்அவர்போனவுடனே தன்மனைவிக்கு என்னுடைய வரலாற்றைச் சொல்லஅவளென்மீதுஇரக்கம்வைத்து மிகவுங்கிருபையாய் எங்களிரண்டுபேருக்கும் ஒசிவனமுதலியசாப்பாடுகொடுத்தாள் அதைப்புசித்துபசியாறினோம்.

இவ்விதமாக நான அவர்சொன்ன வேலையைச்செய்துகொண்டு சாப்பாடுமுதலியதுங் குறைவில்லாமற் சாப்பிட்டுக்கொண்டு சிலநாளிருந்தேன் அப்போதவர்சொன்னார் நீசும்மாயிருக்கிறது நன்றாகயிருக்கவில்லை உனக்கு வர்த்தகமுதலிய வியாபாரங்களின் முறைமைதெரியவேணும் ஆகையால் நீ என்கடையில்வந்திருந்து நான்கேட்கப்பட்டசரக்குகளையெடுத்துக்கொடுத்துக்கொண்டிருவென்று சொன்னார் அதுபோலவே நான் அவர்கேட்கிற சரக்குகளையெடுத்துக் கொடுத்துக்கொண்டிருக்கும்போது அவர்க்கென்பேரில் தயவுவந்து மாதமொன்றுக்குஇரண்டு திருகயாகக்கணக் கெழுதிவைத்துக் கொண்டார் அப்படிச்சிலநாள் எப்படி வேலையிலிருக்கும்போது நான்அவரிடத்திற்சேர்ந்தநாள்முதல் அவருக்கதிகலாபமும்பரக்கத்துமுண்டாகி என்பேரில் மிகவுங்கிருபையாகவிருந்தார் அப்படியிருக்கும்போது ஓருநாளவரென்னை கூப்பிட்டு பாவா இனிமேலுனக்கு மாதமொன்றுக்கு ஐந்து திருகம் கொடுக்கிறேன் நீ கடையிலிருந்துசில்லறைச்சாமான்களைவிற்றுக்கொண்டிருமென்றார் அதுபோலவேநான கடையிலிருந்து வர்த்தகஞ்செய்துக்கொண்டுவந்தேன் நான அந்தவர்த்தகரிடத்தில் வந்தபோது ஒருகடையாயிருந்தது நாலுகடையாய்மிகுந்த பொருள்சேர்ந்து அவர்சீமானென்கிறபெயரைப்பெற்றுக்கொண்டார் அதன்பின் பவரென்னைப்பார்த்து மாதமொன்றுக்கு எனக்கைம்பது திருகம் சம்பளக்கொடுக்கிறேன் நீர்கடையிலிருந்து வியாபாரம்பண்ணும் நான் வெளி தேசங்களிற்போய் சரக்குகள் முதலானசாமான்கள்வாங்கி யனுப்பிக்கொண்டிருக்கிறேனென்றார் அதுபோலநான் கடையிலிருந்து வியாபாரஞ்செய்துக்கொண்டிருக்க அவர்வெளிதேசங்களிற்போய்பலசரக்குகளும்விலைசரசமாய் வாங்கி யனுப்பிக்கொண்டிருந்தார் இப்படியிருக்குங்காலத்தில் அந்த நிஷாபூர் தேசத்திலிருக்கப்பட்ட கடைகளில் ஒருபங்குவர்த்தகம் நடந்தால நானிருந்தக்கடையில் பத்துபங்குவர்த்தகம்நடக்கும இப்படிநடந்துவருங்காலத்தில் வெளிதேசம்போன்வர்த்தகர் பலசரக்குகளும் வாங்கிக்கொண்டு நிஷாபூர்பட்டணத்துக்குவந்து கடையிலிருந்துக்கொண்டுஎன்னை யழைத்து உனக்குமாதமொன்றுக்கு நூறுதிருகம்சம்பளங்கொடுக்கிறேன் நீர் வெளிதேசங்களிற்போய் சரக்குகள்வாங்கியனுப்பிவிட்டு பின்னால்வாருமென்று சொன்னார் அதுபோலே நானவெளிதேசங்களிற்போய்ச் சரக்குகள் வாங்கி யனுப்பிக்கொண்டிருந்தேன் அவர்கடையிலிருந்து விற்று முதல செய்துக்கொண்டிருந்தார் அதைப்பார்த்தால் நானொரு எசமான்போலவும் அவரொருசம்பளக்காரர்போலவும் இருந்தது அப்படியிருக்கும்போது நான்செய்கிறவர்த்தகத்தொழில் உலகயாவில் மிகுந்த விஸ்தீரணமாலாபந் திரண்டுபோனபடி

யால் எனக்கெஜமானுகிய அந்தக் கடைக்காரவர்த்தகர் என்னை வரும்ப
டி சொல்லியனுப்ப நான்பிரயாணப்பட்டு அவரிடம்வந்து சேர்ந்தேன்
அவர் என்னைப்பார்த்து பாவா நான்மிகவும் மிஸ்கீனுகயிருந்தேன்
நீர்வந்து சேர்ந்த பறக்கத்தினுலே நான்மிகவும் சீமானுய் விட்
டேன் ஆகையால் இனிமேல் நீரிப்படி என்னிடத்தில் சம்பளமாகவி
ருக்கிறது எனக்குச் சந்தோஷமயிருக்கவில்லை ஆகையால் நீருமநாலு
பேரைப்போல் மனுஷத்தனமாக இருக்கவேண்டுமல்லவா இப்போது
நீர்வேறேயொரு கடைவைத்துஉன்சொந்தமாய்வர்த்தகஞ்செய்யுமெ
ன்றுசொன்னுர் அதற்குநான்சொன்னேன் தங்கள்மன மெப்படியிருக்
கிறதோ அதுபோலேசெய்யக் காத்துக்கொண்டிருக்கிறேனென்று சொ
ன்னேன் அவரதைக்கேட்டு நான் சம்பளததுக்கிருந்தநாள் முதற்கொ
ண்டு இதுவரையிலுங்கூடிய சம்பளத்தைக் கணக்குப்பார்த்து இவ்வ
ளவு தொகையென்றுமொத்தப்படுத்தி அவருடைய கடைக்குஅடுத்தா
ப்போலிருக்குங்கடையை வாடகைக்குவாங்கிஅந்தக்கடைக்குப்போது
மான சரக்குகளெல்லாம் வைத்து அதற்குத்தொகைப்பணமிவ்வளவெ
ன்று சம்பளமொத்தத்தில் எடுத்துக்கொண்டு சொச்சப்பணத்தையுங்
கொடுத்தார் நான் அவைகளையெல்லாம்பெற்றுக்கொண்டு அவரைவிட்
டுநீங்கி என்சொந்தத்தில் வியாபாரஞ் செய்துகொண்டிருந்தேன் அப்
படியிருக்கும்போது நான் ஒருமனிதனைச் சம்பளத்துக்கு அமைத்து
கடையில்வைத்து விட்டு நான்வெளிதேசங்களிற்போய் சாமான்முதலி
யசரக்குகளை வாங்கியனுப்பிவைத்து சிலநாளிருந்துபின்னுல் என்க
டைக்குவந்து சேருவேன்,

இவ்விதமாகப் போவதும் வருவதுமாயிருக்கிறநாளையில் எந்தச
ரக்கை வாங்கினுலும் ஒன்றுக்குப் பத்தாக லாபங்கிடைத்துக்கொண்
டிருந்தது இவ்விதமாக நான்வியாபாரம்செய்யும்போது திரண்டதிரவி
யங்களைச்சேர்த்து நானும் ஒருசீமான்றனம்பெற்றேன் அப்போதுநான்
வைத்திருந்த கடையையெடுத்துவிட்டு என்கையிற்பொருளதிகமாயிரு
ப்பதினுலே வீடுவாசல்தோட்டம்துறவுகள்முதலியதும்வாங்கிஅதற்கு
த்தகுந்த வேலைக்காரர்களைவைத்து அந்நகரத்திலொருவஜீரமான பெ
ண்ணை நிகாகுவென்னுங் கலியாணஞ்செய்துக்கொண்டு சகலவைபவத்
துடன் நிறைந்த சம்பத்துடையவனுய் எனக்குச்சரிபானசீமான் அந்த
வூரிலில்லையென்று பலருஞ்சொல்லப் பேர்பெற்றிருக்கிறநாளையில அந்
தவூரிலுள்ள வாத்தகர்கள்முதலியயாவரும் என்னிடத்தில்வந்துபொரு
ள்கள் வாங்கிப்பலவிதவர்த்தகஞ்செய்வார்கள் இவ்விதமாக நான்கொடு
க்கல் வாங்கல்செய்து ஓர்குறைவுமில்லாமல் வாழ்ந்துக்கொண்டிருக்கு

மபோது ஒருநாள்மத்தியானவேளையில் என்வீட்டுக்குவெளியில உ
லாத்திக்கொண்டிருக்கும்போது என்வேலைக்காரர்களிலொருவன்கடை
க்குச்சாமான்வாங்கப்போனவன் சாமான்வாங்காமல புறங்கால்பிட்டக்
திற்படும்படியாக அதிவேகமாக ஓடிவந்து என்சமுகத்திலநின்றுஎன்
னைப்பார்த்து ஐயா தங்கள் தமையன்மார்களிரண்டுபேரையும் ஒரு எ
கூதுஆனவன் கடைபஜாரில்விட்டு சவுக்கினாலேயடித்துக்கொண்டிரு
க்கிறான்அதை என் கண்ணாற்கண்டு பொறுக்கமாட்டாமல் தங்களிடத்
திற்செல்லவந்தேனென்றான் உடனே நான் மனம்பதைத்துசலுதியி
ல்ஓடிப்போய் பார்க்கும்போது அந்த எகூது அவர்களைபடித்துக்கொ
ண்டேயிருந்தான் அப்போது நான் அவனடிக்கிற அடியை என்கண்
ணாற்கண்டு கண்ணீர் ததும்பும்படியாய் வருத்தப்பட்டு அடிக்கிறவனை
ப்பார்த்து இவர்களை யேனடிக்கிறாய் அடியைநிறுத்தென்று கையமர்த்
திச் சொன்னேன் அவர்கள் நான் சொன்னதைக்கேட்டு அடிப்பதைநி
றுத்தினார்கள் அப்போது நான் அந்த எகூதுவைப்பார்த்து இவர்களிர
ண்டுபேரும் உனக்கென்ன குற்றஞ்செய்தார்கள் இவ்விதமானஅடிஅ
டித்தாயேயென்று கேட்டேன் அதற்குஅந்த எகூதுசொல்லுகிறான் இவ
ர்களிரண்டுபேரும் என்னிடத்தில் ஆயிரம் அசாபியென்னுந் தங்கக்கா
சுக்குப்பலவித சாக்குகளைவாங்கி ஒருமாதத் தவணையிற்கொடுக்கிறதா
கச் சொன்னார்கள் அதுபோல் தவணைதீர்ந்தவுடன் கடனைக்கேட்டால்
இப்போது பணங்கொடுப்பதற்கு வழியில்லை நாங்களென்னசெய்வோ
ம் இத்தனைநாள் வர்த்தகஞ்செய்ததிலலே நாங்களிருக்கிற கடைதான்
மிச்சமிருக்கிறது அந்தக்கடையைவிற்று உன்கடனுக்குச்சரிப்படுத்தி
க்கொள்ளென்று சொன்னார்கள அதுபோல அந்தககடையை ஐந்நூறு
அசாபிக்காசுக்கு விற்று உன்கணக்கில் வரவுவைத்துக்கொண்டுமிகுதி
ஐந்நூறு அசாபிக்காசுக்கு இவர்களிடத்தில் வகையில்லாதபடியல் எ
ன்பணத்தைக் கொடுங்களென்று எனக்குக்கோபமுண்டாகிஇவர்களை
யடிக்கிறேனென்றான் நான்இந்த விசளங்களைக்கேட்டு உடனே ஒரு
ஆளையனுப்பி ஐந்நூறு அசாபிக்காசைத்தருவித்து அந்த எகூதுக்குக்
கொடுத்துஇவர்களைமீட்டுக்கொண்டு நான்வீடுபோய்ச்சேர்ந்து யோசி
த்ததாவது நம்முடைய தகப்பன்சம்பாதித்த ஆஸ்திபாஸ்திரொக்கரோ
சனமுதலியதும் கணக்கிலடங்காத பொருள்களிருந்துமல்லவா அவை
களை இவர்களென்ன செய்தார்களோவென்று மனதிலெண்ணி அதை
சகுறத்து இவர்களைக்கேழ்க்கக்கூடாதென்று தீர்மானித்து இவர்களை
யழைத்துக்கொண்டுபோய் என்வீட்டில் மிகுந்த சவுக்கியமாகவைத்து
க்கொண்டிருந்தேன் அப்படியிருக்கிற நாளையில் இவர்களுக்குப்பழக்
கமாகயிருந்த ஒருதனிதனை யழைத்துஎங்கள்தகப்பன்சம்பாதித்ததுக

ணக்கிலடங்காப்பொருள்களையும் இவர்களே நாமாயழித்தார்களென்று கேட்டேன் அதற்கவன் சொன்னான் இவர்கள் பகலைக்கெல்லாஞ் சூதாடுகிறது இராக்காலங்களிற் தாசிகள்வீட்டிற்குப்போய் ஸ்திரீபோகஞ்செய்து துர்நடத்தையான கள் சாராயமுதலானதுர்க்குடித்தது பொருள்களையெல்லாமழித்து விட்டு கடனுடன்வாங்கி கடைவீதியில்கடைவைத்து அந்தமுதலையும் மேற்சொன்ன விதமாகச்செலவழித்து விட்டார்களென்று சொன்னான் அவைகளைக்கேட்டும் நான் இவர்களை அதிகமேன்மையான சுகத்தில்வைத்திருந்தேன்,

இப்படியிருக்கையில் சிலநாள்பொறுத்து எனக்கொருநினைவு வந்துநமது தமையன்மார்களிரண்டுபேர்களும் இப்படி சும்மாயிருப்பது சரியல்ல நம்மைப்போலே இவர்களும் மனுஷத்தனமாகவேண்டுமென்றெண்ணி இவர்களுக்குவேண்டிய புத்திமதிகளைச்சொல்லினி மேலாவது கிரமமாகநாணயப்பழுதில்லாமல் நடத்துக்கொள்ளுங்களென்று சொல்லி பஜாரில்ஒருகடைகிரயத்திற்குவாங்கி அதற்குத்தகுந்த சாமான் தட்டுமுட்டுகளை வாங்கிவைத்து முன்னிருந்தபுத்தியைவிட்டுவிட்டு இந்தக்கடையிலிருந்து வர்த்தகஞ்செலுத்து அதில்வருமிலாபத்தை நீங்களெடுத்துக் கொள்ளுங்கள் வேளைவேளைக்கு என்னிடத்தில் தானே சாப்பிட்டுக்கொண்டிருங்களென்று கடையில்வைத்தேன் அப்படியே நடந்துவருகிறநாளையில் இவர்களிரண்டுபேரும் பழையஎண்ணத்தை எண்ணி ஒரு சம்பளஆளையமர்த்தி கடையிலிருக்கும்படி செய்துவிட்டு சிலபொருள்களையெடுத்துக்கொண்டு தேவடியாள்வீட்டுக்குப் போகிறது பின்னுமிவர்கள் மனமெப்படியோ அதுபோல நடத்திக்கொண்டுவந்தார்கள் இவ்விதமாய் நடந்துவந்ததால் கடையிலிருந்த முதல இலாபம் சகலமுமழித்துவிட்டார்கள் அப்படியிருக்கநான் நினைத்தேன் நமது தமையன்மார்களுக்குக்கடைவைத்துக் கொடுத்தோமே அவர்களெவ்விதமாயிருக்கிறார்களோ அதைப்போய்ப் பார்ப்போமென்று கடைக்குப்போனேன் அந்தக்கடையிலவர்களைக் காணோம் சம்பளக்காரனொருவனிருந்தான் கடையும் வெறுங்கடையாயிருந்தது இதுகளைப்பார்த்து நான் சம்பளக்காரனைக்கேட்டேன் இவர்களிரண்டுபேரும் எங்கேபோனார்கள் கடைவெறுங்கடையாயிருக்கிறதென்னவென்றேன் அதற்கவன் சொன்னான் நானென்னசெய்வேன் உங்களண்ணமார் இரண்டுபேரும் தேவடியாள் விட்டிற்கும் சூதாடுகிறதற்கும் நிதம் விற்பனையாகிற பணத்தை மனம்போலே யெடுத்துக் கொண்டுபோகிறதேதவி

ர இந்தக்கடைக்கு ஒரு சாமான் சரக்கும்வாங்குகிறதில்லை அப்படியிருக்கிறதால் கடைவெறுங்கடையாய்ப்போய்விட்டது நானென்னசெய்வேன் எஜமான்கள் மனம்போலே காலத்தைக்கழித்துவருகிறேனென்று சொன்னான் இதுகளையெல்லாங்கேட்டு நான் என் வீடுவந்து சேர்ந்திருக்கிறசமயத்தில் இவர்களிரண்டுபேரும் சாப்பிடப் போகலாமென்று வந்தார்கள் அவர்களைப்பார்த்து நான்கடையிலிருந்த சாமான்முதலிய பொருள்களையெல்லாமென்னசெய்தீர்களென்றுகேட்டேன் அதற்கொன்றும் பேசாமல் மவுனமாயிருந்தார்கள் அப்போதுநான் இவர்களுக்கு இன்னம் புத்திவரவில்லையென்று கடையிலிருந்த கழிவுசாமான்களையும் கடையையும் விற்றுப்போட்டு இவர்களைச்சும்மாயிருக்கும்படி சிலநாள் வைத்துக்கொண்டிருந்தேன்.

கேளுங்கள் பாத்துஷாசிரோமணியே இப்போது நான் சொல்லிவந்தது நடந்தசேதியோ அல்லவோவென்று இவர்களைக்கேளுங்களென்றார் அப்போது நான் அந்த இரும்புக்கூண்டிலிருந்தஇரண்டுபேரையுங் கேட்டேன் அவர்கள் இதெல்லாம்நடந்தசேதிதானென்றார்கள் அதன்பின்பு அந்தக்காசாசம்பாஸ் என்னும வர்த்தகர்சொன்னார் இனிமேலாவது இவர்களுக்குப்புத்திவருமென்றெண்ணி முன்போலவே கடைவைத்துக்கொடுத்தேன் அதையும் அழித்துவிட்டார்கள் இப்படிநான் பலவிசை கடைவைத்துக்கொடுத்தும்பழையபடியே இவர்கள்சிலவழித்துக் கருபாக்கிவிட்டார்கள் அதன்பின்பு இவர்களைச் சும்மாவைத்துக்கொண்டு சோறுமுதலிய உடுமானங்கள் கொடுத்துவருகிறபோதும் இவர்கள் சும்மாயிருக்கிறதில்லை அதேதென்றால்வீட்டில்வைத்திருக்கிற உடைமைகளையும் வெளியிலிருக்கும்படியானபொருள்வகையறுக்களையும் திருடிக்கொண்டு முன்செய்துவந்த வேலைகளுக்குப்போவார்கள் அப்போது நான்நினைத்தேன் இவர்கள் நம்மிடத்தற்றிருடாமலின்னம் யாரிடத்திற்போய்த் திருடுவார்கள் போனாற்போகட்டுமென்றும் இதை யொருவரிடத்திற்சொன்னால்நமக்குத்தானே குறைச்சலென்றும் சும்மாயிருந்துவிட்டேன் இப்படிக்கிருக்கிறநாளையில் அந்தவூரிலுள்ள சிறிதுபேர்கள் என்னிடத்தில் முதல்வாங்கி தீவுதீவாந்தரத்துக்குப்போய் வர்த்தகஞ்செய்து அதிகலாபத்துடனேவந்து முதலும்லாபமுங்கொடுத்தார்கள் அப்போது நானினைத்தேன் நம்முதமையன்மார்கள் மூடத்தனமாய்த்திரிகிறார்களே அவர்களுக்குச்சிறிதுபொருளைக்கொடுத்திவர்கள் கூட அனுப்பலாமென்றெண்ணி ஒரு கப்பல்வைத்து அந்த வூருக்குத்தகுந்த சரக்குகள்வாங்கி அதிலேற்றிகணக்குமுதலியதுகளின் நாசமுடித்து இவர்கள் கையிற்கொடுத்தது இரண்டுபேரையுங் கப்பலி

லேற்றிப் பயணப்படுத்திவைத்தேன் அதன்பின் னிவர்களுஞ்சில[illegible]
ற்காரர்களுடன் பாய்விரித்து கப்பலையோட்டிப் போனார்கள் இவர்கள்
போய் வெகுநாள்வரையில் யாதொருசேதியுந் தெரியாமலிருந்தது பின்
பு இவர் களுடன்போன கப்பல்களும் வர்த்தகர்களும் இவிடம் வந்து
சேர்ந்து கரையிலிறங்கினார்கள் அப்போது நானவர்களைப்பார்த்து என்
னுடைய கப்பலையும் என் தமையன் மார்களையும் நீங்கள் கண்டதுண்
டோவென்று கேட்டேன் அவர்களெல்லோரும் உங்கள் தமையன் மார்
களையும் கப்பலையும் நாங்கள் கண்டதுமில்லை இவவிடத்தி லிருக்கிறார்
களென்றுகேள்விப்பட்டது மில்லையென்று சொன்னார்கள் அதைக்கேட்
டவுடனே நான்மிகுந்த வருத்தப்பட்டு நமது தமையன்மார்களுக்குஎன்
னபொல்லாங்கு நேரிட்டதோவென்றுமிகுந்தவிசனத்துடனே யிருந்தே
ன் அப்படி யிருக்கும்போது எனக்கு அதிகபிரியமுள்ள சினேகிதரொ
ருவர் கப்பல்பாத்திரைபோயிருந்தார் அவர் கரைமுகம் வந்து சேர்ந்து
என்வீடுக்குவந்தார் நானவரைக்கண்டு மிகவும் பிரியத்துடனே உட்கா
ரச்சொல்லி என் கப்பலையும் என் தமையன்மார்களையுந்தாங்கள் கண்டது
ண்டோவென்று அதற்கவரென்னைப்பார்த்து உங்களண்ணமாருடை
ய சேதியை நீர் ஏன் கேட்கிறீரென்றார் அதைக்கேட்டவுடனே நானந்தி
டுக்கிட்டு ஓகோ என்னமோ அண்ணமார்களுக்கு உயிர்ச்சேதம் வந்து
விட்டதோ அல்லது ஏதாவதுபொல்லாங்கு நடந்ததோ வென்று மனங்
கலங்கி மிகவும் ஆவலாக அவரைப்பார்த்து என்னசங்கதியென்று கேட்
டேன் அதற்கவர் உங்கள் தமையன்மார்கள்கப்பலோடிதீவாந்தரம்போ
ய்த் துறைமுகத்திலிறங்கி ஆடாத்திசெய்கிற தானிடத்தில்கப்பலையுஞ்
சரக்கையுமொப்பித்து அவனை விற்கச்சொல்லிவிட்டு இரண்டு பேரும்
தேவடியாள்வீட்டுக்குப்போகிறதும் சூதுவிளையாடுகிறதும்சாராயங்கு
டிக்கிறதையுமே தொழிலாகக்கொண்டு தாங்கள் கொண்டுபோன சரக்
குகளைவிற்றபொருள்களையெல்லாமழித்து அதுவும்போதாமல் கப்ப
லையும்விற்றுச் செலவுசெய்துவிட்டு முடிவில் ஒரு தேவடியாளுக்கு வி
லைப்பட்டு அவளுடைய வேலைகளொன்றுங்கிசுமத்திலொருவரிருக்கிறார்
மற்றொருவர் ஒருதோட்டத்துக்குத் தண்ணீரிறைத்துக் கொண்டிருக்கி
றார்இது தானவர்கள் சேதியென்று எனக்குத்தோஸ்தியாகிய சினேகி
தர் சொன்னார் அப்போது நான் அவர்களிரண்டுபேரும் உயிரோடிருக்
கிறார்களென்று கேள்விப்பட்டவுடனே தயிரியங்கொண்டு முதலுங்கப்
பலும்போனாற் போகட்டுமே அவர்களுயிரோடிருக்கிறதே போதுமென்
று சந்தோஷித்து நாம்பொருத்த செல்வத்துடனே வாழுமிருக்க நமது

தமையனமார்கள் அவிடத்தில் ஒருவருக்கடிமைப்பட்டு அவஸ்தைப்படுவது சரியல்ல நாம் அவடத்திற்குப்போய் நமது தமையன்மார்களைமீட்டுகொண்டு வரவேண்டுமென்கிற எண்ணங்கொண்டு அந்தக்ஷணமே ஒருகப்பல்வைத்து அவ்வூரில் சிலவாகப்பட்ட பலசாக்குகளையும் வாங்கிக் கப்பலேற்றி நான் இந்த நாயுடனே கப்பலேறிப் பாய்விரித்து என்தமையன்மார்களாகிய இவர்களிருக்கும் மூரிற்சென்று கரையிலிறங்கி அந்தத்திவிலிருக்கும் ஊரைச்சுற்றிப்பார்த்து இவர்களெங்கேயிருக்கிறார்களென்று விசாரித்ததில் முன் என் சினேகிதர் சொன்னபிரகாரம் சரியாகவே யிருந்தது அதைக்கேட்டுநான் எனது கப்பலில்வந்த பலசாக்குகளையும் இறக்கி மிகுந்தலாபத்துடனே விற்று என்லூரில் சிலவாகப்பட்ட அவடத்திய சாமான்களை வாங்கிக்கப்பலேற்றி கணக்குமுதலிய கிரீநாசுமுடித்து பயணமாகுப்படியான திட்டஞ்செய்துவிட்டு என் தமையன்மார்களாகிய இவ்விரண்டுபேரையும் பார்க்கும்படியாகத் தேவடியாள் தெருவிற் பார்த்துக்கொண்டேபோனேன் அப்போதொரு தேவடியாள் தெருவாசலில் இவர்களிலொருவர் விளக்குமாறைக் கையிற்பிடித்து தெருத்திண்ணையைப்பெருக்கிக்கொண்டிருந்தார் அவரைக்கண்டவுடன் நான் மனம்பதைத்து அவரெதிற்போய் நின்றேன் அவர் என்னைக் கண்டவுடனே விளக்குமாறைக் கீழேபோட்டுவிட்டு தம்பிஎன்பதாயென்னையறிந்து என்னைக்கட்டிக்கொண்டழுதார் நானும் அதுபோலவே பழுது உங்களெசமானி யெங்கேயென்று கேட்டேன் அப்படி கேட்டுக்கொண்டிருக்கும்போதே அவ்வீட்டிலிருந்துஒரு தேவடியாள்ஓடோடியும்வந்து என்னைப்பார்த்து நான்தானிவனுடையஎஜமானி என்றாள் அதுகேட்டு நான் இவருனக்கு எவ்வளவுதொகை கொடுக்கவேண்டியதென்றுகேட்டேன் அவள் ஆயிரந்திருகம் கொடுக்கவேண்டுமென்று சொன்னாள்.

அதுபோலவே நான் அந்தத்தொகையைக்கொடுத்து இவரெழுதிக்கொடுத்த முறிச்சீட்டை வாங்கிக் கிழித்தெறிந்துவிட்டு இவரைமீட்டுக்கொண்டுவந்து இன்னொரு தமையனிருக்கிற தோட்டத்திற் போய் அதைச் சுற்றிப்பார்க்கும்போது அவரந்தத் தோட்டத்திலுள்ள ஒருகிணற்றில் ஏற்றம்போட்டு தண்ணீரிறைத்துத்துக்கொண்டிருந்தார் அதைக்கண்டுநான் மனம்வருந்தி நானும் ஒரு தமையனுமாகப்போய் அவரெதிரில்நின்றோம் அவர் எங்களிருவரையும்பார்த்து ஏற்ற மிறைக்கிறதை நிறுத்திவிட்டு ஓடிவந்து என்னைக்கட்டிக்கொண்டழுதார் நானும வருடனழுது நீ பயப்படாதேயென்று பிரியவசனஞ் சொல்லி உன்னை விலைக்குக்கொண்ட எஜமான் யாரென்று கேட்டேன் அப்போது நாங்க

ளழுத சத்தத்தைக்கேட்டு அந்தத்தோட்டக்காரன் எங்க ளிடத்திற்கு
வந்தான் உடனே என்தமையன் இவர்தான் என்னை விலைக்குவாங்கின
வனென்று சொன்னார் அப்போது நான் அந்த மனிதனைப்பார்த்து இவர்ள
வ்வளவு தொகை உமக்குக் கொடுக்கவேண்டியதென்றுகேட்டேன் அவ
ர் ஆயிரந்திருகமென்றுசொன்னார் உடனே நான் அந்தத்தொகையைக்
கொடுத்து இவரெழுதிக்கொடுத்த முறிச்சீட்டை வாங்கிக்கிழித்தெறிந்
துவிட்டு இவர்களிரண்டுபேரையுங் கூட்டிக்கொண்டு சப்பல் நிற்கிற
துறைமுகம் வந்துபோட்டிலேறி கப்பலிற்போயிருந்து பாய்விரித்து க
ப்பலையோட்டி வருகிறபோது நாங்களிருக்கிறவூர் ஒருநாளோட்டமிரு
க்கிறது அந்தச்சமயத்தில் காற்றில்லாமல் கப்பல்சும்மா மிதந்துகொண்
டிருந்தபடியால் நான் என் தமையன்மார்களாகிய இவர்களைப் பார்த்து
நான்கரையிலிரங்கிகடற்கறையோரமாக யூருக்கும்போய்ச் சேருகிறே
ன் அதற்குள்ளாக காற்று வந்தினால் நீங்கள் கப்பலிற் பாய்விரித்துந
ம்மிடவூர்க்குவந்து சேருங்களென்று சொல்லிவிட்டு இந்த நாய்க்குட்டி
யுடனே போட்டிலேறி கரைபோய்ச்சேர்ந்து கரைவழியாக நடந்து எங்
களூர்போய்ச்சேர்ந்தேன்,

பின்பு அந்தாறுநாளாயும் கப்பல் வரவில்லை அதனால்நான்சந்தேகி
த்து ஒராளைப்பிடித்து இன்ன வூருக்குநோக எங்கள்கப்பலை விட்டுவ
ந்தேன் அது அந்தத்துறைமுகத்தில் நிற்கிறதா அல்லதுபோய் விட்ட
தாவென்று சீக்கிரமாகப்பார்த்து வந்து சொல்லென்றேன் அவன் உட
னே அவ்விடத்திற்குப்போய் கப்பலைக்கண்டு அதிலுள்ள மாலு மியா
ல் சகலசங்கதிகளையுமறிந்து என்னிடத்தில்வந்துஎன்னைப்பார்த்துஐயா
நான் தங்கள் சொன்னபடியே அவ்விடத்திற்பெரியப்பார்த்தேன்கப்பலி
ருந்து நான்மச்சுவாயைப் பிடித்து கப்பலேறி நகுதாமாலுமிமுதலான
வர்வளைக்கண்டு இன்னமேன் துறைமுகம்வந்து சேராமலிருக் கிறீர்க
ளென்றேன் அவர்க்கவர்கள் என்னைப்பார்த்து நல்லகாற்றடிக்குது பா
ய்விரித்தோடினால் சலுதியிற்போய்ஊர்ச்சேரலாம் ஆனால்நம்முடைய ச
வுதாகர் கரையிரங்கிப் போனபின்பு அவர் தமையன்மார்களிரண்டுபே
ரும் கரையிலிருங்கிய இரண்டுபடவை வாடகைக்குப் பிடித்துக்கொண்
டு கப்பலிலுள்ள சரக்குகளை இரக்கி துறைமுகத்திற்குச் சமீபத்திலிரு
க்கும் ஊரிற்க்குப்போய் வருகிறோம் அதுவரையிலும் கப்பலைப்பாய்விரிக்
காலம் நிறுத்திவைத்துக்கொண்டிருங்களென்றுசொல்லிவிட்டுப்போனா
ர்களேந்தாறுநாளாயுமன்னமவர்களைக்காணோமென்றுசொன்னார்களென்
றுசொன்னான் அதை கேட்டுநான்உடனே ஒருபல்லக்கிலேறிக் கொண்டு
அந்தவூருக்குப்போய்விசாரித்து இவர்களைத்தேடிப்பிடித்து அந்தச்ச

ரக்குகளை விற்றபணத்தில் இவர்கள் செலவுசெய்ததது போக மீதிப் ப
ணத்தை வாங்கிக்கொண்டு இவர்களையழைத்துக்கொண்டு கப்பலைப்பா
ய்விரித்து ஓட்டிவரும்படியாக மாலுமிகட்குச்சொல்லிநான்கரைவழியா
கப்போய் ஊர்சேர்ந்தது உடனேநான் அந்தக் கப்பலிலுள்ளசரக்கையி
றக்கி விற்றுமுதல்செய்து கணக்கைப்பார்த்தேன் இவர்கள் சிலசரக்கை
ஒன்றுபாதியாய்விற்று செலவுசெய்தபணம்போகஇருக்கப்பட்ட பொரு
ட்டொகை ஒட்டிக்கிரட்டியாருந்தது அப்போதுநான் இந்தவர்த்தகத்தி
ல் பெருத்தலாபமிருக்கின்றது இன்னம் அந்தவூருக்குசரக்கேற்றிக்கொ
ண்டுபோனால் அதிகலாபங்கிடைக்குமென்று நினைத்து மறுபடியும் பல
சரக்குகளையும் வாங்கிகப்பலிலேற்றி இவ்விரண்டுபேரையுநாயையும்அ
ழைத்துக்கொண்டு கப்பலேறி பிரயாணப்பட்டு கப்பலிற்பாய்விரித்துஓ
டுகிறபோதுநல்காற்றடித்து அதனால் எங்கள் கப்பல் சில தினத்தில் அ
ந்தத்தீவினுடைய துறைமுகப்போய்ச்சேர்ந்தது சரக்குமுதலியவைகளை
யுமிறக்கி நல்லலாபத்திற்கு விற்று அந்தப்பணத்துக்கும் அவ்விடத்திலு
ள்ள பலசரக்குகளையும் வாங்கி கப்பலில்லேற்றி இவர்களும்நாயும்
நானுமாகக் கப்பலேறிஎங்களூரை நாடிப் பாய்விரித்துகப்பலோடியவரு
ம்போது இவர்களென்னயோசனைசெய்தார்களோ எனக்குத்தெரியாது
நாங்கள் மூன்றுபேரும் கப்பலில் ஜீவமுதலியவைகளைத்தின்றுபசியா
றிக்கொண்டிருந்தோம் அந்தச்சமயத்தில்மூத்தவனெழுந்து கையையும்
வாயையும் சுத்திசெய்துக்கொண்டுசமுத்திரத்தையெட்டிப்பார்த்து கு
லுங்கக் குலுக்கச் சிரித்தார் அப்போதுநான்இவனென்ன இப்ப சிரிக்
கிறானோ யென்றுஅவனைப்பார்த்துஎன்னசங்கதியென்றேன்அப்போதவ
ர் தம்பிஇந்த அதிசயத்தை என்டினென்று சொல்லுவேனென்றார்.

அந்தச்சமயத்தில் என்னோடு பசியாறியிருந்தசின்னதமையன்கை
யை யுதறிவிட்டு எழுந்திருந்துபோய் கடலையுற்றுப்பார்த்து அவரும்
மூத்தவனைப்போலவே சிரித்தார் சிரித்து நாம்இப்பேர்ப்பட்ட அதிசய
த்தை ஒருநாளுங் கண்டதே இல்லையென்று ஒருவருக்கொருவர் பேசி
மிகவும் கெக்கலிக்கொட்டிச் சிரித்தார்கள் அப்போதுநான் அதென்ன
ஆச்சரியம் பார்ப்போமென்று சீக்கிரமாகவெழுந்திருந்துபோய்கடலையெ
ட்டிப்பார்த்தேன் அங்கே ஒன்றையுங்காணோம் அப்போது நானவர்க
ளைப்பார்த்து கடலுக்குளொரு அதிசயத்தையுங் காணோமே யென்று
சொன்னேன் அதற்கவர்கள் அணியத்திற்குப் புறதலையில் நன்றாயுற்
றுப்பாரென்று சொன்னார்கள் அப்படியே பார்த்தேன் அப்போ திவர்க
ளிரண்டுபேரும் என்காலிரண்டையும் பிடித்துத்தூக்கிக்கடலிலாபோ

ட்டுவிட்டார்கள் நான் சமுத்திரத்தில் விழுந்து ஆழத்தில் அழுந்தி இர
ண்டுகையையும் உயர்த்தித்தண்ணீரின்மேலேகிளம்பினேஞ்சடிக்கையில்
என்கையிலேபொன்று கட்டைபோலேதட்டுப்பட்டது அதென்னவென்
றுபார்த்தேன் நான்வளர்த்த இந்தநாய்க்குட்டியானது என்னைத்தள்ளும
போது தானே தண்ணீரிற்குதித்து நீய்ந்துக்கொண்டிருந்தது அதுகண்
டு நான் நாம்விழுந்தோமென்றல்லவோ நம்முடைய நாயுங் கூடவிழுந்
துவிட்டதென்றெண்ணி அதன்வாலை மெதுவாகப்பிடித்துக்கொண்டு
கப்பலைப்பார்த்தேன் கப்பல் கண்ணுக்கெட்டாதூரம்போய்விட்டது அ
ப்போது நான் நாயின்வாலைப்பிடித்தபடியே நானும் அந்தநாயும்நீந்தி
யிருந்துகொண்டு மூன்றுநாளைக்குப் பிறகு அல்லாகுசுபுகான குத்தஆ
லகவுடைய கிருபையால் கரைவந்து சேர்ந்தோம் அப்போது நான் நாயி
ன்வாலைவிட்டேன் விடவே அதுபோய் சுடுகிறமணலில்விழுந்துபுரண்
டு எழுந்திருந்து என்னருகில்வந்து என்னைப்பார்த்தவண்ணமாக நின்
றது நான் மூன்றுநாள்பரியந்தம் அன்னாகாரமில்லாமல்கடலில் நீந்தி
க்கொண்டுபோனபடியால் கரையின்மேலேறினவுடனே மூர்ச்சையாய்பூ
மியில் விழுந்துவிட்டேன் பின்புசற்றுநேரம் பொறுத்து களைதீர்ந்து
கண்விழித்துப்பார்த்தேன் அவ்விடம் பெருத்த வனாந்தரமாகவிருந்தது
என்னெதிரில் நாய் நின்றுகொண்டிருந்தது இதைப்பார்த்து நான் ம
னங்கலங்கி பசியதிகரித்ததால் மெள்ளவெழுந்துபோய் அவ்வனத்தி
லுள்ள கந்தமூலபலாதிகளைத்தின்று நாய்க்கும் சிலகாய்கனிகளைப் பறி
த்துக்கொடுத்துக் அந்தக்காட்டினவழியாகவே சிலநாள்நடந்தேன் அத
ன் பின் ஒருபட்டணம் எதிர்ப்பட்டது.

அந்தப்பட்டணத்திற்போய்ப் பார்க்கையில் அதிலிருக்கிறமனித
ர்கள் பேசுகிறபாஷை எனக்குத்தெரியவில்லை அப்படியிருக்க என்னு
டைய ஹால் அஹவால் என்னமாய்ச்சொல்லுகிறதென்று கைசாடை
க்காட்டிய ஜீவனமுதலிய தின்பண்டங்கள்வாங்கிப்பசியாறிக் கொண்டு
அந்தப்பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுக் கரைவழியாக நடந்துவரும்
போது தெருதலையில் இரண்டுபேர்கள் வருகிறார்கள் அவர்களைப்பார்
த்து யோசித்தேன் இவர்கள் நம்மிடதேசத்தி லுள்ள்வர்களைப் போ
லேயிருக்கிறது அவர்கள் என்கிட்ட நெருங்கிவந்தால் என்னுடையஹா
ல் அகவாக்களைச்சொன்னால் அவர்கள் மனதிரங்கி ஏதாவதுகொடுப்பா
ர்களென்றெண்ணி நெருங்கிப்போய்ப் பார்த்தேன அவர்கள் யாரென்
றால் என்னைக் கடலிலே தள்ளின தமையன்மார்களாயிருந்தார்கள் அ
ப்போது அவர்கள் என்னைப்பார்த்து என்கிட்டவந்து அடாபயலே நீஇ
ன்னஞ் சாகவில்லையா வென்று இரண்டுபேருமாகக் கூடியடித்தார்கள்

அப்போது நான் கீழேவிழுந்துவிட்டேன்என் நாயானது எட்டிநின்று
ப் புலம்பிக்கொண்டு நின்றது அந்தநேரத்திலொருவர் என்கிட்டே யிரு
ந் துக்கொண்டு ஒருவர் அதிகவிரைவாயோடிப்போனார் அப்படியோடி
ப்போனவர் சிறிது நேரத்திற்குப்பிறகு இரண்டு சேவகர்களைக் கூட்
டிக்கொண்டுவந்தார் அந்தச்சேவர்கள் என்னையடித்துப்பின்கட்டுகட்டி
இழுத்துக்கொண்டுபோனார்கள் அவர்களைப்பார்த்து என்னை இப்படி
வேதனைப்படுத்தி இழுத்துக்கொண்டு போகிறீர்களேநானென்ன குற்
றஞ்செய்தேனென்று கேட்டேன் அப்போது அந்தச் சேவர்கள் சொ
ன்னார்கள் இவர்களைமோசம்பண்ணிவிட்டு வெகுமுதலைத்திருடிக்கொ
ண்டுபோனகள்ளனும் நீஇப்போது அகப்பட்டாயென்று சொன்னார்கள்
ஆகையினாலுன்னை இழுத்துக்கொண்டு போகிறோமென்றுசொல்லிபந்
துகானாவிலடைத்துக் காவல்வைத்தார்கள்:

அப்போது நான்வளர்த்த நாயானது வெளியிற்றானே க்ன்றதுஅ
ப்படிக்கிருக்க அந்தவூர் கொத்தவாலுக்குயிதுதொகைகளைக்கொடுத்து
அவர்கள் என்னை நியாயங்கேட்டதுபோலும் அவர்கள்வாக்குமூலத்தி
ற்கு நான் சரியாகச்சொல்லி யொத்துக்கொண்டதுபோலும் அந்தவாக்
குமூலத்தில் என்கையெழுத்துப் போட்டது போலும் போட்டுஅந்த
வூரையாளுகிற இராஜாவிடத்தி லென்னையனுப்பினார்கள் அந்தராசாவா
னவன் அந்த வாக்கு மூலத்தைப்பார்த்து என்னைத் தூக்கிற்போடும்ப
டியாய் உத்திரவுசெய்தான் மறுநாள் என்னைக்கூட்டிக்கொண்டு தூக்
குமரத்தடியிற்போம என்கழுத்திற் கயிற்றைமாட்டித் தூக்குகிறசமய
மாயிருக்கிறது அந்நேரத்தி லந்த வூர் இராசாவினுடைய மகனுக்குமி
ன் கர்மவியாதி கண்டிருந்தது அந்தவியாதிக்கா அநேகவயித்தியர்கள்
மருந்துகள் கொடுத்துப் பரிகாரஞ்செய்ததில் கொஞ்சமாகிலுந்தீரவில்
லை அப்போது ஒருபெரியவர்வந்து இராசகுமாரனைம்பார்த்து ஐயா உ
னக்குவந்திருக்கும் வியாதி கருந்துகள் மந்திரங்களினாற்றீரமாட்டாது
ஆகையால் குற்றவாளியிருந்து தூக்குப்படியாயுங் கொலைசெய்யும்படிந்தீ
ர்ப்புத்தீர்த்திருந்தால்அவர்களைக் கொல்லாதபடிக்கு நூறுதலையைத்தி
ருப்பிவிட்டா லுனக்குவந்திருக்கிற கர்மவியாதி நீங்கிவிடும்இல்லாவிட்
டால் ஒருபோதும் நீங்கமாட்டாதென்றுசொன்னார்அதுபோலேஇந்தஇ
ராசாமகன்தொண்ணூற்றொன்பதுபேர்களைக்கொலை செய்யவொட்டா
மல் திருப்பிவிட்டு இனமொரு தலைடைத்திருப்பிவிட்டவேணுமென்
றிருக்கையில் ஒருவனோடிப்போய் இராசகுமாரனிடத்திற் சொல்லுகி
றார் ஐய்ராஜகெம்பீரனேஇன்றைக்கு ஒருவனைத் தூக்க கொண்டுபோகி

ரூர்களென்று சொல்ல அதிகவிசெவுடனே குதிரை மீதேறிக்கொண்டு தூக்குமரம் காட்டியிருக்கிற யிடத்தில வந்து நின்றூ அத்தருணத்தில் என்கழுத்தில் கயிற்றைமாட்டி விசைப்பலகையைத்தட்டப்போனார்கள் அந்தக் குதிரைமேல் வந்த இராசகுமாரன் அந்தப் பலகைவிசையைத் தட்டாறமபடிக்குப்பிடித்து உசக்கேயேறிஎன்கழுத்திலிருந்தகயற்றை யெடுத்துவிட்டு எனக்குத்தேறுதலைசொல்லி அவர்போய்விட்டார்.

அப்போது எனக்குப்பசி களைதாகமும் தூக்கிற்போடப்போனவருத்தமும் பொறுக்கமாட்டாமலொருவீதியிற்போய் படுத்துவிட்டேன் என்னுடைய நாயும் என்னருகில்வந்து காத்துக்கொண்டிருந்தது அப்படியிருக்கையில் என் தமையன்மார்களிரண்டுபேரும்இரண்டுசேவகர்களும என்னைத்தேடிதிரிந்து நான்படுத்திருக்குமிடத்தில்வந்து மறுபடியும் பிடித்துக்கொண்டு முன்னடைத்தபந்துகாரனுவிற்கொண்டுபோய் அடைத்துவிட்டு காவல் வைத்துக்கொண்டார்கள் அன்றைப்பொழுது அஸ்தமித்து இரண்டுசாமநேரத்தில் சேவகர்கள் கதவைத்திறந்து என்னை வெளியேவாவென்றார் அப்போநான் வெளியேவந்தேன் அவர்களென்னைக்கூட்டிக்கொண்டு ஊருக்குவெளியே அரைநாழிகை வழிக்கப்புறம் ஒரு கிணருண்டு அந்தக்கிணற்றினோரமகாயென்னைக்கொண்டுபோய் உக்காரச்சொன்னார்கள் அதுபோலவே உட்கார்ந்தேன் அந்நேரத்தி லிவர்களென்னை அந்தக்கிணற்றிற் றள்ளிவிட்டார்கள் நானகீழே விழுந்து முகம்கால் சதுரங்களிற காயப்பட்டு மூர்ச்சையாய்க்கிடந்துசற்றுநேரம்பொறுத்து நினைவுவந்து முழித்துப்பார்தேன்அந்தக்கிணர்இன்னவிதமென்று சொல்லக்கூடாத பாதளமாகவும்அதிகயிருளாகவும்இருந்தது இதுவுமல்லாமல் மனிதர்களெலும்புகள் ஊனுந்தசைகளுமாகவுமிருந்தது அதிலொருமனிதன் ரொட்டியைப்புட்டித்தின்கிற சாடையெனக்குத்தெரிந்தது அப்போது எனக்குமிகவும் பசியானபடியால்மெள்ளவுற்றுப்பார்த்தேன் அப்போது ஒய் மனிதனே எனக்குமிகவும்பசியாயிருக்கிறபடியினலே கொஞ்சம் ரொட்டி கொடுவென்றுகேட்டேன் அப்போதவன் என் சொல்லைக்கேட்டவுடனே மிகவுங் கோபங்கொண்டு என்னையோரு அறையலறந்துகொடுக்கிறதில்லையென்று சொல்லிவிட்டான் எனக்கு இப்பேர்கொற்ற விதியை அல்லாகுத்த ஆலா விதித்தானேயென்று அழுதுக்கொண்டு பசியின்வருத்தத்தினலும் விழுந்தவருத்தத்தினலும் பொழுதுவிடிகிறபரியந்தமவருந்தப்பட்டுக்கொண்டிருந்தேன் அப்போது பொழுதுவிடிகிறநேரமாற்று நான்மேலேபார்த்தே

ன்வெளிச்சந்தோன்றுபது அந்நேரத்தில் நான்வளர்த்தநாய்க்குட்டி குலைத்துக்கொண்டே நின்றது ஆ-ஆ இதென்ன வியாபமாயிருக்குது சம்மைவிட்டு நீங்காமல் ராப்படலறவருக்கத்துக்கெல்லாம் அதுவுங்கூட ரொட்டிப்பான வருத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றதே என்றுயெண்ணியிருக்கும்போது எனதலையி லொரு ரொட்டிவிழுந்தது அதையெடுத்துத் தின்றுக்கொண்டிருக்கையில் மறுபடியுங்குலைத்தது நாய்குலைக்குதே என்னவென்று அண்ணாந்துபார்த்தேன் எனக்குநேராகவொரு தோண்டி நிறையத்தண்ணீரும் அதன்கழுத்தில்கயிற்றையுமாட்டிவருவதைப்பார்த்து அதை நான்பிடித்துத் தண்ணீரைக்குடித்துத் தோண்டியை விட்டுவிட்டேன் அதை இராக்கினபேர்கள்தூக்கிக்கொண்டார்கள் அவர்களிலொன்று எனக்குத் தெரியவராது இதுபோலேதினந்தோறும் நடந்தது எவ்விதமென்றால் கொஞ்சநாளைக்குப்பிறகு எனக்குத்தெரியவந்தது இந்தநாயானது கிணற்றினருகிலிருந்து கடைக்குப்போய்ரொட்டிகள் விற்கிற கடைகளிற்பார்த்து ஒரு ரொட்டியை வாயிற் கவ்விக்கொண்டு மற்றரொட்டிகளெல்லாம் சிதயிம்போம்படியாய் உதைத்துவிட்டு நானிருக்கிற கிணற்றினருகில் வந்து குலைக்கிறது அந்தரொட்டியை எனக்குநேராய்ப்போட்டுவிட்டுக் கிணற்றுக்கடுத்தாப்போல்ஒருகிழவிடம்மையார்வீடிருக்கிறது தண்ணீத்தோண்டியை,மகருகிறதுகிணற்றுமுட்டும்வந்து தலையை நீட்டுகிறதுஓ-ஓ இந்த நாயினுடைய எசமானை இந்தக்கிணற்றில் தள்ளிவிட்டிருக்கிறதுபோல் காணுகிறது ஆகையாலவனுக்குத்தண்ணீர் கொடுக்கும்படியாய்சாடைசெய்கிறதெண்ணிதோண்டியை யெடுத்துத் தண்ணீர்வார்த்து கழுத்திற்கயிற்றைமாட்டிஅந்தக்கிழவிகொண்டுவந்து நானிருக்குங்கிணற்றிலிறக்குகிறது அந்தஜாடைதெரிந்து நான் தோண்டியைப்பிடித்துத் தண்ணீரைகுடித்துவிடுகிறது அவள்தோண்டியைத் தூக்கிக்கொண்டுஅவள் வீடுபோய்ச்சேருகிறது.

இவ்விதமாக நடக்கிரபோது அந்தம்பஜாரிலுள்ள ரொட்டிக்கடைக்காரர்களெல்லாம் ஒன்றாய்க்கூடிப் பேசிக்கொண்டார்கள் அதென்னவென்றால் ஒரு சிறிய நாயானது வெளியேயிருந்து ஓடிவருகிறதிங்கேயடுக்கியிருக்கிற ரொட்டியின்மேலே பாய்ந்து ஒரு ரொட்டியை யெடுத்துக்கொண்டு மற்ற ரொட்டிகளையெல்லாம் சிதறிப்போம்படியாயடித்துப்போட்டுப் போய்விடுகிறது அந்த வொரு ரொட்டிக்குமேல் அதிகம் எடுக்கிறதுமில்லை அந்த நாயைப் பார்த்தாலே மிகு

அழுதும் பசிகாமாயுமிருக்கிறது அதைப்பிடிக்கவேண்டுமென்றொருவனுக்கை யிலக்கப்படுகிறதுமில்லை ஆனபடியினாலே அந்தநாய்கடையில்வரும்போது நித்தியம் ஒருவர் முறைப்படியாக ஒருரொட்டியை யதன்முன்னுக்குப்போட்டுவிட்டால்அதையெடுத்துக்கொண்டுபோய்விடும் அப்போது நம்முடைய ரொட்டிகளுக்குச்சேதம் வராதென்றுஇவாளெல்லாம்பேசித்தீர்மானஞ்செய்தமுறைப்படியாய் இவ்வொரு ரொட்டியை யெடுத்து நாய்முன்னே போட்டுவந்தார்கள் அதை அந்நாய் எடுத்துக்கொண்டு நானிருக்கிற கிணற்றினருகில்வந்து குலைத்து ஜாடைகாட்டிப்போகிறது அதைக்கண்டவுடனே கிழவியும் தண்ணீரைக்கொண்டு வந்து விடுகிறது அதன்பின் அந்தநாய் வெளியேபோய்த் தன்வயிற்றுக்கு இரைபார்த்துக்கொண்டு எதாப்பிரகாரம் இந்தக்கிணற்றடியில் வந்து படுத்துக்கொள்ளுகிறது.

இந்தப்படியாக சிலதுநாள் நடந்துவருகையில் ஒருநாளிராத்திரி நடுச்சாமவேளையில் நான் தூங்கியும் தூங்காமலிருக்கிறபோது ஒருவணியாகப்பட்டது என் தலையிற்றட்டினது அதென்னவென்று எட்டிப்பார்த்தேன் ஒரு ஏணி யிறங்கியிருக்கிறது அதென்னவென்று நம்மையுயர் ஏறும்படியாக யாரோ ஏணியிறங்கியிருக்கிறார்களென்றெண்ணி அதைப்பற்றி உயர ஏறிப்பார்த்தபோது அந்தக்கிணற்றின் சமீபத்திலொரு இராசகன்னிகை ஒரு குதிரையின்மேலேறிக்கொண்டுவேறே யொருகுதிரைக்கு மூஸ்தீபுமுதலிய ஜீனைவைத்திறுக்கித் தன்னருகில் நிறுத்திவைத்திருந்தாள் நானேறினவுடனே அவளென்னைப் பார்த்து இந்தக்குதிரையின் மேலேறுமென்று சொன்னாள் நானந்தக் குதிரையின்மேலேறினவுடனே இரண்டுகுதிரையுஞ் சவுதியில் நடத்திப்போனோம் அப்படி போகும்போது நாயும் எங்களுடன் கூடத்தொடர்ந்துவந்தது அந்த ராசகன்னிகை என்னுடனே சிலவார்த்தைகள் சொன்னாள் அது எனக்குத் தெரியாத வார்த்தையாயிருந்ததால் அதற்குச் சவாபு சொல்லுகிறதற்கில்லாமல் பேசாமலிருந்தேன் அப்போதவளென்னருகில்வந்து என்முகத்தை எட்டிப்பார்த்தாள் பார்த்தவுடனே நான் வேறுமனிதனாயிருப்பதைக்கண்டு அவள் கடுஞ்சினமடைந்து அடாபாவி உன்னைக்கெடுப்பேனே நான் உனக்காகவா கிணற்றில ஏணியையிறக்கி உன்னைமேலே போறிவரும்படிசெய்து இந்தக்குதிரையின்பேரிலேற்றிக்கொண்டுவந்தேன் என்று பல்லை நெறுநெறுவென்று கடித்துதனது இரண்டு கண்ணினாலும் ஆனற்பொறி பறக்கும்படியாகக்கோபங்கொண்டு தன்கையிலிருந்தவாளையுருவி என்னைவெட்டவந்தாள்.'

அப்போது நான் அந்தப்பெண்ணைப்பார்த்து மிகவும்வருந்தி இந்தப்பூலோகத்திலிருந்து இப்போர்க்கொற்ற அவதிப்படுவதைப்

பார்க்கிலும் உன்கையினாலேயே என்றலையைவெட்டிப் போடுவாயானால் மிகுந்த நலமாயிருக்குமென்று அவள் சமீபத்திலென்றலையைச் சாய்த்துக்கொடுத்தேன் அப்போதவளுக்கு எனமீதிலிரக்கம் வந்து வாளை யுடையிலிட்டு என்னைக்கூட்டிக்கொண்டு போய் அந்தவூருக்குவெளியிலுள்ள இவளுடைய பூந்தோட்டத்தின் மத்தியில் ஒருபங்களாவிருந்தது அந்தப்பங்களாவை யவளெனக்குக்காட்டி நீ அதிற்போயிருவென்று ஆக்கியாபித்துப் போய்விட்டாள் அதுபோலவே நான் போய் பங்களாவிலிருந்தேன் அப்படி யிருக்கையில் அவளெனக்குதினந்தோறும் அறுசுவை பதார்த்தங்களுடனே ஓசீவனமனுப்பிக்கொண்டிருந்தாள் அந்தப்புசிப்பை நானதின்று இந்த நாய்க்கும் திர்ப்தியாகப் போட்டுக்கொண்டு வந்தேன் இப்படி யிருக்குநாளில் ஒருநாள் நான் நம்மூரைவிட்டு வெளியில்வந்து பல அவதிகள் பட்டு இந்தபங்களாவில் வந்துசேர்ந்து இதுவரைக்கும் அல்லாகுத்த ஆலாவுடைய வணக்கமென்னுந் தொழுகையைத் தொழுவதற் கிடமில்லாமல் கஸாவாய்ப் போய்விட்ட படியால் சும்மாயிருக்கிற நேரத்தில் விட்டதொழுகைகளை ஓசீவனம்புசித்துப் பசியாறினதன் பின்பு ஒருவருக்குந்தெரியாமற், கஸாதொழுதுவருவேன் நான் இவ்விதமாகத் தொழுதுக்கொண் டிருக்கும்போது ஒருநாள் எப்போதும் ஓசீவனங்கொண்டுவருகிற தாதியானவள் வழக்கம்போல் ஓசீவனங் கொண்டு வந்தாள் அந்தச்சமயத்தில நான் தொழுகையிலிருந்து திகிர்ந்து சலாஞ்செய்து திரும்பிப் பார்க்கும்போது தாதி நிற்கிறதைக்கண்டு திகிலடைந்து இன்றையத்தினம் நமது தலைபோய்விடுமென்று பலபல விதமாயெண்ணி இனி ஆனபடியாகுதென்று தேறி ஓசீவனத்தை வாங்கிப் பசியாறி மிகுதியை நாய்க்குட்டிக்குப் போட்டுமிகுந்த விசனமாக விருந்தேன் அப்போதந்தத் தாதியானவள் தன் எசமானியாகிய இராசகன்னிகைக்கு இங்கே நடந்த சங்கதிகளைச் சொல்லினாள் அதைக்கேட்டு இராசகன்னிகையானவள் மந்திரவாளையுருவிக் கையிற்பிடித்துக்கொண்டு அதிவேகமாக என்னருகில் வந்து என்னை வெட்ட ஓங்கினாள் அப்போது நான் தலையைச்சாய்த்துக் கொடுத்து ஒரேவெட்டாய் வெட்டிப்போவென்று சொன்னேன் அதனாலவள் மனமிரங்கி உருவினவாளை உறையிற்போட்டு மிகுந்த கோபத்துடனே ஒன்றும் பேசாமல் வந்தவழியே திரும்பித் தன்னரண்மனை போய்ச்சேர்ந்தாள் நானும் என்னுடைய நாயும் பங்களாவிற்றானே யிருந்தோம் அந்தராசகன்னிகையின கோபம் மூன்றுநாள்வரையில் தணியாததினால் உணவதின்பன முதலிய ஓசீவனமு மனுப்பாமலிருந்தாள் அதன் பின்பு நாலாநாள் அவளுக்கென்மீதி லிரக்கமவந்து ஓசீவன மனுப்பினாள் அந்த ஓசீவனத்தை நான் சாப்பிட்டு நாய்க்கும்போட்டு மிகுந்தவிசனத்துடனே யிருந்தேன் அன்றிரவில் பத்து நாழிகைக்குமேல் அந்த

ராசகுமாரத்தி ஒரு குதிரையின்பேரி லேறிக்கொண்டு நானிருக்கும் பங்களாவிற்குள் வந்து என்னருகிலுட்கார்ந்து என்னைப் பார்த்து ஒ மனிதனே நீர் எந்தமார்க்கத்தி லுள்ளவர் நீர் வணங்குகிறவணக்கம் என்ன வணக்கமென்றுகேட்டாள் அப்போது நானவளைப் பார்த்து நான் மஹம்மதியர் வேதத்திலுள்ள இசுலாமானவன் நான் வணங்குகிற வணக்கமானது இன்னவிதமான வணக்கமென்று சொல்லிமுடியாது ஆகிலுங் கொஞ்சஞ்சொல்லுகிறேன் கேளென்று சொன்னேன் அதென்னவெனில் எறும்புகடை யெண்பத்து நான்குநூறாயிரம் சீவராசிகளையும் படைத்து இரட்சிக்கின்ற பரமபொருளாகிய ஆதிநாயகன் ஒருவனையே வேண்டித்தொழுகிற வணக்கமென்றும் இன்னுமவேதத்திலுண்டான சகல உபதேசங்களையு மெடுத்துக் காட்டினேன் இவைகளையெல்லா மந்த ராசகன்னிகைகேட்டு மனங்குளிர்ந்து இருதயம் பூரித்து இது நல்லமார்க்கமாக விருக்கிறது இந்தமார்க்கத்தில் நான்வரும்படியாக ஈமான்கொண்டேன் ஆனபடியாலெனக்கு அந்தமார்க்கத்திலுள்ள உபதேசத்தை நீருபதேசிக்கவேண்டுமென்று மிகவும் பிரியத்தோடு சொன்னாள் அதுகேட்டு நான்மனமகிழ்ந்து (லாஇலாக இல்லல்லாகு முகம்மதுற்ற சூலுல்லாகி) என்னும் கலிமாவைச் சொல்லிக்கொடுத்து தொழும்படியான முறைமையும் கரதலபாடமாகச் சொல்லிக்கொடுத்தேன் அவைகளையெல்லா மிராசகன்னிகை கற்றுக்கொண்டு இசுலாமார்க்கத்திலாகி வீட்டிற்குப்போய் பகற்காலங்களில் தானிருக்கும் மிடத்திற்றானே எவர்களுக்குந்தெரியாமல் தொழுது இராவில் அரவமடங்கினவுடனே நானிருக்கும் பங்களாவிற்குவந்து எஸாத்தொழுது என்னைக்கேட்க வேண்டியவைகளைக் கேட்டு சுபகு தொழுது முடிந்தவுடனே தன்வீட்டுக்குப்போய் விடுவாள் இவ்விதமாகச் சிலநாள் நடந்து வருகையில் ஒருநாள் அவளென்னைப் பார்த்து தாங்கள் என்னை நிக்காவென்னுங் கலியாணஞ்செய்துக்கொள்ளவேண்டுமென்றாள்,

அதுகேட்டு நான் பலவித யோசனைசெய்து மிகவுங்கூடா தென்றுதடுத்தேன் அதற்கவள் ஒத்துக்கொள்ளாமல ஒரேபிடியாய் எந்தவிதத்திலாவது என்னைக்கலியாணஞ்செய்துக் கொள்ளவேண்டுமென்று மிகுந்தபிரியத்துடனே வருந்திக்கேட்டாள் அப்போது நான் அவள் சொல்லுக்கொப்பி கபுல்கரா செய்துக்கொண்டோம அதன்பின்பு அன்றிரவில் இசாத்தொழுது இருவருஞ்சம்மதியாய் நிக்காகு செய்துக்கொண்டு உலகத்து வழமைபோலிருப்போம் அப்படி யிருந்தவுடன் அவள் பொழுதுவிடிகிற தருணத்திலெழுந்து குளித்து முழுகி சுபகுதொழுகை தொழுது தன்னரண்மனைக்குப் போய்விடுவாற

இந்தப்பிரகாரம நாங்களிரண்டுபேரும ஒருமித்திருக்கிற சங்கதி ஒ
ருவர்களுந் தெரியாமலிருந்தது இப்படி யிருக்கும்போது ஒருநாள்
இரவில் நான அந்தப்பெண்ணைப்பார்த்து எனதன்புக்கிசைந்த பெ
ண்கள் நாயகமே நாமிருவரு மிருக்குமியல்பை எவர்களாவதறிந்து
உன் தகப்பனுக்குச் சொல்லுவார்களானால் உன தகப்பன் நம்மிருவ
ரையும உயிர்ச்சேதம் செய்யும்படியாக கட்டளையிடுவார் ஆகையால்
நாமெத்தனை நாளைக் கிவ்வித பயங்கரத்துடனே யிருப்பதென்று
சொன்னேன் அதுகேட்டவ ளென்னைப்பார்த்து இதற்கு நீ ரென்ன
யோசனை சொல்லுகிறீரோ அதுபோல நடந்துகொள்ளச் சித்தமாயிரு
க்கிறேனென்று சொன்னாள் அப்போதுநானவளைப் பார்த்துபெண்ணே
நாம இந்தவூரைவிட்டு எங்கேயாவது ஓடிப்போய்விடுவதுதான் மிகுந்
நலமா யிருக்கிறது அப்படிபோகாமல் இவ்விடத்திலேயே யிருப்போ
மானால் உன தகப்பனால் நமக்குத் தப்பாமல் கெடுதிநேரிடுமென்று சொ
ன்னேன் இவைகளையெல்லாங்கேட்டு அவள்சம்மதித்து பொழுது வி
டிவதற்குமுன் தன்னரண்மனைப்போய்ச்சேர்ந்து நாலுக்கு நல்ல ந
ல்ல நகைகளையும் உயர்ந்த ரத்தினங்களையும் சிலபொருள்களையுங் கொண்
டுவந்து என்னிடத்தில்கொடுத்து அடக்கஞ் செய்யச்சொன்னாள் அப்ப
டியே பத்திரப்படுத்திவைத்தேன் இப்படி யிருக்கும்போது ஒருநாள்
அமாவாசையிரவில் நடுச்சாமவேளையில் என்னிடத்திலிருந்த திரவியங்க
ளையெல்லாம் இரண்டு மூட்டையாகக்கட்டி எம்மனைவியாகிய இராசக
ன்னிகைக்கு ஆணுடுப்புப்போட்டு மூட்டையை யெடுத்துக் கொண்டு
இரண்டுபேருங் குதிரையின்மேலேறி அந்நகரத்தைத் தாண்டியப்போ
தும்வரையில் குதிரையை மெதுவாய்நடத்தி அதன்பின் மெய்வேக ம
னோவேகமாயவிட்டு பொழுதுவிடிவதற்குள் நாலுநாள் பிரயாணம் போ
னோம் நாயுங் குதிரையைவிடாமல் தொடர்ந்துவந்தது அந்தச்சமயத்தில்
சூரியன கீழ்த்திசைக்கடலி லுதயமானான் நாங்கள் குதிரையை நிறுத்தி
ஒருகுளத்தினருகி லிறங்கி ஒசீவனமுதலியது தின்று நாய்க்கும்போ
ட்டுதாம்பூலந்தரித்து அவ்விடத்தில் அரைநாழிகைபரியந்தமிருந்து இளை
ப்பாறி உடனே குதிரையின் மேலேறிப்பகலிலும்போனோம் அப்படி போ
ம்போது ஒருநகரம் எதிர்ப்பட்டது அந்நகரத்தைப்பார்க்கமிகுந்த
அலங்காரமாகவும் அதிலுள்ள மனிதர்கள் மிகவும் நல்லவராகவுங் காண
ப்பட்டது.

அதனால் நான் இந்தவூரிற்றானே யிருக்கலாமென்றெண்ணி ஒரு
விஸ்தாரமாகிய பெரியவீடொன்று விலைக்குவாங்கி நானும் எனம
னைவியும் நான்வளர்த்த நாயுமாக அந்தவீட்டில் குடியிருக்கையில் சி

ல வேலைக்காரர்களை வெள்ளாட்டி முதலியபேர்களைச் சேர்த்துக்கொ
ண்டு யாதொருகுறைவில்லாமல் சந்தோஷமாக வாழ்ந்திருக்கும்போது
ஒருநாள் சாயரட்சைக்கு நான்பக்கிவண்டியிலேறி ரவுண்சவாரிபோனே
ன் போகும்போது கடைத்தெருவில வண்டியை மெதுவாக நடத்திக்
கொண்டுபோனேன் அப்படிபோகும்போது இரண்டுமிஸ்கீன்கள் க
டைக்குக்கடைபிச்சைவாங்கிக்கொண்டிருந்தார்கள் நானவர்களைப் பார்
த்து இவர்களாரென்று யோசிக்கையில் என தமையன்மார்களாயிருந்தார்
கள் அவர்களைக்கண்டு நான் மனம்பதைத்து இவர்களிவ்விதமாக இரங்
கு திரியவேண்டியகாரணமென்னவென்றெண்ணி மிகுந்தவியாகூலத்
துடன் இவர்கள்மீதிரக்கப்பட்டு இவர்களைவண்டியிலேற்றிக்கொண்டு
வீடுபோய்ச்சேர்ந்து இவர்களைக்குளித்து முழுகும்படிச்செய்து உடுபோ
வனையுங்கொடுத்து போசனமுதலியதுமளித்துப்பசியாறச்செய்து நாங்
கள் மூவரும் ஏகபோகமாயிருக்கையில் இவர்களையழைத்து உங்களுக்
குநான் தெரியுமாவென்று கேட்டேன் அதுவரையில்என்னை யிவர்கள்
நன்றாய்ப்பாராமல் நான்கேட்டதின் பின்னால் என்னையுற்றுப் பார்
த்து எங்கள் தம்பியல்லவாவென்று என்னைக்கட்டிக்கொண்டு ஓவென்ற
ழுது உனக்குநாங்கள் செய்த பாதகத்தினால் பிச்சைவாங்கித் தின்னும்
படியாக ஆண்டவன் எங்களுக்குக் கட்டளையிட்டான் ஆகையால்நாங்க
ள் செய்தபிழையை நீ மனம்பொறுத்துக்கொள்ளவேண்டியது இனி நா
ங்களுனக்குயாதொருதுரோகமுஞ்செய்ய மாட்டோமென்று சத்தியஞ்
செய்துகொடுத்தார்கள் பின்பு நானவர்களுக்கு யாதொருகுறைவில்லாம
ல் ஒசீவனமும் உடுப்புகளுங்கொடுத்து எனக்குச்சமானமாக வைத்துக்
கொண்டிருந்தேன் இப்படியிருக்கும் நாள்களில்இவர்கள்ஒருநாளிருநா
ளிலும் என்மனைவியைக்கண்டிருக்கமாட்டார்கள் ஒருநாள் அவள்தலை
முழுகி மேன்மாளிகையில் நின்றுதலையாற்றிக்கொண்டிருந்தாள் அப்ப
டியவள் நிற்கிறதை இவர்கள்கண்டு இரண்டுபேருமாக இரகசியம்பேசி
க்கொண்டார்கள் அதென்னவென்றால் நம்முடைய தம்பியானவன் இப்
பேர்ப்பட்டபெண்ணை எவ்விடத்திலிருந்தோகொண்டுவந்து சந்தோஷ
மாகச் சுகத்தையனுபவித்துக்கொண்டிருக்கிறான் நாம் ஒன்றுமில்லாமல்
பக்கீரைப்போல்சும்மாயிருப்பது சரியல்லஇவனைஎவ்விதத்திலாவது மோ
சஞ்செய்து அந்தப்பெண்ணை நம்முடையகைவசப்படுத்திக்கொண்டு சு
கத்தையனுபவிக்கவேண்டுமென்று ஒருவர்க்கொருவர்பேசி முடிவுபண்
ணிவைத்துக்கொண்டு ஒருநாள்காலையில் என்னிடம்வந்து தம்பிநம்கா
ட்டுக்குப்போய் வேட்டையாடிவர எங்களுக்குமிகவும் ஆசையாயிருக்கி
றது அதற்கென்னசொல்லுகிறாயென்று கேட்டார்கள்.

அப்போது நான் இவர்களுடைய கபடத்தை யறியாமல இவர்களாசையை நிறைவேற்றவேண்டுமென்றெண்ணங்கொண்டு அப்போதே மூன்றுகுதிரை தயார்படுத்தி அதன்மேல்மூவருமேறி நாயுடனே குதிரைகளைநடத்தி காட்டிற்குமகதியிற்போனோம் அந்தச்சமயத்திலிவர்களிரண்டுபேரும் குதிரையைவிட்டுக் கீழேயிறங்கி என்குதிரையின்கடிவாளத்தைப்பிடித்துக்கொண்டு என்னையிழுத்து கீழேதள்ளி அடியும் உதையுமாக வுதைத்து இனியுன்னை நாங்கள் இந்தப்பூலோகத்தில் வைக்கிறதில்லைகொன்றுவிடுகிறோமென்று குத்தும்வெட்டுமாகவெட்டினார்கள் அப்போது நான்கீழே விழுந்து மூர்ச்சையாய் சக்கருத்தென்றும்பிராணாவஸ்தையில் கைகாலசைக்காமலிருந்துவிட்டேன் அதைகண்டிவர்கள் நான் மவுத்தாகிவிட்டேனென்று என்னையிழுத்து புதரிற்போட்டுவிட்டு குதிரையின்மேலேறி சீக்கிரமாய்ப்போய்என்வீட்டில் நுழைந்து என்மனைவியிருக்கிறஅந்தப்புறத்திற்குப்போனார்கள் அப்போது என்னுகி யானவள் இவர்களைப்பார்த்து ஒருநாளிலும் இவர்கள் இங்குவந்ததில்லையே இப்போதிவர்கள் நம்மெதிரில்வரவேண்டியக்காரணமென்னவென்று மனம்வருந்தி என்னசங்கதியென்று கேட்டாள் அப்போதிவர்கள் சொன்னார்கள் உன்புருஷனைக்காட்டிற்கொண்டுபோய்க் கொலைசெய்து போட்டோம் ஆகையால் இனிமேல் நாங்கள் இரண்டுபேரும் உனக்குநாயகர்கள் எங்களிருவருக்கும் நீ பெண்சாதியாக யிருக்கவேண்டுமென்று அவள்சமீபத்திற்போய்க்கையைப்பிடிக்கிக்கொண்டு உடனே உயிரை மாய்த்துக்கொண்டாள் அதன்பின்பு இவர்கள் அந்தவீட்டிலிருந்த ஆஸ்திபாஸ்தியையெல்லாமெடுத்துக்கொண்டு அந்தவீட்டிலிருந்து அநுபவித்துவந்தார்கள்,

இவர்கள் என்னைப் பலவித இம்சைசெய்து இறந்து போனேனென்று போட்டுப்போனபிறகு சற்றுநேரஞ்சென்று எனக்குக்கொஞ்சம் ஸ்மரணைவந்து என்தேகமெல்லாம் வெட்டுங்குத்தும்பட்டிருக்கிற வலித்தத்தால் எழுந்திருக்கசக்தியற்று பூமியில்விழுந்துகிடந்தேன் அப்போது அந்தவூரிராசகுமாரத்தி சிலதாதிகளுடனே இந்தக்காட்டுக்கு வேட்டையாடவந்தாள் அவள்வேட்டைமுதலானவைகளையெல்லாமாடி தன்னகரத்தைநோக்கும்போது நான்வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறவிடத்தில் சமீபமாய்ச்சிலதாதிகளுடனே பல்லக்கின்மீதில்வந்தாள்நான் அப்போது வருத்தப்பட்டுஞ்சத்தத்தைக்கேட்டு என்னைப்பார்த்து மனம்வருந்தி தன்னுடையதாதிகளையழைத்து இந்தப் புதரினுள் வருத்தப்படுகிறசத்தங் கேழ்க்கிறபடியால் அதைப்போய்ப்பார்த்து வாருங்களென்று சொன்னாள் அதைக்கேட்டதாதிகள் ஓடோடியுமென்னருகில் வந்து நான்படுகிற அவஸ்தையைப்பார்த்து அந்த ராசகுமாரத்தி யி

ளிடத்திற்போய்ச்சொன்னார்கள் அவள்வந்து என்னைப்பார்த்து சில தாதிகளால் என்னை தோலிலெடுத்துப்பிடித்துக் கொண்டுபோகையில் என்னருகிலிருந்து குலைத்துக்கொண்டிருந்த நாயுங்கூடவே வந்தது அப்போதுஅந்த ராசகுமாரத்தி என்னைத்தன்னுடைய பூங்காவனத்தோட்டத்திற்கொண்டுபோய் அதிலிருந்த மாலில்வைத்து ஒருநாணாவித்தியரைவரவழைத்து காயமுதலியதற்கும் பிளாஸ்திரி சிலபெண்ணைதிராவகமுதலியவைகளைப்போட்டு ஒருமாதத்திற்குள் என்னைசொஸ்தப்படுத்தி எனக்காகவேண்டியவஸ்துக்களையெல்லாங்கொடுத்துக் காப்பாற்றிவந்தாள் ஆனாலவளுமகாபருமான இராசகுமாரத்திதான் அப்படியிருக்கும்போது நான் உடம்புசொஸ்தமாகி யெழுந்துயாதொருகுறைவுமில்லாமல் அவள்கொடுக்கும் ஓசிவணக்கைத்தின்று மிச்சத்தைநாய்க்குக்கொடுத்து அந்தந்தவேளைகளில் அல்லாகுசுபுகானதுக்க ஆராதனைஎந்நேரமும் வணங்கிக்கொண்டிருந்தேன் முன்தாதியைபோலவே இந்தஇராசகுமாரத்தியுடையதாதியும்நான்வணங்குகிறதைக்கண்டோடிப்போய்தன்னுடைய இராசகுமாரத்திக்குச்சொன்னாள் அவள் சொன்னதைக்கேட்ட ராசகுமாரத்தி அவன் எந்தமார்க்கத்திலுள்ளவனோநமக்குத்தெரியவில்லையே அதைப்பரிசோதிக்கவேண்டுமென்றுமனதிலெண்ணிக்கொண்டு சிலநாள தேகவனமாயிருந்து ஒருநாளிரவில் இரண்டுசாமத்திற்குமேற்தானொருத்தியுமாயெழுந்து அந்தப்பூங்காவனத்தில்நானிருக்கிற மாலுக்குள்வந்தாள அப்போது நானெழுந்து மிகவும்பயந்து இராசகுமாரத்தியென்கிறமரியாதையுடனே தாமிங்குவந்தகாரண மென்னவென்றுகேட்டேன் அதற்கந்தப்பெண்ணானவள் என்னைப்பார்த்துநீயெந்தமார்க்கத்திலுள்ளவா நீர்செய்கிற செய்கைகளைப்பார்த்தால புதிதாகிய மார்க்கமாகவிருக்கிறது ஆனையாலதை எனக்குத்தெரியும்படியாய் வகைவிபரமாக உள்ளபடிச்சொல்லவேணுமென்று கேட்டாள் அப்போது நான்முன்னிராசகுமாரத்திக்குஎவ்விதமாய்ச்சொன்னேனோ அதேபிரகாரம் ஈகஸ்துதியுடனே இந்த ராசகுமாரத்திக்குஞ்சொன்னேன் அவைகளையவள்கேட்டு ஆனந்தசாகரத்தில் மூழ்கினவளாய் அவளெவ்விதமாக என்னைக் கலியாணஞ்செய்துக்கொள்ளென்றுசொன்னளோ அதுபோலவே இவளுமஎன்னை நிக்காகுசெய்துக்கொளளென்றுசொன்னாள்.

அதற்கு நானுஞ்சம்மதித்து இருவருக்குநிக்காமுடிந்து இன்பமுகலி சுகத்தையநுபவித்து மாதுங்கலையும்போலே அனலும் மேடும்போலே ஒருவருக்கொருவர்தெரியாம லிருக்கிற நலையிலிவளைப்பார்த்தவனைளி பத்திரகிரைந்தபெண்கள்யாவரும்போமிருவரும எவ்வளவு நாளைக்கிப்படியிருக்கிறது உனது தப்பன் நமுடைய சங்கதியைக்கேட்டால்

நபமிருவரையும் ஒரேவீச்சாய் வீசி உயிரை மாய்த்துவிடுவானதற்குச்ச
ந்தேகமில்லையாகையால் நாம இந்த வூரை விட்டு நீங்கி இன்னமொரு
தேசத்திற்குப்போய் சுகமாகவாழ்ந்துக்கொண்டிருக்கலாமென்று சொ
ன்னேன் அதுகேட்டு என்னூசைநாயகிசொல்லுவள் கேளும் என்ன
ண்பிறந்திசைந்த ஆசைநாயகமே என்தகப்பனுக்கு அன்பக்தாறுதேசங்க
ளிலுமுள்ள இராசாக்களுட திறைகட்டி வருவதால் அந்த தேசங்க
ளெல்லாம் என்தகப்பனதாயிருக்க நாம் எந்தவூரிற்போய் இருக்கிறது
அப்படியேபோயிருந்தாலும் தேசதேசங்களுக்குந் தூதுவரையனு
ப்பி நம்மைப்பிடித்துக்கொள்வார்களாகையால் நானொருதந்திரஞ்சொல்
லுகிறேன் கேளும் அதென்னவென்றால் துலைதேசங்களிருந்து இந்நகர
த்துத்துக்கப்பல்கள் வருகிறது அந்தக்கப்பல்களிலொருகப்பற்காரனை
நீர் சினேகிதப்படுத்தி அவருக்கு சொல்லவேண்டியதென்னவென்றால்
உங்களுடன்கூடவருகிறேன் என்னைக்கப்பலிலேற்றிப்போமென்றுசொ
ல்லுமப்போது அவர் மிகவும் உம்மிடபேரில் பிரியமாகிக்கூடவரும்படி வி
ரும்பிக்கூப்பிடுவார் அதுபோலவே நீரும் சம்மதித்துக்கப்பற்பயணத்து
க்காக வேண்டிய தின்பதார்த்தமு மற்றும் ஆகவேண்டிய சாமத்துக்கு
மேல் ஒருபோட்டில்நீரும் நாலுகிளாஸ்க்காரருமாய் இந்தசங்காரத்தோ
ட்டத்துக்குச் சமீபமாய்ப்போட்டைவிட்டுக்கீழேயிறங்கி நீங்களைந்துபே
ருமாக இந்தமாலுக்குள்ளே வந்து என்னையழைத்துக்கொண்டு போக
வேணும் ஆனால் அந்த கப்பற்காரரும் கிளாஸ்க்காரரும் என்னை இன்
னாரென்றறிந்துகொள்ளக்கூடாது ஆகையாலொருபெட்டிசெய்து அ
தற்குள் இரண்டுமாதத்திற்குப்போதுமான தின்பண்ட முதலியவைக
ளைவைத்து அதற்குள்ளே நானிருந்து பூட்டிக்கொள்ளும்படியாகக் கீல்
முதலியவைகளையமைத்து அந்தப்பெட்டியை நாலுகிளாஸ்க்காரர்கள்
தூக்கிப்போட்டில்வைத்துக்கப்பலிலேற்றிக்கொண்டுபிரயாணப்பட்டு
ப்போய் துலைதேசங்களிலிருந்தால் நமக்கு யாதொரு துன்பமுநேரிடா
து இந்த யோசனைகளுடக்கெப்படியிருக்குமென்று கேட்டாள் அவள்
சொல்லிய சொற்கள் என்மனதுக்குச்சரியாயிருந்தபடியினாலேகாரிணை
த்துக்கொண்டு அந்தமாலைவிட்டு வெளியில்வந்து கடற்கரையோரத்தி
ற்போய் துலைதேசங்களிலிருந்து வருகிறகப்பல்வரவைப்பார்த்துக்கொ
ண்டிருந்தேன் அந்தச் சமயத்தில் இந்த ராசனைச் சேர்ந்த தேசங்
களிலில்லாமல் என்னூருக்கு சமீபத்திலிருக்கும் தேசத்திலுள்ள ம
னிதன் கப்பலோடிவந்தது அதிலுள்ளவர்கள் துறைமுகம் பிடித்து
கப்பலை நிறுத்தி பச்சுவாயி லிறக்கி சமைத்து சேர்ந்தார்கள் நாங்

அவர்களில் கப்பலுக்கு எஜமானைக்கண்டு பிரியமாகப்பேசி சினேகஞ்
செய்துக்கொண்டு அவர்சரக்குகளை விற்பனைசெய்து பிரயாணமாகிற
வரையிலும் அவரிடத்திற் போக்குவருத்தாக விருந்தேன் அப்போ
தவர்கள் கப்பல் பிரயாணமாகிறதா யிருந்தது நான் அந்தக்கப்பற்
காரரைப்பார்த்து நானுமுங்களுடன் வருகிறேனென்று சொன்னேன
அவனென்மீது மிகுந்த பிரியமாகி அப்படியே வாருமென்றுசொன்னார்
அப்போது நான் பலவித சாமான்களுந் தட்டுமுட்டுகளும் வாங்கிக் க
ப்பலேற்றிவிட்டு நானும்போய்க் கப்பலிலிருந்தேன் இப்படியிருக்
கையில் பொழுது அஸ்த்தமித்து இரவு பத்து மணிநேர மாச்சுது அ
ந்நேரத்தில் நான் என் சினேகிதியான கப்பற்காரரைப்பார்த்து ஐயா
என்சாமான் பெட்டியொன்று கடற்கரையிலிருக்கிறது அதனைக் கப்ப
லேற்றிக்கொள்ளவேண்டுமென்று சொன்னேன் அவர் அப்படியே ச
லுதியிற்போ யேற்றிக்கொள்ளு மென்றார் உடனே நான் நாலு கிளா
ஸ்காரரை யழைத்துக்கொண்டு போட்டிலேறிப்போய் கரையிலிறங்
கி போட்டைக்கட்டிவிட்டு அந்தச் சிங்காரத் தோட்டத்திற் குள்ளி
ருக்கும் பாலுக்குட்போனேன் அதற்குள்ளாக எனது நாயகியான
வள் சில ரத்திநங்களையும் அளவிறந்த நகைகளையும் சிலபொருள்க
ளையும் பலதின்பண்டங்களையும் போதுமான தண்ணீரையும் பெட்டி
க்குள்வைத்து தானுமதனுள் உட்கார்ந்து பெட்டியைப் பூட்டிக்கொ
ண்டிருந்தாள் நானும் நாலுகிளாஸ்க் காரருமாக அந்தப் பெட்டியை
த்தூக்கிக்கொண்டு நாயையுங்கூட அழைத்துக் கொண்டுபோய் போ
ட்டிலேறி பெட்டியைக் கப்பலிலேற்றி நாங்களுமேறி பொழுது விடிந்
த ஆறுமணிக்கு லங்கரைத்தூக்கிக் கப்பலிற் பாய்விரித்து விட்டோம்
அது அந்நகரத்தைவிட்டுப் புறப்பட்டு கடலிற் கப்பலோடிக் கொண்டி
ருந்தது இப்படியிருக்க அந்நகரத்தையாளும் இராசாவானவர் தன்ம
களைக் காணோமென்று மிகவும்வருத்தப்பட்டு ஊரடங்கலுந் தேடிப்
பார்த்துக் காணாமையால் தாதிகளை யழைத்துக் கண்டனை தண்டனை
செய்துகேட்டார் அதனாலவர்கள் இராஜனைப்பார்த்துக் கேளுங்கள்
இராசாதிராசனே நாங்கள்யாதொருகாரியமு மறியமாட்டோம ஆனா
ல்தங்களுடைய குமாரத்தி நமது பூங்காவனத் தோட்டத்தி லுள்ள
பங்களாவில் ஒருமனிதனைவைத்து சோறு முதலியவைகளு மவனுக்
குப்போட்டு பாதுகாத்துவந்தாள் அந்தமனிதனையும் அவிடத்திற்
காணோம் தங்கள் மகளையுங் கூடக்காணோமென்றுசொன்னார்கள் உட
னேயிராசாவானவர் சிலவீரர்களை யழைத்து நாலுதிக்கும் எட்டுக்கோ
ணமும் பதினாறுதிசையிலும் தேடிப்பார்க்கும்படியாய்ச்சொன்னார் இ
துவல்லாமல் சிலகப்பல்களையும் பாய்விரித்து கடல் மார்க்கத்திலும்
தேடிப்பார்க்கச்செய்தார் அதுபோல் கரைமார்க்கத்திற்போன வீரர்

களும் கப்பலின்மீதுபோன வீரர்களும் பலதிசையிலுந் தேடியலைந்து எங்குங்காணாமல் ராசாவிடத்தில் வந்து நமஸ்காரஞ்செய்து நாங்கள் பலதிசையிலுந் தேடிப்பார்த்தோம் தங்கள் குமாரத்தியையும் அந்த மனிதனையுங் காணோமென்று சொன்னார்கள் அதன்பின்பு அவ்வரசன் தனக்குத்திறைகட்டுகிற ஐம்பத்தாறு தேசத்தரசர்களும் நிருபமெழுதித் தூதவர்கள் கையிற்கொடுத்து அவரவர்களுக்குக் கொடுக்கச் சொன்னார் அப்படியே தூதுவர்கள் தேசதேசங் களுக்குப் போய் இராசாக்களைக்கண்டு நிருபத்தைக் கொடுத்தார்கள் அவர்க ளதைவாங்கிப் பிரித்துவாசித்துப்பார்க்க அதி லெழுதியிருந்ததாவது என்குமாரத்தி இருந்தாப் போலிருந்து காணாமற் போய்விட்டாளென்று அவளுடைய வடிவு நிறம் உயரம் பேர்முதலியவைகளையுங் கண்டெழுதி இவ்விதவடிவுள்ள பெண்ணை எவர்களாவது கரைமார்க்கமாவது கப்பல்மார்க்கமாவது கொண்டுவந்திருப் பார்களானால் அந்தப் பெண்ணையும் அவளுடன் வந்தமனிதனையும்பிடித்து உடனே யிவ்விடத்திற் கனுப்பவேண்டுமென்று எழுதியிருந்தது அதுகண்ட ராசாக்கள் மனம்பதைத்து இன்னகுறிப்புடைய பெண்ணை எவர்களாவது பிடித்துக்கொடுத்தால் ஆயிரம்பொன் இனாம்கொடுப்போமென்று ஊர்களுக்குத் தண்டோராபோடுவித்து சிலசேவகர்களையனுப்பிப் பலவிடத்திலுந் தேடச்சொல்லியும் அந்தத்துறையி லிறங்கப்பட்ட கப்பல்களைச் சிலசேவகர்களால் சோதனைசெய்துக்கொண்டு மிருந்தார்கள் இப்படியாக பலவிடத்திலும் சேவகர்கள் தேடிக்கொண்டும் வரப்பட்ட கப்பல்களை எல்லாம் சோதனைசெய்துக்கொண்டு மிருக்கையில்நாங்களேறிப்போன கப்பலில் தண்ணீரில்லாமற் போய்விட்டபடி யால் நாங்கள் ஒருஷகராகிய நகரத்தின் துறைமுகத்திற்போய் தண்ணீர்சேத்திக்கொள்ளலாமென்று யோசனைசெய்து ஒருநகரத்தின் துறைமுகத்திற்போய் கப்பலை நிறுத்தி லங்கர்பாய்ச்சினோம் அந்தச்சமபத்தில் சிலசேவகர்களும் கொத்தவாலும் எங்கள் கப்பலைக்கண்டு உடனே ஒரு படவிலேறி எங்கள் கப்பலுக்கருகில்வந்து நகுதாவையழைத்து இந்தக்கப்பலிலிருக்கிற ஆண்பெண்ணடங்கலும் கரையிலிறங்கவேண்டுமென்று சொன்னான் அதுபோலவே கப்பலுள்ளவர் களெல்லாம் கரையிலிறங்குங்களென்று நகுதா உத்திரவுசெய்தார் அதுகேட்டு அந்தக்கப்பலுள்ளவர்கள் தங்கள் தங்கள் பெண்சாதிக ளுடனே அந்தத்துறையிலிறங்கினார்கள்.

அதுகண்டு நான் மனம்உருக்கி வெளியில்வந்தேன் உடனே அந்தக்கொத்தவால் என்னைப்பார்த்து உன்பெண்சாதியென்று கேட்டான் அதற்கு நான் எனக்குப்பெண்சாதியில்லை நான் மாத்திரந்தனியாய்க் கப்பலேறிவந்தேனென்றேன் கொத்தவால் நகுதாவைப்பார்

த்து இவன் மட்டுந்தானுவந்தான் இவன்கூட யாரும்வர வில்லையா வெ
ன்று கேட்டான் அதற்கு நகுதா இந்தமனிதன் ஒருநாயும் ஒருபெட்
டியுங்கொண்டுவந்தான் இவனுடன் வேறொருவரும் வரவில்லையென்
று சொன்னான் உடனே யந்தக்கொத்தவால் பெட்டகத்தை யெடுத்து
வரச்சொல்லி அதைதிறந்து காண்பிக்கச்சொன்னான் அதற்குளிருந்த
பெண்ணைக்கொத்தால்கண்டு பழையபடியே பெட்டியைமூடிசாவியைத்
தான்னெடுத்துக்கொண்டு பெட்டியை ஒருபோட்டிலிறக்கி என்னையும்
நாயையும் அத்துடன்கூடயிறங்கு படிச்செய்து அந்தநகுதாவைப் பா
ர்த்து கண்டனை தண்டனையுடன் பயப்படுத்தி பின்பு அவனைவசப் படு
த்தி விட்டுத்தானும் போட்டிலிறங்கி தண்டுவலித்து கரையிற்போ
னவுடன் அந்தக்கொத்தவால் என்னைபிடித்து மிகுந்தவருத்தப்படு
த்தி நீ எங்கேயாவது ஓடிப்போய்விடு இல்லாவிட்டாலுன்னை சிரசா
க்கினைசெய்து விடுவேனென்று பயமுறுத்தித் துரத்திவிட்டான் அப்
போது நானும் என்னுடையநாயுமாகவொரிடத்திற்போயிருந்தோம்.

அப்போதந்தக் கொத்தவாலினது நாயகியிருக்கும் பெட்டியை
ச்சிலமனிதற்களால் தன்வீட்டிற்கொண்டுபோய் சேர்ப்பித்து அந்தக்
கப்பலிலிருந் திறங்கிய பலரையும் அழைத்துக்கொண்டுபோய் அரச
ன் சமுகத்தில்விட்டு இந்தமனிதர்கள் தானந்தக்கப்பலில்வந்த வர்க
ள் இவர்களைத்தவிர வேறொருவருமில்லையென்றுசொல்ல இராசாஅவ
ர்களையெல்லாம்பார்த்து நீங்கள் உங்கள் கப்பலுக்கு போங்களென்று
உத்தரவுகொடுத்தார் அவர்களெல்லாம் போட்டிலேறி கப்பலுக்குப்
போய் விட்டார்கள பின்பு கொத்தவாலானவன் அந்தக்கப் பலுக்
குத்தண்ணீரேற்றி நகுதாவுக்கு உபசாரமானவார்த்தைகளைச் சொல்
லிப் பயணப்படுத்தி அனுப்பிவிட்டான் கப்பல்போய்விட்டது பின்பு
அந்தக்கொத்தவால்தன் வீட்டுக்குபோய் பெட்டியைஒரு அறைக்குள்
கொண்டுபோய்வைத்துத்திறந்து அதிலிருக்கும் என்னுடைய நாயகி
யை மிகுந்த ஆவலுடனே தூக்கப்போனான் அதுகண்டு அப்பெண்
ணானவள் அவனைப்பார்த்து கேளும்கொத்தவாலே (பதறாத காரியஞ்
சிதறாது) என்னும்பழமொழியைப்போலே நீ பதரவேண்டாம் நான்
உன்கைக்குள்ளசப்பட்டபடியினாலே இனிதப்பிப்போகப்போகிற தில்
லை ஆகையால் என்னாயகனும் நானும் கப்பலேறும்போது நானொருநி
ர்ணயஞ்செய்துக்கொண்டேன் அதென்னவென்றால் சீக்கிரமாக எங்க
ள் தேசம்போய்ச் சேரவேண்டுமென்னும் அபேக்ஷையால் ஆறாயாத
நோன்புவைத்துக்கொண்டு ஆண்பிள்ளைகள் முகத்தில் முழிக்கக்கூ
டாதென்று இந்தப்பெட்டிக்குள்ளே யிருக்கிறேன் இதுவரைக்கும் ஒ

ரு மாதமாச்சுது இன்னம் ஐந்துமாதம் போகவேண்டும் அது வரையில் நீர் பொறுத்திருக்கவேண்டும் நோன்பு முடிந்தபின்பு உம்முடைய மனோபீஸ்டம்போலே நான் நடந்துக் கொள்ளுவேனென்று அதிவினயமாகச்சொன்னவுடன் அந்தக் கொத்தவாலுக்குச் சந்தோஷமுண்டாகி அந்தப்பெண்ணை வெளியில் வரும்படியாகச்செய்து ஒரு சிங்காரமெத்தைவீட்டில் அம்சதூளிகாமஞ்சத்தில் சயனித்திருக்கும் படிச் செய்து சிலதாதிகளையும் அந்தப்பெண் பணிவிடைக்குவைத்து அந்தப்பெட்டிக்குள்ளிருந்த இரத்தினம் பொருள் பூஷணாதிமுதலியதுமெடுத்து தன்பொருளோடேகூடச் சேர்த்துக்கொண்டான் அவர்கள் அப்படியிருக்கநானந்தக்கொத்தவாலிடத்தில் அடிபட்டுஒருபக்கத்திற்போயிருந்து பின்பெழுந்து அந்நகரத்தைநோக்கி நாயும்நானுமாமகப் போனோம்

அப்பொழுது பொழுதஸ்தமித்து இரண்டுஜாமநேரமாய் விட்டது அந்நேரத்தில் ஒருவீதியில் ஒரு பூவாணிச்சிவீடிருந்தது அந்தவீட்டின் வெளித்திண்ணையில் நாயும் நானுமாகப் படுத்துக் கொண்டோம் அப்போது விடியுமட்டும் எனக்கு நித்திரைவரவில்லை அதேனென்றால் கொத்தவாலானவன் என்னையடித்துத் துரத்திவிட்டு என்பெண்சாதியை யபகரித்துக்கொண்டதினாலும் பசியின் வருத்தத்தினாலும் நம்முடைய நசீபாகிய அதிர்ஷ்டம் இப்படியாயிருக்கிறதென்று மிகவும் விசாரத்துடனே படுத்துக்கொண்டிருக்கையில் பொழுது விடிந்தது அந்தச்சமயத்தில் அந்தவீட்டுப் பூவாணிச்சியானவள் தெருக்கதவைத்திறந்து பெருக்கும் படியாய்வந்தாள் அப்போது நான்பசிகளையாக முகஞ்சோர்ந்து படுத்திருக்கிறதைக்கண்டு அந்தப்பூவாணிச்சியானவள் என்னைப்பார்த்து மிகவும் பிரியத்துடனே யெழுப்பி நீயேன் இங்குபடுத்திருக்கிறீர் உம்முடைய ஊரெது நீ இங்கே என்னத்துக்காகவந்தாய் சொல்லென்று கேட்டாள் அப்போது நானவளைப் பார்த்து அம்மா நான் ஏழையாகிய மிஸ்கீன் எனக்கு அதிகபசியாயிருக்கிறதென்று சொன்னேன் அப்போதவள் என்னை உள்ளே கூட்டிக் கொண்டுபோய் ஒசிவனமுதலிய பதார்த்தங்களைக் கொடுத்தாள் அதைத்தின்று பசியாறி மிஞ்சினதை நாய்க்குங்கொடுத் திருக்கும்போது அந்தப் பூவாணிச்சிச்சொல்லுவாள் கேளுமப்பா எனக்குப் பிள்ளையில்லாத படியினாலே உன்னைப் பிள்ளையாகப்பாவித்துக் கொள்ளுகிறேன் நீ யொருபக்கமும் போகவேண்டாம் உன்மனது என்னமாயிருக்கிறதென்றாள் அதற்கு நான் அந்தம்மாளைப்பார்த்து உன் மனம்போலே நானும் பிள்ளைதான் நீ எனக்குத் தாய்தானென் றவள்வீட்டி லிருந்தேன் அவள் பிள்ளையில்லாதவளானபடியால் என்னை மிகவும் ஆதரித்து என் மீதுகிருபையாகப்

போசனமுதலிய ஜீவனங்கொடுத்து நாய்க்குமுன்வளர்த்து வைத்துக் கொண்டிருந்தான் இப்படி நாளாறு நான் சென்றதின்பிறகு ஒருநாள் அந்தவீட்டைவிட்டு வெளியிலவந்து அந்நகரத்தை சுற்றிப் பார்த்து வந்தேன் எனக்குப் பசிதாகம் அதிகமாயிருந்தது அப்போது நான்பூவாணிச்சியைப்பார்த்து தாயே எனக்குச்சாப்பாடுபோடவேணுமென்றேன் அதற்கவள்சொல்லுவாள் மகனே இந்தவூர் இராஜாவுடையகொத்தவாலானவன் ஒருபெண்ணைப் புதிதாகக்கொண்டு வந்துவைத்திருக்கிறான் அவளுக்கு தினந்தினம் நான்பூகட்டிக்கொடுத்து வருகிறேன் இப்போதுநாழியாய் விட்டது அவளுக்குப்பூகட்டிக்கொடுத்துவிட்டுஉமக்குசமையற்செய்து போடுகிறேனென்றாள் அப்போதுநானவளைப்பார்த்து கேளுந்தாயே அதுவரையிலும் என்னால் பசிபொருக்கமுடியாது ஆகையால் நீகட்டுகிறபூவைநான் கட்டுகிறேன் எனக்குச்சமையல்செய்து சீக்கிரமாய்ப்போடென்று சொன்னேன் அதுகேட்டந்தம்மாள் என்மீதிரக்கமும் கிருபையும்வைத்து கொத்தவாலுடையதண்டனைவந்தாலும் வரட்டும் பிள்ளைபசியாயிருக்கிறதென்றுவிரைவாயெழுந்து சோறுகறிசமைக்கப்போனாள்,

அப்போதுநான் புட்பங்களையெடுத்துக்கட்டி அதனுள் என்கணையாழிமோதிரத்தையும்வைத்து பக்குவமாகச் சுருட்டிக்கட்டிவைத்தேன் அதற்குள் கிழவிசமைத்து சமயலாய்விட்டது சாப்பிடுவாமகனேயென்று அந்தம்மாளழைத்தாள் நான்போய்புசித்துக்கொண்டிருந்தேன் அந்தத்தருணத்தில் நானதொடுத்துவைத்த பூவை அந்தம்மாளெடுத்துப்பார்த்து தான்கட்டுவதைப்பார்க்கிலும் நான்கட்டியது மிகுந்தவினோதமாகயிருக்கிறதென்றுஎன்பேரிலதிக சந்தோஷமாகிப் பூவையெடுத்துக்கொண்டு கொத்தவால் வீட்டுக்குப்போய் அந்தப்பெண்ணிருக்கிற சிங்காரமெத்தைவீட்டில் நுழைந்து எனதுமனைவியினிடத்தில்பூவைக் கொடுத்து தன்வீட்டுக்குவந்தாள் அதன்பின்பு இரவில் கொத்தவால்வீட்டிலிருக்கும் என்மனைவியானவள் தான்படுத்துக்கொள்ளுஞ்சமயத்தில் அந்தபூவைவிரித்து தன்னுடைய அளகாபாரத்தில் முடித்துக்கொள்ளப்போகும்போது என்கணையாழிமோதிரமானது பளிச்சென்றுமின்னியது அதுகண்டு அவள்மிகுந்தசந்தோஷத்துடனே அந்தமோதிரத்தைப்பார்த்து நம்முடையகணவன் நம்மைவிட்டுத்தப்பிப்போகவில்லை இந்தப் பூவாணிச்சிவீட்டில்தான் வந்து சேர்ந்திருக்கிறாரென்றெண்ணிச்சந்தோஷப்பட்டு அதிகமகிழ்ச்சிகொண்டிருந்த பொழுதுவிடிந்தவுடனே ஒருதாதியையழைத்து பூவாணிச்சியைக்கூட்டிவாச்சொன்னாள் அவள் வந்துபூவாணிச்சியை யழைத்துக்கொண்டுபோய் அவளிடத்தில்விட்டா

ள் அவள் பூவாணிச்சியைப்பார்த்து நேற்றைப்தினத்தில் உனக்குப்பூக
ட்டிக்கொடுத்தவர்களார் உண்மையாகச்சொல்லவேணும் அப்படிச்சொ
ல்லாவிட்டாலுன்னை தண்டனைசெய்வேனென்றாள் அதைக்கேட்டு பூ
வாணிச்சிபயந்து நடுநடுங்கி நான்தானம்மா கட்டினேனென்றாள் அப்போ
தந்தபெண் பூவாணிச்சியைப்பார்த்து அம்மா நீ யொன்றுக்கும் பயப்
படாமல்நிஜத்தைச் சொல்லுவையானால் உனக்குவேண்டிய பொருளைக்
கொடுக்கிறேன் அப்படிச்சொல்லாவிட்டால் உன்தலையை மொட்டைய
டிக்கச்சொல்லுவேனென்றாள் இவ்வார்த்தையைக் கேட்டகிழவிதிடு
க்கிட்டு அம்மாஉண்மையாகச்சொல்லுகிறேன்எனக்கொருமகனுண்டு
அவன்நேற்றையதினம் பசியாயிருக்குதென்று சொன்னான் நான் அ
வன்முன் பூவைவைத்துவிட்டு சோருகறி சமையல்செய்யப்போனேன்
அதற்குள்ளாக அந்தப்பூவையவனெடுத்து கட்டிவைத்தான்நான்சோ
றுகறி சமைத்து அவனுக்குப்போட்டுவிட்டு அந்தப் பூவையெடுத்துக்
கொண்டு வந்து தங்களிடத்தில் கொடுத்துவிட்டேன் இதுதான் நடந்
தசங்கதி வேறேயொன்றுமில்லையென்றாள் அப்போதந்த இராஜகுமா
ரத்தி கிழவியைப்பார்த்து ஓ அம்மா பூச்செண்டு இத்தனைநாளைப்பார்க்
கிலும் இன்றையதினம் அதிகசோபிதமாகவும் அழகாகவும் விநோதமா
கவுமிருக்கிறபடியால் இனிமேல் உன்மகனைத்தானே எனக்குப் பூ கட்
டிக்கொடுக்கச்சொல்லவேணும் அவருக்கு நல்ல சோறுகறி முதலியஜீ
வனங்கொடுத்துக்கொண்டு வாவென்று சிலதிரவியங்களுங்கொடுத்து
அதிகப்பிரியத்துடனே யனுப்பினாள் அந்தபூவாணிச்சியானவள் இராஜகு
மாரத் கொடுத்த பொருள் முதலியவைகளையு மெடுத்துக்கொண்டு வீ
டுவந்துசேர்ந்து என்மீது மிகவுங்கிர்பையாக அறுசுவை பதார்த்தத்துட
னே அன்னமளித்து மிகுந்த மேன்மையாக வைத்திருந்தாள் இப்படி
யிருக்கும்போது ஒருநாள் எனது நபதியானவள் இந்தப் பூவாணிச்சி
யையழைத்து ஓ அம்மா பூவாணிச்சி உன்மகனைப்பார்க்களனக்குமிகவு
ம் ஆவலாயிருப்பதால் ஒருநாளைக்கு அவரைஇவ்விடத்திற்குஅழைத்து
க்கொண்டுவரவேண்டுமென்று சொன்னாள் அதற்கந்தப்பூவாணிச்சி எ
ன்னுபதியைப்பார்த்து ஓ மாதுசிரோமணியே என்மகனைஎவ்விதமாகயி
வடத்திற்கு கழைத்துவருவேன் நீ சொல்லியதுபோலே நான் அழைத்
துவருவேனானால் இந்தக்கொத்தவாலானவர் என்னையும் என்பிள்ளையும்
சிரசாக்கினை செய்துவிடுவாரே அதற்கு நானென்னசெய்வேனென்றாள்
அதுகேட்டு என்னுபதி கிழவியைப்பார்த்து கேளுமம்மா பூவாணிச்சி
நான் சொல்வதைப்போல உன்மகனை இவ்விடத்திற்கு அழைத்துக்கொ
ண்டுவருவாய் ஆனால் உனக்குயாதொருவருத்தமும் சங்கடமும்நேரிடா

து அதெப்படியென்றால் உன் மகனுக்குப் பெண்ணுடுப்பையுடுத்தியவர்கையிற்பூவைக்கொடுத்துநிறையமுக்காடுபோட்டுக் கூட்டிக்கொண்டு வரவேணும் அப்படியழைத்துவரும்போது யாராவது இவளாரென்று கேட்டால் நீ என்மகளிவள் எனக்குத் தள்ளாதகாலமானதால் என்னாலே இனி நடக்கமுடியாது ஆகையால் இவளை நான்போய்வருகிற விடங்களுக்குக் கூட்டிக்கொண்டுபோய்ப் பழக்கிவைக்கும்படி யழைத்துப் போகிறேனென்று சொல்லச்சொல்லிவேண்டிய தந்திரங்களையுஞ் சொல்லியனுப்பினாள்.

அதுபோலவே அந்தப்பூவாணிச்சியானவள் மறுநாள் சாயரட்சை எனக்குப்பெண்ணுடுப்பையுடுத்தி நிறையமுக்காடிட்டுப்பூக்கூடையையுமென்கையிற்கொடுத்து அவளுநானுமாகக் கொத்தவால்வீட்டுவாசலிற் போகும்போது கொத்தவாலானவன் பூவாணிச்சியைப்பார்த்து இவளாரென்று கேட்டான் அதற்கவள் எனதுநாயகிசொல்லிக்கொடுத்ததந்திரம்போலே சொன்னாள் அவன்போவென்று உத்தரவுகொடுத்தான் பின்பு பூவாணிச்சியும் நானுமாக உள்ளேபோய் அவளிருக்கிற சிங்காரமெத்தைக்குட்போனோம் அவள் என்னைக்கண்டவுடனே மிகவும் மகிழ்ச்சியாயெழுந்திருந்து என்கையைப் பிடித்துத்தழுவி முத்தமிட்டுக்கூட்டிக்கொண்டுபோய் சப்பிரகூடமஞ்சத்திலுட்காரும்படிச்செய்து மிகவும் உபசாரணையானவார்த்தைகளைப்பேசிபின்புபூவாணிச்சியை யுட்காரச்செய்து நாங்களிருவரும் ஓரறைக்குட்போய் பேசவேண்டிய பேச்சுகளைப் பேசிக்கொண்டிருக்கும்போது என்மனைவிஎன்னைப்பார்த்து என்னுயிர்க்குயிராகிய நாயகரே நான் இந்தப்பாவியாகிய கொத்தவாலிடத்தில் அகப்பட்டுக்கொண்டபடியால் நீரென்மீது அணுவளவேனும் சந்தேகம் வைக்கக்கூடாது ஏனென்றால்இந்தக்கொத்தவால்உம்மை துரத்திவிட்டு என்னைப்பெட்டியோடெடுத்துவந்து வீடுசேர்ந்துபெட்டியைத்திறந்து வலுவந்தஞ்செய்பவந்தான் அப்போது நானவனுக்குவேண்டிய தணிவு சொல்லி நான் ஆறுமாதத்திய நோன்பு வைத்திருக்கிறேன் அதில் ஒருமாதங் கப்பலிற்போய்விட்டது இன்னம் ஐந்து மாதத்திய நோன்பிருக்கிறது அதுகழிந்தவுடனேஉன்மனம்போல் நடந்துகொள்ளுகிறேனென்றேன் அதுகேட்டவன்மனமகிழ்ந்து என்னை இந்தமெத்தையிலிருக்கும்படிச்செய்து வேண்டிய வைபவத்துடனே வைத்துக்கொண்டிருக்கிறான் ஆதலால் நான் சொன்னகெடுவில் நாலுமாதமாச்சுது இன்னம் ஒருமாதமிருக்கின்றது இந்த ஒருமாதமுஞ்சென்றவுடனே அவன் என்னருகில் வருவானாதலால்நான் அதற்குமுன்னமே தப்பித்துக்கொள்ளவேணுமதற்கோருபாயஞ் சொல்லுகிறேன் அதுபோலே நீர் செய்

வீராஞல் நாமிருவரும் சுகத்தையடைந்து யாதொருகுறைவுமில்லாம லிருக்கலாமென்ருள் நான் அவளைப் பார்த்து அதென்ன வுபாயமென்று கேட்டேன் அதற்கவள் இன்னம் இரண்டு மூன்று தினத்தில் இந்த வூரிலொரு பெரியதிருவிழா பத்துநாள் வரையில்நடக்கும் பத்தா நாளிரவில் இவ்வூரிலுள்ள பெரியகோவிலுக்கு இவ்விடத்திலுள்ள ஜனங்க ளடங்கலும்போய் அந்தக்கோயிலுள்ள சாமிக்கு மிகுந்த அலங்காரஞ்செய்து அவரவர்கள் காணிக்கைகளை முடிப்பு முடிப்பாகக்கட்டி கோயிலுக்குளிருக்கிற பெரியசாமியாதத்தில் முடிப்புகளைவைத்து சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து வருவார்கள் இந்தப்படியாகச் சகலசனங்களும் பத்துநாள் வரையிலும் வைத்துவந்த முடிப்புகளையெல்லாம் அந்தக்கோயில் வேலைக்காரர்கள் எடுத்துக்கொண்டுபோய் ஓரறையிற்குவித்து ஏழை மிஸ்கின் யாசகர் பரதேசிகள் முதலானவர்களுக்கு ஆளுக்கொருமுடிப்பாகக் கொடுப்பார்கள் இவைகளை யவர்கள் வாங்கிக்கொண்டு அந்தப் பெரியசாமிக்குத் தண்டஞ்செய்து போய்விடுவார்கள் ஆகையால் நீர் அந்நாளைப்பார்த்துக்கொண்டிருந்து முடிப்பை ஏழைகளுக்குக் கொடுக்குந்தருணத்தில் அவர்களோடு நீரும்போயிருந்தால் உமக்குமொரு முடிப்பு கொடுப்பார்கள் அதை நீர் வாங்காமலிரும் அப்போது முடிப்பு பங்கிடுகிறபேர்கள் ஏன் நீ வாங்கிக்கொள்ளவில்லையென்று கேட்பார்கள் அப்போது நீர் நான் இந்தமுடிப்பு வாங்குகிறதற்காக நான்வரவில்லை பெரிய சாமியைக்கண்டு ஒருசேதி சொல்லவந்தேனென்று சொல்லும் அப்போதவர்கள்போய் பெரியசாமிக்கு அறிவித்து அவருத்தரவின்படி உம்மையழைத்துக் கொண்டுபோவார்கள் அப்போது நீர் உள்ளேபோக வேண்டியது ஆனாலந்தப் பெரியசுவாமி யானது மரங்கள் கல்லுகள் செம்புகள் முதலானதாற் செய்ததல்ல ஒருபெண்பிள்ளையானவள் மிகுந்த கிழவியாகவும் தலைமயிர் முழுமையும் சடையுடையவளாகவுமிருப்பாள் அவள் சமுத்திரத்தில் உம்மைக்கூட்டிக் கொண்டுபோய்விடுவார்கள் அப்போது நீர் அந்தச்சாமியை மிகவும் வணக்கமாகப் பணிந்துநின்ருல் அந்தச்சாமியென்னுங் கிழவி உம்மைப்பார்த்து நீ எங்கேவந்தாயென்று கேட்பாள் அப்போது நீர்சொல்லவேண்டியது நானின்னவூர் இன்னானுடையமகன் என்மார்க்கம் இன்னமார்க்கம் நானும் என்பெண்சாதியும் எங்களூரைவிட்டு இன்னொருதேசத்திற்குப் போகவந்தோம் இந்தக்கொததவால் பேர்சஞ் செய்தானென்று அந்தக்கிழவியினிடத்திற்சொன்ஞல் அவளிராசாவுக்கறிக்கை செய்துஎன்னையும்நம்முடையபொருள்களையும் வாங்கிக்கொடுதது கொத்தவாலுக்குந் தண்டனை கொடுப்பாரென்று சொன்ஞள் இவைகளையெல்லாம நான் கேட்டு மிகுந்தசந்தோஷ மடைந்து அந்தப் படியே

செய்கிறேனென்றுசொன்னேன் இப்படியாகநாங்களிருவரும் சற்று
நேரம்பேசிக்கொண்டிருந்து பின்புபூவாணிச்சி யிருக்கிறவிடத்திற்கு
வந்தோம் அப்போதுநான் என்பெண்சாதியினிடத்தில்விடை பெற்று
க்கொண்டுபூவாணிச்சியும் நானுமாகஎங்கள்வீட்டிற்குவந்துவிட்டோ
ம் இப்படியிருக்கும்போது என்னுடையகிசொன்னபிரகாரம் அவ்வூரில் தி
ருவிழாலங்கது அப்போது சகலமானபேர்களும் கோயிலுக்குப்போய்
முடிப்புகாணிக்கைகளைவைத்து சாமியென்னுங்கிழவிக்குச் சாஷ்டாங்க
மாகதெண்டஞ்செய்துவந்தார்கள்

இப்படியாகப் பலருங்கொண்டுவந்துவைத்த முடிப்புகளையெல்லா
ம் அவ்விடத்திலுள்ள அதிகாரஸ்தர்க ளெடுத்து ஓரறையில் குப்பலா
க் குவித்து வைத்து பதினோரு நாள் காலையில் அவ்விடத்தில் வந்
த ஏழைகள் மிஸ்கீன்கள் முதலானவர்களுக்குக்கொடுத்து வந்தார்கள்
அப்போது நானும்போனேன் எனக்கும் ஒருமுடிச்சுகொடுக்கவந்தார்க
ள் நான்எனக்கு வேண்டியதில்லையென்றேன் அப்போதவர்களென்னை
ப்பார்த்து எல்லாரும் வாங்கிக்கொண்டார்களே நீமாத்திரம் ஏன்வே
ண்டாமென்று சொல்லுகிறாயென்றார்கள் அப்போதுநானவர்களைப்பார்
த்துநான்இந்தமுடிப்பைவாங்குவதற்குவரவில்லைபெரியசாமியைக்கண்
டு ஒருசங்கதிபேசவந்தேனென்றுசொன்னேன் அதுகேட்டகோயிலதி
காரிகள் பெரியசாதுவாகியகிழவியினிடத்திறபோய்ச்சொல்ல அவள்எ
ன்னையழைத்துவரும்படியாகச்சொல்ல அவர்கள்வந்துஎன்னைகூட்டிக்
கொண்டுபோய் பெரியசாதுசமுகத்தில்விட்டார்கள் அவ்விடத்தில்பொ
ன்னினாற்செய்த ஒருநாற்காலியின்மீதுமிகுந்தவயதுசென்று ஒருகிழ
வியுட்கார்ந்திருந்தாள் அவள்ஜடைமயிர்பூமியிற்புரண்டு கொண்டிருந்த
துநான் அவளைப்பார்த்துமிகவும்பயபக்தியுடனேசாஷ்டாங்கதெண்டஞ்
செய்துநின்றேன்அப்போதவளென்னைப்பார்த்து நீ எங்கேவந்தாயென்
றுகேட்டாள் அதுகேட்டுநான்மிகவும்வாய்பொத்திக்கைகட்டிபயபக்தி
யுடனே அவளைப்பார்த்து அம்மாநானிருப்பதுகிஷாபூர் எங்கள்மார்க்
கம் மகம்மதியர்மார்க்கம் எங்கள்வேதத்தின்படி எங்கள்மனைவிகளை ஆ
டவர்கள்காணாமல் மறைவாகவைக்கிறது ஆகையால்நான் என்னுடை
விட்டு தீவுதீவாந்தரத்துக்குவர்த்தகஞ் செய்யப்போகிறதற்காகஒருகப்
பலைவாடகைக்குப்பிடித்து அதில்சாமான்தட்டுமுட்டுகள் முதலானவை
களையுமேற்றி ஒருபெட்டிக்குள்ளே ரத்தினமுதலியபொருள் களும்சி
லதின்பண்டங்களும்வைத்து அதில்ஒருவருங் காணக்கூடாதென்று எ
ன் மனைவியையும் வைத்துமூடிவிட்டுக்கப்பலேற்றிப் பாய்விரித்து ஓடி

வருமபோதுகப்பலில்தண்ணீரில்லாமற்போச்சுது அப்போது நாங்கள் இந்தவூர்த்துறை முகத்தில் கப்பலைநிறுத்திலங்கர்போட்டு தண்ணீரெற்றலா மென்றிருக்கையில்இந்தவூரிலிருக்கும் கொத்தவாலும் சிலசேவகர்களும்கப்பல்மேல்வந்துசுலுமாகபெட்டியைத்திறந்து என்பெண்சாதியைப்பார்த்து பிரியப்பட்டு அதிலிருந்தபொருள்முதலியயாவற்றையும் என்பெண்சாதியையுங் கூடப்பெட்டியோடே யெடுத்துக்கொண்டு கரையிலிறங்கிச்சிலபேர்களைவிட்டு என்னையடித்துத்துரத்தி விட்டானென்றுமிகவும் வருத்தத்துடனேபெரிய சாமியென்னுங் கிழவியினிடத்திற் சொன்னேன் இவைகளையெல்லாமவள் கேட்டுஇரண்டுகண்களிலும் நெருப்புப்பொறிபறக்கும்படியாய் கோபங்கொண்டுஉன்னையகியுனக்குவரும்படியாகச்செய்கிறேனென்று எனக்குத்தணிவு வார்த்தை சொல்லி ஒருகாகிதமெழுதி கன்கைமுத்திரையும்வைத்து அந்தக்கோயிலுக்குத் தலைமையா யிருக்கிறவன்வசத்திற்கொடுத்து அந்தக்காயிதத்தையும் என்னையும் இராசனிடத்திற் கொண்டுபோய்கொடுக்கும்படி சொன்னாள் அதையவன்வாங்கிஎன்னையுமழைத்துக்கொண்டுகோயிலைவிட்டு வெளியேவந்து ஒருயானையின்பேரிலேநாங்களிருவருமேறிக்கொண்டு அரண்மனைக்குப்போனோம்நாங்கள் போனதையவ்வூராசன்கண்டுகோயிற்றலைமை யதிகாரிக்குவெகுமரியாதைசெய்துதனதுசிங்காதனத்தில் வைத்துக்கொண்டான் அப்போது நானருகிற்போயிருந்தேன்நீங்களெங்கேவந்தீர்களென்று அரசன்கேட்கஅவர் சாமிகொடுத்தகாகிதத்தை யரசன்கையிற்கொடுக்க அதையரசன்பார்த்தவுடனே மிகவும்பயந்து என்னகாரணமோதெரியவில்லையேயென்று அந்தக்கடிதத்தைத் தனதிரண்டுகண்களிலு மொற்றிக்கொண்டுசமீபத்திலிருக்கும் மந்திரிகையிற்கொடுத்து இக்கடிதத்தை வாசியுமென்று சொன்னார்,

அந்தமந்திரியானவன் முத்திரையையுடைத்து வாசித்துஅதிலுள்ளசங்கதிகளைச்சொன்னான் அதுகேட்டராஜனானவன்கடுங்கோபங்கொண்டு அர்க்கார்களையழைத்து கொத்தவாலைப்பிடித்துக் கொண்டுவரும்படி உத்திரவுசெய்தான் அவர்கள்போய்கொத்தவாலைக்கூட்டிக்கொண்டுவந்து இராஜசபையிலேவிட்டார்கள் இராசன்கொத்தவாலையு மென்னையுமவாக்குமூலமுதலியதுங்கேட்டு அந்தக்கொத்தவாலின்பேரில்குற்றமிருக்கிறபடியினாலே அவனைச்சிரசாக்கினைசெய்யும்படியாயுத்திரவுகொடுத்து எனதுமனைவியையும் எனதுபொருள்கள்முதலியயாவற்றையும் எனதுவசமளித்து அவனுடையபொருள்வீடுவாசலெல்லாம் அவன்பெண்சாதி பிள்ளைகட்களித்து நானிருப்பதற்காகமிகுந்த சிறப்புப்பெ

ந்திய மெத்தைவீடொன்று கொடுத்து அந்தக்கொத்தவாலுடைய உத்தியோகத்தையுமெனக்குக்கொடுத்து ரேவுத்துறையிலிருந்துபார்த்துக் கொள்ளும்படி எனக்குத்திட்டஞ்செய்துவிட்டு இதுகாரியங்களுக்கெல்லாம் பதிற்கடிதமெழுதி அந்தக்கோயிலதிகாரியிடத்திற்கொடுத்துசாமியாகியகிழவிகையிற் கொடுக்கும்படி அவனையுமென்னையு மனுப்பிவிட்டார் அவர்கோயிலுக்குப்போய்விட்டார்நான்கொத்தவால்வீட்டுக்குப்போய் என்மனையியையும் பொருள்களையும் இரத்தினங்களையும்பெட்டியையுமஇன்னும் எங்கள் சாமான்கள் பலவற்றையுமஎடுத்துக்கொண்டு நாயையுமழைத்துக்கொண்டு இராஜாஎனக்கு விட்டமெத்தைவீட்டிற்குப்போய் இருந்து அதிகஜாக்கிரதையாக ரேவுவேலையைப்பார்த்துக்கொண்டு யாதொருகுறைவுமில்லாமலிருக்கும்போது அந்தராஜாவானவர் என்பேரில்தயவுவைத்து நான்பார்த்துவருகிறவேலையின் திறத்தைப்பார்த்து என்பேரிலிருந்தசந்தோஷமாகி யெனக்கு உத்திரவு செய்தார்.

அதாவது சகலநியாயங்களையும் இராஜ காரியங்களையும்என்வசத்திலொப்பித்து என்னைப்பார்த்துக்கொள்ளும்படி திட்டஞ்செய்துவிட்டுஅவருனந்தக்கடலில் மூழ்கியிருந்தார்இதுவுமல்லாமல்குடிபடைகள் முதலியமந்திரிகளையும் என்சொற்கேட்கும்படியாய்ச் செய்துவைத்தார்இவைகளையெல்லாம் நான்ஒருகுறைவுமில்லாமற்பார்த்துக்குடிகள் முதலியயாவத்திருளுக்கும் ஓரிம்சையும்நேரிடவொட்டாமல்வெகுநீதிநெறியாகஅரசுசெலுத்திக்கொண்டுவந்தேன் அப்படியிருக்கையில் அந்தவூரிலுள்ள ஜனங்களியாவர்களும் என்னைத்தாளரசனென்றுசொல்லுவார்கள் அப்படியிருக்கிறநாளையில் அந்தவூர்ரேவுத்துறையில எப்போதும நடந்துவருகிற தீர்வையில் அரைத்தீர்வையாகக் குறைத்துவாங்கிவந்தேன் இந்தச்சமாச்சாரத்தைப்பலதேசங்களிலுமுள்ள கப்பற்காரர்கள் கேட்டு நானிருக்கிறவூருக்கே பலருங்கப்பல்களை யோட்டிவந்து லங்கர்பாய்ச்சிசரக்குகளையிறக்கிவிற்றுமிகுந்தலாபத்துடனேபோவார்கள அதனால்சர்க்காருக்குத்தீர்வைவருமானம முன்னிலுமிரட்டிப்புப் பங்கு அதிகப்பட்டிருந்தது இப்படியாக நான் யாதொருகுற்றமு மில்லாமல் இராஜரீகஞ்செலுத்திவருகிற நாளையில் கப்பலகளவந்தால அதிலுள்ள நகுதாமார்கள் கரையிலிறங்கிமுன்றுதாக என்னைக்கண்டுசேர்வை செய்து பின்னால்மற்றவர்த்தகஞ்செய்யப்போவார்கள இப்படி நடந்துவரும்போது சிலநாளைக்குப்பிறகு ஒருகப்பல் அந்தத் துறைமுகத்தில்வந்துசேர்ந்தது அக்கப்பலிலுள்ள நகுதாவிமங்கிள் என்னிடத்தில்வந்து சலாமிசகத்தச்செய்துக்கொள்ளவந்தார் அவருடனொருவன்கூடவந்தான் பெட்டி

லைத்தூக்கிக்கொண்டும் ஒருவ னவருக்குக்குடைபிடித்துக்கொண்டும இர ண்டுபேர்வந்தார்கள் அவ்விருவரும் உடுத்திக்கொண் டிருக்கிற உடுப் ப்பார்த்தால் நெருப்பிற்போட்டாலும் வேகமாட்டாது அப்பேர்ப்பட் டஅழுக்குப்பிடித்தஅணியுடனே நகுதாவுடன் வந்துநின்றார்கள் அவர் களைநான்குறிப்பாய்ப்பார்த்துஇவகளிரண்டுபேரும் என்னுடையதமை யனமார்களென்றுதெரிந்து இவர்கள்இவ்விததாழ்வடைந்தார்களாவெ ன்றெண்ணிஇவர்களெனக்குச்செய்த கொலைபாதகங்களையெல்லாமெண் ணியும் மனங்கேழ்க்காமல் நல்லதிருக்கட்டுமென்று அந்தநகுதாவைப் பார்த்து இவர்களிரண்டுபெரும் ஆரென்றுகேட்டேன் அப்போதந்த நகுதாஎன்னைப்பார்த்து மிகுந்தமரியாதையுடனே இவர்களிரண்டு பே ரையும் பிரஷபாவென்னும் நகரத்தில்இருதூறு அசாபிக்காசுக்கு விலை க்குவாங்கினேனென்றார் அந்தச்சொல்லைக் கேட்டவுடனே நான்சொ ன்னேன் இவர்களிரண்டுபேரையும் எனக்குக்கொடுப்பீரானால் அந்தக்கி றையத்தைத்தந்துவிடுகின்றேன நீர்தயவுசெய்து கொடுக்கவேணுமென் றேன் அப்போதந்தநகுதா என்னைப்பார்த்துஎனக்குக்கிறையம்வேண்டி யதில்லை நான்உமக்கு இனமாகத்தந்துவிடுகிறேனென்று கதியாய்ச்செய தார்நானிவர்களை வாங்கிக்கொண்டு அந்தநகுதாகொண்டுவந்த சரக்குக ளுக்குத் தீர்வையில்லாமற் சகாயப்படுத்தி அவர்கப்பலுக்கும் மறுசர க்கேற்றிஅந்தநகுதாவைப் பிரயாணப்படுத்தி யனுப்பிவிட்டேன் அவ ர்கள்கப்பலிற்பாய்விரித்து அவர்கள்தேசம்போய் விட்டார்கள் அதன்பி ன்பு நான் இவர்களிரண்டுபேரையுங் குளிப்பாட்டிநல்லஉடுமானமுங் கொடுத்து ஒசிலை மளித்துஇரண்டுமூன்றுநாளைக்குப்பிறகு இவர்களை என்னருகிலழைத்து நானுங்களுக்குத்தெரியுமாவென்றுகேட்டேன் அ வர்களென்னைப்பார்த்து தம்பியென்றுதெரிந்துகொண்டு என்னைக்கட் டித்தழுவி சொல்லுகிறார்கள்,

கேளுந்தம்பி எங்களுக்குஇப்போதுபுத்திவந்தது நாங்களுனக்குச் செய்ததெல்லாம் தப்பிதமேயொழிய வேறொன்றுமல்லஇனிமேல்நாங் களுனக்குயாதொருதுரோகமுஞ் செய்யமாட்டோமென்று முன்போ லே சத்தியஞ்செய்துக்கொண்டுத்து ஆண்டவன்முகத்துக்காக நீமனம் பொறுத்து எங்களைப்பாதுகாக்கவேணுமென்று மிகவும்வியசனப்பட் டுவர்களாயழுதார்கள் அவர்களழுகையெனக்கு இரக்கமுவந்து இவர்க ள்செய்தபாதகங்களையுமனதில் நினைக்காமல் இனிமேலப்படிச் செய்ய மாட்டார்களென் றெண்ணிச்சும்மாயிருந்துவிட்டேன் அப்படியிருக்கு ம்போது இவர்களசெய்த நடத்தைகளையெல்லாம் என்னுடையகிக்குராகசி கிற் சொல்லினேன் அவள் கேட்டுசொல்லுகிறாள் இவர்கள்எப்பே

னும் உங்களுக்கு மோசஞ்செய்தவர்களாயிருப்பதால் நம்மிடத்திலிவர்களைச் சேர்த்துக்கொள்வது சரியல்லவென்றாள் அதற்குநான்சொன்னேன் இனிமேல்நமக்குயாதொருமோசமுஞ்செய்யமாட்டார்களென்றுஎன்நாயகிக்குத் துணிவுவார்த்தைசொல்லி அவர்களுக்குயாதொருகுறையுமில்லாமல் நடத்திக்கொண்டுவருகிறகாலையில் அவர்கள் நான்படுக்கிற விடந்தவிரமற்றவிடங்களெங்கும்போய்த் திரிவார்கள் அவர்களெப்படியிருக்க நான் படுக்கும்பள்ளியறைக்குச்சிலகாவலாளரை வைத்து இவர்கள் அங்கேவரக்கூடாதென்று உத்திரவுபண்ணிகாத்திருக்கும்படிச்செய்தேன் அதுபோலேஅவர்களும்கண்முழித்துக்காத்துக்கொண்டிருப்பார்கள் அப்படியிருக்க இவர்களென்னமோ ஒருகபடத்தைநினைத்துக்கொண்டிருந்தார்கள் எனக்கும்என்மனைவிக்கும் இவர்கள்நினைத்திருந்தது தெரியவராது அப்படியிருக்கஒருநாளிராத்திரிநடுச்சாமவேளையில காவற்காரர்களும்சிப்பாய்களும்தூங்கிவிட்டார்கள் அந்தச்சாமயத்தில் இவர்களிரண்டுபேரும்ஆளுக்கொருகத்தியைக் கையிற்பிடித்துக்கொண்டுநாங்கள்படுத்திருக்கும் அறைக்குள்ளேவந்து நுழைந்தாகள் அந்நேரத்தில் நானும்என்மனைவியும் அதிகநித்திரைசெய்துக்கொண்டிருக்கிறோம் அப்போது என்நாயாகிறது என்சமுகத்தில் முழித்துக்கொண்டிருக்கிறது அந்தவேளையிலிவர்கள்உள்ளேநுழையும்போது இந்தநாயானது இவர்கள்மேலேவிழுந்துஉரத்தசத்தமாய்க்குலைத்தது அந்தசத்தங்கேட்டுகாவற்காரர்களும்சிப்பாய்களும்நாங்களுமெழுந்துக்கொண்டோம் அத்தருணத்தில்இவர்கள்தப்பித்துக்கொண்டுபோகலாமென்றுபார்த்தார்கள் இந்தநாயானது விடாமல் மறித்துக்கொண்டது.

அப்போதென்னையிவர்கள் கொலைசெய்துப்போடநினைத்துவந்த காரியமுடியாமற்போய்விட்டது அந்நேரத்தில் நான் சிப்பாய்க்களையுங்காவற்காரர்களையும்பார்த்து இவர்களைப்பிடிக்கும்படியுத்திரவு செய்தேன் அவர்இவ்விரண்டுபேரையும்பிடித்துச்சிறைக்கூடத்திற்கொண்டுபோய் வைத்துவிட்டார்கள் கேளும் பாத்துஷாக்களுக்கெல்லாம் சக்ரவர்த்தியாகிய பாத்துஷாநாயகமேதாங்களிதை நன்றாயோசித்துப் பாருங்கள் அப்போதெனக்குமிகவும்வியாகூலம்வந்துவருத்தப்பட்டுயோசித்து இந்தப்பாவிகளை என்னசெய்யலாமென்றுநினைத்தேன் இவர்களை நாம்கொன்றுபோடச்சொல்வோமாகில் இந்தவூரிலுள்ளசனங்களும் பிறசேதத்துராஜாக்களும்நம்மைச்சின்னமாகப் பேசுவார்கள் அதெப்படியென்றால் தம்பியுடைய ராஜாங்கமென்னும் அதலாத்தில் தமையனைக்கொன்றுபோட்டானென்று பலவிதமாகப் பேசுவார்கள் அல்லதுசம்

பா விட்டுவிடுவோமாகிலும இவர்கள்மறுபடியும்அலைந்துதிரிந்துவந்து சோர்வுபார்த்துநம்மை மோசம்பண்ணுவார்களென்றுபலபலவித மாக யோசித்து இனிமேலேயிவர்களுக்குக்கட்டளைவேணு மனமிரங்கக் கூடாதென்று யோசித்துஒருஇரும்புக்கூடுசெய்து அந்தக்கூட்டிலே யிவாகளிரண்டுபேரையுமடைத்து இவர்கள்செய்த துரோகத்துக்காகவும இந்தநாய்நமக்குசசெயத உபகாரத்துக்காகவும் இந்தநாய்தின்ற மிச்சத்தை இவர்கள்தின்னவேண்டுமென்று தீர்மானஞ்செய்து இவ்விதமாக நடத்திவருகிறேனென்று அந்தஆசாசகபரசென்னும் சவுதாகர்சொன்னார்கேளுங்கள்தோஸ்தியாகிய பக்கீர்களே அப்போதுநான் இந்தக்கூண்டிலிருக்கிற இரண்டுபேர்கள்மீது அதிககோபங்கொண்டு அந்தக்கோபத்தையடக்கி அந்தச்சவ்தாகருகிய ஆஜாசக்பரசைப்பார்த்து மிகவும் மரியாதைசெய்து ஒருநாற்காலியிலுட்காரச்சொல்லி இந்தநாயின்கழுத்தில்போட்டிருக்கிறவாரிலிருக்கும் ஒன்பதுரத்தினமகப்பட்ட வகையையும் அவவூரைவிட்டு நீஉம்முடைய வூருக்குவந்தவகையையும் உமக்குதெளலத்துவந்தவிபத்தையும் இப்போது நீரிவ்வூருக்குவந்தசங்கதியையும் விபரமாகச்சொல்லவேண்டுமென்று கேட்டேன் அப்போதந்தச்சவ்தாகர் என்னைப் பார்த்துச்சொல்லுகிறார்நான் இவ்விதமாகஇவ்விருவரால் பலவிதவருத்தப்பட்டுமுடிவிலிவர்களையிவ்விதஞ்செய்து மிகுந்தபகிட்ச்சியுடனிருக்கிற நாளையில் ஒருநாள்மேன்மாடகூட உப்பரிகைமேலிருந்துசீனாக் கண்ணாடியென்னும் கச்சுக்குழாயைகண்ணுக்குநேராகவைத்து ஏகமைதானத்திற்பார்த்துக்கொண்டிருந்தேன் அப்படிப்பார்த்துக்கொண்டிருக்கிறபோது வெகுதலைவிப் ஓர்கிழவனுமஒர்கிழவியும் தடியையூன்றிக்கொண்டு முள்ளுந்தோலுமாகக்கூனிக்குறுகிமிகவும்மெதுவாகிய நடையாய்நடந்துவர்தார்கள் அவர்களைநான்பார்த்தவுடனேஎனக்குமிகவும் இரக்கம்வந்து இரண்டுமெல்லக்களுப்பி அவர்களையெடுத்துக் கொண்டுவரும்படி உத்திரவுசெய்தேன் அதுபோலவே போனவர்களவர்களைத் தூக்கிக்கொண்டு என்முன்பாகக்கொண்டுவந்து விட்டார்கள்.

அப்போதுநான் இவ்விரண்டுபேரையும் முழுக்காட்டி நல்லவுடுப்புகள்கொடுத்து ஓசிவனமுதலியபதார்த்தங்களையுங் கொடுத்துப் பசியாறச்சொன்னேன் அபபோதந்தக்கிழவனுனவர் அங்கத்தின்பண்டங்களைப்பார்த்து மிகுந்ததுயரத்துடனே அழுதார்நான் அவரைப்பார்த்து ஏன்பாவா அழுகிறீர் அந்தவிபறத்தை யெனக்குச் சொல்லவேணுமென்று வருந்திக்கேட்டேன் அவர் சொல்லுகிறார் நானிறவன் சோறுதின்று அறுபது வருஷமாகிறது ரொட்டிதின்றுமூப்பது வருஷமாகிறது

ஆனபடியால இந்தஒசீவனத்தைக்கண்ட உடனே இன்றைபதினத்தில் அல்லாகுத்தஆலா இந்தஉணவைக்காண்பித்தானே யென றழுதேன்என்றுசொன்னார் அப்போதுநானினைத்தேன் இவருநாம்பட்டவருத்தங்களிலும் அதிகவருத்தப்பட்டவர்போலேகாணுகிறது அதனாலே தவிர இவ்விதஞ் சொன்னாரென்றெண்ணி அவருக்குவெகு ஆறுதல் தேறுதலானசேதிகள்சொல்லிஒசீவனத்தைத்தின்னும்படியாய் சொன்னேன் அப்போதவர்களிரண்டுபேரும் புசித்துத்தண்ணீர்குடித்த உடனே ஒருமயக்கம்வந்துகீழேவிழுந்துவிட்டார்கள் அப்போதுநான் ஆஆ இதென்ன அதிசயமாயிருக்கிறது இவர்கள்மயங்கிவிழுந்துவிட்டார்களேயென்று இவர்களைப்பார்த்துக்கொண்டேயிருந்தேன் அவர்க்ஷணநேரத்திற்குப்பின் மயக்கந்தெளிந்து எழுந்திருந்தார்கள் அதன்பின் அந்தக்கிழவனார் இடுப்பிலொருகச்சைகட்டியிருந்தார் அந்தக்கச்சையையவிழ்த்துக்கீழேகொட்டினார் அதிலிருந்து ஒரேமாதிரியான ரத்தினம்எண்ணூறுவரையில்விழுந்தது அதிலொருரத்தினத்தை இவ்வளவுவிலையென்று மதிக்கக்கூடாது அப்பேர்க்கொற்றரத்தினத்தை அந்தக்கிழவன்என்னைப்பார்த்து பாவா இதிலுனக்கு எவ்வளவு சிலவாமிருக்குதோ அவ்வளவு எடுத்துக்கொள்ளுமென்றார் அப்போதுநானபாவா எனக்குவேண்டியதில்லை என்னிடத்திலனேகரத்தினமிருக்கிறது நீர்தானேவைத்துக்கொள்ளுமென்று சொன்னேன் அவரதைக்கேட்காமல்ஒரேபிடிவாதமாகச்சொன்னார் அவசொல்லைத்தட்டக்கூடாதென்றுமனதொப்பிஅதிற்கையைப்போட்டு அள்ளினேன் அந்தப்பிடியில்ஒன்பதுரத்தினமிருந்தது இதுபோதுமென்றெடுத்துக்கொண்டேன் மீதிரத்தினங்களை அவர்கச்சைப்பையில்போட்டுக்கட்டியென்னிடத்திற்கொடுத்தார் நான்வாங்கிமேஜைமேல்வைத்துவிட்டுஅவரிடத்திற்சொன்னேன் கேளும்பாவா இந்தஎண்ணூறுரத்தினமும்உமக்குஎவ்விதமாய்க்கிடைத்தது அதைவகைவிபரமாக அணுவளவேனுமொளிக்காமலெனக்குச்சொல்லவேணுமென்றேன் அப்போதவர் சொல்லுகிறார்பாவா அவ்வளவுரத்தினத்தையும் நீரெடுத்துக்கொள்ளவேண்டியதொழிய எனக்குச்செலவில்லை அதுவந்தவரலாற்றைக் குறித்துநீர் கேட்க்கவேண்டியதுமில்லை என்று அதிகவருத்தத்துடனே சொன்னார்அப்போதுநானவரைப்பார்த்து அதுங்களுக்குகிடைத்தவிபரத்தைஎனக்குச்சொல்லதான்வேணும் அப்படிச் சொல்லாவிட்டால என்மனமானது அதிகவருத்தப்படுமென்றேன் அப்போதவர்அழுதுவியசனப்பட்டு பாவாநீரிந்த அநியாயத்தைக் காதுகொடுத்துக்கேட்கவேணுமோகாதுகொடுத்துக்கே

ட்பீருனல் மிகவும் வருத்தப்படுவீர் ஆனபடியாலதைக் கேட்கவேண்டா
மென்ருர் மறுபடியும் நானவரைப்பார்த்து பூலோகத்தில் இன்சானுன
மனிதருய்ப் பிறந்தபேர்களுக்கு இன்பமுந் துன்பமும்வாழ்வுந்தாழ்வு
ம் இவ்விதமென்று சொல்லமுடியாதென்று நான்பட்ட அகவால்களையு
ம்கொஞ்சஞ்சொல்லிககாட்டி அவர்மனதைத்தேற்றினேன் அதனபின்
னவர் பட்டவருத்தங்களைச் சொல்லுகிருர் கேளும்படிவாநானுகிறவன்
மக்காட்டைச்சேர்ந்த ஜித்தாவிலுள்ள ஷேகுத்தாபு சவுதாகருடைய
மகன் என்பெயர்ஷேக் அப்துலலாவென் தகப்பனுக்கு அளவற்றதிரவியந்
களுண்டு அவருக்கு நானொருபிள்ளையேயன்றி வேறொருபிள்ளையுமில்
லை அதனுல் என்னையவர் மிகவுங் கிருபையாக வளர்த்துவந்தார்
அப்படிநான்வளர்ந்து வருகையில் எனக்கு வினுமுதலானதுந்தெரிந்து
என்புத்தியெனக்குப் போதுமானதாயிருந்தது அப்போதுநான்என்தக
ப்பனைப் பார்த்துச்சொன்னேன்நான் தீவாந்தரத்துக்குப் போகச்சமைசவ
டமுதலிய வாத்தகஞ் செய்யவேண்டுமென்று எண்ணங்கொண்டிருக்
கிறேன் அப்போது இதுகேட்ட என்தாயுந்தகப்பனும் மிகுந்தவி
சனப்பட்டு என்னைப்பார்த்து பாவா நமிடத்தில் ஆண்டவன்வெகுதி
ரவியத்தைக் கொடுத்திருக்கிருன் அதுபோதும்ஆகையால்நீகடலேறிப்
போய்ச் சம்பாதிக்கவேண்டாமென்றுசொல்லித்தடுத்தார்கள்.

அப்போதுநான் அவர்கள்சொல்லை ஒப்புக்கொள்ளாமல்ஒரேபுடி
வாதமம்ப்போய்வருகிறேனென்று மறுபடியுஞ்சொல்லினேன் அவர்க
ள் எனசொல்லுக்கு மறுவார்த்தை சொல்லமுடியாமல் பதினறுகப்ப
ல்வைத்து அந்தப்பதினறுகப்பலுக்குச் சரக்கேற்றும்படியாகச் சொல்
லி கணக்கைமுடித்து என்கையில்கொடுத்துபயணப்படுத்தியனுப்பினு
ர்கள் அப்போது நான்இந்தப்பதினறுகம்பலுக்கும்பாய்விரித்துநடுக்கட
லிற்போகும்போ பெசலுமழையும் அகோரமாயடித்து கப்பல்களைத்
திசைக்குத்திசை கொண்டுபோய் பார்களிலேயுடைந்து கப்பல்களெல்
லாம் கலாந்தாயப் பொய்விட்டது அதிலிருந்தகிளாஸ்காரர் முதலிய
மாலுமிகள் மனிதர்கள் எவ்விதமாய்போனுர்களோ அதெனக்குத்தெரி
யவில்லை அந்தச்சமயத்தில் ஓர்பலகைத் துண்டுஎன்கையிலகப்பட்டது
நான் அந்தப் பலகையைப்பிடித்து நீந்திக்கொண்டு ஒருகரைமுகம்வந்
துசேர்ந்தேன் அவ்விடட்டில்ஊர்பதிகள் ஒன்றுமில்லாமல் முழுமையு
ங்காடாகவே யிருந்தது நான் அந்தக் காட்டில் மனம் போனபோக்கா
ய்த்திரிந்து அக்காட்டி லுள்ள இலை முதலிய கனிவர்க்கங்க
ளைத் தின்று நடந்து போனேன் அப்படிக் கொஞ்ச நாள்

நடக்கிறபோது வெகுதூலவில் ஒருகுடிசை என்கண்ணுக்குத் தெரிந்தது அதைக்கண்டவுடனே எனக்குமிகவும் சந்தோஷமுண்டாகி அந்தக்குடிசையை நோக்கிநடந்து சமீபத்திற்போய் அந்தக்குடிசையினுள்ளேஎட்டிப்பார்த்தேன் அதிலொருபக்கீர் தொழுது கொண்டிருந்தார் அவர்தொழுகிறவரையிலும் நான்காத்துக்கொண்டிருந்தேன் அப்போதவர் தொழுதுமுடிந்ததின்பிறகு திரும்பி என்னைப்பார்த்தார் நானெழுந்திருந்து அவருக்குமிகவும் வணக்கமாகச் சலாஞ்சொல்லி எனக்குமிகவும் பசியாயிருக்கிறது இந்தவேளை பசியாற்றவேணுமென்றேன் அதைகேட்டவரென்னைப்பார்த்து அடே நசிபுகெட்டவனே நீ இந்தக்காடுமலைகளையெல்லாஞ்சுற்றி யலைந்து வருகிறாயே அங்கேயொருமிருகமுமில்லாமற் போய்விட்டதா என்னைக்கொல்லுகிறதற்கு அவைகளுக்கெல்லாந்தப்பி இங்கேவந்து அநியாயமாகச்சாகப்போகிறாயேயென்றுஎன்னைப்பார்த்துமிகவும் துயரப்பட்டழுதார்.

அப்போது நானவரைப்பார்த்து பாவாநீரேனழுகிறீர் எவருக்கும் மவுத்துவந்து முடுகிவிட்டால் அவர்களைவிட்டுப் போகிறதில்லை எப்படியும்அல்லாவுடைய கட்டளைப்போல்முடியும்அதற்குநீரழ வேண்டியதில்லை இந்நேரத்தில்ஏதாவது ஒசீவனமிருந்தால் பசியாறுகிறதற்குக்கொடுக்கவேணுமென்றேன் அப்போதவர் தன்கையிலிருந்தமோதிரத்தைக் கழற்றி என்கையிற்போட்டு பாவாநீஇந்தவழியாகவே இன்னஞ்சிலதூரம் போவாயானால் அவ்விடத்தில் இதைப்போலொரு குடிசையிருக்கிறது அதில்என்தமயனிருக்கிறார்நீஇந்தமோதிரத்தைக்கழற்றிக் கொடுப்பாயானால் அவர்உனக்குப்பசியாற்றுவாரென்று சொன்னா அதுபோலவே நான்மோதிரத்தைக் கையிற்போட்டுக் கொண்டு அவர் சொன்ன அடையாளப்படிபோய் குடிசையைக்கண்டு அதற்குள்ளிருந்தபக்கீரை பார்த்து சலாஞ்சொல்லிஎன்கையிலிருந்த மோதிரத்தைக்கழற்றி யவர்கையிற்கொடுத்தேன் அவர்என்னைப்பார்த்தவுடனேமனம்வருந்தி முன்பக்கீரழுததுபோலவேஇவருமழுதார்அவருடைய அழுகையை நானமர்த்திஎனக்குப்பசியாயிருக்கிறது என்பசிதணியும்படியாக ஏதாவதுசீவனமிருந்தால் கொடுக்கவேணுமென்றேஅதுகேட்டவர்நான்கொடுத்தமோதிரத்தைத் தன்கையிற்போட்டுக்கொண்டு அவர்கையிலிருந்தமோதிரத்தைக்கழற்றி என்கையிற்கொடுத்து பாவாநீஇன்னஞ்சிலதூரம்போவாயானால் அவ்விடத்திலொரு குடிசையிருக்கிறது அதில் என்தமையனிருக்கிறார்அவர்கையிலிந்தமோதிரத்தைக் கொடுத்தால் அவர்

மிசு

உன்பசியையாற்றுவாரென்றுசொன்னார் அதுகேட்டுநான் அந்தமோதிரத்தை வாங்கிக்கொண்டு அவர்சொன்ன அடையாளப்படிபோய் அவர்தமையனாரைக் கண்டவுடனே சலாஞ்சொல்லி மோதிரத்தைக் கொடுத்து நான்பட்டதுயரத்தைச்சொல்லி ஜீவனங்கேட்டேன் அவரென்னைப்பார்த்து முன்பக்கீர்களழுததுபோலவே இவருமழுதார் அதைக்கண்டு நான் அவருக்குத் தணிவு சொல்லி பாவா என்ன துர்ஷடம்போலே நடக்குது அதற்காகநீங்கள்வியாகூலப்படவேண்டாம் இப்போதெனக்குமிகுந்தபசியாயிருப்பதால் நீங்களேதாவது ஜீவனங்கொடுக்கவேணுமென்றேன் அப்போதவர்மிகுந்தபிரியத்துடனே ஜீவனங்கொடுத்தார்நான் அதைவாங்கித்தின்று பசியாறியிருக்கையில் அவரென்னைப்பார்த்து பாவா இந்தவூரையாளுகிற ராஜாவானவன்கெட்டநசுருபாகிய துன்மார்க்கன் அவன்முகம்மதியாவுடைய வேதக்காரரைக் கண்டவுடன் கொன்றுபோடும்படியாய்ச்செய்வான் அதனாலேதானநான்உன்னைப்பார்த்து அழுதேன் ஆதலால்நானுன்னை அந்தராஜாவினிடத்திற்கூட்டிக்கொண்டுபோகிறேன் போனவுடனே நானவனுக்குச் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்வேன் நீயுமந்தப்படியேசெய்யவேணும் பின்புநானவனுக்கு ஒருஉபதேசஞ்சொல்லுவேன் நீயுமதைச்சரிதானென்று ஒத்துக் கொள்ளுமென்றுசொன்னார்,

அதுகேட்டு நான்நல்லதுபாவாவென்றேன் உடனேயவரென்னைக்கூட்டிக்கொண்டு அந்தராஜனிடத்திற்குப்போய் அவன்காலில்விழுந்துசாஷடாங்க நமஸ்காரஞ்செய்தார் நானும்அப்படியே சாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணினேன் உடனேயந்தராஜாவானவர் இந்தப்பக்கீரைப்பார்த்துஒய்ஞானியே இந்தமனிதன்யார் புதிதாயிருக்கின்றதேயென்றார் அதற்கந்தப்பக்கீர் மகாராஜாவே இந்தமனிதன் அறபுதேசத்தில்முகம்மதியாவுடையவேதத்திலுள்ளவன் இவன்நம்முடையமார்க்கத்தைக் கேள்விப்பட்டிதில்மிகுந்தபலனிருக்கிறதென்றெண்ணி அபேட்சைகொண்டு நம்முடைய மார்க்கத்திற்சேரத்தனதாயபிள்ளைகள் ஆஸ்திபாஸ்திரூக்க ரூசன முதலியவைகளையும் விட்டுவந்திருக்கிறான் ஆகையால்நானிவனைத்தங்களிடத்தில் கூட்டிக்கொண்டுவந்தேனென்று சொன்னார்அதுகேட்டுஇந்தராஜாமிகவும் மகிழ்வடைந்து உடனே தன்னுடையமந்திரியையழைத்து அந்தமந்திரியானவர்களுடைய வேதத்தைஎனக்குப்போதித்தார் அப்போதுநான் என்னுடையஈமானை இருதயத்திலெண்ணிக்கொண்டு வாயினாலே அவன்சொல்லிக்கொடுத்த உபதேசத்தைச் சொல்லிக்கொண்டிருந்தேன் அப்போதந்தராஜாவானவன் தன்னுடையமந்திரியையழைத்து உன்னுடையமகளை இருவருக்குங் கலியாணஞ்செய்துக்கொடுவென்று உத்திரவுபண்ணினான் அதற்கந்தமந்திரியும்சம்மதித்து அவர்

கள்பார்க்கப்பிரகாரம தங்கைகளை எனக்குக்கலியாணஞ்செய்து கொடுத்தார் இவைகளையெல்லாம் நானொப்பிக்கொண்டும் என்னிமானைப்பிசகிவிடாமல் உள்ளத்திற்பதித்து சகலசம்பத்துடனே அந்தப்பெண்ணும் நானும் சுகித்துக்கொண்டிருக்கிற நாளையில் என்பெண்சாதியாகிய பந்திமகள் விதிமுடிந்து இறந்துபோய்விட்டாள் அதுதப்படியிருக்க அவ்வூரிலுள்ளவழக்கமெப்படியென்றால் ஊருக்குவெளியிலுள்ள ஒருமைதானத்தில் சபம்வைக்கிறஅறையொன்றுசெய்திருக்கிறது அவ்வறையினுடைய உயரம்ஆகாயத்தைப்ளாவிக்கொண்டிருக்கும் அவ்வறையில் புருஷனிறந்தவுடன் மனைவிக்குமசபத்துக்குச் செய்யுஞ் சடங்குபோல்செய்து செய்து பெண்சாதியிறந்தால் கணவனுக்குஞ்சபத்துக்குச் செய்யும் சடங்கு செய்து ஊரிலுள்ளவர்களெல்லாம் வந்துதுக்கங்கொண்டாடி இருவர்தலையிலுங் குட்டி பின்புசபத்தையும் சபத்துக்குடையவனையும் ஓர்மஞ்சத்தின்மேல் வைத்து தூக்கிக்கொண்டு சகலசம்பிரமத்துடனே ஊர்கோலம்வந்து அந்தச்சவக்குகைக்குட்போய்க் கதவைத்திறந்து பெண்சாதியும்புருஷனையும்உள்ளேவைத்து கதவைச்சாற்றிவிடுகிறது அந்தவழக்கத்தைப்போலே என்பெண்சாதியிறந்தவுடனே அந்தவூரிலுள்ளபலரும் வந்துதுக்கங்கொண்டாடினார்கள் நானும்துக்கப்பட்டுக் கொண்டிருந்தேன் அப்படியிருக்கும்போது அவர்களெல்லாமசபத்தினிடத்தில துக்கங்கொண்டாடி பின்புஎன்னிடத்தில் துக்கங்கொண்டாட வந்தார்கள் அவர்களிலொருவர் முன்னதாக என்னிடத்தில்வந்து அடா அதுராஷ்டங்கெட்டவனேயென்றுபலவார்த்தைகளைப்பேசிஎன்தலையிலடித்தார் அதுபோலவேவந்தவர்களெல்லாம் என்னைவாயில்வந்தபடி பேசித்தலையிலடித்தார்கள் அதனாலெனக்குஅரைவாசியுயிர்போய்விட்டது பின்புஎங்களுடைய அஸ்தி முதலியவைகளையும்விற்று அந்தப்பொருளுக்கு ஒரு இரத்தினம வாங்கிவந்தார்கள்

அதன்பின்பு அவளையும் என்னையும் குளிப்பாட்டி நல்ல உடுப்புகளுடுத்தி அவளையொருபெட்டியில்வைத்து ஒருமஞ்சள்துணியில்நான முன்சொல்லிய ரத்தினத்தைமுடிந்து என்னிடுப்பில கட்டி என்தலைமேலமூணுரொட்டியும ஒருதோண்டிநிறையத் தண்ணீருந் தூக்கிவைத்து சவத்தைத்தூக்கிக்கொண்டு நானமுன்சொன்னசவஅறைக்குக் கொண்டுபோய்அவ்வறையைத்திறந்து சவத்தையுள்ளேவைத்து அந்தச்சவத்துடனேஎன்னையுமிருக்கும்படிஉள்ளேதள்ளிவிட்டுஅறையைப்பூட்டிச் சாவியைக்கொண்டுபோய்விட்டார்கள் அப்போதுநான் அந்தஅறைக்கு

ட்போன உடனேஉயரப்பார்த்தேன் வானமட்டுமெளாவி இவ்வளவு உக்கென்றுமதிக்கக்கூடாததாயிருந்தது ஆனால்அந்தச்சுவற்றில் நான்குபாகத்திலும் நாலுசன்னல் இருப்புச்கிராதிபோட்டிருந்தது அதன்வழியல்கொஞ்சம் வெளிச்சந்தெரிந்தது இவ்விதமான அறைக்குள்ளே நானிருந்தேன் அதற்குள் வெகுபிணங்கள் நிறைந்திருந்தது அப்படியிருக்கும்போது நான் என்னிடத்திலிருந்தமூன்றுரொட்டியையும் தண்ணீரையும் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு இரண்டுவேளைக்கொரு ரொட்டிவீதந்தின்றுக்கொண் டிருந்தேன் ஆனால்பகற்காலங்களில்சூரியன் உச்சியில்வந்தவுடனே அவ்வறைக்குள்வெய்யில் அகோரமாயிருப்பதால் நான் அவ்விடத்திலிருக்கும் சவப்பெட்டிகளையெடுத்து அதிலிருக்குஞ்சவங்களை ஒருமூலையில்குவித்துவிட்டு வெயிலுக்குமறைவாகப் பெட்டிகளைவைத்து அவ்விடத்தைச் சுத்திசெய்து உட்கார்ந்துக்கொண்டிருந்தேன் அந்தச்சமயத்தில் இன்னொருவன்பெண்சாதி யிறந்துபோனாள் அந்தச்சவத்தையும்அவள்புருஷனையும் நானிருக்கும்அறைக்குட் கொண்டுவந்துதள்ளிவிட்டுப் போய்விட்டார்கள் அப்போதந்தச்சவத்தினுடைய புருஷன்பெட்டியைக் கெட்டியாய்க்கட்டிக் கொண்டு அழுதுக்கொண்டிருந்தான் அப்போதுநான் அந்தமனிதனைக் கொன்றுபோட்டு அவனுடையரொட்டியையும் தண்ணீரையும் எடுத்துக்கொள்ளலாமென்றெண்ணி அவ்விடத்தில்உடைந்துகிடக்கும்பெட்டிப்பலகைகளில் ஒருதுண்டுபலகையை யெடுத்துக்கொண்டு அவனருகிற்போய்அவன் மண்டைமேல்ஓங்கியடித்தேன் அவன்மண்டையுடைந்துகீழேவிழுந்துஇறந்துபோனான் உடனேநான்அவனிடத்திலிருந்த ரொட்டியையும் தண்ணீரையும்எடுத்துவைத்துக்கொண்டுபசியெடுத்தபோது கொஞ்சங்கொஞ்சமாகத்தின்றுகொண்டிருந்தேன் இவ்விதமாகநான்சவத்துடன்வருகிறமனிதர்களையெல்லாம் அடித்துக்கொன்றுபோட்டு அவர்களிடத்திலிருக்கும் ரொட்டியையும் தண்ணீரையும்எடுத்துக்கொண்டு வேளைவேளைக்குத்தின்று மிச்சமாயிருப்பதை வைத்துக்கொண்டிருப்பேன் இப்படியிருக்கும்நாளில்ஒருநாள் அவ்வூரையாளும் ராஜாவினுடையமருமகனிறந்துபோனான் அவனுடன் அவன்பெண்சாதியாகிய இராஜகுமாரத்தியையுங்கொண்டுவந்து சவக்கிடங்கில்தள்ளிவிட்டுப் போய்விட்டார்கள் அவளோமிகுந்தசவுந்தரியமும் வாலிபமுமுள்ளவளாயிருந்தாள் அப்பேர்ப்பட்டவள் தன்புருஷனிருக்கும்சவப்பெட்டியைக் கட்டியழுதுக்கொண்டிருந்தாள் நான் அவளைப்பார்த்துப்பிரியமுடையவனாய் நாமோ ஒண்டியாகவிருக்கிறோம் இவ்விடத்தில் வருகிறரொட்டியுந் தண்ணீரும் நாம் வேளைவேளைக்குத்தின்றும் அதிகப்பட்டிருப்பதால் இவளைக்கொல்லாமல்மனைவியாகவைத்துக்கொண்டிருக்கலாமென்றுயோசித்து அவளருகி

ற்போய் அவள்கையைப்பிடித்து இழுத்தேன் அவள்என்னமோஏதோவென்று பயந்து தடுமாறினாள் அப்போது நான் அவளைப்பார்த்துப்பெண்ணே நீ யொன்றுக்குப்பயப்படாதே நான்மனிதன்றான உன்னைப்போலேஎன்பெண்சாதியுடனே நான்வந்தவன் ஆகையால்நானொருயோசனை சொல்லுகிறேன்கேள் உன்னுடையகணிறந்துபோனானென்றுநீ அழவேண்டாம் நான்உனக்குநாயகனாக விருக்கிறேன்நாமிருவரும் இவ்வறையிலிருந்து வாழலாமென்றுசொல்லி அவள்மனதைத்தேற்றிச் சம்மதிக்கும்படிச்செய்து நாங்களிரண்டுபேரும் பெண்சாதியும் புருஷனும்போலே பிரியாவிடையா யிருந்தோம் அப்படியிருக்கும்போது எங்களுக்கு வேலையென்னவென்றால் அங்கேயிருக்கிறபலகைத் துண்டுகளையெடுத்து நாங்களிருக்கிறபக்கத்தில்சுரங்கம்போல் தோண்டிக்கொண்டிருப்போம் இதுவல்லாமல் நான்ஒருசவத்துக்கு ஒருரத்தினம்வீதம் முடிந்துவருகிறரத்தினங்களையும் நான்அவ்வறைக்குட்போவதற்கு முன்னாலிருந்தபிணங்களுக்குக்கட்டியிருந்த ரத்தினங்களையும்அவிழ்த்து எண்ணிப்பார்க்க எண்ணூறுரத்தினமிருந்தது அந்தரத்தினங்களை இரதக்கச்சையிற்போட்டு இடுப்பிற்கட்டிக்கொண்டேன்.

பின்புநானும் ராஜகுமாரத்தியும் சுவரின்பக்கத்திற்றோண்டியசுரங்கமானது வெளியிற்போகும்படியான வழியாச்சுது அதைக்கண்டுநான்இராத்திரி ஒருசாம நேரத்திற்குப்பின்னால் இராஜகுமாரத்தியுடனே அவ்வறையைவிட்டு சுரங்கவழியாய்வெளியில்வந்துகாடுசெடிவனம்மலைகந்தரமுதலியவைகளைக்கடந்துநடந்துபோனேன் இராசகுமாரத்தியும் சலியாமல்என்னுடன்நடந்துவந்தாள் அந்தச்சமயத்தில்எங்களிருவருக்குப் பசி அதிகப்பட்டது அவ்விடத்திலே ஊர்பதிமுதலியவைகளொன்றுமில்லாமல் கண்ணுக்கெட்டியதூரம் காடாகவேயிருந்தது ஆகையால்நாங்கள் அக்காட்டிலுள்ள காய்கனிகிழங்குகளைப்பிடுங்கித்தின்றுபசியாறினோம் இப்படியேதினந்தோறும் பசிவேளையில்நாங்களிருவரும் காய்கனி கிழங்குகளைத் தின்றுக்கொண்டு முப்பதுவருஷத்தைக்கழித்தோம் முன்சொல்லியசவஅறைக்குள் முப்பதுவருஷம் சவத்துடன் வரும் ரொட்டியைத்தின்றுக் கொண்டுகாலத்தைக்கழித்தோம் இவ்விதமாகநாங் களிருவரும் காட்டில்கந்தமூலபலாதிகளைத் தின்றுக்கொண்டு நடந்துவருகையில் இந்நகரமெதிர்ப்பட்டது இதைக்கண்டவுடனே நாங்கள் மிகுந்தமகிழ்ச்சியடைந்து நெருங்கிவரும்போது நாங்கள்எங்களைக்கண்டு பல்லக்கனுப்பினீரென்று சொன்னார்அது கேட்டுநான நாம்பட்டகஷடத்தைப்பார்க்கிலும் இவர்அதிகவருத்தப்பட்டிருக்கிறாரென்று நினைத்து அல்லாகுத்தஆலாவைப்புகழ்ந்து சுக்கிர்செய்து ஒருகப்பல விலைக்கு வாங்கிஅதில் பலசரக்குகளையுமேற்றி அந்தமனிதனையும்அவருடன்வந்

தசிழவிலையுமதிலேயேற்றி அவர்கொண்டுவந்தரத்தினங்களில நானெடுத்துக்கொண்ட ஒன்பதுரத்தினம்போக மற்றரத்தினங்களை யவர்கையிற்கொடுத்து அவரிருந்தவூராகியசித்தாதேயத்திற்கனுப்பிவிட்டேன்,

பின்புநான் அவர்கொடுத்த ஒன்பது ரத்தினத்தையும்பார் தரித்துக்கொள்ளலாமென்று யோசித்தால் ஒருயோசனைபிறந்தது அதாவது இந்தநாயில்லாவிட்டால்நாமபிழைக்கமாட்டோமே நம்மைக்காப்பாற்றியது இதுதானே ஆதலால்இந்தரத்தினத்தை இந்நாய்தான்தரித்துக்கொள்ளத்தகுந்ததென்றெண்ணி ஒருதங்கத்தகட்டை வாருபோற் செய்து அந்தவாரில இந்தரத்தினங்களைப் பதித்து ஓர்பதக்கஞ்செய்து தூக்கிஇந்நாயின்கழுத்திற்கட்டினேன் அதன்பின்புஎனக்குமிகுந்தபொருள் திரண்டிருப்பதால்எனக்கு எந்தகாரியத்துக்கும் சேவுச்சேவகமுதலியராஜகாரியங்கள் தேவையில்லையென்று அரசை அவ்வூரிருஜனிடத்தி லொப்பித்துவிட்டுநான்ய தொருசிந்தையுமில்லாமல் சவுக்கியமாயிருக்குங்காலத்தில என்மனைவியாகிய இராஜகுமாரத்தி இறந்துபோய்விட்டாள் அதனால்நான் மிகுந்தவருத்தமடைந்து அவளைநல்லடக்கஞ்செய்து அதற்குவேண்டியகத்தம்பாத்திகாமுதலியவைகளையும் நாற்பதுநாள்வரைக்குமோதிதுவாக்கேட்டு அதன்பின்புநான் இந்தநகரத்திலிருப்பதிற்பிரயோசனமொன்றுமில்லை நமதூராகிய நிஷாபூருக்குப்போகவேண்டுமென்றெண்ணி ஒருகப்பல்கிறையத்துக்குவாங்கி அதில்என்னுடையஆஸ்திபாஸ்திமுதலிய சகலசம்பத்தையும் சாமான்களையும் இந்நாயையும் இந்தக்கூண்டிலிருக்கிற தமயன்மார்களையும் ஏற்றிக்கொண்டு நானுமேறிநிஷாபூர்போய்ச்சேர்ந்து கப்பலில்வந்த திரவியங்களையும் நாயையும் இந்த இரும்புக்கூண்டையும இறக்கி என்வீட்டிற்குக்கொண்டுபோய்வைத்துக்கொண்டு விநோதமாகியமாடகூடங்கள் முதலியமேல்விடுகள கட்டிகொடுக்கல்வாங்கல்முதலிய வர்த்தகஞ்செய்து முன்னிருந்தமனைவியுடன் இன்னொருபெண்ணையும் கலியாணஞ்செய்துக்கொண்டு சகலசம்பத்துடனேயிருந்தேன்.

இப்படியிருக்குங்காலத்தில் ஒருநாள் இதோ என்னருகிலிருக்கிற பிள்ளைவந்துசேர்ந்தது இதன்மீது நான்மிகுந்தகிருபைவைத்துப்பாதுகாத்துவந்தேன் அப்படியிருக்குங்காலத்தில இந்தப்பிள்ளை தாய்தகப்பனைப்பார்க்கவேணுமென்று மிகவும் ஆவலாய்ச் சொன்னபடியால் இந்தப்பிள்ளையை அரைநாழிகைபேனும விட்டுப்பிரியாதஎனக்கு இதைத்தனியே தாய்தகப்பனிடத்திற்கனுப்ப மனமவராமல்நானுங் கூடப்புறப்பட்டு வந்தேனென்றார் கேளுங்கள்தோஸ்துகளாகிய நான்கு பக்கீர்களே இவ்விதமாக அந்தஆஜாசக்பரசென்னும்வர்த்தகர் சொல்லிக்கொண்டு வரும்போது ஆண்டிகேஷ்கொண்டிருந்த மந்திரிகளாகிய எந்த

ளுக்குத்தெரியாமல் மெள்ளவெழுந்து தன்வீட்டுக்குப்போய் ஆண்வேஷத்தைமாற்றி பழையபடியேபெண்வேஷங்கொண்டு தன்தாயிடத்திற்போய் தாயைக்கட்டித்தழுவி இவ்விடத்தில் நடந்தசங்கதியைச் சொல்லிக்கொண்டிருந்தது அந்தச்சமயத்தில் சவுதாகர் திரும்பிப்பார்த்துபிள்ளையைக்காணாமல் மிகுந்தவியாகூலத்துடனே மயங்கியிருந்தார் அதுகண்டுநான் அவ்விடத்திலிருப்பவர்களைப்பார்த்துஇங்கேயிருந்தபிள்ளை எங்கேபோய்விட்டதென்று கேட்டேன் அதுகேட்டவர்கள் அந்தப்பிள்ளைதாங்கள்சிறைச்சாலையில்வைத்திருக்கும்-௯௨-வது மந்திரியாகியஅப்துல்கரீம்வீட்டிற்போய்ப் புகுந்ததென்றார்கள் அதுகேட்டுநான் அதைப்பார்த்துவரும்படி சிலபேர்களைஅனுப்பினேன் அவர்கள்போய்மந்திரிபெண்சாதியைக்கண்டு இங்கேவந்தபிள்ளை எங்கேயென்றுகேட்க அந்தம்மாள்சேவர்களைப்பார்த்து என்கணவனை பாத்துஷாவானவர் விசாரிக்காமல்சிறைச்சாலையி லடைத்தபடியால் என்மகள் ஆண்வேஷங்கொண்டு அந்தச்சவுதாகரிடத்திற்போய் அவர்மனம்போலிருந்து அவனையும் அவர்வைத்திருந்த நாயையும் அழைத்துக்கொண்டுவந்துபாத்துஷாஉடைய சந்தேகத்தைத்தீர்த்துவிட்டு என்மகள் என்வீடுவந்துசேர்ந்தாளென்றுசொன்னாள்.

அதுகேட்டவர்கள் என்னிடத்தில்வந்துநடந்தசங்கதிகளைச்சொல்லநான்மனம்பதைத்து அந்தமந்திரியானவர் ஒன்பதுமாத்தினம் நாயின்கழுத்திற்கட்டியிருக்கிறதென்ற சொல்லை நம்பாமல்அவரை வெட்டிப்போடும்படி உத்திரவுகொடுத்து நமதுமுதன்மந்திரியாகிய இருதுமந்தென்பவரால்அவரைச் சிறைச்சாலையில்வைத்தோமேயென்று வருந்தப்பட்டுஅவர்சொன்னதுபோலவே நாயின்கழுத்திலொன்பதுமாத்தினத்தைக்கண்டு அந்தநாயைவளர்த்தவர்சொல்லிய அகவால்களையுங்கேட்டுமிகவும் மனங்குளிர்ந்து அல்லாகுத்தஆலாவைப்புகழ்ந்து பின்புசிறைச்சாலையிலிருக்கும்மந்திரியையழைப்பித்து என்னருகிலுட்காரவைத்து அந்தமந்திரியைப் பிரியமாகப்பார்த்து நான்தெரியாமற்செய்த குற்றத்தை நீர்பொறுக்கவேணுமென்றுசொன்னேன் அதுகேட்டமந்திரியானவர் எனக்குமிகவுந்தசலீம்செய்து வணக்கத்துடனேயிருந்தார் அந்தச்சமயத்தில் நான் அந்த இரும்புக்கூண்டிலிருந்தபாவிகளாகிய மூதேவிப்பயல்களைக் கொலைசெய்துவிடும்படியாயுத்திரவுகொடுத்தேன் அப்படியேயவர்களைக் கொலைசெய்துவிட்டார்கள் பின்புஅந்தமந்திரியினுடையமகளை இந்தஆஜாசக்பர்சென்னும்சவுதாகருக்குமிகுந்த ஆடம்பரத்துடனேநிகாகுசெய்துகொடுத்து அவருடன் மந்திரிமகளைக்கூட்டி வேண்டியவரிசை முதலிய வெகுமதிகளுங்கொடுத்து அவனருந்தேடுப்பியபாணப்ப

டுத்தியனுடனேயும் அந்தச்சவுதாகர் மந்திரிமகளைப்பல்லக்கில்வைத்துக்கொண்டு தாயையுமழைத்துக்கொண்டு இரதகஜதுரகபதாதியாகிய நால்வகைச்சேனைகளுஞ் சூழப் பிரயாணப்பட்டு அவருடையதேச மாகிய நிஸாபூர்போய்ச் சேர்ந்து தம்பதிசமேதராய் யாதொருகுறைவுமில்லாமல் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கேளுந் தர்வேசுகளே இப்பூலோகத்தில் மனிதராய்ப் பிறந்தவர்களில இப்பேர்ப்பட்ட துன்பமடைந்தவர்கள் வெகுபேரிருக்கிறார்கள் அப்படியிருக்க நீங்கள் நம்மைப்போல்வருத்தப்பட்டவர்கள் எவ்விடத்திலு மில்லையென்று எண்ணியிருக்கிறீர்கள் அப்படி நீங்களெண்ணிக்கொளவது சரியல்ல ஏனென்றால் மனிதராய்ப்பிறந்தவர்களுக்கு இன்பமுந்துன்பமும் வாழ்வுந்தாழ்வும் வண்டியின்சக்கரம்போல் புரண்டுக்கொண்டிருக்கிறது ஆகலால்நீங்கள்பட்டஅவஸ்தைகளை ஒருகதையாகச்சொன்னால் நானதைக்கேட்டுமகிழ்ச்சியடைவேனென்று மிகவும் உபசரணை செய்து பிரியத்துடனே கேட்க இரண்டாவதுமக்கிறானவர் தான்பட்ட கிஸ்ஸாவைச் சொல்லத் தொடங்கினார்.

ஆசாத்பகுத்பாத்ஷா

நான்குபக்கீர்களுக்குச்சொல்லிய கிஸ்ஸாமுற்றிற்று.

பிசுமில்லாகி.

# இரண்டாவது பக்கீருடைய கிஸ்ஸா.

## பாரீசுதேசத்து அசீசுமீரு பாத்துஷாவுடைய

## குமாரர்

## அக்பர்பாத்துஷாவுடைய கதை.

———o———

இவ்விதமாகரூமுநகரத்தையாளும்ஆசாத்பகுத்பாத்துஷா அவர்கள்இந்தநான்குபக்கீர்களென்னும்கர்வேசுகளுக்கு காசாசக்பரஸ்ஸென்ம்முகம்மதுகபுதுசவுதாகருடைய கிஸ்ஸாவெல்லாம்சொல்லி முடிந்தவுடனேஇரண்டாவது அக்பர்பாத்துஷாவென்னும் பக்கீரொழுந்து தசலீம்செய்து உட்கார்ந்துபாத்துஷாவைப்பார்த்துச் சொல்லுகிறார்.

கேளுங்கள்தேசத்திலுள்ள பாத்துஷாக்கள் சுல்த்தான்கள் நவாப்புகள் இராஜாக்கள்மற்றுஞ்சக்கிரவர்த்திகள் இவர்களுக்கெல்லாஞ்சக்கிரவர்த்தியாகிய பாத்துஷாநாயகமே தாங்கள்எங்களுடைய அஹவாக்களை சொல்லும்படியாய்விரும்பிக்கேட்டபடியால் நான்பட்டகிஸ்ஸாவையொருபேரக்காகச்சொல்லுகிறேன் தாங்களும்மத்துமூன்றுபக்கீர்களும் காதுகொடுத்துக்கேட்கவேணுமென்றுசொல்லுகிறார்நானுகிரது பாரீசுதேசத்தைஇராஜரீகஞ்செய்யவந்த அசீசுமீருபாத்துஷா அவர்களுக்குவெகுநாளாய்பிள்ளையில்லாமலிருந்து வேண்டியகயிராகயிருததுமுதலியசக்காத்துசெய்துநேர்ந்துதவமிருந்துநெய்யால்விளக்கெரித்துபெரியோர்களைப்பூசித்திருக்கிறநாளையில் அல்லாகுத்தஆலாவுடைய உதவியினாலேநான்அவர்களுக்குபிள்ளையாய்பிறந்துயாதொருகுறைவில்லாமல்வளர்ந்து அக்குபர்என்றுபேர்வைத்துஐந்துவயதானபின்பு ஓதவைத்துமற்றஇல்முகளெல்லாம்படித்துஆனையேற்றம்குதிரையேற்றம் இராஜதந்திரமுதலியதுகற்பித்துகொடுத்து சிலபெரியோர்களைஎனக்குவேண்டியபுத்திமதிகள்சகலநீதிகளையுஞ்சொல்லிகொடுக்கும்படியாய்என்பாவா அசீசுமீருபாத்துஷாஉத்திரவுசெய்திருந்தார் அதும்பாலேயவர்கள் எனக்குசகலநீதிகளையுஞ்சொல்லிக்கொடுவருவார்கள் அப்படியிருக்கஒருநாள் ஒருபெரியவர்என்னைதனியாயோரிடத்திற்கழைத்துகொண்டுபோய்நானொருஉ

பதேசஞ்சொல்லுகிறேன் அதுபோலேநீர் நடந்தால்உமக்கு இருபதியிலுங்குறைவில்லையென்றார் அப்போதவனாவருந்திதாங்கள்சொல்லுகிறதுபேர்லேநானடந்துகொள்ளுகிறேனென்றுகேட்டேன் அவர் என்னைப்பார்த்து அனேகம்புத்திகள்சொல்லி பின்னுஞ்சொல்லுகிறார்சேனும்பாவா இந்நேரஞ்சொன்ன புத்திமதிகள்ஒருவிதமாயிருந்தபோதிலுங் காரியமுள்ளவஸ்துதினியாவிலிரண்டிருக்கிறது அதில்ஒருவஸ்துவைபாவதுதேடிக்கொண்டால்இந்தவிதமென்றுசொல்லமுடியாதமேன்மையுண்டென்றார். அதென்னபாவாவென்றுகேட்டேன் அவர்சொல்லுகிறார் யிந்தப்பூலோகத்தின்கண் மனிதனாய்ப்பிறந்தவர்களல்லாருக்குவானுகுத்தாவைநாடி அவன்வேதத்திற்சொன்னபடியேவேலைச்செய்து விலகலைவிலக்கிதொழுகைமுதலியதுமுடித்து ஒஸ்தாதிடத்தில்முரீதென்னுமுபதேசம்பெற்று சாகிதாமுசாகிதாயிருந்துநேர்வழியாய்த்தன்னைத்தானறிந்து அல்லாகுத்தாலாவுக்குமுடுகுதலையாகவேணும் அப்படியில்லாவிட்டால் ஏழைமிசுக்கீன்கள்யாசகர்கள்முதலானபேர்களுக்குசக்காத்தென்னும்தர்மஞ்செய்துபேர்பெற்றுக்கொள்ளவேணும்இப்படியிந்தயிரண்டுகாரியத்திலொன்றாவதுசெய்துவந்தாலவர்கள்தான்செத்துஞ்சாகாமலிருப்பவர்கள்இந்நம்கியாமத்துநாள்வரையிலும் அவனுடையபேரழியாமலும்அல்லாவுக்குவந்தடியனாகவுமிருப்பார்கள் அப்படிக்கிந்த இரண்டிலொன்றுவதுசெய்யாமலிருந்தால்எந்தபாத்துஷாக்களானாலுஞ்சரிஇராஜாக்களானாலுஞ்சரிபக்கீர்களானாலுஞ்சரிஇன்னுமெவர்களாயிருந்தாலுஞ்சரிஇருபதியிலும்அவர்கள்நயம்பெறமாட்டார்களென்றுசொல்லி இன்னுஞ்சொல்லுகிறார்சேனும்பாவா உமக்கொருதிருஷ்டாந்தஞ்சொல்லுகிறேன்அதென்னவென்றால்ஒருதேசத்து ஆத்திம்தாதாவென்றுஒருசுபாபிருந்தார் அவரகிறது சிறிதுசக்காத்தென்னும்தர்மஞ்செய்துவந்தார் அவரப்படிதர்மஞ்செய்துவருகையில் பூலோகமடங்கலும் அவருடைய பேர்பிரபலமாயும்அவனைவிட தருமஞ்செய்தபேர்கள் ஒருஜகத்திலுங்கிடையாதென்பதாயும்பேர்பெற்றுக்கொண்டார்இன்னம்சொல்லுவர்கள இந்தபூலோகத்தில்காபிராயிருந்தபேர்களில்-காரன்-காமன்சோமன்முதலியவேண்யபேர்களெல்லாம்யாராலேதைக்கேட்டார்களோ அதுகளெல்லாங்கொடுத்துதர்மஞ்செய்துவந்தார்களவர்களெல்லாம்இந்தஆத்திம்தாதாவுக்குச்சரிவரமாட்டார்களென்றபேர்பெற்றுக்கொண்டாரென்றுசொல்லுவார்கள் அப்படியிருக்கிறநாளையில்ஒருபட்டணத்திலொருபாத்துஷாவிருந்தார் அவருக்குச்சிலநவாப்புகள் இராசாக்கள்திறைகட்டிக்கொண்டுவருகிறது அந்தபாத்துஷாவுக்கு ஒருபிள்ளையிருந்தது அந்தப்பிள்ளைக்குவயதுபதினாறுண்டு அப்போதவர்நினைத்தார் எனதுகப்பனுடையஇராசா கத்திலும்தவுலத்தாகியசம்பத்துகளிலும் பத்துப்பங்கில்ஒருபங்காவதி

ருக்கமாட்டாது ஆத்திம்தாதாவுடையதவுலத்து அப்படியிருக்கஅவர்ஏழைமிசுக்கீனர்களுக்குசக்காத்தென்னுந்தருமஞ்செய்துமேலானபேர்பெற்றுக்கொண்டார் ஆனபடியால்நம்முடையதகப்பனுகியபாத்துஷாவிடத்தில்அனேகந்திரவியமிருக்கிரபடியால் நாமும்சக்காத்துசெய்துஅந்தஆத்திமதாதாபேர்யெடுத்ததிலும் மின்றுஅதிகபேர்பெற்றுக்கொள்ளலாமென்றுஅனேகந்திரவியங்களையெடுத்துக் கணக்கிலடங்காத இன்னவிதமென்றுசொல்லிமுடியாத தருமஞ்செய்துவந்தார் அப்படிச்செய்தும் ஒருவராவது இவன்தருமவானென்றுசொல்லவில்லை அந்தஆத்திமதாதாவைத்தான் தருமவானென்றுசொல்லுகிறார்கள் ஆனபடியால்அவரிந்தப்பூமியிலிருக்கிரவரையில் நம்மையொருவரும் தருமவானென்றுபிரசங்கஞ்செய்யமாட்டார்கள் ஆனபடியால்இப்போதே பிரயாணப்பட்டுபோய்அவரைஎந்தவிதத்திலேயும் கொன்றுபோடுவோமாகில் நமக்குதருமவானென்றுபேர்கிடைக்கும் இல்லாமற்போனாற்கிடைக்கமாட்டாதென்று இவனுடையபாவாபாத்துஷாவிடத்திற்சொல்லி இரதகஜதுரகபதாதியாகியநால்வகைச்சேனையையுங் கூட்டிக்கொண்டுபோய் அந்தஆத்திம்தாதாவுடைய ஊருக்குக்குச்சமீபத்தில்வந்து டேராமுதலியகூடாரமடித்து தளமிரங்கியிருந்தார்கள் அப்போதுபொழுதஸ்தமித்துயிரவானது அந்தநேரத்திலிவர்கள் சண்டைசெய்யவந்திருக்கிரதை ஆத்திம்தாதாகேள்விப்பட்டு யோசனைபண்ணினார்.

நாம்வந்தஎதிராளிகூட எதிர்த்துசண்டைசெய்யவேணுமானால்நம்மிடத்திலிருக்கிரவர்களெம்போதும்நாமுத்திரவுகொடுத்தால்எதிர்த்துசண்டைபண்ணுவார்கள் அப்போதவனுடையபடையிலும்நம்முடையபடையிலும்வேண்டியபேர்களிறந்துபோவார்கள் அப்படியிருக்கதோர்வைகெலிப்புஒருவர்பங்கல்ல ஆனபடியால்அவன்வந்திருக்கிரதைப்பார்த்தால்நம்மிடஉயிரைவதைசகவந்திருக்கிறவனேயொழியவேறொன்றுக்குமல்லஆகையால்நம்மிட உயிர்போனாலும்போகாதேதவிர இந்தயிருவகைத்தளத்திலுள்ளமனிதர்களுயிர்போகிறதுசரியல்ல அப்படியேஅவர்களுயிர்போனாற்போகுதென்று நாமெண்ணியிருந்தோமானால் நமக்குபாவம்வந்துசேரும்அல்லாகுததஆலாவுக்குக் குற்றவாளியாகவேணுமென்றுபலபலயோசனைகளுமயோசித்து ஒருமுடிவுசெய்தார் அதென்னவென்றால்நமதுஇராஜாங்கம்போனாலும் போகிறதேயொழிய அவன்கூடஎதிர்த்துசண்டைசெய்யவேண்டியதில்லை இன்றையயிரவுவிடிவுதற்குள்ளே இந்தக்கோட்டையைவிட்டுப்புறப்பட்டு தனியேஎங்கேயாவதுபுறப்பட்டுவோடிபோய்விட்டால்பொழுதுவிடிந்தவுடன்வந்தபேர்கள்எதிர்த்துசண்டைபோடும்படியாக ஆரம்பஞ்செய்வார்கள் அப்போதுநம்முடையமந்

திரிமார்களவர்கள்மேலேபடையெடுப்பதற்காக நம்மிடத்தில்வந்துமுத்திரவுகேட்கவருவார்கள் அந்நேரத்தில்நாமிவ்விடத்தில்யில்லாமலிருப்பதினாலேஇந்தமந்திரிமார்கள யோசிப்பார்கள்நம்மிடசபையைக்காணாமல்இனிமேல்நாமென்னசெய்கிறதென்று யோசித்துச்சும்மாயிருந்துவிடுவார்கள் அப்போது அந்தப்பாத்துஷாமகன்யோசிப்பான் நாமிவ்வளவாடம்பரஞ்செய்தும் நமக்குஎதிரியாகயாரும் எதிர்த்துவரவில்லையேஎன்றெண்ணிகோட்டைக்குள்வந்துபுகுந்து தன்னுடைய கொடியைநாட்டிஊரைப்பிடித்துக்கொள்ளுவான் அப்போதுஇருவகைச்சனங்களும் உயிர்ச்சேதம்வரமாட்டாதுஇதுதான்சரியானயோசனையென்றுநினைத்துஅந்தராத்திரியேபிரயாணப்பட்டுஊருக்குவெளியேபோய் காதவழிக்கப்புறம்காடுஞ்செடியுமடர்ந்த ஒருமலையிருக்கிறது அந்தமலைக்குட்போய்அதிலிருக்கும்குகைக்குள் மறைவாகயிருந்துவிட்டார்.

அப்படிஆத்திம்தாதா மறைவாய்ப்போயிருக்கையில்பொழுதுவிடிந்ததுஅந்நேரத்தில் இவரைக்கொல்லவேணுமென்றுவந்தபாதுஷாவுடையமகன்தளத்தையெழுப்பிசண்டைக்காரகோலங்கொண்டுவெகுஆடம்பரம்பண்ணினார்கள் அப்போதுஒருவராகிலும்எதிர்த்து வருவாரில்லை ஆகையால் அந்தப்பாத்துஷாகுமாரனெண்ணினார் நமக்குயெதிரியிலவர்களல்லவென்று தனதுபடைகளையெல்லாம்நடத்தி கோட்டைக்குட்புகுந்துதன்னுடையகொடியைநாட்டி ஊரைப்பிடித்துக்கொண்டுஆத்திம்தாதாவைக்காணாமையால் எங்குந்தேடிப்பார்த்து அகப்படாததினால் அந்தவூரெங்கும்பறைசாற்றும்படியாய் ஜாக்கிரதைசெய்து ஆத்திமுடையசிம்மாசனத்தில் பாத்துஷாவுடையகுமாரன் போயிருந்தார் அப்படியிருக்க அவன்பறைசாற்றினது என்னகாரணமென்றால் ஆத்திமதாதாவையெவர்களாவது பிடித்துக்கொண்டுவந்துவிட்டார்களானால் அவர்களுக்குவேண்டியபொருளுங்கொடுத்து கிராமங்களுங்கொடுக்கிறேனென்று விளம்பரஞ்செய்திருந்தது அப்போது அந்தவூரிலிருக்கப்பட்டவர்கள் அவர்செய்துவந்த இராஜநீதியும்சத்திரமுதலிய தருமஞ்செய்ததையு மிவர்களெண்ணி அவரைப்பிடித்துக்கொடுக்க ஒருவருஞ்சம்மதிக்கவில்லை.

அப்படியிருக்கையில் இந்தஆத்திம்தாதாவிருக்கிறமலைக்குசமீபத்திலொருகுடிசைவீடிருக்கிறது அந்தவீட்டில்ஒருகிழவனும் கிழவியுமிருக்கிறார்கள் அவர்களிரண்டுபேரும் காட்டிலுள்ள விறகுகளைவெட்டிகட்டையாகக்கட்டி ஆளுக்கொருசுமையெடுத்துக்கொண்டுகடைக்குபோய்விற்று அதில்வரப்பட்டகாசுகளுக்குகோதுமைமாவும்நெய்யும்இரைச்

சியும்வாங்கிக்கொண்டு அந்தமலையிலிருக்கிறகுடிசைக்குள்வந்து ரொட்டிசுட்டுகறியைச்சமையற்பண்ணித்தின்றுபசியாறிக்கொள்ளுகிறது இவ்விதமாக அவர்களுடைய அனுபத்தென்னும்ஜீவனம்நடந்துவருகிறது. மிச்சம்ஒருதுட்டாவது கையிலிருக்கிறதில்லை ஒருநாளைக்குத்தலைபிடிமுதலியநோய்வந்தால் அன்றைக்குபட்டினியாயிருக்கிறது அப்படியிருக்கையில்ஒருநாள்ஏதோ ஒருவருத்தத்தினால் விறகுகொண்டுபோகாமல்பட்டினியாகஇவர்களிரண்டுபேரும்படுத்திருக்கையில் இவர்கள்பசியின்கொடுமையினால்உறக்கம்வரவில்லை அப்போதுபுருஷனும் பெண்சாதியுமாகச்சிலவார்த்தைகள் பேசிக்கொண்டிருந்தார்கள் அதெனனவென்றால்புருஷனைப்பார்த்து பெண்சாதிசொல்லுகிறாள் நாமிரண்டுபேரும்எத்தனைநாளைக்குஇந்தமலையில்விறகுவெட்டி ஊருக்குள் கொண்டுபோய்விற்றுஅயதைக்கொண்டுஜீவனஞ்செய்துவருகிறது அதில்ஒருநாளைக்குச்சும்மாயிருந்தால்இவ்விதமாய்ப் பட்டினியாகயிருக்கிறோமே ஆகையால்அல்லாகுசுவானுருத்தஆலா நமக்குஒருநாளைககாவது மிஞ்சும்படியானபொருளைக்கொடுத்து நாம்சவுக்கியமாயிருந்ததில்லையே இதுவல்லாமல்நாமிரண்டுபேரும் தள்ளாமையாய்விட்டோம் இனிமேல்நம்மாலேவிறகுவெட்டிசுமந்துகொண்டுவிற்றுஜீவனம்பண்ணவுங்கூடாததாயிருக்கிறது ஆகையால்யிச்சவூரைப்புதிதாக வொருபாத்துஷாமகன்பிடித்துகொண்டு ஆத்திம்தாதாவையென்னிடத்தில் கொண்டுவந்தவர்களுக்குவேண்டியபணமும்கிராமமுங்கொடுக்கிறோமென்று பறையடித்திருக்கிறார்ஆனபடியால்அவனையிந்தக் காட்டில்போய்த்தேடிப்பிடித்து பாத்துஷாமகனிடத்தில்கொண்டுபோய்விட்டோமானால் அவர்கொடுக்கிறபொருளையும்கிராமத்தையும்பெற்றுக்கொண்டு கொஞ்சநாளைக்காவது வருத்தப்படாமல்சவுக்கியத்திலிருந்து மவுத்தாய்ப்போகலாமென்று தன்புருஷனைப்பார்த்துச்சொன்னாள் அதுகேட்டஅவள்புருஷனாகிய கிழவன்சொல்லுகிறான் அடிபாவிஎன்னவார்த்தைசொன்னாயென்று இரண்டுவிழிகளில்அக்கினிப்பொறிசிதறும்படியாய்க்கோபங்கொண்டு அந்தக்கருமவானை என்னவிதமாகப் பிடித்துக்கொண்டுபோய்விடுகிறது நீசொல்லும்போலே அவனைப்பிடித்துக்கொண்டு அந்தப்பாத்துஷாமகனிடத்தில் விட்டால் அவன்அவனைக்கொன்றுபோட்டு நாக்குஆகவேண்டியதைக் கொடுப்பான்அதைவாங்கி நாம்சவுக்கியத்திலிருப்போம் அப்படிநாம்சவுக்கியமாயிருப்பதிலென்னபிரயோசனம் அந்தஆத்திம்தாதாஉயிருடனேயிருப்பானாகில் அனேகம் நம்மைப்போலொத்தபேர்களெல்லாம்அவரிடத்தில்கயிர்யிருத்தும அவரவர்களுக்குத் தேவையானவஸ்துக்களும்வாங்கிப்புசித்துச் சுகத்துடனேயிருப்பார்கள் அப்பேர்க்கொத்தஆத்திம்தாத்தாவைப் பிடித்துக்கொடுத்து நாம்சுகத்துடனே யிருந்தோமா

னால்அல்லாகுத்தஆலாவுக்குஏற்கமாட்டாது ஒருபோதுஅவனைப்பிடித்துக்கொடுத்துப்பொருளைவாங்கி எவ்வளவுநாளைக்குசவுக்கியப்படுகிறது ஆகிலும்நம்முடைய ஆயசுஎவ்வளவுகாலத்துக்குக் காயமாகவிருக்கிறது ஆகையால்நீசொன்னவிசளம் சரியாயிருக்கவில்லைநமக்குஎப்போதும்கிடைக்கிறபொருளே போதுமானதாயிருக்கிறது ஆனபடியால்நீசொன்னஎண்ணத்தைவிட்டுவிடென்று கிழவிக்குக் கிழவன்சொல்ல அந்தவேளையில்அந்தமலைக்குகையில் ஒளித்துக்கொண்டிருந்தஆத்திம்தாதாவென்பவற்கு இவர்கள்பேசிக்கொண்டிருந்த வார்த்தைகாதில்விழுந்தவர்யோசித்தார் நாம இத்தமலையில் எவ்வளவுநாளைக் கொளித்துக்கொண்டிருப்போம் என்றைக்கிருந்தாலும் மவுத்தாய்ப்போரதே யுண்மையாயிருக்கின்றது ஆகையால் இந்தக்கிழவியுங்கிழவனும்பேசிக்கொண்டிருந்தது அபத்தமாய்ப்போகாமல் அவர்கள்ஆஜத்தைநிறைவேற்றிக்கொடுக்கவேண்டியதால் அவர்கள்கையில்நாம்போய்அகப்பட்டுக்கொண்டால் அவர்களநம்மைப்பிடித்து அந்தபாத்துஷாமகனிடத்திற் கொண்டுபோய்விடுவார்கள் அவன்நம்மைக்கொன்றுபோட்டு இந்தக்கிழவனுக்குங்கிழவிக்கும் அனேகதிரவியமுதலானகிராமமுங்கொடுப்பார் அதைவாங்கியவர்கள்வாழ்ந்துகொண்டு சுகமாயிருப்பார்கள் அதனாலேநமக்குவேண்டியபலன்கிடைக்குமென்று அன்னேரமேயெழுந்து அவர்களிருக்கும்குடிசைக்குட்போய் அவர்களைப்பார்த்து நான்தான்ஆத்திம்என்னைநீங்கள்பிடித்துக்கொண்டு அந்தப்பாத்துஷாமகனிடத்தில் விடுங்களென்றுசொன்னார்.

அப்போதுஇவர்களிரண்டுபேர்களும் இவர்சொன்னதைக்கேட்டு ரொம்பவும்தாழ்மையாகச்சொன்னார்கள் பாவாநாங்கள் பெண்சாதியும்புருஷனுமாகவிளையாட்டுபோலேபரிகாசமாகப்பேசிக்கொண்டிருந்தோம்அதைநீர்கேட்டு எங்களிடத்திலிப்போர்க்கொத்தவார்த்தைசொல்லுகிறீர் ஆகையால்உம்மைப்பிடித்து அந்தப்பாத்துஷாமகனிடத்திற்கொண்டுபோய்விடுக்க எங்களுக்குஎன்னகேடுவந்திருக்கிறது இப்பவும்உம்முடையசகாயத்துக்கும் நற்குணத்திற்கும் ராஜநீதிக்குமநீர்செய்கிறசக்காத்துதருமமுதலானகாரியங்களுக்கும் உம்மைப்பிடித்துக்கொடுக்கநாங்கள்நாடுவோமாகில் அல்லாவுடையமுனிவுபிறக்கும் அதுவுமல்லாமல் பூலோகத்தோர்கள் சொல்லுகிறநிந்தையானவார்த்தைகளும்வந்துசூழும்ஆகையாலநீர்முன்சொன்னதுபோலே இப்போதுஞ்சொல்லாதிருக்கவேணும்பாவாவென்றார்கள் அப்போது ஆத்திம்தாதாசொல்லுகிறார் ஓமனிதனேநான்சொல்லுகிறதைக்கேளும் இந்தக்காட்டிலிருக்கும் மலை

ப்புதில் நான்றனித்திருப்பதால்எப்போதாவதுஒருவேளையில் எந்தமிருகங்களாவதுகண்டால என்னைக்கொன்றுபோடுவதற்குப்பிசகில்லைஅப்படிக்குக்கொன்றுபோடுமானால்எவர்களுக்குமொருபிரயோசனமுமில்லாமற்போவுயிர்தானே ஆகையால நீங்களியாதொன்றுக்கும் யோசிக்காமல உங்களுடைய ஆசைநிறைவேறும்படி யென்னைப் பிடித்துக்கொண்டுபோய்விட்டுவிட்டு உங்களுக்குக்கிடைக்கும்படியான இனுங்களைப் பெற்றுக்கொண்டு நீங்கள்சுகமாகவாழ்ந்திருங்களென்று அந்தஆத்திமதாதாசத்தியமாகச்சொன்னார் அந்தச்சொல்லைஅவர்களிருவருங்கேட்டுஒப்புக்கொள்ளாமலிருக்கும்போது ஆத்திமதாதாசொல்லுகிறார் ஓ மனிதர்களேநீங்களென்னைப் பிடித்துக்கொண்டு பாத்துஷாமகனிடத்தில்விட்டீர்களானால் நல்லது அப்படியென்னைப்பிடிக்காமல் விட்டுவிட்டீர்களானால் இந்நேரமே அவரிடத்திற்போய் இந்தக்கிழவியுங்கிழவனுமென்னைக்கண்டுபிடித்து விட்டுவிட்டார்களென்றுசொல்லுவேன்அப்போதுஉங்களை அந்தப்பாத்துஷாமகனழைத்துச் சிரசாக்கினை செய்யும்படியாய் நேரிடும்அப்படிக்குவாராமல்இப்பவேஎன்னைப்பிடித்துக்கொண்டுபோய்விடுங்களென்றுஆத்திம்தாதாசொன்னார் அதற்குஅவர்கள்சொன்னார்கள்கேளும்பாவா எங்கள்தலைபோனாலும் போகிறதேயொழிய உம்மைப்பிடித்துக்கொடுக்கிறதில்லையென்றுசொன்னார்கள்அப்போதுஆத்திம்தாதாவானவர்அந்தக்கிழவன் மடியிற்கைபோட்டிழுத்துக்கொண்டு அந்தப்பாத்துஷாமகனிடத்திற்குப்போகிறார்அப்போதுபாத்துஷாகுமாரனுமவர்மேல்மெத்தையில்நின்று உலாத்திக்கொண்டிருக்கும்போது இவர்களிரண்டுபேருங்கிழவியுமாக ஒன்றுக்கொன்றிழுபறியாய்ஆத்திம்தாதாவூரைப்பார்க்க இழுக்கிறதும் அந்தக்கிழவியுங்கிழவனுங் காட்டைப்பார்க்கஇழுக்கிறதும் இவ்விதமாய்க் கோட்டைவாசலருகே ஆத்திம்தாதாயிழுத்துவந்தார்.

இதுகளையெல்லாம் பாத்துஷாமகன்பார்த்துக்கொண்டு சிம்மாசனத்தில்வந்திருந்தார்அப்போதிவர்களிரண்டுபேருங்கிழவியுமாகமல்லுகட்டிக்கொண்டு அரசன்சமுகத்திற்போய்நின்றார்கள் இவர்களையரசன்பார்த்துநீங்களிவ்விதமாகச்சச்சரவுசெய்துக்கொண்டுவரவேண்டியவேலையென்னவென்றுகேட்டார்அதற்குஆத்திம்தாதாசொல்லுகிறார்கேளும்பாத்துஷாமகனேநானாகிறது இந்தவூரையாண்ட ஆத்திம்தாதாநானுமக்காகப்பயந்துகாட்டிலிடமாக ஒளித்துக்கொண்டிருந்தேன் இந்தக்கிழவனுங்கிழவியும் உம்மிடத்தில் என்னைப்பிடித்துக்கொண்டுவந்தார்கள்ஆனபடியால்உம்முடையமனதுஎவ்விதமிருக்கிறதோஅவ்விதஞ்செய்துக்கொள்ளலாமென்றார் அதற்குள்ளாகஅந்தப்பாத்துஷாமகன்வாயெ

டுத்துக்கேட்குமுன்னே அந்தக்கிழவன்சொல்லுகிறான் கேளுங்கள் அர
சர்சிகாமணியே இந்தஆத்திம்தாதாவை நான்பிடிக்கவில்லை அவர்தானெ
ன்னைப்பிடித்துவலுவந்தம்பண்ணியிழுத்துக்கொண்டுவந்தாரென்றுகி
ழவன்சொன்னான் இப்படியொருவருக்கொருவர் அவர் இவனைப்பிடித்
துவந்தாரென்றும் இவர் அவனைப்பிடித்துவந்தாரென்றும்தகரார்சொல்
லிக்கொண்டிருக்கிறபோது அந்தப்பாத்துஷா குமாரனை நினைத்து இதிலென்
னமோவொருகாரியம்நடந்திருக்கின்றது அதைநன்றாய்விசாரிக்கவேண்
டுமென்று அந்தக்கிழவனையுங்கிழவியையும் அரசன்பார்த்து இதுநடந்
தசங்கதிகளையொளிக்காமற்சொல்வீர்களானால்ஜயத்தைப்பெற்றுக்கொ
ள்வீர்கள் இல்லாவிடில் உங்களுக்குத்தண்டனைநேரிடும் ஆகையாலந்த
க்காட்டில்உங்களுக்குள்ளே நடந்தசங்கதிகளையெள்ளுக்காய்பிளந்தது
போலேஉண்மையைச் சொல்லவேண்டுமென்றுகேட்க அப்போதுகிழ
வனுங்கிழவியுஞ்சொல்லுகிறார்கள்நாங்கள்காட்டினிடமாகஒருகுடிசை
கட்டி அதிலிருந்துவிறகுவெட்டிவிற்று சீவனஞ்செய்துகொண்டு வருகி
றோம் இன்றையதினத்தில் நாங்களிரண்டுபேரும் ஒன்றுக்கொன்றுசி
லவசனங்கள்பேசிக்கொண்டிருக்கையில் விளையாட்டாக ஆத்திம்தாதா
வைப் பிடித்துக்கொடுத்தால் நமக்கு ஏதாவதுகொடுப்பார்கள் அதி
னால்வருத்தமில்லாமலிருக்கலாமென்றுபேசிக்கொண்டிருக்கையில் இவ
ர்நான்தான்ஆத்திம் என்னைப்பிடித்துக்கொண்டு பாத்துஷாபிள்ளையிட
த்தில்விடுங்களென்றுசொன்னார் நாங்கள்எங்களுடல்களெல்லாம் வெல
வெலத்து இதென்ன அநியாயமாயிருக்கிறது நாங்கள்பரியாசமாய்ச்சொ
ல்லிக்கொண்டிருக்க எங்களைப்பிடித்துக்கொடுக்கும்படியாய்ச்சொல்லு
கிறீரோ நாங்கள் அந்தவேலைசெய்யமாட்டோம் என்றுசொன்னோம் அப்
போது இவராகிறது எங்கள்மடியிற்கையைப்போட்டு இழுத்துக்கொண்
டு தங்களிடத்திற்கொண்டுவந்துவிட்டார் இதுதானடந்தசேதியென்று
சொன்னார்கள் அப்போதுபாத்துஷாவுடையபிள்ளை இவர்கள்சொன்ன
தெல்லாங்காதிற்கேட்டுமனதிலிருத்தி ரொம்பவும்ஆச்சரியப்பட்டு இதெ
ன்னமாதிரியாயிருக்கிறது ஆகையால்சக்காத்தென்னுந் தருமமாகிறதுத
ன்னுடையவுயிரையுங்கொடுத்து இன்னமொருவர் சுகத்துடனேயிருக்க
ட்டும் இதுவுமொரு தருமந்தானென்றெண்ணி தானுமிவர்களையிழுத்
துக்கொண்டுவந்துவிட்டாரோ இப்பேர்ப்பட்டபெண்ணமெல்லாம் கோ
டிகோடிபங்கில் ஒருபங்காவது நமக்குச்செய்யமனம்வருமா ஆனபடியா
ல்இவரே ஆத்திம்தாதாவென்றும் வள்ளலென்று சொல்லலாம் இன்
னம்சக்காத்துமுதலிய தருமங்கள்செய்யப்பட்ட பிரபுக்களாகிய புண்
ணியபுருஷர்கள் இவர்களுங்கெல்லாம் இராஜநாயகமென்றும் சொ

ல்லாம் ஆகையால் நம்முடைய அற்பபுத்தியினாலே இவனைச்சொன்றுவிட்டு அந்தகீர்த்தியை நாமேற்றுக்கொள்ளலாமென்றுவந்தோம். அந்தக்காரியம் ஆண்டவனுடையகிர்பையும் தருமத்தும் நசீபும்உண்டாயிருந்தாற்கிடைக்கும் ஆகையால்நாமெண்ணிவந்தது வீணெண்ணமோயொழியவேறல்லவென்று அனேகவிதங்களைச்சொல்லி பிரலாபப்பட்டெழுந்து ஆத்திம்தாதாகிட்டவந்து அவரைப்புகழ்ந்துவேண்டியமரியாதைசெய்துதக்தத்திலிருத்திதாம்நின்றுகொண்டு அவர்கையைப்பிடித்துக்கண்ணிலேயொற்றி முத்தியிட்டுச்சொல்லுகிறார்.

கேளும்ஆத்திம்தாதா என்னும்வள்ளலே உமக்கேஇந்தத்தருமத்தினுடையபேர்தகுமேயொழிய இன்னுமொருவருக்குந் தகமாட்டாதென்றுபுகழ்ந்து உமதிஷ்டப்படியாய்த் தருமத்தைசெய்யுமென்றுஉத்திரவுகொடுத்து அந்தக்கிழவிக்குக்கிழவனுக்கும் வேண்டியபொருள்முதலிய வஸ்துகளுங்கொடுத்து அவர்களைச்சேமமாயிருக்கும்படிச்சசெய்துமறுபடியும் ஆத்திம்தாதாவைப்பார்த்துத் தங்களுக்கு ஆகவேண்டியகாரியங்கள்எதுவுண்டோ அதுகளைஎனதூருக் கெழுதியனுப்பினால்உடனே என்னவேலையிருந்தபோதிலும் தாங்கள்எழுதியவேலையைமுடித்து அனுப்பிவிட்டு மற்றவேலையைப்பார்க்கிறேன் ஆகையாலென்பேரில்தயவுவைத்து நானெண்ணிவந்ததைத் தங்கள்மனதில்வையாமல்எனக்காக அல்லாவிடத்தில் துவாக்கேட்டுவேண்டுதலைச்செய்துகொள்ளுமென்றுமெம்பதாழ்ச்சியுடனேசொல்லினான் எங்கள்ஊருக்குப்போகவேண்டியதால் எனக்குவிடைகொடுத்தனுப்பவேண்டுமென்று பாத்துஷாவுடையபிள்ளைகேழ்க்க அப்போது ஆத்திம்தாதா இவருக்காக அல்லாவிடத்திற்றுவாக்கேட்டு அவர்நகரம்போய்ச்சேரும்படியாய்விடைகொடுத்தார் அவர்தனதுசேனைசமுகத்துடனே பிரயாணப்பட்டுதனதுநகரம்போய்ச்சேர்ந்து சுகத்துடனேயிருந்தார் இப்பால் ஆத்திம்தாதா முன்செய்ததருமத்திலும் அதிகமாய்ச் செய்துகொண்டிருந்தார் என்றுஎனக்குப்புத்திசொன்னபெரியவர் சவிஸ்தாரமாகயெனக்குசொன்னார்கேளுங்கள் பாத்துஷாக்களுக்கெல்லாம்சக்கிரவர்த்தியாகியபாத்துஷாசிரோமணியேநீங்களுங்கேளுங்கள் என்தோஸ்தியாகியபக்கீர்களேயென்றுசொல்லி பின்னும்இரண்டாவது பக்கீராகிய அப்பர்பாத்துஷாசொல்லுகிறார் அந்தப்பெரியவர் என்னைப்பார்த்து பாவாசக்காத்துமுதலியதருமஞ்செய்தால் இப்போதுசொல்லிவந்த தருமத்துக்குமேலானதருமஞ்செய்யவேணும் அல்லது தொழுகைமுதலிய ஐந்து காரியமும்சாகிதாமுராகிதா மக்காவுடையஜிக்கிரிமுறைகள் ஒஸ்தாதுசொல்லியதுபோலேநடந்து தன்னைத்தானறிந்து சகலத்துக்கும்ஒருபொரு

ளாகியஆதிநாயகனுடைய சமூகத்தையடையவேண்டும் ஆகையாலிந்த
இரண்டுகாரியத்தில்ஒருகாரியமாவதுநீர்முடித்துகொள்ளுமென்றுசொ
ல்லிவிட்டு அவரிருப்பிடம்போய்விட்டார் அவர்போனபின்புநானுகிர
தொருதனித்தவிடத்திற்போயிருந்து என்மனம் பொருந்தும்படியான
யோசனைகள்செய்துபார்த்தேன் அதென்னவென்றால் இந்தயிரண்டுகா
ரியத்திலெதுசெய்தால் முடியுமென்றுபார்த்ததில்அல்லாவுடையவண
க்கங்களில் மனிதர்கள்பேரில்விதித்த அஞ்சும்ஆறும் பதினொருகாரிய
மும்செய்யவேண்டியதுதான் மற்றகாரியங்கள் விதியிருந்தாற்றான் கி
டைக்கும் இல்லாவிட்டாற்கிடையாது ஆனபடியால் மற்றவணக்கங்கள்
நமமாற்செய்யமுடியாது அதுஎதினாலென்றால் நமக்குப்பாத்துஷாத்த
னமும்நீதிநெறிசெலுத்துகிற வேலையுமிருப்பதால் இபாத்தென்னும்வ
ணக்கத்துக்குபழுதுவரும் அதுநம்மாலேமுடியாது இப்போதுநம்மிட
த்திலளவிறந்ததிரவியங்கள் பொக்கிஷங்களிலும்ராஜாக்களிலும்பெட்
டிபேழைகளிலும்நிறைந்து குபேரனுடையசம்பத்திற்குநிகராயிருப்ப
தால்அந்தப்பொருளை நமதிச்சைப்பிரகாரம் ஏழைகள்மிசுக்கீன்கள் யா
சகர்முதலியபேர்களுக்கு சிலவுசெய்தால் அதிற்குறைவுவரமாட்டாது
அதில்வரும்மேன்மையைப் பெற்றுக்கொள்ளலாமென்றெண்ணி முடி
வுசெய்து ஒருமைதானத்தில் சத்திரமென்னும்சாவடி வெகு அலங்கார
மாகவும்விஸ்தீரணமாகவும்கட்டி அதற்குநாற்பதுவாசல்வைத்து அதி
ல்அனேக ரத்தினக்கம்பளிகள்விரித்து நடுமத்தியில் ஒருமேடையொ
ன்றுசெய்துவேண்டியபணம்-காசு-ரூபாய்-புடவைகள் இன்னமவேண்
டியவஸ்துக்களெல்லாம் அதில்வைத்துக்கொண்டு நாம்போயிருந்து அ
ந்தநாற்பதுவாசலிலும் வரப்பட்டசகலத்திராளுக்கும் என்துகையினா
லெடுத்து கணக்கிலடங்காத சக்காத்தென்னும் தருமஞ்செய்துவந்தே
ன் அப்படிசெய்துவருகிறநாளையில் ஒருநாள்ஒருபக்கீரானவர்பிச்சைகா
ந்தவந்தார் அவர்முதல்வாசலிலேவந்தார் அவருக்குஉதேகவயானதை
கொடுத்தேன் அவர் வாங்கிக்கொண்டுபோய் மற்றொரு வாசல்வழி
க்காய்வந்தார் அப்போதுங்கொடுத்தேன் இந்தப்பிரகாரம்முப்பத்தொ
ன்பதுவாசலிலும்வந்தார் அவர்மனம்போல ஒருவாசலுக்கொருவா
சல்குறைவில்லாமற்கொடுத்தேன் இதுகளையெல்லாம் ஒருபக்கத்தில்
வைத்துவிட்டு நாற்பதாம்வாசலிலேயும்வந்து யாசகங்கேட்டார் அப்
போதந்தப்பக்கீருக்கு நான்கொடுக்கும்போது அவரைப் பார்த்துச்சொ
ன்னேனெபக்கீரே உமக்குஅபாரசியென்னும் ஆசைரொம்பயிருக்குது ஆன
படியால்உம்மைப்போ லொருவரையும் நான்காணவில்லையென்று சொ
ன்னேன் அப்போதவர் இந்தநாற்பதுவாசலிலும் வாங்கினகாசுபணம்

ரூபாய்-புடவைமுதலியதெல்லாம் என்முன்னெடுத்துவந்து போட்டுவிட்டுச்சொல்லுகிறார் அடேபயித்தியக்காரா உனக்குச்சக்காத்தென்னும்தருமம் எவ்வளவோ தலையிலிருக்கிறது ஆகையால்நீஇப்போதுசெய்துவருகிறதருமம்ஒருபெரிதல்ல ஒருவூரிலேசகஜாதியென்னுமொருபெண்பிள்ளையிருக்கிறாள் அவள்செய்துவருகிற சக்காத்தென்னுந்தருமங்களைப்பார்த்தால் நீசெய்கிறதருமமானது ஒருஅணுவளவுகூடசரியாயிருக்கமாட்டாது அதுஎன்னத்தினாலென்றால் அவளுடையநகரத்தைச்சுற்றிக்காதவழிக்குக்காதவழி ஏழுதர்மச்சாவடியென்னும் பங்களாகட்டியிருக்கிறாள் ஒவ்வொருபங்களாவைச்சுற்றிக் காதவழிவிஸ்தீரணத்தில்தோட்டம்துறவு-குளம்-பூஞ்சோலைகள்முதலிய கனிவர்க்கத் தருகள்வைத்திருக்கின்றது அப்பேர்க்கொற்றபங்களாவில்வெகு அலங்காரமாய்ச்சோடித்துக் கட்டில்கள்நாற்காலிகள் அணியணியாக இவ்வளவென்றுசொல்லமாட்டாத சாமான்கள்போட்டிருக்கின்றது அந்தப்பங்களாவில்போதுமான வேலைக்காரர்களிருந்து பணிவிடைசெய்துக்கொண்டிருக்கிறார்கள் இவ்விதமாயிருக்கிற பங்களாவிலுள்ளபேர்கள் வழியிலிருந்துகொண்டு ஏழைகள்மிசுக்கீன்கள் வழியிற்போகிறபேர்கள் இவர்களையெல்லாம் அவர்கள்சம்பமரியாதையுடனழைத்து அவர்களைத்தங்கியிருக்கும்படியாய்ச்சொல்லி அவர்கள்விரும்பியதைக் கொடுக்கும்படியானஆட்களைத்தயார்செய்து பசியாருகிறவேளைவந்தவுடனே அவர்களுக்குப்போதுமாகிய அறுசுவைபதார்த்தத்தோடு போசனங்கொடுக்கிறார்கள் அவர்களதுகளைத்தின்றுபசியாறி அங்கேதானேயிருந்து இரவுதங்குகிறதாயிருந்தால் அவர்களுக்குக்கட்டில்மெத்தைமுதலானதும்போட்டஅறைக்குள் படுத்துக்கொள்ளும்படியாய் வேண்டிய கிசுமத்தென்னும்வேலைகள்செய்கிறார்கள் அதுவுமன்றிபொழுதுவிடிந்தவுடனே அவர்கள்குளிக்கமுழுக மனதிருந்தால் வெந்நீருகேட்கிறவர்களுக்கு வெந்நீரும்பச்சைதண்ணீர் கேட்கிறவர்களுக்கு பச்சைத்தண்ணீரும்பின்பவர்களெதைநாடிக்கேட்கிறார்களோ அதையில்லையென்றுசொல்லாமல்கொடுக்கிறார்கள் இன்னம்எவ்வளவோ உபசாரங்கள்செய்கிறார்க ளிவ்விதமாகஎத்தனைநாளைக் கிருந்தபோதிலும் நாளுக்குநாள்அதிகவுபசரணைசெய்கிறார்களேஒழிய அவர்கள்மனஞ்சலிக்கிறதில்லை பின்புஅதிலதங்குகிறபேர்கள் தங்கள்பதிகளுக்குப்போகிறதாயிருந்தால்அவர்களுக்கு உடுபுடவை வழிச்செலவுக்கும் கொடுத்தனுப்பிவைப்பார்கள் இந்தப்படியாக அந்தஏழுபங்களாவிலும் ஒன்றுக்கொன்று குறைவில்லாமல் நடந்துவருவதுந்தவிர அந்தநகரத்துக்குள் நடுமத்தியில் ஒருபங்களா கட்டியிருக்கிறது அதனுடையஅகலமும் நீளமும்பிரகாசமும்சோடிப்

பும் மற்ற வேலைகளையும் என்னாலினுற் சொல்லமுடியாது அதிலேயுடனே கதான தருமங்கள் நடக்கிறது அந்தவூரிலுள்ள மிசுக்கீன்கள் முதலியபா சகர்கள் அடங்கலும் அந்தப்பங்களாவிற்போய் கயிர்கயிறுத்தென்னும் பிச்சைகள் வாங்கித் திரண்டசீமானைப்போய்விட்டார்கள் ஆனபடியா ல் இப்பேர்ப்பட்ட சொல்லமுடியாத தானதருமங்கள் செய்கிரசகஜாதி யென்னும் பெண்ணனவள் ஒருவரைப்பார்த்துத் தன்வாயினாலே அணு வளவாவது ஒருவர்மனம்நோகும்படியாய் சொன்னவளல்ல ஆனபடி யால் நீர் இனைத்தீர் நாம் செய்கிறதருமம் இந்தச்சகத்தில் ஒருவருஞ்செய் யமாட்டார்களென்கிற பெருமையையடைந்து ரொம்பவும் தாழ்மையில் லாமல் இப்பேர்ப்பட்ட கேள்வி கேட்டீரென்று அந்தப்பக்கீரானவர் இன் னம் வேண்டியவைகள் சொல்லி வெளியேபோய்விட்டார்.

கேளுங்கள் தேஸ்தியாகிய பாத்துஷாசிரோமணியே மற்றும் சக் கிகளே அப்போது என்மனம் எப்படியிருக்கும் அதை நீங்களே யோசித் துப்பாருங்கள் அந்தப்பக்கீர் போனவுடனே என்மனமென்னுமிருதயம் பலபல எண்ணங்களெல்லாமெண்ணி ஒருபெண்ணைப்பிறந்தவளிப் பேர்க்கொத்த தருமஞ்செய்கிறாளென்று அந்தப்பக்கீர் சொன்னாரே அ து அபத்தமாயிருக்குமா அல்லது நிஜமாயிருக்குமா அதைக்கண்டறிய வேணும் ஆனபடியால் இப்போதே நாம் பிரயாணப்பட்டு அவளிருக்கி றவூருக்குப்போய் அங்கே நடக்கிற காரியங்களைப்பரிட்சித்து அது சரியா யிருந்தால் அந்தப்பெண்ணையுங்கண்டு உனக்கு இவ்வளவு சம்பத்து எவ் விதமாய்க்கிடைத்ததென்று அவள் மொழியாற்சொல்ல நாமதைக்கேட் டு அவளையுங்கலியாணம் பண்ணிக்கொள்ளவேண்டுமென்கிற எண்ண ங்கொண்டவுடனே நான் செய்த சக்காத்து முதலிய தப்பென்றகப்பனாரு டைய மந்திரிவசமொப்பித்து அதைப்பார்க்கும்படியாய்ச் செய்துவிட்டு அந்நேரமே நாம் பக்கீர்கோலங்கொண்டு தனித்தவனாய்ச் சவூறையிட்டு வெ ளியேபுறப்பட்டு ஊரூராயலைந்து திரிந்துகொண்டு அந்தப்பெண்ணிரு க்கிற வூர் எங்கேயிருக்கிறதென்று தேடி அவளிருக்கிறவூருக்குக்காதவ ழிக்கிப்பால் போகும்போது அந்தவழியில் இருபக்கங்களிலும் சாலைகளு ஞ்சோலைகளும் வளர்ந்து ஆகாயத்தையளாவிக்கொண்டிருக்கிறது அதி ல் பலபல மரங்கள் வளர்ந்திருக்கிறது அந்தமரங்களில் பூக்கள் பூத்துகாய் த்து நிறைந்திருக்கிறது அதுகளைப்பார்த்தால் பூக்கள் வெண்முத்துகள் போலும் இலைகள் காய்கள் பச்சைமரகதம்போலும் பழங்கள் சிவந்த இ ரத்தினங்கள்போலும் ஒன்றுக்கொன்று இணையில்லாமல் மாதிரிமாதி ரியாய்த்தொங்கிக்கொண்டிருக்கிறது அதுகளெல்லாம் என்கண்ணினாற் கண்டு பூவினுடைய வாசனைகளை நாசியினிடமாயேறி பேருவகைகொண்டு

இப்பேர்ப்பட்டசாலைசோலைகள் இவ்வளவுநாளாய்ப்போன வூர்களிலும்கண்டதுமில்லை அல்லது ஒருவராவது இப்படியிருக்குதென்றுசொல்ல நாம்கேட்டதுமில்லையென்றுஎண்ணிநடக்கும்போது எனக்கெதிரே இப்போதுசொன்ன சாலைசோலைகளிலும் பதின்மடங்குள்ள ஒருதோட்டமும் அதில் பங்களாக்கள் முதலியசாவடிகளுந்தோற்றியது அதைப்பார்த்துநடக்கும்போது சிலமனிதர்கள்எனக்கு நேராகவந்தார்கள அவர்களைப்பார்த்தால் அமீர்கள்முதலியபெருமைதங்கிய சீமான்கள்போலேயிருக்கிறது இவர்கள்என்னருகில்வந்து தசலீம்முதலியமரியாதைசெய்துஎன்னையழைத்துக்கொண்டு தாங்களிந்தப்பங்களாவில்வந்து விருந்துண்டுதங்கியிருந்துதாங்கள போகும்போது தங்களுக்கென்ன வேண்டுமோ அதுகளைப்பெற்றுக்கொண்டு போகலாமென்றுரொம்பவுபசாரத்துடனே பங்களாவின் வாசலிற்கூட்டிப்போனார்கள் அதிற்சிலவேலைக்காரர்கள்எனது இரண்டுகாலிலும் பன்னீர்விட்டுக்கழுவி உள்ளேயழைத்துப்போனார்கள் அப்போது அந்தப்பங்களாவுக்குள்ளே செய்திருக்கிற அலங்காரங்களை இன்னவிதமென்று என்னாலினாற் சொல்லமுடியாது ஆகிலும் அதிற்கொஞ்சஞ் சொல்லிவருகிறேன் அதென்னவென்றால்கருங்காலிமரங்களை எட்டுப்பட்டையாக்கி அந்தப்பட்டைகளில்விசித்திரமாகியசெடிகள்வகுத்து அதிற்றங்கக்கம்பிகளைப் பதித்து போரிக்கட்டைகள்வைத்து அதன்மேலுத்தரம்போட்டு சிகரமமைந்து அதுகளில்கெம்புபச்சை இப்பேர்ப்பட்ட கல்லுகளைதங்கத்தகட்டிலழுத்தி அதிற்பதித்திருக்கிறது இவ்விதமாககால்களாகிய தூண்களிலும்பேரிகைகளிலும் உத்திரங்களிலும் ஒம்மூசுவேலைசெய்து விஸ்தீரணமாகக் கட்டடங்கட்டியிருக்கிறது அதில்அனேகம் அறைகளுங்கூட்டங்களுமிருக்கிறது அதுகளில் ஒவ்வொரு அறையுக்கூடமும் முசாபிருய்வந்தபேர்களிருக்கும்படியாய் அவர்கள்வசம்ஒப்பிவிக்கிறது அவர்கள்அதிலெவ்வளவுநாளைக்கிருந்தாலும் அதிலேயே அவர்களிருந்துபோறபோதுசாவியைப்பங்களாவிலிருக்கிறவர்கள் வசம்கொடுத்துவிட்டுப் போய்விடுகிறது.

ஆகையால்என்னைக்கூட்டிக்கொண்டுபோனபேர்கள் ஒருஅறையும்கூடமும்ஒப்பிவித்து அதன்பூட்டுஞ்சாவியும் என்வசங்கொடுத்தார்கள் அதுகளையொப்பிக்கொண்டு அந்த அறைக்குட்போய்ப்பார்த்தேன் அதில்அனேகம் பிரப்பம்பாய்கள் அடியில்விரித்து அதன்மேலே இரத்தினக்கம்பளிபோட்டு அதின்பேரில் அனேகம் நாற்காலிகள்குறிச்சிகள்போட்டு அறைக்குள் ஒருதாட்டோர் கட்டில்போட்டிருக்கிறது அந்தக்கட்டில் அம்பொன்னாற்செய்து அதன்மேல்பட்டுப்பீதாம்பரங்களினா

ல்மெத்தைகள் தலையணைகள்வைத்துப்போட்டு அதன்மேலரவைச்சல்
லாபோட்டிருக்கிறது அந்தக்கட்டிலின்மேல்நாலுதங்கக்கால்நிறுத்திநா
லுகலசவ்வைத்துடாப்புபோட்டு சுற்றிலும்நவரத்தினகசிதமாகிய ஜால
ர்கள்கட்டிகொலுசுசல்லா நான்குபுறத்திலுமூடியிருக்கிறது அந்த அ
றையிலுங்கூடத்திலும் அனேகம்சரவிளக்குகள் குத்துவிளக்குகள் தா
ங்காவிளக்குகள் வால்செட்டுகள் இன்னம்விச்சித்திரமாகிய விளக்குக
ளும்வைத்திருக்கிறது இதுவல்லாமல் செடிகளெழுதியபடங்கள் மேல்
கட்டிகள்முதலியசித்திரங்கள் விந்தைவிந்தையாகச் செய்திருக்கிறது இ
துகளையெல்லாம்பார்த்துக்கொண்டு கூடத்தில் ஒருநாற்காலியின்பேரி
லுட்கார்ந்திருந்தேன் அப்போதுசிலவேலைக்காரர்கள் ஒசிவன்முதலிய
பலகாரமுங்கனிவர்க்கங்களும் கொண்டுவந்து ஒருமேஜையின்பேரில்ப
ரப்பிஎன்னைப் புசிக்கும்படியாகச்சொன்னார்கள் அப்போதுஒருபடிக்க
ம்என்முன்னேவைத்து கெண்டிச்செம்பில் பனிநீரைநிறைத்துக் கைய
லம்பும்படியா யொருவரிருந்துவார்த்தார்கள் நானந்தப்படிக்கத்திற்கை
கழுவிஅந்தப்பதார்த்தங்களை மூடியிருந்த சரிகைமுதலியதாற் செய்த
போர்வையையெடுத்துப்பார்த்தேன் அதில்ஒசிவனம் தினுசுவாரியாயி
ருந்தது அதென்னவென்றால் புலாபிரியசன்மிட்டாபுலாவென்னும்சற்க
ரைப்புலாகிச்சடிப்புலா முறுகாப்புலாமுதலியஇன்னம்அனேகம்புலா
க்களுமிருந்தது கறிவகைகளில்அனேகங்கறிவகைகளும் துவையலாகி
யசட்னிமுதலியவூறுகாய் தயிர்சற்கரைமுதலியதுமிருந்தது அன்றியு
ம்பலகாரங்களில் மிட்டாய்லட்டு சிலேப்பிபன்னீர்லட்டு இம்றுதிபூந்தி
அதிரசமபோளிபேணிசேவு சொக்கல்பத்தாஸ் அல்வாபூரி வாதமஅல்
வாமுந்திரிபரிப்புமுதலிய சசகசாஅல்வா இன்னம் அனேகவிதமாகிய
பலகாரங்களுமிருந்தது மேலும்பழவர்க்கங்களனேகமிருந்தது அதில்-
மாபலாவாழைமுந்திரி பேரீச்சன்கிச்சிலிநாரத்தை ஆரஞ்சிபொம்பளி
மாஸ்தேன்தோட்டாமாதுளைகொய்யா அரநாஸ்இன்னம்அனேகந்தினு
சுவாரியாய்ப்பழங்களுமிருந்தது இதுகளையெல்லாம்பார்த்து அடங்காம
கிழ்ச்சியடைந்து அந்தப்பதார்த்தங்களிலேயெனக்குவேண்டியதைத்தி
ன்றுசர்ப்பத்து முதலியதுங்குடித்துபரியாறிவாய்கை துப்பரவுசெய்தி
ருக்கமற்றும் மீதிபதார்த்தங்களை யெடுத்துக்கொண்டு போய்விட்டார்
கள்பின்புஒருவர்தங்கத்தாம்பாளத்தில் ரவேஸ்என்னும்கொழுந்துவெ
ற்றிலையும்பாக்கைப்பொடி செய்துவைத்திருந்தது அந்தத்தாளில்ஏலம்
கிராம்புசாதிக்காய்சாபத்திரி வால்மிளகு இன்னம்வேண்டியவஸ்துக்க
ளும்சேர்த்துக்கலந்திருந்தது முத்துச்சிப்பிகளை நீத்தசுண்ணாம்பைபசு
ம்வெண்ணையிலு மிர்துவாய்க்கொண்டுவந்துவைத்திருந்ததுஒருவெள்

ளிக்கும்பாவில் களபகஸ்தூரி சந்தனம்ரோஜாமுதலிய அத்தர்பன்னீ
ரைவிட்டுக்குழம்பாயவைத்திருந்தது அப்போதுதாம்பூலந்தரித்துகள
பகஸ்தூரிபூசி ஏகமகிழ்ச்சியுடனே முன்சொன்னகட்டிலிற்போயிருக்
கிறபோதுஇருத்திரிப்பொழுதுபோய் ஐந்துநாழிகைநேரமாச்சுது அந்
நேரத்தில் சிலஆடல்பாடல்முதலிய வீணையுடனேவந்து சஞ்சனிகள்ச
துர்செய்தார்கள் இதுகளையெல்லாம்பார்த்து அடங்காமகிழ்ச்சியாயெ
ண்ணிநான்யோசித்தேன் இப்போதுநமக்குநடந்திருக்கிற விருந்துமு
தலியஉபசாரவகைகளைப்பார்த்தால் இந்தலோகங்களில் பாத்துஷாசுல்
த்தான்நவாபுஇராஜாக்கள் எவர்களுக்குமிருக்கமாட்டாதென்றிருக்கை
யில் இரண்டுஜாமமாச்சுது அதன்பின் சதுர்கலைந்துபோனார்கள்.

அப்போதுமேற்சொன்ன கட்டிலில்படுத்துக்கொண்டு நித்திரைசெ
ய்கையில் சிலகிசுமித்துக்காரர்கள்வந்து கைகால்பிடித்துக்கொண்டிரு
ந்தார்கள் அப்படியிருக்கையில் பொழுதுவிடிந்து விழித்தெழுந்திருந்
தேன் அப்போது சிலபேர்கள்குளித்துமுழுகிற இடத்துக்குக்கூட்டி
ப்போய் ஒருஅண்டாவிலிருந்தது குளிர்ந்தனீர் ஒருதேக்சாவிலிருந்த
து அதைத்தேவையானதில் ஒன்றிற்குளித்துவிட்டு நானிருக்கும்அறை
க்குள்வந்துவிட்டேன் அந்நேரத்தில்சிலபேர்கள் பாத்துஷாக்கள்உடுக்
கும்படியான உடுப்புகள்கொண்டுவந்துகொடுத்தார்கள்அதையுடுத்திக்
கொண்டிருக்கையில் சிலபேர்கள்நான்நாஸ்தாச்செய்யும்படியானபதா
ர்த்தங்கள்கொடுத்தார்கள் அந்தப்பதார்த்தங்களைத்தின்று பசியாறித்
தாம்பூலமருந்தி சந்தனமுதலியதும்பூசி ஏகாந்தமாயெழுந்து அந்தப்
பங்களாவைச்சுற்றியிருக்கிறதோட்டத்தைப்பார்க்கலாமென்றுபோனே
ன் அப்போதுசிலமனிதர்கள் என்னைச்சுற்றிக்கொண்டுவருகிறார்கள்அ
வர்களுடனேகூடிக்கொண்டு அந்தத்தோட்டத்தைச் சுற்றிப்பார்க்கை
யில் அவ்விடத்திலுள்ளமரங்கள் அணியணியாயிருக்கின்றது அதுகளி
னமேல்கொக்குகள்முதலிய பட்சிகள்வந்திருந்துகொண்டுகூவுகிறதைப்
பார்த்தால் வீணைமுதலியவாத்தியங்கள் வாசித்தாலெவ்விதமாயிருக்கு
மோ அவ்விதமாகக்கேட்கிறது அவ்விடத்திலுள்ளகுளங்களில் அல்லிதா
மரைகொட்டிநெய்தல் ஆம்பல்முதலியதுகள்படர்ந்து அதுகள்புட்பித்தி
ருக்கிறகுளத்தைச்சுற்றி அன்னங்கள்தாருக்கள் நடந்துகொண்டிருக்
கிறது இன்னம் அநேகம் மல்லிகைமுல்லை இருவாட்சிசெண்பகம்ரோ
ஜாபாரிஜாதம் குடமல்லிசெண்டுமல்லி அடுக்குமல்லி பழமல்லி மருவு
மருக்கொழுந்து செவ்வந்திமுதலியஅளவிறந்தபுட்பங்கள் பூக்கும்ப
டியானசெடிகளுமிருக்கிறது அதுபுட்பித்திருக்கிறவாசனைகளையின்ன

விதமென்றுசொல்லிமுடியாது இன்னம்அனேகவைபவங்களு மிருக்கின்றதுஇதுகளையெல்லாம்பார்த்து எனதுஇன்பங்குளிர்ந்துஇருதாளும்பூரித்து நானிருக்கும் அறைக்குள் வந்திருந்தேன்.

கேளுங்கள்பாத்துஷாவுக்கெல்லாம் சக்கிரவர்த்தியாகிய பாத்துஷா சிரோமணியே எனதுதாஸ்தியாகிய மூன்றுபக்கீர்களே நீங்களுங்கேளுங்கள் நானிருக்கிற அறையில் எவ்விதமாகசோடிப்புமுதலியவிளக்குகள்நாற்காலிவிரிப்புகள் அலங்காரஞ்செய்திருக்கிறதோ அதுபோலவே அந்தப்பங்களாவில் அனேகம்அறைகளுங் கூட்டங்களு மிருக்கிறது அதுகளில்இவ்விதமாகிய சோடிப்புவிரிப்பு முழுதிலுஞ் செய்திருக்கிறது அதுஒன்றுக்கொன்று குறைவுசாஸ்தியொன்றில்லை ஒரேமாதிரியாயிருக்கிறது அந்தஅறைகளில் பாத்துஷாவானாலும் மிசுகீன்களானாலும் இன்னம்எவர்களானாலும் வந்திருக்கப்பட்டபேர்களுக்கு எனக்குளவ்விதமாகியபோசனமுதலிய ஒசிபனங்கள்பலகாரங்கள் கனிவர்க்கங்கள்குடிப்புகள்தாம்பூலசந்தன களபகஸ்தூரிகள் ஆடல்பாடல்கள் குளித்துமுழுகல் முதலானதுகளெல்லாம்நடந்ததோ அதுபோலவே அவரவர்களுக்குநடந்துவருகிறது ஆனபடியால் இவ்விதமுள்ளபங்களாவில்மூன்றுநாளிருந்தேன் முதல எவ்விதமாய்நடந்ததோ அவ்விதமாகவே செய்துவந்தார்கள் அப்போதுநானினைத்தேன் இதில்எவ்வளவுநாளைக்கிருந்தாலும் இதேப்பிரகாரம் மரியாதையாயிருக்கும் ஆனால்நாம்வந்த காரியத்தைப் பார்க்கவேண்டுமென்கிற அபேட்சையால் எழுந்துபிரயாணபட்டேன் அந்நேரத்தில்மேற்சொன்ன வேலைக்காரர்கள்வந்துசில பொருள்கள்உடுபாவனைகள் கொடுத்தார்கள் இதுகளெல்லாம் எனக்கு வேண்டியதில்லையென்றேன் அப்போதவர்கள் என்னைப்பார்த்துச்சொன்னார்கள் தாங்களிவ்விடம்வந்திருந்து பிரயாணப்படுகிறவகையில் என்னென்னவஸ்துக்கள்கொடுத்தோமோ அதுகளும்இப்போதுகொடுத்த இனாமும்தங்களுக்கேயொழிய பழையபடிநாங்கள் வாங்கிக்கொள்ளக்கூடாது அதென்னவென்றால் எங்கள்சகஜாதியாகிய எஜமானினுடைய உத்திரவாயிருக்கிறது அதற்குநாங்கள் விரோதஞ் செய்யக்கூடாது ஆகையால் நீரிப்போது கொண்டுபோகிறதாயிருந்தால் ஆட்களையாவது குதிரைகளையாவது ஒட்டகையையாவது யானைகளையாவது ஒட்டைகளையாவது கோபுரக்கழுதையாவது வண்டியிலாவது ஏற்றியனுப்புகிறோம் அப்படி இந்நேரத்திற் கொண்டுபோகாமல் தங்களுக்கு ஒழிவான வேளையில்வந்து கொண்டுபோகிறதாயிருந்தால் இந்தப்பங்களாவுக்கடுத்த அனேகஞ்சாவடிகளிருக்கிறது அதுகளில் ஒரறையில் இந்தச்சாமான்களைவைத்துப்பூட்டிவிட்டு சாவியைத்தாங்களெடுத்துக்கொண்டுபோகவேண்டியதென்றுயாவரும்ஒரேமொழியாய்ச்சொன்னார்கள்

அப்போதுஎன்னக்கு எனுமகக்கொடுத்தசாமான்தட்டுமுட்டுகள்யாவற்றையும் அந்தச்சாவடிஅறைகளில் ஓரறையிற்போட்டுபூட்டி சாவி என்வசம்வைத்துக்கொண்டு அவர்களிடத்திற்பிரயாணஞ்சொல்லிஅந்தப்பங்களாவைவிட்டு வெளியேபோயநான்யோசித்தேன் முன்சொன்னபக்கிருனவன் ஏழுபங்களாவிருக்கிறது அந்தப்பங்களாக்களில் ஒன்றுக்கொன்றுஜாஸ்திகுறைவுயில்லையென்றுசொன்னாரல்லவா ஆனபடியால்மற்றஆறுபங்களாவிலும் நான்போய்பரிட்சைசெய்யவேணுமென்றுஎண்ணி பின்னுமொருபங்களாவைநாடிப்போனேன் அப்படிபோகிறபோதுநானிருந்துவந்த பங்களாவினுடமாயிருந்த சாலைசோலைகள் போலவே இந்தப்பங்களாவுக்கருகிலுமிருந்தது அப்போதுஅந்தச்சாலைசோலைகளையும்பார்த்து அந்தப்பங்களாவுக்குநேரேபோகும்போது அதிலுள்ளவேலைக்காரர்கள் எதிர்வந்துமுன்என்னமரியாதைசெய்துஅழைத்துக்கொண்டுபோனார்களோ அதுபோலே இவர்களுமழைத்துக்கொண்டுஅந்தப்பங்களாவுக்குள்ளேபோய் ஒருஅறையும்கூடமும்கொடுத்தார்கள்அதில்நானிருக்கையில் சகலசோடிப்புமுதலியதும்முதற்பங்களா அறையிலிருந்த விதமாகவேயிருக்குது பின்புசிலபேர்கள்உண்பனமுதலிய தின்பண்டங்கள்கொண்டுவந்துவைத்தார்கள் அதைப்பார்க்கையில்முதற்பங்களாவில் எவ்விதமாயிருந்ததோஅதேமாதிரியாகவேயிருந்ததின்மேல் ஆடல்பாடல்முதலியசதிரும்நடந்தது பிறகுபடுத்திருக்கையில்வேலைக்காரர்கள்வந்து கால்கைமுதலியதும்பிடித்தார்கள்அதற்குப்பின்விடிந்தெழுந்திருந்து தோட்டமுழுதையும்சுற்றிப்பார்த்து பழயபடிஅறையில்வந்திருந்து நான்யோசித்தேன் ஓ-ஓ-இதென்ன அதிசயமாகவிருக்கிறது இந்தப்பங்களாவில் நடந்தவைபவங்களும்முதல்பங்களாவில்நடந்தவைபவங்களும் அணுவளவுகூடபிசகில்லாமற் சரியாயிருந்தது அப்போதுநானினைத்தேன்நேற்றிருந்துசித்துக்கொண்டிருந்தபங்களாவேயொழிய இதுவேறேபங்களாவல்ல இதுகள்ஒருமாய்கையாயிருக்கிறது ஆனாலொருகாரியமிருக்கிறதுஇதுயென்னவென்றுல்சகலபணிவிடைமுதலிய வேலைகள்செய்கிறதெல்லாம் சரிஇந்தப்பங்களாவிலுள்ள கிசுமத்தாகியவேலைக்காரர்களும் அந்தப்பங்களாவிலுள்ளவேலைக்காரர்களும் வேறு வேறு முகங்களா யிருப்பதால் இதைவேறேபங்களாவென்று தீர்மானஞ்செய்துகொண்டேன்பின்புஇதிலுமூன்றுநாளிருந்துநாலாநாள்காலையிற் பிரயாணப்படுகிறபோது அதிலெவ்விதம்இனாம்கொடுத்தார்களோ அதுபோலவே இதிலேயுங்கொடுத்தார்கள் அதுகளைஎல்லாம்வாரி அங்கேயிருக்கிறசாவடியறையில்வைத்துப்பூட்டிவிட்டு அங்கேயிருக்கிற பேர்களுக்குப் பிரயாணஞ்சொல்லிப்பங்

மள

களாவைவிட்டுவெளியேவந்து மூன்றாவதுபங்களாவிற் போய்ச்சேர்ந்
தேன் அதிலேயும்நுழைந்து இரண்டுபங்களாவில் எவ்விதமரியாதைசெய்
த்தார்களோ அவ்விதமரியாதைசெய்தார்கள் அதைவிட்டுப்புறப்பட்டு
நாலாவது ஐந்தாவது ஆறாவது ஏழாவதுபங்களாவுக்கெல்லாம்போ
னேன் ஒன்றுக்கொன்று உயர்வுதாழ் வில்லாமலிருந்தது இதுகளையெ
ல்லாம்பார்த்துயோசித்து நானெண்ணினேன் இந்த சகஜாதியினுடை
யநகரத்தைச்சுற்றியிருக்கப்பட்டாகின்ற தருமஞ்செய்கிற பங்களாக்களி
ல்வந்துஎவ்வளவோ பெருமைகளையடைந்து ஆனந்தங் கொள்ளும்படி
யாயிருக்கிறது இனி அந்நகரத்துக்குள்ளிருக்கப்பட்டவிதங்கள இதுக
ளைப்பார்க்கிலும் அதிகமேன்மையாயிருக்கும்போலிருக்குதென்றுயோ
சித்து அந்நகரத்துக்குப்போனேன அந்நகரமுழுமையும் மாடகூடமும்
இரண்டடுக்குமூன்றடுக்கு மெத்தைவீடுகள் மசூதிகளென்னும் பள்ளி
வாசல்கள் கோவில்கள் இன்னம்அநேகவிதங்களாகிய வீடுகள்நிறைந்தா
வுண்டுதெருவுகளாயிருக்கிறது தெருவுக்குத்தெரு அநேகம்சக்காத்தெ
ன்னுந்தருமஞ்செய்யும்படியான சத்திரமென்னும் பங்களாக்களிருக்கி
றது அதுவுமல்லாமல் இந்ததருமபங்களாக்களுக்கெல்லாம் வரவுசிலவு
முதலியஏற்பாடுகள்செய்வதற்காக அந்தசகஜாதியென்னும்பெண்ணி
ருக்கிற அரண்மனைவாசலுக்கெதிராக வெகுவிஸ்தீர்ணமாகமுன்சொன்
னபங்களாக்களுக்கெல்லாம் பதின்மடங்கு அதிகமாய் ஒருமால்கட்டியி
ருக்கிறது அதில்ஒருவனைநேமித்து அவருக்குள்சேழ்க்கும்படியானமா
னேஜர்ஏஜெண்டு முதலியகணக்கர்களைவைத்து நாலாயிரம்ஐயாயிரம்ஏ
வற்பணிவிடை செய்யப்பட்ட காலாள்களும் நேமித்திருக்கிறது இப்
பேர்ப்பட்டநகரத்தில் தெருவுக்கும் தெருவிலிருக்கிற தருமபங்களா
வெல்லாம் போனேன் அங்கேநடக்கிற விதங்கள் மூன்வூருக்கு வெ
ளியிலே யிருந்தபங்களாவைப் பார்க்கிலும் எண்மடங் கதிகமாயிரு
க்கின்றது.

அதுகளில்வரப்பட்டமிசுக்கீன்கள் ஏழைகள்யாசகர்வழிப்போக்க
ர்களிவர்களுக்கு அந்தப்பங்களாவிலசெய்யப்பட்டமரியாதைகள்பெற்
று அவர்களடைகிற மகிழ்ச்சியெவ்விதமிருக்குதென்றால் ஒவ்வொருபா
த்துஷாக்கள் சுகித்திருக்கிறமகிழ்ச்சியிலேயு மேலாகவிருக்கிறது இது
போலேநாளும்மரியாதைபெற்று பேருவந்தங்கொண்டுஇன்னவிதமெ
ன்கிறமதிப்புதெரியாமல் சந்தோஷக்கடலில்மூழ்கிநடுவிலிருக்கும்மா
லுக்குட்போறபோது சகஜாதியிருக்காநின்ற அரண்மனைதோற்றியது
அதில்ஏழடுக்குஉப்பரிகைசெய்து சிகரங்கள்வைத்திருக்கின்றது அதி
ல் அநேகங்கொடிகள் கட்டியிருக்கிறது அப்பேர்க்கெ ற்றஅரண்மனை

க்குஒன்பதுவகை ரத்தினங்களையுமழுத்தி அதுகளுக்கிடையில் தங்கத்தகட்டால்குந்தளவேலையென்னும் ஒம்முகசெய்து ஆயிரஞ்சூரியன்பிரகாசித்தாற்போலிருக்கிற அரண்மனையைச்சுற்றி திருமதிலிருக்கிறதுஅதனுடையபிரகாசம் இன்னவிதமென்றுசொல்லமுடியாது அந்தஅரண்மனைவாசலுக்குஎதிரிலிருக்கிற அந்தமாலுக்குட்போனேன் அதற்குள்நடக்கிறகார்காருக்களும் தருமங்களும் நானித்தனை தரஞ்சொல்லிவந்ததுகளெல்லாம்ஒருபங்காகவும இதிலேநடக்கிறதருமங்களொருபங்காகவுமிருக்கின்றது அதைஎன்னாயிஞலின்ன விதமென்றுசொல்லிமுடியாது அப்போதுயோசித்தேன் நாம்அந்தசஜாதியைக்கண்டு இவ்வளவுதவுலத்தைப்பெற்ற விசனத்தையுங்கேட்டு அவளையும்நிக்காகுசெய்யவேண்டியிருப்பதாலந்தமாலுக்குள் நடக்கப்பட்டமரியாதையை நாம்பெற்றுக்கொள்ளக்கூடாது அதைப்பெற்றுக் கொள்ளாமலிருந்தால் இவர்களெல்லாம் இந்தமாலுக்குசர்தாராயிருக்கப்பட்ட சிரஸ்தாதாரிடத்திலென்னைக் கொண்டுபோய்விட்டு இவர்மரியாதைபெற்றுக்கொள்ளமாட்டோமென்று சொல்லுகிறார் ஆகையாலிதைத் தாங்களகேட்கவேண்டுமென்று சொல்லுவார்கள்.

அப்போது அவர்நம்மைக்கேட்டால் நாம்எண்ணிவந்த ஆஜத்தைச்சொன்னால் அவர்கேட்டு அந்தசஜாதிக்குச்சொல்லியனுப்புவார் அவள்நம்மைஉள்ளேவரும்படியாய்ச்சொல்லுவாள் நாம்போய்எண்ணப்படி நிறைவேற்றிக்கொள்ளலாமென்று அந்தமாலுக்குள்ளேபோய் நின்றேன் அங்கேஅனேகம்பேர்கள் கிசுமித்துமுதலியபணிவிடைகளும்மற்றக்காரியங்களுஞ்செய்பவர்தார்கள அப்போது அவர்களைப்பார்த்து நானுகிறது இங்கேநடக்கப்பட்ட தருமமுதலிய பணிவிடைகளுக்காகவந்தவனல்ல ஆகையால்நீங்கள்எனக்கு உபகாரஞ்செய்யவேண்டாமென்று நின்றேன் அந்நேரத்தில் யாவர்களும்என்னைக்கூட்டிக்கொண்டு அந்தச்சிரஸ்தாதார்முன் கொண்டுபோயவிட்டார்கள் அவர் அவர்களைப்பார்த்து நீவந்தவேலையென்னவென்றுகேட்டார் அப்போதிவர்கள்சொன்னார் இந்தமனிதன் நாங்கள்செய்தகிசுமத்துமுதலிய பணிவிடைமரியாதைகளையெனக்குத் தேவையில்லையென்று சொல்லுகிறார் ஆகையாலுங்களிடத்தில் அழைத்துக்கொண்டு வந்தோமென்றார்கள்.

அப்போது அவர்என்னைப்பார்த்து ஏன்பெற்றுக்கொள்ளமாட்டோமென்றுகேட்டார் அப்போதுநான்சொன்னேன் நானுகிறதுவெகுதலையிலிருந்துஇக்காரியத்துக்குவந்தேனென்னவென்றால் இங்கேசெய்கிறதினுமுக

விமரியாதைகளை நான்பெற்றுக்கொள்ளவந்தவனல்ல உங்கள்யாவர்க
ளுக்குப் ஒஜமானியாகிய சகஜாதியைக்கண்டு நானெண்ணிவந்த காஜத்
தைகேழ்க்கவேண்டியிருக்கிறது ஆனபடியால்நான்நாடிவந்த நாட்டத்
தைநீங்கள்நிறைவேற்றவேண்டியதேயொழிய நாட்டமில்லாததைச்செ
ய்கிறபடியால் அதுவேண்டியதில்லையென்றுசொன்னேன் அப்போது
அந்தசிரஸ்தாதார் என்வாய்மொழியைக்கேட்டு ஒருநாற்காலிபோட்டு
உபசாரத்துடனே அதிலிருக்கச்சொல்லி அப்போதேஒருகாகிதத்தில்
என்னைக்குறித்து நான்சொன்னவிசேஷத்தையெழுதி முத்திரைவைத்
துஒருஆள்வசம்அனுப்ப அவனதைவாங்கி அரண்மனைவாசலிற்போய்
ஒருதாதிவசம் கொடுத்தனுப்ப அவள்உள்ளேபோய் சகஜாதிகையில்
கொடுக்கவள்வாங்கி இதைவாசித்துப்பார்த்துஇதென்னஅதிசயமாயி
ருக்கிறதுஒருஆணுப்பிறந்தவன்நம்மைக்கண்டுசந்தித்துவார்த்தையா
டவேணுமென்றால்அதுசரியல்லவே ஆகிலும்நாம்கூடாதென்றால்நாம்
செய்கிறசக்காத்தென்னும தருமமுதலிய உபசாரங்களென்னத்துக்கா
ச்சுதுஒருவனுடைய ஆஜத்துயெப்படியிருக்கிறதோ அதையும்நிறை
வேற்றிக்கொடுத்தால் இன்னம்அதிகமேன்மையுண்டுஅப்படிக்கில்லா
மல்இங்கேகூடாதென்றுசொன்னால் நமதுமேன்மையும்போய் அவரு
டையஆஜத்தென்னும்ஆசையும் நிறைவேறுமற்போய்விடும் அதெப்ப
டியெனில்(நூற்றைக்கெடுத்தது குறுணியென்றபழமொழிபோலே
நாம இதுவரையிற்செய்துவருகிறதருமமென்னும்சக்காத்துக்குவூனமா
கிறது ஆகையால் அந்தமனிதன்நாடிவந்த ஆஜத்துயெவ்விதமானதோ
அதுநமக்குத்தெரியவேண்டியதாயிருக்கிறதுஎன்று பதில்கடிதமெ
ழுதிஅந்தத்தாதிகையில்கொடுத்து அந்தமனிதனை உள்ளேவரும்படிச்
சொல்லிவிட்டுவாவென்றனுப்ப அப்போதவள்வந்துகாகிதங்கொடுத்த
வன்வசம்இந்தக்காகிதத்தைக்கொடுத்து இந்தசகஜாதிசொன்னபடிஅந்
தஆஜத்துக்காரமனிதனை உள்ளேவரும்படியாய் நீபோய்ச்சொல்லென
றனுப்பஇவன்காகிதத்தைவாங்கி சிரஸ்தாதாரிடத்திற்கொடுக்க அதை
யவர்வாசித்துப்பார்த்து எனக்குஅவர்ரொம்பமரியாதைசெய்துஉள்ளே
போகும்படியாயுத்திரவுகொடுத்தார் உடனேயெழுந்து அந்தபாலைவி
ட்டுவெளியேவந்து சகஜாதியிருக்கும் அரண்வாசலிற்போய்நின்றேன்
அங்கேயனேகந்தாதிகள் தோழிகள்வெள்ளாட்டிகள் என்னெதிரில்வந்
துபன்னீர்களால் என்கால்களைக்கழுவி ரொம்பமரியாதைசெய்துபணி
ந்துகூட்டிக்கொண்டுபோனார்கள் அப்படிப்போகிறபோது அந்த அர
ண்மனைக்குப்பனிரண்டு வாசற்படிகளுண்டு அந்தவாசலுக்குச்சமீபத்
தில்அனேகவிச்சித்திர விநோதம்பொருந்தியஅலங்காரமண்டபங்களி

ருக்கிறது அப்படியிருக்க இரண்டாங்கட்டுவாசலுக்குச் சமீபமாய்ப்போனேன் அந்தமண்டபத்துக்குள் அனேகவிதமான அலங்காரங்கள்செய்து நடுவிலொருகட்டில்போட்டு அந்தக்கட்டிலின்மேல் ஒருபெண்ணானவளிருக்கிறாள் அவளுடைய அழகுசவுந்தரியம் அங்கேயிருக்கிறசோடிப்புமுதலிய பிரகாசங்களையெல்லா மறைத்துக்கொண்டது அப்பேர்க்கொற்ற பெண்ணைச்சுற்றி அனேகந்தாதிகள் சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அதெப்படியிருக்குதென்றால் ஆகாசத்தினிடமாகப்பூரணசந்திரனிருக்க அதைச்சுற்றியிருக்கும்நட்சத்திரக்கூட்டங்கள்போல் இவளொருசந்திரன்போலவும் மற்றப்பெண்களெல்லாம்தாராகணங்களைப்போலவுமிருந்தது அங்கேசிலமாதர்கள் ஆடலும்பாடலும்மிர்தங்கந்துத்திகைத்தாளம் பிடீல்சித்தார்முதலிய கின்னரிகள்வாசித்துசதுர்செய்துக்கொண்டிருக்கிறார்கள் அப்போது இவர்களையெல்லாம்பார்த்து நினைத்தேன்நாம்நாடிவந்தசகஜாதியென்கிறபெண் நடுவேயிருக்கிறவளாயிருக்கவேண்டும் ஆகையாலிவ்வளவுசம்பிரமம் நடக்கிறதென்று அவளிருக்கிறதற்குச்சமீபமாய் என்னையழைத்துக்கொண்டுபோனதாதிகளும்நானுமாய்ப்போய்நின்றோம் கொஞ்சநேரத்திற்குப்பிறகு அந்தப்பெண்ணானவள்என்னைப்பார்த்து எங்கேவந்தீரென்றுகேழ்க நான்சொன்னதுநானொரு ஆஜத்தென்னும ஆசைகொண்டு இந்நகரத்தைநாடி இங்கேயிருக்கிறசகலபேருக்கும் எஜமானியைக்கண்டு பேசிப்போசலாமென்று வந்தேனென்றேன் அப்போதவள்சொன்னாள் ஆனாலெனக்கும் இன்னம்யாவர்களுக்கும் எஜமானியாகிய சகஜாதியென்பவள் உள்ளேயிருக்கிறார்கள் அவர்களிடத்திற்போய்க்கேட்டுக்கொள்ளுமென்றாள் அந்தமண்டபத்தைவிட்டு இரண்டாம்வாசல்கடந்து மூன்றும்வாசலுக்குப்போராபோது இந்தமண்டபத்தைப்பார்க்கிலும் அதிகமேன்மை பொருந்தியமண்டபமிருக்கிறது அதிலொருபெண்ணானவள் முன்கண்ட அழகுசவுந்தரியத்திலும்மேன்மையிலும் மண்டப அலங்காரங்களிலும்பெண்கள்கூட்டங்களிலும் சம்பிரமமாகியசதுர்களிலும் இரட்டிப்புபங்குஅதிகமாயிருக்கின்றது அப்போதுஇவள்தானோ அந்தசகஜாதியென்றெண்ணினேன் அவளும் எனக்குமேலான எஜமானியிடத்திற் போய்க்கேட்டுக்கொள்ளுமென்றாள் அப்போதுஇவ்விதமாகப் பனிரண்டுவாசலையும்போய்ப்பார்த்துபோகையில ஒன்றுக்கொன்று அதிகமாகியமண்டபங்களும்ரூபலாவண்யம்பொருந்தியபெண்களும் ஆடல்பாடல்களும் அதிகவிசேஷமாயிருக்கது இதுகளையெல்லாம்பார்த்து பனிரண்டுவாசலையுங்கடந்து போகையில் அங்கேஎழுதிரை போட்டிருந்தது அந்தத்திரைக்குச் சமீபத்தில்போய்நின்றேன் அப்போது என்னையழைத்துப்

போனதாதிகள் உள்ளேபோனார்கள் பினபுசஜாதியென்கிற பெண்ணு
ணவள்சதுர்முதலிய கச்சேரிசெய்துக்கொண்டிருந்தாள் அவளிடத்தில்
இந்தத்தாதிகள்போய் நான்வந்திருப்பதைச்சொன்னார்கள் அப்போது
அவளெழுந்து ஒருஅறையிற்போய் மறைந்துகொண்டு என்னையந்தச்
சதுரில்வந்துஉட்காரும்படி ஒருசிம்மாசனம்போட்டிருந்து அப்போ
து அந்தத்தாதிகள்வந்து அழைத்துக்கொண்டு எழுநிலைகளையுங்கடந்
து அங்கேபெருக்கமாகிய பெண்கள்கூட்டம்நிறைந்திருக்க சதுர்கச்சே
ரியில்நடுவில்போட்டிருக்கிற சிம்மாதனத்தில்போயுட்கார்ந்திருந்தேன்
அப்போதுஎன்மனது யெப்படியிருக்கும்

கேளுங்கள்பாத்துஷாவுக்கெல்லாம் சக்கிரவர்த்தியாகியபாத்துஷா
சிரோமணியே தோஸ்தியாகியமூன்றுபக்கீர்களே அப்போதுஅந்தச்ச
துர்கச்சேரியாகிய அலங்காரமண்டபத்தை யென்னிரண்டுகண்களாலு
ம்பார்த்தது இனைவிதமாயிருக்குதென்கிறமதிப்படங்காமல்பிரமித்திரு
ந்தேன் ஆனால்அங்கேநடந்த விநோதங்கள்முதலிய ஆடல்பாடல்சங்கீத
சாகித்தியவிநோதங்களை சிலதையெடுத்துச்சொல்லுகிறேன் அதைசெ
விகொடுத்துக்கேளுங்கள் அதென்னவென்றால்நானிருக்கிறசிம்மாதன
த்திற்குஎதிரில் ஒருசிம்மாசனமிருக்கிறது அந்தச்சிம்மாசனம்ஆனையா
னைத்தந்தங்களாற்கால்கள்கடைந்து அந்தக்கால்களில் அனேகமாதிரியா
னசெம்புபச்சைநீலவைடூரியங்களைப்பதித்துத் தங்கத்தகடுகளால்மு
முகசெய்து அதிற்சட்டம் எழுதகம்கலசங்கள் படிகள்முதலியதெல்லா
ம்மேற்படிதந்தங்களாலும் சுவர்த்தினங்களாலும்அமைத்து அனேகவி
சித்திரமாகிய சிவந்தமகமல்களில் தங்கச்சரிகைகளால்கசீதாவேலைகள்
செய்து அந்தசிம்மாதனத்தில் விரித்திருக்கிறது அதில்திண்டுதிடாஸ்வி
ல்லைத்தலையணைபோட்டிருக்கிறது அதைச்சுற்றிசிலமாதர்கள வெண்சா
மரம்பிடித்து எச்சரிக்கையுடனேநிற்கிறார்கள் அவர்களுடையசூத்து
முதலியஅழகுசவுந்தரியத்தை மாட்டிடக்கூடாது இதுபோலவேநானி
ருக்கிறசிம்மாதனத்திற்கும் அப்படியேசெய்திருக்கின்றது என்னைச்சுற்
றிலும்தாதிமார்கள்வெண்சாமரம் மயில்விசிறிகளால்வீசிக்கொண்டுநிற்
கசிலமாதர்கள் பணிவிடைஏவற்செய்கிறதற்காகஇந்தயிரண்டுசிம்மாத
னத்தையுஞ்சுற்றி அணியணியாய் தங்கங்களாற்செய்தநாற்காலிகளபோ
ட்டிருக்கிறது அந்நாற்காலிகளில் இவ்வளவுஎன்றுகணக்கிடக்கூடாத
பெண்களிருக்கிறார்கள் அவர்களைப்பார்க்கையில்ஒன்றுக்கொன்றுஉய
ர்வும்தாழ்வுமில்லாமல் ஒரேவடிவுள்ளவர்களாய் அவர்களுடுத்தியிருக்
கிறஉடுப்போகளைகளும் அணிந்திருக்கிறஆபரணபூஷணங்களும் ஒன்று
போலேயிருக்கிறது இப்பேர்ப்பட்டபெண்கள் எங்குமிருக்கார்களென்

தூஎன்மனம்பிரமித்திருந்தது இன்னம் அனேகமாதர்கள்முன்சொன்ன பெண்களிலும் அதிகவடிவுள்ளவர்களாய் மிர்தங்கம்தாளம்பிடில்சித்தார்சித்திரமகலிய பதினெட்டு வாத்தியங்களும் வைத்துக்கொண்டு அந்நேரத்தில் ஆடல்பாடல்களில்லாம லெச்சரிக்கை யுடனேநிற்கிறார்கள்.

அதேதென்னவென்றால் அந்தஎஜமானியாகிய சகஜாதியென்கிறபெண்ணானவள நான்வந்தேனென்கிறதாய் மறைவாகப் போயிருப்பதினாலேசதுர் ஆடம்பரமில்லாமலிருந்தார்கள் அப்படிப்பெண்களாகக்கூடியிருக்கிறசபாமண்டபத்திற்கு நான்குதிசையிலும் தங்கத்தினாலே தூண்களமைத்திருக்கிறது திசையொன்றுக்கு ஐந்நூறுதூணிருத்தியிருக்கும் அந்தத்தூண்களில் போரிசையமைத்துபஞ்சலோகமென்னும் ஐம்பொன்களாலவிட்டங்களமைத்து அதில்கொடுங்கைசெய்துதங்கத்தகடுகளினாற்பதிந்து இருக்கப்பட்டமண்டபத்தில் நாட்டியிருக்கிறஇரண்டாயிரம்தங்கத்தூண்களுக்கும் தூணொன்றுக்கு வால்சேட்டுகள்மாட்டி அந்தசேட்டில்களின்கீழ் முத்துக்குச்சுகள்பட்டுநூல்களாற்கோர்த்துக்கட்டித்தொங்கவிட்டிருக்கிறது அல்லாமலும் சுற்றுச்சுவர்களெல்லாம் திசைக்குத்திசை நிலைக்கண்ணாடிகள்வைத்திருக்கிறது ஒருகண்ணாடிக்குள்பார்த்தால் இந்தச்சபாமண்டபத்துக்குள் சபைகூடி சதுர்ச்செய்கிறவினோதமெல்லாம் அந்தக்கண்ணாடிக்குள்தெரிகிறது இவ்விதமாயதிலிருக்கப்பட்ட கண்ணாடிகளில் இதேமாதிரியாய்த்தெரிகிறது அப்போதுஒருக்காலும்பாராதபேர்கள் நமெத்தியிலேநின்று கண்ணாடிகளைப்பார்ப்பார்களேயானால் இந்தசசதுர்கச்சேரியைப்போலே இவ்வளவென்றுசொல்லிமுடியாத சதுர்நடக்குதென்று அதையும்போய்ப் பார்ப்போமென்றெண்ணுவார்கள்.

ஆகையாலென்தோஸ்திமார்களே நான்போய்யுட்கார்ந்தவுடனே சுற்றியிருக்கிறநிலைக்கண்ணாடிகளில் என்கண்ணுக்குத்தோற்றிய சதுர்க்கூட்டங்களைப்பார்த்து இதென்ன அதிசயமாயிருக்கிறது இப்படியனேகம்இடங்களில்சதுர்களிருக்கிறதே அந்தச்சதுர்களில் இந்தசகஜாதிஎன்னப்பட்டபெண்ணானவள் எந்தச்சதுரிலிருக்கிறாளோவென்று நானெண்ணிஒவ்வொருகண்ணாடியிற்றோற்றிய சதுர்களில் பார்த்துக்கொண்டேயிருந்தேன் அந்தச்சதுர்களில் நானிருக்கிறமாதிரியும்என்னெதிரேயிருந்தசிம்மாசனத்தில் ஒருவருமுட்காராமல் காலியாயிருப்பதையும்பார்த்து அப்போதெண்ணினேன்-ஓ-ஓஇதுசுற்றிநிலைக்கண்ணாடிகள்வைத்திருக்கிறது அந்தக்கண்ணாடிகளிலெல்லாம் இந்தப்பெண்கள்கூடியிருக்கிறசபையும் நாமிருக்கிறதுந்தான் தோற்றியதென்று என்மனதிற்றீர்மானித்து உயரப்பார்க்கையில் அனேகப்லஸ்தர்கள் குளோப்புகள்செடிகுளோப்புகள் நீலஞ்சிகப்பு பச்சைமஞ்சள்வெள்ளை இந்தஜந்

துவர்னங்களால் தொங்கிக்கொண்டிருக்கிறது அதுகளில்மெழுகுவத்திகள்வைத்து பகல்வத்திபோலே எரிந்துக்கொண்டிருக்கிறது அந்தவத்திகள்பச்சைகற்பூரம் சாம்பிராணிப்பால்முதலியவாசம்பொருந்தியதை அந்தவத்திகளில்சேர்த்து மெழுக்குவத்திசெய்திருப்பதால்அதனுடையவாசங்கள் அச்சபாமண்டபமுழுவதும் வீசிக்கொண்டிருக்கிறதுஅந்தவாசம்நாசிகளிலேறியவுடனே ஆனந்தமாகிய மகிழ்ச்சியை யுண்டாக்குகிறதுஇவ்விதங்களா லமைத்திருக்கப்பட்டாகின்றசபாமண்டபத்தில் இன்னம்அனேகவிதங்களான சோடிப்புகள்முதலிய விசித்திரவினோதங்களுமிருக்கிறது அதுகளையெல்லாம் விபரமாய்ச்சொல்லவேணுமென்றால்கதைவிரிவாகுதென்று இதுவரையில் சுருக்கமாய்ச்சொல்லி வந்தேன்.

ஆகையால்கேளுங்கள் பாத்துஷாசிரோமணியே மூன்றுபக்கீர்களேஅப்போது அந்தமண்டபத்திலிருக்கிற அலங்காரங்களையெல்லாம் பார்த்து என்னிரண்டுகண்களும்கூசி இன்பங்குளிர்ந்து இருதோளும் புளகிதங்கொண்டு பூரித்துநான்யோசித்தேன் நாமிப்போதிருக்கிறதைப்பார்த்தால் இந்தஈரேழுபதினாலுலோகமும் இப்பேர்ப்பட்ட அதிசயமாகியசதுர்கச்சேரியை எந்தபாத்துஷாவாவது இன்னம்எவர்களாவது வைத்திருக்கமாட்டார்கள் இனிமேலாருமொருவரும் செய்யவு மாட்டார்களென்றெண்ணி அப்போதுநானினைத்தேன்-ஓ-ஓ-இதென்ன நாம்வந்த ஆஜத்தை அந்தப்பெண்ணினுடனேகேட்டு நமதுஎண்ணப்படி நிறைவேற்றவல்லவோவந்தோம் அதைநிறைவேற்றாமல்விட்டுஇதுகளைப்பார்த்துக்கொண்டு காலதாமதஞ்செய்கிறது சரியல்லவேயென்றுயோசித்துஎனக்கெதிரில்நிற்கிற பணிவிடைக் காரிகளாகியபெண்களிலேமுதன்மையானவளையழைத்து உங்களிசமானியாகிய சகஜாதியென்கிறபெண்ணானவள் இந்தசதுரில்லாமல் எங்கேபோயிருக்கிறது நான்வந்துரொம்பநேரமானபடியால் என்னுடையஆஜத்தை அந்தபெண்ணைக்கேட்கவேண்டியிருப்பதால் நீபோய்ச்சொல்லியழைத்து வாவென்று சொன்னேன்அவள்போய் சகஜாதிஎன்னும் பெண்ணிடத்திற்சொன்னவுடனேஅவள்கேட்டு என்னெதிரில்வருகிறதற்குமுன்னமே சிலபீதாம்பரங்களாற்றைத்த திரைச்சீலைகளைத்தாதிகள்கொண்டுவந்து நானிருக்கும்சிம்மாதனத்திற்கும் என்னெதிரிலிருக்கிற முன்சொல்லிய சிம்மாதனத்திற்கும் மத்தியில்மறைப்புகட்டினார்கள் பின்பு அந்தப்பெண்ணானவள்சகலஆடையாபரண பூஷணாதிகளையணிந்து வாசனைதிரவிய முதயதும்பூசி அந்தசிம்மாதனதில்வந்து வீற்றிருந்தாள்அப்படி வந்திருந்தசகஜாதியென்பவள்என்னைக்கேட்கிறாள் ஓமனிதனேநாணுகிறதுஇந்த பூலோகத்திலுள்ளபாத்துஷாகள்த்தான்நவாப்புராஜாக்கள் மனிதர்கள்

முதலியஎவர்களாயிருந்தாலுஞ்சரி அவர்கள்எல்லோருங்கூடித் திரண்
டுவந்தால்அவர்களுக்கெல்லாம் இருக்கும்படியானசாலைகளும்பணிவி
டைகளும் அவர்கள்விரும்பிக்கேட்கிறதுகளை கொடுக்கும்படியாகவும்
அவர்கள்எவ்வளவுகாலமிருந்தபோதிலும் மனக்குறைவில்லாமலிரு
க்கும்படியானதிட்டஞ்செய்துவைத்திருப்பதால் அதுகளில்அவரவர்க
ள்வந்துஅவரவர்காஜத்தை நிறைவேற்றிப்போறபேர்களும் இருக்கிற
பேர்களுமாயிருக்கநீராகிரது அந்தஇடங்களி லுமதுஆஜத்தை நிறை
வேற்றிப்போகாமல் என்னிடத்தில்வந்து எதிர்மொழியாய்ப்பேசிபோ
கவேணுமென்றுவந்தீரோ அதுஎன்னஆஜத்தென்றுகேட்டாள் அப்போ
து நான்சொம்பஅதபுடனே பயபக்தியுடையவனாய்கேளும் பெண்களுக்
கெல்லாம் அரசியாகியசிரேஷ்டமணியே இப்போது இங்கேநான்நாடிவ
ந்தஆஜத்தாகியநாட்டத்தை நீநிறைவேற்றிக்கொடுக்கிறேனென்றால்நா
ன்சொல்லுகிறேன் அப்படியுன்னாலேகூடாதென்றால் இதோஎழுந்து
உன்னுடையபிரதாபஞ் சரியானதல்லவென்று எங்கும்பிரசங்கஞ்செய்
துவிட்டு என்னுடையபதிபோய்ச்சேருகிறேனென்றேன் அப்போதந்
தப்பெண்சொல்லுகிறாள் நீர்சொல்லுகிறதுசரியே நீர் கேழ்க்கப்பட்ட
ஆஜத்தைநான்நிறைவேற்றிக்கொடுக்கிறேன் அந்தஆஜத்தைசொல்லு
மென்றாள் அப்போதுநான்பதில்மொழிசொன்னேன் என்ஆஜத்தைஉ
ன்னிடத்தில்சொல்லவேணுமானால் உனக்குமெனக்கும் நடுவில்திரை
யிருப்பதால்அதுசரியல்ல நான்நாடியநாட்டத்துக்குக்குறைவாயிருக்கி
றது[illegible]ந்தத்திரையைநீக்கிவிட்டால் உன்னுடையதீதாராகிய முகத்தை
நான்பார்த்து என்னுடையதீதாரை நீபார்த்துசிலவசனங்கள்பேசவே
ண்டியிருப்பதால் நடுவிலதிரையிருப்பதினாலே நான்எண்ணிவந்தஆஜ
த்துக்குக்குறைவாயிருக்கிறதென்றுசொன்னேன் அப்போதவள்அநே
கவிதமாகியயோசனைகள்செய்து நாம்இதுவரையிலும்எதிரில்ஒருஆட
வர்களைவைத்துப்பேசினவளல்லவே அப்படியிருக்க இந்தமனிதன்நம்
முடையமுகத்தைப்பார்க்கவும் அவர்முகத்தைநாம்பார்க்கவும் அவர்
சொல்லுகிறதுசரியாயிருக்கவில்லையே ஆகிலும்நாம் இதுகூடாதகாரி
யமென்றுசொல்லிவிடுவோமாகில் இதுவரையிற்செய்த சக்காத்துயென்
னுந்தருமங்களும்உபகாரங்களும மேன்மைத்தனமும் வீணாய்ப்போகி
றதாயிருக்கிறது இன்னம் ஒருவர்நாடிவந்த நாட்டத்தை அவர்களுக்கு
நிறைவேற்றிக்கொடுக்க நமதுபேரில் விதியாயிருக்கிறபடியால் இவர்
சொல்லுகிறஆஜத்து என்னவிதமென்று பார்ப்போம் என்றுவிரும்பி
னவளாய்தோழிகளையழைத்து அந்தத்திரையைவாங்கிவிடும்படியாய்ச்
சொன்னாள் அப்படியேஅவர்கள்திரையை அவிழ்த்துக்கொண்டு போ

யவிட்டார்கள் அப்போது அந்தப்பெண்ணைப்பார்த்து யென்னிரண்டு
கண்களும்கூசிமனமருண்டு அந்தப்பெண்சொன்னவார்த்தைக்கு மறு
வார்த்தைசொல்லமாட்டாமல் பிரமைகொண்டவனாயிருந்தேன்

கேளுங்கள்சக்கிரவர்த்திகளுக்கெல்லாம் சக்கிரவர்த்தியாகியபாத்
துஷாசிரோமணியே மற்றும்பக்கீர்களே நீங்களேயிதைகவனமாயோசித்
துப்பாருங்கள் அந்தப்பெண்ணானவள் சூரத்தாகியவசீகரமுதலிய ரூப
லாவண்ணியசவுந்தரியங்களையும் அவளணிந்திராநின்ற பூஷணாதிமுத
லியஆடைகளையும் ஒப்பிட்டுச்சொல்லுவதற்குஇந்தப்பூலோகத்தின்க
ண்ணேயிருக்கிறவஸ்துக்களில் இன்னவஸ்துவென்று அவளுடைய அ
ழகுக்கும்பணிதிகளுக்கும் என்னாலுவமையிட்டுச் சொல்லமுடியாது
ஆகிலுங்கூடியவரையிற் கொஞ்சஞ்சொல்லுகிறேன் நீங்கள்செவிகொடு
த்துவேறேபாராக்காயிராமல் கேட்கவேணும் தோஸ்திமார்களேயென்
றுஇரண்டாவதுபக்கீர்சொன்னார் அப்போது ஆஜாத்பகுத்பாத்துஷாவு
ம்மற்றமூன்றுபக்கீர்களும் இவர்கள்சொல்லிவந்த சங்கதிகளைத்துங்
கேட்டுமெம்பவும் ஆனந்தமகிழ்ச்சியடைந்து இவர்சொல்லுக்கெதிர்பா
ர்த்துக்கொண்டிருந்தார்கள் அப்போது இரண்டாவதுபக்கீர்சொல்லு
கிறார்கேளுங்கள்தோஸ்திமார்களே அந்தசகஜாதியென்கிற பெண்ணான
வள்வந்திருக்கிறது எவ்விதமிருந்ததென்றால் அவள்வருமுன்னே அந்த
ச்சபாமண்டபத்தில் சதுர்க்கச்சேரி நிறைந்திருக்கிற பெண்கள்முதலி
யவிநோதங்களையெல்லாம்பார்க்க ஒருஅலங்காரமாகியமண்டபத்தில்அ
னேகவிசித்திரமான வேலைகளெல்லாஞ்செய்து நடுவுச்சியில சிகரமில்
லாதிருந்தால்எப்படியிருக்குமோ அப்படியிருந்ததுஇப்போதுஅங்கே
யிருக்கிறவிநோதங்களாகிய சோடிப்புகளும்பெண்கள்கூடியிருக்கிறஅ
லங்காரங்களும் நடுவில்தகத்தென்னும் சிம்மாசனத்தில் இந்தசகஜாதி
யென்னும்பெண்ணிருக்கிறதைப்பார்க்கையில் அந்தமண்டபத்தில் பச்
சைமரகதத்திலும்,சிவந்தமாணிக்கத்தினாலும், ஓம்முசுசெய்து சிகரம்
வைத்தாலெப்படியிருக்குமோ அதுபோலேயிருந்தது அப்பேர்க்கொற்
றபெண்ணினுடைய அழகுசவுந்தரியம் எவ்விதமாயிருக்குதென்றால்
அவள்கூந்தல்நிறமானது மேகத்தினையும்,கமுகம்பாளினையும்,கொன்னை
க்காயினையும்,கூந்தற்பனையினையும்,உகாந்தயிருளினையும், கரியமணலி
னையும்,கொடிப்பாசியினையும்-கருமைபொருந்தியவண்டுக்கூட்டங்களி
னையும் இவைகளையெல்லாம்பழித்துசாந்து சம்பங்கியெண்ணெய்முத
லியவாசந்தடவி மல்லிகைமுல்லைஇருவாட்சி மருமருக்கொழுந்து பா
ரிசாதமுதலியமலரினையும் தலையிற்சூடி சந்திரப்பிறை சூரியப்பிறைய
ணிந்துகொண்டைக்குச்சு தொங்கவிட்ட கூந்தலையும் மூன்றாம்பிறை
யைப்பழித்தநெற்றியையும் அந்தநெற்றியிற் கல்லிழைத்தபொற்சுட்டி

முதலியதலையாபரணமுங்கட்டி இந்திரவில்லைப்பழித்த புருவத்தையு
ம்.வளைக்கொடியினையும்,கத்தரிக்கோலினையும் பழித்தகாதுகளையும்,
அந்தக்காதுகளில்பாவலிமுதலிய கொப்புக்கொலுசுமாட்டியிருக்கிறது
ம் வேலையும்-சேலையும்-வாளையும்-நீலோற்பலத்தையுந்தாமரையுமளமு
னையும்-சமுத்திரத்தையும்-அம்பையும்-மானையும்-மாவடுவையும்-விஷ
த்தையும்பழித்தகண்களும்-எள்ளிளம்பூவையும் குமிழம்பூவையும் ச
ண்பகப்பூவையும் பாரிசாதமலரையும்-பழித்தநாசியையும்-சாணைக்கல்
லினையும்-கண்ணாடியினையும்-நீர்க்குமிழியினையும்-பழித்தகன்னங்களையும்-
கொவ்வைக்கனியினையும்-இலவம்பூவினையும்-முருக்கமலரையும்பழித்
தஅதரத்தையும்.முத்துக்களையுந்தந்தங்களையும் பழித்தபற்களும்.கறு
ப்பஞ்சாற்றினையும்-கற்கண்டினையும்-மாங்கனியினையும்பலாக்கனியினை
யும்-வாழைக்கனியினையும்-குயிற்குரலினையும்- கிள்ளைமொழியினையும்-
பாலையும் பாகையும்-தேனையும்பழித்தமொழியினையும் பூரணச்சந்திர
னைப்பழித்தமுகத்தினையும்-வலம்புரிச்சங்கினையும்-கமுகமரத்தினையும்
பழித்தகழுத்தினையும்-மூங்கிலினடியையிகழ்த்த தோளினையும்-பைங்கு
ருமபையும்-பம்பரத்தையும்-பருவதத்தையும்பூங்கமலத்தையும்பூரண
குடத்தையும்-சொர்ணச்செப்பையும்-சொக்கட்டான்காயையும்-தாளத்
தையும்-சக்கிரவாளத்தையும்-யானைமத்தகத்தையும்-மறைந்துஇவை
களில்யாதோதெரியாதென்று சந்தேகிக்கும்படி கவிழ்ந்துகுவிந்து சிறுத்
துபருத்துஉருண்டுதிரண்டு நிமிர்ந்துவளர்ந்து அண்ணார்ந்துபுடைத்து
புளகாங்கிதங்கொண்டு ககமகவென்றுவாசமுதலியதும்திமிர்ந்துஅன்
னரேகைஅரசரேகை மயில்ரேகைகுயில்ரேகை கிளிரேகைமுதலியவிச்
சித்திரரேகைகள்செய்தமுத்துக்கச்சையிட்டிருக்கிறபொற்சரிகைத்தாள்
கொண்டுபூட்டி-வாகுமலை-வசிரமாலை-பச்சைமாலை-மரகதமாலைஇர
த்தினமாலை-முத்துமாலை-பவழமாலை-மோகனமாலைமுதலியவைகளைய
ணிந்துவிளங்காநின்ற கனதனங்களும் ஆலிலையையிகழ்த்தவயிறும்தாம
ரையலர்போன்றகரங்களும் மகிழம்பூவுக்கொப்பாகியஉந்தியையும்சிறு
சங்கிலிபோன்றரோமத்தையும் சிற்றுடுக்கையும்-மின்னற்கொடியையு
ம்-பூங்கொடியையும்-நூலிழையும்-மூன்றாம்பிறைநுனியையும். தோற்
கச்செய்யும்இடையையும் இளவாழைத்தண்டையும்-யானைத்துதிக்கையு
ம்வென்றதுடையையும்-நண்டைப்பழிக்குமுழங்காலினையும்-விராலையு
ம்-எக்காளத்தையும் அம்புறாத்தூணியையும்-பழித்தகணுக்கால்களும்
தராசுக்கொப்பானபாடுகளும்-அனிச்சமலரிலுமெல்லிய செம்பஞ்சுகு
ழம்புகூட்டியதாமரை மலர்போன்றபாதங்களும். தங்கத்தைப்பழித்த
தேகம்பெற்றிராநின்ற சகஜாதியென்றபெண்ணானவள் அணிகின்ற ஆ

டையாபரண அலங்கிர்தத்தை இன்னவிதமென்றுசொல்லிமுடியாது ஆ. கிலுங்கொஞ்சஞ் சொல்லுகிறேன்.

கேளுங்கள்நவகோடி திரவியங்கள்விலைபெற்றபாவாடையென்னு ப்தோலந்துகட்டி காசினியெல்லாமதிக்கத்தக்கமூலைக்கச்சையென்னும் ரவிக்கைபூட்டி-ஒருகோடிபொன்பெறத்தக்க பொற்சரிகைமுதலியதா ற்செய்தஉத்தரீயமென்னும் தாவணிபோர்த்து சர்ப்பத்தைபோல்பின் னிவிட்டசடையிலே இளம்பிறைபோலும் மாணிக்கங்களாற்சமைத்த அணிபணியான தங்கச்சடைப்பில்லையும் சோடசகலையுடைய பூரண ச்சந்திரனைத்தோற்கச்செய்யும் முத்துக்குச்சுகளும்சந்திரர்சூரியர்போ லும்பிரகாசித்துக்கொண்டிருக்கும் தலையாபரணங்களும் வைரத்தால் நெற்றிச்சுட்டிகளும் இரு டைநீக்கும்படியான ஒன்னப்புமுதலியவா ளிகொப்புகளும் விளக்குச்சுடர்போல பிரகாசித்துக்கொண்டிருக்கும் நாகரத்தினங்களால்சேர்க்கச்செய்த நத்துமூக்குத்திகளும் தரணி எல் லாம்விலைமதிக்கும் சந்திரஆரமும் மண்டலத்தைமதிக்கத்தக்கமதாணி ப்பதக்கங்களும் திரிலோகங்களையும் விலைகொள்ளும் இடைப்பட்டை யும்மேகலாபரணங்களும் அளவிலாப்பொருளபெற்றசங்கணபோஞ்சி வளையல்களும் இவ்வளவென்றுவிலைமதிக்கக்கூடாதவிரலாழியென்னு மோதிரங்களும் திக்கட்டுமன்னர்கள் செங்கோலைவிலைக்குவாங்கத்தக்க பாதசரம்தண்டை காலாழிபீலிகளும் இதுகளையெல்லாமணிந்து அந்த சகஜாதியென்கிறபெண்ணானவ ளிருக்கிறதைப்பார்த்தால் அவளுடை யசவுந்தரிய அழகினுடையபிரகாசமும்அவளணிந்திருக்கிற பூஷணங் களில்பதித்துகதொங்குகின்ற இரத்தினங்களமுதலிய பிரகாசங்களும் எப்படியிருக்குதென்றால் அந்தமண்டபத்தி லிருக்காநின்ற பெண்கள ணிந்திருக்கிறபணிகயினுடைய பிரகாசங்களையும்தீபங்கள்முதலியவெ ளிச்சத்தினுடைய பிரகாசங்களையும்தாழ்த்தி இவள்பிரகாசமே மேற் கொண்டிருக்கிறது.

கேளுங்கள்தோஸ்தியானபேர்களே இப்பேர்ப்பட்ட அழகிலுங்கு ணத்திலும் கற்புநிலையிலும்சம்பத்திலும் சகலவைபவங்களிலும்குறை வில்லாமலிருக்கிற சகஜாதியென்னும்பெண்ணானவள் என்னைப்பார்த்து நீரிருக்கிறதுஎங்கதேசம் உம்முடையபேரென்ன நீசெய்கிறவர்த்தகமெ ன்னஎன்னிடத்தில் என்ன ஆஜத்தைஎண்ணிவந்தீ ரதைவிபரமாய்ச் சொல்லவேண்டுமென்றுகேட்க அப்போதுஎன்வரலாத்தை எடுத்துச் சொன்னேன் அதென்னவென்றால என்னுடையநகரமாகிறதுபாரிசுதே சம் அந்தத்தேசத்தையாண்ட அசீசுமீருபாத்துஷாவுக்குப்புத்ரசம்பத் தில்லாமல் வருத்தப்பட்டிருக்கையில் அல்லாகுத்தஆலா அவருடை

யமனம்போலே அவருக்குஎன்னைப்பிள்ளையாக உதவிசெய்தான் நான் பிறந்துவளர்ந்து அக்பர்என்கிறபேரும்பெற்று சகலவிதகல்விகளும்தந்திரங்களும் அறிந்திருக்கிறபோது ஒருபெரியவர்என்னையழைத்து ஒரிடத்திலிருவருமிருந்து எனக்கு அவர்சிலபுத்திமதிகள்சொல்லி பூலோகத்திற்செய்கிரகாரியங்களில் மேன்மையானகாரியம்இரண்டிருக்கிறது அந்தஇரண்டிலொன்று நீசெய்வையேயானால் இருலோகத்திலுமேன்மை கிடைக்குமென்றார்.

அதுஎன்னபாவாவென்று அவரைக்கேட்டேன் அவர்சொன்னது தருமமாவது இபாதத்தாவது இரண்டிலொன்றுசெய்தால்மேலானபதவிகிடைக்குமென்று அவரெனக்குச்சொல்லிவிட்டுப்போய்விட்டார் அப்போதுநானயோசித்ததில் தவஞ்செய்யநம்மால்முடியாது நம்மிடத்தில் பரம்பரையாய்த்தேடினபொருள் அனேகமிருக்கிறபடியால் இதுகளைக்கைகொண்டமட்டுஞ்சிலவுசெய்து தருமவானென்கிறபேர்பெற்றுகொள்ளலாமென்று ஒருமைதானத்தில் ஒருபங்களாக்கட்டி அதற்குநாற்பதுவாசல்வைத்து அதிலிருந்து சக்காத்துமுதலியதர்மம் யாவருக்குஞ்செய்துக்கொண்டிருந்தேன் ஒருநாள்ஒருபக்கீர் முப்பத்தொன்பதுவாசலிலும்வந்து நான்கொடுத்தபொருள்முதலியதும்வாங்கிக்கொண்டுநாற்பதாம்வாசலிலும்வந்துநுழைந்தார் அப்போதுங்கொடுத்து கொஞ்சம்என்மனதில்வெகுளியுண்டாய் அந்தப்பக்கீரைப்பார்த்து நீபக்கீராய்ப்பிறந்தவருக்கு இப்பேர்ப்பட்டஇருசானஆசை ஆகாதென்றேன் அவனுக்குக்கோபமுண்டாகி என்னைப்பார்த்து நீயொருதருமவானாஇன்னதேசத்தில் ஒருபெண்ணானவளிருக்கிறாள் அவள்செய்கிற தருமத்தில அனேகப்பங்கில் ஒருபங்குகூடயிருக்கமாட்டாதென்று உன்னுடைய சவிஸ்தாரமெல்லாம் விஸ்தாரமாகச்சொல்லி நான்கொடுத்தஆடைமுதலியதிறவியங்களையும் என்னெதிரே போட்டுவிட்டு வெளியேபோய்விட்டார்.

அதன்பின்புஅதுகளைக்கேட்டு என்மனதிற்பதிந்துஉன்னூர்தேடிஉன்னிடத்தில்வந்து உனக்குஇவ்விதமான சக்காத்துமுதலியதுசெய்யஎவ்விதமாய்ப்பொருள் கிடைத்ததென்று கேட்கும்படியான ஆசையும் அதுகளைநீசொல்லியதன்பின் என்னுடையஆஜத்தை உன்னிடத்திற்சொல்லி அதைநிறைவேற்றிக்கொள்ளலாமென்றுநாடிஎன்தருபமுதலியதைஎன் தகப்பனருடையமந்திரிவசம்ஒப்பிவித்து அதைநிறைவேற்றும்படியாய்த்திட்டஞ்செய்துவிட்டு அந்நேரமேபிரயாணப்பட்டுதேசதேசங்களையெல்லாஞ்சுற்றி நீயிருக்கிறவூரைத்தேடிவருகையில் இந்தநகரத்தையுங்கண்டு இங்கேகிடக்கிற சகலஅந்தஸ்தையும்பார்த்து இப்போதுஉன்சமுகத்தில்வந்திருக்கிறேன் இதுதான்என்னுடையவரலாறு ஆனபடியினாலே உனதுவரலாற்றையும் இந்தசம்பத்துமுதலியபொருள்

கள்வந்தகாரணத்தையும் எனக்குவிபரமாய்ச்சொல்லி என்ஆசத்தையு
ம்நிறைவேற்றவேணுமென்றேன் அப்போது அந்தசகஜாதிஎன்னும்பெ
ண்ணானவளென்னைப்பார்த்துரொம்பமரியாதையாகத்தலைகுனிந்துதாழ்
மையுடன்சொல்லத்தொடங்கினாள் அதுஎதினாலென்றால்என்னுடைய
வரலாறுகளையெடுத்துவிபரமாய்ச் சொன்னபடியால்அவளென்றுமுன்வ
ந்தவுடனேஎனக்குப்பணியுதவில்லாமலிருந்தவள்இப்போதுமரியாதை
யானஒழுக்கம்வந்து என்னைப்பார்த்து அவள்சொல்லுகிறாள் கேளும்
பாத்துஷாவே நீர்காதுகொடுத்துக்கேட்க்கவேணும் எனதுவரலாற்றை
ச்சொல்லுகிறேன்.

நானுகிறதுஇந்தநகரத்திலிருந்து மூன்றுகாதவழிகளும்அப்புறமி
ருக்கிறபட்டணங்களையாளுகின்ற அமீர்பாத்துஷாவுடையமகள் அவர்க
ளுக்குஏழுபெண்கள்பிறந்திருந்தது அதிலஎல்லோருக்கும் இளையப்
பெண்ணானவள்நான் ஆகையால் நாங்களேழுபேர்களும் பிறந்துவளர்ந்
துபேர்கள்தரித்து ஓதுதல்முதலியபடிப்புகள் படிக்கவைத்து அவரவர்
கள்புத்திகள்தெரிந்து சகலவிபரமுமறிந்திருக்கிறபோதுஎங்களேழுபே
ர்களும்ஒரேவிதமாகிய உடுப்புகளும் பூஷணாதிகள்முதலானதும் அது
போலவேஒன்றுக்கொன்றேற்றக்குறைச்சலில்லாமல் வெகுசிறப்புட
னேயலங்கரித்து சகலவைபவங்களிலுங்குறைவில்லாமல் எங்கள்பாவா
ரொம்பகிருபையாகவைத்துவளர்த்தார் அப்படிவளர்த்துவருகிறநாளையி
ல்ஒருநாள் அலங்காரமெத்தைவீட்டில் எங்களேழுபேர்களுக்குமேழு
சப்பிரமஞ்சங்கட்டிப்போடுவித்து நடுவில்ஒருதகதத்தொன்றுவைத்து அ
தில்எங்கள்பாவாவுட்கார்ந்திருந்து நாங்களேழுபேரும்அவரவரிருக்கு
ம்படியானசப்பிரமஞ்சத்திலிருக்கும்போது எங்கள்பாவாவெழுந்தி
ருந்து எங்கள்தமக்கை மூத்தபெண்ணிடத்தில்வந்து சொல்லுகிறார்

அம்மாஎன்வயிற்றில் நீபிறந்தபடியா லிவ்வளவுவிதங்களாகிய சுக
ங்களனுபவிக்கிறீர்கள் வேறேஎவர்கள்வயிற்றிலாவது பிறந்தீர்களா
னால்இப்பேர்ப்பட்ட சுகத்தையனுபவிப்பீர்களாவென்று கேட்டார் அ
ப்போதுஎன்தமக்கையானவள் நீங்கள்சொல்லுகிறசொல்சரிதான் பா
வாவென்றாள் அதைக்கேட்டுக்கொண்டு இரண்டாவதுபெண்ணிடத்தி
ல்வந்தார் அந்தமூத்தபெண்ணுக்குச்சொன்னமாதிரியா யிரண்டாவது
பெண்ணுக்குஞ்சொன்னார் அந்தப்பெண்ணும்சரிதான்பாவாவென்றா
ள்அதுபோலே ஆறுபெண்ணையுங்கேட்டார் அவர்களாறுபேரும் அவ
ருடையசொல்லுக்குச் சரிதானென்று வொத்துக்கொண்டார்கள் அத
ன்பிறகுஎன்னிடத்தில்வந்து அவர்களைக்கேட்டமாதிரியாய் என்னையு
ம்கேட்டார் அப்போதுநானசொன்னேன கேளுங்கள்பாவா அல்லாகு
சுவானகுத்தஆலா உங்களைப்பிறப்பிக்கிறபோது இவ்வளவுசம்பத்தும

பாத்துஷாத்தனமும் செய்யும்படியாய் உங்களையனுப்பினான் அதுபோலேஉங்களவயிற்றில்நாங்கள்பிறந்து இவ்வளவுசுகங்களை யனுபவிக்கும்படியான எங்களுடைய இரணத்தையும் சகலசம்பத்தையும் உங்கள்வசம்கொடுத்து நாங்களனுபவித்துக்கொண்டுவருகிறோம் ஆகையால்சகலபேர்களும் அல்லாகுசுவானுகுத்த ஆலாகிருபைவைத்துசகலசம்பத்துமுதலியசவுக்கியங்களுங்கொடுக்கத்தகுமேயொழியமற்றஒருவராலே கொடுக்கத்தகாது ஆகையால்தாங்களிவ்விதமாய்ச்சொன்னது தகாதகாரியமென்றுசொன்னேன் அப்போதுஎன்பாவாயென்பேரில்யென்னமாதிரியானகோபங்கொண்டு வருத்தயானாரோ யெனக்குத்தெரியாது அவர்என்னிடத்திலயாதொன்றும் பேசாமற்போய்விட்டார்.

அன்றிரவில்ஒசீனமுதலான பதார்த்தங்கள்தின்று பசியாரிஎப்போதும்போல அவரவர் படுக்கிறயிடத்திற்போய்ப்படுத்து நித்திரைசெய்துவிட்டோம அந்நேரத்தில் என்னென்னவிதங்கள்நடந்ததோ அதுஒன்றுந்தெரியவராது பின்புநித்திரைதெளிந்து முழித்துப் பார்த்தேன்ஒருபல்லக்கில் நான்படுத்திருந்ததாய்த்தெரிந்தது அதைத்துறந்துபார்க்கையில் எங்கேபார்த்தாலும் மைதானமாகவும் அதைச்சுற்றிப்பயங்கரமானகாடாகவுமிருந்தது அப்போதுநானினைத்தேன்நேற்றையதினம்நம்மிடத்தில் பாவாவந்துகேட்டதற்கு அவர்மனம்போலே சொல்லாமல்நாம்உள்ளபடிசொன்னதற்கு அவர்கோபங்கொண்டு பொருக்காமல்இந்தமாதிரியாக நித்திரைசெய்யும்போது பல்லக்கில்படுக்கவைத்துஇந்தக்காட்டினிடமாகக் கொண்டுவந்துவைத்துப்போய்விட்டார்கள்போலேயிருக்குதென்று ரொம்பதுயரப்பட்டு அழுதுசலித்துவியாகூலப்பட்டு அல்லாகுசுவானுகுத்தாலாவை ரொம்பபுகழ்ந்துகொண்டிருக்கையில்சுகபுடையநேரமாச்சுது அந்நேரத்தில்ஒலுச்செய்யத் தண்ணீரும்தொழுகிறதற்கு முசல்லாப்பாயு மிவ்விடத்திலில்லையே இதற்குநானென்னசெய்யலாமென்று எண்ணுதெல்லாமெண்ணித் துக்கித்துகொண்டிருக்கையில் ஒருபக்கீரானவர் அங்கேவந்து ஒருகூசாவிற்றண்ணீருமுசல்லாப்பாயுங்கொடுத்து தொழுதுகொள்ளுங்க ளம்மாவென்று சொல்லிநடந்துவிட்டார்.

அப்போது இதுவும்அல்லாசெய்த கயிரென்றுசுக்கூர்செய்து கூசாத்தண்ணீரையெடுத்து ஒலுச்செய்து அந்தமுசல்லாவைவிரித்து பசறுதொழுது அல்லாவிடத்தில்துவாக்கேட்டு தருவுதோதிக்கொண்டிருந்தேன அப்போதுமுன்வந்தபக்கீர் எனக்குஒசீனமும்தண்ணீரும் கொண்டுவந்துகொடுத்துப் பசியாருமென்றார் அதைவாங்கிப் பசியாரினேன் அந்தஒசீவனமாகிறது என்னுயசிலும் இன்றிருக்கமாட்டேன்அவ்வளவு இன்பமாயிருந்தது அப்படியாகவேளைவேளைக்குக் கொடுத்து

க்கொண்டிருக்கிறார் அந்தயிடத்தில் அவர்ஓசிலனக்கொடுத்து நான்பசியானநேரம்போக மற்றவேளைகளில்தொழுது வணங்கி துவாக்கேட்டு பொழுதைப்போக்கிக்கொண்டிருக்கிறது ஆனால்இன்னமொருவிடத்திற்போயிராமல் அந்தப்பல்லக்கைத்தானே வீடாகவைத்துக்கொண்டு அந்தமைதானத்திலேயேயிருந்தேன அப்போது அந்தப்பக்கீர்சொன்னார்நீயிருக்கப்படுக்க யிந்தப்பல்லக்குப்போதாது உனக்குஒருவீடுகட்டித்தருகிறேன் அதில்நீயிருக்கலாமென்று காட்டுக்குப்போய் மரம்முதலியகழிகள்வெட்டி ஒருசிறியவீடொன்றுகட்டிக்கொடுத்தார்அந்தவீட்டிலிருக்கும்போது எனக்குஓசிலனங்கொண்டுவந்துதந்தவேளைபோகமற்றவேளையெல்லாம் காட்டுக்குப்போய்க் கம்புகழிகளைவெட்டி நானிருக்குமிடத்திற்குக் கொண்டுவந்துசேர்த்தார்.

பின்புநானிருக்கிற வீட்டைச்சுற்றி ஒருநாழிகைவழி தூரத்துக்கு நாலுபக்கமும் அந்தக்கழிகளைநட்டு வேலியடைத்துவிட்டு அவர்நானிருக்கும்வீட்டுப்பக்கத்தில் நாலுமுழ அகலம் ஒருமுழம்ஆழம்மண்வெட்டியால்தோண்டிவிட்டு என்னைவந்துகூட்டிக்கொண்டு அவர்வெட்டினவிடத்தில் அல்லாகுசுவானுகுத்தஆலா வுனக்காகக்கொடுத்த தவுலத்தாகியவாழ்வென்றார் அதென்னபாவாவென்றுகேட்டேன் அவர்சொல்லுகிறார் அந்தக்குழிசுழி ஏழுசெம்புகொப்பறுக்கட்டிகளடுக்கியிருக்கிறது அதுகளில் பலதினுசுநாணயமாக அந்தக்கொப்பறுக்களில்நிறைந்திருக்கிறது ஆனால்இதுதானென்று நீயெண்ணாதே இப்போதுநீயிருக்கிற வீட்டைச்சுற்றியடைந்திருக்குதே அந்தவேலிக்குள் எந்தயிடத்திலேதோண்டிப்பார்க்கிறாயோ அந்தவிடங்களிலெல்லாம் இதுபோலவேஏழேழு கொப்பறுக்களிருக்கிறது இதுகளையெல்லாம் அல்லாகுசுவானுகுத்தஆலா உனக்காகக்கொடுத்திருக்கிறான் ஆகையால்உன்மனதுபோலெப்படிச் செலவுகள்செய்யவேணுமோஅப்படிச்செய்துஉன்பிள்பிள்ளைதலைமுறையாய் கியாமமுடிகிறவரையில்அவரவரெண்ணப்படிசிலவுசெய்தாலு மிந்தகசாணுக்களிற்குறையப்போகிறதில்லையென்று அந்தப்பக்கீர்சொல்லி அந்தப்பள்ளத்திற்கொஞ்சம்மண்ணைத்தோண்டிஅந்தகொப்பறுச்சட்டி மூடியிருந்ததட்டைத்திறந்துக்காண்பித்தார் அதற்குள்தினுசுவாரியாயுள்ள நாணயங்களிருந்தது அதைப்பார்த்துஅடங்காமகிழ்ச்சிகொண்டல்லாகுசுவானுகுத்தாலாவைப்புகழ்ந்துசுக்கூர்செய்தேனப்போதந்தப்பக்கீரானவர்சொல்லுகிறார்தாயேஇனிமேல் நாம்சும்மாயிருக்கலாகாதிவ்விடத்திலொரு வூருண்டாக்கவேணுமென்றுசொன்னார்நல்லதுபாவா அப்படியேசெய்யலாமென்றேன் அப்போதுசிறிது

பணத்தையெடுத்துக்கொண்டு அந்தமைதானத்தையுங்காட்டையுந்தா
ண்டியூர்பதிகளிற்போய் வீடுகட்டும்படியான தச்சர் கொல்லத்துக்கா
ரர்கள் சிற்றாட்கள்முதலிய கணக்கிலடங்காத ஆட்களைக்கூட்டி இவ்வட
ம்வந்துமுன்சொன்ன வெளியடப்பைச்சுற்றி உயர்ந்ததிருமதிலொன்
றுகட்டி அதற்சூரங்கவாயில்வைத்து அந்தத்திருமதிலைச்சுற்றிஏழுசுற்
று அரண்மனையொன்றியற்றி அந்த அரண்மனைவாசலுக்கெதிரில் ஒரு
மாலொன்றுகட்டி அனேகம் ரவுணதெருவுகளைறம்படுத்தி அதுகளுக்
கெல்லாம் விசித்திரமானமேல்மாடகூடமுதலிய வீடுகளமைத்து அ
னேகசத்திரஞ்சாவடியென்னும் பங்களாக்கட்டி ஊரைச்சுற்றிக்காதவ
ழிக்கப்பால் ஏழுபங்களாக்கட்டி இதுகளிலெல்லாம் தருமங்கள்செய்யு
ம்படியான யேற்பாடுசெய்து அதுகள்குறைவில்லாமல் நாளுக்குநாள்
விர்த்தியாகிதேசதேசங்களிலுள்ளயேழைகள்மிஸ்கீன்கள்போகிறபே
ர்கள் வளருகிறபேர்கள் இவர்களெல்லாம அவரவரிஷ்டமானபடி இந்
நகரத்தில்கட்டியவீடுகளிலெல்லாம் குடியேறிநான்கொடுக்கப்பட்டதி
னுமுதலிய தருமங்களைப்பெற்று அவரவர்கள்பாத்துஷாக்கள் அடை
யும்படியான மகிழ்ச்சியடைந்துசுகத்துடனே யிருக்கிறார்கள் ஆகை
யால் இவ்விதங்களெல்லாம் செய்துமுடித்த பக்கிரானவர் ஊர்பஸ்தி
யாய்விட்டவுடனே யென்னைப்பார்த்து தாயே நீசுகமாக சகலசம்பத
தையும் அனுபவித்து உன்னிஷ்டப்படியாய்ச் சிலவுசெய்திருமம்மா
வென்றுசொல்லி அவர்போய்விட்டாரவரைகாணிமனமொருதரம்பா
ர்க்கவேண்டுமென்கிற அபேட்சைரொம்பவுமிருக்கிறது அவரெங்கேபோ
ய்விட்டாரோ தெரியவில்லை அதன்பின்பு இவ்வளவு கட்டடங்கள்முத
லிய வேலைகள்செய்தும் சிலவு பண்ணியும் அந்தந்தப்பணங்கள் எவ்வ
ளவென்று அந்தச்சுரங்கத்தின்வழியேபோய் அவர்தோண்டிக்காண்பி
த்தஏழுடுக்கு சட்டிபணத்தில் அனாவாசி சிலவழிந்திருக்கிறது ம
ற்ற அனாவாசியிலிருக்கிறது அப்போது காணினேத்தேன் இந்தப்பண
ங்களெல்லாம்எவ்விதமாய்ச்சிலவழியுமென்றுயோசித்து இன்னம்மே
லாகிய சக்காத்துஎன்னும்தருமங்கள்செய்யவேணுமென்றுயெண்ணிக்
கொண்டிருக்கிறேன் ஆகையால் மேற்சொல்லியபடிவந்த தவுலத்தெ
ன்னும் சம்பத்தேயொழிய வேறேசம்பத்தில்லை யென்று பின்னுஞ்
சொல்லுகிறாள் இவ்விதமாகியதவுலத்தைப் பெற்றுதருமத்தைச் செ
ய்து அதிகமகிழ்ச்சியோடிருக்கிறதை யென்தகப்பனாருடையநகரத்தி
லுள்ள ஏழைமிஸ்கீன் குடிபடைகள்முதலிய யாவர்களும் இந்நகரத்
தில்வந்துதருமமுதலிய இனுங்களைப்பெற்றுக்கொண்டு திரண்டசீ.ர
ளுகி அந்நகரிற்போயிருந்து எனதுபிரபல்லியத்தை முக்கியப்படுத்
திக் கொண்டிருக்கிறதைஎன்தகப்பனாகிய அமீர்பாத்துஷாவும்மந்திரி
யுங்கேள்விப்பட்டு அவர்கள்யோசனைசெய்து நம்மிடநகரைச்சுற்றினு

ம் காடுகளும் மைதானங்களுமாயிருந்ததேயொழிய வேறேஊர்பதி
யொன்று மில்லாதிருக்க இப்போது என்னுத்திரவில்லாமல் யாரோஒ
ருவர்புதிதாக நகரமுண்டாக்கி அனேகந்தருமமுதலிய இனங்கள்செ
ய்கிறதாய் நமதூரிலுள்ளவர்கள் பிரபல்லியஞ்செய்கிறபடியால் நமது
உத்திரவில்லாமற் செய்து வருவதற்காகஅந்நகரத்தைக்கைப்பிடித்து
நம்முடையவசப் படுத்திக்கொள்ள வேண்டியதாயிருக்கிற தென்று தீர்
மானித்துஅவர்படைகளாகிய நால்வகைச்சேனைகளையுங்கூட்டிக்கொ
ண்டு இந்நகரத்தைச்சுற்றி வளைத்துக்கொண்டார்கள் அப்போது அ
வர்களுடனே எதிர்த்துச்சண்டைசெய்கிறதற்கு பலமில்லாதவளாயி
ருந்தேன் அதனாலென்றால் வந்திருக்கிறவர் என்தகப்பனுடைய படி
யினாலும் நாம்ராசாங்கம்செய்யாமல் தருமமுதலிய இனங்கள்செய்து
வருவதாலும் சும்மாயிருந்துவிட்டேன் அப்போதவர்கள் வேண்டிய
ஆடம்பரஞ்செய்தார்கள் அதற்குஇந்நகரத்திலுள்ளவர்கள் ஒருவரா
கிலும் ஏனென்றுகேட்பாரில்லை அப்போதுஎன்தகப்பனும் மந்திரி
யும்யோசித்து நாம் இவ்வளவுஆடம்பரஞ்செய்தும்எதிர்த்துவருகிறவ
ர்களைக்காணோம் இந்நகரத்திற்குஅரசனில்லாமலிருக்கிறதுபோல்தெ
ரிகிறது ஆனபடியால்இதுகளையெல்லாம் விசாரித்துபின்னிட்டுயோச
னைசெய்யவேண்டியதா யிருக்கிறதென்று சிலதூதுவர்களையனுப்பினா
ர்கள் அவர்கள்வந்துநாம் மாளிகைவைத்திருக்கிறசர்தாரிடத்தில் வந்து
விசாரித்தார்கள் அப்போது அவர்இவர்கள் வந்திருக்கிற ஆடம்பரத்
தைக்கும்த்து காகிதமெழுதி யென்னிடத்திலனுப்ப அதைநான்பார்த்
து அதற்குப்பதில்நானெழுதினது தாங்கள்வந்திருக்கிறதுசரியே இந்
நகரத்துக்குஎஜமானியாகிய நான்பெண்ணாயிருப்பதால்உங்களைவந்து
கண்டுபேசமுடியாமையாயிருக்கிறது ஆகையால் தங்கள்நாயகியாகிய
அந்தம்மாளையுமிவிடம்தருவித்து எனதரண்மனைக்குள்நீங்களிருவரு
ம்வந்தால் நானும்நீங்களும்கலந்து சிலபேச்சுகள்பேசவேண்டி யிருக்
கிறது அதன்பிறகுஉங்களுடைய யுக்தாயுக்தம் எப்படியிருக்கிறதோ
என்றுரொம்பதசலீமமுதலியவந்தனம் யென்னும்வணக்கத்துடனேயெ
ழுதிமடித்துசர்தாருக்குஅனுப்பிவிட அந்தசர்தார்இந்தக்காகிதத்தை
வாங்கிவந்ததூதுவர்கையிற்கொடுத்துஉங்கள்பாத்துஷாவிடத்திற்கொ
ண்டுபோய்கொடுங்களென்றனுப்ப அவர்கள்பாத்துஷாசமுகத்திற்குப்
போயிக்கடிதத்தைககொடுக்க அதைஅமீர்பாத்துஷாவாங்கிமுகரை
யுடைத்து வாசித்துப்பார்த்து இதென்ன அதிசயமாயிருக்கிறது நம
துநாயகியையுங்கூடகூட்டிவரச்சொல்லியிருக்கிறதைப்பார்த்தால் இ
தில்எதோஒருகாரியமிருக்கிறது என்றுயோசித்து சிலதூதுவர்களைப
சரநகரத்துக்கனுப்பி அந்தப்புரத்திலிருக்கிற தனதுநாயகியை அழை
த்துவரும்படியாய்ச்சொல்ல அதுபோலவேயிந்தத்தூதுவர்கள் போய்
தாதிகளுக்குச் சொல்ல அவர்கள்தனது எஜமானிக்குச்சொல்லஅவர்
கள்மூடுபல்லக்கிலேறி பாத்துஷாவிருக்கிறகூடாரத்தில் வந்துசேர்ந்
தார்கள் உடனேஒராளனுப்பி யெனதுதாயும் என்பாவாவாகியபாத்
துஷாவும்என்னிடம் வருகிறதாகத்தெரிவித்தார்கள் அப்போது அவர்
களைவரும்படியாய் உத்திரவுகொடுத்து விட்டு அவர்களுக்கு நான்

செய்யவேண்டிய மரியாதைக்கான முயற்சிசெய்திருந்துக்கொண்டு அ
வர்களிருவரையும் ரொம்பவும்மரியாதையுடனே அழைத்துவரும்படிச
ர்தாருக்குஉத்தரவனுப்ப அந்தச்சர்தார்அனேகம்பேர்கள் சூழவந்தா
ய்தகப்பனிடத்திற்குப்போய் அழைத்துக்கொண்டு வந்தார்கள் அப்
போதுகூடவந்தபேர்களும்சர்தாரும் அரண்மனைவாசலுக்குவெளியே
நின்றுவிட்டார்கள் என்தாயும்தகப்பனாரும் அரண்மனையிலுள்ளே வ
ருகிறார்கள் அப்போது முதல்வாசல்மண்டபத்தில நானேமித்திருந்த
தலைமைப்பெண்ணானவளும் அவளைச்சூழ்ந்த தாதிமார்களனைவர்க
ளும் இவர்களை எதிர்கொண்டுபோய் அவர்களுக்குவந்தனமுதலியதுஞ்
செய்து அவர்களுக்குக் கைலாகுகொடுத்து இரண்டாம்வாசலுக்குவ
ந்தார்கள் அந்தஇரண்டாம்வாசலிலிருக்கும மண்டபத்திலுள்ள பெண்
களும் எதிர்கொண்டு மரியாதைசெய்துவர இவ்விதமாய்ப்பனிரண்டு
வாசலிலுமுள்ள பெண்களெல்லாம் எதிர்கொண்டுபோய் அவர்களிரு
வரையும் அழைத்துக்கொண்டு இப்போதுநாமிருவருமிருக்கிற இந்த
சபாமண்டபத்துக்குவர இவ்விடத்திலுள்ள பெண்களும் நானுமாக
வெழுந்துபோய் அவர்களுடையபாதங்களில்விழுந்து அதபுடனேயெ
ழுந்து ரொம்பவும்புகழ்ந்து இருவரையும்நான்ஆவலாகக்கட்டித்தழுவி
இப்போதுநானிருக்கிற சிம்மாதனத்தில் அவர்களிருவரையும் அழைத்
து உட்காரவைத்து மிகுந்தமரியாதையுடனே அவர்களெதிரில் வாய
பொத்திகைகட்டிக்கொண்டு நிற்கிறபோதுஎன்பாவாவாகிய அமீர்பா
த்துஷாயென்னைப்பார்த்து நீயாகிறது எந்ததேசம் இந்நகரம்எவ்வித
மாய்என்உத்திரவில்லாமல் செய்துமுடித்தாய் நீசெய்கிறகார்காணுக்க
ள் ரொம்பவிஸ்தீரணமாயிருக்கிறது இதுகளையெல்லாம் சவிஸ்தாரமா
ய்ச்சொல்லவேண்டுமென்று கேட்டார்

அப்போது அவர்களுக்குஎன்சவிஸ்தாரமெல்லாம் சொல்லினே
ன் அதுயென்னவென்றால பாவாநானாகிறது உங்களுடைய ஏழுகுமார
த்திகளில் இளையகுமாரத்திஎன்றேன அப்போதவர்க ளிரண்டுபேரு
ம் திடீலென்றெழுந்துவந்து என்னைக்கட்டித்தழுவி முத்தமிட்டு இரு
வருந்தூக்கி இந்தச்சிம்மாதனத்திலிருக்கும்படிமத்தியில்வைத்துஒரு
சாமமவரையில் அடங்காமகிழ்ச்சியாய் ஆனந்தக்கடலில்மூழ்கிஎழுந்து
வாழ்த்தி மகளே உன்னைக்கானகத்திலகொண்டுபோய்விட்டுவரும்படி
யாய்ச் செய்துவிட்டேன் அவர்கள கொண்டுவந்து விட்டுவந்ததின்
பிறகுநீ எவ்வாறுப்போய்விட்டையோ என்கிறசஞ்சலஸ்தாபமாய் நாங்
களிருவரும் நினைத்துநினைத்து வருந்திக்கொண்டிருக்கிறோம் ஆகையா
லஉனக்குஇவ்விதமாகிய தவுலத்துஎவ்விதமாய்க்கிடைத்தது அதுஎங்
களிருவர் மனக்குளிரும் படியாய்ச் சொல்லவேண்டுமென்று
என்பாவாகேட்க நான்சொன்னதாவதுநீங்கள்நம்மிட அரண்மனையிரு
க்கும்போது என்தமக்கைமார்களையுமென்னையும்உங்களாலே சகலபெ

ருமையும்பெற்று சுகத்துடனேயிருக்கிறீர்களென்றுகேட்டீர் அதற்கு எனதுதமக்கைமார்களிருவரும் உங்கள் கௌரலத்துக்கு ஒத்துக்கொண்டார்கள்நான் உள்ள நடத்தையைச்சொன்னேன் அதற்குத்தாங்கள் கோபங்கொண்டு என்னைக்கானகத்திற் கொண்டுபோய் விட்டுவிடும்படியாய்ச் சொன்னீர்கள் அதுபோலே அவர்கள் பல்லக்குடனே நாமிப்போதிருக்கிற விடத்தில் வைத்துவிட்டுப்போய்விட்டார்கள் நானுமுழித்துப்பார்க்கையில் பல்லக்கிலிருப்பதாய்த்தெரிந்து அதைத்திறந்து பார்த்தேன விடிகிறநேரமாயும் கொஞ்சமிருளாயுமிருந்தது அந்நேரத்தில்வெளியேவந்து அல்லாகுசுவானுதத்த ஆலாவைப்புகழ்ந்துவருந்தி ரொம்பவுந்துக்கித்து பின்புநமது நசீபென்னும்விதியின்படி நடக்குமென்று மனந்தேறித் தொழுகிறதற்காக ஒலுச்செய்யவேணுமே அதற்குத்தண்ணீரும் முசல்லாப்பாயுமில்லையேஇதற்கென்னசெய்வோமென்று புலம்பிக்கொண்டிருந்தேன் அந்நேரத்தில் ரொம்பவிர்த்தசப்பியுள்ள ஒருபக்கீர் கூசாவிற்றண்ணீரும்முசல்லாப்பாயும் கொண்டுவந்துகொடுத்து ரொம்பவுமரியாதைசெய்துப்போய்விட்டார் நான்ஒலுச்செய்துதொழுது தருவூதுஓதிக்கொண்டிருக்கும்போது அவர்ஒசீபனமுதலிய குடிப்புக்கொண்டுவந்து கொடுத்தார் அதைவாங்கிப்புசித்து பல்லக்கில்தானேயிருந்தேன் அவர் வேளைவேளைக்கு ஊண்முதலியதுங்கொடுத்து இந்தப்பல்லக்கைச்சுற்றி வீடொன்றுகட்டி அதைச்சுற்றிஇரண்டு நாழிகைதூரத்தில்கம்புகளால்வேலிக்கட்டி பின்பு திரவியங்களிருக்கிற இடத்தையுங்காண்பித்து இந்நகரத்தையுமுண்டுபண்ணி தருமமுதலியயினுங்கள் என்மனம்போல செய்யும்படியாய்ச் செய்து விட்டுஒருவருஷமிங்கேயிருந்து போய்விட்டாரென்றுஎன்பார்வாயிடத்திற் சொன்னேன் அப்போதவர்களிருவரும்தாயேஉன்னுடைய பொருளிருக்கிறசஜானவைக்காண்பிக்கவேண்டுமென்றார் அவர்களைக்கூட்டிக்கொண்டுஅந்தப்புதையலிருக்கும்சுரங்கத்தின்வழியேபோய் அந்தஏழுகொப்பரைச் சட்டியையுங் காண்பித்து அதிற்சிலவழிந்தது போக மற்றபாதியைப்பார்த்து ஆனந்தமகிழ்ச்சியடைந்துநின்றார்கள்.

அப்போதுநான்சொன்னேன்பார்வாயிந்தரெண்டுநாழிகைவழியுள்ளமைதானத்தைச் சுற்றியிருக்கிறமதிலுக்குள் எந்தவிடத்திலாவதுஒருமுழஆழத்துக்குள்தோண்டினால்இதுபோலேஏழுசட்டியிருக்கிறது அப்படிஇந்தமைதானமுழுவதும எவ்வேழுசட்டி திரவியங்களைக்கிடடங்காமலிருக்குதென்றேன் அப்போதுஎன்பர்வா ஒருநாள்மகிழ்ச்சியாயிருக்கிற காலத்தில் இந்தமைதானத்தில் அவர்நினைத்தவிடத்தி லெல்லாந் தோண்டிப்பார்த்தார் நான்சொன்னபிரகாரம் எவ்வேழுசட்டியிருக்கக்கண்டு இந்தபூலோகத்தில் எவர்களும் அடையாத மகிழ்ச்சியடைந்திருந்தார்கள் அப்படியிருக்க நாங்கள்மூவரும்இந்தக்கேசரிமண்டபத்தில வந்துவேறேயொருமண்டபத்திற்போய் அனேகவிதமாகிய முப்பத்திரண்டுபளபாகத்துடனேபோசனமுதலிய ஒசீபனமுருந்திதாம்பூலந்தரித்து களபகஸ்தூரிகள்பூசி இந்தசபாமண்டபத்திலிருந்துச

தார்முதலியதுநடத்தியிருக்கையில்என்பாவாயென்னைப்பார்த்ததாயே
நீசொன்னதற்காக கோபங்கொண்டு உன்னை தனியே விடும்படியாய்ச்
செய்த குற்றத்திற்காக அல்லாகுத்த ஆலா என்னசெய்வாரோ தெரி
யவில்லை இப்போதுகடலைத்திடலாக்கவும் காட்டை ஊராக்கவும்வலி
யோரைஎளியோராக்கவும் எளியோரை வலியோராக்கவும்மிஸ்கீனைப்
பாத்துஷாவாக்கவும் பாத்துஷாவைமிஸ்கீனாக்கவும்அல்லாகுத்தஆலா
ஒருவனுக்கேதகும் ஆகையாலவனைமறந்து நான்செய்தஅபசாரத்தைதநீ
பொறுத்து எனக்காக துவாக்கேட்கவேணுமென றுசொல்லி என்னை இ
ந்நகரத்திற்கே அரசியாக்கிஎனக்கு சகஜாதிஎன்கிற பேர்கொடுத்துயிங்
கேயிருக்கும்படிச் செய்து அவர்கள்சேனசமுத்திரத்தோடு என்தாயும்
தகப்பனும்பிரயாணப்பட்டு பஜராநகரத்தை யடைந்து யரசாட்சிசெ
ய்துக் கொண்டிருக்கிறார்கள் அவர்களுக்குஎன்னைப் பார்க்கவேணுமெ
ன்று மனமுண்டானபோதெல்லாம் அவர்கள்வந்துபார்த்துக்கொண்டு
போகிறது ஆகையாலஇதுதான் என துவரலாறென்று சொன்னாள்.

அப்போதுநான் அல்லாகுத்தஆலாவைப்புகழ்ந்து ரொம்பவும்மரி
யாதையுடனே அந்தப்பெண்ணைப்பார்த்துச்சொன்னேன் கேளும்பெ
ண்கள் நாயகியே என்னுடையஆஜத்தைச்சொல்லுகிறேன் அதைக்கே
ட்டு என்மனதிற்குக்குறைவுவராமல் நடக்கவேண்டியது அதென்ன
வென்றால் இந்தப்பூலோகத்தில் அல்லாகுத்தஆலா சகலமனிதர்களையு
ம்ஆண்பெண்என்றுபடைத்துச்சோடுசோடாயிருக்கும்படியா யுண்டா
க்கியிருக்க நீயாகிறதுதனியாயிருப்பது சரியல்லஆகையால் நானு
ன்னைக்கலியாணமென்னும் நிக்காகுசெய்துக்கொள்ளுகிறேன் அதற்கு
நீ கபூல்என்னும்ராஜிபடவேண்டியது ஆனபடியாலிதுதானென்னுடை
ய ஆஜத்துஇதைநிறைவேறும்படியான வேலையுன்பேரிற் கடனாகயிரு
க்கிறதென்றேன்அப்போதுஅவள்யோசித்து மெத்தவும்பரிதாபப்பட்
டுமனந்தேறிஇனிநாமிந்தவார்த்தைசரியல்லவென்று சொல்வோமானா
ல்நாம்செய்துவருகிறதருமத்துக்கூனமாகிறதுந்தவிர அவர்சொல்லுகி
றஆஜத்தும் நிறைவேறப்போகிறதில்லையென்றெண்ணிச்சொல்லுகிறா
ள் கேளும்பாத்துஷாசிரோமணியே உம்முடையஆஜத்துப்போலேநீர்
என்னை நிக்காகுசெய்துக்கொள்ளராஜியாகினேனெனக்குநீ என்னமக
ர்கொடுக்கிறீரென்றாள் அப்போது நான்அந்தப்பெண்ணைப்பார்த்து எ
ன்னமகர்வேணுமென்று கேட்டேன் அதற்கவள்சொல்லுகிறாள் கே
ளும்பாத்துஷாவேநான் கேட்கப்போகிற மகர் பணங்காசுகள் சீமைபூ
மிகளொன்றுமல்ல எனக்குஒருகாஜத்துண்டு அந்தகாஜத்தை நீர்நிறை
வேற்றிக் கொடுப்பீரானால் அதுதான்நீர்கொடுக்கிற மகரென்றாள்அப்
போதுஅதுஎன்னகாஜத்துசொல்லென்றுகேட்டேனதற்கவள்சொல்லு

னுள் இந்தவூரிலிருக்கிற சவுக்காரெல்லாம் திநுசுவாரியாகிய வியா பாரங்களையாகக்கொண்டு பலபலதேசங்களுக்குப்போய் வியாபார முதலிய வர்த்தகஞ்செய்துவருவார்கள் அவர்கள்வந்தவுடனே அங்கங் குநடக்கிறஅதிசயங்களையெழுதி என்சர்தார்வசங்கொடுப்பார்கள் அது என்னிடத்தில்வரும் அதுகளைவாசித்து மகிழ்ச்சி அடைந்திருப்பேன் அப்படியிருக்கஒருநகரத்திற்குப்போய் அங்கேநடக்கும் அதிசயத் தைவிபரமாயெழுதி இவ்விடம்வந்தவனெனக்கு அனுப்பிவைக்க அந்தக் கடிதப்பிரித்துப்பார்க்கையில் அதிலிருந்த அதிசயத்தைப்பார்த்தும் ரொம்பவும்விசனமுண்டாகி எனமனதில்யோசித்ததாவது இந்தவிரதத் தையெவர்களாவது அந்ததேசத்திற்குப்போய் அங்கேநடக்கிறஅதிசய த்தைப்பார்த்து அதுஇன்னசமயுக்காநடக்குதென்றுவிசாரித்துத்தெரி ந்துவந்துசொன்னபேருக்கு நாமமனைவியாகிறதென்றுறுதிப்படுத்தி யிருக்கிறதுஆனபடியால்நீர் அந்ததேசம்போய் அங்கேநடக்கிற அதிசயத் தைக்கண்டுஇவ்விடம்வந்துசொன்னீரானால்பென்ஆஜக்குநிறைவேறுமெ ன்றுன் அப்போது நான்கேட்டேன்அந்ததேசத்திலநடக்கிறஅதிசயமெ ன்ன அதைவிபரமாய்ச்சொல்லென்றேன் அப்போதந்தஅதிசயத்தை ச்சொல்லுகிறாள்.

அந்தவூரில் வருஷத்திற்கொருதரம் ஒருமைதானத்தில்அங்குள்ள சனங்களெல்லாம் வந்துகூடுவார்களாம் அப்படிக்கூடியிருக்கிற சனங்க ள்மத்தியில் ஒருகாப்பிரிப்பையனுக்குக்கரும்புள்ளி செம்புள்ளிகுத்தி அவன்கையில சகலபுட்பங்களையும்ஒருசெண்டாகக் கட்டிக்கொடுத்து ஒருமேடையில்நிறுத்தியிருக்கிறதாம் அப்போதந்தபையன் அந்தப் பூச்செண்டை கூடியிருக்கிறசனங்களுக்கெல்லாம் காட்டுகிறது அவர்க ள் பார்த்தவுடனே ரொம்பவிசனப்பட்டு அழுதுக்கொண்டிருக்கிறதாம் அந்நேரத்தில் அந்தவூரையாளுகிறஇராசனுடையகுமாரன் ஒருபெரு மைமாட்டிமேலேறிக்கொண்டு ஒருமலைபக்கில் வருகிறானாம் அவன்கை யிலொருசாட்டிக்கோலிருக்கிறது அக்கோலாலந்தமாட்டையடிக்கிறது அடித்தவுடனே ஒருஆங்காரமாகியசத்தங்கிளம்புகிறது அந்தவொலி கேட்டவுடனே மலைகளமரங்கள் மண்ணுகள் முதலானதுகளெல்லாம் கிடுகிடென்றுநடுங்குகிறது அப்போது கூடியிருந்தசனங்களெல்லாம் இராசாளியைக்கண்டபட்சிசாதிகளைப் போலகீழேவிழுந்துஸ்மாணைத ப்பிக்கிடக்கிறது அந்தவேளையில்இராசகுமாரன்இரண்டுகண்களிலும் நெருப்புப்பொறிபறக்கும்படியாய்ஆங்காரங்கொண்டுஇந்தக்கூட்டத்தி ல்வந்து இந்தக்காப்பிரிப்பையனை இருதுண்டாகவெட்டி விட்டுமற்றப் பேர்களெல்லாம இறந்துபோனார்களென்றெண்ணி வந்தவழியேபார்த் துத்திரும்பிப்போய் மலையைக்கடந்துதானிருக்கும்படியானஒருமைதா னத்தில் மாளிகையொன்றிருக்கிறதாம் அதில்நுழைந்துமாட்டைவிட் டுக்கீழிறங்கிஅந்தமாட்டைமாளிகைமத்தியில்நாலு இரும்புத்தூண்கள் நாட்டியிருக்கிறதாம்அதில மாட்டின்காலைநான்குதூணிலு மிழுத்துக்க ட்டிகையிலிருக்கிறசாட்டியினாலே அதனுடையதோல்சதைகள கிழியு ம்படியாயடித்து அந்தமாளிகையைவிட்டுவெளியேபோய்விடுகிறானாம ஆனபடியாலவன் என்னசபப்புக்காகவோ இவ்விதமானவேலைசெய்கிறான்

அதன்விபரம்யாருக்குந்தெரியாதபடியால்தாங்களன்னகரத்திற்குப்போய் அவன்செய்கிற நடத்தையையின்னவிதமென்று தெரிந்துயெனக்குச்சொல்வீரானால் அதைபேமகராசவொப்புக்கொண்டு அவள்சொன்ன ஆஜக்துப்பிரகாரம் விஜாரித்துவருகிறேனென்று பிரயாணப்பட்டு அந்நகரத்தைவிட்டுப்புறப்பட்டு வெளிபேவந்துகாடுமலைவனம்வனாந்தாங்களைக்கடந்து சிலசிலபட்டணங்களிலெல்லாம் தங்கியிருந்துகொஞ்சநாளைக்குப்பிறகு நீம்ரோஸ்பட்டணம்போய்ச்சேர்ந்தேன் அந்தப்பட்டணத்திலுள்ளபேர்களை இந்நகரில்ஏதாவொரு அதிசயம் நடக்கிறதாம் அதுநிஜந்தானோவென்றுகேட்டேன் அவர்கள்சொன்னது ஆம் நிஜந்தான் இன்னம்மூன்றுமாதமிருக்கிறது அதன்பிறகுஅந்தவேலைநடக்குமென்றார்கள் அப்போது அந்தநாள் வருகிறவரைக்கும் நானிருக்க ஒருஜாகை வேண்டுமேயென்று ஒருவரிடத்தில் உண்பனதின்பனைக்காக சிலபொருள்களைக்கொடுத்து வேளைவேளைக்குப் பசியாரியபின் அந்நகரங்களைச்சுற்றிப்பார்த்துக்கொண்டு சிலமனிதர்களிடத்தில் அந்தராசகுமாரன்செய்கையை விசாரித்ததில் ஒன்றுந்தெரியாமலிருந்தது அப்படியிருக்கையில் அந்தநாள்வந்துவிட்டதால் அந்தவூரிலுள்ளசகலத்திராளும் அல்லகல்லோலப்பட்டு ஒரேமாதிரியான வுடுப்புகளுடுத்திக்கொண்டு பட்டணத்துக்குவெளியிலிருக்கிற மைதானத்திற்போய்க்கூடினார்கள் நானும் அவர்கள்மாதிரியாயுடுப்புகளுடுத்திக்கொண்டு அந்தக்கூட்டத்திற்போய்க் கலந்திருந்தேன் அப்போது ஒருகாப்பிரிப்பையன் ஜவானாயிருக்கிறான் அவனுக்குககரும்புள்ளிசெம்புள்ளிகுத்தி பலவர்ணமான வுடுப்புகளுடுத்தி இன்னவிதமென்றுசொல்லாதபுட்பங்களையெல்லாம் ஒருசெண்டாகக்கட்டி அவன்கையிற்கொடுத்து இந்தக்கூட்டங்கள்கூடியிருக்கிறமத்தியில் நாலுமுழவுயரத்திலொருமேடைபோட்டு அந்தமேடையினடுவில் அப்பையனைநிறுத்தி அவன் இடுப்புமட்டுக்கும் அவனைச்சுற்றிஇரும்புக்கம்பிகளைநாட்டிசங்கிலிகளாற்கட்டி இடம்வலம்அசையாமல் நிறுத்தியிருக்கிறது அப்போது அவ்விடத்திற்கூடியிருக்கிற மனிதர்களுக்கெல்லாம் அவன்கையிலிருக்கிற பூச்செண்டைக்காண்பித்தான் அப்படிக்காண்பித்தவுடனே அங்குள்ளபேர்களெல்லாமரொம்ப மனவுருத்தத்துடனே யழுதார்கள் நானுங்கூட அழுதேன் அச்சசமயத்தில் இந்தக்கூட்டங்கூடியிருக்கிறவிடத்தில் இருந்தொரு கூப்பிடுகிறதூக்கப்புறம் இரண்டுமலைகளிருக்கிறது அந்தமலைகக்கிடையில்ஒருசத்தமானது பேரிடியிடித்ததுபோல கேட்டது அந்தச்சத்தங்கேட்டவுடனே மலைகள்பூமிகள்மற்றுமுள்ள வஸ்துக்களுங்கிடுகிடென்றலைந்தது அப்போது இங்கேயுள்ளமனிதர்களெல்லாமயங்கிஸ்மரணைதப்பி கீழேவிழுந்துவிட்டார்கள் நானும்அவர்களைப்போல் விழுந்துவிட்டேன் அந்தவேளையில் அந்தஇராசகுமாரன் ஒருபெருமைக்கடா

விலெறி ஒருபட்டா கத்தியைக்கையிற் பிடித்துக்கொண்டு ஒருசிம்பத்துக்குச்சரியான ஆங்காரங்கொண்டுதனது இரண்டுகண்களிலும் நெருப்புபொறிபறக்கும்படியாய்முகம்வேறுபட்டவனாய் அதிசீக்கிரத்தில்வந்து அந்தகாப்பிரிப்பையனை ஒருவீச்சிலிரண்டுதுண்டாகவெட்டிமற்றப்பேர்களெல்லாம் இரந்துவிட்டதா யெண்ணிவந்தவழியே திருப்பிக்கொண்டு போய்விட்டான்பின்புநினைவுவந்து முழித்துப்பார்க்கையில் அந்தக்காப்பிரிப்பையனை இரண்டுதுண்டாய்வெட்டிக்கிடக்கிறது அங்கேகூடியிருந்தவர்களெல்லாம் அவரவர்களுக்குநினைவுவந்து எழுந்து அந்தமிம்ரோஸ் பட்டணம்போய்ச் சேர்ந்தார்கள்,

அப்போதுநான்ரொம்பவிசனப்பட்டுநாம் வந்தவேலைமுடியாமலிருக்கிறதே அந்தஇராசகுமாரன் எப்படிப்போனானோ அதுவும் நமக்குத்தெரியவில்லையே இதிநாம்யென்னசெய்கிறது இன்னம்ஒருவருஷம்கழித்துஇராசகுமாரனிந்தவேலை நடத்தும்போது அவனைக்கண்டுசேழ்க்கவேண்டியதாயிருக்கிறதென்று நாளைப்போக்கிக்கொண்டுஅந்தவூரிலேயே யிருந்தேன் அப்படியிருக்கையில் அந்தஒருவருஷமுங்கழித்துஅந்தநாள் வந்தவுடனே முன்சொன்னதுபோலக் கூட்டங்கூடினார்கள் இன்னமொருகாப்பிரிப்பையனைக் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது அந்தக்கூட்டத்தில்நானும் போயிருந்தேன் அந்தப்பையன்பூலைக்காண்பித்தான் யாவர்களும் அழுதார்கள்நானும்அழுதுக்கொண்டிருக்கையில் முன்சொன்ன மலைக்கிடையில் சத்தங்கேட்டது அது என்னசத்தமென்றால் அந்த இராசகுமரான் ஒருகையிலகத்தியும்ஒருகையில்சாட்டியும் பிடித்துஅந்தச்சாட்டியினால் அவன்ஏறிவருகிறமாட்டைஆங்காரங்கொண்டடித்தான் அதுவீறிட்டுச்சத்தம்போட்டது அந்தச்சத்தத்தினாலே சகலமும்கிடுகிடென்றதிர்ந்தது அப்போசகலமானபேர்களும் பூமியில்பாய்ப்படுக்கலாய்ச் சாய்ந்துவிட்டார்கள் அப்போது நானமுந்தினவருஷத்திலும் பார்த்திருந்த படியினாலே மனத்தைரியமாய் அவர்களோடே நானும்சாய்ந்துபடுத்துக்கொண்டு இராசகுமாரன்வருகிறஆரபாரத்தைப்பார்த்துக் கொண்டிருக்கையில் அவன்வந்தவிதம்இன்னவிதமென்று சொல்லி முடியாது ஆங்காரத்துடனேவந்து அந்தக்காப்பிரிப்பையனைத் தன்கையிலிருக்கிறகத்தியினாலேஒரேவெட்டாய்வெட்டிஅவன்தலைகீழ்விழுந்தவுடனே அந்தஎருமைமாட்டைத்திருப்பிவந்தவழியே யோட்டிப்போகிறான் அவன்வந்த கோபத்திலே அரைவாசிதணிந்துபோய்விட்டது அப்போது அங்கேவிழுந்திருக்கிறமனுஷர்களுக்கெல்லாம் முன்னேநானெழுந்து அவன்போறவழியைப்பிடித்துஇரண்டுமலைக்குமத்தியிற்போயந்தமலைகளைத்தாண்டி ஒருமைதானத்திற்குப்போகிறான் அப்போதுநானும் அவனைவிடேன்தொடேனென்றுகால்மயிலுக்கிப்புறம் நான்போகிறேன் அந்தவேளையில்அவனுக்குமுக்கால்வாசிக்கோபந்தணிந்தது அப்படி தணிந்துப்போகிறவன், நான்தொடர்ந்து போகிறதைத் திரும்பிப்பார்த்தான் பார்த்தவுடனே அந்த

எருமைக்கடாவைத்திருப்பி என்சமீபத்திலவந்து என்னைவெட்டுவதற்கத்தன்கையிலிருந்த பட்டாக்கத்தியைஓங்கிவீசினான் அந்தச்சமையத்தில்என்தலையைசாய்த்துஎன்னைஒ[illegible]வெட்டாய்வெட்டிப்போட்டாயேயானால்எனதுதுன்பந் தலைந்துபோகுமென்றுசொன்னேன் அப்போது அந்தஇராசகுமாரனுக்கு முக்கால்வாசிகோபந்தணிந்திருப்பதால்அவன்யோசித்து ஒருமனிதனை நாம்அநியாயமாய் வெட்டிப்போடுகிறது சரியல்லவேயென்று கையிலிருந்தகத்தியை யுறையிற்போட்டுவிட்டுஓமனிதனே உனக்கென்ன துன்பம்நேரிட்டது உன்னுயிரை அநியாயமாய்க்கொடுக்கலாமா அந்தத்துன்பத்தைச்சொல்லென்றான்.

அப்போதுநான்சொன்னேன் எனக்கொருகாஜத்துண்டு அந்தகாஜத்தைநீசுபாவமாயிருக்கிறபோது உனக்குச்சொல்லுகிறேனென்றேன் அப்போது அவன்கூட என்னைவரும்படியாய்ச்சொல்லிவிட்டு அதிவேகமாய்அந்தஎருமையைநடத்தி அந்தமைதானத்திலிருக்கிற மாளிகைக்குள் அநேகம்கிசுமத்துக்காரர்கள் கூட்டங்கூட்டமாயிருந்தார்கள் அவர்களெல்லாம் இந்தஇராசகுமாரன உள்ளேநுழைந்தவுடனே அங்கே அநேகம் அறைகளிருக்கிறது அந்தஅறைகளுக்குள்ளே யாவத்தோரும்நுழைந்துகதவைச்சாற்றிக்கொண்டார்கள் யென்னையொருமனிதன்ஒருஅறைக்குள்ளேதள்ளி கதவைச்சாத்திவிட்டான் அவன்சாத்திவிட்டவுடன்நானினைத்தேன் இந்தராசகுமாரன்செய்கைகளை நாமறிந்துப்போகலாமென்றுவந்திருக்க இவனகதவை மூடிவிட்டுப் போய்விட்டானேயென்கிரவிசனமாய் கதவினருகிற்போய்ப்பார்க்கையில்கதவுநீங்கலாயிருந்தது அதுஎதினாலேயென்றால்(அவசரக்கோலம்அள்ளித்தெளி)என்கிறபழமொழிபோலே அவன்அவசரத்துடனேசாத்திவிட்டுஅவனொருஅறைக்குள்போய் நுழைந்துக்கொண்டான் அப்படியிருக்க அந்தக்கதவுநீங்கியிருந்தவழியேநான்கண்ணைவைத்துப்பார்த்துக்கொண்டிருந்தேன் அந்தராசகுமாரன் பெருமைமாட்டைவிட்டுக்கீழேயிறங்கிஅந்தமாளிகையின்முற்றத்தில் நாலுஇரும்புத்தூண்கள்நாட்டியிருக்கிறது அதினடுவே இந்தமாட்டைக்கொண்டுபோய்விட்டு நாலுகால்களிலும் நாலுசங்கிலியும்பூட்டிதூண்களோடேசேர்த்துக்கட்டிவிட்டுஅவன்கையிலிருந்தசாட்டியினால் அந்தமாட்டைமாறிமாறியடித்தான் அப்போதுஅதனுடையதோல்நரம்புசதைகள்முதலானதெல்லாம்கிழிந்துபோய்அந்தமாடானதால்சத்தம்போடுகிறது அந்தமாளிகையதிர்ந்துஅதிருக்கிரமனிதர்கள்முதலியபேர்களெல்லாம் கிடுகிடென்றுநடுக்கிவிலவிலவிலத்துஅந்தந்தஅறைகளில் மயங்கிவிழுந்திருக்கிறார்கள்.

அப்போதுநான்ரொம்பதயிரியத்துடனே பார்த்துக்கொண்டிருக்கேவ் அந்தராசகுமாரன் அந்தமாட்டையவிழ்த்து அடுத்தாப்போலிருக்கிற ஓரறையில் இரும்புக்கம்பிகளினாலே ஒரு கூடென்னும்பத்தாயமிருக்கிறது அந்தக்கூண்டைத்திறந்து அதற்குள்ளேயிந்தமாட்டைவிட்டுக்கூண்டுக்குக்கதவைச் சாத்திப்பூட்டுப்போட்டு அந்தச்சாவியைத் தன்வசம்வைத்துக்கொண்டு அனேகமந்திரங்கள்சொல்லி அந்தயிரும்புக்கூண்டு முதலானதற்கும் திக்குபந்தனஞ்செய்துவிட்டு அந்தமுற்றத்தில்வந்துநின்றான் அப்போது அவன் கோபங்கள்தணிந்து சுபாவமாய் ஒருபிரமாண்டமாகியஅறைக்குள் அநேகவிநோதமான நாற்காலிப்பலகைகள் போட்டிருக்கிறது அதிலொருநாற்காலியிற்போய்உட்கார்ந்தான் அந்நேரத்தில் இந்தஅறைக்குள்ளேபுகுந்து விழுந்திருந்தமனிதர்களெல்லாமெழுந்திருந்து இராசகுமாரனிருக்கிற அறைக்குள்ளேபோய் அவரவர்களுக்குத்தகுந்தமரியாதையாக உட்காருகிறபேர்களுட்கார்ந்திருந்தார்கள் நிற்கிறபேர்கள்நின்றார்கள் அப்போது இராசகுமாரன் ஒருவனை யழைத்து ஒருஅன்னியமனுஷ்ய னிந்தமாளிகைக்குள்வந்து நுழைந்தான் அவனைக்கூட்டிவாருமென்றுசொன்னான் அவன்வந்து என்னையழைத்துக்கொண்டுஅந்தராசன்முன்னே கொண்டுபோய்விட்டான் அவன்என்னை உட்காரும்படியாய்ச்சொல்ல நானொருநாற்காலியிலுட்கார்ந்திருக்கிறேன் அந்தச்சமயத்தில் ராசகுமாரனென்னைப்பார்த்து நீரிருக்கிறதெந்தவூர் உமதுபேரென்ன என்னிடத்தில்யென்னகாரியத்தாகவந்தீரென்றுகேட்க அப்போது நான் சொன்னேன் யென்னூர்பார்ஸ்தேசம்யெனதுபேர் அக்பர்பாத்ஷா நான்அந்தநகரத்தையாளுகிற பாத்ஷாவுடைய குமாரன் ஆசையால் உமதுபட்டணத்திற்கு யென்நகரத்திலிருந்து வந்தபேர்கள் நீர்வருஷத்திற்கொருதரம் அக்கிரமமாய்ச்செய்யப்பட்ட செய்கைகளைவிபரமாய்வந்துசொல்ல அதனவிபரங்களை உம்மைக்கேட்டுதெரிந்துகொள்ளலாமென்றுஎண்ணி இவ்விடம்வந்துமூன்றுமாதமிருந்து காப்பிரிப்பையனை நீர்வெட்டும்போது நான்பயங்கிவிழுந்து நீர்போனது தெரியாமல்மறுபடியும் ஒருவருஷங்காத்திருந்தேன்.

பின்புநீர்செய்தகாரியங்களை யெல்லாம்பார்த்து உமதுகூட இந்தமாளிகைக்குள்வந்து பின்னால்நடத்தியதையும்பார்த்தேன் ஆகையால் எந்தத்தேசங்களிலும் எவர்களுஞ்செய்யாதயாதிரியை நீர்வருஷத்திற்கொருதரஞ்செய்துவருகிறபடியால்அதுவிபரங்களையும்மிடத்திற்கேட்டறியவேணுமென்கிற காரியத்து எனக்கிருக்கிறபடியினாலே இங்கேவந்தேன் ஆனபடியாலதுஎன்னகாரணத்துக்காக இந்தவேலைசெய்கின்றீர் அதைச்சொல்லவேணுமென்று ராசகுமாரனைவருந்திக்கேட்டேன் அப்போது அந்தராசகுமாரனென்னைப்பார்த்துச்சொல்லுகிறான் நீரெண்ணிவந்த காரியத்தின்படி நான்விபரஞ்சொல்லவேணுமானால் எனக்கொரு காரியத்துண்டு அதைநீர் எனக்குமுடித்துக் கொடுப்பீரானால் நான்உமதுகாரியத்தைநிறைவேற்றிக்கொடுத்து உமதுமார்க்கத்தில் நான்வந்துவிடுகிறே

னென்றுசொன்னான அப்படியேநிறைவேற்றித் தருகிறேனென்று நிச்
சயம்பண்ணிக்கொடுத்து நான கேட்டவிபரத்தைச்சொல்லுமென்றேன்
அந்தராசகுமாரன் என்வாக்கைப்பெற்றுக்கொண்டென்னைப்பார்த்து
சொல்லுகிறான் நாளுகிறது இந்தநீம்ரோஸ்பட்டணத்தையாளுகிறகோ
சலராசாவுக்கு வெகுகாலமாகப்பிள்ளையில்லாமலிருந்து அன்னதானம்
சொர்னதானம்வஸ்திரதானம் கோதானம்பூதானம் கன்னிகாதானமம
டம்தடம்ஆதுலர்க்குச்சாலைஓதுவார்க்குணவு அறுசமையத்தார்க்குண
டிபசுவுக்குவாயுறை சிறைச்சோறுஐயம்பிணம்பண்டநல்கல் மகப்பெறு
வித்தல்மகவுவளர்த்தல் காதோலைகண்ணாடிகண்மருந்துபெண்போகம்
பிறர்துயர்காத்தல் தலைக்கெண்ணெய்முதலிய முப்பத்திரண்டுதருமங்
களுஞ்செய்து கடவுளைத்துதித்திருக்கால்எனதுதாயினுடையவயிற்றி
ல்ஏழுமாதக்கெர்ப்பமாயிருக்கையில் என்தந்தையாகியகோசலராசன்சி
லசாஸ்திரிகளையழைத்து எனனைக்குறித்துப்பலாபலங்களைக்கேட்டா
ர்கள் அவர்கள்சொன்னதாவது இந்தக்குழந்தைபிறந்துவெகுசுகுடலா
பத்தையடைந்துராசீகஞ்செய்துவரும் அதற்குநடுவில் அகோரமாகி
யபயித்தியமுண்டாகி அநேகமனிதர்களை இம்சைசெய்துவருவான்பி
ன்புஒருவரால் அந்தப்பயித்தியம்நீங்கி சுயமார்க்கத்தைவிட்டுஅன்னிய
மார்க்கத்திற்போய் மிகுந்தராசதிசையடைந்து சுகத்துடனேயிருக்கும்
ஆகையாலின்னமொருகுறையிருக்கிறது இந்தப்பிள்ளைபிறந்துபதினா
றுவயதுவரைக்கும் தாயுந்தகப்பனும் அந்தப்பிள்ளையின்முகத்திலில்
முழிக்கக்கூடாது ஆனபடியால் அதற்குள்வேறேயோரிடத்தினில அர
ண்மனைக்கட்டி அதில்அந்தப்பிள்ளையைவைத்து அதற்காகவேண்டிய
முயற்சிகளெல்லாம் செய்துவந்ததின்பிறகு அளவிறந்த தானதருமங்க
ளைச்செய்து சாந்திமுதலானதுஞ்சழித்து தாயுந்தகப்பனும் அந்தப்பிள்
ளைமுகத்தில்முழிக்கலாமென்று சாஸ்திரவாதிகள்சொல்ல அவர்களுக்
குவேண்டியபொருள் முதலியதுங்கொடுத்தனுப்பிவிட்டு என்தகப்பன
சந்தோஷமும் துயரமுமாகயிருந்தார் அப்படியிருக்கமாதமும்பத்துநி
றைவதற்குள்ளாக அந்தமைதானத்தில் இப்போநாமிருக்கிறவிடத்தில்
இந்தமாளிகையைக்கட்டி இதற்குள்ளேஎன்தாயையும் சிலதாதிகளையு
மமருத்துவச்சியும்வைத்து பிரசவவேதனைப்படுகிறகாலத்தில் என்தா
யின்கண்ணைக்கட்டி நான்பிறந்தவுடனே என்தாயை ஒருபல்லக்கில்வை
த்துஅவர்களிருந்த அரண்மனைக்குக்கொண்டுவந்துகண்ணையவிழ்த்து
விட்டார்கள அதன்பின்புஎனக்கு இந்தமாளிகைக்குள்ளேயேஅநேகம்
தாதிகள்தோழிகள் ஊழியக்காரிகள்முதலிய செவிலித்தாய்களும் வை
த்துவளர்த்துசகன்மோகன ராஜனென்றுபேர்கொடுத்து நான்நடந்துதி
ரியையில் இந்தமாளிகையைச்சுற்றி வெளியேவராதபடி திருமதிலொன்
றியற்றிசுற்றுங்காவல்வைத்து அதுவழியேபோகிறபேர்களும்வருகிறபே
ர்களுமாயிருப்பார்கள் நான்மட்டும் வெளியில்வராமல்என்னைக்கட்டுக்
காவலாய்வைத்திருப்பார்கள் அதன்பின் எனக்கைந்துவயதாகிஇந்தமா

ளிகைக்குள்ளேபடுக்கவைத்து சிலம்பமுதலியவித்தைகளும்ராஜதந்திரங்களும்கற்பித்துவருகையில் பதினைந்துவயதாகிப் பதினாறாம்வயதுநடக்கிறநாளையில் ஒருநாளிரவில்போசனமுதலியது மருந்தி ஒருகூடாரத்திற்போட்டிருக்கும் அம்சதூளிகாமஞ்சத்திற்படுத்து நித்திரைசெய்கையில்இரண்டுசாமவேளையுண்டு அப்போது என்னித்திரைகலைந்து உறக்கம்வராமல்சாய்ந்துகொண்டு விழித்திருந்தேன் அப்போதுநான்படுத்திருக்கும்மாளிகைக்குமேலே பளீரென்றுஒருமின்னல்தோன்றியது அதாவதுரொம்பபிரகாசமாயிருந்தது அதற்குநிகர்இன்னபிரகாசமென்றுசொல்லிமுடியாது அந்தமின்னற்சோதியை உயரப்பார்த்துக்கொண்டிருந்தேன் ஆகாசத்தினிடமாகவிருந்து ஒருரதம்எனக்குநேராகயிறங்கிவந்தது அப்போதுநானெழுந்து அந்தரதத்தினோரமாய்ப் போய்ப்பார்க்கையில் ஒருபெண்ணானவள் அந்தரதத்தின்மேலுட்கார்ந்திருக்கிறாள் அவளுடையஅழகுசவுந்தரியம் ரூபலாவண்ணியங்கள் இன்னவிதமாயிருக்குதென்று என்நாவினும்சொல்லிமுடியாது இன்னமவர்களாலும்வர்ணிக்கமுடியாது அப்பேர்ப்பட்ட அழகியபெண்ணைப்பார்த்துபெண்ணே நான்உன்தேரின்மீது ஏறிவரலாமாவென்று கேட்டேன் அவள்சுகமாய் வரலாமென்றாள்.

அதன்பின் அந்தத்தேரின்பேரிலேறி அவளருகிற்போயுட்கார்ந்தேன்அவள்என்னைப்பார்த்துசிலசரசமானவார்த்தைகள்பேச நாங்களிருவரும்சிரித்துவிளையாடியிருக்கிறவேளையில்ஒருதாதியானவள் அகஸ்மாத்தாய்எங்கள்சமீபத்தில் வந்திறங்கினாள் அவளந்தப்பெண்ணுடையகாதிலே என்னமோ ரகசியமாய்ச் சொன்னாள் அப்போது என்னைப்பார்த்து அந்தப்பெண் ஜலுதியாய் நீரிந்தத்தேரைவிட்டுக்கீழேயிறங்கிவிடுமென்று சொன்னாள் நான்யோசித்தேன் - ஓ-ஓ-இதென்னமோதெரியவில்லையென்றுபயந்து அதிசாக்கிரதையாய்த்தேரைவிட்டுக்கீழேயிறங்கினேன் உடனேமுன்வந்துபோலேரதத்தையெழுப்பியாகாயத்திற்போய்விட்டாள் அவள்போனவுடனேநான்ரொம்பவும்வியாகூலப்பட்டு மோசமாய்விட்டோமேஇன்னமொருபோது இப்பேர்க்கொற்றபெண்ணை நாம்காணப்பேறோமோவென்று அழுதுசலித்துநினைத்தேன் அந்தப்பெண்ணைப்பார்த்தகண்களால இன்னமொருபெண்ணைப்பார்க்கக்கூடாது என்றுகண்ணைமூடி வாயைப்பொத்திக்கொண்டிருந்தேன் அப்பொழுதுவுதயமாச்சுது அந்நேரத்திலஎனதுவேலைக்காரர்கள்என்கிட்டவந்து எப்போதும்போலே பணிவிடைசெய்யவந்தார்கள் அவர்களைப்பார்க்கிலும்போகாமலும் அந்தப்பெண்ணையேமனதிலெண்ணிக்கொண்டிருந்தேன் அந்தவேளையிலெனக்கு பதினாறுவயதும்சரியாய்ப்போய்விட்டது அப்போதுசிலதாதிகள் ஓடிப்போய் நான்படுகிறதுயரத்தைதயெனதுதாய்தகப்பனுக்குச்சொன்னார்கள் அவர்கள்திடுக்

கிட்டுமெய்சோர்ந்து என்வயதை யெண்ணிப்பார்த்து இதுநேற்றியோ டேபதினாறுவயதுஞ் சரியாய்விட்டபடியால் என்தகப்பனாகிய கோசலராசன்வேலைக்காரர்களைவிட்டுசுற்றிலுமிருக்குந்திருமதிலையிடித்துபோடும்படியாகவும் மாளிகையெப்போதுமிருக்கும்படியாகவும் செய்வித்துஎன்தாய்தகப்பனும் குடிபடையாவர்களும் இந்தமாளிகைக்குள்வந்தார்கள்.

அப்போது என்காயுந்தகப்பனும் என்னருகில்வந்து வெப்பவுபசாரத்துடனேபேசினார்கள் அவர்கள்கூடநான்பேசவுமில்லைபார்க்கவுமில்லைமற்றகுடிபடையாவர்களும் அவரவர்களுக்குத்தெரிந்த தந்திரங்களைக்கொண்டுயென்னோடேப்பேசினார்கள் அதற்குப்பேசாமலிருந்தேன் அப்படியிருக்கையில் அநேகம்வேடிக்கைகள் கூத்துகள்சதுர்கள் இந்திரசாலம்மகேந்திரசாலமுதலியவித்தைகளுஞ் செயதுபார்த்தார்கள்அதற்கும்பேசவில்லை இவைகளல்லாமல் உண்பனதின்பன முதலியதுமில்லாமல்மவுனமாயிருந்தேன் இதுகளையெல்லாம் என்காயுந்தகப்பனும் பார்த்துரொம்பதுயரப்பட்டு அழுதுபாகவித்து வேண்டியவயித்தியர்களையும்மந்திரவாதிகளையும்வரவழைத்து அவர்களால்அநேகஅவுஷதங்களையுங்கொடுத்து மாந்திரீகங்களால் மந்திரித்துந் தீரவில்லையேயென்றுஎன்தாய்தகப்பன் என்னுடையஏக்கமாகவேயிருந்தார்கள் அப்படியிருக்கையிலெனக்கு வெறியிருக்கயிருக்க அந்தப்பெண்ணினுடையபயித்தியமேஅதிகரித்து ஆங்காரங்கொண்டு இந்தமாளிகையைவிட்டுஎழும்பி இதிலுள்ளவேலைக்காரர்களைச் சின்னாபின்னப்படுத்திகால்களைவாரிநிலத்திலடித்து அனேகம்பேர்களைவதைசெய்துவிடவே இதிலுள்ளபேர்கள்என்னைத்தனியேவிட்டு நகருக்குப்போய்விட்டார்கள் அப்போதுநான்ஆங்காரங்கொண்டுஇந்தமாளிகைமுழுதிலும்வேலைக்காரர்களைப்பார்த்ததில்ஒருவருமில்லாதிருந்ததால் இந்தமாளிகையைவிட்டுவெளியேவந்துகொலலவரும்புலியினுடைய ஆங்காரத்தைப்போல்நான்ஆங்காரங்கொண்டுநகரத்திற்குபிரவேசித்து என்னெதிரிற்கண்ட பேர்களையெல்லாங்கிழித்தெறிந்து உயிர்வதைசெய்கிறதை யென்தகப்பனறிந்து சிலவீரர்களையேவி யென்னைப்பிடிக்கும்படியாய்ச்செய்து ஒருயிரும்புக்கூண்டில்போட்டடைத்து வேளைவேளைக்குப் போசனபதார்த்தங்களைவைப்பார்கள் அதுகளில்தேவையானதைப் புசித்துக்கொண்டு அந்தகூண்டுக்குள்ளே அட்டகாசம்பண்ணிக்கொண்டிருந்தேன் அப்படியிருக்கிறநாளையில் ஒருயேகதேசத்திலிருந்து ஒருசவுதாகர்அனேகதேசங்களிலெல்லாம் வர்த்தகஞ்செய்து இந்நகருக்குவந்து கூடாரமடித்து அதிலிறங்கி அநேகவினோதமாகிய சாமான்கள்வந்திருக்கிறதென்றுயென்தகப்பனுக்குச்சொல்லி ராஜபேட்டி காணவேண்டுமென்று சொல்லிவிட்டார்.

அப்போதுயென்னுடைய கவனமாகவேயிருந்தவர் அந்தவர்த்தகனுடையமனிதன் வந்துசொல்லவே அந்தவர்த்தகன்போனதேசங்களி

ல்யாராவது பெரியோர்களிருப்பார்கள் அவர்களால் நமது குமாரனுக்கு
சொஸ்தப்படுமென்றெண்ணி அந்தவர்த்தகனைக் கேழ்க்கலாமென்கிற
ஆவலாய்சவுதாகனை வந்து பேட்டிகண்டுக்கொள்ளலாமென்று உத்திர
வனுப்ப அந்தவுத்திரவுப்ரகாரம் சகலசாமான் முதலிய நவரத்தினங்க
ளும் எடுத்து அரண்மனைக்குள் வந்து என் தகப்பனது பேட்டிகண்டுவந்
தசாமான்களையெல்லாம் மேஜைகளின்மீது பரப்பினர்.

அப்போதென் தகப்பன் அந்தசாமான்கள்பேரில் விருப்பமில்லா
மல் இந்தசவுதாகனை எதிரில் உட்காரும்படிச்செய்து சொல்லுகிறார் ஓ
வர்த்தகரே இந்தசாமான்களுக்கெல்லாம் தகுமான பொருள் தருகிறேன்
நீர் தேசதேசங்களெல்லாம் திரிந்திருக்கிறபடியால் என் மகனுடைய பயி
த்தியம் தீரும்படியாக அவுஷதங்கொடுக்கும் பெரியோர்களைக் கண்டிரு
ந்தால் சொல்லவேணுமென்று கேட்டார் அப்போதவர் சொல்லுகிறார் கே
ளும் அரசர்களுக்கெல்லாம் அரசனே நான் சுற்றித்திரிந்த தேசங்களில்
யாதொரு விசேஷமான பேர்களைக் காணும் ஆனாலெனக்குத் தெரிந்த
து இதிலிருந்து கடல்மார்க்கமாய் ஒருமாசத்திய பழணத்து சகப்புரத்தி
ல் முல்லைத்தீவென்றொன்றிருக்கிறது அந்தத்தீவில் கடற்கரையோரமாய் ஒ
ருபிரமாண்டமாகிய மலைகளிருக்கிறது அந்தமலைக்கருகில் அனேக
சித்திர விநோதமாகிய அறைகள் பொருந்திய ஒருகுகையிருக்
கிறது அந்தகுகைக்குள் ஒருவிர்த்தாப்பியமான ஒருசந்நியாசிபெ
ரியவரிருக்கிறார் அந்த சந்நியாசியானவர் வருஷத்திற்கொருதரம் க
டலிற்றீர்த்தமாட அந்தகுகையைவிட்டுவெளியேவருகிறது அந்தநா
ளையில் தேசங்களிலுள்ள நோயாளிகள் பயித்தியக்காரர்களை அவரவர்க
ள் மனுஷாள்கூட்டிக்கொண்டு அங்கேபோய்காத்திருந்து அவர்ஸ்நா
னம்பண்ணவருகிற கடற்கரையோரமாய் அந்தநோயாளிகளை வரிசையா
யுட்காரவைத்துக்கொண்டிருப்பார்கள் அப்படியிருக்கையில் அந்தச்ச
ந்நியாசி அந்தக்குகையைவிட்டு வெளியேவந்து கடலில் ஸ்நானம்பண்
ணிப்போகும்போது அவரவர்கள் தலையில் பஸ்பத்தைப்போட்டுக்கொண்
டே குகைக்குள்போய்விடுகிறது அப்போது அவர்கள் நோய்களும் பயித்
தியங்களும் தீர்ந்து தங்கள் தங்கள் தேசங்களுக்குப் போய்விடுவார்கள்
அதுபோலே இதற்கு நாலுவருஷத்திற்குமுன்னே எனக்கொருபிள்ளை
யிருந்தது அதற்கொரு நோவுண்டாயிருந்தது அந்தவியாதியையென்னிட
த்திலிருந்ததிரவியமெல்லாம் செலவழித்தும் அந்தநோய்தீராமல்கடைசி
யில் அந்தத்தீவுக்குப்போய் இரண்டுமாதம் வரையிற்காத்திருந்து அவர்
வெளியேவந்துபோகும்போது பஸ்பம்போட்டார் உடனே தீர்ந்து எங்
கள் ஊர்போய்ச்சேர்ந்து அந்தப்பிள்ளைக்கு விவாகமுதலானதுஞ்செய்
து வர்த்தகஞ்செய்துக்கொண்டிருக்கின்றான்.

ஆகையால் உமது குமாரனை அந்தத்தீவுக்குக்கொண்டுபோனால் சொ
ஸ்தப்பட்டு இவ்விடம் வந்துசேரலாமென்று அந்தவர்த்தகர் சொன்னார்
அதற்கு என் தகப்பன் அவனைப்பார்த்துச்சொல்லுகிறார் கேளும் சவுதா
கரே நீர் சொல்கிறது அந்தத்தீவுபோய்வந்தபடியினாலே அதனுடைய விபரங்

களெல்லாம்தெரிந்திருக்கும் ஆகையால் உமக்கு வனேகசேனைகளுட
னேதேவையான பொருள்கொடுத்து கப்பல்மார்க்கமாயனுப்புகிறேன்
இப்போதேஎன்குமாரனையுங் கூட்டிக்கொண்டு அவிடம்போய்வந்தீரா
னால்என்னாலியன்ற பிரதிவுபகாரஞ்செய்து உமதூருக்கனுப்புகிறேனெ
ன்றார் அசற்கந்தவர்த்தகர்சம்மதித்து ஒருகப்பலில் அனேகவேலைக்கா
ரர்களும்சிலவுக்குப்போதுமான திரவியங்களும் உணவுமுதலிய சா
மான்களும் எந்தகப்பன்கொடுக்க அதுகளையு மென்னையுமேற்றிக்கொ
ண்டுபிரயாணப்பட்டு அந்தத்தீவுபோய்ச்சேர்ந்து கப்பலைலங்கர்பாய்ச்சி
யாவருங்கரையிலிறங்கி ஒருகூடாரமடித்து அதில்வர்த்தகர்முதலியநா
னும்மற்றபேர்களும் இருந்தோம் இதுபோலே அனேகதேசங்களிலு
ள்ளபேர்களெல்லாம வந்துகாத்துக்கொண் டிருக்கிறார்கள்.

பின்புநாங்கள்போன இருபதாநாள் அந்தமலைக்குகையிலிருந்தபெ
ரியவராகியசந்நியாசி வெளியிலேவந்து கடல்ஸ்நானம்பண்ணுகிறார்அ
ப்போதுநோயாளிகளையெல்லாம் அவர்குகைக்குப்போகிறவழியில் வரி
சையாய்வைத்துக்கொண்டிருக்கிறார்கள் அந்தவியாதிக்காரர்களில்ஒரும
னிதன்நானிருக்கிற இரும்புக்கூண்டுக்கருகிலிருந்தான் அவனுக்கென்
ன வியாதியென்றால் அவன்தலையானது ஒருமிடாப்பருமனையும் அவன்
கைகால்களெல்லாம்குச்சிபோலேயும உடல்கைப்பெருமுலர்ந்துஎலு
ம்புந்தோலுமாயிருக்கிறானேயொழிய வேறேமாமிசமில்லாமல் போக
க்குபோகக்கென்று முழித்துக்கொண்டிருக்கிறான் அப்படியிருப்பதை
நான்பார்த்துக்கொண்டிருக்கிறேன் அந்தவேளையில் சந்நியாசியானவர்
குகையைவிட்டுவெளியில்வந்து கடலில்ஸ்நானஞ்செய்து கரையேறிஆ
காசத்தைப்பார்த்து மந்திரதியானஞ்செய்து பையிலிருந்தபஸ்பத்தை
யள்ளிநோயாளிகளின்தலையின்மேலேதூவிவிட்டு குகைக்குள்ளேபோ
ய்விட்டார்அப்போதுபஸ்பம்போட்டபேர்களெல்லாம்அவரவர்கள்நோ
ய்களெல்லாந்தீர்ந்து தங்கள்தங்கள் சாகையிற்போய்ச்சேர்ந்தார்களஅப்
போதுஎனக்கும என்னருகிலிருந்த தலைபெருத்தவனுக்குமயாதொன்
றும்செய்யாமல் பார்த்துக்கொண்டு போய்விட்டார்.

பின்புஎன்னையழைத்துப்போன சவுதாகரும் அந்தமனுஷனையழை
த்துவந்தவர்களும் மிகவருத்தப்பட்டு யோசித்திருக்கும்போது அந்
தசந்நியாசிகுகைவாசலில் வந்துநின்று சவுதாகரையும் என்னருகிலிரு
ப்பவனையழைத்துவந்தவனையுங்கூப்பிட்டார் அவர்களதிகஜாக்கிரதை
யாய்ப்போய் சந்நியாசியிடத்தில் வணக்கமாய்நின்றார்கள் அந்தசந்நியா
சியெடுத்துக்கொண்டுபோன சவுதாகர்கையில் கொஞ்சஞ்சூர்ணங்கொடு
த்துஎன்மீதுதூவி இரும்புக்கூண்டைவிட்டு வெளியே வரும்படிசெய்
துஎன்னருகிலிருந்ததலைபெருத்தவனையும் என்னையுங்குகைக்குவரும்
படியாய்ச்சொல்லிவிட்டார் அப்போதுசவுதாகர் சூரணத்தைக்கொண்
டுவந்துஎன்மீது தூவினவுடனே எனதுஆங்காரந்தணிந்து சுபாவ
மாயிருந்தேன் இரும்புக்கூட்டைத்திறந்து வெளியேவரும்படிச்செய்

துஎன்னண்டையிலிருந்தவனையும் என்னோடேகூட்டிக்கொண்டுசந்நியாசிசமூகத்தில்விட்டார்கள் உடனேஎங்களிருவர்கையையும் சந்நியாசிபிடித்துக்கொண்டு என்னையொருஅறையிலும் அவனையொருஅறையிலும்வைத்தார் அந்தக்குகைக்குள்ளே அனேகம்அறைகளிருக்கிறது அதுகளில்நாலுபேர்கள்சிஷர்களிருக்கிறார்கள் அப்படியிருக்கையில்நாங்களுள்ளேபோனவர்கள் வெளியேவரக்காணோமென்கிரயென்னமாய் அந்தவர்த்தகரும் தலைப்பெருத்தவன் கூடவந்தவர்களும்எங்கள்வரவுபார்த்துகாத்துக்கொண் டிருக்கிறார்கள் அவர்களப்படியிருக்க மற்றநோயாளிகளும் அவர்களைச்சேர்ந்தபேர்களும் அவரவர்கள்தேசம்போய்ச்சேர்ந்தார்கள்.

பின்பு அந்தச்சந்நியாசியானவர் ஒருஅறைக்குள்ளே போயிருந்து அனேகமந்திரமுதலிய பிரவணத்தையுச்சரித்து கடவுளைத்துதித்துவிட்டுவெளியேவந்தார் அவரென்னைக்கூப்பிட்டு முன்னிருக்கும் சிஷர்கள்நாலுபேருக்குள் என்னைமுதன்மையாகிய சிஷனாக்கிக்கொண்டுஎன்மீதுஅதிககிருபைவைத்து எங்களுக்குப்பசியாதிருக்கும்படியாகிய காயகற்பங்கொடுத்து அதைத்தின்று மகிழ்ச்சியுடனே நாங்களைந்துபேரும்தலைவீங்கினவனும் அந்தசந்நியாசியும் அந்தக்குகைக்குள்ளிருக்கின்றதேயொழிய வேறேயொருவரும் அவ்விடத்திற்பிரவேசிக்கக்கூடாது அப்படியிருக்கையில் ஒருநாள் அந்தத்தலைவீங்கியவனைஓராசனத்திலுட்காரவைத்து சந்நியாசியெதிரிலுட்கார்ந்து யென்னைப்பார்த்து அவரிடுப்பிலிருந்தசாவிக்கொத்தையென்கையிற்கொடுத்துஓரறையைக்காண்பித்து அதைத்துறக்கச்சொல்லி அதற்குளொருபெட்டியிருந்தது அதையெடுத்துவரச்சொன்னார் அதுபோலே அறையைத்துறந்து பெட்டியையெடுத்துவந்துகொடுத்தேன் அதைத்திறந்து அதற்குள்ளிருக்கிறரணகத்தி கத்தரிக்கோல்சிமிட்டாமுதலியதும்முன்னேயெடுத்துவைத்துக்கொண்டுதிராவகத்தை அவனுடையநாசியில்முகரவைத்தவுடனே அவன்செத்தபிரேதம் போலாய்விட்டான் அந்தவேளையில்நானொருவன்அந்தசந்நியாசிசமீபத்தில்நின்றேன் மற்றநாலுசிஷர்களையும் இங்கேசெய்கிறவேலை தெரியாதிருக்கும்படி பிரத்தியேகமான அறையிற்போயிருக்கும்படிச்சொன்னார்.

அவர்களப்படியிருக்க யென்னையவர்பார்த்து அந்தப்பிரேதம்போலிருப்பவனை அசையாமற் பிடித்துக்கொண் டிருக்கச்சொன்னார் அப்படியேபிடித்துக்கொண் டிருந்தேன் அந்தவேளையில் சந்நியாசியானவர் ஒருவாளென்னும் ஆயுதத்தையெடுத்து அவன் தலையோட்டைசுத்தியறுத்து அந்த ஓட்டைக்கிளப்பி யெடுக்கவே உள்ளேயிருக்கிறமூளை தெரிந்தது அந்தமூளையின்மேல் ஒருபுழுவானது ஒருவிரற்பருமன் நாலுவிரற்கடை நீளமயிர்களமூளைத்து அந்தமூளையைத்தின்றுகொண் டிருக்கிறது அதைப்பார்த்து சிமிட்டாவினால் அந்தப்புழுவை சந்நியாசியெடுக்கிறார் அதுநழுவி நழுவிப்போகுது இவ்விதமாய் அனேகவிசை யெடுத்துப்பார்த்தார் அது அந்தமூளையிலேயிருக்கின்றதேயொழிய அந்தச்சிமிட்டாவில்வருகின்றதில்லை

அப்போது நான்குருவாகிய சன்னியாசியைப்பார்த்து சுவாமி அந்தப் புழுவானது ஜவ்விலேகெட்டியாய்ப் பிடித்துக்கொண்டிருக்கிறது அதுவும் ரொம்பநுட்பமாயிருக்கிறது ஆனபடியால் நீங்கள் சிமிட்டாவைக்கொண்டு பிடித்திழுத்தால் அதுதலைபறுந்து அந்த ஜவ்வோடேயிருந்துவிடும் அப்படியிருக்குமாகில் இந்தமனிதன்நோய் சவுக்கியப்படப்போகிறதில்லை அவனிறந்துபோவான் ஆகையால்நானொருயுக்திசொல்லுகிறேன் அதுபோலேநடத்துவீர்களானால் அவன்வியாதி தீர்ந்து சுகப்படுவானென்று சொன்னேன் இந்தச்சேதியைக்கேட்டசந்நியாசி அதுயெவ்விதமாயெடுக்கிறதென்றார்.

அதற்குநான்சொன்னேன் ஒருகூட்டுக்கோலைநெருப்பிற்காச்சி அதுகாய்ந்தவுடனே அதையெடுத்துஅந்தப் புழுவின்மேல்வைத்தால்வாயைத்திறக்கும் அந்தவேளையில்சிமிட்டாவைக்கொண்டுபிடிக்கவெளியிலெடுத்துப்போடலாமென்றுசொன்னேன் அதுசரிதானென்றுமனதுக்குள்ளெண்ணியோசித்தார் நாம்எவ்வளவோ மந்திரங்கள்காயாசித்தி அட்டமாசித்தி இந்திரஜாலமயேந்திரஜாலம்கூடுவிட்டுக்கூடுபாய்கிறதுஇப்பேர்ப்பட்டமந்திரவித்தைகளெல்லாம்படித்திருக்கஇந்தயோசனை நமக்குத்தெரியாமற்போய்விட்ட தல்லவாவென்று அவர்மனதில் அருவருப்பான அசிங்சியத்தை வைத்துக்கொண்டு என்னைப்பார்த்து நீசொன்னதுபோலே இதோயிருக்கிறகூட்டுக்கோலையெடுத்துக் காச்சிக் கொண்டுவாவென்றார் நானதுபோலே காய்ச்சிக்கொண்டுவந்து கொடுத்தேன் அவத்தைவாங்கி அந்தப்புழுவின்மேல் மெதுவாகவைக்க அந்தப்புழுவானது பிடித்திருந்த ஜவ்வைவிட்டுவிட்டு நெளிந்தது அந்தச்சமயத்தில் சிமிட்டாவில்பிடித்து வெளியிற்போட்டுவிட்டு அந்தத் தலையோட்டைமுன்னிருந்த பிரகாரம்வைத்து சுற்றிலுந்தைத்துபிளாஸ்திரிபோட்டுவிட்டு அவனையொரு அறையிற்கொண்டுபோய் போட்டு வைக்கச்சொல்லி என்னையேவினார் அதுபோலேசெய்துவிட்டு அவரிருந்தவிடத்தைப்பார்க்கும்போது அவரைக்காணாமற் போச்சுது எனக்கு ரொம்பவருத்தமுண்டாகி எண்ணாததெல்லாமெண்ணி ஒருஅறைக்குட்போனேன் அந்தஅறையினுடையகதவும் பூட்டில்துறவுகோலெனனும் சாவிகொத்துந்தொங்கிக்கொண்டிருந்தது இதற்குளிருப்பார்போலென்று கதவைத்திறந்து பார்த்தேன் ஒருமூலையில் சாய்ந்து கொண்டிருந்தாப்போல் நஞ்சுமூலிகையைத்தின்றுசிவனில்லாமற்சவம்போலிருந்தார் அதைநான்பார்த்தவுடனேரொம்பவுமதுக்கசாகரத்திலழுந்திவிசனப்பட்டழுந்துபலபலயோசனைசெய்துக்கொண்டிருக்கையில்அவருக்கெதிரில் ஒருகாகிதமெழுதிவைத்திருந்தது அதையெடுத்து வாசித்துப்பார்க்கையி

ல் அந்தமண்டைவீங்கினவனுக்கு இன்னமூலிகையரைத்துத்திரேகமெல்லாம்பூச உடனேசொஸ்தமாகிப்போகும் இப்போதுநான் சிவலோகப்பிராப்தியானபடியினாலே நான்செய்யுந்தவமுதலாகிய மந்திரதந்திரசகலமும் நீயேசெய்துவரக்கடவதென்று யெழுதியிருந்தது அதைப்பார்த்து என்சிரத்திற்கொண்டு அந்தயறையைவிட்டுவெளியேவந்துநான்சிஷர்களையுமழைத்து நமதுகுருவாகிய சந்நியாசியானவர் சிவலோகபதவியடைந்தார்.

ஆகையாலவனையெடுத்து ஒருவறையில் சமாதி செய்யவேண்டுமென்றுசொல்ல மற்றநால்வருங்கேட்டு விசனப்பட்டு ஆகஐந்துபேருமாய்அந்தக்குகைக்குளிருக்கிற அறைகளுக்கெல்லாம் மத்தியிலிருக்கிறஒருஅறையில்குழிதோண்டி அந்தப்பெரியவரையெடுத்துச்செய்யவேண்டியமுறைகள்செய்து சமாதியில்வைத்து நல்லடக்கஞ்செய்துபின்பவருக்குச்செய்யவேண்டிய சமாதிக்கிரிகை மோட்சதீபமுதலானது நடத்திவிட்டு நாங்களைந்துபேருமோரிடத்தில்இருந்து சிலயோசனைசெய்துநான் நாலுபேரையும்பார்த்து உங்களுடையவபிப்பிராயமென்னவென்று கேட்டேனவர்கள் எங்களுக்கொன்றுந்தெரியமாட்டாதென்றுசொன்னார்கள் அவர்களை நான்சிஷராகவைத்துக்கொண்டு ஒருவனைபெரியவரெழுதியிருந்த மூலிகையைக்கொண்டுவரும்படிச்சொன்னேனதுபோலேயவன்போய்க் கொண்டுவந்தானந்தமூலிகையை யரைத்து மண்டைவீங்கினவன் தேகமுழுதிலும் தடவ உடனேசொஸ்தமாகி முப்பத்திரண்டு அவயவங்களும் குறைவில்லாமல் பாலசூரியனைப்போல் விளங்கிக்கொண்டிருந்தானவனையும் இந்தநாலு சிஷர்களுடன் கூடயிருக்கச்செய்துஆகஐந்துபேருமெனக்குயேவற்பணிவிடைசெய்துக்கொண்டிருக்கிறார்கள்

அப்படியிருக்கையில் இப்போதுஎனக்குக்குருவாகிய சந்நியாசியானவர் முடித்துவந்ததவமுதலிய மந்திரங்கள்யாவற்றையுமவர்எந்த அறையிலிருந்துசெய்துவந்தாரோ யந்த அறையில்நானும்போய்முடித்துக்கொண்டு வேளைக்குவேளைகற்பகாயந்தின்றுகொண்டிருக்கிறேன் மந்தகாலத்தில்வருஷவாரியில் வருகிறகடல்ஸ்நானநாள்வந்ததன்று திநத்திலந்தசந்நியாசி என்னுடையபெரியவர்தரித்திருந்த காவிவஸ்திரமுதலியசெபமாலையும் நானெடுத்தணிந்து அந்தபஸ்பத்தையுங்கையிலெடுத்துக்கொண்டு தலைபெருத்திருந்த சொஸ்தமானவனையுமழைத்துக்கொண்டுகுகையைவிட்டு கடற்கரையைநோக்கிப்போகும்போது அந்தக்கரையோரத்தில் இவ்வளவென்றுசொல்லக்கூடாதநோயாளிகளும் அவர்களுடன் கூடவந்தபேர்களும் வெள்ளக்கடல்போலேகூட்டங்கூடி நின்றார்கள் இவர்களையெல்லாம் பார்த்துக்கொண்டுகடலிற்போய்ஸ்நானஞ்செ

ய்துகளையேறி அங்கிருக்கிறநோயாளிகளுக்கெல்லாம்பஸ்பங்களைத்தூ
வினேன் அப்போதே அவரவர்கள் வியாதிகள் தீர்ந்துதங்கள்தங்கள் கூ
டவந்தபேர்களும் தமதுதேசம்போய்ச்சேர்ந்தார்கள் அப்போதுஎன்னை
யழைத்துவந்த சவுதாகரும் தலைவீங்கியிருந்தவன் கூடவந்தபேர்களு
ம எங்களவரவைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள் அதனதினுலென்று
ல்நான சந்நியாசியா யிருப்பதினாலும் தலைவீங்கினவன் சொஸ்தப்பட்
டிருப்பதினாலும் இவர்களுக்கு அடையாளந் தெரியாமலிருந்தார்கள்.

அப்போது அவனுடன்கூடவந்தபேர்களையழைத்து இதோயிருக்
கிறமனுஷன் தலைவீங்கியிருந்தது மாறிசொஸ்தமாய்ப்போயிருக்கிறு
ன் அவனைக்கூட்டிக்கொண்டு உங்கள்தேசம்போய்ச்சேருமென் றனுப்
பிவிட்டு அந்தச்சவுதாகரை யழைத்து உம்முடைய சேதியென்னவென்
றுகேட்டேன் அவர்மிகவுமென்னைவணங்கி ஐயாபெரியவரேவந்தநோயா
ளிகளெல்லாம் தீர்ந்து அவரவர்தேசம்போய்விட்டார்கள்எங்கள்ராஜகு
மாரனைப்போனவருஷ மழைத்துக்கொண்டுபோனீர்கள் அதுசேதிதெ
ரியாமல்ஒருவருஷமாய்க்காத்துக்கொண்டிருக்கிறேனென்றுசொன்னார்

அவரைப்பார்த்துச்சொன்னேன் அதுசரிதான் உம்முடைய ராஜகு
மாரன் நான்தான்என்னையழைத்துப்போன சந்நியாசி அவர்பட்டத்தை
யெனக்குக் கட்டிவிட்டு அவரிறந்துபோனார் உடனே அவர்வேலையைநா
ன்பார்த்துக்கொண்டுவருகிறேன் ஆகையால் இன்னம் ஒருவருஷத்துக்
கு நீங்களிங்கேதானே யிருக்கவேணும் அந்தவருஷம் வந்தவுடனேநா
ன்வெளியே புறப்பட்டு இங்கேவருகிற நோயாளிகளுக்கெல்லாம்தெரிய
ப்படுத்தி மறுவருஷத்துக்கு நமது நீம்ரோஸ்பட்டணத்துக்கு வரும்ப
டியாய்ச்சொல்லிவிட்டு நாம்புறப்பட்டுப்போகவேண்டியதென்று சவு
தாருக்குச்சொல்லி அவரைஜாகைக்குப்போகும்படியாய்ச் செய்துவிட்டு
நான குகைக்குட்போய்ச்சேர்ந்துஎப்போதும்போலே தவத்திலிருந்து
விட்டேன்,

அப்போது மறுவருஷம்வந்தது அந்தவருஷத்தில் குகையைவிட்
டுவெளியேவந்து ஸ்நானஞ்செய்து நோயாளிகளுக்கும் சொஸ்தம் பண்
ணி சகலமானபேர்களையும்பார்த்து கேளுங்கள்தேசங்களி லிருந்துநோ
யாளிகள் கூடவந்த மனிதர்களே நான்நீம்ரோஸ்பட்டணத்தையாளுகின்
ற கோசலராஜனுடையபுத்திரன் என்பேர்ஜகன்மோகனன் எனக்கிருந்
த பயித்தியந் தீரவேணுமென்று மூன்றுவருஷத்தில் இங்கேவந்திரு
ந்தேன் அப்போது இந்தமலையிலிருந்தசந்நியாசி குகைக்குள்ளேயழை
த்துக்கொண்டுபோய் அவர்செய்தவேலைகளெல்லாம் என்னைச் செய்யும்
படியா யுபதேசம்பண்ணிவிட்டு அவரிறந்துசமாதியாய் விட்டார் ஆன
படியால் இனிமேல் நான்எனது நீம்ரோஸ்பட் [illegible] சேர்ந்து

இதுபோல் நோயாளிகளுக்குச் சொஸ்தம் பண்ணிக்கொண்டிருப்பேன்.
இனிமேல் நோயாளிகள் வந்தால் நானிருக்கிறவிடத்திற்கு வந்துசேர
வேண்டியது இங்கேயொருவரும் வரவேண்டியதில்லையென்றுசகலத்தி
ராளுக்குஞ்சொல்லி அவரவர்தேசத்திற்குப் போகும்படியா யுத்திரவு
கொடுத்துவிட்டு சவுதாகரைப்பயணத்துக்காகிய காரியங்களைத் திட்டப்ப
டுத்தும் நான்போய்வருகிறேனென்றுசொல்லிவிட்டு அந்தக்குகைக்கு
ள்ளேபோய் அந்தநாலுசிஷர்களுக்கும் புத்திமதிகளையும அனேகமந்தி
ரதந்திரங்களையும அவரவருக்குத்தகுந்த உபதேசங்களையுஞ் சொல்லி
நாலுபேரையும அவரவர்களிருப்பிடம்போக உத்திரவுகொடுத்து அவ
ர்கள் போனவுடனே நான்தவஞ்செய்துக்கொண்டிருந்த பூசைபெட்டி
முதலிய சாஸ்திரபுஸ்தகங்கள் யாவற்றையுமெடுத்துக்கொண்டு அறை
யறையாய் நுழைந்து பரிசோதனைசெய்து அவ்விடத்தி லியாதொன்றுமி
ல்லாமல் ஒரு அறையானது பூட்டியிருந்தது அந்தஅறையைநான்போ
ய்ச்சேர்ந்த பிறகுகுகையிலிறந்துபோன சந்நியாசிகூட திறந்ததில்லைநானு
ம் திறந்து பார்த்ததில்லை ஆகையால் அந்தஅறையினுடையதிறவுகோ
ல் இந்தச்சாவி கொத்தோடே கோர்த்திருந்தது அதனாலே அறையை
த்திறந்து உள்ளேபோய்ப்பார்க்கும்போது அந்தஅறை நடுவிலசலவை
க்கல்லினுமேல ஒருமேடைபோட்டிருந்தது.

அந்தமேடையின்மேலே ஒருமுழஅகலம் ஒன்னரைமுழநீளம் ஒ
ருகருப்பு மரத்தாற்செய்த சோபிதமாகிய பெட்டியொன்றிருந்ததுவே
றேயொன்றுமில்லை அந்தப்பெட்டியையும் முன்னெடுத்தசாஸ்திர முத
லானதுகளையும் யெடுத்து குகைக்குப்புறப்படுத்திவிட்டு அந்தச்சந்நியா
சியென்னும்பெரியவர் அடங்கியிருக்கிற சமாதியிற்போய் அவருக்குச்
செய்யவேண்டிய நமஸ்காரமுதலிய தண்டஞ்சமர்ப்பித்து அந்தக்குகை
யைவிட்டு வெளியேவந்து என்கூடவந்த மனிதர்களையழைத்து இந்தப்
பெட்டிமுதலிய புத்தகங்களை யெடுத்துக்கொண்டு சவுதாகரிடம்போய்
ச்சேர்ந்து யாவர்களும் பிரயாணப்பட்டு கப்பலிற்போயேறிப் பாய்விரித்
து கடல்மார்க்கமாய்ப்போய் இந்த நீம்ரோ அப்பட்டணத்துறைமுகம்வந்
துசேர்ந்து யாவர்களும் கரையிலிறங்கி பெட்டிமுதலிய சாஸ்திரபுஸ்தக
ங்களை எல்லாம் நான்பிறந்து வளர்ந்து யிருந்த மாலிற்குட் போய்
ஓரறைக்குள் அந்தக்குகைக்குளிருந்தெடுத்துவந்த பெட்டி முதலிய
யாவற்றையும்வைத்துப் பூட்டிவிட்டு என்தாய்தகப்பன் முதலானபேர்
களைக்கண்டு நான்சந்தோஷப்பட அவர்களும்மகிழ்ச்சியடைந்துசவுதாக
ருக்கு அனேகம்திரவியங்களையும்ஒருகப்பலையுங்கொடுத்து அவர்தேசத்
திற்குப்போகும்படியாய்சம்பமரியாதையுடனேயனுப்பிவிட அவர்தேச
ம்போய்ச்சேர்ந்துவிட்டார்பின்புநான் சகலசவுக்கியத்துடனிருந்துகீர்த்தி
யும் அந்தமாளிகைக்குட்போய சிலமனுஷர்களையவைத்துப்பணிவிடைசெய

யும்படியாய்த்திட்டப்படுத்தி வைரத்துக்கொண்டுமூன்குகைக்குள்நடத்தியசபதவத்தையிங்கேயொருஅறைக்குள்மூடித்துக்கொண்டுவந்தேன்அப்படிச்செய்துக்கொண்டு வருகையில்ஒருவருஷமாயிற்று அதற்குள்ளாகதேசதேசங்களிலுள்ளநோயாளிகளைக்கூட்டிக்கொண்டுஇந்தமாளிகையைச்சுற்றிக்காத்திருந்தார்கள் நான்ஸ்நானம்பண்ணி அந்தபஸ்பத்தைத்தூவ அவர்கள்சொஸ்தப்பட்டு அவரவர் தேசம்போய்விடுவர்கள்.

இவ்விதமாய் மூன்றுவருஷம் நடந்துவந்ததுநாலாவதுவருஷம்வருவதற்குள்ளாக எனதுதாயினுடைய அந்தப்புரத்தில்போசனமூதலியமுப்பத்திரண்டு நளபாகத்துடனே போசனமருந்திதாம்பூலந்தரித்துகளபகஸ்தூரிபூசி கொம்பமகிழ்ச்சியுடனே நான்சபதபஞ்செய்யும் படியானமாளிகையிற்புகுந்து செய்யவேண்டியகிரமங்களைமுடித்துபொழுதஸ்தமிக்கிற வேளையாச்சுது அந்நேரத்தில்எனக்கொரு கியாபகம்வந்தது அதுயாதென்றால் மூன்குகைக்குளிருந்த அறையிலிருந்து ஒரு பெட்டியை யெடுத்துவந்தோமே அந்தப்பெட்டிக்குள் என்னவஸ்துவிருக்கிறதோ அதைஇதுவரையில்நாம்பார்க்கவில்லையேஅதைப்பரிட்சிக்கவேணுமென்கிறஆவலோடு அக்குள்ளவேலையாளர்களையெல்லாம்மாளிகையைவிட்டுப் பிரத்தியேகப் படுத்தி கதவுகளைத்தாளிட்டுதனித்தவனுயிருந்து அந்தஅறையைத்திறந்து அதிலிருந்தபெட்டியை யெடுத்துத்திறந்துபார்க்கையில்அந்தப்பெட்டிக்குள்வெள்ளியினாற்செய்தபெட்டியொன்றிருந்தது அதைத்திறந்துபார்க்கையில் ஐம்பொன்னாற்செய்தபெட்டியொன்றிருந்தது அதைதிறந்துபார்க்கையில் ஒருசிறிய புஸ்தகமிருந்தது அந்தப்புஸ்தகத்தைபென்கையினாலெடுத்து விரித்து முகல்வரியைப்பார்க்கும்போது அதிலெழுதியிருந்தது இந்தப்புஸ்தகத்துக்கு சாம்பிராணிதூபங்கொடுத்து அதிலிருக்கிறமந்திரங்களையுச்சரித்துககொண்டிருந்தால் இன்னதீவிலிருக்கும இன்னபட்டணத்தையாளுகின்ற பரிகுலவென்னும் காந்தர்வகுல ராசனுடைய குமாரத்திசுரதமோகினியென்னும்பெண்ணானவள் அனேகஅழகுசௌந்தரிய முள்ளவளாய் இந்தப்புஸ்தகத்தைவைத்துக் கொண்டிருக்கிறவர்கள் சமுகத்திற்குவருவாளென்றெழுதியிருந்தது அப்போது அந்தயிரவில் பாதிஜாமநேரத்தில் அந்தமாளிகைமூற்றத்திலிருந்து அந்தபுஸ்தகத்துக்குவேண்டியதூபதீபங்கள் கொடுத்து அதிலுள்ள மந்திரத்தையுச்சரித்தேன் அந்நேரத்தில் டணீலென்றுஒருவெளிச்சமானது தோற்றியது அதைநான் ஏறிட்டுப்பார்த்தேன் பார்த்தவுடனேஒருஇரதயானது தங்கத்தகட்டுகளினாற் செய்துநவரத்தினங்களையழுத்தகுந்தனவேலைமுதலியகோபுரவேலைகள் செய்துமுத்துக்குச்சுகள்தொங்கவிட்டுஅந்தரத்தில்வால்வெட்டு குளோப்புகள் முதலான அனேகங்கள் தூக்கியதுகளில்

மெழுர்கு வத்திகள் கொளுத்திவைத்து இன்னம்மிகுந்தவிச்சித்திரவி
னோதமுதலிய வலங்காரஞ்செய்திருக்கிறஇரதத்துக்குள்சிலமாதர்கள்
தாராகணங்கள் போலே முகவிலாசமுள்ள பெண்கள் சாமரம்போட
கட்டியங்கூற காளாஞ்சியேந்தபரதநாட்டியங்களாட தம்புருவீணைதித்
தித்தளத்தொனியுடனே முன்சொன்னஇராசனுடைய குமாரத்தியா
னவள் இரதத்தின்மத்தியிலிருக்கிற பீடத்திலிருக்கிறாள் அவளைப்பார
த்தால் அனேக பூர்ணச்சந்திரனை யிணையிட்டாலும் அடங்காதமுகவ
சீகரமுள்ள பெண்ணாயிருக்கிறாள் அவளவயங்களையும் அவளுடுத்தும்
பகுபான ஆடைமுதலியதையும் அவளணிந்திராநின்றஆபரணபூஷணாதி
களையும் இவ்விதமாயிருக்குதென்கிற வுவமை சொல்லக்கூடாததாயி
ருக்கின்றது அப்பேர்ப்பட்ட பெண்ணானவள் அந்தரதத்திலிருக்கிறது
ம் அவளைச்சுற்றியிருக்கிறபெண்களையும் பார்க்கையில் ஒருசந்திரனைசில
நட்சத்திரங்கள்சூழ்ந்திருந்ததுபோலிருந்தது இவ்வளவு சிறப்புடனே
அந்தப்பெண்ணேறிவந்தரதமானது நானிருக்கும்மாளிகை அகன்றமு
த்தத்தில் எனக்குச்சமீபமாகவந்திறங்கியது அதுஇறங்கினவுடனே அ
ந்தப்புஸ்தகங்கையிற்பிடித்தபிடியோடே அந்தரதத்திலேறியந்தப்பெண்
ணிருக்கும்சிம்மாசனபீடத்தில் அவளருகிற்போயிருந்தேன் அப்போ
தந்தப்பெண்ணானவள் என்னைப்பார்த்துசிலமொழிகள்பேசி சிரித்தா
ள்நானும் அவள்பேச்சுக்குச்சரியான ஜவாப்புகள்கொடுத்துச்சிரித்தே
ன் இவ்விதமாய்ஒன்றுக்கொன்று ஒருவேலைநீங்கமற்றவைச்சரச முத
லியதுஞ் செய்து சிரித்து விளையாடிக்கொண்டிருக்கையில்பொழுதுவி
டிகிற நேரமாச்சுது அந்தநேரத்தில் சிலபெண்கள்வந்துஎன்னைத்தூக்
கிநானிருக்கு மாளிகை முற்றத்திலிறக்கிவிட்டு ரதத்தைநடத்திஆகாச
மார்க்கமாய்ப் பறந்துபோய்விட்டார்கள் பின்புநித்தியகாலம்பொழுத
ஸ்தமித்து பாதிசாமஞ் சென்றவுடனே பழையபடிபுஸ்தகத்துக்குதூ
பங்கொடுத்து மந்திரத்தையுச்சரிக்கிறது முன்சொன்னபிரகாரம் அந்
தரதம்வந்திறங்குகிறது அதில்நானேறுகிறது அவளுநானுங்கட்டித்த
ழுவி முத்தமிட்டு ஒருவேலைதவிர மற்றவேலைகளெல்லாம் நடத்திக்
கொள்ளுகிறது பழையபடிநானிறங்கியிருக்குறது அவள் தானிருக்கிற
யிடம்ரதத்தைநடத்திப்போய் விடுகிறதுஇவ்விதமாய்சிலநாள் நடந்து
வருகையில் ஒருநாள் அந்தப்பெண்ணும்நானும் சரசமுதலியவிளையாட்
டுகள்செய்திருந்தோம்அப்போ நானினைத்தேன்இந்தப்பெண்ணுடனே
நித்தியம்இந்தவேலையை நடத்திக்கொண்டு வருகிறமேயொழிய நமது
ஆசைநிறைவேறும்படியான ஒருவேலையில்லையே இன்றைக்குஅவ

ந்தமாயாவது யிவளைச்சேரவேணுமென்கிற வெண்ணமாயிருக்கையில்
அந்தசுதமோகினி யென்னும்பரிகுலகாந்தர்வப்பெண் யென்னைப்பார்த்
து ரொம்பவும் குலுங்கக்குலுக்கச்சிரித்து ஓஅரசநாயகனே உமதுகையிலி
ருக்கின்ற புஸ்தகமரொம்பஅழகாயிருக்கின்றது அந்தப்புஸ்தகத்தையெ
ன்கையிற்கொடும் பார்த்துத்தருகிறேனென்றாள் உடனே அவன்பேரில்
காதல கொண்டவனாயிருக்கிறபடியால் அவள்கேட்டதற்கு மறுவுத்தி
ரவுசொல்லாமல்அவள்கையிற்கொடுத்தான் அவள்வாங்கிப்பார்க்கையி
ல் அவளருகிலிருந்தபெண்ணானவள் இந்தப்புஸ்தகம்ரெம்ப அழகா
யிருக்கிறதே இதை நான்பார்த்துத்தருகிறேனென்றாள் இவள்அவள்கை
யிற் கொடுத்தாள்.

இவ்விதமாகநான்பார்க்கிறேன் நீபார்க்கிறேனென்று அந்தரத்த்
தில்வந்த பெண்களெல்லாம் ஒருத்தியொருத்தியாய்கொடுத்துகடைசி
யில் இருத்திகையில்கொடுத்தாள் இவர்களிவ்விதமாய்க்கொடுத்துவாங்
கிக்கொண்டிருக்கையில் என்மதிமருண்டுபுஸ்தகத்தின்மேலேகண்ணா
யிருக்கும்போது அந்தக்கடைசியில் வாங்கினவள்திடீலென்று ரதத்தை
விட்டென்மாளிகை முற்றத்திற்குதித்தாள் அவள்குதித்தவுடனேஒரு
மோசம் வந்ததென்று அதிகஜாக்ரதையாய்அவளருகிற்குதித்துஅவளை
க்கெட்டியாய்ப்பிடித்துக்கொண்டு புஸ்தகத்தைப்பிடுங்கப்போகையில்
அந்தப்புஸ்தகத்தைச்சுற்றி ரதத்தின்மேலெறிந்துவிட்டாள் உடனேஅந்
தரதமானது ஆகாயத்திற்கிளம்பிஅவளிருக்குமிடம்போய்ச்சேர்ந்ததுஅ
ப்போதுஎனக்குவந்த கோபத்தை இன்னவிதமென்றுசொல்லிமுடியா
து அநேரத்தில்நான் கற்றிருக்கிறயந்திரங்கள்முதலியவைகளுச்சரித்து
அவள்பேரில்பிரயோகித்து அவளோடிப்போகாமலும்பலதந்திரஞ்செய்
யாமலும் திக்குபந்தனஞ்செய்து ஒருயிரும்புசங்கிலியெடுத்து அவளி
டையிற்கட்டி ஒறறையிலிருக்குந்தூணில்சேர்த்திறுக்கிப்பிணித்து அ
றையைப்பூட்டிவிட்டுஅரண்மனைபோய்ச்சேர்ந்துநித்திரைசெய்துபொ
ழுதுவிடிந்தவுடனே இவளைக்கட்டியிருக்கும் மாளிகையில்வந்து திற
ந்துபார்க்கையில் ஒருஎருமைமாடாகவிருந்தாள் அதைப்பார்த்தவுடனே
மிகுந்தகோபம்வந்து முற்றத்தில் நாலுயிரும்புத் தூண்கள்நட்டுஅந்த
த்தூண்களில்சங்கிலிகள்மாட்டி அந்தஎருமைமாட்டைதூண்களுக்குமத்
த்தியில் நாலுக்குஞ்சங்கிலியைமாட்டி தூண்களிற் சேர்த்துக்கட்டிஒரு
சாட்டியால்அந்தமாட்டை என்கோபந்தணிகிற வரையில் என்புஸ்தக
த்தை மோசஞ்செய்தாயல்லவாவென்று அநேகஞ்சமைகிழிய அடிக்கிறது
இவ்விதமால்தினந்தினம் அடித்துக்கொண்டு வருகையில் ஒருவருஷ
மாகி அந்தரத்தில்வந்தபெண்என்னைவிட்டுத்தப்பித்துக்கொண்டுபோ
ன நாள்வந்தது அன்றைக்குஎனக்கு அதிககோபமுண்டாகிஇந்தமாட்
டின்பேரிலேறி இந்நகரத்திற்குவெளியேவருகிறபேர்களையெல்லாம்அ
டித்துக்குத்திவெட்டிபலயிம்சைகள்செய்கிறது இதற்கும்பொறுக்கமா
ட்டாமல் அநேகம்பேர்களிறந்துபோகிறது அதற்குபயின் மாங்கைத்
திருப்பி அந்தமாளிகைக்குள்வந்துபழையபடி தூண்களிற்கட்டிசாட்டி

யாலடித்து எனது ஆங்காரமெல்லாமடங்கினபிறகு சுபாவமாயிருக்கிற
து இப்படிச்செய்துவருகிறதை என்தகப்பன்கேள்விப்பட்டு என்னைவ
ரவழைத்து இதுவுனக்கென்னபயித்தியமோ மனமிரட்சியோ இப்பேர்
க்கொற்ற வுபத்திரவதைசெய்கிறது சரியல்லவென்று அனேகவிதத்திலும்
இதைநிறுத்திவிடும்படியானதந்திரஞ்செய்வார்கள் எனக்குமென்மே
லுமதிகஞ்செய்வார்கள் எனக்குமென்மேலுமதிக கோபமுண்டாகிமு
ன்னினுமிப்போதெண்மடங்கு அதிகமானதொந்தரைகள் செய்துக்கொ
ண்டுவருகிறதை அங்கரத்திலுள்ளோர்கள்கொண்டு மூன்பேரைமாற்
றிகாயிசவார்என்கிற பேர்கொடுத்தார்கள் அந்தசோலையில்ஒருமகாபெ
ரியவர் சகலசாஸ்திரபண்டிதர்வந்தார் அவரிடத்தில் நான்செய்கிறசெய்
கைகளைஎனதுதகப்பன் சொல்லினார் அதற்குஅந்தசாஸ்திரி சொல்லு
கிறார்.

நீங்கள்எவ்விதமாகிய மந்திரங்கள் செய்தபோதிலும் அவனடங்
கப்போகிறதில்லை ஆனாலின்னமொரு லேலையிருக்கிறது அதென்னவெ
ன்றால்வருஷத்திற்கொருதரம் உக்கிரங்கொண்டல்லவா அனேகமனுஷ்
யர்களைமடித்துவருகிறான் ஆகையால்அந்நாள்வந்தவுடனே மைசா
னத்திலொருமனிதனை ஒருமேடையில்நிறுத்தி ஊரிலுள்ளயாவரும்அ
ங்கே போயிருந்து அவன்ஆங்காரத்துடனே வருகிறபோது எல்லோரு
ம் பூமியில்விழுந்து படுத்திருக்கவேண்டியது அவன்நிற்கிறவனைவெட்
டிவிட்டு ஆங்காரந்தணிந்துபோய்விடுவான் ஆனபடியால்ஒருவருஷத்
திற்கொருபெலிகொடுக்கவேணுமென்று சாஸ்திரவாதிகள்சொன்னது
போலே உன்தகப்பன்முதலியசர்வத்திராளும்ஒப்புக்கொண்டு காட்டி
லுள்ள வொருகாப்பிரிப் பையனைக்கொண்டுவந்து முன்சொன்னமே
டையில்நிறுத்தி சகலத்திராளும் வந்துநிற்பார்கள் அப்போதெனக்கு
க்கோபமீறி அந்தஎருமைமாட்டின்மீதேறி ஆங்காரத்துடனேபோய்மா
ட்டைநானடிப்பேன் அதுசத்தமபோடுமே அந்தத்தொனிகேட்ட சகல
ருங்கீழேவிழுந்து விடுவார்கள் அப்போது நான்மேடையிலிருக்கிறவ
னை ஒரேவெட்டாய்வெட்டிவிட்டு அனைபங்கு கோபந்தணிந்துமாட்டை
ச்சவாரிசெய்துக்கொண்டு முன்சொன்னமாளிகையில் நுழைந்துமாட்
டைவிட்டிறங்கிஅந்தத்துணுடே சேர்த்துக்கட்டி என்கோபந்தணிகிற
வகையில அடிக்கிறது அதன்பின்நான் சுபாவமாகிய அந்தநாள்வருகிற
வரையிலுமிருக்கிறது ஆகையால்நான்இரதத்தின்மீதுகண்ட பெண்ணை
இன்னமொருபோது கண்டு அவளைக் கலியாணம் பண்ணிஎகபோகமா
யக்கூடியனுபவஞ்செய்தால் எனதுகோபந்தணிந்து பலி முதலியதுநீ
க்கி மாட்டையடிக்கிறதையும்நிறுத்தி சுபாவமாயிருப்பேன் ஆகையால்
அவளைச்சேரும்படியான ஆஜக்ஞயிகுதியாயிருப்பதினாலே தாங்களே
அந்தப்பெண்ணானவளிருக்கிற யிடத்தைத்கண்டுபிடித்து அவளைஎன
க்குக் கலியாணஞ்செய்துவைக்கும்படியான ஏதுவைத் தாங்களேதே
டவேண்டியது உமதுகடனாயிருக்கின்றது அதன்பின்உங்கள்மார்க்கத்தி
ல் நானவருகிறதுஎன்பேரிங்கடனாயிருக்கிறது ஆகையால்இதுகாரியத்தை
த்தாங்கள்முடித்துவிட்டு உங்கள்ஊர்பதிக்குப்போக வேணுமென்று
காயிசவானென்னும் சகன்மேகன ராசன்சொன்னான்,

கேளுங்கள்பாத்துஷாசிரோமணியேமூன்றுபக்கீர்களே, நான்போனஆஜத்தை நிறைவேற்றிக்கொள்ளாமல் இவனுடையஆஜத்தை யெப்படிநிறைவேற்றிக்கொடுக்கிறதென்றுயோசித்துஎண்ணுகெல்லாமெண்ணியென்மனக்குண்ணி நாமவனுக்குக்கொடுத்தபடியினாலேஅவனாஜத்தை முந்திநிறைவேற்றிவிட்டுப் பின்னால் அந்தசகஜாதியென்கிற பெண்ணை நிக்காகுசெய்துகொள்வோமென்று உறுப்படுத்திக்கொண்டுஅவனிடத்தில்விடைபெற்று வெளியேபுறப்பட்டு வெகுநாளாய்-காடு-மலை, தீவு தீவாந்திரங்களிலும் தேசதேசங்களிலுஞ்சுற்றித்திரிந்து அவன்சொன்னபெண்ணைத்தேடிப்பார்த்தும் அவளகப்படாமையால்மிகுந்தவருத்தப்பட்டுஇனிநாமெங்கேபோய்ப்பார்க்கிறதென்றுவியாகுலமாய்வரும்போதுஎனக்கெதிரிலொருபிரமாண்டமாகிய மலைகாணப்பட்டது அதைக்கண்டுநான்யோசித்ததாவது இவ்விதமாக நாம்அந்தப்பெண்ணைத்தேடியெத்தனைநாளைக்கலைந்துதிரிகிறது இத்தனைநாள்திரிந்தும் நமது ஆஜத்தும்நிறைவேறவில்லை அவனுடையஆஜத்தும் நிறைவேறவில்லை நம்முடையஅயார்த்து வியர்த்தமாய்ப்போகிறதேயொழிய வேறொன்றையுங்காணோம்ஆகையால்இப்போது நாம்இந்தமலையின்மீதேறி உச்சியிலநின்றுகீழேவிழுந்து மவுத்தாகிப்போவோமானால் நம்முடையஆஜத்தும்அந்தராசகுமாரனுடைய ஆஜத்தும் நிறைவேறிப்போகும் இதுவேதகுந்தயோசனையென்று மலையினுச்சியிலேறிப்போய் நின்றுகண்ணைமூடிக்கொண்டுகீழேவிழப்போகும்போது ஒருபெரியமனிதர்வந்து என்கையைப்பிடித்து என்னைப்பார்த்துசொல்லுகிறார் அடாபாவிமனிதனேஉனக்குப்பயித்தியமா யிந்தமலையிலேறிகீழேவிழுந்துஇறந்துபோகபோகிறாய் அப்படியிறந்துபோவாயானால் உனக்கு இருபதியிலும் பலன்கிடைக்கமாட்டாதே அதுசரியல்ல நீஇப்போது இந்தவழியைப்பிடித்துப்போவாயானால் ரூமுநகரத்திற்கருகிலுள்ள மைதானத்தில் ஒருகபுறஸ்தானும்கேணியுமிருக்கிறது அதிற்போய்ச்சேருவாயாகில் அவ்விடத்தில்உன்னைப்போல் ஆஜத்துள்ளபக்கீரொருவரிருக்கிறார் அவருடனேகூடிக்கொண்டிருப்பாயானால் இன்னமிரண்டு ஆஜத்துகாரர்கள் வருவார்கள்நீங்கள்நாலுவரும் ஒருமித்திருக்கையில் அந்நகரத்தையாளும்ஆசாதபகுத்பாத்துஷா நீங்களிருக்குமிடத்திற்குவருவார் அப்போதுநீங்களொத்துப்பேரும் அவரவர்கள அகவால்களைச்சொல்லிமுடிந்தபின்புஐந்துபேருடையஆஜத்தும் அல்லாவுதவியினாலே நிறைவேறும் நீஅங்கேபோய்ச்சேரென்றுசொன்னார்.

அப்போதுநானவரைப்பார்த்து நீங்களாரென்றுகேட்டேன் அதற்கவர்நான் அலிரலியல்லாகு அன்னகுவென்றார் அதுகேட்டுநான்அவருக்குத்தசலீமாத்துச்செய்து மிகவும்அதபுடனேநிற்கையில்என்கண்ணை

மருட்டியது பின்புவிழித்துப்பார்த்தேன் அவளெவ்விதமாய்ப் போனு
ரோயெனக்குத்தெரியவில்லை ஆகையால்நானினைத்தேன்இவ்வேளையில்
அல்லாகுத்தஆலா அவர்களைக்கொண்டு நமக்குஉதவிசெய்தானென்று
மிகவும்அல்லாவைப்புகழ்ந்து அவர்கள்சொன்னவழியாகநடந்து றாமு
நகரத்திற்குச்சமீபமாய்ப்போகையில் கபுறஸ்தானுங்கோரியுமிருந்தது
நான்அவ்விடத்திற்போய்ப்பார்க்கமுதலாவதுபக்கீராகியஇந்தமுகம்மது
கபுரெபஷ்பவரிருந்தார் நான்இவரைக்கண்டு மலாக்கத்துசெய்துஒருவ
ர்க்கொருவர் பிரியமாகப்பேசிக்கொண்டு காலங்கழித்துவருகையில் இ
ந்தஇரண்டுபக்கீர்களும் ஒவ்வொருவராக வந்துசேர்ந்தார்கள் இதுவே
என்னுடையஅகவால்கேளுங்கள் பாத்துஷாக்களுக்கெல்லாம்சக்கிரவர்
த்தியாகிய பாத்துஷாசிரேஷ்மணியே மற்றமூனுபக்கீர்களே இதனு
லேதான் எனக்குப்பக்கீரென்கிற பெயருண்டானதென்று இரண்டாவ
துபக்கீர் சொல்லிமுடித்தார்.

இரண்டாவது பக்கீர்கிஸ்ஸா முற்றிற்று.

———

பிசுமில்லாகி.

# மூன்றாவது பக்கீருடையகிஸ்ஸா

குராஜானி தேசத்தையாண்ட அப்துல் நவாசிபாத்துஷாமகன்

சம்சதீன் பாத்துஷாகதை.

இவ்விதமாக இரண்டாவதுபக்கீராகிய அக்பர்பாத்துஷா தன்னுடையஅகவாலைச்சொல்லி முடித்தவுடனே மூன்றாவதுபக்கீராகிய சம்சதீன்பாத்துஷாவெழுந்து தசலீஞ்செய்துஉட்கார்ந்து ஆசாத்பகுத்பாத்துஷாவையும் மற்றபக்கீர்களையும் பார்த்துச்சொல்லுகிறார் கேளுங்கள் பாத்துஷாக்களுக்கெல்லாம் சக்கிரவர்த்தியாகியபாத்துஷாவே என்தோஸ்தியாகியபக்கீர்களே நாம்பிறந்துவளர்ந்துபக்கீரான அகவாக்களைச்சொல்லுகிறேன் நீங்களென்மீது கிருபைவைத்துகேளுங்கள் நான்குராஜானி தேசத்தைராஜரீகஞ்செய்த அப்துல்நவாசி பாத்துஷாவுடையமகனென்பெயர்சம்சதீன் நான்பிறந்தஐந்தாம்வயதில் என்தகப்பனார்என்னை ஓதவைத்தார்நான்குரான் முழுமையுமோதி அதிலுள்ளஷாகுமுதலியநான்கும்மற்ற உக்கும்மளையுமறிந்து ஆனையேற்றம்-குதிரையேற்றம் விற்பரிட்சைமுதலியவைகளையுங்கற்று இராஜதந்திரமுதலானதையு மறிந்துதாய்தகப்பன் முதலிய பெரியோர்களுக்கும்மற்றகுடிபடைமுதலியபலர்க்கும்நல்லபிள்ளையென்கிறபெயரெடுத்துப் பதினாறுவயதானபின் எங்களபாவாராசக்கு இளவரசுபட்டங்கட்டினார் அப்போதுஎனக்குமுக்கியமானவேலையொன்றுண்டு அதென்னவென்றால் அம்பும் வில்லுமெடுத்து ஒருகுதிரையின்மேலேறி காட்டிற்குப்போய் மிருகஜாதி முதலானவேட்டையாடிவருகிறதுண்டு அப்படிநான் அடுத்தடுத்துப்போய்வேட்டையாடிக்கொண்டுவரும் நாளையிலொருநாள் அம்புமுதலியஆயுதங்களையெடுத்துக்கொண்டு காற்றிலும்வேகமாகப் போகப்பட்ட பஞ்சகல்யாணிக்குதிரைமேலேறி யெப்போதும்போகாதபுதிதாகியகாட்டிற்கு வேட்டையாடப்போனேன் அவ்விடத்தில்யாதொருமிருகங்களு மகப்படாமையால் அந்தக்காடுமுழுமையுஞ்சுற்றியேதாவதுமிருகமகப்படுமென்றுபார்த்துவரும்போது எனக்கெதிரில் ஒருமானோடிவந்தது அந்தமானானதுமிகுந்தஅழகுள்ளதாய் தளதளப்புடனே பளபளப்பாயிருந்தது அதனுடையகாதுகளிரண்டிலும் பாவலிகுத்தியிருந்தது அதுகண்டுநானினைத்ததாவது இந்தமானையாரோவைத்து வளர்த்தார்கள் போலிருக்

கிறது அவர்களைவிட்டு இது தப்பி இந்தக்காட்டிலவந்து விட்டதுபோலி ருக்கிறது ஆகையால் இதுமிகவும் அழகுஞ் சவுந்தரியமுமாயிருக்கிறபடி யால் இதையாதொரு இம்சைசெய்யாமல் கைபிடியாகப்பிடித்து நமது நகரத்திற்குக்கொண்டுபோய்ச் சேரவேண்டுமென்று ஆசையோடு அத ன்சமீபத்திற்போனேன் அது ஓடத்தலைப்பட்டது நானும்பின்தொடர்ந் துபோனேன் அப்போதந்தமானானது காடுகளிலும் முள்ளுகளிலும் புல் லுகளிலும் புதறுகளிலும் நுழைந்து ஓடினது நானும் அதனுடனேவிடே ன்கொடேனென்று தொடர்ந்துபோகையில் என்சரீரமெல்லாம் முள்ளு கள் கிளைகள்பட்டுக்கிழிந்து அனேகக்காயமானது அப்படிகாயப்பட்டும் அந்தமான் அகப்படுகிறதற்கு ஏதுவில்லாமற்போய்விட்டது.

அதனுலெனக்கு மிகவும்வருத்தமானபடியால் கோபம்பிறந்து ஆ க்ரமித்து எனகையிலிருந்தவில்லில் அம்பைப்பூட்டி அந்தமானின்மே லெய்தேன் அந்தஅம்பானது மானினுடைய புறங்காலிற்பாய்ந்தது உட னே அந்தமானானது காலிற்பாய்ந்தஅம்புடனே வெகுவிசையாயோடி வெகுதூலைவில்ஒருகுடிசையிருந்துஅந்தக்குடிசைவீட்டில் நுழைந்தது நானுமதைவிடாமற் றொடர்ந்துபோய் குடிசைக்குச்சமீபத்தில நின் றுயோசித்தேன் இந்தமானைவளர்த்தவர்கள இந்தகுடிசையிலிருக்கிறா ர்கள்போலேகாணப்படுது அவர்களிதை வெகுபிரியமாக வளர்த்தார்க ளோ அதுநமக்குத்தெரியவில்லை ஆகையால்வளர்த்தவர்கள் அம்புடனே போனமானைக் கண்ணிற்கண்டால வயிறெரிந்து என்னவருத்தப்படுவா ர்களோ ஒருவேளை அவர்கள நம்மைக்கண்டால் கோபம்வந்து பத்துவா னென்னுஞ்சாபத்தைக்கொடுத்தாலும் கொடுப்பார்கள் இதற்குநாமென் னசெய்யலாமென்று அதிகவருத்தத்துடனேயெண்ணிமனந்தேறிவந்த துக்கத்தையெல்லாம அனுபவிக்கத்தானேவேண்டியது ஆகிலும் இவ்வி டத்தில்நடக்குஞ்சங்கதியை முற்றிலுங்கண்டறிந்து போகவேணுமெ ன்றுயோசித்து அந்தக்குடிசையோரத்திலொண்டி அங்கேயென்னநடக் கிறதென்று உள்ளேபார்க்கையில் அந்தக்குடிசைக்குள்ஒருபக்கீரிருந்து அவர்அந்தமான்போனவுடனே அந்தக்கட்டித்தழுவிஓவென்றசத்தமா ய்க்கூக்குரலிட்டழுதார் நான் அதைக்கண்டு மிகவும்மனம்வருந்தி அதி கசாக்கிரதையாய் குடிசைக்குள்ளேநுழைந்து அவர்சமுகத்தில் தசுலீ லுஞ்செய்து அவரைப்பார்த்து பாவாநீங்கள்என்பேரில்கோபங்கொண் டுசாபங்கொடுக்கவேண்டாம் நான்நீங்கள் வளர்க்கிறமானென்று தெரி யாமல்அம்பெய்துவிட்டேன் ஆகையால் தாங்கள்அல்லாகுத்தஆலாவுக் காகநான்செய்த குற்றத்தைப்பொறுத்து இரட்சித்து என்னைக்காப்பா ற்றவேண்டுமென்று மிகவும்வேண்டிக்கொண்டு அவருக்குஆறுதல்தே

றுதல்சொன்னேன் அவர்நான்சொன்னதை யங்கீகரித்துயென்னைப்பார்த்துகேளும்பாவா நீயென்னசெய்வீர் ஒருபவிதிவழியிற்றங்காதென்கிற பழமொழியைப்போலாயிற்று இனிபடவேண்டியதைப்பட்டுத்தான்துலைக்கவேண்டியதுஎன்று என்னையுட்காரச்சொன்னார் அப்படியேயுட்கார்ந்தேனைபின்புநானும் அந்தப்பக்கீருமாக மானின்காலிற்றைத்திருந்த அம்பைப்பிடுங்கி காயத்துக்குப்பச்சிலை மூலிகைகளாலான மருந்துகட்டிவிட்டோம் பின்புநான்அந்தபக்கீரைப்பார்த்து மிகவும்அதபுடனேபங்கிமுதலியதகலீம்செய்துபாவாநான்என்னுடையநகரத்திற்குப்போய்வருகிறேன் தாங்கள்விடைகொடுத்தனுப்ப வேண்டுமென்றுசொன்னேன் அவரென்னைப்பார்த்து பாவாபொழுதுபோகிரசமயமாச்சுது உமது நகரமோவெகுதுலைவிலிருக்கிறது அதற்குப் போகவேணுமானால் இந்தக்காட்டிலேதுஷ்டமிருகங்கள் இரவில்வந்துதங்குகிறதுண்டுஆகையால் நீர்இவ்விரவில் தனியாய்ப் போகலாகாது இன்றைக்கிவ்விடத்திலேதானேயிருந்துநாளைக்காலமே போகலாமென்று மிகவும்வருந்திஉபசாரத்துடனேசொன்னார்.

அதைகேட்டுநான் அவர்சொல்லைத்தடுக்கூடாதென்று அவ்விரவில் அவருடனே தங்கியிருந்தேன் அப்போதந்தப்பக்கீர் தனக்காகச்சமையற்செய்திருந்தஒசீவனமுதலியபதார்த்தங்களைக்கொண்டுவந்துவைத்தார்அவைகளை நானுமவருமாகப்புசித்துப் பசியாறினபின்பு யெனக்கொருஜாகாவில்பிசானைவிரித்துப் படுத்துக்கொள்ளச்சொன்னார் அப்போது நான்காடுகளிலும் செடிகளிலும் முள்ளுகளிலும் கல்லுகளிலும் அலைந்துவருத்தப்பட்ட அலுப்பினாலே நித்திரைசெய்து இரண்டுஜாமததிற்குமேல்முழித்து எழுந்திருந்துபார்க்கையில்அந்தக்குடிசையின்வாசலில்ஒருதிரைச்சீலை சுற்றிலுமறைத்துக்கட்டியிருந்தது அந்தத்திரைக்குள்ளேயொருவர்சிணுங்கி பரதவிக்கிரசத்தங்கேட்டது அதைக்கேட்டு நான்இதென்னபுதுமையோ தெரியவில்லையேயென்றெண்ணி மெள்ள திரைக்குச்சமீபத்திற்போய் அதைநீக்கிப்பார்க்கையில் அந்தப்பக்கீருட்கார்ந்துகொண்டுதலையில்புடவையை முக்காடுபோட்டுக்கொண்டழுகிறவர்நான்பார்த்ததைக்கண்டு வெட்கப்பட்டுஎழுந்து திரைக்கப்புறம் போய்விட்டார்.

அப்போதுநான் இந்தத்திரைக்குளிருப்பதென்னவென்று உற்றுப்பார்க்கையில் நாற்காலியின்மீது ஒருபெண்ணானவள் தங்கமயமாகஉட்கார்ந்துகொண்டிருந்தாள் அவளுடைய அழகையும் சவுந்தரியத்தையும்ரூபலாவண்ணியத்தையும் இன்னவிதமென்று உவமித்துச்சொல்லயென்னால்முடியாது அப்பேர்ப்பட்டபெண் கண்ணைமூடாமலும்இமைதட்டாமலும் என்னையொரேபார்வையாகப் பார்த்துக்கொண்டுகுஞ்சிரிப்பாகச்சிரித்தாள அவளைநான்கண்டவுடனே ஒருமயக்கம்வந்துகீழே

விழுந்து வெகுநேரத்திற்குப்பிறகு மயக்கந்தெளிந்தெழுந்திருந்து அவள்சமீபத்திற்போய் சலாஞ்சொன்னேன் அதற்கவள்பிரத்திசொல்லாமற் சும்மாவிருந்தாள் அதுகண்டுநான்மிகுந்த கோபங்கொண்டு ஒருபெண்ணானவள்இவ்வளவு கர்வத்துடனேநாம்சொன்ன சலாமுக்குப் பிரத்திசொல்லாம லிருக்கவேண்டியகாரணமென்ன அதையவளிடத்திலேயே கேட்போம் அதற்கவள்என்னசொல்லுகிறாளோபார்ப்போமென்றெண்ணி அவளைப்பார்த்து பெண்ணேஉனதுவாயைத்திறந்து நான்கேட்குங் கேள்விக்குப்பதிலுத்தரவு கொடுக்கவேணுமென்று மிகுந்தமரியாதையுடனேசொன்னேன் அப்போதுமவள் ஒரேபார்வையாக யென்னைப்பார்த்துக்கொண டிருந்தாளேயொழிய வாயைத்திறந்து நான் சொல்லுஞ் சொல்லுக்குப் பதில்சவாபு கொடுக்காமலும் அசையாமலும் இருந்தாள்.

அப்போதுநான் அவளிருக்கிறவுலாசத்தைக்கண்டுஆத்திரம்பொறுக்காமல்அவளுடைய இரண்டுகாலிலும் போய்விழுந்து அவளைச்சந்தோஷப்படுத்தினுமானால் அப்போதாவதுநம்மீது இரக்கம்வைத்துப் பேசமாட்டாளாவென்றெண்ணி அவளுடையகால்களிரண்டிலும போய்விழுந்துகெட்டியாய்ப்பிடித்துக்கொண்டேன் அப்போதவள்கால்மனுஷர்காலானால் மிர்துவாயிருக்கும் அப்படிக்கில்லாமல்கெட்டியாயிருந்தால்எனக்குச்சந்தேகமுண்டாகிக் கைகளாற்றடவி யுற்றுப்பார்க்கையில்அதுஒருமரத்தனாலேசிலைசெய்து அதற்குவர்ன முதலானதும்வைத்து ஆடைமுதலியதுமுடுத்தி அனேகஆபரணங்களைப்பூட்டி அலங்கிர்தஞ்செய்திருந்தது அதுகண்டு நான்இதைவைத்துக்கொண்டிருக்கிரமதிதன் இசுலாயான குலத்திற்பிறந்து பக்கீராயிருந்து இந்தச்சிலைக்காகயீமானகொண்டு சாஷ்டாங்கதெண்டனிட்டு அழுதுபாதனித்து வணங்கிக்கொண்டிருக்கிறானென்றெண்ணி அந்தப்பகீர்மேல்மிகவுங்கோபமாகி அவனையெனகைவாளினாலே இரண்டுதுண்டாக வெட்டிப்போடவேணுமென்றெண்ணங்கொண்டு இராமுழுவதும்முழித்திருந்துவிடிந்ததின்பிறகுசரிப்படுத்த வேணுமென்றிருக்கையில்பொழுதுஉதயமாச்சுது அந்தச்சமயத்தில்நான்பார்த்ததால் வெட்கப்பட்டுவெளியிற்போன பக்கீர்குடிசைக்குள்வந்து நுழைந்தான்.

அப்போதுஎனக்காத்திரமுண்டாகி வாளையுருவிவெட்டுவதற்காக ஓங்கினேன் அப்போதந்தப்பக்கீரானவர் தலையைச் சாய்த்துக்கொடுத்துநான்படுகிற அவஸ்தைக்கு யென்னை ஒரேவெட்டாய்வெட்டிவிடுவீரானால்உமக்குஅல்லாகுத்தஆலா மிகவுங்கிருபைறகுமத்துச்செய்வான் ஆகையால்என்னைக்கொன்று உமதுகையால்அடக்கஞ்செய்துவிடவேணு

மென்றுசொன்னார் அதுகேட்டு நான் இதிலேதோவொரு அதிசயமிருக்
கிறது அதைநாம் பரிசோதிக்கவேண்டுமென்றுநினைத்து ஓங்கினவாளையு
றையிலேபோட்டுபக்கீரைப்பார்த்து ஓபக்கீரே நீ இந்தச்சிலையைவைத்து
வணங்குகிறவிபரத்தையும் நான்மிகுந்ததுயரப்பட்டுக்கொண்டிருக்கி
னென்றுசொன்னசங்கதியையும் எனக்குவிபரமாகச் சொல்லவேண்டு
மென்றேன் அப்போதவர் என்னைப்பார்த்துமிகவுந்துரயத்துடனேயழு
துபரதவித்துப் பாவா அந்தச்சங்கதியைக்குறித்துயென்னைக்கேட்கவே
ண்டாமென்று மிகவுங்கெஞ்சுதலையான வணக்கத்தோடுசொன்னார் அ
துகேட்டுநான் அவர்மனதைத்திருத்தி நீ பிடிவாதமாகச்சொல்லுகிறது
சரியல்ல நீ எந்தவிதத்திலும் அந்தசங்கதியைச் சொல்லத்தான்வேண்
டுமென்றேன் அப்போதந்தப் பக்கீர் மிகவும்விசனக்கடலில் மூழ்கினவ
ராய் என்னைப்பார்த்துக்கேளும்பாவா நீ என்னைமிகவும் வருந்திக்கேட்கி
றபடியால் நான்சொல்லாமலிருப்பதுசரியல்ல இப்போது நான்பக்கீரா
னவர்சங்கதியைக்கியாபகமாகக்கேள் நானொருவன் மிசுருபட்டணத்திலி
ருக்கும் அப்துல்சீதியென்பவருடைய பிள்ளையென்பெயர் மஞ்சூதென்
றுசொல்லுவார்கள் அந்நகரத்தில் என்தகப்பனுக்குமிஞ்சின ஆஸ்திவந்
தரொருவருமிருக்கமாட்டார்கள் ஆகையாலென்தகப்பனுக்கு அளவற்
ற ஆஸ்திகளிருந்தது அவருக்குநானொருபிள்ளையானபடியால்என பேரி
லவர்மிகுந்தகிருபையையும் உவப்பாகவும் வளர்த்துவந்தார் அப்படிநா
ன்வளர்ந்துவருகையில எனக்குப்பதினாறு பதினேழுவயதாகிபலர்க்கு
ம்நல்லபிள்ளையென்று பேர்பெற்றிருக்கையில் நானொருயோசனைசெய்
தேன் அதென்னவென்றால் நாம்பிள்ளையாய்ப் பிறந்துவளர்ந்து சாமர்த்
தியனாயிருக்க நம்முடையதகப்பன் வர்த்தகஞ்செய்யவேண்டிய காரண
மென்ன அவரைச்சும்மாவிருக்கச்செய்து அவர்செய்கிறகச்சவடமுதலிய
வியாபாரத்தை நாம்செய்யவேணுமென் றெண்ணங்கொண்டு எங்கள்பா
வாவிடத்திற்போய்ப்பணிந்து வணக்கத்துடனே அவரைப்பார்த்துபா
வாவெனக்கொரு எண்ணமிருக்கிறது அதென்னவென்றால் நாற்பத்தெ
ட்டுசீனாவுக்கும் முதன்மையாகியமகாசீனத்துக்குப்போய்ஏதாவதொரு
வர்த்தகஞ்செய்துவரலாமென் றெண்ணியிருக்கிறேன் அதற்கொருகப்
பல்வைத்து அந்ததேசத்துக்குத்தகுந்த சரக்குகளையுமேற்றி அதனுட
ன்என்னையனுப்பிவைக்க வேணுமென்று மிகவும்வருந்திக்கேட்டேன்
அதற்கென்பாவாசொன்னார் என்கண்மணியானரத்தினமே கல்புநிறை
ந்தகருவிலமானமகனேகேள் இப்போது நம்மிடத்தில் அளவிறந்ததிரவி
யமிருப்பதால் நீகடலேறிப்போய் சம்பாதிக்கவேண்டியதில்லை அந்தப்
பொருள்களையெல்லாம் உன்மனம்போலே யெடுத்துக்கொண்டுநம்மு
டையவூரில்தானே உனக்குப்பிரியமாகிய வர்த்தகங்களைச்செய்துக்கொ

ண்டிருகடல்மீதுபோய்ச் சம்பாதிக்கவேண்டுமென்கிற யெண்ணத்தை
மறந்துவிடுவென்னைவிட்டு அரைநாழிகையாவது பிரிந்திருக்க எனக்கும
னம்லராதென்று மிகவும்வருத்தத்துடனே சொன்னார்.

அதுகேட்டுநான் என்தகப்பன்சொல்லைத்தட்டி ஒரே பிடிவாதமா
கச்சாதித்துபெந்தவிதத்திலும் ஒருதடவைபோய் வருகிறேனென்றுஉ
றுதியாய்ச்சொன்னதால் அவரப்படியேபோய்வாவென்றுஉத்திரவுகொ
டுத்துயென்மனம்போலே ஒருகப்பல்வைத்து அதில்மகாசீனத்திற் செ
லவாகப்பட்ட பலசரக்குகளையுமேற்றி அதிலுள்ளமாலுமிதண்டல்கிளா
ஸ்க்காரர்கள்முதலிய வேலைக்காரர்களுக்குமென்சொற்படிநடக்கும்படி
யாக ஆக்கியாபித்து யென்னையுங்கப்பலேற்றியனுப்பிவிட்டார் அப்போ
துநான்கப்பலிற்பாய்விரித்து மகாசீனத்தைநோக்கி ஆறுமாதமவரையி
லோடி அந்தமகாசீனத்துக்குச்சமீபமாய்க் கப்பல்போகும்போதும்போ
து அங்நகரத்திலுள்ள மேன்மாடகூடவுப்பரிகைகள் பள்ளிகள்மணராக்
கள்கோரிகள்நாலடுக்கு ஐந்தடுக்குமெத்தைகள் அந்தலூரையாளும்பாத்
ஷாவுடைய அரண்மனை ஆஸ்தானமுதலிய அந்தப்புரங்கள் இவைக
ளெல்லாம்பச்சை-மரகதம்-மாணிக்கம்-வைடூரியம்-கோமேதகம்-நீலம்
புஷ்பராகமென்னும் நவரத்தினங்களையழுத்தி லும்மிசுவேலைசெய்திருப்
பதால்அவைகளினுடைய பிரகாசங்கள அனேகஞ்சூரியர்களெழுந்து ஒ
ரேகாலத்தில் பிரகாசிக்கத்துபோலிருந்தது நானதைப்பார்த்து மிகுந்
தமகிழ்வடைந்து அந்தத்துறைமுகமபிடித்துக் கப்பலில்லங்கர்பாய்ச்சி
அதிலுள்ளசரக்கு சாமான்களையெல்லாமிறக்கி ஒட்டிக்கிரட்டியானலா
பத்துடனேவிற்றதுமேபாக மீதியானபட்டுபட்டாவளிமகமல்பீதாம்பர
ம்காஸ்மீர்சால்வை சூரத்துச்சரிகை முதலியவேலைகளாற்செய்தஆடை
களை இவைகளையெல்லாம் அவ்விடத்திலொருவருங்கேளாமல் சும்மமா
யிருந்தது அதனால்சிலபேர்கள் என்னைப்பார்த்து ஒசவுதாகரே இந்தம
கர்சீனத்தில சவுளிகடைக்கிடங்குகளிலும் மாளிகையிலும் வைத்திருந்
தால்விற்கமாட்டாது சில்லரைச்சரக்குகள் சவுளிகள்விற்கும்படியான
பஜார்கடைகளிற்கொண்டுபோய்க் கடைவைத்திருப்பீரானால் அங்கே
வெகுமனிதர்கள்கூட்டங்கூடியிருப்பார்கள் அவர்கள்இவைகளைவாங்கு
வார்களென்றுசொன்னார்கள்.

அப்படியேநான் ஜவுளிச்சரக்கை பஜாரிற்கொண்டுபோய் அவ்
விடத்தில் ஒருகடையை வாடகைக்குவாங்கி அதிற் கடை வைத்தே
ன்அங்கே வருகிறவர்கள் என்னிடத்தி லிருக்கும் ஜவுளிகளைப்பா
ர்த்து அதற்குத்தகுந்த விலையாகக் கேட்கவில்லை யெனக்கும் அ
வர்கள் கேட்கும் விலைக்குக் கொடுப்பதற்கு யெனக்கு மனமில்
லாமல் மூன்றுநாள்வரைக்கும் கடைவைத்துக்கொண் டிருந்தேன்

ஒருதுணியாகுது விற்கவில்லை அப்படியிருக்கையில் நாலு நாள் பகல் ஒருமணிநேரத்தில் ஒருதாதியானவள் வந்து பட்டுப்பட்டாவளி முதலிய சகல ஆடைகளையும் பார்த்து எனக்குச்சொன்னாள் கேளும் சவுதாகரோ இதுகளடங்கலையும் எங்களிசமானி வாங்கிக்கொள்வாளேயொழிய மற்றொருத்தரும் இதை வாங்கமாட்டார்கள் ஆகையால் என்னுடன்கூட யெடுத்துக்கொண்டு வாருமென்று என்னையுமழைத்துப்போய் அரண்மனை வாசலில்வைத்துவிட்டு உள்ளேபோய் தன்னுடைய யசமானியிடத்திற் சொல்லி உத்தாரவு பெற்றுக்கொண்டு அவளென்னிடத்தில் வந்து சொல்லுகிறாள் ஓசவுதாகரே எங்களிசமானி உம்மையுள்ளேவரும்படிச் சொன்னாள் ஆகையால் இது சவுளிகளையெடுத்துக்கொண்டு வுள்ளேபோவென்று சொல்லி அவள் பஜாருக்குப்போய்விட்டாள் அதுபின்பு நானந்த அரண்மனைக்குள்ளே போகும்போது வெகு உல்லாசமாகவும் திருந்த அலங்கிர்தமாகவும் ஆடையாபரண பூஷணாதிகளையணிந்து ஒருபெண்ணானவள் ரெட்டசோபிதமாக விருந்தாள் அவளை நான்பார்த்து நீயேனென்னை வுள்ளே வரும்படியாய்ச் சொன்னாயென்று கேட்டேன் அப்போதவளென்னைப்பார்த்து உன்னை வரும்படியாய்ச் சொன்னது நானல்ல எங்களிசமானி வரவழைத்தாளாகையால் உள்ளேபோவென்று சொன்னாள் அப்போது நான் இவளே இவ்வளவு அழகுசவுந்தர வசீகரமாயிருந்தால் அவளெவ்விதமாகிய அழகாயிருப்பாளோவென்றெண்ணி வுள்ளே போனேன் அங்கேயொருத்தி இவளினும் அதிகசவுந்தர வடிவுள்ளவளாயொருத்தியிருந்தாள் அவளைப்போய்க்கண்டு ஏனென்னை யழைத்தாயென்று கேட்டேன் அவளும் நானல்லவுள்ளே போவென்றாள் இந்தப்படியாக ஒருத்திக்கொருத்தி அழகுசவுந்தரியத்திலும் பேச்சின் சாதுரியத்திலும் அதிகமாக ஏழுகட்டு வாசலிலும் எழுவிருந்தது அந்தப்பெண்களெல்லாம் உள்ளேபோ வுள்ளேபோவென்றார்கள் அப்போது ஏழுகட்டுவாசலையுங்கடந்து வுள்ளேபோகிறபோது பார்க்கிறதற்குப் பிரமிக்கும்படியான அலங்காரமுள்ளதாகவும் மெத்தை விட்டோன்றிருந்தது அந்தவீட்டிற்குள் மத்தியில் தங்கத்தகட்டில் நவரத்தினங்க ளழுத்திய ஒருநாற்காலியின்மீது ஒருபெண்ணானவளிருந்தாள் அவளைச்சுற்றியநேகந்தாதிப்பெண்கள் நின்றுகொண்டு வெண்சாமரம்போடவும் சில பெண்கள் ஏவற்பணிவிடைசெய்யவும் இன்னமனேகபாதிரியானவிதமாதங்களாயுமிருக்கிற வெண்டேசத்தைக்கூட்போய் நடுவிலிருக்குற பெண்ணைப்பார்த்து என் மனமானது மெய்மறந்து நினைவுதெரியாமல் மயங்கிக்கீழேவிழுந்து மூர்ச்சையாய்ப் போனேன் அப்போதங்கேநிற்கிற தாதிகளோடிவந்து என்னைத் தூக்கிவுட்காரவைத்து மயிலவிசிறி முதலானது

ளால்லிசிறி ரெம்ப ருபசாரணைசெய்து நின்றார்கள் அப்போது எனக்கும யக்கந்தீர்ந்து தயிரியப்பட்டு அந்தப்பெண்ணைப்பார்த்தேன் அவள்முகமானது சோடசகலைகளோடுங்கூடிய பூரணசந்திரனுக் கொப்பாகப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறாள் அவளருகிலிருக்கிற பெண்களெல்லாந்தாரகைகளைப்போற்சொலித்துக்கொண்டிருக்கிறார்கள.

அவர்களுடுத்தியிருக்கிற ஆடைகள்முதலியதும் அணிந்திருக்கிற ஆபரணமுதலியதும் சூடியிருக்கிற புஷ்பமுதலியதும் இன்னவிதமென்று வர்ணித்துச்சொல்லவென்றால்முடியாது அப்படியிருக்கிற யசமானியாகியபெண்ணருகிற்போய்என்னையழைத்தகாரணமென்னவென்றுகேட்டேன் அவளென்னைப்பார்த்து ஓவர்த்தகரே உம்முடைய வியாபார மாகியபட்டு பட்டாவளிமுதலிய இருசுகளையெடுத்துக்காண்பியுமென்றாள் உடனே நான்என்னிடத்திலிருந்த உயர்ந்தபீதாம்பரமுதலிய சவுளிகள்யெல்லாம் இருசுவாரியாயெடுத்துக் காண்பித்தேன் அதுகளையெல்லாம் அவள்பார்வையிட்டு ரொம்பசந்தோஷமாகி அதன்விலைகளெல்லாங்கேட்டு கணக்கெழுதிவைத்துக்கொண்டு நான்கொண்டுபோனசவுளிமுழுமையும் ஒன்றாவது மிச்சமில்லாமலெடுத்துக்கொண்டாள் அப்போது நானினைத்தேன் ஓகோ கொண்டுவந்த சவுளிகளையெல்லாமெடுத்துக்கொண்டபடியால பணத்தை முழுதிலுமகொடுத்துப் போகச்சொல்லிவிடுவாளே அப்போதந்தப் பணத்தைப்பெறறுக்கொண்டுவெளியேபோய்விட்டோமானால் இன்னமொருதடவை யிப்பேர்ப்பட்டவளுடைய ரூபலாவண்ணியங்களைப்பார்க்கவும இவள்சாதுர்யமான வார்த்தைகளைக்கேழ்க்கவும் இப்பேர்க்கொற்ற சமயங்கிடைக்கப்போகுதாவென் றெண்ணி வியாகூலப்பட்டிருக்கையில அவள்நான்கொடுத்த சவுளிகள்முதலானதற்கெல்லாம் இருசுவாரியாய்க் கணக்கெழுதி அதின்விலைகளைப் போட்டு மொத்தப்படுத்தி என்னிடத்திற்காண்பித்து இவ் வளவு தொகையாச்சுதென்றுசொல்லி அந்தக்கணக்கைத் தன்பெட்டியில் வைத்துப்பூட்டிக்கொண்டு யென்னைப்பார்த்துச்சொன்னாள்.

ஓவர்த்தகரே நீர்நாளைக்காலையில்வந்தால் உமதுபணத்தைத் தருகிறேன் வாங்கிக்கொண்டு போகலாம இப்போதுநீரிருக்கிற ஜாகைக்குப் போகலாமென்றாள் அப்போது நானவளுக்கு ரொம்ப மரியாதைசெய்து அவளிருக்கிறமெத்தையைவிட்டிறங்கி ஏழுகட்டையுங்கடந்துஎன் ஜாகையை நோக்கிவெளியேபோகிறபோது நினைத்தேன அதென்னவென்றால் அல்லாவைப்புகழ்ந்து ரொம்பவும்வருந்தித் துவாக்கேட்டுஇப்பேர்க்கொற்றபெண்ணை எனகண்ணிற் காட்டினையே இதுபோலே யென்பேரிற் கிருபைபெருகும்படிச்செய்து எனகயாத்தென்னுஞ் சீவனுள்ளவரையி

லும் அவள்பணங்கொடுக்காமல் தினந்தவணைசொல்லி வரவேண்டியது அப்படிகெடுவு சொல்லிக்கொண்டு வருவாளாகில் தினமொருதரம் அவளை யென்கண்ணினாற்பார்த்துக்கொண்டுவந்தால் அதுவேரொம்பசிலாக்கியமாயிருக்குமென்று நானிருக்குமிடம்வந்துவிட்டேன் அன்றைக்குப்போய் மறுநாட்காலையிலெழுந்து செய்யவேண்டியகிரமங்களைமுடித்து நாஸ்தாசெய்துகொண்டு அந்தப்பெண்ணிருக்கிற அரண்மனை யேழுவாசலுங்கடந்து இரவுண்டெக்கையினுள்ளேபோய் அவளைக் கண்டு யென்மனங்குளிர்ந்து ஒருபுஜமிருபுஜமாய்ப் பூரித்துநின்றேன் அப்போதவளென்னைப்பார்த்து நாளைக்குவாவென்றாள் அதைக்கேட்டு அடங்காமகிழ்ச்சிகொண்டு ரொம்பவுஞ் சந்தோஷமாக வெளியேவந்துவிட்டேன் இப்படிநான் தினந்தினம்போகிறது அவளுமப்படியே கெடுவுசொல்லிக்கொண்டு வருகிறது இவ்விதமாய் ஒன்பதுநாள்போய்பத்தாநாள் காலையில் அவள்சமுகத்திற்போய்நின்றேன் அவளொருதாசியை யழைத்துகலந்தாம் பெட்டியையெடுத்துவாவென்றாள் அப்போதெனக்கு இன்னவிதமென்று சொல்லக்கூடாத விசனம்வந்து இவள்நமக்குப் பணங்கொடுத்துவிடப்போகிறாளே யதைவாங்கிக்கொண்டு வெளியேபோய்விடவேண்டுமே பின்புஇந்தப்பெண்ணையெப்போது நாம்காணப்போகிறோமென்றயெண்ணத்தோடிருக்கும்போது தாதியானவள் அந்தப்பெட்டியைக்கொண்டுவந்து யஜமானிமுன்வைத்தாள் அவளதைத்திறந்து ஒரு கடிதத்தை யெடுத்தெழுதி மடித்துமுத்திரைவைத்துயென்கையிற்கொடுத்து அவளென்னைப்பார்த்துச்சொல்லுகிறாள் ஓவர்த்தகரே இந்தக்கடிதத்தைக்கொண்டுபோ யிவ்வூருக்குவெளியே யொருபூந்தோட்டமிருக்கிறது அந்தத்தோட்டத்திற்குள்ளேபோனால ஒருபங்களா விருக்கிறது அந்தப்பங்களாவாசலில ஒருசிப்பாய் காவலாயிருப்பான் அவனைப்பார்த்தால் மகா கொடூரமுள்ளக்கோபக்காரனும் அவனுடையநிறம்புலிநிறமாயுமிருப்பான் அவனுன்னைக்கண்டவுடனே இடியிடித்ததுபோற்சத்தமிட்டு நீயெங்கேவந்தாயென்று கேழ்ப்பான் அதற்குப்பயப்படாமற் சொல்லவேண்டியது உள்ளேயிருக்கிற இராஜகுமாரனுக்குக் கடிதங்கொண்டுவந்தேனென்று சொல்லும் அவனும்மையுள்ளேபோகச்சொல்லுவான் அதுபோலேநீர் அந்தப்பங்களாவிற்குள்ளேபோய் ஒருயிரும்புக்கூண்டிற்குள் ஒருமனிதனிருக்கிறான் அவனிடத்திலிந்தக் கடிதத்தைக் கொடுப்பீரானால் அவன்வாசித்துப்பார்த்து அதற்குப்பதில் ஜவாப்புச்சொல்லுவான் அதைநீர்கேட்டுக்கொண்டுவந்து யென்னிடத்திற்சொன்னால் உமக்குக்கொடுக்கவேண்டிய தொகையைத் தருகிறேனென்று சொன்னாள் உடனேநான் அக்கடிதத்தைவாங்கிக்கொண்டு அவள்சொல

லிப அடையாளம்போலேந்தப்பூந்தோட்டத்திற்குள்ளேபோய் அந்தப்பங்களாவைக்கண்டு வாசலில் நின்றுகாவலிருக்கிறசிபாயைப்பார்த்தால் அவனோமனிதனென்றுசொல்லக்கூடாது அவனென்னைப்பார்த்து வெகுதூர பார்த்துடனே சத்தம்போட்டு நீயாரடாவந்தாயென்றுகேட்டான் அப்போதென்னுயிரென்னிடத்திலில்லாமல் மிகவும் வெலவெலத்துப்பயந்து காலின்வழியேசலவாதைக்கு வருகிறதாயிருந்தது.

அவனைவிட்டு நாம்தப்பிப்போகிறதற்கு வழியில்லை எந்தவிதத்திலேயும் நம்மைக்கொன்றுபோடுவானைப்போலிருக்கிறதென்று யோசித்து மனைத்தைரியப்படுத்தி உள்ளேயிருக்கிற இராஜகுமாரனுக்குக் கடிதங்கொண்டுவந்தேனென்றுசொன்னேன் அப்போதவனென்னைப் பார்த்து உள்ளேகொண்டுபோவென்றான் இப்போவெனக்குச் சந்தோஷமாகி அந்தப்பங்களாவுக்குள்ளேபோய்ப் பார்க்கையில் ஒருயிரும்புக் கூண்டில் அவள்சொன்ன இராசகுமாரனையடைத்து யிரண்டு காலுக்கும் கைக்கும் விலங்குமாட்டி யடைத்துவைத்திருக்கிறது நானந்த கூண்டினருகிற்போய் உள்ளேயிருக்கிறவனையிடந்தக் கடிதத்தைக் கொடுக்க அதையவன்வாங்கி வாசித்துப்பார்க்கும்போதுஇரண்டுகண்களிலும் கண்ணீர் தாரைதாரையாய்ச் சொரிந்தழுதுக்கொண்டிருக்கிறான் அப்போதுநான்சொன்னத்தக் கடிதத்திற்குப் பதிற்சொன்னால்கேட்டுக்கொண்டுபோகலாமென்று அவனைப்பார்த்துக்கொண்டிருந்தேன் அப்போதந்தப்பங்களாவில் ஒருமையிலிருந்திரண்டுபேர் ஜவான்களோடி என்னருகில்வந்து நான்நின்றுக்குத்துவிழுந்தாலுகையுமாகக் குலைத்து அடித்து பாதபாடெல்லாம்படுத்தி என்னிரண்டுகாலிலுங்கயிற்றைப்போட்டுகட்டி இழுத்துபங்களாவுக்கு வெளியேகொண்டுபோய் அந்தப்பூந்தோட்டத்து வேலிக் குழிற்போட்டுவிட்டார்கள்.

அப்போதுநானந்த வேலிக்கருகிலிருந்து ரொம்பவும் வருத்தப்பட்டு ஆயாசத்துடனேயிருந்துநானெழுந்திருக்கவுஞ் சக்தியில்லாமலிருக்கும்போது நாலுபேர்தாதிகளோடிவந்து ஒருடோலியிலென்னைத் தூக்கி வளர்த்திவெடுத்துக்கொண்டு அந்ததோட்டத்திற் கடுத்தாப்போலொருதோட்டமிருக்கிறது அதற்குள்ளொருமெத்தைவீடொன் றிருக்கிறது அங்கவீட்டிற்குட் கொண்டுபோய்ஒருபாயில்வைத்து அதிலென்னை வளர்த்தினார்கள் அன்னேரத்திலெனக்குக்காகிதங் கொடுத்தனுப்பின பெண்ணானவள் என்னருகில்வந்துநான்பட்ட அடியினாலுண்டானகாயங்களுக்கு ஒத்தடியபகருவங்கள் செய்துசிலஆட்களையுமமைத்து என்னைப்பார்க்கும்படியாய் திட்டஞ்செய்து அவளிருப்பிடம்போய்விட்டாள் பின்பு எனக்குசவுக்கியமாகிறவரையில் அவள்தானிருக்கிறவீட்டிற்கு வந்து பார்த்துக்கொண்டு போவாள் இவளிதமாகச் சிலநாள் சென்று யெனக்

ருச்சொஸ்தமாய்விட்டது அந்தவேளையில் எப்போதும் வழக்கம் போலே அந்தப் பெண்ணானவள் என்னருகில்வந்து யென்னைப் பார்த்துச் சொல்லுகிறாள் ஓய்சவுதாகரே நீர்வந்துரொப்பநாளாகிறது உன்கப்பல் சாமான்கள்முதலிய காரியங்களென்னமாயிருக்கிறதோ அவைகளொன்றுந் தெரியாதல்லவா ஆகையாலதுகளைப் போய்ப்பார்த்துக்கொண்டு நாளைகாலையிலென்னிட அரண்மனைக்கு வருவீரானால் உமது பணத்தைக்கொடுத்து அனுப்பிவிடுகிறேனென்றாள்.

அப்போதவள்சொன்னது எனதிரண்டுகாதிலும் ஈயத்தைக்காய்ச்சிவிட்டதுபோலிருந்தது அதேதெனென்றால் நாம்இவளைஎப்போதும்பார்த்துக்கொண்டே இவளிட்டகிறவேலையைச்செய்துக்கொண்டு முன்பட்ட அடிகளிலும் உதைகளிலும் அதிகமான அடிகள்வந்தாலும் பட்டுக்கொண்டாவது இவளைப்பார்த்துக்கொண்டிருக்கலாமென்று எண்ணியிருந்த எண்ணத்துக்கு விரோதமாக இவளை நாளையதினத்தில் பொருளைக்கொடுத்து அனுப்பிவிக்கிறேனென்றுசொல்ல என்மனதில் வருத்தமுண்டானபடியால் நான் அந்தமெத்தைவீட்டைவிட்டு எழுந்து புலம்பிக்கொண்டே துக்கசாகரத்திலமுழ்ந்தி கப்பலையும் அவ்விடத்திலுள்ள காரியங்களையும்பார்த்து அந்தராத்திரிமுழுதும் தூக்கம்வராமல்ஒரே புலம்பலாக அழுதுகொண்டிருந்தேன் அந்தப்பொழுதுவிடிவது ஒரு யுகமாகவிருந்தது அந்நேரத்திற்பொழுதுவிடிந்து அங்கேநடக்கவேண்டியகாரியங்களையெல்லா முடித்துவிட்டு அந்தப்பெண்ணிருக்கிற அரண்மனை வாசலேழையுங்கடந்து அவளிருக்குமரவுண்மெத்தைக்குள்ளே போய் அவளைக்கண்டு மிகுந்தமரியாதையுடனேநின்றேன் அப்போதவளென்னைப்பார்த்து குஞ்சிரிப்பாகச்சிரித்து ஓவர்த்தகரே நீர்நான்சொன்னவேலையை தட்டாமற்செய்யப் போய்மிகுந்ததுன்பப்பட்டீரல்லவா அதைஉம்முடையமனதில்வையாமல் நான்உமக்குக் கொடுக்கவேண்டிய தொகைக்கு ஒட்டிக் கிட்டியாய்த்தருகிறேன் அதைவாங்கிக்கொண்டு போவென்றுசொன்னாள்.

அதுகேட்டுநான் மனப்புழுங்கியவளைப்பார்த்து பெண்ணேநான் நீசொன்ன வேலையைக்கேட்டு இவ்வளவுகஷ்டப்பட்டது உன்னிடத்தில இனாம்பெற்றுக்கொண்டு போவதற்காகவல்லவென்றேன் அதுகேட்டவளென்னைப்பார்த்து பின்னைநீஎன்னத்தைக்குறித்து இவ்வளவுபாடுபட்டாயென்று கேட்டாள் அதுகேட்டு நானவளைப்பார்த்துகேளும்பெண்கள்சிரோமணியே நானெண்ணிய யெண்ணத்தை உன்னிடத்திற்சொல்லுகிறதற்கு என்னுவெழுவில்லை அதேதெனென்றால் திடலென்று நான நாடியிருக்கிறதைச் சொல்லுகிறவனானால் உன்னுடையமன வெவ்விச

மாயிருக்குமோ தெரியவில்லை ஆகையாலதை நீயேயோசித்துக் கொள்ளவ்வண்டியதென்று சொன்னேன் அதற்கவள்பரவாயில்லைஉன்னெண்ணத்தைவெளியிட்டு எனக்குத்தெரியும்படியாகச்சொல்லவேண்டுமென்றாள் உடனே நான் அவளைப்பார்த்து உன்னைக்கலியாணஞ்செய்து அனேகஞ் சிறப்பும்பெற்றுமகிழ்ச்சியுடனே யிருக்கலாமென்று நினைத்திருக்கிறேன் அதுபோலேநீயும் என்மீதுகிருபைவைத்து எனமனதின்படியே ஒப்புக்கொண்டாயானால் மிகவுநலமா யிருக்குமெனறேன் அப்போதவளுக்கு என்மீதிற்கொண்டகோபமும் வருத்தமும் இவ்வளவென்று சொல்லமுடியாது பின்புஅவள் கோபந்தணிந் தென்னைப்பார்த்துஓவர்த்தகனே நீமிகவும் பெருந்தன்மையுள்ளவனென்று எண்ணி யிருந்தேன் அப்படியிருக்கநீ இப்பேர்ப்பட்டவார்த்தை சொல்லத்தகாது ஆகையால் நீயானபடியினாலே உனக்குச்செய்யவேண்டிய ஆக்கினையை மனம்பொறுத்து மன்னிப்புசெய்துவிட்டேன் இன்னொருவன் இவ்விதமான வார்த்தையைச்சொல்லுவானானால் அவனுடையதலை இரவலாய்ப்போய்விடும் ஆகையால் மறுவார்த்தைசொல்லாமல் நானகொடுக்கிற தொகையைப் பெற்றுக்கொண்டு நீர்உம்முடைய தேசம்போகலாமென்றாள்.

இதுகேட்டுநான் அந்தத்தொகையைவாங்கிக்கொண்டு போகிறதற்குமனமில்லாதவனாய் அந்தப்பெண்ணோடு தர்க்கங்கள்பேசிக் காலதாமசஞ்செய்யலாமென் றெண்ணமாய்அந்தப்பெண்ணைப்பார்த்துஓபெண்ணரசியே எனக்குவேறொரு அபிப்பிராயமிருக்கிறது அதைச்சொல்லுவாயானால் நான்கொண்டிருக்குஞ் சந்தேகம் நிவர்த்தியாகுமென்றுசொன்னேன் அதற்கவள் என்னசந்தேகமதைச்சொல்லுமென்றாள் அதுகேட்டு நானபெண்ணே முன்காகிதமெழுதி என்கையிற்கொடுத்து அந்தத்தோட்டத்திற்குள்ளிருக்கும் பங்களாவிற்குள் பாத்துஷாக் களுடைய அந்தஸ்துள்ளஒருவாலிபனுக்குக் குற்றவாளியைப்போல் விலங்குபோட்டு இரும்புக்கூண்டிலடைத்திருக்கிறதே அந்தவாலிபன்யார் அவனுக்கு நீ கடிதமெழுதிக் கொடுத்துவிட்ட சங்கதியென்ன அவனக்கடிதத்தைப்பார்த்து அழுதுக்கொண்டிருந்ததென்ன அவ்விடத்திலிருந்த யிருவர்களும் என்னையடித்து இழுத்து வெளியிற்போடவேண்டிய காரியமென்ன இவைகளையெல்லாம் எனக்குவிபரமாகச்சொல்வாயானால் நான்கொண்ட சந்தேகம் நீங்குமென்று மிகவும்வருந்தித் தாழ்மையுடன்கேட்டேன் அதற்கவளென்னைப்பார்த்துக் கேளும்வர்த்தகரே இந்தமகாநகரத்தைப் பட்டங்கட்டியாண்ட யென்தகப்பனுக்கு மூத்தசகுந்தாருஷாவென்னும் பாத்துஷா ஒருவரிருந்தார் அவர்காலஞ்சென்றுமவுத்தாய்ப்போ

கிறதருணத்தில் எனதுதகப்பனை யருகிலழைத்து அவருக்கு ஒசியத்தெ
ன்னும வுபதேசத்தைச்சொன்ஞர் அதென்னவென்றால் எனதுகுமார
னுகிய அலாதீனென்பவன் ஏழுவயதுபிள்ளையாயிருப்பதால் அவன்வள
ர்ந்து சமர்த்தனுகித்தன்வயது தனக்குவருகவுடன் இந்தப் பட்டத்தைய
வனுக்குக்கட்டி உன்னுடையகுமாரத்தியையும் அவனுக்குக்கலியாணஞ்
செய்து கொடுத்தச் சகலகாரியத்தையும நீபார்த்துக்கொண் டிருவென
று சொல்லித் தன்பிள்ளையைப் பிடித்தியென்தகப்பன்கையிற் கொடுத்
து அவரிறந்துபோய்விட்டார் பின்புயென்தகப்பனுர் அவரை யடக்கஞ்
செய்துவிட்டு அந்தப்பட்டத்தையென்தகப்பன் கட்டிக்கொண்டு இந்நக
ரத்தையாண்டுவருகிருர் இப்படிநடந்துவருகிறநாளையில் என்பெரியதக
ப்பனுர் குமாரராகிய அலாதீனென்பவருக்குப் பதினாறுவயதாய்விட்டது
அதுகண்டுயென்தகப்பன் இந்தப்பட்டத்தையவனுக்குக்கட்டிநம்முடை
யபெண்ணையுங் கொடுப்போமானுல் நாமவனுக்குக்கீழ்ப்படிந்திருக்க
வேணும இதற்கொருபாயஞ்செய்து அவனுக்குவிலங்குபோட்டு இரு
ப்புக்கூண்டிலடைத்துக் காவலில் வைத்துவிட்டால் நமக்கொரு தொந்த
ரையும் வரமாட்டாது நாமெப்போதும்போல் இந்நகரத்தை யரசாளலா
மென்றுலோசித்து அவ்விடத்தில்சமயல்செய்கிறபண்டாரிகள் முதலான
பேர்களிடத்திற்கபடமான வார்த்தைகளைச்சொல்லியவர்களைத் தன்வசப
படுத்திக்கொண்டு எனதுபெரியதகப்பனுர் குமாரனுகிய அலாதீனென்ப
வருக்குமேற்சொன்ன பண்டாரிகளால் உண்பனமுதலிய தின்பண்டங்
களிலும் குடிப்புகளிலும்மஷதுகளாகிய வஸ்துக்களைக்கலந்து கொடுக்க
கும்படியாய் ஆக்ஞாபித்திருந்தார் அதுபோலேயவர்கள்சோற்றிலுஞ் சா
ற்றிலும் பலகாரத்திலும் பழவர்க்கங்களிலும் குடிப்புமுதலியஷர்பத்து
களிலுங்கலந்து எப்போதுங்கொடுத்துக்கொண்டுவந்தார்கள்.

அதையவர்புசித்துவந்தபடியால் அந்தமயக்கந்தலைக்கேறிப் பயித்
தியங்கொண்டு தெருக்கள் பஜாரகள்தோட்டங்கள் மற்றவிடங்களி லெ
ல்லாம் துணிமுதலியதுங் கிழித்தெறிந்து நிர்வாணமாகப் பிரமித்திக்கொ
ண்டு திரிகிறது அப்படி திரிகையில் கொஞ்சநேரத்தில் தன்சுபாவம த
னக்குவந்து வெட்கப்படுகிறது அதேதென்றால சுபாவமாய்க் கொண்
டபயித்தியமானுல் தீரமாட்டாது இதுகுதினுற்செய்து வருவதானதால்
சற்றுநேரம் பயித்தியந்தணிந்திருக்கிறது அந்தச்சமயத்தைப் பார்த்து
என்தகப்பனுடைய உத்திரவினுலே பண்டாரிகள் ஏதாவதொரு மயக்க
மானவஸ்துவைக் கொடுத்துவிடுவாகள் அதைத்தின்றவுடனே யவர்பி
த்தலும் பினத்தலுமாகத்திரிவார் இவைகளை யெல்லா மவ்வூரிலுள்ள
குடிபடைகளியாவருங்கண்டு என்தகப்பன்செய்தசூதையவர்களகவனி
த்துப் பாராமல் இவர்செய்கிறபயித்திய கோரத்தைப்பார்த்து ஆ ஆ

நமதுபாத்துஷாவுடைய குமாரனுக்கு இப்பேர்ப்பட்ட துன்பமாகியஅ
வஸ்தை வந்ததேயென்று இரக்கப்பட்டுமிகுந்த சஞ்சலத்துடனே யிருந்
தார்கள் இப்படியிருக்கும்போது என்தகப்பன் அவனைப்பிடித்துக்காலி
ற்குங்கைக்கும் விலங்குமாட்டி ஒருகூண்டிலடைத்து அந்தப்பங்களா
வில்வைத்திருக்கிறார் அந்தப்பங்களாவில்வெளியில் காவலிருக்கிறசிப்பா
ய் என்பெரியதகப்பனார் நாளேயிலிருந்தவராகையால் நீஉள்ளே காகிதங்
கொண்டுபோகிறபோது போம்படியாயுத்திரவுகொடுத்தார் உள்ளேயி
ருந்து உன்னைத்துன்பப்படுத்திய இருவருமஎன்தகப்பன் இப்போது
வைத்திருக்கிற காவலாளிகளாதலால் இவ்விதமாக சூது தந்திரங்கள
செய்து என்பெரியதகப்பனார்குமாரனாகிய அலாதீனென்பவனை யடைத்
துக் காவல்செய்துவிட்டுத் தேசாதசங்களிலுள்ள பாத்துஷாக்களுக்கெ
ல்லாம் தன்பெண்ணைக்கொடுக்கிறேனென்று திருமுகமெழுதியனுப்பி
ர் அதுகண்டவர்கள் என்னைக்கலியாணஞ்செய்துக்கொள்ளும் படியாய்
தனித்தனியேவந்து என்தகப்பனிடத்திற்பேசுவார்கள் அந்தச்சமாச்சா
ரத்தையென்தகபபன் என்னிடத்திற்சொல்ல நான்சம்மதிப் படாதா
ல் அவர்கள் தங்கள் தங்களுடையஇருப்பிடம்போய்ச்சேருவார்கள்நான்
என்னத்தினாலே சம்மதிக்கவில்லையென்றால் என்பெரியதந்தையாகிய சி
ந்தாருஷாவென்னும பாத்துஷாவானவர் என் தந்தைக்கு ஒசீயத்துச்சொ
ன்னதுபோல் அவர்கடக்காமல அபிப்பிராயமாகயென்பெரியதகபபனுருடை
யபிள்ளைக்கு விலங்குபோட்டுககூண்டிலடைத்துக் காவலில்வைத்துவி
ட்டு யென்னை இன்னொருவருக்குக் கலியாணம்முடித்துக்கொடுக்கிறதா
ய் என்தகப்பன்நினைத்திருப்பதால் இது அக்கிரமமாயிருக்கிறதென்றெ
ண்ணி நான்என்தகப்பன்செய்கிற அபிப்பிராயம் அல்லாகுக்கு ஆலாவுக்கு
மேற்கமாட்டாது அவனெண்ணப்படிநாம் நடக்கக்கூடாது எனதுபெரி
யதகப்பனார் ஒசீயத்தின்பிரகாரம் அலாதீனென்பவருக்கு நான்மனைவியா
கி இந்தப்பட்டத்தை அவரோமுடிசூட்டியாளவேணுமென்கிறயெண்ண
ங்கொண்டு என்மனதிலிருந்தது எப்போதுமவர்பேரிலேயே சிந்தையுமெ
ண்ணமும் கவலையுமாகவிருக்கிறேன் அவரென்மீதிலவைத்திருக்கிற ஆ
சையானது நானகொண்டிருக்கிற ஆசையிலும் எண்மடங்கதிகமாயிரு
க்கிறார் ஆசையால்நான் தினந்தினம் ரகஸ்யமாயவருக்குக் கடிதமெழுதி
உம்மைப்போலொத்த வர்த்தகனிடத்திற் கொடுத்தனுப்புகிறது இவ்
விதமாய் நாங்களிருவரும் (அணில கொம்பிலும் ஆமை கிணற்றிலும்
போல) நாங்கள்இருவருமஒன்றுக்கொன்று மனோக்கத்துச்செய்துயெண்
ணியயெண்ணம் நிறைவேறாமல பார்த்துக்கொண்டிருக்கையில்

நீயென்னைநிக்காகென்னுங் கலியாணஞ்செய்துக்கொள்ளுகிறேனென்று சொன்னீர்.

அதெப்படியிருக்குதென்றால் ஒருபெண்ணானவள் ஆம்பிடையான்செத்து அழுதுக்கொண்டிருக்கையில் அடுத்தவீட்டுக்காரன்வந்து அக்குளிற்குத்தியபாவனையாயிருக்கிறது இனிமேல்நீர்சொன்னவார்த்தையைவிட்டு உமதுகைக்கு வெட்டிப்புத்துகைதருகிறேன் அதைப்பெற்றுக்கொண்டு உமதுநகரம்போய்ச்சேரலாமென்றாள் அப்போதுஎன்மனம்ரொம்பவும்புழுங்கிவருத்தப்பட்டு அந்தப்பெண்ணை பார்த்துச்சொன்னேன்கேளாய் பெண்கள்சிரோமணிகளே இன்னமொருமனுவுன்னைக் கேட்டுக்கொள்ளுகிறேன் அதுஉனக்குவருத்தத்தைக்கொடுக்குபதிலுத்தரஞ்சொல்லும்படியானதாயிருக்கமாட்டாது அதைமன்னித்துஎன்னைச்சொல்லச்சொன்னால் நான்சொல்லுகிறேனென்றேன் அதற்கவள்நீயென்னசொல்லப்போகிறாய் அதைச்சொல்லென்றாள் அப்போதுநான்பெண்ணரசியே நானுன்னைக்கலியாணஞ் செய்யாமற்போனாலும்போகட்டும்என்னையும் தரண்மனைக்குள் தினந்தினம்வந்து உன்னைக்கண்டு சந்தித்துமலாக்கத்துச்செய்துகொண்டு போகும்படியாய் உத்திரவுகொடுத்தாயானால் அதுவேபோதுமானதாயிருக்கிறது எனக்குக்கொடுக்கவேண்டியதுகையில் அணுவளவுகொடுக்கவேண்டியதில்லையென்றுரொம்பவருந்திக்கேட்டேன் அதற்கவளென்னைப்பார்த்துச்சொல்லுகிறாள்ஒபுத்திகெட்டமனிதனே உனக்குக்கொஞ்சமாகிலும் யோசனையில்லாமற்சொல்லுகிறாய் அதென்னவென்றால் நானொருபாத்துஷாகுமாரத்தியாய்அந்தப்புரத்திலிருக்க நீர்பிரதேசத்திலிருந்து வியாபாரஞ் செய்யவந்தசவுதாகராயிருக்க எனதரண்மனைக்குள் நீதினமவரவும்போகவுமாயிருந்தால் இந்நகரத்திலுள்ளவர்கள்பார்த்து வசைபேசுவார்கள் அதென்னவென்றால் அந்தப்பாத்துஷாமகள் தேசங்களிலுள்ள பாத்துஷாக்கள் வந்துகேழ்க்க அவர்களிலொருவரையாவது கலியாணஞ்செய்துகாதூனாக்கிக்கொள்ளாமல் இப்போதொரு சவுதாகராகிய வர்த்தகனை[illegible]துக்கொண்டிருக்கிறாளென்று ஏளனஞ்செய்வார்கள ஆகையாலினிமேல்நீயிங்கேவரக்கூடாது அப்படி அத்துதப்பிவுள்ளேவந்தால் உன்னை ஆக்கினைசெய்யும்படியா யுத்திரவுசெய்வேன் அப்படிக்கில்லாமல் உனுடையமுதலுக்கிரட்டிப்பா யிதோவைத்திருக்கிறது எடுத்துக்கொண்டுபோவென்று கோபமாய்ச்சொன்னாள்.

அதற்குத்தணிவாக சிலவார்த்தைகள்சொல்லி கேளாய்பெண்ணே இப்போதேயென்னையுன்கையினாற் கொன்றுபோட்டாலுஞ்சரி இன்னமொருசின்னவார்த்தை கேழ்க்கிறேன் அதற்காவதுஎனபேரிற்கிருபைவைத்துச்செய்தாலுஞ்சரி அல்லது என்னையாக்கினை செய்தாலுஞ்சரி

யென்றுவருந்திக்கேட்டேன் அதுயென்னசொல்லுமென்றாள் அப்போ
துநான்சொன்னேன் உன்னுடைய ரூபலாவண்ணியசவுந்தரியம்போலே
ஒருசிலைசெய்துகொடுத்தையேயானால் அதைநான் பத்திரப்படுத்திக்
கொண்டு உன்னுடையநினைவுவந்தபோதெல்லாம் அதைப்பார்த்துமகி
ழ்ச்சியடைவேனென்றுரொம்பவும்வருந்திக்கேட்டேன் அதற்கவள்முன்
கொண்டகோபத்திலும்ரொம்ப அதிககோபங்கொண்டு இப்போதுநீசொ
ன்னவிசேஷம் சரியானதா யிருக்கவில்லையென்றுதடுத்தாள் அப்போ
தவளைவிடேன் தொடேனென்கிற யென்னைக்கொண்டேன்பேரிலுனக்
குக்கிருபையிருந்தால் அப்படிச்செய்துகொடு இல்லாவிட்டால்உன்னு
டையநினைவுகொண்டு அதேயேக்கமாயிறந்துபோகிறதைப்பார்க்கிலும்
இப்போதேவுன்கையினாலே யென்னைக்கொன்றுபோடு இனிமேலெனக்
குவேறேசங்கதிசொல்லவேண்டாமென்று தீர்மானமாகச்சொன்னேன்

அப்போதவள் கொஞ்சநேரம்யோசித்து என்பேரிலிரக்கம்வைத்
தொருதாதியையனுப்பி சித்திரவேலைகளிலதேறின மூச்சியொருவனை
யழைத்துவரச்சொல்லி அதனால் தன்னுடைய சொரூபம்போலஅணு
வளவேனும் பேதமில்லாமற் செய்யும்படிதிட்டப்படுத்த அதுபோல
வேயவன்செய்து தங்கமூலான்களிலே வர்ணம்வைத்துக் கொடுத்துவி
ட்டுமூச்சிபோய்விட அச்சிலைக்கு அனேகம ஆடையாபரணங்களெல்
லாம் அவளணிந்திருக்கும் பாவனைபோல்பூட்டி யலங்கிருதஞ்செய்து
புறக்காமூடி என்கையிற்கொடுத்து எனதுதொகையையும் சரிவரக்
கொடுத்தனுப்பிவிட்டாள் அப்போதிதுகளையெல்லாம்பெற்றுக்கொண்
டுகப்பல்நிற்குந்துறைமுகத்தில் நானிருக்கிறகிடங்கிற் போய்ச்சேர்ந்து
இந்தச்சிலையை ஒருபெட்டியில் பாக்கின்செய்து எனதுவூராகிய மிசுறு
பட்டணத்துக்காகும்படியான சரக்குச்சாமான்களையுங் தரோபஸ்த
யுங்கப்பலேற்றிக்கொண்டு அதிற்பாய்விரித்து கடலோட்டமா யோடி
சிலமாதத்திற்கு பிறகு மிசர்பட்டணம்போய்ச்சேர்ந்து எனதுதாய்த
ந்தைமுதலிய சகலத்திராளையுங்கண்டு வினவிக்கொண்டு கப்பலிலிருக்
கிறசாக்குகளையெல்லாங் கரையிலிறக்கி அந்தப்பட்டணத்திலுள்ள வி
யாபாரவர்த்தகர்களுக்கெல்லாம் விக்கிரையஞ்செய்து ஒட்டிக்கிரட்டி
பாய்லாபங்கண்டு மகிழ்ச்சியா யிருக்கிரகாலத்தில் எனதுதகப்பனுந்
தாயுமிறந்துபோனார்கள்.

அவர்களையெடுத்து நல்லடக்கஞ்செய்து நாற்பதுநாள் வரையில்
செய்யவேண்டிய கத்தம்பாத்திகா மற்றுஞ்சடங்குகளுங் குறைவில்லா
மற்செய்து விட்டிருக்கிரகாலத்தில் அந்த மகாசீனத்திலிருக்கிற பாத்
துஷாமகளாகிய காசமெதர்பானென்னும் பெண்ணானவள்மேல்நினைவு

வந்து அவளுடையசொரூபத்துக்குச் சமைதயாய்ச்செய்துவந்தசிலையைப்பெட்டியைவிட்டு வெளியேயெடுத்து ஒரலங்காரமாகிய அறைக்குள்ளே தங்கபீடத்தின்மேல்வைத்து விடிகிறவரையில் அந்தச்சிலையைப்பார்த்துக்கொண்டு அதேதகவனமாய் ரொம்பவும்வருத்தப்பட்டு என்னுடைய அறிவுகளெல்லாஞ் சிதறியிருக்கிறது இவ்விதமாகப் பகற்காலமெல்லாம்போய் இராக்காலங்களில் இந்தச்சிலையைப்பார்த்துப் பெருமூச்சுவிட்டுக்கொண்டிருக்கிறது நான் இப்படியிருக்கிறது இந்தமிசுருபட்டணத்திலிருக்கும் ஒருவருக்குந்தெரியாது அப்போது நானிதைதைவத்துப் பூசித்துக்கொண்டிருக்கிறது எவர்களுக்காவது தெரிந்ததானால் அவர்களிந்தவூரிலுள்ளவர்களுக்கெல்லாஞ் சொல்லுவார்கள்.

அப்போதவர்கள் பேசிக்கொள்ளுவார்கள் இவனென்னமோ ஒருசிலையைவைத்து வணங்கிக்கொண்டிருக்கிறான் இவனுக்கேதாவது தண்டனைசெய்யவேண்டுமென்று ஊராருகூடி நம்மைக்கேட்பார்கள் அதற்குள்ளே மிசுருபட்டணத்தைவிட்டுப் பிரயாணப்பட்டு இருளோகிய காட்டிற்குட்போய் ஒருகுடிசைவீடுகட்டி நாம் பக்கீர்கோலங்கொண்டு அதிலிந்தச்சிலையைவைத்து நமது மனதின்படியேயிருந்து கயாத்துள்ளவரையில பூசித்துக்கொண்டிருக்கலாமென்றெண்ணி என்மனதின்படியென்வீட்டிலிருக்கும் சகலபொருள்களிலும் எனக்குப்போதுமானதைசிலவுக்கு வைத்துக்கொண்டு மற்றதை ஏழைமிசுக்கீன்யாசகர்முதலியபேர்களுக்கெல்லாம்சக்காத்தென்றுந்தருமஞ்செய்துவிட்டுப் பின்புவீடுமுதலிய தோட்டந்துறவுகளையும் விற்றுவிட்டு இந்தச்சிலையையெவர்களுக்குந்தெரியாமல் இந்தக்காட்டிலெடுத்துவந்து நானினைத்தபடியொருகுடிசைகட்டி இந்தவீட்டிற்குட் சிலையைவைத்து எனக்குமுன் சொன்னபெண்பேரில் நினைவுவந்தவேளையிலெல்லாம் பார்த்துக்கொண்டுநெஞ்சுதலைமுதலிய வருத்தத்துடனேயழுது இப்பேர்ப்பட்டபெண்ணமக்கெப்போ கிடைக்கப்போகுதென்கிற விசாரமாகவேயிருந்து என்காலத்தைப் போக்கிக்கொண்டிருக்கையில் ஒருமான்குட்டியானதென்கையிற்சிக்கியது நானதைவளர்த்துப் பரிபாலனஞ்செய்து ரொம்பபிரியத்துடனே வைத்திருந்தேன் அந்தமானைநீர்கண்டு அம்பினாலேகாலிலெய்துவிட்டீர்.

அதுவென்னிடத்தில்வர அதின்காலிலிருக்கிற அம்பைக்கண்டென்னுடைய கயாத்தென்கிற சீவன்போகிற விதம்போலாகிஎன்மனநொந்துரொம்பவுந் திட்டிக்கொண்டிருக்கையில் நீர்வந்துசேர்ந்தீர் இதுதானென்னுடைய அசலால்முதலான காரியமென்று அந்தச்சகவுதாகவென்னும்பக்கீர்சொன்னார் ஆகையால்நீங்கள் தேசத்திலுள்ளபாட்சாக்க

ளுக்கெல்லாம் சக்கிரவர்த்தியாகிய பாத்துஷாசிரோமணியே என்தோஸ்
தியாகிய மற்றும்பக்கீர்களே அவ்விதமாயந்தச் சவுதாகர்சொல்லிவந்த
பெண்ணானவள்மேல் எனக்குரெம்பவும் ஆசைகொண்டு பாசமிஞ்சி எ
ன்மனமெல்லாம் நெருப்பிலிட்ட மெழுகுபோலுருகியோசித்தேன் இந்
தச்சிலையே யிவ்வளவுசவுந்தரிய ரூபலாவண்ணியமாயிருந்தால அந்த
ப்பெண்ணானவ ளெவ்விதமான அழகுபொருந்தியிருப்பாளோ அவளை
நாம்போய்க்கண்டு கலியாணஞ்செய்து கொள்ளாமறபோனால் என்னை
ப்போல் பாத்துஷாகுமாரர்களு மூண்டாவென்றெண்ணி அந்தச்சவுதா
கரென்னும்பக்கீரைப்பார்த்து இப்போது நீர்செய்துவருகிரகாரியஞ்சரி
யானதாயிருக்கவில்லை அதைவிட்டுவிடுமென்றுசொல்லி அவரிடத்தில்
விடைபெற்றுக்கொண்டு என்னகரஞ்சேர்ந்து அரண்மனைக்குள்ளறை
யிற்போயிருந்து வியாகூலத்தோடு படுத்துக்கொண்டு நானெண்ணின
வெண்ணங்களை யின்னவிதமென்றுசொல்லிமுடியாது அப்படியிருக்கி
றபோது என்தகப்பனாகியபாத்துஷா நானபடுத்திருக்கும் அறைக்குள்
வந்து என்னைக்கட்டித் தழுவிப்பார்த்துச் சொல்லுகிறார்.

பாவா இத்தனைநாள்வரையிலும் வேட்டைக்குப்போனால் இரவு
தங்கியுறக்கமில்லையே யின்றைக்கிரவுதங்கி யிவடம்வந்துஉண்பனமு
தலியதுமில்லாமல் யாதோவொருவிசனமாயிருக்கின்றையே அந்தவிச
னமென்னவென்றுகேட்டார் அப்போதென் தகப்பனைப்பார்த்து ரெம்
பஅதபுடனேசொன்னேன் கேளுங்கள்பாவா நான்விசனமா யிருக்கிற
தென்னவென்றால்மகாசீனத்திற்குப்போய் அந்நகரத்தைச்சுற்றிஅங்கே
யிருக்கிறவிச்சித்திர வினோதங்கள்முதலியாவற்றையும் பார்த்துவரரெ
ம்பவும ஆஜதென்னும் ஆசையாயிருக்கிறது ஆகையால் தாங்களென்
னைப்போய்வரும்படியா யுத்திரவுசெய்வீர்களானால் நான்போய்வருகி
றேனென்றேன் அந்தவார்த்தையைக்கேட்டு என்தகப்பன் திகிற்பட்டு
மிகவுந்துயரத்தோடு அழுதுபரதவித்துச் சொல்லுகிறான்.

பாவாவுனக்கு அந்ததேசத்திலாகவேண்டிய காரியங்களென்னவி
ருக்கிறதோ அதைச்சொல் அதுகளை யழைப்பித்துத்தருகிறேன் அல்
லது அந்தமகாசீனம்போல நம்மிடகுரசானிதேசத்தையும் அலங்கார
ஞ்செய்து காண்பிக்க வேண்டுமானாலுங் காண்பிக்கிறேன் ஆகையால்
நீஎங்களைவிட்டு அந்ததேசத்துக்குக் கடலேறிப்போய்வருகிறேனென்
றுசொல்லுகிறது சரியல்லவென்று தடுத்துச்சொன்னார் அப்போதுஎ
னக்குமுன்னிருந்த விசாரத்திலும் எங்கள்பாவாபோக வேண்டாமென்
றுதடுத்ததில் அதிகவிசாரமாயிருந்து உண்பனதின்பன ஊணுறக்கம்
சிரிப்புசந்தோஷம் ஒருவருடனே பேசுதல் முதலியதுமில்லாமல் நா

லுசாள்வரையி லிருக்கும்போது என்தாயுந்தகப்பனும் என்னருகில்வந்துகூடியமட்டும் வேண்டியபுத்திமதிகளைச் சொன்னார்கள்.

அதுகளென்காதிற் கேட்காததுபோலே யவர்கள்சொல்லச்சொல்ல அதிகவிசனத்தோடிருந்தேன் அப்போதுஇருவரும்யோசித்து நம்மிடபிள்ளை யென்னமோ ஒரேசவனமாயிருந்து யாதொன்றையும் விரும்பாமல்வீணாயிறந்துபோகிறதாயிருக்குமென்று அவர்களெண்ணங்கொண்டுஎன்னைப்பார்த்து வெகுதயாத்துடனே புலம் அந்தத்தேசம் போகும்படியாயுத்திரவுகொடுத்தார்கள் அவர்களுத்திரவு பெற்றுக்கொண்டு உண்பன தின்பனமுதலிய ஜீவனந்தின்று பசியாறியபின்சிலவேலையாளர்களையழைத்து ஒருபிர்மாண்டமாகிய கப்பல்செய்யும்படியாய் அனேகந்திரவியங்கள் மரச்சாமான்கள்முதலியதுங்கொடுத்து உத்திரவுசெய்தேன் அதேபிரகாரங் கப்பல்செய்துமுடிந்தது அந்தக்கப்பலில்அவ்விடத்துக்காகும்படியான சரக்குகள்சாமான்கள்முதலியது பட்டுபட்டாவளி பீதாம்பரம்மகமல் பனாத்துகாஸ்மீயசால்வைகள்முதலிய ஆடைகளும்ஆபரணங்கள் முதலியநகைகளும் ஏற்றிக்கொண்டு நானும்மாலிம்தண்டல் களாஸ்மற்றப்பேர்களுமேறிக்கொண்டு கப்பலிற்பாய்விரித்தோடிசிலநாளைக்குப்பிறகு அந்தமகாசீனத் துறைமுகம்போய்ச்சேர்ந்துகப்பலிலங்கர்பாய்ச்சி சரக்குகள்முதலான சாமான்களுமிறக்கி அந்நகரிலுள்ளயபாரிகளுக்கு ஒட்டிக்கிரட்டிலாபங் காணும்படியாய்விற்றபொருள்களையெல்லாம் கப்பல்மாலீமி- த்திற் கொடுத்துவிட்டு பட்டுமுதலியஆடைகளையும் ஆபரணங்கள்முதலிய நகைகளையுமிறக்கி என்கைவசம்வைத்துக்கொண்டு அவர்களை யென்னகரமாகிய குராசானிதேசத்துக்குப் பாய்விரித்தோட்டும்படியா யுத்திரவுசெய்தேன் அவர்கள்போய்ச்சேர்ந்து விட்டார்கள்.

பின்புஎன்கைவசமாய் வைத்திருந்த ஆடையாபரணாதிகளைசிலஆட்கள்தலைமீதெடுப்பித்துக்கொண்டுபஜாரிற்போய்ஒருகடையைவாடகைக்கமர்த்தி இதுகளைப்பரப்பி வைத்துக்கொண்டிருந்தேன் முன்னங் தசவுதாகர் சொன்னதுபோலே ஒருதாதியாள்வந்து என்னையரண்மனைக்கு சரக்குகளையெல்லா மெடுத்துக்கொண்டு வரச்சொன்னால் அப்போது நான்சரக்கையெடுத்துக்கொண்டு அவள்கூட அந்தராசாமெஹபாதுளென்னும் பெண்ணிருக்குமரண்மனை யெழுகட்டிலு மிருக்கிறபெண்களையெல்லாம்பார்த்து அந்தவாசலையுங்கடந்து எட்டாவது ரவுண்டுமெத்தைகளிருக்கிற அனேகம்பெண்கள் கூட்டத்தின்மத்தியில் சிம்மாசனத்திலிருக்கிற பெண்ணைக்கண்டு எனக்குநினைவுதமாறி பின்

புஸ்மனைவந்து அவள்சமூகத்திற்போய் யென்னை யழைத்தவிசம் யெ
ன்னவென்று மிகுந்தமரியாதைகளுடனே கேட்டேன்.

அதுகேட்டவள் சொன்னதாவது ஒப்வர்த்தகரே நீர்கொண்டுவந்
திருக்கிரசரக்கைக் காண்பியுமென்றாள் சேளுங்கள்பாத்துஷா சிரோம
ணிகளேமற்றும்பக்கிர்களே அவள்வாயைத்திறந்து என்னோடுஒருவார்
த்தைபேசவே எனக்குமதிமயங்கிப்பேசுகிரதற்கு நாவெழாமல நான்
கொண்டுபோன ஆடையாபரணங்களை யெடுத்துக்காண்பிக்கிரதற்கும்
கினையுதடுமாறி சவுளிமூட்டைகளையும ஆபரணப்பெட்டிகளையும்அவ
ளுக்கெதிரில்வைசதுவிட்டு கற்சிலையைப்போல் அசையாமல்நின்றுவி
ட்டேன் அவளநானிற்கிறநிலையையறிந்து சிலதாதிகளையழைத்துமூட்
டைகளையவிழ்க்கவும் பெட்டியைத்திறக்கவு முத்திரவுசெய்தாள் அது
போலவாகள் மூட்டையையவிழ்த்து பெட்டியைத்திறந்து ஆடைகளை
யும்ஆபரணங்களையுமெடுத்து அவளமுன்னே வைத்தார்கள் அவைக
ளையவள்பார்வையிட்டு அந்தந்தயினத்தி லெழுதியிருக்கிற விலைகளைப்
பார்த்துக் கணக்கெழுதி மொத்ததொகைப்படுத்தி தனனுடையகஜும
ந்தான்பெட்டியில் அந்தக்கணக்கைவைத்தும் பூட்டிக்கொண்டு நான்
கொண்டுபோன ஆடைமுதலியவற்றையுமெடுத்து ஓரறையில் வைக்கு
ம்படியாகத் தாதிகளுக்கு உத்தரவுகொடுக்க அவர்களப்படியேயெடுத்
துக்கொண்டுபோயவைத்தார்கள் பின்பு அந்தப்பெண்ணனவளென்னை
ப்பார்த்து ஓவர்த்தகரே நீஇப்போது உமதிருப்பிடத்திற்குப்போய் நா
ளையுதயத்திற்கு வாருமென்றுசொன்னாள் அதுபோலேநான்அந்தஅர
ண்மனை யேழுகட்டுவாசலைக்கடந்து வெளியிற்போகும்போது யெனக்
கொருநினைவுவந்து யோசித்தேன் அதென்னவெனில் ஓ-ஓ-இதென்ன
மாயமையாயிருக்கிரது நாமிந்த அரண்மனைக்குள் போகும்போது ஆ
டையாபரணமுதலிய பெட்டிமூட்டைகளுடனே போனோமேஇப்போ
துநாம்தனித்தவனாய் வெளியேவந்து விட்டோமேயென்று பலபலவித
மாயெண்ணி நானிறங்கியிருக்குமிடத்திற் போய்ச்சேர்ந்தேன்

கேளுங்கள்பாத்துஷா சிரோமணியே தோஸ்தியானபக்கிரகளேநா
னிவ்விதமாக மிரண்டுபோதொன்றுந் தெரியாமற்போனது அந்தப்பெ
ணைகண்டு அவள்மயக்கத்தினாற்சோர்ந்து நின்றபடியினாலே எனக்
கொன்றுந் தோற்றவில்லை ஆகையால் அன்றையப்பொழுதுபோய் அ
ன்றையயிரவுமுழுதிலும் உரக்கமில்லாமல் அவள்நினைவினால் பொழு
தொருயுகமாயிருந்தது பின்பு பொழுதுவிடிந்தவுடனே நான் அவளர
ண்மனையைநோக்கிப்போய் ஏழுகட்டுவாசலையுங்கடந்து அவளெதிரில்
நின்றேன் அப்போதவளென்னைப்பார்த்து நாளைவாரும்உனக்குக்கொ

டுக்கவேண்டிய தொகையைக்கொடுக்கிறேனென்றசொன்னுள் அதுகேட்டு நான்நமக்குக்கொடுக்கவேண்டியபொருளை இவ்ளெடுத்துக்கொண்டு இவளுடையகிசுமத்தாகியவேலேக்கு நம்மை ஆளாக்கிக்கொள்ளமாட்டாளாவென்றெண்ணி வெளியில்வந்துவிட்டேன அன்றுபோக மறுநாளும்அவளிடத்திற்போனேன் அப்போதும்அவள்நாளேக்குவாபோவென்ருள் அதுபோல வந்துவிட்டேன் ஆனலவளே நானெப்போது கண்ணுற்கண்டேனே அந்நாள்தொடுத்து ஊண் உரக்கமுதலியது மில்லாமல்இரவும்பகலும் அவள்மேலே நினேவேயல்லது வேறு நினேவில்லாமலிருந்தது இவ்விதமாக மூன்றுநாளேக்கழித்து நாலாநாள்காலேயில்அவளசமுகத்திற்போய்ப்பின்றேன் அப்போதவள ஒருதாதியையழைத்துத் தன்னுடையகலுமந்தான் பெட்டியையெடுத்துக்கொண்டுவரும்படி உத்திரவுசெயதாள அதுபோலந்தத்தாதி பெட்டியையெடுத்துகொண்டுவந்து அவளெதிரில்வைத்தாள்,

அவளந்தப்பெட்டியைத்திறந்தாள் அப்போதெனக்குஅந்தக்காட்டினிடத்திலிருக்கிற பக்கீர்சொன்னது ஞாபகம்வந்து இன்றைக்கு நமக்கொருதுன்பம வரும்போலிருக்கிறது அதற்குத்தப்பிப் பிழைப்போமோசாவோமென்றெண்ணியிருக்கும்போது அவள பெட்டியிலிருந்த காகிதத்தையெடுத்து எழுதிமடித்து முத்திரைவைத்து என்கையிற்கொடுத்து முன்சவுதாகருக்குச்சொன்ன அடையாளப்படிசொல்லி அந்தப்பூந்தோட்டத்திற்குப்போய் அவ்விடத்திலிருக்கும்பங்களாவிற்குள்ளிருக்கிற பாட்சாவுடைய மகன்கையிற் கொடுத்துவரச் சொன்னுள அப்போதுநான் இந்தக்காயிதத்தைக்கொண்டு போகமாட்டேனென்றுசொல்லலாமாவென்றுயோசித்ததில்அதுசரிப்படவில்லே ஏனென்றுல்அப்படிசொல்வேனுனல் அவள்என்னே இனிமேலிங்கே நீவரவேண்டியதில்லே வெளியேபோவென்று துரத்திவிடுவாள அப்போது நாம் இங்கேவந்து இவளேப்பார்ப்பதற்கிடமில்லாமற் போய்விடுமேயென்றெண்ணி என்னவருத்தம வந்தாலும்வரட்டும் நாம்போய் வருகிறதேசரியென்றுயோசித்து அவள்சொல்லேத்தட்டாமல் கடிதத்தைவாங்கிகொண்டுஅரண்மனையைவிட்டு வெளியில்வந்து பூந்தோட்டத்திற்குட்போய்பங்களாவுக்குச் சமீபத்திற்போகும்போது அந்தவாசலில்காவலிருக்கும்சிப்பாய் ஆங்காரத்துடனே யென்னேப்பார்த்து நீ எங்கேவந்தாயென்றுகேட்டான்.

அதற்குநான் இந்தவூர்பாத்துஷாவின்மகள் கடிதங்கொடுத்தது உள்ளேயிரும்புகூண்டிலிருக்கிற பாத்துஷாவுடையமகனுக்குக்கொடுக்கும்படியாயனுப்பினளென்றேன் அவன்போவென்று உத்திரவிசெய்தான்

உடனேநான்உள்ளேபோய் அந்தயிரும்புக் கூண்டிலிருக்கிறபாத்துஷா குமாரன்கையிற் கடிதத்தைக்கொடுத்தேன் அவனந்தக்கடிதத்தைப் பிரித்துவாசித்துப்பார்க்கையில் அவனது இரண்டுகண்களில் தாரைதாரையாய் நீரொழுகும்படியழுது பரிதாபப்பட்டுக்கொண்டிருந்தான் அதுகண்டுநான் இவன்பதில்கடிதமெழுதிக்கொடுப்பானென்று மிகுந்தவிலேசத்துடனிருக்கும்போது உள்ளேயிருந்து இரண்டுமூன்றுபேர்கள்ஜலுதியாயோடிவந்து என்னைப்பிடித்து அடியடியென்றடித்து பின்கட்டாகக்கட்டி காலில்கயிற்றைமாட்டி அந்தப்பங்களாவிலிருந் திழுத்துக்கொண்டுபோய்விட்டார்கள் அதனால்நான் மிகுந்தவருத்த மடைந்து உயிர்போனவனைப்போல நினைவுதடுமாறி அவ்விடத்திலேயேவிழுந்துகிடந்தேன் அந்தச்சமயத்தில் சிலமனிதர்கள் எனக்குச்சமீபமாயோடிப்போனார்கள் அவ்வதிர்ச்சியினால் நான்மெள்ளகண்ணைத்திறந்து அவர்களைப்பார்த்து ஐயாநீங்களெங்கே போகிறீர்களென்றுகேட்டேன் அதற்கவர்கள் அடேசண்டாளத்துரோகிகொலைபாதகா நீயல்லவாஅந்தபாத்துஷாமகனுக்குக் கடிதங்கொண்டுவந்து கொடுத்தவன் அதையவர் சிறியதகப்பனாகிய பாத்துஷாகேள்விப்பட்டு அவனைச்சிரசாக்கினை செய்யும்படியாய்க் கொலையாளருக்கு உத்திரவுகொடுக்க அவர்கள்பாத்துஷாமகனைப் பிடித்துக்கொண்டு கொலைக்களத்திற்கு வெட்டக்கொண்டுபோனார்கள் அதைநாங்கள் பார்க்கப்போகிறோம் இந்தபொல்லாங்குஉன்னாலேயல்லவாவந்தது உன்முகத்திலும் முழிக்கக்கூடாதென்றுபோய்விட்டார்கள்.

அவர்கள்போய் சற்றுநேரத்திற்குப்பிறகு போனவர்கள் திரும்பி வரும்போது ஒருவருக்கொருவர் இந்தவூர்பாத்துஷா தமையனுடைய ராச்சியத்தைத் தமையன்பிள்ளைக்கொப்பிக்காமல் அந்தஅரசையுமெடுத்துக்கொண்டு அவனையும் அநியாயமாகவெட்டிச் சிரச்சேதஞ்செய்துவிட்டானே இதுஅல்லாவுக்கேற்குமா தேசத்திலுள்ள மனுஷ்யர்களும்பொறுப்பார்களாவென்று பேசிக்கொண்டுபோகிறதை நான்கேட்டுக்கொண்டு கீழேகிடக்கும்போது நாலுதாதிகள்வந்து ஒருடோலியிலென்னைத்தூக்கிப்போட்டுக்கொண்டு ஒருதோட்டத்திலிருக்கிற பங்களாவிற்கொண்டுபோய் ஓரறையில் வைத்திருக்கிறபோது அந்தப்பாத்துஷாமகள்மிகவுந்துக்கத்துடனே முகஞ்சோர்ந்து தாமரைப்புட்பத்தை யெடுத்து தரையிற்போட்டால் வாடிப்போகின்றதுபோல்வாடி யென்னருகில்வந்து யெனதுகாயத்திற் காகவேண்டிய பக்குவங்கள் செய்து யென்னைப்பார்த்து உன்னுடையதேகம் சவுக்கியமானவுடனே யெனது அரண்மனைக்குவாவென்றுசொல்லிப் போய்விட்டாள் பின்புவொரு

ஸ்தமாகிப் போகவாவுமாயிருக்கையில் அவள்சொன்னதுபோல் அ
ண்பனைக்குப்போய் அவள்சமுகத்தில்நின்றேன் அப்போதவளென்னை
ப்பார்த்து ஓவர்த்தகரே நீரென்னாலே மிகவும்வருத்தப்பட்டீர் ஆனால்
நீர் காகிதங்கொண்டுவென்பெரியதகப்பனார் மகள் அலாதீனிடத்திற்
கொடுத்ததை என்தகப்பனார் கேள்விபட்டவனை சிரசாக்கினைசெய்துவி
ட்டார் ஆகையால் நீரினிமேல்என்னிடத்தில்வரவுங்கூடாது ஒருவேளை
யென்தகப்பன் காகிதங்கொடுத்தவர் நீரென்றுதெரிந்தால் உம்மை உயி
ர்ச்சேதஞ்செய்யச்சொல்லுவாராகையால் உம்முடைய பணத்தொகைக்
கு இரட்டிப்புத்தொகைதருகிறேன் அதையெடுத்துக்கொண்டு இந்நகர
த்தைவிட்டுப்புறப்பட்டு வுமதூருக்குப்போய்ச் சேருமென்றாள்.

அப்போததற்குப் பதில்மொழியொன்றுஞ் சொல்லாமலிருந்தே
ன் அப்போதவளென்னைப்பார்த்து நீரேன் சும்மாயிருக்கிறீர்உமதுதொ
கையையெடுத்துக்கொண்டு போகலாமென்றுசொன்னாள் அவளைப்பார்
த்துகேளாய் பெண்கள்சிகாமணியேநானொருயுக்திசொல்லுகிறேன் அ
துவுனக்கு மிகவுமேன்மையாயிருக்குமென்றேன் அதற்கவள் என்னயு
க்தியென்று கேட்டாள் அதற்குநான்சொன்னேன் குராசானிதேசத்தை
யாளுகிற அப்துல் நவாசிபாத்ஷாவுடைய குமாரன்நான் என்பேர்சம்
சதீன் என்னூரில் நானிளவரசுபட்டங்கட்டியிருக்கும்போது சிலமனித
ர்கள் இந்தமகாசீனத்திற்குவந்து வர்த்தகஞ்செய்து எங்களுக்கு வந்த
பேர்கள் உன்னுடைய அழகு சவுந்தரியங்களெல்லாம் அவர்கள் சொல்
லக்கேட்டு உன்னைப்பார்க்க வேண்டுமென்றெண்ணங்கொண்டு ஒருக
ப்பல்வைத்து அதினிறைய சரக்குசாமான்களேற்றி இந்நகரம்வந்துசேர்
ந்து இவ்விடத்தில் சிலவானதுகளையெல்லாம் விற்று அந்தத் துகைக
ளை மாலீம்வசங்கொடுத்து என்தேசத்திற்கனுப்பிவிட்டு உனக்கான ஆ
டையாபரணத்தையெடுத்துக்கொண்டு ஒருவர்த்தகன்போலேவந்துமே
ற்சொன்ன சவுளிச்சாமான் நகைமுதலானதுகளை யுனக்கு விலைக்குக்
கொடுத்து உன்னாலே நான்படாதபாடும் பட்டிருக்கிறேன.

ஆனபடியாலுன்னெண்ணம்போலே இந்நகரத்துப் பாத்துஷாவாக
னைக் கலியாணஞ்செய்து இந்நகரத்தைப்பட்டங்கட்டி அதிகசுகத்துட
னே யிருக்கும்படியான உன்னெண்ணத்தைத்தவிர்த்து நீசோழிய மாப்
பிள்ளையைச் சிரச்சேதஞ்செய்து இந்தராஜாங்கத்தையும் ஆண்டுக்கொ
ண்டுமிகவுஞ் செருவித்திருக்கிறபடியால் இனிமேலுன்போல உன்தகப்
பனுக்கு அதிகபிரியமாயிருக்கப்போகிறதில்லை அதனதினாலென்றால் உ
ன்பெரிய தகப்பனாகிய பாத்துஷாப்பிள்ளையேயல்லாமல் நீயாகக் கொண்டுவ

ந்தபடியால் இதுகளையெல்லாம் நீநன்றாய்யோசித்துப் பார்க்கவேண்டியது இப்போது நான் ஓராலோசனைசெய்திருக்கிறேன் அதுபோலே நீ கேட்பாயானால் உன்தகப்பனாகிய துரோகிமுகத்தில்கரியைத்தடவினது போலிருக்கும்படியான தந்திரஞ்செய்கிறேனென்றேன்.

அப்போதவளென்னைப்பார்த்து அந்தத்தந்திரத்தை விபரமாய்ச் சொல்லவேண்டுமென்றாள் அதற்குநானவளையோரறையி லழைத்துக் கொண்டுபோய் இன்னமொருவருக்குந் தெரியாமல் ரகஸ்யமாய்ச்சொன்னேன் அதாவது இன்றிரவில் நமக்குத்தேவையான ஆடையாபரண பூஷணாதி திரவியமுதலானது மெடுத்துக்கொண்டு மகாவேக மனோவேகமுள்ள இரண்டுகுதிரைகளில் நாமிருவருமேறிக்கொண்டு பிரயாணப்பட்டு என்தேசம்போய்ச்சேர்ந்து உன்னைநிக்காகுவென்னுங் கலியாணமுடித்து நீசொல்லும்படியான வார்த்தைகளுக்கு அணுவளவேனும் பிசகி நடக்காமல் உயிருமுடலும்போலவும் பூவும்வாசமும்போலவுங்கண்ணுமிமையும்போலவும் சந்திரசூரியர்போலவும் அன்றிலும்பேடும்போலவும் அதிகசுகமுள்ளவிப சம்பத்துக்களையுமனுபவித்து ஏகசக்ராதிபத்யமாய் ராசாண்டிருக்கலாமென்று உண்மைவார்த்தைமுதலியதுகளைச்சொன்னேன்.

அப்போதவள் நான்சொல்லியதெல்லாங்கேட்டுமிகவும்யோசித்துத் தன்தகப்பன் தான்கோரியிருந்தப்புருஷனைச் சதிமோசஞ்செய்ததை நினைத்து இவன்முகத்தில் நாமவிழிக்கக்கூடாதுஇப்போக்கொற்றவனுக்கு ஒருஅபகீர்த்தி வைக்கத் தான்வேண்டுமென்று மனதையுறுதிப்படுத்தி யென்னைப்பார்த்துச்சொன்னாள்சேனாபாத்தஷாசிரோமணியே இத்தனைநாள் வரையிலும் உம்மை வர்த்தகனென்பதாயெண்ணி சில வார்த்தைகள் தப்புத்தவறாய்ச் சொல்லியிருப்பேன அதுவுமல்லாமல என்னிடத்திற் சாமான்கள்கொண்டு வருகிறவியாபாரிகளிடத்தில் காகிதங்கொடுத்து நான்கோரியிருந்தபாத்துஷாவனிடத்தில் அனுப்புகிறது போல் உம்மையும் வர்த்தகனென்றெண்ணி காகிதங்கொடுத்துக்கையனுப்பி துன்பத்திற்குள்ளாக்கிவைத்தேன் அதுகளையெல்லாம் தாங்களணுவளவேனு மனதில்வைக்காமலிருக்கவேண்டுமென்று என்பேரில்மிகவுங்கிருபையாகச்சொன்னாள்.

அதற்குநானவளைப்பார்த்துப்பெண்ணே நானென்கிறதை நீயறிந்துசெய்தவளல்ல அதனால் ஒருபாதகமுமில்லை இனிநாம் அரைநிமிஷமு மிங்கேயிருக்கக்கூடாதென்றேன் அவள்சரிதானென்று சம்மதித்து நாங்களிருவருமெழுந்துசமையற் கட்டிற்போயுட்கார்ந்துசமையற்காரிகளென்னும் பண்டாரிப்பெண்களையழைத்து ஒசீனங்கொண்டுவரும்படியாய்ச்சொன்னாள் அவர்கள்போய் சாதங்கறிகள் கொண்டுவரப்போனார்கள் அப்போது பொழுதஸ்தமித்து ஐந்துநாழிகையாயிற்று அந்நே

த்தில் அறுசுவைப்பதார்த்தத்தோடேக்கூடிய ஒசீவனமும் பலகாரங்களு
ம பழவர்க்கங்களும் குடிப்புமுதலிய சர்ப்பத்துங்கொண்டுவந்து வைத்
தார்கள் இதுகளைநாங்களிருவரும் புசிக்கிறதைப் புசித்துத் தின்கிற
தைத்தின்று குடிக்கிறதைக்குடித்துப் பசியாறிதாம்பூல முதலிய அடை
க்காயருந்தியிருக்கும்போது தாதிகள்தோழிகள் மூப்பிகள்வெள்ளாட்
டிகள் மற்றும்வேலைக்காரிகளனைவரும் ஒசீவனந்தின்று பசியாறிவந்தா
ர்கள்.

அந்தச்சமயத்தில் தானவர்களைப்பார்த்து எனக்கொருவிதமானநி
த்திரை வருகின்றது நீங்களெல்லோரும் அவரவர்கள்படுக்கும்படியான
விடங்களிற்போய்ப்படுத்துக்கொள்ளுங்களென்று உத்திரவுகொடுத்து
யென்னைப்பெண்களெல்லாருமிருக்கும்போது அந்தரவுண் மெத்தை
யிற்படுத்துக்கொள்ளுமென்றாள் அதுபோல்நான் படுத்துக்கொண்
டேன் அவள் எப்போதும் படுக்கிற தம்லதுளிகாமஞ்சத்தின்மீதுபடு
த்துக்கொண்டாள் அவ்விடத்திலிருந்த பெண்களும்போய் அவரவர்க
ள் படுத்துக்கொள்ளுமிடங்களிற் படுத்துக்கொண்டார்கள் இதுவுமல்
லாமல் அந்தப்பாட்சாவுடையமகள் படுத்துக்கொள்வதற்கு முன்னமே
அந்தயேழுவாசலிலுமிருக்கிற பெண்களையெல்லாம் உண்டுதின்றுபடுத்
துக்கொள்ளும்படி உத்திரவுசெய்திருந்தாள்.

அதுபோலேயவர்களும் படுத்துநித்திரை செய்துவிட்டார்கள். பின்
பு அனறிரவு அர்த்தராத்திரிவேளையில் அந்தநகரத்தையாளும் பாட்சா
வுடையமகள் எழுந்து என்னருகில்வந்தாள் அவள்வருகிற சாடையைநா
னறிந்தெழுந்து எங்களிருவருக்கும்போதுமான வஸ்திபுடவைமுதலிய சர
ஞ்சாமான்பொருள் முதலியது மெடுத்துக்கொண்டு அந்தரவுண் மெத்
தையைவிட்டு எழுவாசலையுங்கடந்து வெளியிலிருக்கிற குதிரைலாயத்தி
ற்குட்போய் இரண்டு அதிவேகமாகிய புரவிக்குதிரைமுதலிய லகாம்போ
ட்டு நாங்களிருவரும் அந்தப்புரவிகளின்மேலேறிக்கொண்டு அந்நகரத்
தைவிட்டு கோட்டைவாசலைத்தாண்டி குதிரைகளை யதிவேகமாக நடத்
தி காடுமலைசெடிவனம் வனாந்திரங்களைக்கடந்து நாலுகாதவழிதூரத்
திற்குப்போகும்போது பொழுதுவிடிந்து ஒருசாமமாச்சுது அந்தச்சம
யத்தில் நாங்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டே ஒருமலையோர
மாகப்போனோம்.

அவ்விடத்தில் இருண்டகாடு ஒன்றெதிர்ப்பட்டது நாங்கள் அந்த
க்காட்டின் மத்தியிற்போகும்போது வெய்யலுடைய கடூரத்தினாலும
பசியின்களையினாலும் நாங்கள் அதிக்விடாய்ப்பட்டு நடக்கையில் எங்க
ளுக்கெதிரில் சமீபமாய் ஒருமெத்தைவீடொன்றுதெரிந்தது அதைப்பா
ர்த்தவுடனே நாங்கள் மகிழ்வடைந்து இதுபட்டணம்போற் காணப்படு
கிறதென்று அந்தமெத்தை வீட்டிற்குச் சமீபமாய்ப்போனோம் அந்தவீ

டானது மிகுந்த உன்னதமாகவும் அலங்காரமாகவுமிருந்தது அவ்விடத்திலந்தவீடொன்றுதவிர வேறொருகுடிசையுங்கிடையாது அதுகண்டு நான் அந்தப்பெண்ணைப்பார்த்து பெண்ணே இந்தவீடானதுஉங்கள்தேசத்தைச்சார்ந்த காட்டுக்குள்தானே யிருக்கிறது இதுஉனக்குத் தெரியுமாவென்றுகேட்டேன் அதற்கவள் என்னைப்பார்த்துக் கேளும்பாத்து ஷாவே இந்தவீட்டில் ஒருமனிதிருக்கிறார்.

அவர்பேர் முபாறக்கென்னும் பயில்வான் அவர்பலத்திலும்முனைத்திலும் வீரத்திலும் மிகுந்த மேன்மையுடையவர் அவருக்குஞ் சரியானபலசாலிகள் எகதேசங்களிலு மிருக்கமாட்டார்கள் ஆதலால் இவரையெங்கள் பெரியதகப்பனார் கிருபையோடு சேவகத்திற்கு வைத்துக்கொண்டு இருவருக்கு வேண்டிய பொருள்களைக்கொடுத்துக் கொண்டு வருவார் இந்தப்பயில்வான் அவைகளைப்பெற்றுக்கொண்டு நகரத்திற்குள் ளிருப்பதற்குச் சம்மதியில்லாமல் இந்தக்காட்டில்வீடுகட்டிக்கொண்டு இதிலிருந்து காலத்தைக்கழித்துவருகிறார் ஆனாலிவர் மாதத்திற்கொருவிசை யெங்கள் ஊருக்குவந்து தேவையானவஸ்துக்களை வாங்கிக்கொண்டுவந்து இந்தவீட்டிலிருந்து தினந்தினம் காட்டிற்புகுந்துவேட்டைகளாடி மான்மறைமுயல் பறவைமுதலானவைகளைப்பிடித்து அறுத்துச் சமைத்துப் புசித்துக்கொண்டிருக்கிறது இவரிப்படி யிருக்கையில் எங்களூராகிய மகாசீனத்தின்மேல் எவர்களாவது படையெடுத்து வந்தால் உடனேயெங்கள் பெரியதகப்பனார் தூதர்களையனுப்பி இவருக்குச் சொல்லச்சொல்லுவார்.

அந்தசேதிகேட்டு ஒருகுதிரையிலேறி உருவினவாளைக்கையிற்பிடித்து அதிவேகமாகக் குதிரையை நடத்திவந்து யெதிரிகள் மேற்பிரவேசித்து ஒருவீச்சுக்கு நானூறைந்நூறுபேர்களைவெட்டி வந்தவீரர்களியாவரையுங் கருவறுத்து பழையபடியிந்தவீட்டில் வந்திருக்கிறது இப்போது என்தகப்பன் நடத்திவருகிறவேலையைக் குறித்து இவர் பொறுமையாயிருக்கிறார் ஆனபடியால் நாமிந்தவீட்டுக்குட்போய் அவரைக்கண்டு நாம்வந்திருக்கிறதைச்சொன்னால நமக்கு ஜீவனமுதலானதுங்கொடுத்து நம்மைக்காப்பாற்றுவாரென்றுசொன்னாள்.

அப்போதந்தவீட்டிற்குள்ளேபோய் அவரைக்கண்டால் என்னகெடுதிநேருமோவென்று நினைத்து அந்தமெத்தைவீட்டினவாசலிற்போனேம் அந்தவீட்டுக் கதவடைத் திருக்கிறது நாங்கள் குதிரையைவிட்டுகீழேயிறங்கி அந்தமெத்தைக்கருகிலிருக்கும் குதிரைலாயத்தில் இரண்டு குதிரையையுங்கட்டிவிட்டு அந்தக்கதவைப்போய்த்தட்டிஉள்ளேபோயிருக்கிறவர்களையழைக்கலாமென்று கதவைத்தட்டினேன் அதற்குப் பூட்டில்லாமலிருந்தபடியால்உடனேயொருபக்கத்துக் கதவுதிறந்துகொ

...டது அப்போது நாங்களிருவரும் கதவைச்சாத்தாமலுள்ளே போனோ
ம் அங்கே சோறு கறி முதலியதுஞ் சமைத்து வைத்திருக்கிறதுமல்லாமல்
பாயொன்று விரித்து அதன்மேலே சீவனந்தின்கிற பாத்திரங்களையுங்க
ழுவி வைத்திருந்தது தண்ணீருமோர் அண்டாவிற் சுடவைத்திருந்ததுவெ
ற்றிலைபாக்கு முதலியதும் ஒருதாம்பாளத்திலிருக்கிறது இதுகளைக்க
ண்டு நாங்கள் பேரானந்தங்கொண்டு அந்த அண்டாவிற காய்ந்திருக்கிற
தண்ணீரிலரைவாசி யொருகொப்பராவிலெடுத்து வார்த்து நாங்களிருவ
ரும் குளித்து முழுகி உடுபானங்களையுடுத்துச் சமைத்திருக்கிறசோறுகறி
கள் அரைவாசிவைத்துவிட்டு மற்ற அரைவாசியைப் புசித்துப்பசியாறி
கையால் சுத்திசெய்து தாம்பூலமருந்தி ஒருஜமுக்காளத்தைவிரித்து அ
திலிருவரு மேகபோகமாய்ப் பேசிக்கொண்டிருக்கிறோம்.

அப்படியிருக்க மகாசீனத்திற்பொழுதுவிடிந்தவுடனே இந்தப்பெ
ண்ணைக் காணோமென்கிற சத்தத்தினால் இவள் தகப்பன்கேழ்வி
யுற்று அரண்மனை ஆஸ்தானம் அந்தப்புரம் சுற்றிலுங் காதவழிதூரத்
திலிருக்கப்பட்ட தோட்டந்துறவு பூங்காவனங்கள் முதலியஇடங்களிற்
றேடியுங் காணாமையாலந்தப்பாதுஷா யோசித்து நமது தமயன் குமா
ரனை நாம் சிரச்சேதனஞ்செய்துவிட்டபடியால் நமதுகுமாரத்தி யவன்பேரி
லிச்சைகொண்டிருந்தவள் நமதுபேரில்வெறுப்புற்று கெர்வங்கொண்டு
யாரோவொருவனை அழைத்துக்கொண்டுபோய்விட்டாளானபடியால் அ
வர்களிருவரையும் பிடித்துவந்து இந்தமகா சீனத்திலுள்ள அனைவர்களு
ம் நமக்குப்பயப்படும்படியாகச் சிரசாக்கினைசெய்து விடவேணுமென்று
எண்ணங்கொண்டு சுத்தவீரர்களை நான்குதிசையிலும் மனுபிளங்களைத்
தேடிப்பிடித்து வரும்படியாயனுப்பிவிட்டுப் பின்னும் அவ்வூரிலும் ப
றையறையச் சொன்னான்,

அதாவது எவர்களானாலுஞ்சரி என்னுடையகுமாரத்தியைக் கொ
ண்டுபோனவனையும் அவளையும்பிடித்துக்கொண்டுவந்தாலுஞ்சரி அல்
லவர்களிருக்கிற இடத்தைப் பார்த்து வந்தாலுஞ்சரி அவர்க
ளுக்கு வேண்டியபொருள்களைக் கொடுப்பதுந்தவிர மேலான உத்தி
யோகமுங் கொடுப்பேனென்று பலவிடத்திலும் விளம்பரஞ்செய்திருந்
தான் அதுகேட்டு அந்நகரத்திலுள்ளவர்களில் பலபேர்கள் திசைக்குத்தி
சைதேடிக்கொண்டு திரிகிறார்கள் அவர்களில் ஒருகிழவி எழுபதுவயது
ள்ளவள் மேலும் இந்திரசாலமுதலிய இக்குமத்துச்செய்வதில் கைதே
ர்ந்தவள் அப்பேர்ப்பட்ட கிழவி நாங்கள்வந்தவழியாகவேவந்து நாங்கள்
பேசிக்கொண்டிருக்கிறவீட்டின்வாசல் திறந்திருந்ததால் அவள் தடை
யில்லாமல் உள்ளேநுழைந்து எங்களிருவரையுங்கண்டு இலஜாலங்களா
கிய பேச்சுக்களைப் பேசினாள்.

அதென்னவென்றால் நான் ஆருமற்ற அநாதி இரண்டுமூன்று நா
கள் இன்னைச்சோறில்லாமல் பசியாயிருக்கிறேன் என்கையிலொருகாசு
மில்லை என்பேரில்நீங்கள் கிருபைவைத்து அல்லாவுக்காக கயிறென்னு
ந்தருமம்செய்யவேண்டுமென்று மிகவும்வருத்தத்துடனே கேட்டாள் அ
ப்போதெங்களுக்குப்பொருள்கள் முதலானவைகளை யெடுத்துக்கொடுப்
பதற்குச் சாவகாசப்படாததால் என்னுடன்வந்தபெண்ணானவள் தன்கை
விரலிலணிந்திருந்த கணையாழிமோதிரத்தைக்கழற்றி அந்தக்கிழவிகை
யிற் கொடுத்தாள் உடனேயந்தக்கிழவி மோதிரத்தை வாங்கிக்கொண்டு
சந்தோஷமாக அந்தவீட்டைவிட்டு வெளியேபோனாள்.

அப்போதுமுபாரக்கென்னும் பயில்வான் சிலமிருகங்களை வேட்
டையாடிக்கொண்டுவேகமாய் வீட்டிக்குவரும்போது வீட்டிலிருந்துகி
ழவிவருவதைக்கண்டு ஓகோ இவள்பாபக்கள்ளியாச்சுதே இவள்நாமில்
லாதபோது நம்முடைய வீட்டிற்குட்போய் வரவேண்டியகாரணமென்
னவென்று யோசித்து அவளைப்பார்த்து நீயேனுள்ளேபோனாயென்று
கேட்டார். அதற்கவளவனைப்பார்த்து ஐயா தங்களுடையமாளிகைக்குள
நம்முடைய பாத்துஷாவின் குமாரத்தியும் இன்னொருமனிதனும் ஒருவ
ருக்குந்தெரியாமல் சோரத்துவமாக வந்திருக்கிறார்கள் நம்முடையபா
த்துஷா இவர்களைத்தேடும்படியாகப்பலவிடத்திலும்சேவர்களையனுப்பி
யிருக்கிறார் நானும்அவருத்திரவின்பேரில் தேடிக்கொண்டுவந்து அவளி
ருவரையுந் தங்கள்வீட்டிற்கண்டு மிகவுந்தாழ்மையுடனே நான்பிழைப்
பதற்காக ஏதாவது சயிர்கொடுங்களென்றேன அதற்குநம்முடைய பாத்
துஷாவின்குமாரத்தி எங்கள்கையில் யாதொன்றுமில்லைஇந்தக்கணையா
ழிதானிருக்கிறது இதைக்கொண்டுபோய்விற்றுச் சீவனஞ் செய்யென்
று தன்விரலிலிருந்ததைக் கழற்றியென்கையிற்கொடுத்தாள்.

நான் அதைவாங்கிக்கொண்டு அவள் தகப்பனிடத்திற் காண்பிக்க
லாமென்று போகிறேனென்றாள அதைக்கேட்டவுடனே முபாரக்கெ
ன்னும் பயில்வானுக்குக்கோபம்வந்து என்வீட்டில் அடைக்கலமாகவந்
திருப்பவர்களைக் காட்டிக்கொடுக்கவரப்போகிறாயென்று கிழவியைதத
ன்கையிலிருந்தவாளினால் ஒரேவீச்சாய்வெட்டித்தலைவேறுஉடல்வேறா
க்கிவிட்டு அவள்கையிலிருந்தமோதிரத்தையும் எடுத்துக்கொண்டு தன
வீட்டுவாசலினருகில் குதிரையைவிட்டுக்கீழிறங்கி வீட்டிற்குள்ளேவ
ந்து எங்களைக்கண்டு அருப்பந்தங்கி தசுலீமசெய்து யிருந்து வணக்கத்
துடனே எங்களைப்பார்த்து நீங்கள் இந்தவீட்டிற்குள் வருகிறபோது
வெளிக்கதவைச்சாத்தாமல் வாராமா கதவுதிறந்திருந்தபடியாலல்லவோ

ஒருதுணைடுகளி பாதர்சோத் உள்ளேவந்து நீங்களிருக்கிறதைப்பார்த்து தந்திரஞ்செய்து உங்களிடத்திலிருந்தமோதிரத்தை வாங்கிக்கொண்டு போய் பாத்துஷாவுக்குக் காண்பித்து உங்களைப்பிடித்துக்கொடுக்கஎத்தனித்தாள் அவளப்படிப்போய்ச்சொல்வாளாகில் பாத்துஷாபடையெடுத்து இங்கேவந்து வளைத்துக்கொளளுவார்களே அப்படி யவர்கள்வந்து வளைத்துக்கொண்டாலும் நானிருக்கிறபடியாலுங்களுக்கொரு பயமுமில்லை ஆகிலும் அவ்வள்வு வருத்தம்வைத்துக்கொள்ளுவானேனென்று அந்தமோசக் காரிகிழவியை ஒரேவெட்டிலிரண்டுதுண்டாக்கிநீங்களவளுக்குக்கொடுத்த மோதிரத்தையுமெடுத்துக்கொண்டுவந்தேன் ஆகையால் நீங்களிவிடம்வந்தவிபரமென்னவென்று அந்தமூபாறக்கென்னும் பயிலுவான்கேட்க அவனைப்பார்த்து என்னுடைய ஊசபேர்குலங்கோத்திரமுதலியதும் இந்தபெண்ணைக்கொண்டு போகவேணுமென்கிற ஆசையால்பிரயாணப்பட்டு மகாசீனம்வந்து இவளைக்கண்டு உங்கள பாத்துஷாவுடைய மகனுக்கு யான்காகிதங்கொடுக்க அதையிந்தப்பெண்ணின் றகப்பனறிந்து அந்தப்பாத்துஷா பிள்ளையைச் சிரசாக்கினைசெய்து விட்டு என்னையுமிருந்தவுயிர்வதைசெய்துப்போட்டார்கள்

அப்போதிந்தப்பெண்ணானவள்என்னைக்காப்பாற்றிஇருவருமொருமைப்பட்டு தமயன்சொன்ன ஒசீபதென்னும் உபதேசத்துக்குமாறுபாடுசெய்த துரோகிமுகத்தில் விழிக்கக்கூடாதென்று நாங்களிருவருமசாசீனத்தைவிட்டு இவிடமவந்து சேர்ந்தோமென் றுதியோடந்தமாகச்சொல்லி அந்தப்பயிலுவானை முகஸ்துதிசெய்து நாங்களுமதிடத்திலமானமென்னும் அடைக்கலம் வந்தபடியால் இவ்விடத்தில் அல்லாவுடைய வுதவியினலெங்களுக்கு உம்மைவிடவேறே யுதவியில்லையானபடியாலெங்களைக் காப்பாற்றி பென்னூருக்குநாங்களிருவரும்போய்ச்சேரும்படியாய் தயவுசெய்யவேண்டியதென்றுமிகவும்வருந்திச்சொன்னென அப்போதவர் எங்களைப்பார்த்து ஆறுதல்தேறுதல்சொல்லி நீங்களொன்றுக்கும் பயப்படவேண்டியதில்லை மகாசீனத்தையாளுகிறஇந்தப்பெண்ணுடைய பாவா அங்குள்ளகுடிபடை இனாம் பிரதேசங்களிலுள்ள படைகளையெலலாம் ஒன்றாய்ச்சேர்த்து இங்கேவந்தாலுஞ்சரி அதுகளையெல்லாம்தஞ்செய்யும்படியான வலலபத்தை அல்லாவெனக்குக்கொடுத்திருக்கிறான் ஆனபடியாலென்னுடைய வுயிர்போனாலுங்களுடைய வுயிர்போகும் நானுயிரோடிருக்கிறவரையிலுங்களுயிர் முந்திக்கொடுக்கமாட்டேன் ஆகையாலிதுகளைக்குறித்து யோசிக்க வேண்டியதில்லையென்று மிகவுந்தைரியஞ்சொல்லிப் பின்னுஞ் சொலலுகிறார் கேளும் பாவா நீங்களிரண்டுபேரும் ஒசீவனமுதலியதுமில்லாமல்களை

யாய் வந்திருப்பதால் இதோசோறுகறிசமையல் செய்திருக்கிறது பசியாறலாமென்றார் அதற்குநாங்கள் வந்தவுடனே பசிதாகமேலிட்டிருந்தபடியால் நாங்கள் நீங்கள்சமைத்து வைத்திருந்த ஓசிவனமுதலியதுகளை பாதிபசியாறி தங்களுக்குப் பாதிவைத்திருக்கிறது அதைப் பசியாறுங்களென்று சொன்னவுடனே அவருக்கு மிகவுஞ் சந்தோஷமுண்டாகி எழுந்துபோய் குளித்து ஓசினமுதலியதுகதின்று தாம்பூலமருந்தி வீட்டைவிட்டுவெளியேபோனார் போனநிமிஷநேரத்திலெங்களருசல்வந்துபாவா உங்களைச்சிலர் தேடிக்கொண்டுவருகிறார்கள்.

அவர்கள்வருகிற ஆரபாரத்தினாலே தூசுகள்கிளம்பி ஆகாயத்திலிருக்கும் சூரியனைமறைத்துக்கொண்டது ஆகையால் இனிநாமிங்கேயிருக்கக்கூடாது இதைவிட்டு எங்கேயாவதுபோய் தப்பித்துக்கொள்ளவேண்டியதாயிருக்கிறது சீக்கிரமாய்ப் பிரயாணப்படுங்களென்று சொன்னார் உடனே நாங்கள் மூவருமெழுந்து வீட்டைவிட்டு வெளியில்வந்து கதவைச்சாத்தி பூட்டுப்போட்டுக்கொண்டு ஆளுக்கொரு குதிரையின்மேலேறி எங்களிருவர் குதிரையும் முன்னதாகவும் அவர்குதிரை பின்னதாகவும் அதிவிசையாய்விட்டுக்கொண்டு போகும்போதுமுன்பயில்வான் சொன்னதுபோலவே ஆயிரஞ்சுத்தவீரர்கள் குதிரையேறிக்கொண்டுவந்து எங்கள் மூவரையும் வளைத்துக்கொண்டார்கள்.

அதுகண்டு மூபாறக்கென்னும் பயில்வான் எங்களிருவரையுமொருபக்கத்திலிருக்கச்சொல்லி தானொருவனாகவே அந்தஆயிரம வீரர்களுடனெதிர்த்துச் சண்டைசெய்து அவர்களையெல்லாம வெட்டிநாசஞ்செய்து எங்களிடத்திற்குவந்து பின்னாலேயும்படை வருகிறதாயிருக்கின்றது சலுதியில் குதிரையை நடத்துங்களென்று தானுங்குதிரையை நடத்தினார் எங்கள் குதிரைகள் மூன்றும் வேகமாகப்போகும்போது மறுபடியும் இரண்டாயிரங்குதிரைக்காராகள்வந்து எங்களைவளைத்துக் கொண்டாரகள்.

அவர்களையுமந்த மூபாறக்கென்பவர் வெட்டி துவம்சஞ்செய்துவிட்டு எங்களைக் கூட்டிக்கொண்டு கொஞ்சதூரம்போகும்போது மறுபடியும் நாலாயிரங் குதிரைக்காரர்கள்வந்து வளைந்தார்கள் அவர்களையுமிந்த மூபாறக்கென்பவரெதிர்த்துச் சண்டைசெய்து அவர்களுயிர்களையெல்லாம் போக்கி அவர்கள சடலத்தை காக்கைபருந்துகழுகு நரிஓனாய்முதலியதற்கெல்லாம விருந்தளித்து எங்களருகில் வந்தாங்கள மூவருமகாய்வேகமானவேகமாகக் குதிரைகளை நடத்தி அனேகங்காடுசெடி பாலைவனம் இதுகளையெல்லாங்கடந்து அனேகந் தூரத்திற்போகும்போது அங்கேயொருவடவாலவிருட்சம ஆகாயத்தை யளாவிக் கொண்டு குளிர்ந்தநிழலாக விருக்கிறது அந்த நிழலில் நாஙுமநதப்

பெண்ணுங்குதிரையைவிட்டிறங்கி பசிக் களையினாற்சோர்ந்து படுத்து
நித்திரைசெய்துவிட்டோம் அப்போதிந்தமுபாறக் கென்னும் பயிலுகா
னானவர் அந்தவிருட்சத்தின் சமீபமாயிருக்கிற காட்டிற்புகுந்தொருமா
னைப்பிடித்து ஆலாவிருட்சத்திற்குள்வந்து அதையறுத்துக் கறியைச்
ட்டு ஒருபாத்திரத்திற் றண்ணீருங் கொண்டுவந்து வைத்திருக்கிறார்.

அப்போதுநாங்களிருவரும் விழித்தெழுந்திருக்கையில் அவர்கறி
யுந்தண்ணீரும் எங்கள்முன்பாகவைத்துப் பசியாருங்கள் பாவாவென்
றார் உடனே நாங்கள் மூவரும் அந்தக்கறியைத்தின்று தண்ணீர்குடி
த்து இளைப்பாறியிருக்கையில் சூரியனஸ்தமித்து யிரவாகிவிட்டதுஅ
ந்நேரத்திலவரவர் குதிரைகளில் நாங்கள்மூவருமேறிக்கொண்டுகுதிரை
களைநடத்தி அனேகமலைகள் குன்றுகள்பருவதங்கள் வனங்கள்வனாந்தி
ரங்கள் சிற்றூர்கள் பேரூர்கள்பட்டணங்கள் இதுகளையெல்லாங் கடந்
து யிராமுழுதுநடந்துபொழுதுவிடிந்து பத்துநாழிகையாச்சுது அப்
போதுங் குதிரையைநடத்திப் போகையில் எங்களுக்கெதிரில் ஒருசிற்
றூரெதிர்ப்பட்டது அந்தவூர்மிகவும் நீர்வளம் நிலவளம்பொருந்திமகா
சிறப்புற்றோங்கியிருக்கிறது அவ்வூரிற்போய் நாங்கள் மூவரும்யோசி
த்து இந்தவூர் எந்தப்பாத்துஷாவைச் சேர்ந்ததென்று அங்குள்ளவர்க
ளை விசாரித்ததில் அவர்கள்சொல்லியது இந்தவூர் குராசானிதேசத்தை
யாளும் அப்துல்நவாசிபாத்துஷாவைச் சேர்ந்ததென்றுசொன்னார்கள்
அதுகேட்டு இனிநமக்குப்பயமில்லையென்று அந்தவூரிலிருக்கும் சத்தி
ரத்திற்போய் தங்கியிருந்து ஒசிவனமுதலிய பதார்த்தங்கள் சமைத்து
த்தின்று பசியாறி அன்றைக்குப் பகலும்இரவுமிருந்து மறுநாட்காலை
யிற் பிரயாணப்பட்டு மூவருமெழுந்து குதிரைகளிலேறி நடத்திக்கொ
ண்டு தங்கவேண்டிய விடங்களிற்றங்கி சிலநாட்கழித்துப்போறபோது
ஒருநாட்பகல் பனிரண்டுமணிநேரத்தில் நாங்கள்போறபாதைக்கெதிரி
ல் ஓராற்றிலிருகரையு மொருகரையாய் வெள்ளம்பெருக்கெடுத்தோடி
குறுக்கேமறித்துக்கொண்டது அந்த ஆற்றுக்கும்என்னுடைய குராசா
னிநகருக்கும் ஒருநாளையபிரயாணமிருக்கிறது இந்தஆறு குறுக்கிடா
மற்போனால் அன்றைக் கிரவில் எந்நேரஞ்சென்றாலும் நாங்கள்மூ
வரும் நகரம்போய்ச்சேர்ந்து சுகத்துடனிருப்போம் அதற்குள்ளாகயெ
னக்கொருதுன்பம்வந்தது அதென்னவெனறால் அந்தமுபாறக்கென்னு
ம் பயிலுகான் என்னைப்பார்த்து கேளும்பாத்துஷாவே நீங்களிருவரும்
இந்தக்கரையிற்றானே நில்லுங்கள் என்குதிரையானது வெள்ளமாகிய
தண்ணீரைநீந்தி ஆறுகளைத்தாண்டும்படியான சக்தியுடைய தாகையா
ல் நானந்தக் கரையருகிலிருக்கும் ஊருக்குப்போய் ஒருவள்ளந் திட்

டஞ்செய்து இங்கேவந்து நாமூவரும் அந்தவெள்ளத்திலேறி அக்கரை
போய்ச்சேர்ந்து நம்மிடநகரம்போகலாமென்றுசொன்னார் அதற்கு நா
னப்படியே போய்வாருமென்றுசொல்லி உத்திரவுகொடுக்க அவரங்கே
ஆற்றைத்தாண்டவேண்டுமென்கிற கருத்துடனிருக்கையில நாங்கள்
மூவரும் குதிரையைவிட்டிறங்காமலேறிவந்த பிரகாரமே யிருக்கிறோ
ம் அந்தவேளையில் மூபாறக்கென்பவர் அக்கரைதாண்டும்படியாய்தன்
குதிரை யங்குப்டியைத் தட்டினார்.

அந்தக்குதிரையதிவேகமாய்ப்பாய்ந்தது அவரேறியகுதிரையுமநா
னேறியகுதிரையும் பெட்டைக்குதிரையாயிருந்தது நான்கொண்டுபோ
ன மகாசினத்துபாத்துஷாகுமாரத்தி யேறிவந்தகுதிரை ஆண்குதிரை
யா யிருந்தால் அந்தமூபாறக்குதிரை தாண்டும்போது அவள்குதிரை
யுங்கூடவே தாண்டியது அவ்விரண்டுகுதிரையும் அந்தஆற்றினமத்தி
யிற் போனதைநானிக்கரையிலிருந்து பார்த்தேன் அக்கரைபோய்ச்சே
ரவில்லை அவர்களிரண்டுபேருங் குதிரை யுமெவ்விதமாகவோ மறைந்
துமாயமாய்க் காணாமற் போனார்கள்.

கேளுங்கள்பாத்துஷா சிரோமணியே மற்றும்பக்கீர்களே அந்த
வேளையில் என்னுடைய மனமெவ்விதமாயிருக்கும் அதைநீங்களே
யோசித்துப் பாருங்கள் அப்போதுஎன்னிருதயத்தில் கலவரப்பட்டு
யாதொன்றுந் தெரியாமல் மவுனமாயிருந்து சற்றுநேரத்திற்குப்பின்
அறிவுவந்து என்னெண் சாணுடம்புங்குன்றி யிவர்களிரண்டுபேரு மி
ன்னவிதமாய்ப்போனார்களென்கிற எண்ணமறியாமல்யோசித்து நல்ல
தித்த ஆற்றுதண்ணீரிலிவர்களுங் குதிரையும் அமிழ்ந்துபோனார்களெ
ன்று பார்த்ததில் அப்படியு மமுழ்ந்தவில்லை அல்லது அக்கரையிற்றா
ண்டிப்போனார்களாவென்று பார்த்ததில் அப்படியும் போகவில்லை இ
துவென்ன புதுமையா யிருக்கிறதென்று குதிரையைநடத்தி ஆற்றின்
கரையிற்றண்ணீரோடுகிற பக்கமாய்த்தேடிப்போனேன் ஒருவேளைத
ண்ணீரிலமுழ்ந்தி கரையிலொதுங்குவார்களென்று பார்த்தேன் அப்ப
டியுங்காணவில்லை இதுவென்னஅதிசயமாக விருக்கிறதென்று மிகவுந்து
க்கப்பட்டு யோசித்ததாவது நாம்கொண்டுவந்த பெண்ணானவள் மாய்
கையாய் மறைந்துபோனாள் நமக்குத்துணையாக எவ்வளவோவொத்தா
சையுதவிசெய்து இவ்வளவுதூரம்வந்த மூபாறக்கையுங் காணாமற்போ
ச்சுதே ஆகையால இவர்களிரண்டுபேரையுமிழந்து நாம்தனியேயிருக்
கிறதினாலென்ன பலனென்றெண்ணி அன்னந்தண்ணி யாகாரமொன்
றுமில்லாமற் கானகங்களிற்றிரிந்து அங்குள்ளகந்தமூலபலாதிகளை தி
... னேகநாளாய் காடுசெடி வனம்வனாந்தரங்களிற்றுமுதலாகியதும

லைக்குபக்கீர் கோலங்கொண்டு தேசதேசங்களெல்லாஞ் சஞ்சரித்து அங்குள்ளபக்கீர்களிடம்போயிருந்து ஜீவனமுதலியதருந்தி வருகிறநாளையில் என்னெண்ணமானது அந்தப்பெண் காணாமற்போனநாள்முதல் இதுவரையிலும் ஒருநிமிஷநேரமாவது அவள்பேரிலெண்ண மில்லாமலிருந்தநாளில்லை ஒருவேளையெங்கேயாவது உயிரோடிருக்க மாட்டாளாவென்கிறமனமுள்ளவனாய்த் தேடிக்கொண்டு அனேகங்காடுகள் மலைகள் வனம்வனாந்தரங்கள் பள்ளம் படுகுழிகள் முதலானதெல்லாம் தேடியலைந்து காணாம லலுத்துப்பேஜாராய் ஒருகாட்டுவழியாய்வருகிறபோது ஒருபிரமாண்டமாகிய மலையெதிர்ப்பட்டது அந்தமலையைக்கண்டவுடனே நாமந்தப்பெண்ணானவளைத்தேடி எத்தனைநாளைக்கலைந்து திரிகிறது நம்மிடஹயாத்தும் வீணாப்போகிறது ஆகையாலிந்த மலையிலேறி வுச்சியிற்போய் கண்ணைமூடிக்கொண்டு கீழேவிழுவோமானால் நம்மிடவுயிர்போய்விடும் நாமெண்ணித்திரிகிற யெண்ணமும் வருத்தப்படுகிற துன்பமுமொழியுமென்றெண்ணி மலையிலேறிவிழப் போகிறபோது அந்தவேளையிலொரு பெரியமனிதர்வந்து என்கையைப்பிடித்து விழவொட்டாமலென்னைப்பார்த்துச்சொல்லுகிறார்.

ஓமனிதனே நீவீணாக சீவனைமடித்துக்கொள்ளப்போகிறாயே அப்படியிறந்துபோவாயானால் இருபதியிலும் உனக்கு நஜாத்துகிடைக்க மாட்டாது ஆனபடியா லிந்தவழியேபோவாயானால்ரூம்தேசந்தெரியும் அந்தநகரத்திற்குச் சமீபமாயொரு மைதானமிருக்கிறது அந்தமைதானத்திலொருகோரியும் அதனருகில் நாலுவிருட்சங்களும் அதுகளைச் சுற்றிக் கபுரஸ்தானங்களுமிருக்கிறது அங்கேபோவீரானால் உமக்கு முன்னேயிரண்டு ஆஜத்துக்காரர்கள் அந்தக்கோரியிலிருக்கிறார்கள் அவர்களைக்கண்டு மூன்றுபேருமாயிருக்கையில் இன்னமொரு ஆஜத்துக்காரரங்கேவருவார் ஆகநாலுபேருமொன்றாயிருப்பீர்கள பின்புஒரு நாளிரவில் அந்நகரத்தையாளும் ஆஜாதபகுத்பாதுஷாவானவர் அவரொரு ஆஜத்துக்காக அவிடமவருவார் ஆகஐந்துபேருடைய ஆஜத்தும் நிறைவேறும் ஆகையால் நீரங்கேபோய்ச்சேரலாமென்றுசொன்னார் அப்போதவரைப்பார்த்து நீங்களாரென்றுகேட்டேன் அதற்கவர் அலீபினி அபுதாலிபுறலியல்லாகு அன்னஹுவென்றுசொன்னார்கள் உடனே அவர்களை மிகவும் புகழ்ந்து நமக்குஇந்தவேளையில்வந்து யிறந்துபோகாமலிருக்கவுதவிசெய்தார்களென்றெண்ணி யிருக்கையில் எனகண்ணை மயக்கியது நான்பதறிவிழித்துப்பார்த்தேன் அப்போதவர்கள் என்கண்ணுக்குப் புலப்படாமல் இன்னவிதமாய்ப்போனார்களென்கிற மதிப்புதோன்றாமல்மறைந்துவிட்டார்கள் அந்நேரத்தில்அல்லாஹுசுகானுகுத்தஆலாவைப்புகழ்ந்து சுக்கூர்செய்து அஜாதஅலியுல்லாஅவர்கள்சொன்னசேதியைஎன்மனதிலுறுதிப்படுத்திறூமநகரத்திற்போகிறவழியேபோய் இந்நகரத்திற் கடுத்தமுன்சொன்ன கோரியில்வந்துஎனக்கு முன்னதாகவந்திருக்கிற இரண்டு பக்கீர்களையுங்கண்டுஒன்றுக்கொ

ன்று தசலீமுதலியவந்தனஞ்செய்து மலாக்கத்தாயிருக்கிறது நான்காவது பக்கீரானவர்வந்தார் அவரும்நாங்கள் மூவரும் ஏகோபித்து ஒன்றாயிருக்கிறபோது ஒருநாளிரவில்நாங்கள்நால்வரும் பக்கீரான விவரங்களைத்தர்க்கமிட்டு அவரவற்குவந்தபக்கீர் கோலங்களைச்சொல்லவேண்டுமென்று தீர்மானித்திருக்கையில்முதலாவதுபக்கீராகிய முகம்மதுகவுதெனபவர் அவர்பட்ட அகவாக்களைச்சொல்லி அவர்கொண்ட பக்கீர் கோலஞ்சரியென்றிருக்கையில் கேளுங்கள் பாத்துஷாக்களுக் கெல்லாம் சக்கிரவர்த்தியாகிய பாத்துஷாநாயகமே நீங்களெங்கள்நாலுபேரையுமழைத்து எங்கள் கதாக்களைச் சொல்லுங்களென்றுகேட்க நாங்கள் சொல்லாதிருக்க தாங்கள்காஜா சக்பரசுடைய கிஸ்ஸாவைச்சொல்ல அதைக்கேட்டு இரண்டாவதுபக்கீராகிய அக்பர்பாத்துஷா தின்னுடைய அகவாக்களைச்சொல்ல அவர்கொண்ட பக்கீர்கோலஞ்சரியென்று நாமனைவரும் ஒத்துக்கொண்டுபின்புகானிதுவனாயிலுஞ்சொல்லிவந்த கிஸ்ஸாவானது என்னுடைய அகவாலும் நான்கொண்டபக்கீர்கோலமென்று மூன்றாவது பக்கீராகிய ஸம்சதீன்பாத்துஷாசொல்லிமுடித்தார்.

ஆமீன் ஆமீன யாறப்பிலாலமீன்

மூன்றாவது பக்கீர் சொல்லிய கிஸ்ஸா

முற்றிற்று.

பிசுமில்லாகி,

## நான்காவது பக்கீருடையகிஸ்ஸா.

குலுஸ்தானி நகரத்தையாண்ட சகபர்தையார்பாத்துஷாகுமாரர்

## அஜன்பகுதாதிபாத்துஷாகதை.

இவ்விதமாக மூன்றாவதுபக்கீராகியசம்சதீன்பாத்துஷாவுடையகிஸ்ஸாவைச்சொல்லிமுடிந்தவுடனேநான்காவது பக்கீரெழுந்து தசுலீம் செய்துஉட்கார்ந்து ஆஜாத்பகுத்பாத்துஷாவையும்மற்றமூன்றுபக்கீர்களையும்பார்த்துமிகுந்தமரியாதையுடனேசொல்லுகிறார் கேளுங்கள்பாத்துஷாக்களுக்கெல்லாம் சக்கிரவர்த்தியாகியபாத்துஷாசிரோமணியே

மற்றும்பக்கீர்களை நான்பிறந்துவளர்ந்து இந்நகரம்வந்து பக்கீர்கோல
ங்கொண்ட அகவாக்களைச் சொல்லுகிறேன் நீங்களெல்லோருங்கிர்பை
வைத்துக் காதுகொடுத்துக்கேளுங்கள் நான்குலுஸ்தானி தேசத்தை
யாண்ட சகபர்தையாக்பாத்ஷா பாரம்பரையாய் ராஜரீகஞ்செய்துவ
ருகிறநாளையில் எல்லாபாக்கியமுநிறைந்து புத்திரசந்தானமில்லாமல்ம
னமகிழ்ச்சியானது குறைந்து அனேகம்பொருள்களை ஏழைமிசுக்கீன்
களுக்கு கயிர் கயிறுத்தென்னுந் தருமஞ்செய்து பள்ளிமுதலியகோரி
கள்கட்டி சக்காத்துச்செய்து வருகிறநாளையில் அல்லாகுத்த ஆலாவு
டையகிர்பையினால் நான்பிறந்துவளர்ந்து எனக்கு அஜன்பகுதாதியெ
ன்கிற பேரிட்டுஐந்துவயதாகி ஓதவைத்து நானோதிக்கொண்டுவருகை
யில் எனக்கேழுவயதாயிற்று அந்தநாளையில் என்பாவா சகபர்தையா
ர் பாத்துஷாவுக்கு அல்லாகுத்தஆலாவுடைய கலாவும் சற்பனையுஞ் ச
மீபித்து சக்ருத்துவேளைமுடிகிக்கொண்டிருக்கிறது அந்நேரத்திலவர்
கூடப்பிறந்த இளையவராயும் எனக்குச் சிறியதகப்பனருமாகிய மீறு
சதக்கென்பவ ரொருவரிருந்தார் அவரையெங்கள்பாவா அருகிலழைத்
து என்னைப்பிடித்து அவர்கையிற்கொடுத்து இந்தப்பிள்ளைக்குப் பதி
னாறுவயதானவுடனே என்பட்டத்தைக்கட்டி உனதுமகளைக்கொடுத்து
நிக்காகுவென்னுங்கலியாணஞ்செய்து மற்றுங்காரியங்களை நீகூடயிருந்
து நடத்திவாருமென்றுசொல்லி அதற்குவயதுவருகிறமட்டும் இந்தச்
செங்கோலை நீயேசெலுத்திவரவேண்டியதென்று சொல்லிவிட்டு என்
னைவளர்க்கிற கோசா எங்கள்சமூகத்திலிருந்தார் அவர்களும்பிறந்த ஆ
றுமாதம் என்தாயிறந்துபோனார்கள்.

அந்தநாள்முதலியதுவரையிலும் தன்னுயிரைப்போலேகாப்பாற்
றி நான்கேட்டதெல்லாங்கொடுத்து வளர்த்துவருகிறார் அவரையென்ற
கப்பனாரழைத்து இந்தப்பிள்ளைபெண்பிள்ளையுமல்ல இனிமேலுன்னு
டைய பிள்ளைதான் அதற்குயாதொருகுறைவும் வராமல் இதற்குமுன்
என்னிடத்திற்சேர்ந்து இதுவரையிலுமநாமெவ்வளவு உயிருமுடலும்
போல் ஒருவர்சொல் ஒருவர்தட்டாமலிருந்து வந்தோமல்லவா அதை
ப்பார்க்கிலும் எண்மடங்கதிகமாகப் பார்த்துவருவது உம்முடையக
டனென்று சொல்லி முடிந்தவுடனே பொய்யாகிய துனியாவைவிட்டு
மெய்யாகிய சொர்க்ககதியிற் சேர்ந்தார் அப்போதென்பாவாவை யென்
சிறியதகப்பனாகிய மீறுசதக்கென்பவரெடுத்து நல்லடக்கஞ்செய்துநாற்
பதுநாள்வரையிலும் நடக்கவேண்டிய கத்தம் பாத்தியாமுறைகளியா
வுங்கிரமமாய்நடத்திபின்பு என்தகப்பனார் கட்டியபட்டத்தையவர்கட்
டிக்கொண்டு ராஜரீகஞ்செய்து வருகிறார் அப்படியவரிருக்க யென்னை
வளர்த்துவந்த கோசாவென்தகப்பனிறந்ததின்பிறகு என்னைமிகவு மரு
மையாகவளர்த்து சகல ராசதந்திரமுதலியவித்தைகள் படிப்புகளெல்

லாக் கற்றுக்கொடுத்து வருகிறநாளையில் நானரண்மனையைவிட்டு வெளியிலொருதெருவிற்போய் அங்கே விளையாடுகிறபிள்ளைகளோடுவிளையாடிக்கொண்டிருக்கையில் என்னோடொத்த ஒருபையனும்நானும் சண்டைபோட்டுக்கொண்டிருக்கையிலவனென்னையடித்துத்தள்ளினான் நானழுதுகொண்டு அரண்மனைக்குள்ளேபோய் என்னைவளர்க்கிறக்காசாவைப்பார்த்தேன் அவர்வெளியேபோயிருந்ததால நான்மிகவுமழுதுக்கொண்டிருந்தேன அந்தவேளையில் அவர்வந்து நானழுகிறதைவிசாரித்தார் அதற்குநான் ஒருபையனடித்தானென்றேன் அவரென்னைக்கட்டித்தழுவி பாவா உன்தகப்பனார் சுயாத்தோடிருந்தால் ஒருவனிப்படியடிப்பானோவென்று அவருமென்னோடுகூட அழுதுஎன்னைக் கூட்டிக்கொண்டுயெனதுசிறியதகப்பனிடத்திற்பிரியாது சொல்லலாமென்று அழைத்துப்போய் அவர்சமுகத்தில்நின்றார்.

அப்போது என்சிறிய தகப்பனாகிய மீருசதக்கென்பவர் எங்களிருவரையுங்கண்டு அவர்மனதிற்கசடெண்ணி இந்தக்கோசா பிரியாது சொல்வதற்கு முன்னதாக அவரைப்பார்த்து ஓ கோசாவே நீரின்றைக்கு யிந்தப்பிள்ளையைக்கூட்டி வந்திருக்கிறசேதி யெனக்குத்தெரியும் அதென்னவென்றால் பட்டங்கட்டிவைக்கிறதற்காகவும் பெண்ணைக்கலியாணஞ்செய்து வைக்கிறதற்காகவும் எண்ணிவந்திருக்கிறதாய்த்தெரியவந்தது இந்தப்பிள்ளைக்குவயதுபோதாதுஇன்னங்கொஞ்சநாட்சென்று வயதுவந்தபின்பிறகு பார்த்துக்கொள்ளலாம் போமென்றார் அப்போது கோஜா யோசித்து நாம்சொல்லவந்ததொன்று இவர்சொல்லுகிறதொன்றாயிருக்கிறதென்று இந்தவேளையில நாமெப்பேச்சும்பேசத்தகாதென்றுயென்னைக் கூட்டிக்கொண்டு நாங்களிருக்கிற அரண்மனையில்வந்து என்னைக்கட்டி யழுது சொல்லுகிறார் கேளும்பாவா உன்தகப்பன்சொல்லிய பிரகாரம் உன்சிற்றப்பன் சரியாநடக்கப்போகிறதில்லை அவனென்னமோ கவடையெண்ணி உனக்குத் துசுமனென்னும் பகையாளியாயிருக்கிறானென்று தன்னிரண்டுகண்ணிலும் தாரைதாரையாய்க்கண்ணீர்விட்டழுதார் நானுமவரைப்பார்க்க அதிகமாகவே யழுதேன அப்போதெனது அழுகையை யமர்த்திச்சொல்லுகிறார்பாவா, நீயொன்றுக்கும பயப்படவேண்டியதில்லை என்கயாத்தெனாலும் உயிரிருக்கிறவரையிலுனக்கு யாதொருகுறைவு வருமென்றுயெண்ணவேண்டியதில்லையென்று மிகவும்வாழ்த்திப்போற்றி எனக்குபுத்திமதிகள் சொல்லிப்பிரியத்துடனேவைத்திருந்தார் எனக்குப் பதினாறுவயது சரியாய் வந்து என்புத்தி யெனக்குப் போதுமானதா யிருக்கையில் ஒருநா

ளென்னை வளர்த்தகோஜா என்னைப்பார்த்து உன்சிறியதகப்பனாகியமீறசதக்கிடத்திற்போய் உனக்குக்கலியாணஞ் செய்வதற்குக்கேட்டுவரலாம்வாவென்று என்னைக்கூட அழைத்துக்கொண்டு அவாஇரா ரீ சஞ் செய்கிறதகத்திற்குப்போயவர் சமூகத்தில்நின்றோம் என்சிறியத கப்பன் எங்களிருவரையும் உட்காரச்சொல்லி கோசாவைப்பார்த்து ஓகோசாவே நீங்களிருவரும் எங்கேவந்தீர்களென்றுகேட்டார் அதற்குப்பதில் கோசா உங்கள் தமயனார் குமாரன் அசன்பகுதாதி பெரியபிள்ளையாய்விட்டபடியா லிந்தப்பிள்ளைக்கு உமது குமாரத்தியை நிகாகுவென்னும் கலியாணஞ்செய்துகொடுத்து உமதுதமயனார் சொன்னதுபோலே நீர்நடத்திக்கொண்டு வரவேண்டிய தலைவாவென்றார்.

அப்போதென்சிறியதகப்பனானவர் சிலசாஸ்திராதிகளையழைத்துவரும்படி உத்திரவுசெய்தார் அதுபோலவர்கள் வந்தார்கள் அவர்களைப்பார்த்து என்தமையனார்மகனுக்கும் என்மகளுக்கும் கலியாணஞ்செய்யயோசித்திருக்கிறேன் அதைஇந்தவருஷத்திற் செய்யலாமாவருகிறவருஷத்திற்செய்யலாமா அதையோசித்துச்சொல்லுங்களென்றுகேட்க அப்போது சாஸ்திரிகளெல்லோருமாலோசித்து இவர்கேட்கிறமாதிரியைப் பார்த்தால் இந்தபிள்ளைக்குத்தன்மகளைக்கொடுக்கமனமில்லாமல் நம்மைச்சொல்லும்படியாய்ச் சொல்கிறாரென்றுயோசித்து சாஸ்திரிகளெல்லோரும் ஒரேவாக்காயவர்கேட்டதற்குமனவருத்தம்வராமற்படிக்கு அவரெண்ணம்போற் சொல்லவேண்டுமென்றெண்ணிச் சொல்லுகிறார்கள் கேளுங்கள் தவுலத்தே எங்களிடத்திலிருக்கிற சாஸ்திரங்களையெல்லாம் பார்த்ததில் இந்தவருஷத்துக்கும் வருகிறவருஷத்துக்குமாகாது இதுமுதல்மூன்றுவருஷஞ்சென்றால் அதற்குமேல்சாஸ்திரத்தைப்பார்த்துச் சொல்லுகிறோமென்றார்கள்.

அதுகேட்ட என்சிறியதகப்பனாகிய மீறுசதக்கு கோசாவைப்பார்த்து சாஸ்திரிகள்சொன்ன சங்கதியைக்கேட்டீராவென்று சொன்னார் அதற்குக் கோசாசரிதானென்றார் அப்போதென்சிறியதகப்பனார்சொல்லுகிறார் ஓகோசாவே பிள்ளையைக்கூட்டிக்கொண்டுபோய் மூன்றுவருஷஞ்சென்றதின்பிறகு என்சமூகத்திற்குவாருமென்றனுப்பிவிட அவரென்னை யழைத்துக்கொண்டு நாங்களிருக்கும் அரண்மனையில்வந்து மிகவும் வியாகூலமாயெண்ணதெல்லாமெண்ணி யிருக்கிறபோது என்சிறியதகப்பனாகிய மீறுசதக்கிடத்திலிருந்து ஒருதூதன்வந்தான் அவனைக்கோசர்பார்த்து நீயெங்கேவந்தாயென்றுகேட்க உம்மைப்பாத்துஷா தனியேயழைத்துக்கொண்டு வரச்சொன்னாரென்றுசொல்ல அவரென்னைவீட்டிலிருக்கும்படிச் சொல்லிவிட்டு அந்தத்தூதுவன்கூடேபோய் என்சிறியதகப்பனைக்கண்டு இரகஸ்யமாய்ச் சிலவசனங்கள்பேசி

க்கொண்டு சற்றுநேரத்திற்குப்பிறகு நானிருக்கிற அரண்மனைக்குள்வ
ந்து என்னைக்கட்டிப் பரிதாபப்பட்டழுகிறார் நானும்அழுது கோசா
வைப்பார்த்து ஏனென்னைக்கட்டி யழுகிறீரென்று கேட்டேன்அப்போ
தவர்சொல்லுகிறார் கேளும்பாலா உன்சிறிய தகப்பனாகியமீறுசதக்கெ
ன்பவன உனக்குப்பகையாளியாய்விட்டான் அதுவெதினாலென்றால்நா
னக்கேபோனவுடனே தகத்தைவிட்டுக்கீழிறங்கி யென்கையைப்பிடித்
துத் தகத்திலுட்காரவைத்து உன்சிற்றப்பன்சொல்லுகிறான் அதென்
னவென்றால் உமக்குநான்வேண்டியபொருள்தருகிறேன் உன்கயாத்து
ள்ளவரையிலும் என்னுயிருள்ளவரையிலும் உன்சொற்றட்டாமற்படி
யொருகுறைவும்வாராமல் நடந்துக்கொள்ளுகிறேன்நீரெனக்கு வொத்
தாசைசெய்யவேணும் அதென்னவென்றால் என்தமையன்மகன்அசன்
பகுசாதினைய எவ்விதத்திலாவது கொன்றுபோடவேண்டியது அதை
நானொருகாலத்திலும் மறக்கப்போகிறதில்லை ஆனபடியால் நான்
சொன்னகாரியம் உமக்கென்னமாயிருக்கிறது அதைச்சொல்லுமென்
றான் அதற்கு நானவனைப்பார்த்து நீசொன்னபடி ஒரு நிமிஷத்திற்
கொலைசெய்துவிடலாம் அப்போது உன்னை இந்தவூரிலுள்ள பேர்களு
ம் தமையன் மகனைக்கொன்று சகலத்தையுங் கைக்கொண்டுபட்டங்க
ட்டியாளுகிறானென்கிற நிந்தனை கிடைக்கும் ஆனபடியாலவனையப்படி
க்கொல்லலாகாது நானொருவுபாயஞ்சொல்லுகிறேன் அதுபோலே நீர்
செய்வீரானால் உம்மையுலக நிகழவுமாட்டாது குறைவாகிய பேச்சுக
ளுஞ்சொல்லமாட்டார்களென்று சொன்னேன் அதென்ன வுபாயமெ
ன்றான் அதற்குநானும்உன்தமையன்மகனும் ஒருநாளைக்குவுன்னிடத்
தில்வருகிறோம் நீங்களெங்கேவந்தீர்களென்றுகேளும் அப்போதுநா
ன்சொல்லுகிறேன் உன்தமையன்மகன் வேட்டைக்குப் போகிறேனெ
ன்கிறார் நீருத்திரவு கொடுமென்று சொல்லுகிறேன் அதுபோலேநீரு
த்திரவுகொடும் நாங்களிருவரும் காட்டிற்குப்போய் வேட்டைகளாடு
கிறதுபோல்ஆடிக்கொண்டிருக்கையில் சோர்வுபார்த்துஎன் வாளினால்
ஒரேவெட்டாகவெட்டிப்பள்ளந்தோண்டிப் புதைத்துவிட்டு உன்னிட
த்தில்வந்து உன்வுமையன்மகனைப்புலிபிடித்துக்கொண்டுபோய்த்தின்
றுவிட்டதென்று சொல்லுகிறேன் அப்போதுநீரழுது தவித்து ஆத்தி
ரப்பட்டு இழவுகொண்டாடிசெய்யவேண்டியசடங்குகளெல்லாஞ் செய்
துவிட்டு சும்மாயிருந்து விடும் அப்போதுஉலகத்திலுள்ளபேர்கள் யா
தொருபழுதுஞ் சொல்லமாட்டார்களென்று அவன்மனதுக்குச்சரியா
யிருக்கும்படியாயோசனைசொன்னேன் அதுகேட்டஉன்சிறியதகப்பன்

இது நல்லயோசனை சொன்னீரென்று என்பேரிற்சந்தோஷப்பட்டு மனமகிழ்ச்சியோடிருந்தான் அவனுக்கு மிகுந்தமரியாதைசெய்து விடைபெற்றுக்கொண்டு வந்துவிட்டேனென்று எனக்குநடந்தவிபரங்களையெல்லாம் ஒன்றுவது பிசகில்லாமற் சொன்னார் இதுகளையெல்லாங் கேட்டு நான்மிகவுந் துக்கித்தழுதுக்கொண்டிருந்தேன் அவரென்னழுகையைய பர்த்தி என்கண்ணீரைத் துடைத்து நீயொன்றுக்குப் பயப்படாதே பாவா அல்லாசுவானகுத்தஆலாவுடைய அமைப்புயெப்படியிருக்கிறதோ அப்படியேயிருக்கும் நம்முடைய நசீபென்னும் அதிர்ஷ்டப்பிரகாரமுடியும் ஆனாலென்கயாத்துள்ளவரையில் யாதொருதுன்பமும் இடுக்கமும்குறைதரப்போகிறதில்லையென்று என்மனதைத்தேற்றி தைரியப்படுத்திபாவா இனிமேலிந்தத்துரோகி சண்டாளனுடைய உன்சிறிய தகப்பன் முகத்தில் முழிக்கக்கூடாது ஆகையால் நீயென்கூடவாவென்றுகையோடேயழைத்துக்கொண்டு ஒருஅறையைத்திறந்து அந்தக்கதவை உள்தாழ்ப்பாள்போட்டு வுள்ளேபோகிறபோது மிகவுமிருளோங்கியஅறையாயிருந்தது அந்தறைக்குள் ஒருசதுரக்கல்தரையிற்பொட்டிருந்தது அதைக்கிளப்பி அப்பாற்படுத்த ஒருசுரங்கமிருந்தது அந்தச்சுரங்கத்தின் வழியாய் மிகுந்ததொலையிற்போகும்போது ஒருசித்திரகூடமொன்றமைத்து அதுகளிலிரத்தினங்களைப்பதித்துப் பிரகாசித்துக்கொண்டிருந்தக் கூடமுழுவதும் இருளென்கிறதணுவளவேனுமில்லாமல் பகல்போலிருக்கிறது அந்தக்கூடத்தின்மத்தியில் நவரத்தினங்களால் அமைத்த ஒருமேஜைநாற்காலியிருக்கிறது அந்தமேஜையின்மேல் தொண்ணூற்றொன்பது புத்துகக்குட்டிகளென்னும் சிலைகள் ஆயிரத்தெட்டுமாற்றுள்ள அபரஞ்சியென்னுந் தங்கம்போலிருந்தது அதைக்கண்டுஆனந்தங்கொண்டு மகிழ்ச்சியாய் நின்றேன்.

அப்போது என்னையழைத்துப்போன கோசாசொல்லுகிறார்சேளும் பாவா இந்தசித்திரகூடமானது இன்னம்பாருக்குந் தெரியமாட்டாது உங்கள் தகப்பனுருக்கும் எனக்குந்தெரியுமல்லாமல் மற்றஜின்கள் பூதம்பரிதேவுமுதலிய மனிதருக்குந்தெரியமாட்டாது ஆகையாலுங்கள்பாவாசகபர்தையார் பாத்துஷாவுக்கு ஒருசின்னராஜன் சினேகமாகவிருக்கிறார்அந்தச்சின்னராஜனுக்கு உன்பாவாவுடநானுமாக வருஷத்துக்கிரண்டுவிசையனேகவெகுமதியெடுத்துக்கொண்டு அவரிருக்குமிடத்திற்குப் போய்கொண்டுபோன மரியாதையை அவருக்குமுன்பாகவைப்போம் அவரிந்தமரியாதைகளை மனமகிழ்ச்சியுடனே யெடுத்துக்கொண்டு எங்களையிருக்கும்படி ஆக்கியாபித்து ஒருபுகதென்னுஞ் சிலைகொடுப்பார் அதைவாங்கிக்கொண்டு இங்கேவந்து விடுகிறது வந்தஆறுமாதம்நாங்களிருவரும்போய் முன்செய்யுமரியாதைபோலசெய்து அவர்கொடுக்கிற புக்தை

வாங்கிக்கொண்டு வந்துவிடுகிறது இப்படியாய்வருடத்தி லிரண்டுதரம் போய் வாங்கிவந்ததில் தொண்ணூற்றொன்பது புத்துகுட்டிவந்து சேர்ந்தது இன்னமொருவிசைபோய் ஒருபுத்துகுட்டிவாங்கிவந்தால்நூறு புத்துகுட்டியாகும் அந்தநூறுபுத்துக்கும் சிலமந்திரங்க ளிருக்கிறது அந்தமந்திரத்தைச்சொல்லி இந்தவூரையெடுத்து இன்னமொரு மைதானத்தில் வைத்துவிடென்றுசொல்வோமாகில் ஒருகிணை மூடிவிழிக்குமுன்னே அந்தப்படியேசெய்யும் இன்னமென்னென்னவிதங்கள் செய்யவேண்டுமானாலும் அதுகளெல்லாமுடிக்கும் அப்படியிருக்க உங்கள் பாவாவுடனாலும் இன்னமொருபுத்துக்குட்டி யென்னும்சிலையைப்போய்வாங்கிவரவேணுமென்றிருக்கையில் உங்கள்பாவாமவுத்தாய்ப் போய்விட்டார்.

ஆனபடியாலந்த வொருபுத்து வாங்கிவரவில்லை இப்போது நாமிருவருமிந்தச் சின்னிடத்திற்போய் உங்கள்பாவா யிறந்துபோனதையும் நம்முடைய நிர்ப்பாக்கியங்களையும் சொல்லிக்கொள்வோமானால்நமமிடபேரிலிரக்கப்பட்டு அவரின்னமொருபுத்துக்குட்டியுங் கொடுப்பார் அதைவாங்கிக்கொண்டு நமமிடவூருக்குவந்து இந்தத்தொண்ணூற்றொன்பது புத்துக்குட்டியுடனேநாம் கொண்டுவரும் புத்துக் குட்டியையுஞ் சேர்த்து நூறுசிலையுமொன்றாக்கி உன்சிற்றப்பனாகிய மீறுசதக்கென்பவனைச்செயித்து அந்தப்பட்டத்தை நீயாளும்படியாக அல்லாசுவானுகுத்தஆலா கிருபைசெய்வான் அப்போது என்னிருகண்களாற் மகிழ்ச்சியடைவேன் அதுந்தனிலும் நானொரு யின்பமில்லாதவனா யிருக்கிறேனென்று என்னைக்கூட்டிக்கொண்டு அந்தச்சித்திரகூடத்திலனேகம் அறைகளிருக்கிறது அவ்வறைகளிலொரு அறையைத்திறந்தார் அதனுட்போய் பார்க்கையில் அளவிறந்ததிரவியங்கள் இவ்வளவென்று சொல்லிமுடியாததாயிருந்தது அதையும்பார்த்து அந்தஅறையைமூடிவிட்டு இன்னமொரு அறையைத்திறந்தார் அந்தஅறையிலும்போய்ப்பார்த்தோம் கணக்கி லடங்காத ஒன்பதுவித ரத்தினங்கள் குவித்திருந்தது அதையும்பார்த்து இன்னமொரு அறையைத்திறந்து பார்க்கையில் அதில் தங்க அசரபிக்காசுகளாய் நிறைந்திருந்தது இவ்விதமாகஒரறையிலுள்ளாணயம் இன்னமொரு அறையிலில்லாமல்வேறேநாணயங்களாயிருக்கிறது இப்படி அறைக்கறைவெவ்வேறு பொருள்களாயிருக்கிறதை யென்கண்ணினாற்கண்டு மகிழ்ச்சியடைந்து போனதுங்கொண்டிருக்கையில் கோசாவானவர் அந்த அறைகளையெல்லாம்பூட்டி முத்திரைசெய்துவிட்டு என்னையழைத்துக்கொண்டு கன்னிமூலையில் இதுவரையிற் பார்த்த அறைகளிலும் விஸ்தீர்ணமுள்ள அறையா யிருக்கிறது

அந்தஅறையைத்திறந்து அதற்குள்விநோதமாகிய சாமான்களும்நவரத்தினங்களுமிருந்தது அதுகளிற்சில சாமான்களும் இரத்தினங்களுமெடுத்து மூட்டைகட்டி அவர்தோளிற்போட்டுக்கொண்டு இந்தச்சாவிகொத்துகளையெல்லாம் ஒருபெட்டியில்வைத்துப்பூட்டிவிட்டு ஒருமூலைபக்கத்துத்தரையில் செம்புத்தகட்டால் கதவுசெய்து மூடியிருந்தது அதைத்தூக்கிசுவர்புறமாய்ச்சாத்திவிட்டு என்னையழைத்தார் நான்போய் அடைத்திருந்த சுரங்கத்தைப்பார்க்கையில் பாதாளமாயிருக்குது அதற்குயேணிவைத்திருக்கிறது அப்போதுகோசாவானவர் என்னையும்வரும்படியாய்ச்சொல்லி யேணியிலிறங்கினார் நானுங்கூட யிறங்கினேன் வெகுநேரத்திற்குப்பிறகு யேணியில்லாமல் தரையாயிருந்தது அப்போது நான்பார்த்தேன் அந்தச்சுரங்கத்தினிருட்டானது இன்னவிதமானயிருட்டென்று சொல்லமுடியாது அப்போதென்மனது கலவரப்பட்டுகின்றேன் கோசாவானவர் என்கையைப்பிடித்து நடந்தார் நானுங்கூடநடந்தேன் அப்படிநடந்தது இவ்வளவுநேரம் நடந்தோமென்கிறகணக்குந்தெரியாமற்போகிறபோது அங்கேயொருவெளிச்சந்தோன்றியது அவிடத்திற்சிலர் மநிதசஞ்சாரம்போலிருக்கிறார்கள்,

அவர்கள்கோசாவைக்கண்டவுடனே மிகவுந்தசலீம்செய்து சட்டித்தழுவி ஓகோசாவே உம்மைவெகுநாளாயிங்கேவரக் காணோமே என்றார்கள் அப்போதவர்களைப்பார்த்து என்னுடைய பாத்துஷாயிறந்துபோய்விட்டார் இதோநிற்கிறவர் அவருடையபிள்ளை இதுகுழந்தையாயிருந்தது அவர்மகுத்தாகிறபோது இவனையென்கையிற்பிடித்துக்கொடுத்துநீர்வளர்க்கவேண்டுமென்றுசொன்னார் அதுபோலவேஅந்நாள்முதல் இதுவரையிலிவனைவைத்து வளர்த்துக்கொண்டுவந்தேன் இப்போது பெரியபிள்ளையாய்விட்டார் அதினாற்றானிவிடம் வரப்போகயில்லாமலிருந்து விட்டேன் இப்போதுங்கள் இராஜனிடத்திலிவனைக் கூட்டிக்கொண்டு போகிறதற்காக வந்தேனென்றார் இவ்விதமாக அவர்களும் என்னைவளர்த்த கோசாவும் ஒன்றுக்கொன்று பேசிக்கொள்ளுகிற பேச்சுகள் கேழ்க்கிறதேயொழிய அவர்களிருக்கிற மாதிரி இவ்விதமாயிருக்கிறார்களென்றுயெனக் கணுவளவேனுந் தெரியவில்லை அப்போதுநான் கோசாவைப்பார்த்து பாவாநீங்க ளித்தனை தரம்யாருடன்பேசுகிறீர்கள் எனக்கொன்றுந் தெரியவில்லையேயென்றுகேட்டேன் அவருடையமடியிலொரு தங்கச்சிமிளிருந்தது அதையெடுத்துத்திறக்க அதற்குள்மையிருந்தது அந்தமையில் விரலாற்றொட்டு என்னிரண்டுபுருவத்திற்குமத்தியிற்றடவினார் உடனேநான்பார்க்கையில் பளிச்சென்று மிகவுமலங்காரமாகிய ஊர்களும் மனிதர்களுமாகப் புழங்கிக்கொண்டிருந்தார்கள.

அவர்களெல்லாம் கோசாவைவந்துவந்து முலாக்கத்துச்செய்து பணிந்துகொண்டுபோகிறார்கள் அப்போதுநாங்களிரண்டுபேரும் அந்தவூருக்கு நேராய்நடந்து கோட்டைவாசலிற்போனோம் அந்தவாசலில்காவல்காற்கிற பாராக்காரர்கள் எங்களைக்கண்டவுடனே கோசாஅருகில்வந்து மிகவும் மரியாதைமுதலிய பணிதலையாய்த்தழுவி உட்காரச்செய்துவிட்டு அவர்களிலொருவர் இராஜாவிடத்திற்போய் நாங்கள்போயிருக்கிற சங்கதியையறிவித்து உத்தரவுபெற்றுக்கொண்டு மறுபடியும்வந்துஎங்களிருவரையும் இராஜாவிடத்திற்குப் போகும்படியாய்ச்சொன்னான்.

அதுபோலே யுள்ளேபோனோம் அங்கேபலங்காரமாகிய மண்டபமும் அதற்குமத்தியில் விநோதமாகிய சிம்மாசனமபோட்டு மந்திரிமுதலிய சுத்தவீரர்கள் புடைசூழ்ந்திருக்கும்படியாய் அந்தராசன்கொலுவிருக்கிறான் அப்படியிருக்கிற ராஜசபைக்குள் நாங்களிருவரும்போய் அவர்சமுகத்தில்நின்று கோசாவானவர் இராஜனைக்கண்டு சலாமுதலிய மரியாதை செய்துநின்றார் நானுமதுபோலேமரியாதை செய்துநின்றேன் அப்போதந்தராஜா கோசாவைப்பார்த்து கேட்கிறார் ஓகோசாவே வெடிநாளாகநீயும் உனது பாத்துஷாவும் ஏன்வரவில்லையென்று கேட்டார் அப்போது கோசாவானவர் ராஜனைப்பார்த்துச்சொல்லுகிறார் கேளும்ராஜசிகாமணியே எங்கள் பாத்துஷா ஆண்டவனுடைய கற்பனையாயிறந்துபோய்விட்டார் அவரிறந்துபோகிறகாலத்தில் அவர்பிள்ளையாகிய இவர்சிறுவயதாயிருந்தார் இவனையென்கையிற்பிடித்து ஒப்புவித்து இதைப்பாதுகாத்துவருப்படியாயெனக்குச்சொல்லியிருந்தார்.

அதுபோலே இவரைவைத்து வளர்த்துக்கொண்டிருந்த படியால் இவ்விடம் வருவதற்குக் கூடாமையாயிருந்தது இப்போதிவர் பெரியபிள்ளையாயிருக்கிறார் இவனைத்தங்களுக்குக்காண்பிக்க வேண்டுமென்று கூட்டிக்கொண்டுயிங்கேவந்தேன் ஆனபடியாலிந்தப்பிள்ளைக்கு ஒரு அகமடிப்பான காரியமொன்றுநடக்கிறதாயிருக்கிறது அதென்னவென்றால் இவர் சிறியதகப்பனாரிவரை மோசஞ்செய்துவிட்டு இராஜாங்கத்தையாளவேணுமென்று ஆசையாயிருக்கிறானென்று ஆதியோடந்தமாகச் சொல்லி அவரப்படியிருப்பதால் இந்தப்பிள்ளைக்குத்தாங்களே தகப்பன்போல் பாவித்து இவர்பாவாபேரில் எவ்வளவுகிருபையிருந்ததோ அதிலுமதிக கிருபைவைத்துத்தாங்கள் முன்னொடுத்தபுத்துக்குட்டிகள்தொண்ணூற்றொன்பது போக இன்னமொருபுத்து கொடுப்பீர்களானால் நூறுபுத்தையும் வைத்து இதற்காகவேண்டிய வேலைகளைநடத்திஇவர்சிற்றப்பனையுஞ் செயித்து ராஜாங்கத்தையுங்கட்டியாளுவான் ஆகையால் அந்த ஒருபுத்தையுங் கொடுக்க உங்களபேரிலுள்ளகடனென்றுசொல்லி நாங்கள் கொண்டுபோன சாமான் ரத்தினங்களையும் நதர்வைத்து நின்

றேம் அப்போதர்தராஜன் கோசாவைப்பார்த்துச்சொல்லுகிறார் ஓகோ
சாவே யெனக்கொரு ஆஜத்தென்னு மெண்ணமுண்டு அதையுங்கள்பா
த்துஷாவால் நிறைவேற்றிக் கொடுத்ததின்பிறகு இந்நூறாவது புத்தெ
ன்னுஞ் சிலையைக்கொடுக்கவேணுமென்கிறநிர்ணயஞ்செய்திருக்கிறேன்
ஆகையால் அவர்மவுத்தாய்ப்போய்விட்டபடியால் அதற்குநா மென்ன
செய்கிறது இப்போது அந்தப்புத்துக்குட்டியை இந்தப்பிள்ளைக்காகக்
கொடுக்கும்படி கேழ்க்கிறபடியால் நீர்நானெண்ணிய ஆஜத்தை நிறை
வேற்றிக்கொடுப்பீரானால் நீர்கேட்டதைக் தருகிறேனென்றார் அதைக்
கேட்டு கோசா உமக்கென்ன ஆஜத்திருக்கிறது இந்தஆஜத்தைவிபரமா
கச்சொல்லுமென்று சொன்னார் அப்போது சின்ராஜன்சொல்லுகிறான்.

சேளும் கோசாவே, ஒருதேசத்திலிருந்த ரூபலாவண்ய அழகு
சவுந்தரியமுள்ள பெண்ணொருத்தியிருக்கிறாள் அந்தப்பெண்ணுக்குத்
தெரியாமல் இரண்டுதேவுகளென்னும் பூதங்களை யவளுக்குக்காவல்வை
த்திருக்கிறேன் யாராவது அந்தப்பெண்ணைச் சேரவேண்டுமென்கிற
இச்சைவைத்து அவளுக்குச் சமீபமாய்ப்போவார்களானால் அவர்களைநா
ன் காவல்வைத்திருக்கிற பூதங்கள்கொன்றுபோடும் ஆனால் அந்தப்பெ
ண்ணைநான் இவ்விடத்திற்குக்கொண்டுவரவேணுமானால் ஒருநிமிஷத்
திற்கொண்டுவரலாம் அதுமுடியாததாயிருக்கிறது அதேனென்றால் அ
ந்தப்பெண்ணானவள் கற்புநிலையில் மிகவும்உறுதியுள்ளவளாயிருக்கிறப
டியால் அவளைக்கொண்டுவரும்படியாக சின்களும்தேவுகளென்னும் பூ
தங்களும் சமீபத்திற் போகுமானால் எரிந்துசாம்பலாய்ப்போய்விடும் அ
தனாலேதான் கூடாமையாயிருக்கிறது ஆதலால்நீர்போய் அந்தப்பெண்
ணைக்கண்டு எந்தவிதத்திலும் அவளையழைத்துக்கொண்டு வந்தீரானா
லுமக்கு நூறாவதுபுத்துக்குட்டியைத்தந்து இன்னம்வேண்டிய அபூரு
பமான வஸ்துக்களையுங்கொடுத்தனுப்புகிறேனென்று சொன்னார் அதற்
குமறுவார்த்தை சொல்வதற் கிடமில்லாமல் என்னுடையகோசா சம்மதி
த்து சின்ராஜனுடைய உத்தரவைப்பெற்று என்னையுங்கூட்டிக்கொண்
டு ராஜன்சமுகத்தைவிட்டு வெளியேவந்து பிரயாணப்பட்டுகோட்டை
முதலியவனையுந்தாண்டி காடுமலைவனம் வனாந்திரமுதலியவைகளைபெ
ல்லாங்கடந்து ஊரூராயலைந்து திரித்துபார்த்தும் அந்தப்பெண் இன்ன
விடத்திலிருக்கிறாளென்கிற குறிப்புத்தெரியாமல் மதிமயங்கித் திரியும்
போது சிலநாளைக்குப்பிறகு ஒருபட்டணம் மிகுந்த விஸ்தீர்ணமுள்ள
தாகவும் அலங்காரமாகவும் வளம்பொருந்திய சிறப்புற்றோங்கி யிருந்
தது அந்தப்பட்டணத்துக் கோட்டைக்கு வெளியில்நாங்கள் இருவரும்

போகும்போது ஒருசத்திரமென்றுஞ் சாவடியிருந்தது நாங்கள் அந்தச்சத்திரத்திற்போய்த் தங்கியிருந்து ஒசீவனமுதலிய பதார்த்தங்களுஞ் சமைத்துப்புசியாறித் தாம்பூலம்போட்டுக்கொண் டிருந்தோம் அப்படியிருக்கும்போது மிகுந்தவசீகரமும் நாற்பதுவயதுமுள்ள ஒருமிஸ்கீனவர் எங்கள் சமுகத்திற்குவந்து பிச்சைகேட்டார் அப்போதுகோசா அந்தயேழைமனிதனைப்பார்த்து பாவாஉமக்கு இந்தப்பட்டணத்திலேதாவது பிச்சையகப்படவில்லையா எங்களிடத்தில்வந்து சவால்செய்கிறீரோயென்றுகேட்டார் அதற்கந்தமிஸ்கீன் பாவாவூஸிரயாளுகிற பாத்துஷாவானவர் எனக்குப் பட்டணத்திலுள்ளவர்களைப் பிச்சைகொடுக்கவேண்டாமென்று உத்தரவுசெய்திருக்கிறார்.

அப்படியிருக்க யவர்களாவது அல்லாவுக்காகமன மிரங்கியெனக்கேதாவது பிச்சைகொடுத்தால்ராஜா கேள்விப்பட்டு அவர்களுக்குத்தண்டனை கொடுக்கிறார் ஆகையால் எனக்குஇந்தவூரிலுள்ளவர்களிலெவர்களும் பிச்சைகொடுக்கிறதில்லை இந்தச்சத்திரம்பட்டணத்திற்கு வெளியிலிருப்பதால் இதில்யாராவது உங்களைப்போல் வந்திறங்கப்பட்டவர்கள் மனமிரக்கியேதாவது கொடுத்தால் அதைநான்வாங்கிக்கொண்டுபோய் அதையத்தென்றுஞ் சீவனஞ்செய்கிறது அப்படியொன்றுமகப்படாவிட்டால் பட்டினியாகவேயிருக்கிறது இப்படியேநான்காலத்தைக்கழித்துக்கொண்டு வருகிறேனென்றுசொன்னார் அப்போது என்னுடன்வந்தகோசா அந்தமிஸ்கீனைப்பார்த்து ஓமனிதனே உமக்குப்பெண்சாதிபிள்ளையிருக்கிறதாவென்றுகேட்க அவர்என்னுடையபெண்சாதி மவுத்தாய்ப்போய்விட்டாள் எனக்கொரு பெண்ணிருக்கிறது நான்வாங்கிக்கொண்டு போகிறபிச்சையை அந்தப்பெண்ணினிடத்திற் கொடுத்தால் அதுசமையற்செய்து எனக்குப்போட்டு மிகுந்ததைத்தின்னும் எங்களிரண்டுபேரைத்தவிர வேறேஅக்கம்பக்கம் சொந்தமாகியபந்து சனங்களொருவருமில்லையென்றுசொன்னார்.

அதுகேட்டகோசாவானவர் உடனேதன்னிடுப்பிற் கட்டியிருந்த காச்சாலையவிழ்த்து ஒருதங்க அஷரபிக்காசையெடுத்து அவர்கையிற்கொடுத்துப் போகச்சொன்னார் அதையவர்வாங்கிக்கொண்டு மிகுந்தமகிழ்ச்சியுடனே தசுலிம்பந்திசெய்து கோட்டைக்குட்போனார் அந்தச்சமயத்தில்கோசாவானவர் என்னைக்கூட்டிக்கொண்டு அந்தமிஸ்கீனுக்குப்பின்னால் தொடர்ந்துபோனார் மிஸ்கீன்கடைபஜாரிற்போய் நாங்கள் கொடுத்தத்தங்கக்காசைக் கடையிற்கொடுத்து உடுபுடவை அரிசிபிறைச்சி முதலியமசாலாக்களும் வாங்கிக்கொண்டுதிரும்பினார் நாங்களும் அவர்பின்னால்தொடர்ந்துபோனோம் அவர்கோட்டையைவிட்டு ஒருமயில் தொலைக்கப்புறம் விஸ்தாரமாகிய தோட்டமொன்றிருந்தது அந்தத்தோ

ட்டத்தில் பலவிதமான செடிகளும் மாக்களும் கருகி அழிந்துபோயிருந்தது அதன்மத்தியிலொரு அரண்மனையிருந்தது அந்த அரண்மனையோமிகவும் பலயீனமாய் அதிலுள்ளசித்திரங்களெல்லாமழிந்து மனித சஞ்சாரமில்லாத பாழ்வீடுபோலிருந்தது மேற்சொல்லிய மிஸ்கீனவர் அந்தத்தோட்டத்துக்குபபோய் அந்தப்பாழ்வீட்டில் நுழைந்தார நாங்களும் விடேன்தொடேனென்று பின்தொடர்ந்துபோய் அவவரண்மனையின் வெளித்திண்ணையின்மே லுட்கார்ந்தோம் அப்போதந்த மிஸ்கீன் அம்மாவென்று உட்கதவைத்தட்டினார் நாங்களும் இதனுள்ளிருக்கும் பெண்ணைப்பார்க்கவேணுமென்று எப்படிப்பார்த்துக்கொண்டேயிருந்தோம் அந்தமிஸ்கீன்மகளாகியபெண் ஏன்பாவாவென்றுகதவைத்திறந்து உளளேநின்றபடியே கையைநீட்டினாள்.

அவர்வாங்கிப்போனஉடுபுடவையைக்கொடுத்தார் அந்தப்பெண் அதையுடுத்திகொண்டு வெளியேவந்து தகப்பன்கொண்டுபோன சகலசாமக் கிரிகைகளையும் வாங்கிக்கொண்டு உள்ளேபோய்விட்டாள் இதையெல்லாம் நாங்கள்பார்த்துக்கொண்டிருக்கபடியால் அந்தப்பெண்ணினுடைய அழகு என்கண்களிற்றுக்கினான்மதிமயங்கிசோர்ந்து பூமியில்விழுந்துவிட்டேன் அந்தச்சமயத்தில் என்னுடன்வந்தகோசா யென்னைத்தூக்கித்தன்மடிமேல் வைத்துக்கொண்டு உபசரணைசெய்தார் அதனால்நான்களை தீர்ந்தெழுந்தும் அந்தப்பெண்ணின் கியாபகமாகவேயிருந்தேன் அப்படியிருக்கையில் கோசாவானவர் என்னைப்பார்த்து பாவா இந்தப்பெண்ணானவள் சின்னராஜன்சொன்னபெண்ணேயொழியவேறே பெண்ணல்லவென்றுசொன்னார் நானும்மெய்தான் பாவாவென்றேன் இவ்விதமாகநாங்களிருவரும் பேசிக்கொண்டிருக்கையில் அந்தப்பெண்ணானவள் தன்தகப்பனைப்பார்த்து பாவாஇன்றைக்கேதுஇவ்வளவுஉடுபான முதலிய சாமான்களென்றுகேட்டாள்.

அதுகேட்டந்த மிஸ்கீன் அம்மா கோட்டைக்குவெளியி லிருக்கும் சத்திரத்தில் ஒருகிழவனும் ஒருவாலிபனுமாக யிறங்கியிருந்தார்கள அவர்களிடத்தில் நான்போய்கயிர்கேட்டேன் அவர்கள் ஒருதங்கக்காசு கொடுத்தார்கள் அதற்குநான் இவைகளையெல்லாம் வாங்கிக்கொண்டுவந்தேனென்று சொல்லிவிட்டு வெளியில்வந்துநாங்கள் திண்ணையின்மே லுட்கார்ந்துக்கொண்டிருப்பதைக்கண்டு மிகவும வணக்கத்துடனேபாவாக்களிவ்விடத்திற்கு யென்னவேலையாக வந்தீர்களென்றுகேட்டார் அதற்குக்கோசாசொன்னார் கேளும்பாவாநாங்கள் எங்களூருக்குப்போகலாமென்று இந்தவழியாகவந்தோம் பொழுதுபோகிற சமையமானதால்போகாமல்இவ்விடத்தில்தங்கியிருக்கலாமென்றுயோசித்துக் கொண்

டிருக்கிறோமென்றுசொன்னார் அதுகேட்டந்தமிஸ்கீன் பாவாநீங்கள்இன்றைக்கிரவில் இங்கேதானேயிருந்து என்வீட்டிற்பசியாறிப்படுத்திருந்து காலேயிற்போகலாமென்றார் அப்போதுநாங்கள், அவர்சொல்லுக்குப்பதில்சொல்லாமல் உங்கள்மனம்போலவே இராத்திரிக்கிவ்விடத்திலிருந்துபோகின்றோமென்று இன்றொருதங்கக்காசையெடுத்து அவர்கையிற்கொடுத்து ஓசீவனமும் பதார்த்தங்களும் தயார்ப்படுத்தச்சொன்னோம் அதுகேட்டந்த மிஸ்கீன் எங்களைப்பார்த்துபாவா. நீங்கள்பகல்கொடுத்த தங்கக்காசுக்குச் சகலசாமான்களும்வாங்கி யென்மகளிடத்திற்கொடுத்தேன் சமையலாகியிருக்கிறது அதைநாம்யாவருந்தின்றுபசியாறலாம் இந்தக்காசைநீங்கள் வைத்துக்கொள்ளுங்களென்று மிகுந்த உபசாரமாகச்சொன்னார்.

அதுகேட்டு கோசா பறவாயில்லே வாங்கிக் கொள்ளுங்களென்று கொடுத்தார் அதையந்தமிஸ்கீன்வாங்கிக்கொண்டு உள்ளேபோய்ஒருபாகொண்டுவந்துவிரித்து எங்களையதிலிருக்கச்சொல்லி தானுமுட்கார்ந்தார் பொழுதுபோய் ஐந்துநாழிகையாச்சுது அந்தச்சமயத்தில்ஓசீவனம்வந்தது அதைநாங்கள் மூவருந்தின்று பசியாறிதாம்பூல முதலியதுந்தரித்துக்கொண்டு நடந்துவந்த அலுப்பினாலேபடுத்துநித்திரைசெய்துவிட்டோம் பொழுதுவிடிந் தெழுந்திருந்து நாஸ்தாசெய்து சிலவுமுதலானவைகளுக்கு நாங்களேபொருள்கொடுத்துவந்தோம் இவ்விதமாக நாங்கள் பத்துநாள்வரையிலும் அவ்வரண்மனையிலேயே யிருந்தோம் நாங்களிருப்பதனாலே அந்தமிஸ்கீனானவரும் பிச்சைவாங்குகிறதற்காக வெளியிற்போகாமல் எங்களுடன் பலபேச்சுகளும் பேசிக்கொண்டேயிருந்தார் இப்படியிருக்கிறநாளையிலொருநாள் பசியாறி சந்தோஷமாயப்பேசிக்கொண்டிருக்கையில் கோசாவானவரைப்பார்த்து ஓமனிதனே நானொரு ஆஜத்தென்னும் நினைவுவைத்திருக்கிறேன் அதையும்மாலேநிறைவேற்றிக்கொடுக்கமுடியுமானால்நான்சொல்லுகிறேன் அப்படிமுடியாதபட்சத்திலென்னத்திற்குசொல்லவேண்டுமென்றார் அப்போதவர்பாவாயென்னாலாகிறகாரியமாயிருந்தால்அவஸ்யம்நிறைவேற்றிக்கொடுக்கிறேன் அதைச்சொல்லுங்களென்றார் அப்போதவரிடத்தில்வார்த்தைப்பாடானசொல்லுறுதிசெய்துக்கொண்டுகோசாசொல்லுகிறார்ஓமனிதனே என்பிள்ளைக்கு உம்முடையமகளைக் கலியாணஞ்செய்துகொடுத்தீரானால் நான்இரண்டுபேரையும்வைத்துப் பார்த்துங்கொண்டிருக்கவெனக்கு மிகவும் ஆசையாயிருக்கிறது அதற்குநீரென்னசொல்லுகிறீரென்று கேட்க அப்போதந்த மிஸ்கீனானவர் தாரை தாரையாய்க் கண்ணீர்கள் விட்டுப்புலம்பி அழுதுசொல்லுகிறார் பாவாநீர் இந்தவொருபேச்சுத்த

விரயற்ற யெந்தபேச்சாவதுபேசும் நான் தாங்கள் சொன்னபடிமுடித்து
க்கண்காட்சியாய்ப்பார்க்கிறதற்குக் கொடுத்துவைக்கவில்லை யென்மக
ள்மிக்கநசிபென்னும் அதிருஷ்டமில்லாதமூதேவியாயிருக்கிறாள் அவ
ளுடையபேச்சைக்குறித்து இன்னமொருதரம் பேசவேண்டாம் இந்த
ப்பெண்ணைப்போலனேகம்பெண்கள் உமதுபிள்ளைகளுக்கு கிடைக்கமா
ட்டாதாவென்று மிகவும்பிரிதாபப்பட்டு சொன்னார் அப்போதுகோசா
அவரைப்பார்த்துநீயொன்றுக்கு மாலோசனைசெய்யாமலிருவருக்கும்
கலியாணஞ்செய்து வைப்பீரானால்இவர்களதிர்ஷ்டமெப்படிபோகட்
க்குமென்று ஒரேபிடிவாதமாகச்சொன்னார் அதற்கவர்சொல்லுகிறார்
கேளுங்கள்பாவாநீங்களென்னத்தைக்கேழ்க்கிறீர்களோயென்று அலக்ஷி
யமா யெண்ணி உங்களுக்குவாக்குக்கொடுத்துவிட்டேன் இதற்குநா
னென்னசெய்வேனென்று விசாரப்பட்டு நன்மைசெய்தவர்களுக்குத்
தீமைசெய்யும்படியல்லோ வந்துவிட்டது ஆனாலுமதுபிள்ளைக்கு நிகா
குசெய்துகொடுத்தால் உடனே யிந்தப்பிள்ளை யிறந்துபோவார்
நாமனமறிந்து அறியாததுபோலவுமதுசொல்லுக்குளெப்படி நானொப்பு
க்கொள்ளுவேனென்று மிகவுந்துக்கசாகரத்திலமுழ்கிப்பின்னுஞ்சொல்
லுகிறார் கேளுங்கள்பாவா பெண்மகள்மிகவுநசீபுகெட்டவளுடைய
காரியத்தைதெடுத்துச்சொல்லுகிறேன் அதென்னவென்றால் இதற்கு
முன் மிஸ்கீனாகத்தானிருந்தேன் அப்படியிருக்கஎன்பெண்சாதி வயிற்
றிற்கெற்பமாகி யிந்தப்பெண்ணைப்பெற்றாள் இதுபிறந்துவளர்ந்து பரு
வாலமாயிருக்கையில் மிக்கஅழகும்தக்கசவுந்தரியவசீகரமுள்ளபெண்
ணனபடியால் இந்தவூராபாளுகிறபாத்ஷா கேள்விப்பட்டு தன்னு
டையபிள்ளைக்கு நிக்காசெய்துக்கொள்ளலாமென்கிற ஆசையோடுசில
ஆட்களை அனுப்பி இந்தத்தோட்டத்தைக்சுற்றிவேலிபோட்டு அனே
கங் கனிவர்க்கமுள்ள மரங்களையும்புட்புச்செடிகளையும் வைத்துமத்தி
யிலிந்தஅரண்மனையுங்கட்டிமுடித்து சிலதாதிபெண்கள்முதலிய யேவ
லாட்களையும்வைத்து ஒருராசாங்கத்துக்குச்சரியான மாதிரியாயிருக்
கும்படி திட்டஞ்செய்து ஒருநாளிந்தஅரண்மனைக்குவந்து என்னைப்பா
ர்த்து எனதுபிள்ளைக்கு உமது பெண்ணைக்கொடுக்கவேண்டுமென்று
பேசித்திட்டப்படுத்தி உண்டானசீர்செய்துவிட்டு அவ்வரண்மனைக்குப்
போய்விட்டார் நானிவ்வளவுசிறப்புகளெல்லாம் நடத்திவருவதாலே
முன்னேயேழைபரயிருந்து இந்தப்பெண்ணாலே இவ்வளவுசுகத்தோடே
யிருக்கின்றேனேயென்றுமிகுந்தமகிழ்ச்சிகொண்டிருக்கும்போது அந்தப்
பாத்துஷாப்பிள்ளைக்கும் என்னுடைய மகளாகிய அதிர்ஷ்டங்கெட்ட

பெண்ணுக்கும் விவாகுமுடிக்கும்படியாயெண்ணங்கொண்டு இந்தப்ப
ட்டணமுழுதும் பறைசாற்றி சகல அலங்கிர்தமுஞ் செய்பச்சொல்லி
இந்த அரண்மனையுஞ் சோடித்து மாப்பிள்ளையையலங்கர்தஞ்செய்து
ஆனையின்மீதம்பாரிவைத்து அதன்மீதந்தப்பிள்ளையை யேற்றி சகல
சேனைகள்சூழ பதினெட்டுமேளவாத்தியங்களுமுழக்கிவர வெகுசம்பி
ரமத்துடனே ஊர்வலஞ்செய்து இந்தஅரண்மனையிலவந்து மாப்பிள்
ளையை யானைவிட்டிறக்கி பணவரைபந்தலிலுட்காரவைத்துநிக ருவெ
ன்னுங் கலியாணஞ்செய்து பெண்ணிருக்குமணவறைக்குள்மாப்பிள்ளை
யைக்கூட்டிப்போய் கைப்பிடித்துவிட்டு அவர்களுக்குஉண்பனதின்
பனமுதலியதுங்கொடுத்து அந்தமணவறைக்கதவைச்சாத்திவிட்டு அந்
தபாத்துஷாமுதலிய அனைவர்களும் விருந்துமுதலிய ஓசீபனந்தின்று
தாம்பூலமருந்திகளபகஸ்தூரிபூசி மிகவுமெக்களிப்புடனே யிருந்து
அவரவர்கள படுத்துத்தூங்கிவிட்டார்கள் அப்போது நான்விழித்துக்
கொண்டிருக்கிறேன் அந்தமணவறைவீட்டுள் பெண்ணு மாப்பிள்ளை
யுமிருக்கிற விடத்தில் ஒருபயமானசத்தங்கேட்டது இதென்வென்று
யோசித்திருக்கையில் என்னுடையமகளழுகிறசத்தங்கேட்டது அந்தச்
சத்தங்கேட்டவுடனேபாத்துஷாவும்நானும் மற்றயாவர்களுமெழுந்து
மணவறைவீட்டிற்போய் கதவைத்திறந்துபார்க்கையில் மாப்பிள்ளையு
டைய தலைசில்லுசில்லாகதெறிந்து கீழேவிழுந்துசெத்துக்கிடக்கிறா
ன் என்மகளானவள் ஒருமூலையிலிருந்து அழுதுக்கொண்டிருக்கிறாள்
அப்போதுபாத்துஷாவும்நானும் மற்றபேர்களும் பொறிகலங்கி மதிம
யங்கிவியாகூலப்பட்டு பின்புபெண்ணைப்பார்த்து இங்கேநடந்தகாரண
மென்னவென்றுகேட்டோம் அதுசொன்னது எனக்கு யாதொன்றுந்
தெரியாதுகதவுசாத்திருக்கையில் இரண்டுபேர்எங்கேயோயிருந்துவ
ந்தார்கள் அவர்கள் மாபபிள்ளையைப்பார்த்து அடேபயலேநீயிந்தப்
பெண்ணிடத்தில் வரதகுமோவென்று வசைபேசிஅவர்கள்கையிறகுக்
குமாந்தடி யிருந்தது அந்தத்தடிபால் தண்டைசிதற அடித்துக்கொன்
றுபோட்டுப் போய்விட்டார்கள் ஆகையாலிதுதானடந்தசங்கதி யென்
றாள் அப்போதுபாத்துஷா முதலானபேர்களு மழுதுபரதவித்து மா
ப்பிள்ளையென்னுந் தன்குமாரனை யெடுத்துநல்லடக்கஞ்செய்து விட்டு
எங்களுக்குக்கொடுத்த சொத்துகள்முதலியயாவற்றையும் தாதிகள்வே
லைக்காரர் தலையிலெடுத்து தூக்கிக்கொண்டுபோய்விட்டார்கள் அப்
போது இந்தத்தோட்டமும் வீடும் எங்கள்வசமிருந்ததேயொழிய
ஒருசெம்புக்காசுமுதல் எங்கள்கையிலில்லாமற் போய்விட்டது அப்
போதந்தப பாத்துஷாவானவர் இந்தப்பட்டணத்திலுள்ள பேர்களை

யெல்லா மறைத்து தன்மகனிறந்துபோன ஆத்திரத்தினலேமஇவருக்கு
யாதொருவுதவியுஞ்செய்யக்கூடாதேஅப்படிச்செய்வீர்களானல் உங்க
ளுக்குத்தகுந்த தண்டனைசெய்வேனென்று அச்சமூறத்தக் கட்டளை
செய்திருக்கிறார் அதனலேதானூருக்குவெளியேபிச்சைவாங்கி சீவன
ஞ்செய்துகொண்டிருக்கையில் என்பெண்சாதியானவளென் மகனை
யெக்நேரமும்பார்த்து இப்பேர்ப்பட்டவிதி யுனக்குச் சம்பவித்து
நாங்களும் வருத்தப்படும்படியாச்சுதல்லவா வென்றெண்ணி அதே
யேக்கமா யிறந்துபோய்விட்டாள் அவளையடக்கம்பண்ணிவிட்டுவதா
வதகப்பட்டால்நானும்என்மகளும்சீவனம்செய்துகொண்டிருக்கும்போ
துநீங்கள்வந்து பத்துபதினைந்துநாளாகத்தான் வயிறுநிரம்பஒசீவனை
தின்றுபசியாறியிருக்கிறோம்இதுவுமல்லாமல்நீங்கள்கொடுத்த தங்கக்க
சுகள்மிச்சமாயிருக்கிறது இன்னமொருவருடத்துக்குச் சிலவுக்குங்
காணும் இப்படிக்கெல்லாம்மெனக்கு ஒத்தாசைபண்ணி வுபகாரசெய்
ய்த பேற்கு நானபசாரஞ்செய்யமனமில்லாத்தால் இந்தவொருபேச்
சை மாத்திரம்விட்டுவிட்டு மற்றயேதாவது என்கழுத்தையறுத்துக்
கொள்ளசொன்னாலும் அறுத்துக்கொள்ளுகிறேன் இனிமேலேதயா
வதுசொல்வீர்களானல் கேழ்க்கிறேன் முன்சொன்னபேச்சை மறந்து
விடுங்கள்பாவாவென்றார் அப்போதுகோசாஅவரைப்பார்த்து கேளு
ம்பெரியவரே நீர்சொல்லுகிறதெல்லாம்சரியானதே இப்போதுஅவர
வரதிர்ஷ்டம்போலே முடியும்உம்முடையபெண்ணுக்கும் என்னுடை
யபிள்ளைக்கும் நிகாகுசெய்துஇரண்டுபேரையுமொருவிடத்தில்வைத்து
என்கண்ணினல்பார்த்தால்நானகொண்ட ஆசைநிறைவேறும் அதன்பி
ன்புஇவர்ாவுத்தாய்ப்போனலும்போகட்டும் அதுவெனக்குச்சம்மதந்
தான் அதேதினலென்றால் மவுத்தென்கிறமாலே கழுத்திலேயிருப்பதி
னலே ஆறிலுஞ்சாவுநூறிலுஞ்சாவுதான் இதற்குப்பயப்படலாமோ
ஆனபடியால்நீர் என்பேச்சைத்தள்ளாமலும் நீர்கொடுத்த வாக்குப்
பால்மாறாமலும் இப்போதேநிகாகுசெய்துக் கொடுமென்றார்இந்தப்ப
டியாக கோசாசொன்னதற்கு மிஸ்கீனனவர்தடுத்துச்சொல்கிறதற்கு
வழியில்லாததால மிகவும்வருந்தத்துடனே வொப்புக்கொண்டு அந்தப
பட்டணத்துக்கடுத்த ஒருசிற்றூரிலிருக்கிற லெப்பைமோதின் இன்
னமிரண்டுபேர்களை யிரகசியமாயழைத்துவந்து அந்தப்பட்டணத்திலு
ள்ளவர்கள் ஒருவருக்குந் தெரியாமல் எனக்கு மந்தப்பெண்ணுக்கும்
நிகாகுசெய்தார்கள்

கேளுங்கள் பாத்துஷாவுக்கெல்லாம் சக்கிரவர்த்தியாகிய பாத்து
ஷா சிரோமணியே மற்றும்பக்கீர்களே அந்நேரத்திலெபெண்ணையென்னி
ருகண்களாற்பார்த்து அவ்வளவென்று சொல்லிமுடியாத மகிழ்ச்சி
யடைந்தேன் அதேதினலென்றால் நாங்கள்போய்பத்துபதினைந்துரிய
ள்வரையிலும் அந்தப்பெண்ணைப்பார்த்தும்பாராமலிருந்து நிகாகுமுடி
ந்து அவளருகிற்போனவுடனே அவள்ருபலாவண்ய சவுந்தரியங்களை

சந்திரசூரியாள்முதலியதாராகணங்களையும் ஒப்பிட்டுச்சொல்லி முடி
யாத்பேரழகைப்பெற்றிருந்தாள் அப்பேர்க்கொற்ற பெண்ணுக்கு
உயர்ந்த ஆடையாபரணம் பூஷணாதி முதலியபணிகளைப் பூட்டிப்பா
ர்த்தோமானால் எவ்விதயாகிய வசீகரமாயிருப்பாள் அவளைப்பார்த்த
பேர்கள் கண்களெல்லா மழுங்கி அவளுடைய ஆசையையிருதயத்தி
லுறைந்து பயித்தியங்கொண்டலைவார்களினமைவர்களுக்குவுவமை
யெடுத்துச்சொல்லோமானால் கதைவிரிவாகும் என்று இதுவரையிற்சு
ருக்கிச் சொன்னேன் ஆனபடியால் அந்தப்பெண்ணருகில்நான்போ
னவுடனேயெனைப்பிடித்துக்கொடுத்தார்கள் இதுதெரியுமேயொழிய மற்
றும்அந்தப்பெண்ணுடனே யாதொருபேச்சும்பேசவில்லை, அப்படியி
ருக்கையில்லப்பையோதீனே யனுப்பிவிட்டார்கள் நால்வருமாகப்
பொழுதஸ்தமித்தது ஒருசாயநேரத்தில்ஒசிபனமுதலிய பண்டுபலகாரங்
கள்தின்றுபசிய நிப்பாட்டிகளும்போது ஒருபாய்விரித்தது அதில்நானும்
அந்தப்பெண்ணும்படுத்தோம் என்னருகில்என்னைவளர்த்தகோசாபடு
த்தார் பெண்ணுக்கருகில் அவள்தகப்பன்படுத்தார் இப்படிப்படுத்திரு
க்கையில் கேளுங்கள்பாத்துஷா சிரோமணியே மற்றுந்தோஸ்தியாகிய
பக்கீர்களே அப்போதந்தப்பெண் என்னருகிற்படுத்திருக்கிறதால்என்னு
டையானது எவ்வளவுஆசையாயிருக்கும் அதைநீங்களே யோசித்துப்
பாருங்கள் இவ்விதமாய்தினந்தோறும் நாங்கள் நால்வருமாகப்படுத்து
வருகையில் இந்தப்பெண்ணோடே பேசிப்பழகிச் சேரவேண்டுமென்ற
யெண்ணங்கொண்டு சமயம்பார்த்திருக்கையில கோசாவானவர் அதற்
கிடங்கொடுக்காதபடி மிகவுஞ்சாக்கிரதையாயிருக்கிறார் இப்படியாகச்
சிறிதுநாளிதேகவனமாகயிருந்துவருகிற நாளையில் அந்தப்பெண்ணு
டையதகப்பனானவர் காலவுகைகட்டளையுமுடிந்து மவுத்தாய்ப் போய்
விட்டார் அவரையெடுத்து நல்லடக்கஞ்செய்து அவருக்குச்செய்யவே
ண்டிய சமயப்பாத்திகாமுதலிய சடங்குகளுங்குறைவில்லாமல் முடித்
துவிட்டு நாங்கள்மூவரும்அந்தவூரைவிட்டுப் புறப்பட்டுசிலநாளுக்கெ
ல்லாம் அரசனுடைய வூரைத்தேடி வழிநடந்துபோறபோது பொழு
தடைந்தால் ஓரிடத்திறங்கி யேதாவதுபதார்த்தங்களைத்தின்றுபசி
யாறிப் படுக்கும்போதுநாங்கள் மூவருமொன்றாய்ப்படுக்கிறது அதில்
கோசாநடுவிலும் அவருக்கிடதுபாரிசத்திலும் பெண்ணும்நானும்படுத்
துக்கொள்ளுகிறது விடியுந்தனிலும் கோசாவுக்குத்தூக்கம்வராமல்
எந்நேரமும்விழித்துக்கொண்டே யிருப்பார் அப்படி யிருக்கையில்
பொழுதுவிடிந்துபோகும் விடிந்தெழுந்து பொழுதுபோகிறவரையில்
நடந்துஇன்னமோரிடத்திறங்குகிறது அந்தவிடத்திலேயும் முன்படு
த்திருந்தமாதிரியாகவே படுத்துக்கொள்ளுகிறது இப்படியாகநடந்து
வழியைத்தொலைத்துப்போய்ஓரிடத்திற்றங்கியிருக்கிறோம் அப்போதுநான்
இந்தப்பெண்ணுடனேயெப்படியாவதுகூடிமனதாசைதீர்த்து மவுத்தாய்
ப்போனாலும்போகிறதேயொழிய நாம்சும்மாயிருக்கக் கூடாதென்று
உறுதியா யெண்ணங்கொண்டிருக்கிறேன் அப்படியிருக்கையில அந்
தப்பெண்ணுக்கும் எந்நேரமுமென்னோடுபேசிப்பழகிச்சேரவேண்டுமெ

ணிற பெண்ணாகவே இரவும்பகலுநித்திரையில்லாமல் ஜோசா
எப்போதசந்து நித்திரைபோவாரோவென்ற சமயம்பார்த்துக்கொண்
டிருக்கிறும் இப்படிநாங்களெண்ணியிருக்கிற சாடையவரறிந்து இவர்
கள்பதறிஇங்கேகாரியத்தைமுடித்துவிடப்போகிறார்களே அப்படிமுடி
ந்துதானல்பிள்ளைக்குச்சேதம்வருமேயென்று நாள்தோறும்எனக்குச்
சொல்லிப்பயமுறுத்திக்கொண்டு ஒருநிமிஷநேரமாவது நித்திரையில்
லாமலெனக்கையுமவர்தனித்தப்போகாமல் உசாராகவேயிருப்பார் இவ்
விதமாயிருக்கிறநாளையில் பொழுது போனவொருவூரிற்றங்கியிருக்கி
றது விடிந்தவுடனே பகல்முழுதும் நடந்துபோகிறதுமாயிருக்கிறநா
ளையில் ஒருவூரிலொருசாவடியிருந்தது அந்தச்சாவடியிலிராத்தங்கி
ஓசியனமுதலியதுந்தின்றுபசியாறிநாங்கள்முன்னைப்படிப்படுத்துக்கொ
ள்வோமோ அதுபோலே படுத்துக்கொண்டோம் வேறேமனிதர்க
ளொருவருமந்தசாவடியிலில்லாததால் இராவிற்பாதிசாமநேரத்தில் எ
னதுஜோசாவானவர் இனம்விழித்திருந்ததினாலும்நடந்துவந்தஅலுப்
பினாலும்பேசாமலசந்து நித்திரைசெய்து விட்டார் அந்தசமய
த்தில்நாங்களிருவரும் என்னேரமுமிதேயெண்ணமாயிருக்கிறபடியா
ல் மெள்ளயென்காலைத்தூக்கிஜோசாமேலே படாமல் அவன்காலின்
மேற்போட அவனுமிந்தசாடையறிந்து என்காலையெட்டிப்பிடித்துச்
சைகைபண்ணினான் உடனேநானெழுந்து அவனைத்தூக்கி யென்பக்க
த்திற்போட்டுக்கொண்டு சிலவிளையாட்டுகளைவிளையாடி முத்தமிட்டுநெரு
ங்கிச்சேரப்போகும்படியான தருணத்தில் ஜோசாவானவர் விழித்துப்
பெண்ணைத்தடவிப்பார்த்தார் அங்கில்லாதிருந்தபடியால திடுக்கிட்டல
றிவிளக்கையேற்றி எழுந்து எங்கள்முகமாய்த் திரும்பியென்னைப்பார்த்து பா
வாமோசம்வந்ததே உனக்குப்புத்தியில்லையா இந்தப்பெண்ணையுமக்காக
தானே நிகாஹுசெய்துஇவ்வளவெல்லாம வருத்தப்பட்டுக்கொண்டுவரு
கிறேன் (ஆக்கப்பொறுத்தவர் ஆறப்பொறுக்கக்கூடாதா ஆத்திரக்கா
ரனுக்கு அறிவுகொஞ்சமென்கிற, பழமொழிபோல நீர்ஆத்திரப்பட்டு
இவ்விதமானவேலைசெய்யத்துணிந்தையே அப்படிநிறைவேறினால் இந்
நேரமும்மைக்காணப்போகிறதில்லையே ஆகையால்பதறுதகாரியஞ் சி
தறுமென்பதுபோல்இனங்கொஞ்சநாளைக்குப்பதறாதிருந்தால்நீர்சக
லசுகமுமனுபவிக்கப்போகிறீர் ஆகையால்நீர் ஆத்திரப்படவேண்டியதி
ல்லையென்றுநயமும் பயமுஞ்சொல்லி அவளைமுன்படுத்திருந்த விட
த்திற்படுக்கவைத்துக்கொண்டு அவர்மடியிலொரு சீசாவிருந்தது அந்
தச்சீசாவிற்றைலமிருக்கிறது அந்தத்தைலத்தை இந்தப்பெண்ணினு
டைய உச்சியிலெடுத்துஉள்ளங்கால் வரையிலுந்தடவிப்படுத்துக்கொள்
ளச்சொன்னார் அப்போதந்தத் தைலத்தினுடையநாற்றமானது துர்கந்
தமாயும். மிகவும்அருவெருப்பாயும் இன்னவிதமென்றுசொல்லிமுடி
யாதநாற்றமாயுமிருந்தது அந்தவாசம்என்னுசியிலேறியவுடனே அவள்
பேரிலிருந்த ஆசைகளெல்லாம் நாசமாய்ப்போய் வெறுக்கிவெறுப்ப

நடந்து அவளொருபக்கத்திலிருந்தால் நானொரு பக்கத்திற்போயிரு
க்கிறேன் இவ்விதமாகச்சிலநாள் நடந்துபோகிறபோது அந்தச்சின்ராஜ
னுடையநகரந்தோற்றியது அந்நகரம்போய்ச்சேர்ந்து ராஜனிருக்கும் அ
ரண்மனைக்குட்போய் இராசனைக்கண்நேரங்களிருவரும் தசுலீம்முத
லியபணிவிடைசெய்திருக்கையில்கோசாவானவர் இராஜாவைப்பார்த்து
தாங்கள்கோரியபெண்ணையிதோகொண்டுவந்திருக்கிறேனென்று பெ
ண்ணிருப்பதைக்காண்பித்தார் அப்போதந்தராசன இவர்சொன்னமை
க் கேட்டுஇருபுசமுமொருபுசமாய்ப்பூரித்து இன்பங்குளிர்ந்துமிகவுத
ாவலாயெழுந்து பெண்ணிருக்கிறவிடத்திற்குவந்து அவள்முகத்தைப்
பார்த்தார் அப்போதுஅவள்பேரிலேதடவியிருக்கிற நாற்றமானதுசின்
ராசனுடைய மூக்கிலேறினவுடனே சின்ராசன் மிகுந்தவருத்தப்பட்டு
அந்தப்பெண்மேல்வெறுப்படைந்து அதிககோபத்துடனே தானிருக்கு
மிடத்திற்போய் கோசாவைப்பார்த்து உறுக்கிஓகோசாவே இந்தப்
பெண்ணைமிகுந்த பத்திரமாய்க்கொண்டுவரும்படிநானுனக்குச்சொல்
லியிருக்க நீஅதையோசியாமல்என்னை மோசஞ்செய்யக்கருதி இந்தப்
பெண்ணைமிகுந்த நாற்றத்துடனே என்சமூகத்திற்கொண்டுவந்து விட்
டாயேயென்று ஒருகூச்சலிட்டுஇரண்டுகண்ணிலும் நெருப்புப்பொ
றி பறக்கும்படியாய் அங்கேயிருக்கிற வேலைக்காரர்களாகிய சின்களைப்
பார்த்தான அக்குறிப்பையறிந்து ஒருசின்என்னைத் தூக்கிக்கொண்டு
ஆகாயத்திற்கிளப்பிப் போய்ஒருகாட்டினிடத்திற்போட நான்கீழேவி
ழுந்துநினைவுதப்பிமூர்ச்சையாய்ச்சற்றுநேரஞ்சென்று கண்ணைத்திறந்து
பார்க்கையில்நான்பாத்திரக் காட்டிலிருக்கேன் என்னுடனிருந்தகோ
சாவும என்மனைவியாகியபெண்ணும் எவ்விதமானார்களோஎனக்குத்
தெரியவராது கேளுங்கள்பாத்துஷாக்களுக் கெல்லாம் சக்கிரவர்த்தி
யாகிய பாத்துஷாசிரோமணியே மற்றுமுள்ளபக்கீர்களே இதைநீங்களே
யோசித்துபாருங்கள அந்தச்சமயத்திலெனக்கு யெவ்விதமானதுன்ப
முண்டாயிருக்கும் ஆகையால்நான்சொல்லுதற்கரிய துக்கத்துடனே
யோசித்தாவது நாம்பிறந்தஆறுமாதந்தாயிறந்துபோகஎன்தகப்பன்
என்மீது மிகுந்தகிருபையாய வளர்த்துவந்தாபின்பு என்தகப்பனிற
ந்துபோகநான்கேட்கும்பொருளையில்லையென்னாமற்கொடுத்து வேண்
டியபடிப்புமுதலிய வித்தைகளுங்கற்றுக்கொடுத்துப் பெரியவனாகும்
படிச் செய்திருக்கையில் என்சிறியதகப்பன் என்னைமோசஞ்செய்யும்
படியானபெண்ணைக்கொள்ள அதற்குத்தப்பித்துச் சின்ராசனுடையந
ரத்திற்குவந்து அவனைக்கண்டு அவன்கோரியபெண்ணை யெனக்குநிகா
குசெய்துஎனக்கொருதுன்பமும்வாராமல் உயிருமுடலுங்கண்ணுமிமை
யும்போலேகாத்து எனதுபயத்திற்கும் இடருக்கும் இன்பதுன்பத்திற்
கும் உடன்பட்டுத்தனதலைமேற் போட்டுக்கொண்டு பாதுகாத்துவந்த
கோசாவானவர் எனக்குத்தாயுந்தகப்பனுமாயிருப்பதினாலே அவர்தே

ரில்மிகவுமாசைஉண்டாகி அவளைத்தேடிக்கண்டு பிடித்தோமானால்நம
துபெண்ணுமகப்படுவாள் நாம்நகரம்போய்ச் சேர்ந்து பென்சிறியதக
ப்பனையுஞ்செயித்து அந்நகரத்தையும் பட்டங்கட்டி ஆண்டுசுகத்தி
ருக்கலாமென்றெண்ணப் பெருமூச்சுவிட்டு அன்னாகாரமில்லாமல் மூ
ன்றுநாள்வரைக்குமிருந்து அந்தக்காட்டிலுள்ள இலைகாய் பழமிதுகளை
ப்பறித்துதின்றுபசியாறி அவர்களிருவரையுந் தேடிப் பார்க்கவேணு
மென்றெண்ணங்கொண்டெழுந்து காட்டைவிட்டுவெளியில் வந்து அங்
குள்ளமைதானமுதலிய கரடுமலைகானாபாலைநிலங் கடந்து தேசதேச
ங்களிற்போய அங்கங்கு சிலநாளைக்குநாளிருந்துபார்த்ததில் அவர்க
ளெங்குமகப்படவில்லை இவ்விதமாகச்சிலநாளலைந்திரிந்து ஒருநாள்கா
ட்டுவழியாகப்போகிறபோது எனக்கெதிரிலொரு பிரமாண்டமாகிய
மலைவந்தெதிர்த்தது அந்தமலையின்சமீபத்திற்போனேன் அது ஆகாயத்
தையளாவிக்கொண்டிருக்கிறதைப் பார்த்துநானினைத்து இனிமேது
கோசாவையும் மனைவியையும் எங்கேபோய்த்தேடி கண்டுபிடிக்கப்
போகிறேனும் இதனால் நலதுசீவன் போகிறதாயிருக்கிறது ஆனபடியா
லிந்தமலையின் உச்சியிலேறி கீழேவிழுவோமானால் அப்போது நமது
யிர்போய்விடும் அப்போது நாமெண்ணினஎண்ணம் நாடியகாட்டமு
ம்போய் நாமபடுகிறதுன்ப மொழிந்துவிடுமென்றெண்ணி மலைமேலேறி
உச்சியிற்விழப்போகிற தருணத்தில்ஒருபெரியவர்வந்து என்னைப்பி
டித்துவிழவொட்டாமல்நிறுத்திசொல்லுகிறார்

ஓமனிதனே நீ அனியாயமாகவுயிரைமடித்துக்கொள்ளவேண்டி
யதென்ன நீ இந்தமலையின்மேலிருந்து கீழேவிழுந்து இறந்துபோவா
யானால் ஞாமுநகரமென்னும் இஸதப்பூர்தெரியும் அந்நகரத்திற்கு ச
மீபத்திலுள்ள ஒருமைதானத்தில்ஒருகோரியும் அதனருகில்நாலுவிரு
ட்சங்களும் அவைகளைச்சுற்றி சிலகபுதர்களுமிருக்கிறது அங்கேபோ
வீரானால் உமக்குமுன்னே மூன்றுபக்கீர்கள் உம்மைப்போல் ஆஜத்து
க்காராகவாய் அந்தக்கோரியருகிலிருக்கிறார்கள் நீ அவர்களைகண்டுமு
லாக்கத்துச்செய்து ஒருவர்க்கொருவர் தோஸ்தியாகி இருந்தீர்களானால்
ஒருநாளிரவில்நீங்களநாலுபேரும் உங்களுடைய அகவால்களைப்பேசிக்
கொண்டிருப்பீர்கள் அந்தச்சமயத்தில் அந்தருமுநகரத்தையாளும் ஆ
சாத்பகுதபாத்துஷாவானவர் தானுமொரு ஆஜத்தாகநீங்களிருக்கிறவி
டத்திற்குவருவார் அதன்பின்பு உங்களைந்துபேருடைய ஆஜத்தாகிய
யெண்ணங்கள்நிறைவேறும் ஆதலால்நீசீக்கிரமாகநான்சொன்ன அவி
டத்திற்குப்போய் சேரென்றுஉத்தரவுகொடுத்தார் அதுகேட்டுநானவ
வரைப்பார்த்து நீங்கள்யாரென்று கேட்டேன் அதற்கவர்நான் அலீபு

னுஅபுர்தாலியல்லாகு அன்குவென்றுசொன்னார் உடனேநான் அவரைமிகவும்புகழ்ந்துமரியாதையுடனே இவர்நமக்குப்பிராணன்போகிற சமயத்தில்வந்து உதவிசெய்தாரென்றெண்ணிநிற்கையிலகண்ணைமயக்கத்திலேயுமுடவிழித்துப்பார்த்தேன் அப்போதவர்கள் இன்னவிதமாய்ப்போனாரென்றுதெரியாமல் மறைந்துபோய்விட்டார்கள்.

அதுகண்டுநான் அல்லாகுத்தஆலாவைப்புகழ்ந்து சுக்கூர்செய்து அசரத்கலியுல்லாஅவர்கள்சொன்னதுபோல்கடப்பதேஉத்தமமென்று தீர்மானித்துமலையைவிட்டுக்கீழிறங்கி அதற்கருகிற்போகிப்பாதையைப்பிடித்து நடந்துவந்தேன் இந்தநகரமெதிர்ப்பட்டது இதைக்கண்டு மகிழ்ச்சியுடனேவரும்போது அசரத்தலியுல்லாசொன்னதுபோல்மைதானமும் கோரியும் கபுறஸ்தானமும்காணப்பட்டது அவ்விடத்தில் இவர்களிருவருமிருந்தார்கள் நான்இவர்களைக்கண்டு தசுலிஞ்செய்து மூலாக்கததாம் ஒருவர்க்கொருவர் இனேகித்து நாங்கள்நான்குபேரும் ஏகோபித்திருக்குங்காலத்தில் ஒருநாளிரவில்நாங்கள்நால்வரும்பக்கீரதுசேதியைக்குறித்து ஒருவர்க்கொருவர்தர்க்கஞ்செய்து அவரவர்களைச்சொல்லவேணுமென்றுஉறுதிப்படுத்திக்கொண்டோம் அதனால்முதலாவதுபக்கீருகியமுகம்மதுகம்தென்பவர்தன்னுடைய கிஸ்ஸாவைச்சொல்லிமுடித்தார் அதுகேட்டுநால்சமூலரும்இவர்பக்கீர்கோலங்கொண்டது சரிதானென்றெண்ணியிருக்கையில் பொழுதுவிடிந்தது அந்தச்சமயத்தில்தாங்கள்சேவகர்களையனுப்பிஎங்கள்நாலவரையுமழைப்பித்து மற்றமூன்றுபேருடைய அகவால்களைச்சொல்லவேண்டுமென்னதாங்கள்சொல்லாமலிருந்தால்தாங்கள் காஜாசக்பாசெனுஞ்சவுதாகருடையகதையைச்சொன்னதால் இரண்டாவதுபக்கீராகியஅக்பர்பாத்துஷாதன்னுடையகிஸ்ஸாவைச்சொன்னார்பின்புமூன்றாவது பக்கீராகிய சமுசத்தீன்பாத்துஷா தன்னுடையஅகவால்களைச்சொன்னார் இவர்களுடையசரித்திரத்தைத் தாங்கள்பிரியமாகக்கேட்டபடியால் நான்காவதுபக்கீருகியானும்என்னுடையஅகவாலைச்சொல்லினேன் ஆகையாலிதுவரையென்னுடைய ஆஜத்தும்நான்கொண்டபக்கீர்கோலமுமென்று அசன்பகுதாதி பாத்துஷாசொல்லி முடித்தார்.

ஆமீன் ஆமீன் யாறப்பி லாலமீன்

நான்காவது பக்கீர்சொல்லிய கிஸ்ஸா முற்றிற்று.

பிசுமில்லாகி.

## றூமுநகரத்தைப் பரிபாலனஞ்செய்த ஆசாத்பகுத்பாதுஷாவுடைய ஆஜத்துநிறைவேறியகிஸ்ஸா.

---

இந்தப்பிரகாரமாக றூமுநகரமென்றும் குஸ்தந்தீனியென்றும்பேர்வழங்கிய இந்தப்பூமியைப் பாரம்பரையாயரசாட்சி செய்துவந்த ஆசாத்பகுத்பாத்துஷாவும் இராக்குதேசத்துஷேக்குஜமால் சவுதாகருடையமகன் முகம்மதுசவுது சவுதாகரென்பவரும் பாரீஸ்தேசத்தையாண்ட அசீசுமிஸ்ரு பாத்துஷாவுடைய குமாரர் அக்பர்பாத்துஷாவும் குராசானிதேசத்தையாண்ட அப்பதுல்வாசி பாத்துஷாமகன் சம்சதீன் பாத்துஷாவும் குலுஸ்தானிதேசத்தையாண்ட சகபர்பாத்துஷாவுடையகுமாரர் அசன்பகுதாதிபாத்துஷாவும் இவர்களைந்துபேர்களும் அவரவர்கள் ஆஜத்தாகிய கிஸ்ஸாக்களைச்சொல்லி ஒருவர்க்கொருவர் கேட்டு மனமகிழ்ச்சியாகி ஆனந்தக்கடலிற்குளித்துச்சந்தோஷமாகிப் பேரானந்தங்கொண்டிருக்கிறபோது ஆஜாத்பகுத்பாத்துஷாவுடைய அரண்மனையிலிருந்து சமையற்செய்கிற பண்டாரிகளும் கோசாக்களுமாய் போசனமுதலிய அறுவகைபதார்த்தங்களுங் கொண்டுவந்தார்கள்.

அதுகளைஐந்துபேர்களுந்தின்று பசியாறிக் களிப்புடனிருக்கையில் ஆஜாத்பகுத்பாத்துஷாவானவர் இந்தநான்கு பகீர்களபேரிலதிகபிரியமும் கிர்பையும்வைத்து அவர்களைப்பார்த்துச் சொல்லுகிறாரே ஞானிகளேயெனக்குத் தோஸ்தியாகிய தர்வேசுகளே நீங்கள் நால்வரும் என்னைவிட்டு அரைநிமிஷமாவது பிரியாமல் என்கயாத்துள்ளவரையிலும் உங்கள் கயாத்துள்ளவரையிலும் சகப்பத்துக்கு ஒருநஷ்டமுமாகாமலிருக்கவேண்டியதாயெண்ணியிருக்கிறேன் உங்களுடையமனதிலெப்படியிருக்கிறது அதைச்சொல்லுங்களென்று நான்குபேர்களையுங் கேட்க அப்போது இந்தநால்வர்களும ஒரேவாக்காய் பாத்துஷாவையும் பார்த்துச் சொல்லுகிறார்கள் கேளுங்கள் தேசத்தையாளுகின்ற சக்கிரவர்த்திகள் பாத்துஷாக்கள் சுலத்தான்கள் நவாப்புகள் இராஜாக்கள் இவர்களுக்கெல்லாம் சக்கிரவர்த்தியாகிய பாத்துஷாசிரோமணி தவுலத்தேதாங்களெங்கள்பேரிலிருக்கிற பிரியத்திலும் உங்கள்பேரில்நாங்கள் அதிகபிரியம்வைத்திருப்பதாலே தங்களுடைய உத்திரவுக்குப் பதிலுத்தரவுசொல்லமாட்டோம் உங்களுடையஎண்ணம் எப்படியிருக்கிறதோ அதுபோலே நடந்துக்கொள்ளக் காத்துக்கொண்டிருக்கிறோமென்று மிகவும் வணக்கத்துடனே சொன்னார்கள்.

அப்போது ஆசாத்பகுத்பாத்துஷாவானவர் பகுதிகாலங்களிலிந்தநான்குபகீர்களையுங்கூடவேகூட்டிக்கொண்டு தகத்திலிருந்து இராச்சிய

பாரஞ்செய்துகொண்டு வேளைக்குவேளை ஒசீபனமுதலியதைத்தின்று
பசியாறி அந்தந்தகாலக்குள்ள அஞ்சொகுத்துகளும் தொழுதுவாக்
கேட்டு அல்லாகுத்தஆலாவைப்புகழ்ந்து இரவானவுடனேமுனனிவர்
களிருந்து அகவால்முதலிய கிஸ்ஸாக்களென்னுங்கதைகள் சொல்லி
யிருந்த இபாததுக் காணவிந்போய்கொஞ்சநேரம் முன்னோர்கள நட
த்திவந்தகதைகள நன்னடக்கைகள் முதலியதும் வேதத்திலுள்ள உக்
கும்களும் சரீக்கத்துதரீக்கத்து அக்கீக்கத்து மகரிபத்து இசனுடையபா
தைகளும் இன்னம் அநேகதிருஷ்டாந்தங்களும் பேசிக்கொண்டு இர
ண்டுசாமமானவுடனே நித்திரைசெய்து விடியகாலநாழிகைக்குவெழு
ந்து தொழுகைக்காகவேண்டியவேலைகளை முடிக்கிறது இவ்விதமாகநா
ன்குபக்கிர்களும் பாதுஷாவும் இடைவிடாமல் ஆறுமாதம ஏழுமாத
மாய் ஒசிவனம் புசிக்கிறதும் ராஜரீகத்தைச் செலுத்துகிறதும் தொழு
கைமுதலியதை முடிக்கிறதும் இரவிலிவர்களுடனே பலபேச்சுகள்பே
சிப்படுத்து நித்திரைசெய்து காலங்கழித்துக்கொண்டிருக்கிறநாளையில்
ஆஜாத்பகுத்பாத்துஷா இந்தப்பக்கீர்களைக் காணுகிறதற்குமுன்னமே
அவர்களுடைய அலாலாகிய மனைவியிருக்கிற அந்தப்புரத்தில் நடக்கி
றகாரியங்கள்முதலிய விசேடங்களொன்றுந்தெரியாமலிந்தப்பக்கீர்களு
டைய மகப்பத்தைமுக்கியமாக நடத்திக்கொண்டுவந்தார் அப்படிநடந்
துவருவதல் அவருடைய அலாலாகிய பீபியவர்கள்வயிற்றில்அல்லாகு
த்தஆலாவுடைய கிருபைபறக்கத்தினல் றூமுநகரத்தைச்சேர்ந்ததேச
ங்களையெல்லாம் பாதுகாக்கும் புத்திரசிகாமணியான குழந்தை உற்ப
வித்து நாளுக்குநாள் கர்ப்பம்வளர்ந்துமாதமும் அதிகரித்துக்கொண்டி
ருக்கிறது இந்தசங்கதிகள் அரண்மனையிலுள்ள தாதிகள்மேப்பிகள் வெ
ள்ளாட்டிகள்முதலிய வேலைக்காரிகளுக்கும் பிரகாசமாய்த்தெரிந்திருக்
குமேயொழிய மற்றும்பேர்களுக்கும் பாத்துஷா அவர்களுந்தெரியாம
லிருந்தது அப்படியிருக்கிறநாளையி லொருநாள் பாத்துஷாவும் நான்
குபக்கிர்களும இபாதத்துக்கானவில் ஐந்துபேருந்தனித்திருந்து அவர
வர்கள் ஆஜத்தை அல்லாசுவானுகுத்தஆலா யெப்போநிறைவேற்றிக்
கொடுப்பானோ வென்கிறயெண்ணத்தை விஸ்தாரமபயப்பேசிக்கொண்
டிருக்கிற தருணத்தில் பாத்துஷாவுடைய மனைவியார் கர்ப்பம் பத்து
மாதமும் நிறைந்துப் பூர்ணச்சந்திரனுதயமானதுபோல் ஒருபுத்திர
னைப்பெற்றார்கள் அந்தசங்கதியைப் பாத்துஷாவுக்குச்சொல்லும்படியா
ய் ஒருகோசாயெழுந்து இவர்களைந்துபேருமிருக்கிற இபாதத்துக்கா
வுகத அதிகவிரைவாயோடிவந்து பாத்துஷாவைக்கண்டு மிகவும்ச
ககத்துடனே கைகட்டி வாய்பொத்திச் சொல்லுகிறான் கேளு
பாத்துஷா நாயகமாகிய தவுலத்தீத இந்தறூமுநகரத்தி லி

லமான பேர்களுக்கும் தேசதேசத்திலுள்ள ராஜாக்கள் முதலியயாவருக்கும் இராஜநாயகமாகிய தவுலத்துள்ளபுத்திரசிகாமணி] தங்களுடைய நாயகியாரும் யாவர்களுக்கும் எனக்கும் தாயுமாகிய மாதாவயிற்றில்உற்பத்தியாய் இன்றைபதினத்தில்விடிந்து ஐந்துநாழிகைக்குமேல் அநேசஞ்சந்திரர்களுதித்ததுபோற் பிள்ளைபிறந்திருக்கிறது அதுசேதியைத் தங்களிடத்திறசொல்லவந்தேனென்று சொல்ல அப்போதுபாத்துஷாவுடைய இரண்டுகாதிலும் கோசாசொன்னசொற்புகுந்து அவர்கள்சரீரமுழுவதும் எப்படிப்பூரித்ததென்றால் சொர்க்கலோகத்திலுள்ள சனிவர்க்கங்களையும் சயாத்துக்கைபாரென்கிற நதியின்தண்ணீரையும்ஆகிறஜமானிலுள்ளபேர்கள் குடித்து எப்படிமகிழ்ச்சியடைவார்களோ அதிலு மேலாகிய மகிழ்ச்சியடைந்து இன்பங்குளிர்ந்து இருதோளும்பூரித்து அல்லாகுவாலுக்குத்த ஆலாவைப்புகழ்ந்து ஒநமணி இரண்டனாழிகை பரியந்தம் சந்தோஷக்கடலில்மூழ்கி எழுந்து தருவேசுகளென்னும்சவுதாகரையும்மூன்றுபாத்துஷாக்களையும்பார்த்துச்சொல்லுகிறார்

கேளுங்களெனக்குப் பிரியமாகிய தோஸ்துகளே இந்தகோசாவானவர்வந்து சொல்லுகிறதைப் பார்த்தால் மெத்த ஆச்சரியமாயிருக்கிறது ஏதெனென்றால் நீங்கள்வந்த சிலநாள்வரையில்நானரண்மனைக்குட்போய் என்னுடைய அலாலாகியமனைவியைக்கண்டு பேச்சுவார்த்தைகளில்லாமல் உங்களுடனேயிருந்து காலத்தைப்போக்கிக்கொண்டுவருவதால் இந்தக்கோசா குழந்தைபிறந்ததென்று சொன்னது குதறத்தாகவிருக்கிறது ஆனபடியாலெனக்குமிகுந்த ஆச்சரியமாகத்தான் இருக்கிறதென்று கோசாவைப்பார்த்து ஓகோசாவே என்நாயகி யெவ்விதமாகக்குழந்தையைப்பெற்றாள் அதன்விபரத்தைச்சொல்லென்று பாத்துஷா கேட்கக் கோசாசொல்லுகிறார் கேளுங்கள்பாத்துஷாநாயகமே உங்கள் தோஸ்தியாகிய தர்வேசுகள்வந்தவெழெட்டுமாதம்வரையில்தாங்களந்தப்புரத்துக்கு வராமலிருந்தபடியால் எங்கள்தாயானவர்கள் நீங்கள் வந்திருந்தகாலத்தில் கர்ப்பந்தரித்து பத்துமாதமும் நிறைந்துஇன்றையதினத்தில் சிரோமணியானகுழந்தையைப்பெற்றார்கள் இதன்விபரங்கள் என்தாயார் வயிற்றிற கர்ப்பந்தரித்தஇதுவரையிலும் அரண்மனையிலுள்ள சகலத்திராளுக்கும் பிரசங்கமாய்த்தெரிந்திருந்ததேயொழிய தங்களுக்குமாத்திர மறிவிக்கவில்லை அதேதினாலென்றால் தாங்களிந்த தர்வேசுகளுடனே முக்கியமாயிடைவிடாமலிருக்கிறபடியால்சொல்லுவதற்குச் சாவகாசப்படவில்லையென்று கோசாசொன்னவுடனேபாத்துஷாவானவர் சற்றுநேரம் யோசித்து இதுகளெல்லாம்சரியாயிருக்கிறதென்று பேரானந்தங்கொண்டு தாமணிந்திருந்தப் பீதாம்பரத்தைக்

கோசாவுக்குப் போர்த்து அனேகம்பொருள்கள்முதலானதும்வைரவஜை த்திக்கனகாபிஷேகமாய்ச்சொரிந்து அரண்மனையிலுள்ள கோசாக்களு க்கெல்லாம் முதன்மையானசர்தாருக்கியோகங்கொடுத்து அந்நேரமே குழந்தையைப்பார்க்கவேணுமென்கிற ஆவலாய் நான்குபக்கிர்களையும் பார்த்துக்கேளுங்கள் தர்வேசுகளே நீங்களென்னிடத்தில்வந்துசேர்ந்த தினாலும் அல்லாகுசுவானுத்தஆலாவுடைய கிர்பைபெருகுமத்து மூண் டானதாலும் உங்களுடைய துவாப்பறக்கத்தினாலும் எனதுகோத்திரம் விளங்கும்படியாயும் இந்தத்தவுலத்தென்னும் என்னரசை ஆளும்படி யாயும் குழந்தைபிறந்தது இதுதானென்னுடைய ஆஜத்தா யிருந்தது அதைஅல்லாகுத்தஆலா நிறைவேற்றிவைத்தான இதுபோலேஉங்கள் நால்வருடைய ஆஜத்தையும் அல்லாகுத்தஆலா நிறைவேற்றி வைப்பா னபடியால் நாமெவரும் அரண்மனைக்குட்போய் குழந்தையைப் பார் த்து வருவோம் வாருங்களென்று பாத்துஷாசொல்ல நான்குபக்கிர்க ளும் பாதுஷாவெவ்வளவுமகிழ்ச்சிகொண்டார்களோ அதிலுமிரட்டிப் பான மகிழ்ச்சியடைந்து பாத்துஷாவுடைய சொல்வெளியே வருவதற் குள்ளாக நாலுபேரும் தங்களுடையமனம்போலே போய்ப்பார்த்து வ ருவோமென் றெழுந்தார்கள்,

அப்போதுபாத்துஷாவுமெழுந்தார் ஆகஐந்துபேருங்கோசாவுமா சக்கரலநடையாய்நடந்தார்கள் அதேதினாலென்றால் குழந்தையைபார் க்கவேண்டுமென்கிற சந்தோஷத்தினாலே வாகனமுதலியசவாரிக ளில் வரப்போக நேரமாகுமென்று அதிவேகமாய் நடந்து அரண்மனைக் குள்ளந்தப்புரத்துக்குச்சமீபத்தில் ஒருஅலங்காரமெத்தையிற் போய் ஐவரமைந்து நாற்காலியி லுட்கார்ந்திருந்து பாத்துஷாவானவர்கோ சாவைப்பார்த்து ஓகோசாவே நீயந்தப்புரத்துக்குப்போய் நாங்கள்வந் திருக்கிறதாகத் தாதிகளிடத்திற்சொல்லிகல்பிலநிறைந்தபென்கண்மணி யாகிய பிள்ளையைபெடுத்துவரும்படியாய்ச் சொல்லுமென்று சொன்னா ர்கள் அப்போதுகோசாபாத்துஷாவுடையஉத்திரவானவுடனே அந்தப்பு ரம்போய்த்தாதிகளையழைத்துபாத்துஷாநாயகரும்அவர்கள்தோஸ்திமா ர்களும்அலங்காரமெத்தையில்வந்திருந்துகுழந்தையைப்பார்க்கவேண்டு மென்றுயெடுத்துவாசொன்னார்களசலுதியிற்பிள்ளையையெடுத்து வாருங் களென்றுசொல்ல அதிவேகமாய்தாதிகள்குழந்தையைபட்டுமகமல்களா ற்போர்த்துஎடுத்துபாத்துஷாவிடத்தில்வந்துமிகவுமதபுடனேமகா பகிழ் சியாகவொடுத்தார்கள் அப்போதுபாத்துஷாவானவர்அல்லாகுத்த ஆலா வைப்புகழ்ந்துதர்ஷூதுமுதலியகலிமாசொல்லிஇரண்டுகரங்களாலுமகுழ ந்தையைக்கையிலேத்திறந்து பிள்ளைமுகத்தைதுபார்த்தார்கள் அதனு

டையஅழகுசூாத்தானது சோடசகலைகளோடுங்கூடிய சந்திரனுடை
யபிரகாசத்திலுமேலானபிரகாசமாப்பளீரென்று சொலித்துக்கொண்
டிருந்ததைத தனதிரண்டுகண்களாற்பார்த்து அவர்கள் சந்தோஷமென
னும்மனமகிழ்ச்சியுண்டானதுயெப்படியிருந்ததென்றால் இந்தச்சார்தா
வேசென்னும் நான்குபக்கீர்களுடைய கிஸ்ஸாமுன்பாரிசிலிருந்ததை
யாவருமெளிதிலுணருமபடியாய் இராமநாதபுரம் இராவுண்ஷாப்புக்க
டை-ப-வெ-முகம்மதுஇப்ருகீம்சாகிபவர்களால தமிழநடையாகச்செ
ய்தகதையை திருநெல்வேலிப்பேட்டையில் பரிமளக்காரவீதியிலிருக்
கும் வ-மு-மருதணாவுத்தரவர்கள் இதைக்கதையை அச்சிடுவதற்காக
மனம்வைத்துப் பேரானந்தங்கொண்டு பொருளுதவிசெயது இவ்வித
மென்றுசொல்லக்கூடாத மகிழ்ச்சியடைந்திருந்தார் ஆகையாலிவருக்கு
ண்டான மகிழ்ச்சியிலுமென் மடங்கதிகமானமகிழ்ச்சியை ஆசாத்பகு
த்பாத்துஷா அடைந்துநான்குதர்வேசுகளையும் பார்த்துத்தனகையிலி
ருந்த குழந்தையை ஒவ்வொருவர்கையில்கொடுக்க அவர்களும்வாங்கி
அந்தக்குழந்தைக்கு யாதொருகுறைவுமில்லாமல் நீடித்தகயாத்தாயிரு
க்கவேணுமென்று அல்லாகுத்தஆலாவிடத்தில நால்வருந்துவாக்கேட்
டுசந்தோஷமாக மகிழ்ச்சியடைந்திருக்கையில் பாத்துஷா யிவர்களைப்
பார்த்து நீங்கள்நான்குபேர்களும்இந்தப்பிள்ளைக்குப்பேர்வையுங்களெ
ன்றார்கள் அவர்கள்பயாசித்துத (தர்வேசுபாத்துஷாவென்று) பேரிட்
டுப்பாத்துஷா அவர்கள்கையிற்கொடுத்து மனமகிழ்ந்திருந்தார்கள் அப்
போதுபாத்துஷாவானவர்குழந்தையைக்கொண்டுவந்ததாதிக்குஆடை
யாபரணமுதலிய வெகுமானங்கொடுத்துக் குழந்தையை அந்தப்புரத்
துக்கொண்டுபோகும்படியா யனுப்பிவிட்டார்கள் அவளவெகுமதியைப்
பெற்றுக்கொண்டு பிள்ளையையந்தப்புரத்துக்குக்கொண்டுபோய்சீரா
ட்டிவைத்துக்கொண்டிருக்கிறார்கள் அந்நேரத்தில் ஒசீவனமுதலியபதா
ர்த்தங்கள்வந்தது இவர்களைவருந்தின்றுபசியாறி அலங்காரமெத்தை
யை விட்டெழுந்து தகத்தென்னுஞ்சிம்மாதனத்திற் போயிருந்து அறு
பத்துநான்குமந்திரிகளையுமழைத்து உட்காரச்சொல்லி முதன்மந்திரி
யானது கிருதுமாதுவென்னும் ஒசீபனைப்பார்த்து மற்றமந்திரிகளுக்
குந்தெரியும்படியாய்ச்சொல்லுகிறார் கேளுங்கள்மந்திரிகளே இன்றைய
தினத்தில என்கோத்திரமவிளங்கும்படியாயும் இந்தத்தகத்திலிருந்து
அரசுசெலுத்தும்படியான புத்திரசிகாமணிபிறந்திருக்கிறது ஆனபடி
யாலிந்நகரத்திலுள்ள குடிபடைமுதலியயாவர்களு மறியும்படியாய்ப்ப
றைசாற்றிதிக்கெட்டுஞ் சர்க்கரைவழங்கி கஜானுக்களைத்திறந்துபொரு
ள்களை எடுத்து ஏழைமிசுக்கீம்யாசகர்கள் வித்துவான்கள் கத்துச்சொ
ல்லிகள் லப்பைமுலீம்உலமாக்கள்முதலிய பெரியோர்களுக்கும் சக்கா

த்து முதலியபகயிர்கயிருத்து என்னும் தருமங்கள்செய்து தேசதேசங்களிலுள்ள பாத்துஷாசுலுத்தான் நவாப்புஇராசாக்கள் இவர்களுக்கெல்லாம் தகத்தென்னும் நிருபமெழுதி அந்தந்தப்பட்டணங்கள் தோறுமுள்ளெல்லாம் இவ்விதமாய்ச்சர்க்கரை வழங்கவும் தருமஞ்செய்யும்படியாய் தூதுவர்களையனுப்பிச் சொல்லும்படியா யுத்திரவுசொன்னார்கள்

அப்போது மந்திரிகளனைவரும் பாத்துஷாவுடைய வுத்திரவைச்சிரமேற்கொண்டு அடங்கா மகிழ்ச்சியடைந்து நாருநகரமுழுவதையும் பறைசாற்றுவித்து சர்க்கரைவழங்கிசக்காத்துமுதலிய தருமங்கள்செய்து பலதேசங்களுக்கும் போய்வரும்படியான தூதுவர்களையழைத்துத் தாக்கீதெழுதி யவர்கள்கையிற்கொடுத்தனுப்ப அவர்களந்தந்தத்தேசங்களுக்குப்போய் அறிவித்தார்கள் அதுகேட்டு அங்கங்குள்ள ராஜாக்களும்மிகுந்தமகிழ்வுடையவர்களாய் சர்க்கரைவழங்கி ஏழைபெளியவர்களுக்குப் பலவிததருமஞ்செய்து எங்கும்பிரசித்தஞ்செய்ய யாவர்களுக்கும் பாத்துஷாவுக்குக் குழந்தைபிறந்ததென்கிற சந்தோஷத்தினால் திகம்பூரித்திருந்தார்கள்.

இப்படியாகபாத்துஷாவும் நான்குபக்கீர்களும் அறுபத்துநான்கு மந்திரிகளும்மற்றுமகுடிபடைமுதலானயாவர்களும் மகிழ்ச்சியடைந்திருக்கும்போது பிறந்தகுழந்தைக்குவேளைவேளைக்குப் பால்முதலியவைகளைத் தாதிகள்கொடுத்துச் சீராட்டித் தொட்டிலிட்டுத் தாலாட்டி நித்திரைசெய்யும்படிசெய்து குழந்தைபிறந்தகாலமாதாள் தாதிகள்மூப்பிகள்முதலியயாவர்களும் விழித்துக்கொண்டிருக்கும்போதே தொட்டிலுடனே பிள்ளைகாணமற்போய்விட்டது அந்தச்சமயத்தில் அரண்மனைமுதலிய அந்தப்புரங்களிலிருக்கப்பட்டவர்கள் யாவர்களும் ஓலக்கூச்சலாய்ப் பரதவித்துக்கொண்டிருக்கும்போது ஒருகோசாதகத்திலிருக்கும் பாத்துஷாவிடத்தில் வந்துதவுலத்தேஎல்லோரும் விழித்துக்கொண்டிருக்கும்போதே உங்கள்புத்திரனாகிய குழந்தைதொட்டிலுடனேகாணமற்போய்விட்டதென்று சொன்னார்அப்படிச்சொல்லிவாயைமூடுவதற்குமுன்னமே பாத்துஷாவானவர் ஆவென்கிறகூச்சலிட்டேங்கித் தகத்தின்பேரில்விழுந்து மூர்ச்சையாய்விட்டார் இதுபோலேநான்குபக்கீர்களும் அலறிவிழுந்துவிட்டார்கள் மற்றமந்திரிகள் முதலானவலாளர்க்கெல்லாம் முகம்வாடி சோர்வடைந்து துக்கித்துவிசனக்கடலி லாழ்ந்தவர்களானார்கள் அந்தச்சமயத்தில் கோசாவும் சிலமந்திரிகளும் பாத்துஷாவைத்தூக்கி சைத்தியோபசாரஞ்செய்து மூர்ச்சைதெளியவைத்தார்கள் இவ்விதமாகவேநான்குபக்கீர்களையுங் களைபாற்றிஒருசாமம் வரைக்கும் ஒருவர்க்கொருவர் பேச்சுமூச்சில்லாமல் விச

னத்திலமுழ்ந்தியிருக்கையில் பாத்துஷாவுக்குக்கொஞ்சம்தெரியம்வந்து மந்திரிகளையழைத்து இந்நகரத்திலும் தோட்டந்துறவுமுதலானவிடங்களிலும்நாடுகளிலும் காடுகளிலும்போய்க் குழந்தையைத்தேடும்படியாகஉத்திரவுகொடுத்தார் அதுபோல்அனேகந்தூதுவர்கள பலவிடங்களிலும்போய்த் தேடிப்பார்த்தும் குழந்தையகப்படாததால் மிகுந்ததுயரத்துடனே சாதர்வேசென்னும்நான்குபக்கீர்களையும் மந்திரிகளையும்பார்த்து இரண்டுகண்களிலும்தண்ணீர்ததும்பும்படியாயச சொல்லத்தொடங்கினார்.

கேளுங்கள் தர்வேசுகளேமற்றும்மந்திரிகளே அல்லாகுசுபுகானகுத்தஆலா என்பேரிற்கிருபைவைத்துக் குரறத்தாக ஒருஆண்பிள்ளையைக்கொடுத்தான்அப்படிக்கொடுத்தவன் மீண்டும்அதை எவ்விதமாக மறைத்திருக்கிறானோ தெரியவில்லைஇதற்குநாமென்ன செய்வோமென்றுமிகவும்புலம்பிப்பரிதவித்து அன்னஆகாரமில்லாமலிருந்தார் அதுகண்டுநான்குபக்கீர்களும் மந்திரிமார்களும் மற்றகுடிபடைகளும் (ஊமைகண்டகினவைப்போல) ஒருவர்க்கொருவர்பேசாமலும் ஊணுறக்கமில்லாமலும்விசனத்துடனேயிருந்தார்கள் இவ்விதமாக மூன்றுநாள்போக நாலாநாள்முன் தொட்டில் கட்டியிருந்தவிடத்திற்றானே தொட்டிலுடனேபிள்ளை நித்திரைசெய்துக்கொண்டிருந்தது இதைக்கண்டபாட்சாவுடைய மனைவியும் அந்தப்புரத்திலுள்ள தாதிகள் மூப்பிகள் முதலானவர்களும் ஆஆவென்று சந்தோஷித்தசத்தமானது கடலிரைச்சலைப்போல் புலவிடத்திலுங்கேட்டது இந்தச்சத்தத்தைக்கேட்டபாட்சாவும் மற்றயாவர்களும் இதென்னவிபரீதமாகியசத்தம் அந்தப்புரத்திற்றடலொலிபோலிருக்கிறதென்று யோசித்துக்கொண்டிருக்கையில் ஒருகோசாவானவன் ஓடோடியும்வந்து பாத்துஷாவைக்கண்டுசலாஞ்செய்து பாத்துஷாசிரோமணியாகிய தவுலத்தீதங்களுடையகுமாரராகிய தர்வேஸ்பாட்சாவென்னுங்குழந்தை முன்னிருந்தவிடத்திற்றானே தொட்டிலோடேநித்திரைசெய்துக்கொண்டிருக்கிறதென்றுசொன்னார்கள் அதுகேட்டபாட்சாவும் மற்றயாவர்களும் அவரவர்களுடைய புயங்கள்பூரித்துளக்களிப்புண்டாகி அகத்தச்சபாமண்டப மதிரும்படியான சந்தோஷவார்த்தைகள் பேசினதால் பெருந்தொனிகிளம்பியது அப்போதுபாட்சாவினுடைய இருதயமெப்படி யிருந்ததென்றால் ஒருமனிதன்பாவக்கடலில்மூழ்கி அவஸ்தைப்பட்டுக்கொண் டிருக்கும்போது பரகெதியென்னும்கப்பல் அகப்பட அதிலேறிச்சுவர்க்கலோகமென்னுங்கரைசேர்ந்து அதிலிருந்துசுகங்களையனுபவிப்பானானால் அவன்எப்படிபோனந்தங்கொள்ளுவானோ அதனிலுமேலான மகிழ்ச்சியைப் பாட்சாவுடை

ந்திருந்தார் அதுபோலவே நான்குபக்கீர்களும் ஒசீறுகளாகியமந்திரிமார்களும் மற்றகுடிபடைகளும்மகிழ்ச்சியடைந்திருந்தார்கள்பின்புநான்குபக்கீர்களும்பாட்சாவுமெழுந்து அந்தப்புரத்திற்குச்சமீபத்தி லிருக்கிறஅலங்காரமெத்தையிற்போய்ஆசனங்களிலுட்கார்ந்து ஒருகோசாவையனுப்பிகுழந்தையையெடுத்துக்கொண்டுவரச்சொல்ல அதுபோலவேகோசா குழந்தையை யெடுத்துக்கொண்டுவந்து பாட்சாவிடத்தில் கொடுக்கபாட்சா மிகுந்தமகிழ்ச்சியுடனேவாங்கி பிள்ளையினுடையமுகத்தில் தன்னுடையஇரண்டுகண்களையுமொத்தி அல்லாகுசுபுகானகுத்தஆலா இப்போதெனக்குப்பிச்சைகொடுத்த தர்வேசுபாட்சாவே யென்று அல்லாவைப்புகழ்ந்து சுக்கூர்செய்தார் அதுபோலவே நான்குபக்கீர்களும் குழந்தையை வாங்கிப்புகழ்ந்து சுக்கூர்செய்துஅந்தப்புரத்திற்கனுப்பிவிட்டார்கள் உடனே ஒசீர்முதலியபுலவர்கள் கறிவகைகள்வந்தது அதுகளைத்தின்று பசியாறிசர்ப்பத்துமுதலியதுகள் குடித்து அதிகமகிழ்ச்சியோடிருந்தார்கள் இந்தவிதமாய்மூன்றுநாளானது நாலாநாள் காலையிற்பிள்ளையைக்காணோமென்றுசொன்னார்கள் அப்போது பாத்துஷாவும் நான்குபக்கீர்களும் மற்றப்பேர்களுங்கேட்டு மிகவும்விசனத்துடனிருந்தார்கள்,

மறுபடியும்மூன்றுநாட்சென்று நாலாநாள்பிள்ளைவீட்டிற்கு வந்திருக்கிறதென்றுசொன்னார்கள் இவர்கள்சந்தோஷப்பட்டு பாத்துஷா சொல்லுகிறார் கேளுங்கள்தர்வேசுகளேமற்றுமந்திரிகளே இந்தப்பிள்ளையானது மூன்றுநாளைக்கிங்கே யிருக்கிறதுமூன்றுநாளைக்குக் காணாமற்போகிறது மறுபடியும்வந்துவிடுகிறது இதுவென்னகுமாறகதோ தெரியவில்லை இதைநாம்கண்டறியவேண்டுமென்றிருக்கையில் மூன்றுநாட்போய்நாலாநாள்பிள்ளையைக்காணோம் அதுபோனநாலாநாள் பழையபடிவந்துவிட்டது இவ்விதமாகநாலுவிசை ஆறுவிசைகாணாமற்போகிறதும்பழையபடிவந்துவிடுகிறதுமாயிருக்கிறதென்று சொல்லியிருக்கிறபோதுபின்னால்ஒருமாதத்திற்குப்பிறகுபிள்ளையைக்காணாமற்போய் மூன்றுநாளிருந்துவந்துவிட்டது இவ்விதமாய்மாதமாதநடந்துஒருவருஷமானதின்பிறகுபாத்துஷாயோசித்ததாவது ஆரோஒருவர் நமக்குத்தெரியாமல்பிள்ளையையெடுத்துக்கொண்டுபோய் வைத்திருந்து அதன்பின்புகொண்டுவந்துவைத்துவிட்டுப் போகிறார்கள் அதன்விபரத்தை நாம் கண்டுபிடிக்கவேண்டியதாயிருக்கிறதென்றுநான்குபக்கீர்களும்பாத்துஷாவும்யோசித்துஒருகட்டிலானதுவிஸ்தீரணமாய்ஐந்துபேர்படுக்கும்படியாய்அதில் கடைந்தகாலுக்குநாலுகால்நட்டி விட்டம்போட்டுநடுவில் தொட்டிற்கட்டிகட்டிக்குநவரத்தினங்களா லலங்காரஞ்செய்து அந்த

ப்புரத்துக்குச் சமீபத்திலிருக்கிற அலங்காரமெத்தையின் மத்தியி லிந் தக்கட்டிலைப்போட்டு அந்தத்தொட்டிலிற் குழந்தைகழுத்தில் ஒருகாகி தத்தில் ஆசாத்பகுத்பாத்துஷாவுடையபேரும் பிள்ளையில்லாமலிருந்த ஆஜத்தும் பின்புபிள்ளைபிறந்ததும் அந்தப்பிள்ளையை யின்னாரெடுத்து க்கொண்டுபோகிறார்களென்கிற விபரந்தெரியாமலிருப்பதால் எங்களுக் குத்தெரியவைத்து நீங்கள்குழந்தையை யெடுத்துப்போகலாம் அப்படி நீங்களெங்களுக்குத் தெரிவிக்காமலெடுத்துப்போறது சரியில்லாததா யிருக்கிறதென்று யெழுதிக்கட்டிபடுக்கவைத்து ஐந்துபேரும் தொட்டி லைச்சுற்றி கட்டிலின்மேற்படுத்து நித்திரைசெய்து சுபகுநேரம் விழித் துப் பார்க்கையில் நடுவிலிருந்து தூங்கியதொட்டிலோடே பிள்ளையைக் காணோம் இவர்கள்படுத்திருந்த அலங்காரமெத்தையில்லாமல் வேறே பிரமிக்கும்படியான விசித்திரவினோதமபொருந்திய பஙகளாவும்அதை ச்சுற்றி இவ்வளவென்றுசொல்லி முடியாதபூஞ்செடிகளும் கனிவாக்கங் களுள்ள மரங்களும் கண்ணுக்கெட்டாத தூரமுள்ள ஒருதோட்டமிரு க்கிறது அதுகளைப்பார்த்து ஐந்துபேர்களுமொன்றுக்கொன்று மனமரு ண்டுஆலோசனைசெய்துக்கொண்டிருக்கையி லந்தப்பங்களாவுக்குந்தோ ட்டத்துக்கும் ஒருநாழிகைவழிக்கப்புறத்தில் மகாசிறப்புப்பொருந்திய ஓர்பட்டணமிருக்கிறது அந்தப்பட்டணத்தை யாளுகிறவர் தேவபரிசி னகள் ராஜாகளுக்கெல்லா மேலானபாத்துஷா வொருவ ரிருக்கிறார். அவருடையபோ பலிக்காசக்பர் அவருக்கு ஒருபெண்குழந்தை பிறந்து அதிகசவுந்தரியமுள்ளதா யிருக்கிறது அந்தப்பெண்குழந்தைக்குச் சரி யான மாப்பிள்ளைவேண்டுமென்கிற பெண்ணங்கொண்டு அந்தப்பாத்து ஷா சிலசின்களுக்குத் தாவுசெய்து தேசதேசங்களெல்லாமபோய்இப் போது யெனக்குபபிறந்திருக்கிற பெண்குழநதைக்குச்சரியான ஆணபி ள்ளைபிறந்திருந்தால் தேடிப்பார்த்து வாருங்களென்று சொல்லியனுப் ப சிலசினகள் தேசங்களையெல்லாஞ் சுற்றிப்பார்க்கையில் சரியானபிள் ளையில்லாத்தால் பின்புஜாமுகாரம்வந்து ஆசாதபகுக்பாத்துஷாவுக்கு ப் பிறந்திருக்கிற குழந்தையைக்கண்டு அதுபிறந்தமூன்றுநாள தூக்கி க்கொண்டு பெண்ணைப்பெற்ற பாத்துஷாவிடத்திற் கொண்டுவந்து கா ண்பித்தார்கள்.

அவர்குழந்தையைப்பார்த்து நமதுபெண் குழந்தைக்குச் சரியான மாப்பிள்ளையிதுதானென்று மிகவும்பிரியப்பட்டு அலலாவைப்புகழ்ந்து த னது சமூகத்திற் றொட்டிலைக்கட்டி அதற்குவேளைவேளைக்குப் பால் கொடுக்கும்படியாய் தாதிகளையமைத்துப் பாதுகாத்து மூன்றுநாட்செ ன்றதின்பிறகு சின்களாலெடுத்து முன்னிருந்தவிடத்தில வைத்துவரு ம்படி உத்திரவுசெய்கிறது இவ்விதமாகச் சிலநாளைக்குப்பிறகு மாதந் துக்கொருவிசை யெடுத்துவருகிறது மூன்றுநாளைக்குப்பிறகு தாய்தக ப்பனிடத்திற் கொண்டுபோய்விடுகிறது இவ்விதமாய்நடந்துவருகையி

ல் ஆசாத்பகுத்பாத்துஷாவும் நாலுபக்கீர்களும் ஒருகட்டிலிற்பிள்ளை
யைப்படுக்கவைத்து இவர்களுஞ்சுற்றிப் படுத்திருக்கையில் ஜின்கள்
போய்ஐந்துபேர்களையும் பிள்ளையையுஞ்சேர்த்துக் கட்டிலோடே தூக்
கி பூங்காவனஞ்சூழ்ந்த பங்களாவிற்கொண்டுவந்து வைத்துவிட்டு குழ
ந்தையைமட்டுமெதொட்டிலோடே ஜின்கள்பாத்துஷாவிடத்திலெடுத்துவ
ந்துகொடுத்தார்கள்,

அப்போதந்தக்குழந்தையைப் பார்க்கும்போது அதன்கழுத்திற்க
ட்டியிருக்கிற காகிதத்தைஅவிழ்த்துப் பிரித்துப் பார்க்கையில்அதிலிரு
க்கிறவிபரமெல்லாம் பாத்துஷாபார்த்து குஞ்சிரிப்புகொண்டுகுழந்தை
யைக்கொண்டுவந்த ஜின்களைப்பார்த்து இந்தப்பிள்ளையினுடைய தகப்
பனாகிய ஆசாத்பகுத்பாத்துஷாவை நீங்கள்பார்த்திருப்பீர்களா வெ
ன்று கேழ்க்க ஜின்கள்சொல்லியது கேளுங்கள்பாத்துஷாவே அந்தப்
பாத்துஷாவையும் அவர்தோஸ்தியாகிய நான்குதர்வேசுகளும் இந்தகு
ழந்தையை யொருகட்டிலிற்படுக்கவைத்து அவர்கள்சுற்றிக்காவலாகப்
படுத்திருந்தார்கள் அவர்களையுஞ்சேர்த்து கட்டிலோடுதூக்கி நமதுபூ
ங்காவனத்தோட்டத்துப் பங்களாவில்வைத்துவிட்டுக் குழந்தையைமட்
டுமெடுத்துவந்து தங்களிடத்திற்கொடுத்தோமென்றார்கள் அப்போ
துபாத்துஷாவானவர் இன்பங்குளிர்ந்து இருதோளும்பூரித்து நமதுசம்
பந்தியை நாம்காணவேண்டுமென்று ஆவலாயிருந்ததற்குச் சமீபத்தில்
வந்திருக்கிறார்கள என்கிறதைக்கேள்வியுற்று சந்தோஷத்துடன் தன
து இரதகஜதுரகபதாதிமுதலிய நால்வகைச்சேனைகளையனுப்பிவந்திரு
க்குமைந்துபேரையும் அழைத்துக்கொண்டுவரும்படியாயனுப்பினைக்க
அதுபோலே சடற்பெருக்காகிய தேவுபரிசின்குலங்களிலுள்ளதளங்க
ளெல்லாம் ஒன்றாய்க்கூடி பாத்துஷாவுடைய மந்திரிகளிரண்டுபேரும்
வாகனங்களிலேறி தளங்களை நடத்தி பூங்காவனத்தோட்டத்தினருகி
லவந்து நின்றார்கள் அப்போது மந்திரிகளிரண்டுபேரும் பாத்துஷாவு
ம் நான்குதர்வேசுகளுமிருக்கிற பங்களாவுககுட்போய் பந்தகிதசலீமப
ணிவிடைமுதலிய மரியாதைசெய்து நின்றார்கள்.

அப்போது ஆஜாத்பகுத்பாத்துஷாவும் நான்குபக்கீர்களும் மௌன
யோசனையாயிருந்தவர்கள் இவர்களைக்கண்டு பதில்மரியாதைசெய்துவட்
காரச்சொல்லி நீங்களியாரென்று வந்தமந்திரிகளைப்பார்த்து பாத்துஷா
கேட்டார் அதற்குப்பதிலவர்கள் சொல்லுகிறார்கள் கேளுங்கள் தேசங்க
ளிலுள்ள பாத்துஷாக்களுக்கெல்லாம சக்கிரவர்த்தியாகிய பாத்துஷா
நாயகமே எங்கள்பாத்துஷா வுங்களைந்துபேரையுமழைத்து வரும்படி
யாயெங்களை யனுப்பினார் ஆனபடியால நீங்களெழுந்து வாருங்களென
றார்கள் அப்போதுபாத்துஷா இந்தமந்திரிகளைப்பார்த்து உங்கள்பாத்
துஷாவானவர் நீங்களாரென்றுகேட்க எங்கள்பாத்துஷாவானவர்தேவு
பரிசின்பாத்துஷாக்கள் இவர்களுக்கெல்லாம் பாத்துஷாவாகியமலிக்கா
சக்கர்பாத்துஷாநாங்களவர்களுடைய மந்திரியாகையாலமற்றுமேதாவ

து சங்கதிகள் கேழ்க்கவேண்டு மானால் எங்கள்பாத்துஷாவிடத்தில் வந்து பேசிக்கொள்ளலாமென்ன பாத்துஷாவும் நான்குபகீர்களுஞ்சம்மதித்தெழுந்து மந்திரிகளோடு கூடப்போய் இரதத்திலும்வாகனங்களிலுமேறிப் பட்டணம்போய் அங்கங்குள்ள அலங்காரச் சிறப்புகளைப் பார்த்துக்கொண்டு சின்பாட்சாவிருக்கும் தகத்திற்குச்சமீபத்திற்போய் இரதமுதலியதைவிட்டிறங்கி யிவர்களைந்துபேரும் அழைத்துப்போன மந்திரிகளிருவரும் சினபாட்சாவிருக்கும் தகத்தைநோக்கிப்போகும் போது அந்தப்பாட்சா தகத்தைவிட்டிறங்கி யெதிர்கொண்டுவந்து ஆசாத்பகுத்பாத்துஷாவுக்கு மிகவுமுபசாரத்துடன் தசலீமுதலிய வந்தனஞ்செய்து அவர்கள் கரத்தைப்பிடித்து முத்தியிட்டு ஒருவர்க்கொருவர் தழுவி அதுபோலநான்குபக்கீர்களையுந் தழுவிஐந்துபேரையுங் கைலாகு கொடுத்து சிம்மாதனமென்னுந் தகத்திலுட்காரவைத்து தானுமுட்கார்ந்துகொண்டு ஒருவருக்கொருவர் அவரவர்க்ஷேம லாபங்களை விசாரித்து ஏகமகிழ்ச்சியுடனே யிருக்கையில் சின்பாத்துஷாவானவர் றூம் பாத்துஷாவைப்பார்த்து தங்களுடைய ருமுநகரத்தைவிட்டு யிவிடம் வந்தகாரணமென்னவென்றுகேட்க அதற்குருப்பாத்துஷாசொல்லுகிறார்

சேனும்பாத்துஷா என்பட்டங்கட்டி யாளும்படியான ஒருகுழந்தையில்லாமல் நான்பட்டதுன்பங்களை யின்னவிதமென்றுசொல்லிமுடியாது அப்படிக்கெல்லாம்பட்டு வேண்டியபொருள்களை யெல்லாம் ஏழை மிசுக்கீங்களுக்குக்கொடுத்து பள்ளிகள்முதலியகோரிகள் கட்டியுங்குழந்தையில்லாததால் எனது ராச்சியத்தைபார்க்கும்படியாய் முதன் மந்திரியைத்திட்டப்படுத்தி அல்லாவுடைய இபாதத்திலிருந்து விட்டேன் இதுகளை யெனக்குத்திறைகட்டும்படியான பாத்துஷாக்கள் இராசாக்களறிந்து என் ஊரின்பேரிற் சண்டைசெய்து ஊரைப்பிடித்துக்கொள்ளலா மென்றெண்ணி அவர்கள்வந்து நகரைச்சுற்றிவந்து கொண்டார்கள் அவர்கள்வளைந்தசேதியை நானறிந்து தகத்திற்போயுட்கார்ந் திருந்தேன் அந்தசேதியைவந்துவளைந்தபேர்களும் வராமலிருந்தபேர்களுங் கேழ்விப்பட்டு எனக்குச்செல்லவேண்டியதொகைக்கு இரட்டிப்புத்தொகை கிஸ்திகட்டி மிகவும் வணக்கத்துடனே மரியாதைசெய்து விட்டுப்போய்விட்டார்கள் பின்பு இதோயிருக்கிறமகானுபாவர்களாகிய நான்கு பக்கிர்களும் எனக்குத் தோஸ்தியானார்கள்.

இவர்களில் முதன்மையானவர் இராக்குதேசத்துஷேக்குஜமால் சவ்தாகருடைய மகன் முகம்மது கவ்துசவ்தாகர் இவர்பாத்துஷாக்களுக்குச் சரியாகிய அந்தஸ்துள்ளதிரண்டசியானபடியால் இவர்ஒருபெண்ணினால் எண்ணாது மெண்ணுதுமெண்ணி அவர்மனங்குண்ணிகண்ணியபழம்போலபகீர்கோலங்கொண்ட கிஸ்ஸாவை ஆதியோடந்தமாகச் சொலவீ இரண்டாவதுபகீரைச் சுட்டிக்காண்பித்து இவரோ பாரிசுதேசத்து அசீசுமீர்பாத்துஷா உடைய குமாரர் அக்பர்பாத்துஷா இவருமொரு பெண்ணினாலலைந்து பெருக்கத்தவித்து கண்ணீருஞ் சிந்தை

யாய் கலங்கிகலங்கிஒருநகாமிரான இராஜனுடையகுமாரன் ஆஜத்தைநிறைவேற்றிக் கொடுத்தால்அவன் இசுலாமாகிறேனென்று சொன்னதைப்பற்றி அந்தஆஜத்தைநிறைவேற்றிக்கொடுக்க தனக்குச்சக்தி யில்லாமல் பக்கீர்கோலங்கொண்ட கிஸ்ஸாவையும் ஆதியோடந்தமாகச்சொல்லி மூன்றாவதுஇவரோ மகாசாமர்த்தியமுடையவர் குராசானிதேசத்தைக் குற்றமிலாதாண்ட அப்துல்நவாசிபாத்துஷாமகன் சம்சதீன்பாத்துஷா இவரொருமங்கைபாலங்கம்வாடிஊருராயோடி தேடியுமகப்படாமல் பக்கீர்கோலங்கொண்ட கிஸ்ஸாவையும் ஆதியோடந்தமாகச் சொல்லி நான்காவதுஇவரோ திடவீரபராக்கிரமமுடையவர் குலுஸ்தானிநகரத்தைக் கோதிலாதாண்ட சக்பர்ஷையார் பாத்துஷாப்பிள்ளை அசன்பகுதாதிபாத்துஷா இவர்தனதுசிறிய தகப்பனுடைய அக்கிரமத்தால் ஊரைவிட்டு வெளிப்பட்டுதன்னைவளர்த்தகோசாவையும் தனதுநாயகியாகிய ஒருபெண்ணையுமிழந்து ஏங்கித்தவித்து யேக்கம்பிடித்து பக்கீர்கோலமாக கிஸ்ஸாவனைத்தும் கிரமமாய்சினராஜனுக்கு நானகுபக்கீர்களுடைய அஃவாக்களை மேன்மைப்படுத்தி றாம்பாத்துஷாசொல்லிப் பின்னுஞ் சொல்லுகிறார்.

இந்தநான்குதர்வேசுகளும்வந்து என்னோடுதோஸ்தியானார்கள் ஆகையாலிவர்கள்வந்த பறக்கத்தால் அல்லாசுவானுக்குத்தஆலா ஒருபுத்திரசிகாமணியாகிய பிள்ளையைக்கொடுத்தான் அந்தப்பிள்ளைக்குக தர்வேசுபாத்துஷாவென்றுபேர்வைத்து அதுபிறந்த மூன்றுநாள்காணமற்போய்விட்டது பின்புமூன்றுநாள்கழித்து நாலாநாள் எங்களிடமவந்துசேர்ந்தது இவ்விதமாய்நடந்துசிலநாட்சென்று ஒருமாதத்திற்கொருதரம் காணமற்போய்மூன்றுநாளிருந்து மறுபடியும் வந்துவிடுகிறது. இப்படியாக அந்தப்பிள்ளைபிறந்து ஒருவருடம்வரைகையிலும் யிவ்விதமாய்நடந்துவருவதால் நாங்களைந்துபேரும் ஆலோசனைசெய்து கட்டிலொன்றமைத்து அதிற்பிள்ளையைப்படுக்கவைத்து நாங்கள்சுற்றிப்படுத்திருந்து பொழுதுவிடிகிறநோத்தில் விழித்துப்பாற்கையில் உமதுபூந்தோட்டத்திலிருக்கிற பங்களாவுக்குள் நாங்கள்படுத்திருந்த கட்டிலின்மேலிருக்கவும் எங்களுக்குமத்தியிற்றொட்டிலிற்றூங்கினபிள்ளை யிவ்விதமாய்ப் போச்சுதென்று தெரியாமல் யோசித்திருக்கையில் தாங்கள் மந்திரிகளை யனுப்பி எங்களையுமது சமூகத்திற்கழைத்துவரும்படியா யுத்தரவுசெய்தீர்கள் அதுபோலநாங்களும்மிடத்திற்குவந்து சேர்ந்திருக்கிறோம் ஆகையாலிதுதான் நாங்கள்வந்தவிபரமென்றுஆசாத்பகுத் பாதுஷா சின்பாத்துஷாவைப்பார்த்துசொல்லி எனதுபுத்திர சிகாமணியைதாங்கள் தருவித்துக்கொடுக்க உங்கள்பேரிற் கடனாகவிருக்கிறதென்று சொல்ல சின்பாத்துஷாபுன்சிரிப்புகொண்டு இவர்களைவர்களையும் பார்த்துச்சொல்லுகிறார் கேளுங்கள்பாத்துஷாக்களுக்கெல்லாம் சக்கிரவர்த்தியாகிய பாத்துஷாசிரோமணியே மற்றும்தர்வேசுகளே உங்களதுவாக்களுடைய கிஸ்ஸாவைச்சொல்ல நான்கேட்டுத்தெரிந் திருப்பதா

ல் என்னுடைய ஆஜத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள் அதென்னவென்றால் அல்லாகுத்தஆலாவுடைய கிருபையினாலே பூர்னசந்திரனுதித்ததுபோல் எனக்கொருபெணகுழந்தை பாத்துஷாவுடைய ஆண்பிள்ளை பிறந்துமூன்றுநாள் பிறந்தது அந்தப்பெண்குழந்தைக்குத் தகுந்தமாப்பிள்ளை வேணுமென்றுசினகளையனுப்பி தேசங்களிற்போய் பாத்துவரும்படிசொன்னேன் அந்தச்சின்கமெளங்குந் தேடிக்காணாமல் குறுகக்ரமவந்து தங்களுடைய பிள்ளையைக்கண்டு தொட்டிலோடே யெடுத்துக்கொண்டுவந்தார்கள்.

அந்தக்குழந்தையின் பேரிலாசையாய் மூன்றுநாள் வைத்திருந்து நாலாநாள் பெற்றவர்களிடமனுப்பிவிட்டேன் இவ்விதமாக அங்குமிங்குமாய் குழந்தையிருந்து வளர்ந்துவருகிறது இப்பவுமெனது அந்தப்புரத்தில்தாதிகள் குழந்தையைவைத்துச் சீராட்டிக்கொண்டிருக்கிறார்கள் ஆனபடியாலநாம பிள்ளையுடையதகப்பனாக்கண்டு இதுபெண் இதுமாப்பிள்ளையென்று சம்பந்தங்கலந்து பேசவேண்டியிருப்பதால் தங்களைக்காணவேண்டுமென்கிற அபேட்சைஎனக்குமிகுதியாயிருந்தது அதற்குச்சரியாய் அல்லாசுவானுகுத்தஆலா ஒருவருடையநாட்டத்தைநிறைவேற்றிக்கொடுக்கும்படியான ரகிமானனபடியால் அவனுடைய கட்டளைப்படி தாங்களைவர்களும் குழந்தையும் ஒருதொட்டிலிற்படுத்திருக்கவெனக்குந்தெரியாமல் சினகளெடுத்துவந்து எனதுபங்களாவி லுங்களைவைத்துவிட்டு குழந்தையைக்கொண்டுவந்து கொடுத்தார்கள் அதன் கழுத்திலிருந்த காகிதத்தைவாசித்து சின்களைப்பார்த்து இந்தக்கடிதமெழுதியபேர் உங்களுக்குத்தெரியுமாவென்றுகேட்க அதுகள்சொன்னது எங்களுக்குத்தெரியும் அவர்களைப் பூவகாவனத்திலிருக்கும்பங்களாவிற்கொணடுவந்து வைத்தோமென்று சொன்னார்கள் அதுகேட்டுநானதிகமகிழ்ச்சியடைந்து வுங்களை வரும்படியா மந்திரிகளையனுப்ப தாங்களைவரும என்னிடத்திற்கு வந்திருக்கிறீர்கள் ஆகையால்நானெண்ணினபடி என்னுடையபுத்திரிக்கும் தங்களுடையபுத்திரற்கும நிகாகுமுடித்துக்கண்ணினாற் பார்க்கவேண்டியிருக்கிறதுஇப்போதுஉங்களுடையமனமெப்படி யிருக்கிறதென்று சின்பாத்துஷா றும்பாத்துஷாவைக் கேட்டார்.

அப்போது ஆஜாத்பகுத்பாத்துஷா அதிகசந்தோஷத்தோடுசின்பாத்துஷாவைப்பார்த்து தங்களுடையமனமெப்படியிருக்கிறதோ அதிலுமெண்மடங்கதிகமபெண்ணுககுப்பிள்ளைக்குங்கலியாணஞ்செய்து பார்க்கஆசையாயிருக்கிறதாகையால்தங்களையொருமனுக்கேட்கிறேன்அந்தமனுதங்களாலநிறைவேறுமேயொழியமற்றயெவர்களாலுமுடியாது அதென்னவென்றால்இந்தநான்குதர்வேசிகளில்சவுதாகருமமூன்றுபாத்துஷாக்களும்கொண்டஆஜத்தைமுன்னுதாகநிறைவேற்றிக்கொடுத்து அவரவர்களமநந்திருப்தியாகிசுகத்துடனேயிருக்கும்படிச்செய்துபின்னால்நானெண்ணியவண்ணமுடிக்கலாமென்று ஆஜதபகுத்பாதுஷா சின்பாதுஷா

வுக்குச்சொல்ல அவர் சம்பந்தியென்னும் சக்கிரவர்த்திசொல்லிய சொல்லுக்குமறுவுத்திரவுசொல்லக்கூடாதென்று அப்படியேஅவர்க ளாஜத்தைநிறைவேற்றிக்கொடுப்போமென்று உறுதிசொல்லிக்கொடுத்துஒருவருக்கொருவராட்டங்காமகிழ்ச்சிகொண்டிருந்தார்கள் அந்நேரத்தில் சின்பாத்துஷா சிம்மாதனத்தைவிட்டிறங்கிஇந்தஐவர்களையுமழைத்துக்கொண்டு அந்தப்புரத்திற்குச்சமீபத்திலிருக்கிற அலங்கார மாளிகைக்குள் அனேக மாதிரியானவிரிப்புகள் விரித்துச்சித்திர விநோதங்கள்செய்து நவரத்தினங்களைப் பதித்திருக்கிற விடத்திற்போய்உட்கார்ந்திருக்கையில் சிலஏவலாளான சின்கள் இன்னவிதாசக்கியமென்று சொல்லிமுடியாத ஓசிவனங்களும் பதார்த்தங்களும் திக்திப்புள்ள பலகாரவர்க்கங்களும் ஒருகாலங்களிலுங்கண்டு புசிக்காதகனிவர்க்கங்களும் விதவிதமாகிய சர்ப்பத்துகளுங்கொண்டுவந்து வைத்தார்கள்.

அப்போதறுவரும் ஓசிவனத்தையுண்டு பலகாரங்களைத் தின்று கனிவர்க்கங்களைப்புசித்துப் பசியாறித் தாம்பூலந்தரித்து களபகஸ்தூரிகள் பூசியிருக்கையில் அந்தப்புரத்திலிருக்கிற பாத்துஷாவுடைய பிள்ளை (தர்வேசுபாத்துஷாவையும்) சின்பாத்துஷாவுடைய பெண்குழந்தையையும் எடுத்துவரும்படியா யவர்களுத்திரவுசெய்ய அதுகளிரண்டையும் தாதிகளெடுத்துவந்து அறுவர்கையிலும் தனித்தனியாய்கொடுக்க அவர்கள்குழந்தைகளைப்பார்த்து ஒன்றுக்கொன்று அழகுசௌந்தரியத்திலும் ரூபலாவண்யத்திலும் ஏற்றக்குறைச்சலில்லாமலிருப்பதால் இவர்களனைவர்களும் பார்த்து அதிகசந்தோஷமாகி குழந்தைகளிரண்டுமிவ்விடத்திலேயேயிருக்கட்டுமென்று ரும்பாத்துஷாசொல்ல சின்பாத்துஷாசம்மதித்திருக்கையில் ரும்நகரத்திலுள்ள மந்திரிகளுக்கெல்லா முதன்மந்திரியாகிய கிர்துமந்துக்கு இவ்விடத்தில்நடந்த சவிஸ்தாரமும் குழந்தையிருக்கிற விபரத்தையும் ஒருநிருபமெழுதி சின்பாத்துஷாவுடைய உத்திரவால் ஒருசின் வசத்திற்கொடுத்தனுப்பஅது ஒரு நிமிஷத்திற்குள் ரும்நகரம்போய் கிர்துமந்துவென்னு மந்திரிகையிற்கொடுத்து அதிவிரைவாயி லிவ்விடம்வந்துவிட அதுசேதிகளனைத்துங் கிர்துமந்தரிந்து அந்தப்புரத்துக்கும் மற்றுமயாவருக்குந் தெரியப்படுத்தயெல்லோர்களுங்கேட்டு மிக்கசந்தோஷத்துடன் இருந்தார்கள்.

முதலாவது ஆஜாத்பகுத்பாத்துஷாவுடைய

ஆஜத்துநிறைவேறிய கிஸ்ஸா முற்றிற்று.

## முதலாவது பக்கீராகிய முகம்மதுகவுது சவுதாகருடைய ஆஜத்துநிறைவேறியகிஸ்ஸா.

---

அவர்களப்படியிருக்க இவ்விடத்தில் ஆஜாத்பகுத் பாத்துஷாவும் சின்பாத்துஷாவும் நான்குபக்கீர்களுமெழுந்து சின்பாத்துஷாராஜரீகஞ் செய்கிற தகத்திற்போயுட்கார்ந்து தமதுமந்திரிபிரதானிகள்சுத்தவீரர்கள் முதலியவர்களும் புடைசூழஎச்சரிக்கையுட னிருக்கும்போது மிகுந்தபராக்கிரமமுடைய ஒருசின்னையழைத்து முதலாவது முகம்மதுபக்கீராகிய கவுது சவுதாகரை இந்தச்சின்வசத்திலொப்பித்து இவரையெடுத்துக்கொண்டு யிவரது நாயகியை யெவரேதப்பிவிட்டுவிட்டாரோ அந்தயிடத்திற் கொண்டுபோய் அவளைகொண்டுபோன மார்க்கமாய்த் தேடி அந்தப்பெண்ணைக்கண்டுபிடித்து யிவருக்குக்காட்டி இவருடைய நாயகியாயிருந்தால் அவளையெடுத்துப்போனவர்கள் யாராயிருந்தாலும்சரி அவர்களையும் அந்தப்பெண்ணையுமழைத்துக்கொண்டு நீங்களிருவருமாயிவ்விடமவந்து சேரவேண்டியதென்று கண்டிப்பான கடிதமொன்றெழுதிபெண்ணை யெடுத்துப்போனவர்களுக்குக் கொடுக்கும்படியாய்க்கொடுத்து இருவரையுமனுப்ப அந்தட்சணமே அந்தச்சவுதாகரை சின்னெடுத்துக்கொண்டு ஆகாயமார்க்கமாய்ப் போய் தேசங்களையெல்லாஞ்சுற்றிக் காண்பித்துக்கொண்டு போகையில் சவுதாகர்சின்னைப்பார்த்து இந்தவிடத்திற்றான் எங்நாயகி தப்பிப்போய்விட்டாளென்று சொல்ல அதற்குநேராயிறங்கி அவள்குதிரையோடே நின்றமரத்தினிழலிற்போயிருந்து அவள்போனமார்க்கத்தைச் சின்யோசித்துப் பார்த்து அந்தவழிதனக்குத்தெரிந்து சவுதாகரைத் தூக்கிக்கொண்டு அவள்போனவழியாகவேபோய் ஏழுசப்தசமுத்திரங்களையும் அனேகதீவுதீவாந்தரங்களையுங்கடந்து மங்குலாவியசாலைசோலைகளமுதலிய வளமைபொருந்திய பூங்காவனங்கள்சூழ்ந்த மல்லிகாபுரமென்கிற நகரமொன் றிருக்கிறது அந்தநகரத்துக்குநேராய்வரும்போது அதற்குச்சமீபத்தி லிரண்டு மூன்று நாழிகைவழிக் கப்புறத்தில் குளிர்ந்தநிழற்பொருந்தியமரங்கள் சூழ்ந்தவனமொன்றிருந்தது அதினடுவில் ஏழுதிக்குப்பரிகையொன்றுகண்ணுக்குப்பார்க்க அழகாயிருந்தது அந்தவுப்பரிகைமேல் அந்தச்சவுதாகருடைய நாயகியானவள் குளித்துமுழுகி மயிராற்றிக் கொண்டிருக்கிறாள்.

அதைக்கண்டுசின்சவுதாகரைப்பார்த்து உமதுநாயகியிவள்தானோவென்றுகேழ்க்க அப்போதவர் அவளைப்பார்க்கையில்தனதுநாயகிபோல்தோற்றியதால் இவளெனாயகியல்லாமல்வேறொருத்தியுமல்லவென்றுமிகவுமாவலுடனேசவுதாகர்சொல்லிவாயமூடுவதற்குள்ளே அந்தச்சின் அவளெதிரிலிருவருந்நிற்க அப்போதுமுகம்மதுகவுதுஎன்னும் சவுதாகர்

ஆசைவெட்கமறியாதென்னும் பழமொழிபோல் தன்னைவிட்டுபிரிந்தநாயகி தன்னெதிரிற்கண்டவுடனே அவளைபோய்கட்டி தழுவுதற்குநெருங்கிபோகிறபோதந்தப்பெண்ணானவள் நம்மைக்கண்டு அச்சபடாவிட்டாலும் நம்மைக்கொண்டுவந்த சேவுகளுக்கெல்லாம் ராஜனாயிருக்கிறவனுக்காவதுபயப்படாமல்நமது கிட்டேஅஞ்சாநெஞ்சமடைந்து வரவேண்டியதென்னவென்றுகொஞ்சமிடைந்தாள் அப்போதுசவுதாகர் பெண்ணைபார்த்துகேளும்பெண்கள் சிரோமணியேஉன்னைக்குத்திபெட்டியில்வைத்துகோட்டைக்குவெளியேபோட்டுவிடநா னெடுத்துக்கொண்டுபோய்காப்பாற்றிச் சவுதாகனைக்கொலைசெய்யும்படியாய் விருந்துக்கழைத்துவந்து பின்புஉன்னை நிக்காகுசெய்து நீயுநானுமென்னூருக்குப்போகிறபோது என்குதிரையையும் உன்னையும் ஒருமரத்தினிழலில் நிறுத்தி விட்டுநான் சலபாதைக்குப்போய்வந் துன்னைப்பார்க்கையிலநீகாணாமற்போனதால் நானனேகந் துன்பப்பட்டு உன்னாலே பக்கீர்கோலங்கொண்டு ஆசாத்பகுத்பாத்துஷாவிடத்திற்போய் இரண்டாவது சின்பாததுஷாவிடத்தில்வந்து அவராலுன்னையும்உன்னைஎடுத்துவந்தபேனையும்அழைத்துக்கொண்டுபோக இதோநிற்கிறசின்னை யனுப்பிவிட்டிருக்கிறார்.

ஆகையால்நானுனது ஆசைநாயகனல்லவாவென்று சவுதாகர் சொன்னவுடனே அந்தப்பெண்ணானவள் இவனைதழுப்பிவிட்டு இத்தனைநாள்வரையிலும் தன்னாயகனைஎப்போதுகாணுவோ மென்கிற விசாரத்தோடிருந்தவளானபடியால் திடுமென்று சவுதாகருடைய காலில்விழுந்தெழுந்து விம்மிவிம்மியழுதுகட்டித்தழுவிநிற்கையில் அந்தசின்னானதெழுந்து சேவுகளுக்கெல்லாம் ராஜனிடத்திற்போய்விட்டதுஇவள் நாயகனைததழுவினபடியால் உப்பரிகைவிட்டுக் கீழிறங்கி ஓரறையிற்போட்டிருக்கிற சப்ரமஞ்சக்கட்டிலிலிருக்கவைத்துதானுமிருக்கையில் அவளுக்கேவற்பணிவிடைசெய்யும்படியானவேருபெண்களாகிய தாதிகள் இவர்களைச்சுற்றிநின்றுகொண்டு அவர்களொன்றுக்கொன்று இரகசியமாய்ப்பேசிக்கொள்ளுகிறார்கள்.

அதென்னவென்றால் இந்தப்பெண்ணானவளை நமதுராஜன்கொண்டுவந்துவைத்து நம்மையெல்லாமிவளுக்குப் பணிவிடைசெய்து காத்திருக்கும்படியா வைத்திருக்கிறார் அவரெப்போதாவது ஒருவேளையிங்கேவந்தாரானால் இவளோடிப்போய் ஒருஅறையிலொளிந்துக் கொள்ளுகிறவள் நாமனைவரும்பார்த்துக்கொண்டிருக்கிறோமென்கிறஅச்சமில்லாமல் மானிடஜன்மமாய்ப்பிறந்த ஒருமனிதனைத் தன்னருகில்வைத்துப்பேசிக்கொண்டிருக்கிறாளே இதுசேதிநம்மிட அரசனுக்குத தெரிந்தால் நமக்கென்ன தண்டனைகிடைக்குமோ அப்படியவருக்குத்தெரியுமுன்னே நாமபோய்த்தெரியப்படுத்தவேணுமென்றுபேசிகொண்டிருக்கையில்அந்தச்சவுதாகரானவர் தன்னாயகியைப்பார்த்துகேளும்பெண்கள் சிரோமணியே உன்னையந்தமரத்தினிழலில்நிறுத்திவிட்டுநான் ஜலபாதைக்குப்போய்வருவதற்குள்ளாக நீயெவ்விதமாய்இவ்விடமவந்துசேர்ந்தாயென றுகேட்க அவள் தன்னாயகனைப்பார்த்துக்கேளுங்கள் எனது அன்புக்கும்

இன்பதுன்பத்துக்கும் நேசம்பொருந்திய ஆசைநாயகரே தாங்களென்
னைவிட்டுச்சலவானதைக்காகப் பிரிந்தவுடனே இந்தத்தீவாந்தரத்திலிருக்
கும்தேவுகளுக்கெல்லாம் ராஜனானவன் சிலதேவுகளுடனே அந்தரமா
ர்க்கமாய்வந்து என்னையும்இரண்டுகுதிரைகளையும்இந்தஉப்பரிகையிற்
கொண்டுவந்துவைத்து என்கிட்டநெருங்குவதற்காக வந்தான் அப்போ
தவனைப்பார்த்து நான்பனிரண்டுவருடத்திற்குநோன்பிருப்பதால ஆ
ண்சாதியாயிருக்கிறபேர்கள் என்கிட்டேவரக்கூடாதென்றுசொன்னே
ன் அதற்கவன் சிலதேவுப்பெண்களை உண்பனதின்பனமுதலியனவர்ப்
பணிவிடைகளைச்செய்துக் காத்திருக்கும்படியாய்த் திட்டப்படுத்திமா
தத்திற்கொருதரமிங்கேவருகிறது அவன்வருகிற ஆபாரத்தைக்கண்டு
இந்தஅறைகளிற் போயொளித்துக்கொள்ளுகிறது அவன்வந்துஇந்தத்
தேவுப்பெண்களை விசாரித்துக்கொண்டுபோய்விடுகிறது இவ்விதமாக
அவன்கொண்டுவந்தநாள்முதல் இதுவரையிலும் எனக்கிராப்பகலாயுற
க்கமில்லாமலிருந்து அல்லாகுசுபுகானகுத்த ஆலாவைக்கெஞ்சித்துவா
க்கேட்டு எனதுநாயகனைக்கொண்டுவந்து என்னிடஞ் சேர்க்கவேண்டு
மென்று கவனமாகவேயிருந்தேனுகையாலென்னெண்ணம்போலேஉம்
மைக்கொண்டுவந்து சேர்த்தானென்று அவர்களுடைய அகவாக்களை
யொருவருக்கொருவர்பேசிக்கொண்டிருக்கையில் சவுதாகனைக்கொண்
டுவந்த ஜின்தேவுகளுக்கெல்லாமிராஜனிடத்திற்போய் ஜின்பாத்துஷா
கொடுத்தகடிதத்தை யவன்கையிற்கொடுக்க அந்தகடிதத்தைக்கண்டவு
டனேபயங்கரமுண்டாகி நடுநடுங்கியென்னமோ யேதோவென்று சந்
தேகத்தோடு அந்தக்கடிதத்தைவாங்கி வாசித்துப்பார்த்து உடனேத
னக்குப்பணிவிடைசெய்கிற சிலதேவுகளையழைத்துக்கொண்டு இந்தப்
பெண்ணிருக்கிற உப்பரிகைக்குவந்து ஒருபெண்தேவைவிட்டு அந்தப்
பெண்ணை யெடுத்துக்கொள்ளச்சொல்லி இந்தச்ஜின்சவுதாகனைத் தூக
கிக்கொண்டுதேவுராசனும் அவனைச்சேர்ந்ததேவுகளும்யாவர்களும் ஆ
காயமார்க்கமாய்கிளம்பி ஒருசாமநேரத்துக்குள்ளாகத் ஜின்பாத்துஷா
உடையநகரத்திற்குநேராயிறங்கி நகரத்திற்குள்ளேபோய் ஜின்பாத்து
ஷாவும் றூம்பாத்துஷாவுமிருக்கிறதகத்திற்கெதிரில்நின்றுதேவுராஜன
வர்களிருக்கும் சாஷ்டாங்கமாகப்பூமியில்விழுந்து தெண்டஞ்சமர்ப்பி
த்தெழுந்து வாய்பொத்திக்கைகட்டிமிகவும் பணிவுதலாய்நின்றான் அ
ப்போதுமுகம்மது கவ்துஎன்னுஞ் சவ்தாகர்பாத்துஷா யிருவருக்கும்
மற்றும் பக்கீர்களுக்கும் தசலிம்முதலியமரியாதைசெய்து அதபுடனே
யுட்காந்தார் இவனைக்கூட்டிக்கொண்டுபோய்வந்தஜின்தனது பாத்து

ஷாவுக்குமிகவுமரியாதைசெய்து தானிருக்குமிடத்திற் போய்விட்டது சவ்தாகருடையமனைவியை எடுத்துக்கொண்டுபோன தேவுப்பெண்கள்கூடியிருக்கிறசபைக்குக் கொஞ்சந்தூரத்திலிருந்தார்கள் அப்போது சின்பாத்துஷா சிலதாதிகளைவரவழைத்து சவ்தாகருடைய மனைவியை யந்தப்புரத்துக்கனுப்பிவிட்டு இந்தத்தேவுராஜனைப்பார்த்துநீயொருவருடையபொருளாகிய மனைவியையெவ்விதமாய்க்கொண்டுபோகலாம் அப்படிக்கொண்டுபோனதற்குத்தகுந்த ஆக்கினைசெய்யும்படியான உக்குமிருக்கிறது நீசுலும்செய்யாமல் என்சமுகத்திற்குஅந்தப்பெண்ணையாதாமொருவருத்தப்படுத்தாமல் என்னுத்தரவுக்குத்தப்பி நடவாமற்கொண்டுவந்துவிட்டபடியால் நாமன்னித்திருக்கிறோம்இனிமேலிப்பேர்ப்பட்டவேலைகள் செய்வையேயானால் அதற்குத்தக்கஆக்கினைகிடைக்குமென்றுசொல்லி அவனுக்குத்தகுந்த இனங்கொடுத்து அவனிருக்குந்தீவாந்தரம் போகும்படியாய் சின்பாத்துஷாஉத்திரவுகொடுக்கத் தேவராசன்விடைபெற்றுக்கொண்டு தன்னுடன் கூடவந்ததேவுகளோடுகாத்தைவிட்டுப் பிரயாணப்பட்டுக் ககனமார்க்கமாயெழும்பி அவனுடையதீவாந்தரத்தைப் போய்ச்சேர்ந்தார்கள் ஆகையால்முதலாவதுமுகம்மதுகவ்துஎன்னும் சவ்தாகருடைய ஆஜத்துநிறைவேறி அவர்மனைவியுந்தானும் சின்பாத்துஷா உடைய அரண்மனையிலிருக்கும் ஓர்மெத்தையிலிருக்கும்படிச்செயய அவர்களிருவரும் கூடிக் குலாவியிருந்தார்கள்.

முதலாவது முகம்மது கவ்து சவ்தாகருடைய

ஆஜத்துநிறைவேறிய கிஸ்ஸாமுற்றிற்று.

———(*)———

இரண்டாவது பக்கீராகிய

அக்பர்பாத்துஷாஉடையஆஜத்துநிறைவேறியகிஸ்ஸா

—()—(*)—()—

இவர்களிப்படியிருக்கச் சின்பாத்துஷாவானவர் இரண்டு பலசாலிகளாகியசின்கனையழைத்து இரண்டாவதுபக்கீராகிய அக்பர் பாத்துஷாவையிவர்கள்வசமொப்பித்து இவரைநீங்களழைத்துக்கொண்டு நீம்ரோஸ்பட்டணம்போய் காயிசவாரென்னும் ஜகன்மோகன ரூசனைக்கண்டு அவனையுமழைத்துககொண்டு நீங்கள்நாலுபேருமாக அந்தராஜன்சோறியபெண்ணிருக்கிறவிடத்திற்குப்போய் அவளைக்கண்டுஅவள்தகப்பனிடத்தில் நான்கொடுக்கிற திருபத்தைக்கொடுத்து அதனுத்திரவி

ன்பேரில்அந்தப்பெண்ணையும் உங்கள்கூட அழைத்துக்கொண்டு இங்கே வந்துசேருங்களென்றுசொல்லி ஒருகடிதமெழுதிசின்கள்கையிற் கொடுத்துச் சின்பாத்துஷாவும் ஆசாத்பகுத்பாத்துஷாவும் இவர்களையனுப்பிவிட அக்பர்பாத்துஷாவை ஒருசின் தூக்கிக்கொண்டு கேசரிமார்க்கமாய்ப்பறந்து ஒருநிமிஷநேரத்தில் நீபரேரேஸ் பட்டணம்போய்ச்சேர்ந்துராசகுமாரனாகிய ஜகனமோகனராசனைக்கண்டு மூவர்களுமிறங்கி அவன்சமுகத்தில்நின்றார்கள் அப்போதுஜகன்மோகனன் அக்பர்பாத்துஷாவைப் பார்த்தவுடனே தனது ஆஜத்தைநிறைவேற்றிக்கொடுக்கிறோமென்று வாக்குதத்தஞ்செய்துப்போன சினேகரல்லவாவென்று மிகவுமாவலாயெழுந்துவந்தனமுதலிய வழிபாடுசெய்துக்கட்டித் தழுவிக்கடாலிங்கனஞ்செய்துநிற்கையில் இந்தச்சின்களானது ராசகுமாரனைப் பார்த்துநீகோரியபெண்ணிருக்கிறவிடம் இன்னவிடமென்றுதெரியுமாவென்றுகேட்க இராசன்சொல்லுகிறான்.

நான்கோரினபெண்ணனவள் இருக்குமிடமானது சரந்தீவில்பரிகுலத்திராசனுடையகுமாரத்தி பரிப்பெண்ணென்றுசொன்னான் அப்போதந்தச்சின்களிரண்டும் அக்பர்பாத்துஷாவையும் ஜகன்மோகனராசனையும்ஆளுக்கொருவராயெடுத்துக்கொண்டு அதிகசாக்கிரதையாயெழும்பிக் ககனமார்க்கமாய்ப்பறந்து அந்தத்தீவிற்குநேராய்ப்போய் அந்தப்பட்டணமுழுமையும்பெண்ணிருக்கிறவிடத்தைப்பார்த்திறங்கவேண்டுமென்றுஇரண்டுசின்களும் யோசித்துப்பார்க்கையில் அந்தப்பரிப்பெண்ணனவள்அனேகம்பரிக்கூட்டங்களுடனே அந்நகரத்துக்கு வெளியில்காதவழிக்கப்புறமிருக்கும் மைதானத்தினடுவில் விஸ்தீரணமான அனேகவிதமாகிய புஷ்பங்கள்புஷ்பித்திருக்கும்படியான செடிகளும் கனிவர்க்கங்களைச்சொரிகின்ற நானாவிதமரங்களும்நெருங்கியிராநின்ற பூந்தோட்டத்தின்மத்தியில் ஆயிரத்தெட்டுமாற்று பொருந்தியதங்கத்தகட்டுகளாற் படித்துறைகட்டியதெப்பக்குளமொன்றிருக்கிறது அதற்கருகில் அலங்காரமெத்தையொன்றிருக்கிறது அந்தக்குளத்தில்அந்தப்பரிப்பெண்ணும் அவளைச்சார்ந்ததோழிகள்என்னும் பரிப்பெண்களும்ஸ்நானஞ்செய்துப் பூங்காவனத்திற்புஷ்பங்கள்பரித்துக்கொண்டுஅலங்காரமெத்தையின்மேற்போய்யாவர்களுமிருந்துஅவரவர்கள்அளகாகிரத்தைச் சீவிசிக்கறுத்துப் புஷ்பங்களைச்சூட்டிக்கொண்டிருக்கிற தருணத்தில் இந்தச்சின்கள் அந்தரமார்க்கமாய்வருகையில் பெண்களிருக்கப்றஒய்யாரகதைக்கண்டுஇந்தச்சகன்மோகனராசனைப்பார்த்துக்கேளும்ராசனே நீகோரியபெண் இந்தப்வுப்பரிகைக்குமேலனேகந்தாரகணங்கள்போலுள்ள பெண்களிருக்கிறநடுவில் பூர்ணசந்திரனுதயமானதுபோலொருபெண்ணிருக்கிறாளே அவளோ அல்லவோபாருமென்றுசின்கள்சொல்லஇவன்பெண்களைப்பார்த்து நடுவிலிருக்கிறபெண் தன்னை யோசஞ்செய்துக் காணமற் போய்விட்டவளென்று தீர்மானித்துச்

சொல்லுகிறான் கேளுங்கள் சின்களே அதோ நடுவிலிருக்கிற சீமாட்டி தான் என்னைக்காமாட்டியாக்கிப் பயித்தியங்கொள்ளச்செய்து வெகுபேர்களை வதைசெய்யும்படியான கோலமுஞ்செய்துவிட்டுவந்தவள் இவள் தானென்றுஜகன்மோகனராஜன்சொல்ல அதுகேட்டு சின்களிரண்டும் நகரத்தைப்பார்க்கத்திரும்பிக் கேசரிமார்க்கமாகப்போய் அந்நகரத்தை யாளும்பரிகுலராசனிருக்கும் சிம்மாதனத்தின்சமீபத்திலிறங்கி இந்த அக்பர்பாத்துஷாவையும் ஜகன்மோகனராஜனையும் அந்தப்பரிராசனுக்கெதிரில் நிறுத்தி ராசனுக்குச்செய்யவேண்டிய மரியாதைகளைச்செய்து தங்களெசமானாகிய மலிக்காசக்பர்பாத்துஷா கொடுத்தநிருபத்தையும் பரிராசன் கையிற்கொடுத்து இவர்களிரண்டுபேர்களுடைய ஆஜத்தையும் ஆதியோடந்தமாகச்சொல்லி சின்களிரண்டும் நின்றுகொண்டிருந்தது.

அப்போது பரிகுலத்தரசன் சின்கள்சொல்லிய சங்கதிகளையெல்லாம் சாங்கோபாங்கமாகக்கேட்டு இவர்களுக்குச்செல்லாப்பெரிய பாத்துஷாவாகிய சின்பாத்துஷா அனுப்பியநிருபத்தைக்கண்ணிலொத்திக்கொண்டு முத்திரையையுடைத்துக் கடிதத்தைப்பிரித்து வாசித்துப்பார்த்து சற்றுநேரம்யோசனைசெய்து இவர்களநால்வருக்கும் உபசாரத்துடனே மரியாதைசெய்து நாலுநாற்காலிபோட்டு அதன்மேலுட்காரச்சொல்லி அறுசுவைபதார்த்தங்களுடனே ஜீவனங்கொடுத்து தன்குமாரத்தினிடத்தில் ஒருபரியையனுப்பி அவளைச்சேர்ந்தசாதிகள்தோழிகள் ஆடல்பாடல்கள்முதலிய ஏவற்பெண்களுடனே இவள்முன்னேறிப்போன ரதத்திலேறிக்கொண்டுவரும்படியாயனுப்ப அதுபோலவே சகலபுஸ்திப்புடனே ரதத்தைச்சோடித்துஇவர்களணியும்படியான ஆடையாபரணங்களை யணிந்துகொண்டு ரதத்தின்மீதேறி அவளதகப்பனாகிய பரிராசன் அதிகாரஞ்செலுத்தும்படியான கச்சேரிமண்டபத்துக்கெதிரில்வந்து ரதத்தைநிறுத்தினார்கள்.

அப்போதவள்தகப்பன் ஒருநடிகத்தில் சின்பாத்துஷாவுக்குமிகுந்தவந்தனை வழிபாடுமுதலிய தாழ்மையுடனே தன்குமாரத்தியையனுப்பியசங்கதியைவிபரமாகவெழுதிசின்கள்கையிற்கொடுத்து இவர்கள் நாலுபேரையும் ரதத்திலேறும்படிச்செய்துசாவர்களுக்கும்பரிராஜன் விடைகொடுத்தனுப்பஇவர்கள்பரிராசனிடத்தில்உத்தரவுபெற்றுக்கொண்டு ஆகாசமார்க்கத்தில்ரதத்தைநடத்தி அதிஜக்கிறதையாய்வேகத்தோடு போய்மலிக்காசக்பர் பாத்துஷாவும்ராம்பாத்துஷாவுமிருக்கிற தக்திற்குமுன்பாக ரதத்தைநிறுத்திசின்களிரண்டும் இரண்டாவது தர்வேசாகிய அக்பர்பாத்துஷாவும் காயிசவாறென்னும் ஜகன்மோகனராசனும் ரதத்தைவிட்டுக்கீழிறங்கி பாத்துஷாக்களிருவருக்கும் தசலிமுதலிய

வந்தனஞ்செய்துநிற்கும்போது அக்பர்பாத்துஷாரும்பாத்துஷாவையும்சின்பாத்துஷாவையுந்தழுவிப் போய்வந்தகாரியங்களையெல்லாம்சவிஸ்தாரமாகச்சொல்லி மற்றமூன்றுபக்கீர்களையுந்தழுவி அவர்களோடுதகந்திலிருந்தார்.

அந்தச்சமயத்தில்சிங்களிரண்டும்பரிருசன் கொடுத்தகாகிதத்தை சின்பாதுஷாவிடத்திற்கொடுத்துவிட்டுத் தனனிருப்பிடம்போய்ச்சேர்ந்தார்கள் அப்போதுசின்பாத்துஷா காகிதத்தையுமெடுத்துப் பார்த்துப் பேருவந்தங்கொண்டுநிற்கிற ஜகன்மோகனருசனைப்பார்த்து இப்போதுநீகோரியபெண்வந்திருப்பதால் உன்னுடைய ஆஜத்துநிறைவேறுதற்குக்குறைவில்லாமலிருப்பதால் நீ எங்களுடையமார்க்கத்தில் ஈமான்கொண்டுஇசுலாத்தில் வருகிறதாய்அக்பர்பாத்துஷாஉடனேசொல்லியிருந்தாயல்லவா அதுபோல்இசுலாமாவாயானால்எங்கள் மார்க்கமுறைப்படி அந்தப்பெண்ணையுனக்குநிக்காகுசெய்துக்கொடுத்துஉன்தேசத்திற்கு அனுப்பிவைக்கிறோம் நீயிவ்விடம்போய் அங்கிருக்கும்பேர்களையெல்லாம் இசுலாத்துக்குள்ளாக்கி உன்னைச்சேர்ந்த தேசங்களையெல்லாம்அரசுசெலுத்திவாழ்ந்துசுகத்துடனிருக்கலாம்இப்போதுநான்சொல்லிவந்தகன்மார்க்கத்துக்கு நீயென்னசொல்லுகிறாயென்று மலிக்காசக்பர்பாத்துஷாசொல்ல உடனே அந்தஜகன்மோகனருசன்இவர்கள்சொன்னதையெல்லாம் ஒப்புக்கொண்டு லாயிலாகயிலல்லாகுமுகம்மதிற்றசூலுல்லாகியென்னும் கலிமாவைசொல்லி ஈமான்கொண்டு இசுலாமானார் அப்போதுபாத்துஷாக்களிருவரும் தர்வேசுகள்நால்வரும் அதிகமகிழ்வடைந்துஇவரையவர்களருகிலுட்காரவைத்துஇசுலாத்தில்வந்தருசனுக்கு(காசாமுகம்மதுசுல்த்தானென்று) பெயர்கொடுத்துப் பின்புஅந்தப்புறத்திலுள்ள சிலதாதிகளையழைத்து அந்தரதத்தில்வந்திருக்கிற பரிருசனுடையகுமாரத்திக்கும் அவளோடுகூடவந்த பரிப்பெண்களுக்கும்கலிமாச்சொல்லிக்கொடுத்து அந்தப்புரத்துக் கழைத்துக்கொண்டுபோகும்படியாய் சின்பாத்துஷாசொல்ல தாதிகள்ரதத்தின்மேலேறிருஜகுமாரத்திக்கும் மற்றப்பரிப்பெண்களுக்கும்கலிமாச்சொல்லிக்கொடுத்து அவளையும் இசுலாத்திலாக்கிரகத்தோடெழுப்பி அந்தப்புரத்துக்குச்சமீபத்திற்போயிறங்கி இயாவர்களும் அந்தப்புரத்திற்குட் போய்ச்சேர்ந்தார்கள்.

அப்போதுமலிக்காசக்பர்பாத்துஷாவும்ஆசாத்பகுத்பாத்துஷாவும்நான்குபக்கீர்களும்ஈமான்கொண்டு இசுலாத்தில்வந்தகாசாமுகம்மதுசுல்த்தானென்பவருமெழுந்து அந்தப்புரத்துக்கருகிலிருக்கும் அலங்காரமாளிகைக்குட்போய்போசனமுதலியவைகளை அறுவகைப்பதார்த்தத்துடனேஉண்டுபசியாறிதாம்பூலமருந்தி அந்நேரமேகாஜாமுகம்மதுசுல்த்தானென்பவரும்பரிருஜனுடைய குமாரத்தியாகியபரிப்பெண்ணுக்கும்கலியாணத்துக்கும் நடக்கும்படியானசகல ஆடம்பரத்துடனேநிக்

காருசெய்துதாலிகட்டி ஒருவர்க்கொருவர் கைப்பிடித்துக்கொண்டுசுப
சோபத்துடனேயிருந்து அன்றையபொழுதுபோய்மறுநாள்மாப்பிள்ளையு
ம்பெண்ணையும பெண்ணுடன்வந்த பரிப்பெண்களையும் ரதத்தின்மே
லேற்றிமாப்பிள்ளையின்தேசமாகிய நீம்ரோஸ்பட்டணத்திற்குப்போகும்ப
டியாய்பாத்துஷாயிருவர்களும் நான்குதர்வேசுகளும் வாழ்த்திவிடை
கொடுத்துஅவர்களையனுப்ப காசாமுகம்மதுசுல்த்தானென்பவர்பாத்து
ஷாமுதல்யயாவருக்கும் மிகுந்தவணக்கத்துடனே தசுலீம்செய்துஅவர்
களிடத்திலுத்திரவுபெறறுககொண்டு ரதத்தன்மீதேறிஆகாசத்திற்கிள
ம்பிஒருநிமிஷநேரத்திற்குள்ளாக நீம்ரோஸ்பட்டணத்திற்குப்போய்ஊ
ர்கோலம்வந்துபரிகுலப்பெண்களை தாம்எருமைமாடுகட்டியிருக்கிர மா
ளிகையென்னும்அரண்மனையில்வைத்து அந்தஎருமைமாட்டையந்திர
ங்களைச்சொல்லிதான்செய்திருந்த திக்குபந்தனங்களைவிடுவித்துவிடஅ
வ்வெருமைமாடுபழையபடியே பரிப்பெண்ணாகி தன்னெசமானியாகிய
இராஜகுமாரத்தியின்சமீபத்திற்போய் கைகட்டிநின்று கேளும்மாதுசி
ரோமணியேஉமதுநாயகர்என்னைச்செய்தஅக்கிரமத்தினால் நான்பலவி
தகஸ்தியடைந்திருந்தேனென்றுசொல்ல ராசகுமாரத்திஅவளுக்குமிகு
ந்தஉடசாரமான வார்த்தைகளைச்சொல்லி மேன்மையாக வைத்துகொ
ண்டிருந்தாள்.

அந்தச்சமயத்தில் காசாமுகம்மதுசுல்த்தானென்பவர் தம்முடை
யதகப்பன்அக்கம்பக்கம் மந்திரிகள்முதலியயாவரையுங்கண்டு மகிழ்ச்சிய
டைந்துதன்தகப்பனாகிய கோசலராசன்பெரியவயதாயிருப்பதால்அவ
ர்பட்டத்தைத்தானகட்டிக்கொண்டு முதலாவதுதாய்தகப்பனை இசுலா
க்கிபின்புமற்றமந்திரிகள்முதலிய குடிபடைமுதலானவர்களையும் ஒரே
மார்க்கமாககலிமாவென்னும உபதேசத்தைச்சொல்லிக்கொடுத்து இசு
லாமாக்கிகோயில்முதலிய ஆலயங்களெல்லாமிடித்துப் பள்ளிக்கட்டிஇ
யாவர்களையும் தொழுகைநோன்புசக்காத்துஅசசுமுதலியவைகளைஷ
ரகின்படிநடத்திவரச்செய்து தன்னைச்சேர்ந்ததேசதேசங்களுக்கெல்லா
ம்திருபமெழுதி அங்கக்குள்ளராஜாக்களையும் குடிபடைகளையும்இசுலா
மாகும்படிச்செய்து தனதுநாயகியாகிய பரிகுலப்பெண்ணிருக்கிரமாளி
கையைச்சுற்றி மிகுந்தவினோத விசித்திரம்பொருந்திய மேன்மாடகூட
உப்பரிகைகள்கட்டி அவைகளைச்சுற்றி ஏழுமதில்வளைத்து அதற்கேழு
வாசற்படிகள்வைத்து வாசல்கள்தோரும் அனேகம்சிப்பாய்களையும்வீர
சூரர்களையுங்காவல்வைத்து தன்னுக்கினுச்சக்கரத்துடனேராஜரீகஞ்செ
லுத்திதனதுநாயகராகிய பரிகுலப்பெண்ணும் தாயுந்தகப்பனும்மந்திரி
பிரதானிகுடிபடைகளியாவருடன் சுகபோசமாககாசாமகம்மதுசுல்த்தா
னென்பவர்ஆஜத்தைநிறைவேற்றி ஓர்குறைவுமில்லாமல்மங்களகரமா
ய்நீம்ரோஸ்பட்டணத்தை யாண்டுக்கொண்டிருக்கிறார்.

பின்புமலிக்காசக்பர் பாத்துஷாவானவர்இரண்டாவதுபக்கிறாகிய
அக்பர்பாத்துஷாவைப்பார்த்து இனியுமதுகருத்தென்னவென்றுசேழ்

க்கஅப்போது அக்பர்பாத்துஷாசொல்லுகிறார் கேளுங்கள் தேவுபரி கின்குலத்து பாத்துஷாக்களுக்கெல்லாம் பாத்துஷாவாகிய அயறநாய கரோ இனியென்னுடைய ஆஜத்துநிறைவேறும்படியான தென்னவென் றால்தாங்களும் எனதுதோஸ்திபாகிய ஆசாத்பகுத்பாத்துஷாவும்உங் களிருவர்களையும்விட எனக்குதவிசெய்பவர்கள்வேறேயாரிருக்கிறார்க ள்ஆகையாலுங்களுடைய மனமெப்படியிருக்கிறதோஅதுபோலேநான் நடந்துகொள்ளக் காத்திருக்கிறேனென்றுசொல்ல பாத்துஷாயிருவரு ம்யோசித்து ஒருமுகமாய்சின்பாத்துஷாவானவர் மிகுந்தவணக்கவொ ழுக்கமுள்ள ஒருஆண்சின்னையும் பெண்சின்னையுமழைத்து நீங்கள்அ க்பர்பாத்துஷாவையெடுத்துக்கொண்டு அவருஜத்துநிறைவேறும்படி யானசஜாதிஎன்கிற பெண்ணிருக்கிற புதுநகரம்போய் அந்தப்பெண் ணையுமிவனையும் நீங்களிருவருமெடுத்துக்கொண்டுஇவ்விடம்வந்துசே ருங்களென்றுசொல்ல அப்போதந்தச்சின்களில் ஆண்சின்னானது அக் பர்பாத்துஷாவைத் தூக்கிக்கொண்டு பெண்சின்னானதுகூட சின்பாத்து ஷாவுடையஉத்திரவின்படி ஆகாயத்திற்கிளம்பிககனமார்க்கமாய்ப்போ ய்சகஜாதிஎன்னும் பெண்ணிருக்கிறஅரண்மனையிலிறங்கி அவளசதுர் செய்கிரசபாமண்டபத்திற்போய் அவள்சமுகத்தில்நின்றார்கள்.

அப்போதந்தப்பெண்ணானவள் பாத்துஷாவைக்கண்டவுடனேதி டுலென்றுஅகத்தைவிட்டுகீழேயிறங்கி மிகவுபசாரஞ்செய்துமுன்னிவ ரிருந்தஅகத்தைத் தோழிகளாலெடுத்துவரும்படிச்செய்து தனக்கெதிரி ற்போட்டு அவனையுட்காரவைத்து தானுமுட்கார்ந்து சின்களிரண்டுக் குமிரண்டுநாற்காலிபோட்டு உட்காரச்செய்து அப்போதுசஜாதிஎன் னும்பெண்ணானவள் முகம்அலர்ந்தசெந்தாமரைபோல்விளங்கும்படியா ய்குஞ்சிரிப்புகொண்டு அக்பர்பாத்துஷாவைப்பார்த்து அவள்மிகவும்பி ரியத்துடனேசொல்லுகிறாள் அதென்னவென்றால் கேளுங்கள்பாத்து ஷாசிரோமணியே இராத்திரிநானித்திரைசெய்கையில் ஒருகனவுகண் டேன்அந்தக்கனவானது மிகுந்தநன்மைபாகவும் தங்களைக் காணும்படி யாகவுமிருந்தது அதன்விபரமாவது என்னுடையஆஜத்துப்பிரகாரம்தா ங்கள்போயெங்கே நடந்தவிபரங்களையெல்லாமறிந்து என்னிடத்தில்வந் து அதன்கருத்துகளைச்சொல்லி நாமிரண்டுபேருமிந்தநகரத்தைவிட்டு இன்னமொருதேசம்போய் நிக்காதென்னுங்கலியாணஞ்செய்துபழைய படிஇந்நகரத்திற்குவந்துஇதற்குத்தாங்களே யொருபாத்துஷாவாகிஎ ன்னோடுகூடி இன்பமுள்ளியசுகங்களையனுபவித்து புத்திரசம்பத்தாயி ருக்கும்படி மனமியங்கண்டேனாகையால் தாங்களென்னைவிட்டுப்போய் சலுதியில்வருகிறேனென்றுசொன்னவர் ஐந்தாறுவருடகாலமாய் வரா மலிருந்துவிட்டீர்களே ஆனபடியால்நீங்கள் நிம்ரோஸ் பட்டணம்போ னதுண்டா அந்தக்காயிசலாமென்னும் ராசகுமாரனைக்கண்டுஅவன்செ ய்துவந்த அக்கிரமங்களுடைய விவரத்தைவிசாரித்துவந்தீர்களா அப்ப டிவிசாரித்துவந்திருந்தால என்னுடையஆஜத்து நிறைவேற்றி உம்மு டையநகரும்நானுனைப்புகொண்டு மனமகிழ்ச்சியடையும்படியாயெனக்கு நன்றாய்விளங்கத் தாங்கள்சொல்ல வேண்டுமென்றுகேட்க அதற்குஅக்

பர்பாத்துஷா சகசாதியென்னும்பெண்ணைப்பார்த்துக் கேளும்பெண்கள்சிரோமணியே நானுன்னுடைய உத்திரவுபெற்று பிரயாணப்பட்டு அந்தநீம்ரேஸ் பட்டணமபோயிருந்து அவன் அக்கிரமஞ்செய்கிறநாள் வருகிறவரையில் காத்திருந்து அந்தருசகுமாரன் வந்துகாப்பிரிப்பையனை வெட்டிவிட்டு அவன்போய்விட்டான்நான் அவன்வருகிற அதிர்ச்சியால் மயங்கி விழுந்துகிடந்து அதன்விபரங்கள்தெரியாததால் மறுபடியுமொருவருடங்காத்திருந்து அந்தருஜன் ஒரு எருமைமாட்டின்மேலேறி ஆங்காரங்கொண்டுவந்து காப்பிரிப்பையனைவெட்டிவிட்டு அவனிருக்கும்படியான மாளிகைக்குட்போய் அந்தமாட்டைக் கட்டியடித்து அதைஇரும்புக்கூண்டிற்போட்டடைத்துவைத்துவிட்டுஅவன்கோலங்களெல்லாந்தணிந்து ஒருஅறையிற்போயிருக்கையில் அவனைக்கண்டு சந்தித்து நீ இவ்விதமான வேலைசெய்கிறதென்னத்துக்காக அதன்விவரங்களைச்சொல்லென்று நான்கேழ்க்க அதற்கவன் தான்பிறந்துவளர்ந்து சமர்த்தனுயிருக்கையில் ஒருபரிப்பெண் வந்ததாகவும் அவளதப்பிப்போய்விட்டதாகவும் அதனாற்பயித்தியங் கொண்டு ஒருசந்நியாசியிடம்போய் பயித்தியந்தீர்ந்து அந்தசந்நியாசியிறந்துஅவனுடையவேலையை இவன்பார்த்துக்கொண்டு அவன்வைத்திருந்தசாமான்முதலிய பெட்டியையுமெடுத்துக்கொண்டு தன்னகரம்வந்துசேர்ந்து அந்தப்பெட்டியைத்திறந்துபார்க்க அதிலொருபுக்தகமிருந்ததைபெடுத்துவாசித்துப்பார்க்கையில் முன்சொன்ன பரிப்பெண்ணானவள் இரதத்தோடுவந்திறங்கதானுமந்த இரதத்தின்மேற்போயிருவர்களும் சரசமாக விளையாடிக்கொண்டிருக்கையில் அவனிடத்திலிருந்த புஸ்தகத்தை அவள் வாங்கி ஒவ்வொருத்திகையிற்கொடுக்க கடைசியில்வாங்கினவள் கீழே குதிக்க அவனுங்கீழகுதித்து அவளைப்பிடிக்க அவள்புஸ்தகத்தைஇரதத்திலெறிந்துவிட்டாள்.

அதைப்பரிப்பெண்ணானவளெடுத்துக்கொண்டு வந்தவழியேபோய்விட அவன்கோபங்கொண்டு கீழேகுதித்தவளைக்கைப்பிடித்து முன்கட்டுபின்கட்டாகக்கட்டி ஒரறையிற்போட்டு திரும்பிவந்து பார்க்கையில்எருமைமாடாகவிருந்தாள் ஆனபடியால் அவள்மோசஞ்செய்துவிட்டுப்போனநாள்வந்தவுடனே அவள்பேரில்மபக்கமாய்வெறிகொண்டு அந்தமாட்டின்மேலேறி அதன்தோசசை கிழியும்படியாயடித்து அனேகம்போகளை உயிர்வதைசெய்ய அப்போதுயாவருஞ்சேர்ந்துஅவனுக்குக்கோபம்வருகிறபோதுஒருபெலிகொடுத்தால்தணிந்துபோவானென்று ஏற்படுத்தி ஒருகாப்பிரிப்பையனை பலிகொடுக்கிறது அவனைவெட்டிவிட்டு மாட்டைகட்டியடிக்கிறது பின்பு எப்போதும்போலே சுபாவமா யிருக்கிற தென்று அந்தருசகுமாரன் சொல்லிப்பின்னுஞ்சொல்லுகிறான் எனக்கு ஆங்காரமுதலிய கோபம்வாராமலும் அந்தப்பயனை வெட்டாமலும் பரிப்பெண்ணாகிய எருமைமாட்டை யடிக்காமலும் அநியாயஞ்செய்யாமலு மிருக்கவேய

ண்டுமானால் எனக்கொரு ஆஜத்திருக்கிறது அந்த ஆஜத்து நிறைவேறி னநன்றைக்கு இந்தவேலையை நானவிட்டுவிடுவேனென்றுசொன்னான் அதென்ன ஆஜத்தென்றேன் அப்போதவன்சொன்னதாவது என்னிட ஆஜத்தைச்சொல்வேனானால் அதைத்தடையின்றி நிறைவேற்றிக்கொடுக்கவேண்டும் அப்படிக்கொடுத்தால் உங்கள்மார்க்கத்தில் வருகிறேனென்றுசொன்னான்.

அதுகேட்டுஅப்படியேநிறைவேற்றித்தருகிறேனென்றுவாக்குறுதிசொல்லிக்கொடுத்து கேட்டதில்அவர்சொன்னது அங்காரதத்தில்வந்த பெண்ணைத்தேடிப்பிடித்து எனக்குக்கலியாணஞ்செய்து கொடுக்கவேண்டியது என்றான் உடனேநான்யோசித்து அந்தப்பெண்ணைக்கண்டுபிடித்து இவனுக்குக் கலியாணஞ்செய்து கொடுத்தால் அநியாயமாய்ப் பழிசெய்கிறதும்நின்றுபோய்விடுகிறது நமதுமார்க்கத்திலும் வந்துவிடுகிறான் நான்சொன்னவாக்கும் நிறைவேறிப்போகுமெனறெண்ணித் தேசதேசங்களிலெல்லாம் அந்தபரிப்பெண்ணைத்தேடி அலைந்துதிரிந்துபார்த்ததில் அகப்படாமல பேஜாராகி ஒருமலையிற்போய் விழுந்து இறந்துபோகிறது உத்தமமாயிருக்கிறதென்று விழப்போகையில் அஜாத் அலியுலலாவந்துவிழவொட்டாமல் நிறுத்தி றூம்நகருக்குப் போகச்சொன்னார் அதுபோலே நானங்கேபோய் என்னைப்போல மூன்றுபேர் இவ்விதமாகிய ஆஜத்துள்ளபேர்கள் (சேர்ந்துநாங்கள்தோஸ்தியாகியபின்பு அந்நகரையாளும் ஆசாத்பகுத்பாத்தஷாவும் ஒரு ஆசத்தாக வெங்களிடத்தில்வந்து (தோஸ்தியானார் நாங்களைந்துபேரும் அவரவருடைய அகவால்களைச்சொல்லி முடித்திருக்கையில் பாத்துஷாவுக்கு ஒருகுழந்தைபிறந்து அவருடைய ஆசத்து நிறைவேறி யிருக்கையில் அந்தக்குழந்தைகாணாமற்போய்விட்டபடியால் அதுபோயிருந்தநகரத்துக்கரசனாகிய மலிககாசக்பர் பாத்துஷாவிடத்தில் நாங்களைந்துபேரும்போய் உறவாகி அவரால் முதலாவதுபக்கீருடைய ஆசத்து நிறைவேறி இரண்டாவது நான்நிறைவேற்றிக்கொடுக்கிறேனென்ற இருசகுமாரன் ஆசத்தான பெண்ணைத்தேடிக்கொணடுவந்து அவனை இசுலாத்திலாக்கி அந்தப்பெண்ணை யவனுக்குநிக்காகு செய்துக்கொடுத்து அவன்தேசத்துக் கனுப்பிவிட்டார்பின்பு மூன்றுபக்கிரிகளும் ஆசாத்பகுத்பாத்துஷாவும் சொல்லிய கிஸ்ஸாக்களையெல்லாம் ஆதியோடந்தமாக சகசாநியென்னும் பெண்ணனவளுக்கு அக்பர்பாத்துஷாசொல்லிப் பின்னுஞ்சொல்லுகிறார் கேளும் பெண்கள்சிரோமணியே இப்போது சின்பாத்துஷாவும் ஆசாத்பகுத்பாத்துஷாவும இந்த இரண்டுசின்னையும் என்னோடுசேர்த்து உன்னை யழைத்துக்கொண்டு அவ்விடம் போகும்படியா யனுப்பியிருக்கிறது அதற்குநீமறுமொழியென்னசொல்லுகிறாயென்றுகேட்க அவள்யோசித்து நாம்கூடாதென்றுசொல்வோமானால சக்கிரவர்த்தியாகிய ஆசாத்பகுத்பாத்துஷா மலிக்காசக்பர் முந்து

ஷா இவ்விருவருடைய பகையும் நேரிடுமென்றுநினைத்து அவ்விடம்
போகச்சம்மதித்துத் தனது தகப்பனாகிய அமீர்பாத்துஷாவுக்கு அவ்
விடத்தில் நடந்தசங்கதிகளையெல்லாம் ஆதியோடந்தமாக எழு
தித்தான் அக்பர்பாத்துஷாவுடனேபோய் பின்புவருகிறசெதியையுந்
தெரியப்படுத்தும்படியாகத் தூதுவனையனுப்பி அவர்சம்மதத்தினபே
ரில்வந்தவர்களுடனே பிரயாணப்படும்படியா யொப்புக்கொண்டுஇவர்
களை யோரறையிலழைத்துக்கொண்டுபோய் தாதிகளால் அறுசுவை
பதார்த்தத்துடனே ஓசீவனம்வந்து உண்டுபசியாறித் தாம்பூலந்தரித்
து எழுந்து சபாமண்டபத்திற்குப்போய் தகத்திலிருந்து மாலிலிருக்
கும் சர்தாரைத்தருபமுதலிய சகலகாரியங்களையும் பார்க்கும்படியாயுத்
திரவுசெய்து பிரயாணப்பட்டாள் அப்போஆண்சின்னானது அக்பர்
பாத்துஷாவைத் தூக்கிக்கொண்டது பெண்சின்னானது சகஜாதியென்
னும் பெண்ணைத் தூக்கிக்கொண்டது இப்படியாக இரண்டுசின்னகளும்
ககனமார்க்கமாகப்பறந்து ஒருசாமத்திற்குள்ளாக சின்பாத்துஷாமுத
லானவர்களிருக்கும் பட்டணம்போய்ச்சேர்ந்து ஆண்சின்னானது பாத்
துஷாவும் தர்வேசுகளுமிருக்கிறசமுகத்திற்கொண்டுபோய்விட்டது பெ
ண்சின்னானது சின்பாத்துஷாவுடைய நாயகியிருக்கும் அந்தப்புரத்தில்
சகஜாதிபெண்பவளைக் கொண்டுபோய்விட்டது உடனே அவ்விடத்தி
லுள்ளபெண்களெல்லாம் சகஜாதியினுடைய அழகு சவுந்தரிய ரூப
லாவண்யத்தைக்கண்டு வெட்கமடைந்து பிரமைகொண்டவரைப்போ
லிருந்தார்கள் அப்படியிருக்க பாத்துஷாக்களிருவருக்கும் மூன்றுபக்கீ
ர்களுக்கும் தசலிமுதலியதுஞ்செய்து அவர்களோடு உட்கார்ந்துகாண
போய்சகஜாதியென்னும்பெண்வந்திருக்கிறதையாவருக்கு மறிவித்தார்
அப்போதுமலிக்காசாபர் பாத்துஷாவானவர் றாமபாத்துஷாவுக்கும்அ
ந்தசகஜாதியென்னும் பெண்ணுக்கும் நிக்காகுமுடிக்கவேண்டியதா யி
ருக்கிறது உங்களுடையகருத்தெப்படி யிருக்குமென்றுகேட்கஇவர்கள்
நால்வரும்தங்களுடையமனமெப்படியிருக்கிறதோ அதுபோலவேயெ
ங்களுக்கு மனமிருக்குதென்றார்கள் அதுகேட்டுசின்பாத்துஷாவானவ
ர்தனதுநகரமுழுமையும் பறையறைவித்துஅலங்கரிக்கச்செய்துஅரண்
மனைமுதலியஅந்தப்புரங்களிலெல்லா மகரதோரணமுதலிய பூப்பந்த
லகள்போட்டுமிகுந்த அலங்காரஞ்செய்து அக்பர் பாத்துஷாவுக்கும்
சகஜாதியென்னும்பெண்ணுக்கும் நிக்காவென்னுங்கலியாணஞ் செய்து
விருந்துமுதலியவைகளும் முப்பத்திரண்டுநளயாகத்துடனே செய்தா
ர்அப்போது அவ்விடத்திலுள்ள பலரும்புலாமுதலியஓசீவனங்களைப்
புசித்துத் தாம்பூலந்தரித்து மிகுந்த மகிழ்வுடனேயிருந்தார்கள்அந்தச்
சமயத்தில் சின்பாத்துஷாவானவர் அக்பர்பாத்துஷாவையும் அவர்மனை
வியாகிய சகசாதியென்னும்பெண்ணையும் விசித்திரமாகிய எழுநிலை
உப்பரிகையுள்ள ஒருமாளிகையில் வைத்து அவர்களுக்கு ஏவற்ப
ணிவிடை செய்யும்படியாகச் சின்குலத்திலுள்ள சிலதாதிப்பெண்களை

யமைத்தார் அதுபோலந்தமாளிகையில்பெண்ணும் மாப்பிள்ளையுமாக அம்சதூலிகாமஞ்சத்திலிருந்து சுகபோகங்களையனுபவித்து இருவருடையஆஜத்துநிறைவேறி சுபமங்களகரமாயிருந்தார்கள் அப்படியிருக்கையிலமறுநாள்காலையில் அவரவர்கள்செய்யவேண்டியகாலைக்கடனை முடித்துக்கொண்டு ஆறுபேர்களும்சபைக்குப்போயிருந்தார்கள் அந்தச் சமயத்தில்சின்பாத்துஷாவானவர் தேசவிசாரணைகளையெல்லாம்விசாரித்துப் பின்புமூன்றாவதுபக்கீராகியசம்சதீன் பாத்துஷாவைப்பார்த்து அவருடையஆஜத்தைக்கேட்டு அதையும்நிறைவேற்றும்படியாகத் தீர்மானஞ்செய்தார்.

உ-வது, பக்கீராகிய அக்பர்பாத்துஷாவுடைய ஆஜத்து

நிறைவேறியகிஸ்ஸா முற்றுப்பெற்றது.

——()——

மூன்றாவது பக்கீராகிய

சம்சதீன் பாத்துஷாவுடைய ஆஜத்துநிறைவேறிய கிஸ்ஸா

அதுவென்னவென்றால பலிக்காசக்பர் பாத்துஷாவானவர்தன்னிடத்திலிருக்கும் அதிபுஜபலசாமர்த்தியமுள்ள ஓர்சின்னையழைத்துசம்சதீன்பாத்துஷாவையெடுத்துக்கொண்டுஇவரழைத்துக்கொண்டுபோனபெண்ணும் இவருக்குத்துணையாகவந்தமூபாறக்கும் தப்பிப்போன ஆற்றிலிருந்து அவர்கள்போனமார்க்கத்தையுங்கண்டுபிடித்து அந்தவழியேபோய் அவர்களிருவரையுங்கண்டு இவர்களையெடுத்துப்போனவர்களுக்கு இக்கடிதத்தைக்கொடுத்து உடனேயிருவரையுமழைத்துக்கொண்டு நீங்களுமிந்தநகரம்வந்துசேருங்களென்று சின்பாத்துஷாவைத்துக்கி ஒருமணிநேரத்திற்குள்ளாக அவ்வாற்றிற் போய்ச்சேர்ந்து அவனைப்பார்த்து இந்தவிடத்திற்றான பெண்தப்பிப் போனதென்று சின்கேழ்க்க அவரிதுதானென்றுவொப்புக்கொண்டவுடனே அந்தச்சின்னானதுகேசரிமார்க்கமாயெழும்பிநாலாவதுநாடலில் ஒருவிஸ்தீர்ணமான தீவொன்றிருக்கிறது அந்தத்தீவில்பெரிதாகிய ஒருமலையிருக்கிறது அந்தமலைக்கருகில் ஒருபட்டணமிருக்கிறது அந்தப்பட்டணத்தையாளுகிறது காபிராணசின்ராசனிருக்கிறான் அவன்மலையினுச்சியில் ஒருபங்களாகட்டியிருக்கிறான் அந்தப்பங்களாவில்மகாசீனத்துபாட்சாவுடையமகளைக்கொண்டுபோய்வைத்திருக்கிறது அப்போதிந்தச்சின்னும் சம்சதீன்பாத்துஷாவும் அவனிருக்கும்பங்களாவுக்குச் சமீபமாயிறங்கி பங்களாவுக்குப்போகும்போது அங்கேயனேகங்காவல் சின்பெண்களாந்தப்பெண்ணைச்சுற்றியிருக்கிறார்கள் அப்போதிவர்கள்போகிறஆரவாரத்தைக்கண்டு பெண்சின்களெல்லாம் அந்தாகளிருக்கும் படியானவி

டங்களிலிருந்துவிட்டது அப்போதுபெண்ணிருக்கிற சமீபத்திற்போயிவர்கள் இறங்கையில் அந்தப்பெண்ணானவள் தன்னைக் கூட்டிக்கொண்டுபோனபாத்துஷாவாயிருப்பதால் அதிகவிரைவுடனேயெழுந்து இவளைக்கட்டித்தழுவியது பாதவித்துக்கட்டிலிலிருவருமுட்கார்ந்து ஒருவர்பட்ட தன்பத்தைபொருவருக்குச்சொல்லிக்கொண்டிருக்கையிலஇவளைத்தூக்கிப்போன சின்னனது அந்தப்பங்களாவைவிட்டுதனித்து அந்தச்சின்னனாகிய காபிராசனிடத்திற்போய்ச் சின்பாத்துஷாகொடுத்த கடிதத்தைக்கொடுக்க அவன்காகிதத்தைவாங்கினவுடனே படபடத்து வெலவெலத்து இந்தச்சின்னனுக்கு வந்தனமுதலியதுஞ்செய்து உட்காரச்சொல்லி காகிதத்தையுடைத்துப்பார்த்து அதிலிருக்கு மர்மங்களையெல்லாமறிந்துவந்த சின்னனைப்பார்த்து அந்தராசனசொல்லுகிறான் கேளுமையா பாத்துஷாவுடையது துவரோகங்களசிலராணுவங்களுடனே கேசரியாக்கமாய் அனேகதீவுதிவாந்தரங்கள் வேடிக்கைபார்த்துக்கொண்டுயெனதுபட்டணம் திரும்பிவருகிறமார்க்கத்தில் ஓராற்றின் மத்தியில் மகாசீனத்துப்பெண்ணானவளுடைய சிப்பாயாகியமுபாறக்கென்பவனும்ஆற்றைத்தாண்டையில் நான்என்னுடைய சின்களைவிட்டுத் தூக்கிக்கொண்டுவரும்படியா யுத்திரவுசெய்தேன்சின்கள் அவர்களேறிய குதிரையுடனே தூக்கிக்கொண்டுவந்தார்கள் நானந்தப்பெண்ணைமலையின்மேலிருக்கிற பங்களாவில்வைத்து அந்தமுபாறக்கை பூந்தோட்டத்திலிருக்குமாளிகையில்வைத்து அந்தத்தோட்டத்துக்குக் காவலிருக்கும படி ஆக்கியாபித்து அந்தப்பெண்ணிடத்திற்போய் சமீபத்திலிருக்கும்போது அவள் நான்ஆறுவருஷத்திற்கு நோன்பு பிடித்திருக்கிறேன் அதுமுடிந்தவுடனே உமக்குச்சொல்லியனுப்புகிறேனென்றாள் அதுகேட்டுநான்சம்மதித்து நமதுகுலத்திலுள்ளசின்பெண்களை யவளுக்குவேவற்பணிவிடைமுதலிய காவலுக்காகயேற்படுத்திவைத்து அவள்வந்த நாள்முதலிதுவரையிலும் அந்தப்பங்களாவினவழியையும் பார்க்காமலிருக்கிறனேயொழிய வேறொருசுலூமுஞ்செய்யவில்லை இப்போதுநான் அந்தப்பெண்ணைத்தாய்தமக்கையாயெண்ணியிருக்கிறேனென்றுஒருகடிதத்தில் வந்தனைமுதலியமரியாதைகளுடனேயெழுதி மகாசீனத்துப்பெண்ணையும் முபாறக்கையுந்தங்கள்வசமனுப்பியிருக்கிறேன் தாங்களென்பேரில்கோபங்கொள்ளாம லென்னைக்காத்து இரட்சித்துக்காப்பாற்றவேண்டுமென்றெழுதி கடிதத்தைமடித்துப்பாத்துஷா யவர்கள் தூதனாகியசின்வசத்திற்கொடுத்து தனதுஏவலாகிய ஆண்பெண்ணிரண்டுசின்களை இந்தச்சின்னுடனே கூட்டிமுபாறக்கையும்அந்தப்பெண்ணையும் மலிக்காசக்பர்பாத்துஷா சமூகத்தில்விட்டுவாருங்களென்றுவந்தசின்னுக்கு மரியாதைசெய்தனுப்பமூன்றுசின்களும் கேசரிமார்க்கமாய்க்கிளம்பிமலைமேலிருக்கும பங்களாவிற்போய்ச்சேர்ந்து அந்தரூசனுடையஆண்சின்னனது தோட்டத்துமாளிகையிலிருக்கும் முபாறக்கைத்தூக்கிக்கொண்டுவரப்பெண்சின்னனது மகாசீனத்துப்பாத்துஷா உடையகுமாரத்தியையெடுத்துக்கொண்டது சம்சதீன்பாத்துஷா உட

ளைவர்த்தசின்னனைது யெடுத்துக்கொள்ள ஆகமூன்றுசின்களும் ஆகாய
த்திற்கிளம்பிசின்பாத்துஷாவும் றூம்பாத்துஷாவுமிருக்கிறநகரயபோ
ய்ச்சேர்ந்து அவர்கள்முன்னே ஆண்சின்னிரணடும் பாத்துஷாவையும்
முபாறக்கையுமிறக்கிவிட்டது பெண்சின்னனைது அந்தப்புரத்திலந்தப்
பெண்ணைக்கொண்டுபோய்விட்டு ஆண்பெண்ணாகியஇரண்டுசின்களு
மசின்பாத்துஷாவிடத்தில் விடைபெற்றுக்கொண்டுநாலாங்கடற்றீவிற்
போய்ச் சேர்ந்துவிட்டது.

பாத்துஷா உடையசின்னனைதுஅவருக்குத் தசுலிமுதலிய மரியா
தைசெய்துதன்னிருப்பிடம்போயிருந்தது அப்போதுசம்சதீன்பாத்து
ஷாமுபாறக்கைக்கட்டிதழுவி ஆலிங்கனஞ்செய்துஇரண்டுபேருமலிக்
காசக்பர்பாத்துஷாவுக்கும் ஆசாத்பகுத்பாத்துஷாவுக்கும் மற்றும்பக்
கீர்களுக்குஞ்சலாமுதலிய வந்தனஞ்செய்து அவர்களோடுஉட்கார்ந்திரு
ந்துமுபாறக்கானவர் தான்ஆற்றைக்கடக்கப்போகதன்குதிரைபெண்ணா
னபடியாலும்மகாசீனத்துப்பெண்ணேறியகுதிரையும்பாய்ந்தது அப்
போதுகாபிறானசின்றூசன்கண்டு வியப்புகொண்டு பெடுத்துக்கொண்
டுபோய்வைத்திருந்துமறுபடி யிவிடம்வந்தவரையில்ஆதியோடந்தமா
கச்சொல்லிமுடித்தார் அப்போதுமலிக்காசக்பர்பாத்துஷாவானவர் ஆ
சாத்பகுத்பாத்துஷாவையு மற்றும்பக்கீர்களையும் பார்த்துச்சொல்லுகி
றார்அந்தசம்சதீன் பாத்துஷாவுக்கும் மகாசீனத்துபாத்துஷாவுடைய
மகளுக்கும் நிக்காகுவென்னுங்கலியாணஞ்செய்யவேண்டியிருப்பதால்
போவோம்வாருங்களென்று தகத்தைவிட்டுயாவருமெழுந்து அலங்கா
ரமாளிகைக்குப்போய்கலியாணத்துக்குச்செய்யவேண்டியமுறைகளெ
ல்லாம் சரியாய்நடத்திசம்சதீன்பாத்துஷாவுக்கும் மகாசீனத்துப்பெண்
ணுக்கும் நிக்காகுசெய்துகைபிடித்துவிட்டுபெண்ணுமாப்பிள்ளையும் ஏ
கபோகமா யொருவருக்கொருவர்பிரியாவிடையாயிருந்தார்கள்அப்போ
துவிருந்துமுதலிய ஒசிவனத்தின்றுபசியாறித் தாம்பூலமருந்தி யாவரு
மகிழ்ச்சியுடனேயிருந்தார்கள்பின்பு பாத்துஷாயிருவர்களும்நான்குத
ர்வேசுகளும் தகத்திற்போயிருந்து சின்பாத்துஷா ருஜாங்கஞ்செலுத்
திக்கொண்டிருந்தார்.

௩-வது பக்கீராகியசம்சதீன்பாத்துஷா
ஆஜத்துநிறைவேறிய கிஸ்ஸாமுற்றிற்று.

நான்காவதுபக்கீராகிய
அஜன்பகுதாதிபாத்துஷாஉடையஆஜத்துநிறைவேறியகிஸ்ஸா

இப்படியாகஇருச்சியபரிபாலனஞ்செய்துக்கொண்டிருக்கிற மலிக்
காசக்பர்பாத்துஷாஒருநாள்றூம்பாத்துஷா தர்வேசுகள்முதலியமுபாற
க்கையும்பார்த்துஆலோசனைசெய்து அசன்பகுதாதி பாத்துஷாவையும்

அவர்கலியாணஞ்செய்தநாயகியையும் அவளைவளர்த்த கோஜாவையும்
மோசம்பண்ணின சின்ராசனை இவ்விடங்கொண்டுவரும்படியான வீர
சூரமுள்ள ஒருசின்னையழைத்து ஒருநிருபமொன்றெழுதி அதன்கையிற்
கொடுத்து ஜலுதியிற்போய் அவ்வாசனையழைத்துவாவென்றனுப்பிவிட
அந்தச்சின்னானது சின்பாத்துஷாவிடத்திலுத்தரவு பெற்றுக்கொண்டு
அதிவேகமாய்ப்பறந்து சின்னாசனைக்கண்டுநிருபத்தைக்கொடுக்க அ
தையவன்வாங்கித்தலைமேல்வைத்துக்கொண்டு நிருபத்தை யுடைத்து
ப்பார்த்துமிகவும் பயந்தவனாய்த்தனதுமந்திரியையும்சிலசேவலான சின்
களையுங்கூட்டிக்கொண்டுவந்த தூதனாகியசின்னும்பிரயாணப் பட்டு
யெழும்பிக்கேசரிமார்க்கமாய்ப்போய் சின்பாத்துஷா சமுகத்திலிறங்கி
னார்கள்.

அப்போதுசின்ராஜன்பயந்தவனாய் வாய்பொத்திகைகட்டிமிகவும்
வணக்கத்துடனேபணிந்துதாங்களிவ்விடத்திற்குயென்னைத் தருவித்தகா
ரியமென்ன அதனைச்சொல்வீரானால் அதுபோல்நடக்கக்காத்திருக்கிறே
னென்றுசின்பாத்துஷாவைக்கேட்க அவர்சொல்லுகிறார்கேளாய் ராச
னேநீராஜாங்கஞ்செய்யப்பட்டவனாதலால் உலகத்திலுள்ள அனைவரை
யுந்நீதிசெறியுடனேபாதுகாத்துவரவேண்டியது அப்படியிருக்க நீஒரு
பாத்துஷாவுடைய பிள்ளையையும் அவர்மனைவியையும்இவளைவளர்த்த
கோசாவையும் ஒருவர்முகத்திலொருவர்விழிக்கவொட்டாமல் அநி
யாயமாகத்தூக்கி யெறிந்துவிட்டாயே அதுஉனக்குத் தகாதகாரியம்
அதோயிருக்கிறாரே அசன்பாகுதாதிபாத்துஷா அவர்தானுக்கும்நீயெ
டுத்தெறியப்பட்டவர் அவரிப்போதெனக்குசிநேகியாயிருக்கிற படி
யால் அவர்மனைவியையும்அவளைவளர்த்த கோசவையும் அவர்கள்நாடி
உன்னிடத்தில்வந்த புத்துக்குட்டியையும் சவுதியாக இவ்விடத்திற்
கொண்டுவரவேணுமென்று மலிக்காசக்பர்பாத்துஷாகண்டிப்பான்உத்
திரவுசெய்யசின்ராஜனானவன் பாத்துஷாவின் உத்திரவிற்குமாறுத்திர
வுசொல்லமுடியாததால் அப்படியேநல்லதென்று விடைபெற்றுக்கொ
ண்டுதன்னுடன்வந்தசின்கூட்டத்துடனே ககனமார்க்கமாகப்போய் த
ன்னிருப்பிடஞ்சேர்ந்து சிலசின்களைவிட்டுகோசாவையும்ராசகுமாரத்
தியையும்தேடிப்பிடித்துக்கொண்டுவரச்சொல்ல சின்கள்நல்லதென்று
போய்மலைகாடுகள்முதலிய விடங்களிலெல்லாந்தேடிப்பார்த்தும்எங்கு
ங்காணாமல்சமுத்திரங்களைத்தாண்டி ஒருதீவாந்தரக்கரைக்குநேராய்ப்
போகும்போது அந்தத்தீவாந்தரத்திலப்பதிங்காதவழி விஸ்தீர்ணத்தில்
ஒருகோட்டையிருக்கிறது அந்தக்கோட்டைக்குள் அநேகம் வீடுவாச
ல்கள்கூடகோபுரங்கள் மாடமாளிகையில்சாலைசோலைகள் அரண்மனை
ம்யாஸ்தானங்கள்முதலிய அநேகவிசித்திரம்பொருந்திய ஒருபட்டண
அலங்காரமாயிருந்தது அந்தப்பட்டணத்தில் ஒருமூலைப்பாரிசத்தில்
கோட்டைச்சுவற்றுக்குள் பங்களாவொன்றிருந்தது அந்தப்பங்களாவி
ல்இந்தப்பட்டணத்தையாளுகின்ற ராசாவானவன்வெய்யற் கலங்களி

தென்றற்காற்றுவீசும்படியாய்ச்சயனித்திருந்துபோகிறது ஆகையால் அந்தப்பங்களாவைச்சுற்றிப்பூஞ்செடிகள்வைத்து அதுகள்பூர்த்துத் திவ்வியமானவாசனைகள் ஜொலித்துக்கொண்டிருந்தது அந்தத் தோட்டத்திற்குள் அனேகம்வேலைக்காரர்கள் தண்ணீரிறைத்துக்கொண்டும்செடிகள்வைத்துக்கொண்டும் இன்னுமதற்குண்டாகியவேலைகளைச்செய்துகொண்டுமிருந்தார்கள்

அவர்களுக்கெல்லாமந்தக்கோஜாவானவர்மேஸ்திரியாய் அவர்களைவேலைசெய்யச்சொல்லிக்கொண்டிருக்குந்தருணத்தில் இந்தச்சின்களவரைக்கண்டு சமீபத்திற்போய கோசாவைப்பார்த்துச்சொல்லத்தொடங்கினார்கள் ஓகோசாவே நீவளர்த்தபிள்ளையாகிய அசன்பகுதாதி பாத்துஷாவுடைய மனைவியையும் உம்மோடுசேர்த்தெடுத்து எறிபப்பட்டதே அந்தப்பெண் எங்கேயிருக்கின்றது அந்தப்பெண்ணையும் உம்மையும் உங்கள்பாத்துஷாவினுடைய பிள்ளையிடத்தில ஒப்பிக்கவேண்டியதாயிருக்கின்றது அந்தப்பெண்ணெங்கேயென்றுகேட்க அதுகேட்டுகோஜாவானவர்சின்களைப்பார்த்துச்சொலும்சின்களே இந்தப்பட்டணத்திலெனக்காகஒருவீடுவிட்டார்கள் அந்தவீட்டில்நானும் அந்தப்பெண்ணும்சிலவேலைக்காரிகளுமாக விருக்கிறோமாகையால் நாமங்கேபோகலாம்வாருமென்றுசொல்லசின்கள்சம்மதித்துக் கோஜாவையழைத்துக்கொண்டு பெண்ணிருக்கிற வீட்டிற்குப்போயந்தப்பெண்ணைக்கண்டு சின்களானந்தசந்தோஷித்துக் கோஜாவையும்பெண்ணையுமெடுத்துக்கொண்டு அந்தப்பட்டணத்தைவிட்டுக் கேசரிமார்க்கமாய்ப் பறந்துதீவாந்தரத்தையுஞ்சமுத்திரத்தையுங்கடந்து சின்ராசனிருக்கும் நகரம்போய்ச்சேர்ந்து சின்ராஜனுக்கெதிரில் கோசாவையும் ராசகுமாரத்தியையும் விட்டுசலாஞ்செய்துநின்றார்கள்.

அதுகண்டுசின்ராஜன்கோசாவுக்குஉபசரணைமுதலிய மரியாதைசெய்து உட்காரச்சொல்லிதான்முன்சொல்லியவாக்கின்படிபுத்துக்குட்டியையெடுத்துக்கொண்டு சிலஎவற்சின்களையழைத்துக்கொண்டு ஒருபெண்சின்னையழைத்து அந்தப்பெண்ணையெடுத்துக்கொள்ளசசொல்லிகோசாவைஒருஆண்சின்னால் தூக்கிக்கொள்ளச்செய்துசின்ராஜனும்மற்றயாவர்களும்பிரயாணப்பட்டுஎழும்பி ஆகாயமார்க்கமாகப்போய் மலிக்காசக்பர்பாத்துஷா ரூம்பாத்துஷா முதலானவர்களிருக்கும்சகத்தின்சமீபத்திலிறங்கி கோஜாவையவர்களெதிரியவிட்டு புத்துக்குட்டியையவர்களுக்கெதிரிலிருக்கும் மேஜைமேல்வைத்தார்கள் அந்தச்சமயத்தில்பெண்சின்னானதுதானெடுத்துக்கொண்டுவந்தபெண்ணை அந்தப்புரத்தில் விட்டுவிட்டுஇராஜசமுகத்தில்வந்துசேர்ந்தது அப்போது சின்ராஜன்பாத்துஷாவுக்குமிகவும் தாழ்மையான வந்தனமுதலியதுசலாம்செய்துநின்றது அப்போது ஜின்பாத்துஷா கோஜாவைக்கொண்டுவந்த ரா

ஜாவுக்குச்சிலஇனாமுதலிய வைகளையுங்கொடுத்துவேண்டியபுத்திமதிகளைச்சொல்லித்தன்பதிக்குப்போகும்படியாயுத்திரவுகொடுக்கச் சின்ராஜன்பாத்துஷாவினுடைய உத்திரவைப்பெற்றுக்கொண்டு தன்னுடனேவந்தசின்களையும்மேற்சொல்லியபெண்ணானவளகப்பன் வீட்டிலிருந்தபோது ஒருவரையும்அவளிடத்தில் நெருங்கவொட்டாமல்காவல்வைத்திருந்த சின்களைமழைத்துக்கொண்டு தன்னகரம்போய்ச்சேர்ந்துவிட்டான்.

அப்போதுகோசாவானவர் சின்பாத்துஷாவுக்கும் ஹாம்பாத்துஷாவுக்கும் தசுலிம்முதலிய மரியாதைசெய்து தான்வளர்த்தபிள்ளையாகியஅஜன்பகுகாதிபாத்துஷாவைமிகவும் ஆவலாகக்கட்டித்தழுவி முத்தியிட்டுக்கண்ணீர்ததும்ப மயங்கிநின்றார் அப்போது சின்பாத்துஷாவானவர் கோஜாமனதைத்தேற்றி சின்ராஜன்கொடுத்த புத்துக்குட்டியும்அவர்வசங்கொடுத்து பிள்ளையருகிலுட்காரச்சொல்லிகோசாவும் பிள்ளையும் ஒருவருக்கொருவர் அவரவர்பட்டதுன்பங்களைச்சொல்லி மனந்தேறியிருக்கும்போது மலிக்காசக்பர்பாத்துஷா தகத்தைவிட்டெழுந்து இவர்களையெல்லாங்கூட்டிக்கொண்டு அலங்காரமெத்தையிற்போய் உட்கார்ந்து ஒசிபனமுதலிய பலகாரகனிவர்க்கங்கள் சர்ப்பத்துகள இவைகளைத்தருவித்து யாவரும்புசித்துப்பசியாறிச்சுகித்து தாம்பூலந்தரித்து எக்களிப்புடனிருக்கிறபோது மலிக்காசகபர்பார்த்துஷா அசன்பகுகாதிபாத்துஷாவை ஒருமெத்தைவீட்டி லிருக்கும்படியாய் திட்டஞ்செய்து அவர்மனைவியாகிய மிசுக்கீனுடையமகளை அந்தவீட்டில் வந்திருக்கும்படிசெய்து சிலசின்பெண்களை ஏவற் பணிவிடைக்காக வைத்து அந்தப்பெண்ணிடத்தில் நான்காவதுபக்கீரைப்போய் அவர் மனைவியோடு சுகித்திருக்கும்படியாயுத்தரவுகொடுக்க உடனே அசன்பகுதாதி பாத்துஷாவெழுந்து இவர்களுக்கெல்லா மிகவுமரியாதை செய்து தன்னுபகியிடத்திற் போய்ச்சேர்ந்து இருவருமொன்றுக்கொன்று கட்டித்தழுவி ஆலிங்கனஞ்செய்து அவரவர்பட்ட கிஸ்ஸாக்களைச்சொல்ல மனந்தேறி இன்பசுகத்தையனுபவித்து அவருடைய ஆசத்துநிறைவேறி சுபமங்களகரமாயிருந்தார்கள்.

நான்காவதுபக்கீராகிய அசன்பகுதாதிபாத்துஷாஆசத்து

நிறைவேறியகிஸ்ஸா முற்றிற்று.

பிசுமில்லாகி

றூம்நகரத்தையாளும் ஆசாத்பகுத்பாத்துஷா அவர்கள்புத்திரசிகா
மணியாகிய (தர்வேசுபாத்துஷாவுக்கும்) அந்தமாநகரத்தையா
ளும் மலிக்கா சக்பர் பாத்துஷா அவர்கள் புத்திரியாகிய
(பஹ்ராவர்பானு) என்னும் பெண்ணுக்கும் நிகாகுவெ
ன்னுங்கலியாணமுடிந்து யாவர்களும்நகரம்போ
யிருந்து நான்கு தர்வேசுகளும் அவரவர்
கள்போய்ச்சேர்ந்துசுகபோகமாயிரு
ந்தகிஸ்ஸா.

---

இவ்விதமாக நான்குதர்வேசுகளுடைய ஈஜக்தும்நிறைவேறி அவரவர்கள்மனைவிகளுடனேசுகபோகத்தையனுபவித்துக்கொண்டிருக்கையில் மலிக்காசக்பர்பாத்துஷாவும் ஆசாத்பகுத்பாத்துஷாவும் நான்குதர்வேசுகளாகியமுகம்மதுகவுதுசவுதாகநும்அக்பாப த்துஷாவும் சம்சதீன்பாத்துஷ வும் அசன்பகுதாதிபாத்துஷாவும்மூபாறக்கென்னும்பயல்வானும்கொசாவும்ஆக இவர்களெட்டுப்பேரும்அலங்காரமெத்தையில்மிகுந்தமகிழ்ச்சியுடனே பலவிதசந்தோஷமாகிய பேச்சுகளைப்பேசிக்கொண்டிருந்து பின்புதர்வேசுபாத்துஷாவுக்கும் பஹ்ராவர்பானுவென்னும்பெண்ணுக்கும் நிக்காகுசெய்து கண்ணினூற்பார்க்கவேண்டுமென்று நாட்குறித்துதிட்டஞ்செய்து யாவருமெழுந்து சுகத்திற்போயிருந்துமந்திரிகள்முதலானபேர்களுக்கெல்லாம் மலிகாசக்பர்பாத்துஷாவின்கலியாணச்சேதியைச்சொல்லி நகரத்திற்பறைசாற்றும்படியாகவும்தேவுருசர் பரிருசர் ஜின்ருசர்முதலிய பாத்துஷாக்களுக்கும் காகிதமெழுதியனுப்பும்படியா யுத்தரவுகொடுத்தார் அதுபோல்நகரமுழுதிலும பறைசாற்றச்செய்து காகிதங்களெழுதி தூதுவர்களாகிய சினகள்கையிற்கொடுத்தனுப்ப அவர்கள் முனைசொல்லிய ருஜாக்கள்முதலிய பாததுஷாக்களுக்கும் காகிதங்களைக் கொடுத்து இன்னகிழமைக்குக் கலியாணமென்று சொல்லிவிட்டுவந்து விட்டார்கள அப்போது அந்நகரத்திலுள்ள யாவர்களும் தெருவுக்குத் தெருவுவாழை கரும்புகமுகுமுதலியதும் நட்டு மகரதோரணங்கள் கட்டி மாடகூடங்கள முதலியவுகளெல்லாம் சித்திரங்கள் முதலியவைகளாற்சோடித்து வீடுகள்தோறும் மேல்மெத்தைகளிலும்வாசல்கள்தோறும் பலவர்ணமாகியகொடிகள்நாட்டிநிறைகுடங்கள்வைத்து தங்கமயமாய்அலங்காரஞ் செய்துக்கொண்டிருந்தார்கள் அப்போதுசின்பாத்துஷா உடைய அரண்மனை ஆஸ்தானம்அந்தப்புரமுதலிய சகத்துமண்டபங்களிலும் அனேகவிதவிதமாகிய சோடிப்புகளும்முஸ்தீப்புசெய்து புட்பங்களினால்மணவறைப் பந்தலி

லமைத்து அவ்வவ்வறைக்குள்தோறும் லஸ்தர்குளோப்புவால்செட்டுசரவிளக்கு நாநாவிளக்குமுதலியாசகுண்டுகளுந்தூக்கி இரவிற்பார்த்தால்பட்டப்பகற்போலிருக்கும்படியான ஒன்பதுவகை ரத்தினங்களையுங்கோர்த்து நெருங்கத் தூக்கியிருப்பது சூரியனைப்போத்துப் பிரகாசித்துக்கொண்டிருந்தது.

இன்னும்இன்னவிசமென்று சொல்லிமுடியாத அலங்காரங்களும் செய்திருந்தார்கள் அப்போது திருபமனுப்பிசசொல்லிவக்க அரசர்கள்முதலியபாத்துஷாக்களும் அவரோவற்பணிவிடையாகிய தேவுமரிசின்களையுஞ்சேர்த்துக்கொண்டு அந்தமாநகரம்வந்துசேர அவரவர்களுக்குத்தகுந்தஅந்தஸ்தாயிருக்கும்படி மாளிகைமுதலானவிடுதிகள்மந்திரிகள்கொடுக்க அவர்களதுகளில்வந்திருந்து இவர்களுக்கெல்லாம்ஜமாலுதியமலிக்காசக்பர்பாத்துஷாவையும் ரும்பாத்துஷாவையுங்கண்டு சந்தத்துகசுலீமுதலிய வந்தனஞ்செய்து அவர்களிருக்கும் விடுதிகளிற்போய்ச்சேர்ந்திருந்தார்கள் அப்போது வெள்ளிக்கிழமை இரவில் மணவறைப்பந்தலில சகலநகரத்திலுமுள்ள ராஜா முதலியபாத்துஷாக்களும் வந்துகூட சின்பாத்துஷா உமரும்பாத்துஷாவும்நான்குசர்கேசுகளும்முபாறக்ரும்கோசாவும் மணவறைப்பந்தலிற்போயிருந்து தாவேசுபாத்துஷாவுக்கும் (பகாவர்பானு என்கிறபெண்ணுக்கும்தலைப்புமுக்காட்டி ஆடையாபரணாதிகளையலங்கரித்து புஷ்பங்களைப்பெண்ணுக்குச் சூட்டி மாப்பிள்ளைக்குச்செருகட்டி மணவறைப்பந்தலில் ஆயிரத்தெட்டு மாறுள்ள தங்கத்தில் நவரத்தினங்களையழுத்தியிருக்கிற தாத்தில் (தர்வேசுபாத்துஷாவென்றும்) குழந்தையைவைத்துபேரிபூரிநகரா நகபத்துடங்கா எக்காளம் தாரைசின்னரி நாகசுரபசுத்தியத்தாளமுதலிய பதினெட்டு மேளவாத்தியங்களுந் தாம்தாமென முசப்திக்கும்படியாய் ஆடல்பாடல்சதுர் கச்சேரிமுதலியதும் நடத்திவர அப்போது ஆசாத்பகுத்பாதுஷாவுடையபிள்ளை (தாவேசுபாத்துஷா) வென்னுங் குழந்தைக்கும் மலிக்காசக்பர்பாத்துஷாவுடைய புத்திரி பகாவர்பானு என்னுங்குழந்தைக்கும் நிக்காகுவென்னுங்கலியாணஞ்செய்து பாத்திகாவோதிதுவாக்கேட்டு தர்வேசுபாத்துஷாவென்னுங் குழந்தையை பெண்ணிருக்கிற அந்தப்புரத்துக்கனுப்பு பெண்ணையும்மாப்பிள்ளையையும் ஓரிடத்திலேவைத்து செய்யவேண்டியசடங்குகளையெல்லாம் நிறைவேற்றிகலியாணத்துக்குவந்த ராஜாக்கள்முதலியபாத்துஷா அனைவர்களுக்கும்விருந்தளித்து அவரவர்களுக்குத்தக்க இனாமுதலியதுங் கொடுத்து அவரவர்களிருந்து அரசுமுதலியகாரியங்கள் செய்யும்படியானநகரங்களுக்குப்போகும்படியாய்சின்பாத்துஷா உத்தரவுகொடுக்க அவரவர்கள் வாசஸ்தலத்திற்குப்போய்ச்சேர்ந்தார்கள்.

பின்புமலிக்காசக்பர்பாத்துஷாவானவர் ஆசாத்பகுத் பாத்துஷாவுக்குகலியாணஞ்செய்ததற்காகச்செய்யவேண்டிய சிறப்புமுதலியவரிசைகள்செய்து ஒருநாதத்தை அனேகவிசித்ராமா யலங்கிருதஞ்செய்து அதில்

ஆசாத்பகுத்பாத்துஷாவையும் அவர்குமாரனுகிய தர்வேசு பாத்துஷா வென்னுங்குழந்தையையும் பெண்ணாகிய பகரவர்பானுவென்னுங் குழந்தையையும் இரதத்தின மத்தியில்வைத்து சிலசின்களையும் குழந்தைகளுக்குச்செய்யவேண்டிய பணிவிடைகளுக்காகவைத்து அந்த ரதத்துத் தட்டுகளில் நான்குதர்வேசுகளையும் அவரவர்மனைவிகளையும் முபாறக் குகோசாவையும்பார்த்து சிலசின்களைசின்பாத்துஷாபார்த்து இவர்களையிந்த ரதத்தோடுதூக்கிருமநகரத்திக்கொண்டுபோய்ச் சேர்த்துவாருங்களென்று உத்தரவுகொடுத்துபின்பு சம்பந்தியாகிய ரும்பாத்துஷாவுக்கும் நான்குதர்வேசுகளுக்கும் தசுலிம்முதலிய மரியாதைசெய்தினுப்ப இவர்களுமவர்களுடன் சின்பாத்துஷாவிடத்தில விடைபெற்றுக் கொண்டிருக்கசின்கள் இரதத்தைத்தூக்கி ஆகாயத்திலெழும்பி சீக்கிர மார்க்கமாய்ப்பறந்து ரும்நகரத்திலிருக்கும் அந்தப்புரத்துச்சமீபத்திலிறக்கிவிட்டு சின்களானது பாத்துஷா அவர்களிடத்தில்இனுமுதலியவெகுமானங்களைப்பெற்றுக்கொண்டுதங்கள்பதியாகிய அந்தமாநகரத்தைச்சேர்ந்து மல்க்கசக்பர்பாத்துஷாவிடத்திற் சேதிசொல்லிவிட்டு அவரவரிருப்பிடம்போயிருந்தார்கள் அப்போது ஆசாத்பகுத்பாத்துஷாவும் மற்றுமுள்ளவர்களும்இரதத்தைவிட்டிறங்கி தர்வேசுபாத்துஷாவென்னுங் குழந்தையையுந்தனது மருமகளாகிய பெண்ணையும் சின்பெண்களாகிய பணிவிடைப்பெண்களையும் பாத்துஷாவுடையமனைவியாமுதலானவர்களிருக்கும் அந்தப்புரத்துக்கனுப்ப தாதியானவர்கள் பெண்ணையும் பிள்ளையையுங்கண்டு ஆலாத்திசுற்றி திருஷ்டிகழித்து இன்னவிதமென்றுசொல்லிமுடியாத ஆனந்தகடலில்முழுகிக்குளித்து இரண்டுகரங்களாலும் ஆவலாயிரண்டுபேரையுமெடுத்து மார்போடணைத்து முத்தமிட்டுவாழ்த்திப்போற்றி வைத்துக்கொண்டு அதிமகிழ்ச்சியோடிருந்தார்கள் அப்போது பாத்துஷாவானவர்நான்கு தர்வேசுகளுக்கும் அவரவர்மனைவிகளுக்கும் நான்குமாளிகையைவிட்டதிலிருக்கும்படிச் செய்துதகத்தீற்போயிருந்து கிரந்தமுதலிய அறுபத்துநான்கு யந்திரிகளுக்கும் இங்கனைவிட்டு அந்தமாநகரம்போய் சின்ராசனைக் கண்டோஷகுபக்கீர்களுடையஆஜத்துதீர்ந்தவேறி தமதுகுழந்தைக்குநிக்கா குழுழுந்த விபரங்களையும் ஆதியோடந்தமாகச்சொல்லி ரும்நகரமுழுவையும் அநேகவிசித்ரவினோதமாகிய அலங்காரங்கள்செய்து அன்பத்தாறுதேசத்துப்பாத்துஷா சுல்தான்நவாப்பு இராஜாக்கள் முதலிய யாவரையுமழைத்து தனதுகுழந்தைக்கு அங்கமுழுவதும் ஊரகோலமுதலியபவனிசெய்து சகலபேர்களுக்கும் விருந்துமுதலிய ஜீவனங்களளித்துஉபசரணைசெய்து அவரவர்களுக்குத்தகுந்த இனாமுதலியதுங்கொடுத்து மரியாதைசெய்தனுப்பிவிட பாத்துஷாக்கள் முதலியஅனைவர்களும்அவரவர்பட்டணங்கள் நகரங்கள்போய்ச்சேர்ந்தார்கள்.

பின்புஆசாத்பகுத்பாத்துஷாவானவர் நான்கு தர்வேசுகளுக்கும் இரத்தஜதுராகபதாதிமுதலிய சேனைகளும் வழிச்செலவுக்கு வேண்டிய பொருள்களுக்கும் ஒருவருக்கொருவா ஏறக்குறைச்சலென்றெண்ணு மற்கொடுத்து அவரவர்களைத்கட்டித்தழுவி நம்முடைய முகப்பத்தை மறந்திடாமலிருந்து உங்களுக்காகவேண்டியகாரியங்களை யெனக்குத் தெரிப்படுத்த வேண்டுமென்று உபசாரவார்த்தைகளைச்சொல்லிஅவ ரவர்தேசங்களுக்குப்போய்ச்சேர்ந்து சுபமங்களமாயிருங்களென்று உத்தரவுகொடுக்க அதுபோல்நான்குதர்வேசுகளும் பாத்துஷாவுக்கு த்தசலிமுதலிய மரியாதைகள்செய்து மிகுந்தப்பிரியத்துடனேவிடைபெ ற்றுக்கொண்டு அவரவர்களுக்குக்கொடுத்தருணுக்களுடனும்மனைவிக ளுடனும் றாமுநகரத்தைவிட்டுப்புறப்பட்டார்கள அப்போது முதலா வதுபக்கிருகியமுகம்மதுசவுதாகர் தன்மனைவியுடனேசேனைகளை நடத்திகாடு-மலை-வனம்-முதலியதரங்களைக்கடந்து தன்னுடையதமக்கை யும்மச்சானுமிருக்கிற சமுசேர்நகரத்திற்போய் அவர்தமக்கைமச்சான் முதலியவர்களையுங்கண்டு ஒருவருக்கொருவர்கட்டித்தழுவி தான்போ னதுமுதல்வந்தவரையிலுமபட்ட இன்பதுன்பங்களை ஆதியோடந்தமா கச்சொல்லி தன்னுயகியையுங்காண்பிக்க தமக்கைதம்பியுடையமனைவி யைக்கட்டித்தழுவி முத்தமிட்டுமிகுந்தபிரியத்துடனே உபகாரச்சொ ல்லிஉசிவனமுதலியபதார்த்தங்களும அவர்களிருவருக்குமளித்துப்பசி யாறச்செய்தாள்பின்புமுகம்மதுசவுதாகர் தன்னுடன்வந்த தளவ களுக்குச்சம்பளமுதலிய வைகளுமேர்படுத்தி ஒரு பாத்துஷாவைப் போல்மிகுந்தமேன்மையாக யாதொருகுறைவுமில்லாமல் சுகமோகத் துடனே வாழ்ந்துகொண்டிருந்தார்.

இப்பாலிரண்டாவது பக்கிருகிய அக்பாபாத்துஷாவானவர் தன் னுடையசேனைசையனியங்களுடனேபுறப்பட்டு ஆறு-குளம்-மலை-செவி பாலை-மிலமுதலியவைகளையுங்கடந்து பாரிசுதேசம்போய்ச்சேர்ந்துதன் தகப்பனுகிய அசீசுமீருபாத்துஷாவையும் தாயையுங்கண்டுதனதுமனை வியைக்காண்பித்து இவர்களிருவரும அவர்களிருவருக்கும் தசலிம்ப ந்தகிமுதலியமரியாதைசெய்ய அவர்களைவாழ்த்திப் போற்றியிருக்கச் சொல்ல அப்போதிவர்பட்டதன்பமின்ப முதலானதுகளைச் சொல்ல தாயுந்தகப்பனுங்கேட்டு விசனப்படுமனந்தேறி இவர்களுக்குஉசிவ னமுதலியபொசிப்புகளளித்து ஒருமாதமவரையில் அங்கேயிருந்து தாயுந்தகப்பனும்உத்தரவுகொடுக்க அவர்களிருவர்களும் விடைபெற்று க்கொண்டு நால்வகைச்சேனையும் நடத்தித்தங்கவேண்டியவிடங்களிற்ற ங்கி பஜாருவுக்கடுத்தபுதுநகரம்போய்ச் சேர்ந்து அங்காக்கல தவூர்வல மவந்து சகஜாதிஅரண்மனைக்குள் இருவருந்நுழைந்து சபாமண்டபத் துக்குட்போய் அங்கிருக்கும் தகத்திலிருவரும் ஒன்றாயிருந்து கூடவந் தநால்வகைச் சேனைகளையும் அவரவர்களுக்கு ஒவ்வொருபாளிகையும்

பொருள்களையுங்கொடுத்திருக்கும்படியாய்ச் சர்தாருக்குலெட்டறனுப்
பிவிட இவர்களிருவரையும் பன்னிறண்டுகட்டுமண்டபங்களிலுள்ளபெ
ண்களும்சபாமண்டபத்திலுள்ள பெண்கள்யாவர்களும் அக்பர்பாத்து
ஷாவையும் சகஜாதியென்கிறபெண்ணையும்வந்துகண்டு பணிந்து மரி
யாதைபெறறுக்கொண்டு அவர்களிருக்கும்படியானவிடங்களிற்போயி
ருந்தார்கள் அப்போதிவர்களிருவருங்குளித்து முழுகி ஒசீவனமுதலி
யபோஜனந்தின்றுதாம்பூலந்தரித்துச களபகஸ்தூரிபூசிஒன்றுக்கொன்
றுபிரியாவிடையாய்க் கூடிக்குலாவிச்சுகபோகங்களையனுபவித்துமுன்
செய்ததருமங்களினும் எண்மடங்கதிகமாகச்செய்து புத்திரன்புதல்
வியைப்பெற்று ஜகஜாதியின்றகப்பனாகிய அமீர்பாத்துஷாவையும் அ
வர்பெண்சாதியையுங்கண்டு இவர்கள்பஜருநகறத்திற்போகவும்அவர்க
ள்புதுநகரத்திற்கு வரவும் இவ்விதமாகநடத்திக்கொண்டு யாதொருகு
றைவுமில்லாமல் புத்திரபவுத்திரசம்பத்துடையவர்களாய் வாழ்ந்துசு
கத்துடன்ராஜரீகஞ்செலுத்திக்கொண்டு மங்களகரமாயிருந்தார்கள்.

பின்பு அப்படியிருக்க மூன்றாவது சம்ஸதீன் பாத்துஷாவானவர்
சேனைகள்சூழ மலைகள்கானகங்கள்முதலிய மைதானங்களையெல்லாந்
தாண்டித்தங்கவேண்டியவிடங்களிற்றங்கியிருந்து தனதுநகரமாகிய குற
சானிநகரஞ்சேர்ந்து தனதுதகப்பனாகிய அப்துல்நவாசிபாத்துஷாவை
யும் தாயாரையுங்கண்டு அவர்களுக்கு மிகவும்வணக்கமுதலியபணிதல்
செய்துமகாசீனத்துப்பெண்ணையுங்காண்பித்து அவளாற்பட்டதுன்ப
ங்களையும் சவிஸ்தாரமாகச்சொல்லி முபாறகவென்னும் பட்சிகாணைக்
காண்பித்து இவனால் அனேகவொத்தாசைகள்நடந்து இவள் தப்பிப்
போய்அதுமுதல்இதுவரையில் நடந்தவிசேஷங்களை ஆதியோடந்தமாக
ச்சொல்லி முபாறக்கென்னும் சிபாயிக்கு சிங்காரத்தோட்டத்திலிருக்
கும் ஒருபங்களாவைக்கொடுத்து அவனிஷ்டம்போலிருக்கும்படியாய்
சசெய்து தகப்பன்பெரியவயதாயிருப்பதால் அவர்பட்டத்தை இவர்க
ட்டிக்கொண்டுகுடிபடைமுதலிய யாவருக்கும் யாதொருகுறைவில்லா
மல்செங்கோல்நடாத்தியகாசீனத்துப் பெண்ணும்பாத்துஷாவும்மானு
க்கலையும் அன்றிலும்பேடும்போல ஒருவருக்கொருவர் இன்பமாகிச்சு
கங்களையனுபவித்து துன்பமென்பதனுவேனுமில்லாமல் வாழ்ந்துக்
கொண்டு சுகபோகமங்களகரமாயிருந்தார்கள் பின்புநாலாவது அசன்ப
னுதாமபாத்துஷாவும் கோஜாவானவரும் இவர்களுடையபடைமுதலிய
சேனைகளைநடத்திஅனேகவூர்களையெல்லாங்கடந்து அங்கங்கிருந்துசில
நாட்சென்றதின்பிறகு குலுஸ்தானிநகரத்துக்கு அஞ்சுகாதவழிக்குச்ச
மீபத்திலிருக்கிறஒர்சிற்றூரிற்போய்ச்சேர்ந்து அவ்வூருக்கதிபதியாயிரு
க்கிறஒருவனையழைத்து உளமர்மங்களைச்சொல்லி தனதுசேனைகளைஅ
வ்விடத்திலிருக்கும்படிச்செய்து கோஜாவுமபாத்துஷாவும் மிசுக்கினு

டையமகளுமாகசிலதூரம்நடந்துஒருகானகத்திலிருக்கு மலைக்குகி
லொருசுரங்கத்தைகல்போட்டுமூடியிருக்கிறது அந்தக்கல்லைக் கிளப்பி
மூவருஞ்சுரங்கத்தின்வழிவாய்ப்போய் கல்லைமூடிவிட்டுநடந்துசிலதூ
ரம்போகிறபோது முன்னின்தேசத்துக்குப்போன சுரங்கம் குறுக்கிட்
டது அதிலடைத்திருக்குங்கதவைத்திறந்து இரண்டாவது சுரங்கத்தில்
நுழைந்து அரண்மனைக்குப்போகிற சுரங்கவழியாய்ப்போய்முன்
னடைத்திருந்த கதவைத்திறந்து அந்தக்கொண்ஞூற்றென்புத்த
சகுட்டிகளிருக்கிற அறைக்குட்போய் அந்தப்புகதுக்குட்டிகளோடே
இந்தவொருபுக்கையுஞ்சேர்த்து நாலுபுத்துகளையும்கிழித்து அதற்குச்
சொல்லவேண்டிய பத்திரோபதேசத்தைத்தியானிக்க அதுகள்வாய் தி
றந்துஎங்களாலேஉங்களுக்கென்னசெய்யவேண்டுமென்று நாலுபுத்து
களுமஒரோக்காய்கேழ்க்க கோசாவும் பாத்துஷாப்பிள்ளையும் புத்து
களைப்பார்த்து நாங்கள் தகத்திற்போயிருந்து உங்களுக்குயெவ்விதமாகி
யதாக்கிதுசொல்லுகிறமோ அதுபோலநீங்கள் செய்யவேண்டியதெ
ன்றுபுத்துகளை அங்கேயேயிருக்கும்படிச்செய்துவிட்டு சுரங்கத்துவா
சலைமடைத்துப் பூட்டிவிட்டு அரண்மனைக்குப்போகிற வாசலைத்திறந்
துமூவருமறையைவிட்டு வெளியேபோய்முன்கோசாவும்பிள்ளையுமிந
ந்த அரண்மனையின்பூட்டைத்திறந்து அந்த அரண்மனைக்குட்போய்பெ
ண்ணையொருபக்கத்தில்நிறுத்திவிட்டு இருவரும்வெளியில்வந்து பார்க்
கையில்அப்போது பொழுதுவிடிகிறநேரமாயிருந்தது அந்நேரத்தில்
அசன்பருகாதிபாத்துஷாவைத்தக்தத்தின்மேலிருக்கச்செய்து நாலுபுத்து
களையுமெடுத்துக்கொண்டுபோய் தக்தத்தைச்சுற்றிலும் வைத்துக்கொண்
டுகோசாவும்பிள்ளையு மருகிலுட்கார்ந்து ஒருபுத்தைப்பார்த்து இக்கு
ள்ளமந்திரிபிரதானிமுதலிய படைவீரர்களையெல்லாம் அழைத்துவரு
ம்படிசசொல்ல இந்தப்புத்தானது ஒருநிமிஷநேரத்தில் ஒவ்வொருவ
ராய் அவர்கள்காதுகளைப்பிடித்திழுத்துக்கொண்டு வந்து சிம்மாதனத்
தின்முன்விட்டது.

அப்போதுயாவர்களும் கோசாவையும்பெரிய பாத்துஷாஉடைய
பிள்ளையையுங்கண்டு திகிலடைந்துமனம்பதறிச்சொல்லத் துடங்கினார்
தவுலத்தே பாத்துஷா சிரோமணியே கோசாவுக்கெல்லாம் தலைமையா
கியகோசாவானவரே உங்களுடையஉத்திரவுயெப்படியிருக்கிறதோ அ
துபோலநடந்துகொள்ளக் காத்திருக்கிறோமென்று மிகுந்தபயபக்தி
யுடனேசொல்ல அப்போதுகோசாவானவர் யாவர்களும் பெரியபாத்து
ஷாஉடைய பிள்ளை அசன் பருகாதிபாத்துஷாவுக்கீழ்ப்படிந்து நடக்க
வேண்டியது அவரவர்களிருக்கிறஉத்தியோகங்களிலிருந்து சகலகாரிய
ங்களிலும் இவருடையபேரைத்தாக்கல்செய்து பயபக்தியாயிருக்கவே
ண்டியதென்று உத்தரவுகொடுத்து அவரவர்களிருக்கும்படியான மரி
யாதையாயிருக்கும்படிச்சொல்ல யாவர்களு மொப்புக்கொண்டிருந்தார்
கள்அப்போது இன்னமொருபுத்தைவிட்டு இவருடைய சிறியதகப்பனு

கியமீறுசதக்குப் பாத்துஷாவை யழைத்துவரும்படிச் சொல்ல அந்தப்பு
த்து ஒருமிமைநேரத்திற்போய் படுத்திருந்த பாத்துஷாவைக் காணைப்
பிடித்துத் தூக்கிக்கோசாவும்பெரிய பாத்துஷாவின்பிள்ளை அசன்பகு
தாதி பாத்துஷாவுமிருக்கிற தகத்தின்முன்னேகொண்டுபோய் விட்டுப்
புத்திகளோடேபோய்ச் சேர்ந்திருந்தது.

அப்போது மீருசதக்கென்பவர் கொலுக்கூடியிருக்கிறவொழுங்கு
ம்கோசாவும் தமையன்பிள்ளையுமிருக்கிறதைக்கண்டுமிகமருண்டுபயந்
துவெலவெலத்து மெய்சோர்ந்து கலகலத்துக்கால்தடுமாறிக் கீழே வி
ழுந்துபோகிறதற்குக்காவெழாமலிருந்தார் அப்போதுகோசாவானவர்
தகத்தைவிட்டிறங்கி அவரைத்தூக்கிப்பயப்படாதேயென்று தைரியப்
படுத்தி இப்போது உன்தமையன்சொன்னபடிக்கு நடத்துகிறதற்கு உ
ன்மனதெப்படியிருக்கிறது சொல்லென்றுகேழ்க்க (அடிமேலடியடித்
தால் அம்மியுமநகருமென்கிற) பழமொழிபோலே மீருசதகென்னும்
பாத்துஷா புத்துக்குட்டி யிழுத்துவந்த அதிர்ச்சியினாலும் இவர்களிரு
க்கிறஆடம்பரத்தினாலும்பயந்து கோசாவைப்பார்த்து மேஜாருகிராஜா
படுத்திக்கொண்டு தாங்களெவ்விதஞ்சொல்லுகிறீர்களோ அதுபோல்ந
டந்துக்கொள்ளக் காத்திருக்கிறேனென்று சொல்ல அவனாலுநாற்கா
லியிலுட்காரச்செய்து சிலதாதிகள்மூப்புகளையழைத்து இவர்களிருந்த
அரண்மனையென்னுங் கலசமாலிலிருக்கிறமீருசதகினுடைய மகளாகிய
பெண்ணுக்கு யேவற்பணிவிடைமுதலியவேலைகள்செய்யும்படியாயனு
ப்பிவிட்டு சமையற்பண்டாரிகளையழைத்து ஒசிவனமுதலிய பதார்த்த
ங்களைச்சமைக்கும்படியாய்த் திட்டஞ்செய்து சிலரையனுப்பி ஐந்தா
தலழிக்கப்புறம்வைத்துவந்த சேனைகளை யழைத்துவரும்படிசொல்ல
அதுபோலவே யவர்கள்போய் சேனைகளையழைத்துவந்து சேர்ந்தார்க
ளபின்புசகபர்ஸையார்பாத்துஷா உடையபிள்ளை அசன்பகுதாதிபாத்து
ஷாவுக்கும் அவர்தம்பிமீருசதக் பாத்துஷா உடையபெண்ணுக்கும்வெ
குஅலங்காரமுதலிய வாத்தியங்களுடனே நிர்காகுசெய்துவிருந்துமுத
லியஒசிவனமசகலர்நிருணுக்கின்று தாம்பூலந்தரித்து மரியாதைசெய்
யவேண்டியவர்களுக்கெல்லா மரியாதைநடத்திமீறுசதக்பாத்துஷாவை
அரண்மனைமுதலான மற்றகாரியங்களுக்கெல்லா மேன்மையாயிருந்து
பார்க்கும்படியாய் திட்டஞ்செய்துகோசாவானவர் அசன்பகுதாதிபாத்
துஷாஉடனே தகத்திலிருந்துசெங்கோல்செலுத்திக்கொண்டு இவர்களை
ச்சேர்ந்த தேசங்களுக்கெல்லாம் பாத்துஷா உடைய பிள்ளைதன்னுக்கி
ருசக்காரத்துக்குள்ளடங்கிநடக்கும்படியாய்திருபமனுப்பிவிட்டு செங்கோ
ல்செலுத்திக்குடிபடைகள் முதலிய சகலதிருணுக்கும் யாதொரு கு
றைவில்லாமல் நீதிநெறிசெலுத்திவந்தார்கள் அப்போது அசன்பகுதா
திபாத்துஷாவும்இராண்டுமனைவியரும்ஒருவருக்கொருவர் பிரியாவிடை
யாயிருந்து சகலவைபவங்களையுமனுபவித்து ஏழையிசக்கிகள் முத

ல ளைபேர்களுக்கெல்லாம் சக்காத்துமுதலிய கயிர்கவிருத்துசெய்து க ருமங்களை விர்த்திசெய்து சகலபாக்கியசம்பத்துகளையும் பெற்று இந்த நாறுபுத்துக்குட்டிகளால் அனேகஞ்சாக்களைச்செயித்து அவர்களிடத் சங்களைப்பிடித்து அவர்களை தனக்கு திரைகட்டும்படியாகச்செய்துயாவ ரும் ஒருகுறைவில்லாமல் அவரவர் பெண்சாதிபிள்ளைகளுடனே யாதொ துமனைவருத்தமில்லாமல் சுகங்களையனுபவித்து மங்களகரமாய் வாழ்ந் திருந்தார்கள்.

அப்போது ரும்பாத்துஷா முதலான நான்கு ராஜாக்களும் அவர வர் நகரங்களில் யாதொருகுறைவுமில்லாமல் செங்கோல்நடாத்தி நீதி நெறியுடனேவாழ்ந்து சகலசுகபோகங்களையுமனுபவித்து மங்களகரமா யிருந்தார்கள் ஆகையாலிந்தசார்தார்வேசென்னுங் கதையை அச்சிலிட் டவர்களும் வாசித்தவர்களும் கேட்டவர்களும் தங்கள்தங்கள் முதலியமு சீபத்துகள்நீங்கி அஷ்டஐஸ்வர்யமுமோங்கி மென்மேலும்வாழ்க்கட வீர்கள்.

ஆமீனுமீன் யாறப்பில் ஆலமீன்

வாழிவிருத்தம்.

அகிலமன்னவரடிவணங்கிறூம்நகராண்ட ஆஜக்பகுக்பாத்துஷா
அளித்தசெபுத்ரநற்மாவேகுபாத்துஷா அனைவரும்வாழிவாழி
தகைமைமுகமமதுகவுதுசஜாதயென்னுமின் சந்ததம்வாழிவாழி
சற்குணமிகும்அக்பார்பாத்துஷா சம்சதீன்பாதஷாயிருவர்வாழி
சுகிர்குணநடவசன்பதுதாகிபாத்துஷா சுகுணகுணகோசாவும்வாழி
சுரிமுரலுபாலையணிமார்பினன் மருத்தணர்தான்றலனுதினமும்வா
நிகரில்முகம்மதுவாபபறக்கத்தினாலிலவுமிச்சரிதைதன்னை [ழி
நிலைமைபெறவச்சிற்றினவருமவாசித்தவரும் நிறைசெல்வமுடனே
[வாழியே

சார்தார்வேசென்னும் நான்குபக்கீர்களுடைய கிஸ்ஸா

முற்றுப்பெற்றது.